# பாகவதக் கதைகளில்
# பக்தியும் முக்தியும்

*ஆசிரியர்*

**முனைவர் பெரு. ஹரிகேசவ ராமாநுஜதாசர்**

*வெளியீடு*

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**திருப்பதி**

**2024**

# BHAGAVATHA KADHAIGALIL BHAKTHIYUM MUKTHIYUM

Tamil Version
**Dr. P. HARIKESAVAN, VELLORE**

Editor
**Dr. Akella Vibhishana Sarma**
Special Officer
Publications Division

T.T.D. Religious Publications Series No.1487
© All Rights Reserved

*First Edition :* 2024

*Copies :* 250

*Published by*
**Sri J. Syamala Rao,** I.A.S.,
Executive Officer,
Tirumala Tirupati Devasthanams,
Tirupati - 517 507

***D.T.P:***
Publications Division,
T.T.D, Tirupati.

*Printed at :*
Tirumala Tirupati Devasthanams Press,
Tirupati - 517 507

# FOREWORD

Dr. P. Harikesavan is the author of the book titled 'Bhagavatha Kadhaigalil Bhakthiyum Mukthiyum'. This book contains ninteen stories. They are all about the great devotees who attained salvation (Mukti). All these stories elaborately narrated in Bhagavatha Puranam i.e Srimad Bhagavatham by the great Sage Veda Vyasa Maharshi, Sri P. Harikesavan has narrated them in simple and intelligible Tamil Language.

Bhagavatha Puranam (A Vishnu based Purana) is the most popular and videly circulated of all the Puranas. It is dear to Vishnu devotees. Divided into twelve skandas, it contains eighteen thousand Shlokas. All the incarnations of Vishnu are described in this Purana.

A Purana describes Sarga, Pratisarga, Vamsa, Manvantara and Vamsanucharitam. Among these sarga and pratisarga are natural creation and renovation (Cosmology). Vamsa means history of sages and patriarchs. By manvantara is meant the period of different Manus, Vamsanucharita means genealogy of Kings. Bhagavatham always guides and helps the true devotees to attain the Supreme God.

The Upanishads say that Puranas are Itihasas and as such constitute fifth Veda. Sruti Says the Puranas are commentaries on Vedas. The Sanskrit scholar's has defined Purana as Pura, nava (Pura=old, Nava: = new) meaning things which are as good as new though existing from olden times. Bhagavatham is always helpful and guides the whole-souled devotees to attain the Supreme - God.

Parikshit, the grand son of Arjuna was cursed by the young sage Srungi for the wrong done by the king to his father sameeka Maharshi unknowingly. The curse is Parikshit

will be bitten by a poisonous snake, Takshaka within seven days. This was informed to the king Parikshit by sameeka Maharshi through his disciple. Immediately Parikshit renounced the worldly affairs and aspired for Atmabodha: Suka Maharshi came to the king's place and narrated the Bhagavatham for seven days. So the king attained Mukti after his death.

So the present author has chosen the Bhagavatha Purana for his theme. He culled out ninteen stories from the book.

Some of the passages from Srimad Bhagavadgita, Srimad Bhagavatam (from Sanskrit), Vishnu Purana, srutis, Tirukkural, Villi Bharatham and Azhwar's Divya Prabhandas have been quoted accordingly. The author has explained in each story the importance of divine - love in a crystal clear style. This shows his scholarship in Tamil and Sanskrit languages. The author's effort is appreciable and I hope that this book help the spiritual aspirants and would impress the Tamil readers to draw their full attention for Krishna bhakti in particular and religious prapatti in general.

I appreciate Dr. Akella Vibhishana Sarma Special Officer, Publications Division, TTD, Tirupati for publishing such a useful book.

In the Service of Lord Venkateswara

**Executive Officer,**
Tirumala Tirupati Devasthanams,
Tirupati.

# முகவுரை

பரப்பிரம்ம புருஷராகிய ஸ்ரீகிருஷ்ணபகவானின் அற்புதச் செயல்களையும், அப்பெருமானுடைய அவதாரத் தோற்றம் முதற்கொண்ட அனைத்து திவ்யமான கர்மாக்களையும் கூறுவதுதான் ஸ்ரீமத்பாகவதம் எனனும் பாகவதபுராணம் ஆகும். வடமொழி எனப்படும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள இந்தப் புராணத்தை உலகத்தோரின் உயர்விற்கும், ஆத்மஞான வளர்ச்சிக்கும், அர்ப்பணம் செய்துள்ளவர் வியாசமகரிஷி ஆவார். ஸ்ரீமந்நாராயணன் எடுத்த இருபத்தொரு அவதாரங்களுள் வியாசபகவானின் அவதாரமும் ஒன்று ஆகும். பகவானுடைய ஆவேச அவதாரங்களுள் ஒன்றானதாகக் கருதப்படுகிற இந்த வியாசபகவான், நமது பாரதத்திருநாட்டின் உயர்வைப் பாருக்குள்ளே நல்லநாடு என்று பாடப்படுவதற்கும், பாராட்டப்படுவதற்கும் வித்திட்டவர் என்று கூறலாம். ஆன்மீகத்தின் அரிய கருவூலங்களாகத் திகழும், வேதம் முதற்கொண்டு, பற்பல புராணங்கள், இதிகாசங்களும் ஒன்றான மாபாரதம், ஸ்ரீமத்பாகவதம் போன்ற எண்ணற்ற படைப்புகளை நமது நாட்டிற்குத் தந்து, உலக அரங்கில் நம்மை அனைத்துநாடுகளும் அண்ணாந்து பார்த்து நிற்கும் அதிசயத்திற்கு மூலகாரணமும் இந்த வியாசமகாமுனியே ஆவார். அவற்றுள் பெருஞ்சிறப்புடையதான ஸ்ரீமத்பாகவதபுராணம் என்ற ஸ்ரீகிருஷ்ணபக்திக் காவியத்தையும் அவரே அர்ப்பணம் செய்துள்ளார்.

ஆனாலும், இத்தகைய பெருமை உடையதான வேதம் முதற்கொண்ட அனைத்துப்படைப்புகளும், ஸ்ரீமத்பாகவதம் என்ற இப்புராணமும் வடமொழி என்னும் சமஸ்கிருதத்தில்

அமைந்துள்ளதால், இதைப் பெரும்பாலான தமிழர்கள் படித்தறியும் பேற்றினை இழந்து நிற்கின்றார்கள். சில ஆன்மீக ஆன்றோர்கள், ஆங்காங்கே இவற்றினைக் குறித்த சொற்பொழிவுகளையும், ஆன்மீக உரைகளையும் நிகழ்த்திவருகின்றனர். எனினும் அதை எவ்வளவு தூரம் தமிழ்பெருமக்கள் கேட்டுப்பயன் பெற்றுள்ளார்கள். எவ்வளவு தூரம் அது சாதாரண பக்தர்களைச் சென்று சேர்ந்துள்ளது என்பது புரியாத புதிராகவே உள்ளது. எனவே, தெய்வப் பனுவலாகிய இதைத் தமிழ்ச்சமுதாயம் அறிந்து கொள்ளவேண்டும், பயன்பெற வேண்டும் என்ற எண்ணம் அடியேனுடைய குலதெய்வமான பகவான் கிருஷ்ணருடைய பேரருளால் ஏற்பட்டதன் விளைவுதான் இந்த "பாகவதக் கதைகளில் பக்தியும் முக்தியும்" என்னும் எனது இந்த அரியப் படைப்பாகும்.!

பரப்பிரம்ம பெருமானாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானின் கல்யாண குணங்களையும், சௌலப்யம், சௌசீல்யம், வாத்சல்யம் என்னும் முப்பெரும் அருங்குணங்களையும், அப்பெருமானின், மகிமைகளையும் ஸ்ரீமத்பாகவதம் எடுத்துரைக்கின்றது. இன்னின்ன குணவிசேஷங்களைப் பகவான் பெற்றுள்ளார் என்று பட்டியல் இட்டு, படிப்போர்க்குக் கூறுவதைவிட, அப்பகவானின் அனைத்துக் கல்யாண குணங்களையும், அந்த அனைத்தையும் உள்ளடக்கிய, ஞானம், சக்தி, பலம், தேஜஸ், வீர்யம், ஐஸ்வர்யம் ஆகியபகவானுடைய அருங்குணங்களை விளக்குவதற்கு, இந்தப்பாகவதத்தில் அமைந்துள்ள பக்திக்கதைகளை எடுத்துச் சொல்லி, அதை விளங்கவைப்பது என்பது

எளிமையானதாகும். எனவே இந்த யுக்தியைப் பயன்படுத்தி, பாகவதக் கதைகளின் மூலம் அப்பெருமானின் குணவிசேஷங்களையும், அவற்றில் அமைந்துள்ள பக்திநிலைகள், பக்தியில் ஈடுபட்டு உயர்ந்தோர் அடையும் பெரும்பேறான முக்திகள் யாவை, என்னென்னவகையான முக்திகளைப் பகவான் தன் அடியவர்களுக்காகக் கொடுத்து அருள்பாலித்தார் என்பனவற்றை விளக்கி உரைக்கும் ஒரு நூலாக அடியேன் இந்தப் படைப்பினை எழுதி, அப்பெருமானின் திருவடித்தாமரைகளுக்கே அர்ப்பணம் செய்துள்ளேன். ஏனென்றால் கதைமூலம் கருத்தைச் சொல்லும் இந்த யுக்திமார்க்கம் நிச்சயமாக மக்களிடையே வெகுவாகச் சென்றடையும் என்ற எண்ணத்தில் இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவசரகதியில் எந்திரமயமாக அமர்ந்து, ஆழ்ந்து முழுதுமாகப் படிக்கமுடியாத ஒரு நிலை உள்ளதால், இதைக் கதைகளாக்கித் தந்தால், கண்டிப்பாக அனைவரும் படிப்பார்கள்.., இப்படைப்பும் பயன்தரத் தக்கதாக மாறும் என்ற உயர்நோக்கத்துடன் பெருமானின் பேரருளால் அடியேன் இதை ஆக்கிப் படைத்துள்ளேன்..!

மேலும் இந்தப் பாகவத புராணத்தை படைத்தளித்துள்ள பகவான் வியாசர், இந்தக் கலியுகத்தின் பக்திமார்கத்திற்குத் தேவையான வழிமுறையே நாமசங்கீர்த்தனமும், கதாச்சிரவணமும்தான் என்பதைத் தன்னுடைய இந்தக் கண்ணன் கதைகளில் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்வதையும் அறியலாம். எனவேதான் இந்தப்பாகவதத்தை ஏழுநாள் கதாஉபந்யாசமாக எடுத்துரைத்து

முடித்திடவேண்டும் என்றும், அவற்றை அனுபவித்து மகிழ சத்சங்கங்கள் ஆகிய நல்லோர் குழுக்களை நாடி அடையவேண்டும் என்று, வியாசர்வழியிலே நின்று தற்கால ஆன்மீக ஆன்றோர்களும் அறிவுறுத்துகின்றனர் . இவற்றின் முதல், இடை, இறுதி காலகட்டங்களில் அனைவரும் ஒருங்கிணைந்து நாமசங்கீர்த்தனம் செய்தல், பகவானுக்கு நிச்சயமாக மகிழ்வைத்தரும் செயல்களாக அமைந்து நமக்கும் பெறற்கரிய பேறுகள் எல்லாம் கிடைப்பதற்கும் வழியுண்டாகும். மேலும்

**நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம் !**
**தேவீம் ஸரஸ்வதீம் வ்யாசம் ததோ ஜயமுதீரயேத் !!**

என்னும் இச் சுலோகம் "வெற்றி பெறுவதற்கு மிகச்சிறந்த உபாயமாகிய இந்தப் பாகவதத்தைப் படிக்கும் முன்பாகவும், அதைப்படித்து மற்றோர்க்கு அர்ப்பணம் செய்யும் ஓர் உயரிய பணியில் இறங்குவதற்கு முன்பாகவும்,, பாராயணம் செய்யப்படவேண்டிய ஒரு ஸ்லோகம் ஆகும். பரமபுருஷராகிய நாராயணருக்கும், தெய்வீகத்தன்மையால் நர – நாராயணராக அவதரித்த மகாபுருஷருக்கும், கல்வியின் அதிபதியான சரஸ்வதிதேவிக்கும், இப்புனிதப்படைப்பைப் பாரோர்க்குத் தந்துள்ள வியாச மஹரிஷிக்கும் ஒருவர் தனது பணிவான வணக்கங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் (ஸ்ரீமத்பாகவதம்–இரண்டாம் அத்.ஸ்லோகம் 4) என்பது இதன் பொருளாகும். அதற்கு ஏற்ப அடியேன் அனைவருக்கும் எனது வணக்கத்தை உரித்தாக்குவதோடு,, அடியேனின் இந்தப்படைப்பானது வெற்றிபெறவேண்டும் என்று எல்லாம்வல்ல எம்பெருமானாகிய ஸ்ரீமந்நாராயணப்

பெருமானைச் சரணாகதி அடைகிறேன். மனித வர்க்கத்தினரையும், ஆன்மீக அன்பர்களையும், பக்திமார்க்கத்தில் ஆழங்கால் பட்டு நிற்கும் அனைவரையும் சென்றடைந்து பயன்தரத்தக்கதாக இந்த நூல் அமைய வேண்டுமெனவும் அனைத்து மனிதர்களின் உள்ளுறை ஆன்மாவாகச் செயல்படும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியை, அப்பெருமானின் பரிபூரண அவதார மூர்த்தியான எம்பெருமான் கண்ணனின் திருவடித்தாமரைகளுக்கும் மாலையாய்ச் சூட்டி மகிழ்கிறேன்.

தலைப்பிற்கு ஏற்றவாறு இந்த நூலில் பத்தொன்பது கதைகள் கூறப்பட்டுள்ளன. இக்கதையில் வரும் கதாபாத்திரங்களின் மூலமாக ஏற்படுகிற பக்திப்பரவசமாகிய பெருவெள்ளம் தமிழகம் எங்கும் பாய்ந்தோடி, பயன்தருகிற நன்னாளே தமிழக மக்களின் வாழ்விற்குரிய பொன்னாளாக அமையும் என்பது என்னுடைய ஆணித்தரமான நம்பிக்கையாகும். கடவுள் மறுப்புக் கொள்கையைக் கண்டவாறு பேசித்திரிவதையே தொழிலாகக் கொண்டுதிரியும் அனைவருக்கும், அவர்களின் பாவச்சுமையால் விரைவில் அதன் தீய விளைவுகள் உறுத்திவந்து ஊட்டக் காத்துக் கிடக்கும் என்பது சாஸ்திர விதியாகும். புத்தகத்தின் கதைப்போக்கை விளக்கும்போது அந்தந்தக் கதைகளில் வரும் பக்திநிலையும், பலவேறு அடியார்கள் பகவானின் பேரருளால் பெற்றிட்ட முக்திநிலைகளையும் இந்த நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**பாகவதத்தில் பக்தியும், முக்தியும் :-**

சாந்த பக்தி, தாஸ்யபக்தி, ஸக்கியபக்தி, வாத்சல்யபக்தி, மாதுர்யபக்தி என்ற ஐந்துவகைப்பட்ட பக்திநிலைகளும், ச்ரவணம், (கதாச்ரவணம்), கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவனம்,, அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்யம், ஆத்மநிவேதனம், என்ற பாகவத பக்திநிலைகள் ஒன்பதும் கதைகளில் கூறப்பட்டுள்ளன. மேலும், சாயுஜ்யம், சாரூப்யம், சாலோக்யம், சாமீப்யம், சார்ஸ்டிம் என்ற ஐந்தும் முக்தியின் ஐந்துவகையான நிலைகள் என்று ஆன்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

தன்னைச் சரணாகதி அடைந்த பக்தர்களுக்கும், பாகவதோத்தமர்களுக்கும் தன்னை நோக்கிக் கடுந்தவம் இயற்றிய முனிவர்கள் உள்ளிட்ட அனைத்து மனித, விலங்கின வர்க்கங்களுக்கும், அவரவர்களுடைய நோக்கத்தை அறிந்த பெருமான் அவர்கள் மனம்மகிழுமாறு தேவையான வரங்களை அருளியதோடு, அவர்களுக்கு மேற்கண்ட முக்திகளில் தேவையானவற்றைக் கொடுத்தும் அவர்களை மேன்மை அடையச்செய்துள்ளார். இத்தகைய விநோதங்கள் ஆகிய அதிசயங்கள் மிகுந்திருக்கும் ஒரு நவரசப் படைப்பாகவும் இப்பாகவத புராணம் பகவான் வியாசரால் படைக்கப்பட்டது. கதையைப்படிக்கும்போது எழக்கூடிய சந்தேகங்களுக்கு விடைகூறும் போது, அவை இக்கதையின் கருப்பொருளை நன்கு அறிந்துகொள்ள உதவும் வியாக்கியானங்களாகவும், விருத்தி உரைகளாகவும், அமையுமாறு இந்த நூலை எழுதியுள்ளேன். மேலும் இக்கதைகளுக்கு இன்றியமையாது தேவைப்படுகிற

ஸ்லோகங்களையும், அவற்றின் பொருள்களையும் விளக்கிக்கூறியுள்ளேன். இக்கதைகளுள் ஒருசில ஏற்கனவே மக்கள் ஓரளவிற்கு அறிந்து கொண்ட தலைப்புகளாக (கதைகளாக) இருப்பினும், அவற்றையும் மிகநுட்பமாகவும் விரிவாகவும் கூறியுள்ளேன். ஆயினும் பெரும்பாலானவை பொதுமக்களாலும், பக்திநூலைப் படிக்காதவர்களுக்கும் தெரியாதனவாகவே மற்றவை அமைந்துள்ளதால், சுவைகுன்றாமல் படிப்பதற்கு உதவும் என்பதும் என்னுடைய உள்ளார்ந்த எண்ணமாகும். ஆகையால் இது அனைவருக்கும் சிறப்பாகப் பயன்படும் என்பதும் எனது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். இக்கதைகளை எளிய, இனிய நடையில் எழுதி, அவற்றின் வியாக்கியானத்தையும் பரமபுருஷரான பகவானுக்கும், பக்தர்களுக்கும் இதைக் காணிக்கையாக அர்ப்பணித்துள்ளேன். இதில், ஆங்காங்கே பகவானின் கல்யாண குணங்களைக் குறிக்கப் பயன் படுத்தப்படவேண்டிய கலைச் சொற்களையும், சம்ஸ்கிருத ஸ்லோகங்களையும் உள்ளது உள்ளவாறே பயன்படுத்தி யுள்ளேன். ஸ்ரீமத் பகவத்கீதை, ஸ்ரீமத்பாகவதம் ஆகிய இரண்டு நூல்களில் இருந்தும் கருடபுராணம், ஸ்காந்தபுராணம், போன்ற நூல்களில் இருந்தும் தேவையான இடங்களில் கதைப்போக்கை உணர்த்தும், வடமொழிச் சுலோகங்களை, ஆங்காங்கே பயன்படுத்தி அவற்றைக் கையாண்டுள்ளேன். ஆயினும் இச் சமஸ்கிருதச் சொற்களுக்கும், ஸ்லோகங்களுக்கும் இணையான தமிழ்ச் சொற்களும் விளக்கமும் ஆங்காங்கே கொடுக்கப் பட்டுள்ளன. ஆகையால், கருத்துச் செறிவில் எக்குறைபாடும் நேராமலே இது படைக்கப்பட்டுள்ளது என்பது அடியேனின் திடமான

நம்பிக்கையாகும். இவை மட்டுமல்லாமல், கதைகளோடு, கருத்துகளோடும், தத்துவங்களோடும் ஒத்த கருத்துக்களை உடைய ஆழ்வார்களின் அருளிச் செயல் பாசுரங்கள், உலகப்பொதுமறையும் திருக்குறள்', பழந்தமிழ் புலவர்களின் பாடல்கள், போன்றனவற்றையும் மேற்கோள்களாக ஆங்காங்கே எடுத்துக்காட்டிப் பயன்படுத் தியுள்ளேன். இதனால் தமிழும், சமஸ்கிருதமும், ஆன்மீகவடிவிலும், அனைத்துத் துறைகளிலும் ஒத்துபோகக் கூடியவையே ஒழிய, இரண்டும். எதிர்மறை மொழிகள் அல்லவென்றும், எதிரிகளின் மொழிகளும் அல்ல என்றும் ஆய்ந்து நோக்கினால் புலப்படும் அரிய செய்தியாகும்.

**கானகப்பகுதியின் தண்ணீர்த் தடாகம் :-**

ஸ்ரீகிருஷ்ண துவைபாயனர் என்ற இயற்பெயரை உடையவரான வியாசமகரிஷியால் படைக்கப்பட்டதான மிகப்பெரும் இதிகாசம் மகாபாரதம் ஆகும். மகாபாரதத்தைத் தமிழில் பாடியுள்ள வில்லி புத்தூராழ்வாரின் பாடற்கருத்து ஒன்றைப் பார்த்தால், இந்நூல் தந்த வியாசரின் உயர்வை உள்ளவாறு அறியலாம்.

தன்னுடைய காவியமான வில்லி பாரதத்தில் வியாசபகவானின் பெருமையைப் போற்ற நினைத்த வில்லிபுத்தூரரார்,

**சார தந்திரத்தில் மிக்க தபோதனன் சதுர்வேதங்கள்**
**பாரதம் தன்னோடு ஐந்தாம் படியினால் பகர்ந்த மூர்த்தி**
**நாரத முனியை ஒப்பான் நராதிபர் நடந்து செல்லும்**
**நீரத நெறியில் வாவி நிறைந்த நீரென்ன நின்றான்**

**(வில்லி.பா.ஆதி பருவம்.470)**

என்று சிறப்பித்துப் பாடியுள்ளார்.

அதாவது, நாரத முனிவருக்குச் சமமாகக் கருதப்பட்ட இந்த மாமுனிவர் வேதவியாசர், பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியின் சுயம்வரத்திற்கு அடர்ந்த காட்டுப்பகுதியில் பயணம் செய்தபோது,. அவர்களின் களைப்பைப்போக்கவும், தண்ணீர் தாகத்தைத் தவிர்க்கவும், வழியில் கிடைத்த ஒரு நன்னீர்த்தடாகம்போல் அவர்களுக்கு எதிரே வந்தார். வந்தவர் அவர்கள் வழிமாறிச் சென்றுவிடாமல், பாஞ்சாலத்தை அடைதற்கு உரிய சரியான பாதையைக்கூறி, அவர்கள் வெற்றிபெறவும் ஆசீர்வாதம் செய்து அனுப்பினாராம். இத்தகு நிலையிலேதான் தர்மிகளாகவும், பஞ்சபாண்டவர்களும் நிறைந்திருக்கும் நமது பாரததேசத்தில், துரியோதாதியர்கள் போன்றவர்களும் இருக்கின்றனர். அவர்களின் சூழ்ச்சி வலையிலே சிக்காமல் இருக்க நாட்டை நல்வழிப்படுத்தும் அற்புத குணங்கள் கொண்ட அரசியலார்கள் நமக்குக் கிடைத்திருப்பது நமது புண்ணியங்களின் விளைவுதான்! இத்தகு சூழலில் நமது பண்டைக் கலாச்சாரம், பண்பாடுகள் போன்றனவற்றில் நாம் சிறிதும் பின்னடைவு இன்றி வாழ, அறத்தின் வழியாகவும், அறங்கூறும் நல்லோர்கள் வழியாகவும் நாம் நடக்கவேண்டும். அதற்கு இத்தகைய பக்திக்காவியங்கள் நிச்சயம் உறுதுணை செய்யும். அப்படிப்பட்ட ஒரு சிறந்த படைப்பாகவே அடியேனுடைய இந்த நூலும், பக்திமார்க்கம் செல்லவும், இப்பிறவியில் பலவகைப்பயன்களைப் பெற்று பார் உயர வாழ்க்கை வாழ்வதோடு, அடுத்தபிறவிக்கும், அமரத்துவத்தையும், முக்தியையும் கிடைத்திரட தீபச்சுடராய் ஒலிர்விடும் என்றும் நம்பிக்கை கொள்கிறேன்.

காத்தல் தொழிலைத் தனது கண்களாகக் கொண்ட அடியேனின் குலதெய்வமாகிய கண்ணபெருமானும், எனக்குச் சோர்வும், சிரமங்களும் ஏற்படும்போதெல்லாம் அதைப்போக்கும் அருமருந்தாக எனக்குக் கருணைகாட்டி, காத்து ரட்சிக்கிறார் என்பது முக்காலும் உண்மையாகும். தொய்வு ஏற்படும் காலங்களில் எல்லாம் புத்துணர்ச்சியைக் கொடுப்பவர் அவரே.! தன்னடியவனான எனக்கு, ஞானமும் சக்தியும் கொடுத்து. அடியேனைத் தன்னுடையவனாக ஆக்கிக்கொண்டுள்ளார் என்பதும் யான் அனுபவ பூர்வமாக உணரும் உண்மையாகும். அவர் எனக்குத் தந்திட்ட அருளால், அவரடியவனாகிய யானும் அவருடைய புகழை அவனியோர்க்கு எடுத்துரைக்கும் கைங்கர்யத்தின் ஒரு சிறு துளியே பாகவதக்கதைகளில் பக்தியும் முக்தியும் என்னும் இவ்வரிய படைப்பாகும்''. அத்தகைய இந்தப்படைப்பை அடியேன் அவருக்கே சமர்ப்பணம் செய்வதில் பெருமகிழ்வு அடைகிறேன். எனவே இத்தகைய சிறப்பை எனக்களித்த பெருமானின் பேரருளை வியந்து, அவர் திருவடித் தாமரையைச் சரணடைகிறேன்.!

என்னுடைய மற்ற நூல்களை விடவும்..., இப்படைப்பு சற்று வித்தியாசமானதாகும். ஏனென்றால், இதில் சம்ஸ்கிருத நூல்களான ஸ்ரீமத்பகவத்கீதை, ஸ்ரீமத்பாகவதம், விஷ்ணு புராணம் போன்றவையும், திருக்குறள், பாரதியார் கவிதைகள்,. நாலாயிரதிவ்வியப்பிரபந்தம், வில்லிபாரதம், போன்ற பலவகை நூல்களில் இருந்தும் ஒத்த கருத்தினை விளக்கும் தொடர்புடைய செய்யுட்களையும், சுலோகங்களையும் மிகச் சரியான முறையில் பயன்படுத்தி,

அவற்றின் பொருள்மாறாத வகையில் பயன்படித் தியுள்ளேன். எனவே இதைக் கற்கும் ஆன்மீக அன்பர்கள் மேலே கூறப்பட்டுள்ள நூல்களின் கருத்துக்களையும் ஓரளவிற்கு அறிந்து இன்புறலாம்.

தண்டமிழ் மட்டுமின்றி, கன்னடம், களிதெலுங்கு, கவின் மலையாளம், ஆங்கிலம் போன்ற அனைத்து மொழி மக்களின் ஆத்மாக்கள் உயர்வடையவும் வடவேங்கடமுடையானின் திருவருள் பேற்றிற்கும் வழிவகுக்கும் மிகப்பெரும் ஆன்மீக சேவைக்கடலாய் அரும்பணி ஆற்றிவருவது ஆந்திர மாநிலத்தின் திருமலை திருப்பதி தேவஸ்தானம் என்பது ஆன்றோர் அறிந்த உண்மையாகும். அதன் செயலாட்சித் தலைவர், உள்ளிட்ட அனைத்து நிர்வாகத்தினரும். தன்னலமற்று, பகவான் சேவையில் ஈடுபட்டுள்ளதால், உலகளவில் அதன்பேரும், புகழும் ஓங்கி வளர்ந்துள்ளது. அவர்களது சேவையின் ஒருபகுதியாக விளங்குவது பக்திநூல்களை வெளியிட்டு அனைத்துலக மக்களும் திருவேங்கடவனின் திருச்சேவையில் ஆழங்கால்பட்டு நின்று ஆத்மஞானம் பெறச்செய்தல் ஆகும். பல்வேறு மொழிகளில் ஆன்மீகப் படைப்புகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளித்தல், வேறு சில படைப்புகளை அவர்களாகவே ஏற்று, அவற்றை பப்ளிகேஷன் துறைமூலம் வெளியிடுதல் போன்றன சீர்சால் பணிகளைச் செய்து வரும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் நூல்வெளியீட்டுத் துறையின் மூலமாகவே இந்த என்னுடைய படைப்பு வெளிவருவதில் நான்


மிகப்பேரானந்தம் அடைகிறேன். குறிப்பாக சப்தகிரி மாதாந்திர இதழின் பதிப்பாசிரியர், முனைவர் ராதாரமணா, பப்ளிகேஷன் துறையின் சிறப்பு அலுவலர் முனைவர் விபீஷண சர்மாகாரு இணைபதிப்பாசிரியர் ஶ்ரீமான் நரசிம்மலு காரு, சப்தகிரி ஆசிரியர் திரு சொக்கலிங்கம், இச் சிறப்புப் பணியில் தங்கள் பணியைத் திறம்படச் செய்துவரும் அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியறிதலை உரித்தாக்கி மகிழ்கிறேன்.


நன்றி
என்றென்றும் திருவேங்கடமுடையானின்
திருவடிச்சேவையில்

**முனைவர் பெரு.ஹரிகேசவ ராமாநுஜதாசர். வேலூர்.**
**எம்.ஏ.பி.ஓ.எல், எம்.எட், பி.எச்.டி,**
தெலுங்குமொழிப் பட்டயம், மற்றும் கோவிதா–சான்றிதழ்–
சமஸ்கிருதம்.
தொலைபேசி எண் : 9443998207

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | துந்துகாரியின் ஆத்மா முக்தி அடைந்த கதை. | *1* |
| *2.* | நாரதர் அறிவுரையும் வியாசர் விருந்தும். | *12* |
| *3.* | மரணபயம் நீக்கி பரமபதம் அடைந்தவன். | *29* |
| *4.* | பக்தன் துருவனும் பகவான் விஷ்ணுவும். | *47* |
| *5.* | மமதை கொண்டமன்னனை மாய்த்திட்ட மகரிஷிகள். | *66* |
| *6.* | சதி தேவி தியாகமும் தட்சன் வதையும். | *95* |
| *7.* | பரதச் சக்கரவர்த்தியின் பல்வேறு பிறவிகள். | *121* |
| *8.* | அஜாமிளனுக்கு அருள் தந்த திருமந்திரம்... | *153* |
| *9.* | இந்திரன் பாவத்தால், எய்திய தண்டனைகள். | *169* |
| *10.* | முனிவர்கள் சாபத்தை முடித்துவைத்த ஹரிபகவான். | *197* |
| *11.* | பரமபுருஷ பகவான் எடுத்த மச்சாவதாரம். | *224* |
| *12.* | ஏகாதசி விரதத்தால் சிறப்புற்ற அம்பரீஷன். | *243* |
| *13.* | நலம் தரும் மந்திரம் நாராயணாய | *268* |
| *14.* | விடா முயற்சி வெற்றியைத் தரும். | *290* |
| *15.* | கிருஷ்ணன் இருக்குமிடம் – வெற்றி விளையும் இடம். | *315* |
| *16.* | பழியைப் போக்கி வாழ்ந்த உத்தம புருஷன்.! | *347* |
| *17.* | பாணாசுரன் கர்வம் அழிதலும், உஷாகல்யாணமும். | *380* |
| *18.* | ஜராசந்தனுக்கும் சாயுஜ்ய முக்தி. | *405* |
| *19.* | பக்திக்கும் முக்திக்கும் பாகவதமே அருமந்திரம். | *444* |





# 1. துந்துகாரியின் ஆத்மா முக்திபெற்ற கதை

மகாத்மியம் என்றால் சிறப்பு, பெருமை, உயர்வு, முக்கியத்துவம் என்ற பற்பல பொருளைத்தரும் ஒரு சம்ஸ்கிருதச் சொல்லாகும். ஸ்ரீமத் பாகவதத்தின் சிறப்பைப் பற்றி விளக்கக்கூடிய கதைகளும் கதைச்சம்பவங்களும் ஏராளமாக உள்ளன. கதையையும், இந்த முதற்கதையில் காண்பதால், ஸ்ரீமத் பாகவதம் என்ற பாகவதபுராணத்தின் சிறப்பை அறியலாம்.

பகவான் ஸ்ரீமகாவிஷ்ணுவின் இருபத்தொரு அவதாரங்களுள் இருபதாவது அவதாரமாக அவர்எடுத்த அவதாரம்தான் ஸ்ரீகிருஷ்ணாவதாரம். இது பகவானின் பரிபூரண அவதாரம் என்று போற்றிப்புகழ்கின்றனர் புராண இதிகாச வல்லுநர்கள். ஸ்ரீகிருஷ்ணருடைய பிறப்பு (அவதாரம்) அவருடைய இளமைப்பருவ நிகழ்வுகள், பாலகிருஷ்ணர் நிகழ்த்திய லீலாவிநோதங்கள், கோகுலத்திலும், கோர்த்தனத்திலும், பிருந்தாவனத்திலும் அவர் நிகழ்த்திய ஆச்சரியமூட்டும் அற்புதங்கள், அவற்றில் அவர்செய்து முடித்த அவருடைய அவதார நோக்கங்கள் ஆகிய அனைத்துச் செயல்களையும் தனது ஸ்ரீமத்பாகவதம் என்ற பாகவதபுராணத்தில், பக்தி பூர்வமாக நமக்குப்படைத்தருளியுள்ளவர் வியாசபகவான் என்ற மகரிஷி ஆவார்.

இப்புராணத்தினுடைய மகாத்மியம் என்ற சிறப்பைப் பற்றி, பதினெட்டு புராணங்களில் ஒன்றான பத்ம புராணத்தில் கூறப்பட்டுள்ள ஒரு கதையைக் காணலாம்.

**ஆத்மதேவரும் துந்துலியும் :-**

துங்கபத்ரா நதிக்கரையில் அமைந்திருந்த ஓர் அழகிய கிராமத்தில் ஆத்மதேவர் என்ற ஒரு நல்லவர் வாழ்ந்துவந்தார். அவருடைய மனைவியின்பெயர் துந்துலி என்பது. ஆத்மதேவர் மிகவும் நல்லவர். ஆனால் அவருடைய மனைவியோ எல்லாக்கெட்ட குணங்களுக்கும் இருப்பிட மானவள். மிகுந்த சோம்பேறி! ஆனால் ஆத்மதேவர் நற்குண நற்செய்கைகளை உடையவராக இருந்தார். அவர் நல்லவர். அதேநேரத்தில் பொன்னும் பொருளும் சேர்த்துவைப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். எனவே அவரிடம் பெரும்பொருள் குவிந்து கிடந்ததால், அவர் ஒரு சிற்றரசனைப்போல தனது வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்.

**கலங்கியமனதுடன் கானகம் அடைந்தார் :-**

சிற்றரசனைப்போல சிறப்பான வாழ்க்கை வாழ்ந்துவந்த அவருக்கு நாளடைவில் மிகப்பெரிய மனக்குறை ஒன்று ஏற்பட்டது. காரணம் அவருக்குப் பிறகு அவருடைய செல்வத்தை ஆண்டு அனுபவிக்கப் புத்திரன் இல்லையே என்ற ஏக்கம்தான் அது.! எனவே அவர் ஒரு நாள் மனக்கலக்கத்துடன் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப்போனார். அருகிலே இருந்த ஒரு காட்டை அடைந்த அவர் ஒரு மரத்தடியில் சோகமே உருவாக அமர்ந்திருந்தார்.

**மாமுனிவர் கொடுத்தார் மாம்பழம் :-**

அப்போது அக்காட்டிலே தவம் செய்துகொண்டிருந்த ஒரு மகாமுனிவர் அங்கு வந்து, ஆத்மதேவனுடைய சோகத்திற்கு

உரிய காரணத்தைக் கேட்டார். அதற்கு ஆத்மதேவர் "மகரிஷியே நான் மிகப்பெரும் செல்வந்தன். எல்லாவிதமான சுகபோகங்களுடன் வாழந்து வருகிறேன். ஆனால், எனக்குப்பிறகு என்னுடைய சொத்து சுகங்களை அனுபவித்து வாழ்வதற்கும், சந்ததி விருத்திக்கும் ஒரு மகன் இல்லை. இதுதான் என்னுடைய துன்பத்திற்குக் காரணம்" என்று கூறி, ஏக்கப்பெருமூச்சு விட்டார். மேலும் தனக்கு ஒரு குழந்தை பாக்யம் ஏற்பட வேண்டியதன் பல்வேறு அவசியங்களைக் கூறி, அவரிடம் புத்திரப்பேற்றிற்கு ஓர் உபாயம் கூறுமாறு கேட்டுக்கொண்டார்.

**மாங்கனியின் சிறப்பு :-**

ஆத்மதேவரின் ஆசையை நிறைவேற்றக் கருதிய அந்தமகாமுனிவர். ஒரு மாங்கனியைக் கொடுத்து, அதை அவருடைய மனைவிக்குக் கொடுக்குமாறு, அவள் அக்கனியை உண்டவுடன் கருத்தரித்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பாள் என்றும் ஆசீர்வாதம் செய்து அனுப்பி வைத்தார் அதைப் பெற்றுக் கொண்ட ஆத்மதேவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் வீட்டிற்குச் சென்று, தான் காட்டில் சந்தித்த மாமுனிவரின் சிறப்பையும், அவர்' கொடுத்த மாங்கனியை உண்ணுமாறும் தன்னுடைய மனைவியான துந்துலிக்குக் கூறினார். அவளும் அதை வாங்கிக்கொண்டாள்.

**துந்துலியின் கலக்கமும் சோம்பேறித்தனமும் :-**

ஆனால் தீய குணங்களின் இருப்பிடமாக இருந்த துந்துவி மிகவும் அழகாக சிந்தித்தாள். மாங்கனியை உண்டால்,

கருப்பம் ஏற்பட்டு அதை தான் பத்துமாதங்கள் சுமக்கவேண்டும். இப்போது எவ்விதமான சிறு துன்பமும் இல்லாமல் இருக்கும் தன்னுடைய வாழ்க்கை, குழந்தை பிறந்துவிட்டால் பல தொல்லைகளுக்கு ஆளாகநேரிடும். எனக்குஅதிகமான வேலைப்பளு உண்டாகும். அதனால் தன்னுடைய சுதந்திரம் பறிக்கப்படும் ! ஆனால், கணவரோ மாங்கனியை உண்ணுமாறு கொடுத்துள்ளார். அதை உண்ணத்தான் வேண்டும். உண்ணாமல் போனால், குழந்தைபாக்கியம இல்லாமல்போகும். எனவே என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.!

**தங்கையின் குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்ள உடன்பாடு.!**

அப்போது அவளுடைய தங்கை ஒருத்தி அவள் வீட்டிற்கு வந்தாள். மேலும் அவள் அப்போதுதான் கருவுற்று இருப்பதையும் தெரிந்துகொண்டாள். எனவே தான் மாங்கனியை உண்ணாமலே, தன்னுடைய தங்கைக்குப் பிறக்கப்போகும் குழந்தையைத் தன் குழந்தை என்று கூறிவிடலாம். தனக்கும் கஷ்டம் இல்லை. குழந்தையும் கிடைத்துவிடும், அதற்காகத் தன்னுடைய தங்கைக்கு ஒரு பெரும் பகுதி செல்வத்தைக் கொடுத்துவிடலாம் என்றும், அதை, அந்தத் தங்கையானவள் யாருக்கும் சொல்லக்கூடாது என்றும் சத்தியம் வாங்கிக்கொள்ளலாம் என்றும் முடிவெடுத்தாள். எனவே தன் தங்கையை ரகசியமாக அழைத்து, தன் திட்டத்தையும் ஏற்பாட்டையும் தங்கையிடம் கூறினாள்.! அவளுடைய தங்கையும் அந்தத் சதி திட்டத்திற்கு ஒப்புக்கொண்டாள்.!

**வீட்டுப்பசுவிற்கு உதித்திட்ட கோகர்ணன் :-**

தன் தங்கை யானவள்'' தனது திட்டத்திற்கு உடன்பட்டதால், அந்த மாங்கனியைத் தனது வீட்டுத்தொழுவத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு பசுவிற்கு அதைப்போட்டாள்.! பசு மிகவும் ருசித்துச் சுவைத்து அக்கனியை உண்டது. பேறு காலம் நெருங்கியபோது, தன்னுடைய தங்கைவீட்டிற்குக் சென்ற துந்துலி, அவளுக்குப்பிறந்த ஆண்குழந்தையை தான் எடுத்துக்கொண்டு, திட்டத்தின்படி பெரும்செல்வத்தை தங்கைக்குக் கொடுத்தாள். அவளும் பெற்றுக்கொண்டதால், அந்த ஆண்குழந்தையைத் தன் குழந்தை என்று கூறிக்கொண்டு தனது வீட்டிற்கு வந்துசேர்ந்தாள் துந்துலி! அதே நேரத்தில் முனிவர் கொடுத்த மாங்கனியை உண்ட பசுவும் ஓர் அழகிய ஆண்மகனை ஈன்றது. நல்லதேஜசும், கம்பீரமாகவும் குழந்தை இருந்தது. ஆனால், அந்தப் பையனுடைய கோகர்ணன், அதாவது பசுமாட்டுக்காதை உடையவன் என்ற பொருளில் பெயர் வைத்து அவனையும் சேர்த்து வளர்த்துவந்தார் ஆத்மதேவர்.

**துந்துகாரியின் தீயகுணங்கள் :-**

துந்துலியின் தங்கையும் துர்க்குணங்கள் நிரம்பியவளாக இருந்ததாலும், மிகுந்த துர்க்குணங்களை உடைய துந்துலியால் வளர்க்கப்பட்டதாலும் துந்துகாரி பலமடங்கு கொடுமைக் குணங்களும், தீயபழக்கங்களை உடையவனாகவும் வளர்ந்தான். அவனுடைய அட்டூழியங்கள் அத்துமீறிச் சென்றன. மேலும் வேசியர்களின் சகவாசமும்,

சுகபோகமும் உடையவனாக வளர்ந்த துந்துபி, அவ்வேசியர்களுக்குக் கொடுப்பதற்காக, தனது தந்தையின் பெரும் செல்வத்தை எல்லாம் அழித்துவந்தான். பணம் தரமறுத்தபோது தந்தையை இழிவாகப்பேசி இம்சித்தான். அதனால் மனமுடைந்து போயிருந்த ஆத்மதேவரை, ஒரு நாள் பணம் கேட்டு மிரட்ட தந்தையார் மறுத்ததால், கோபம் கொண்ட துந்துகாரி, தனது தந்தை என்றும் பாராமல், அவரைப் பலமாக அடித்துத்தாக்கினான்… தாயாரும் அவனைக்கட்டுப்படுத்தவில்லை. எனவே மனமுடைந்து போன ஆத்மதேவர், இல்லற வாழ்க்கையை வெறுத்து, கானகம் சென்று, சிலநாள் பட்டினி கிடந்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டார்.

**தேசாந்திரம் சென்றான் கோகர்ணன் :-**

தந்தையின் மரணத்திற்குப் பிறகு கோகர்ணனுக்கு அவ்வீட்டில் எவ்வித உரிமையும் இல்லாமல்போனது. ஆத்மதேவரின் மறைவிற்குப் பிறகு கோகர்ணனை அனைவரும் தூற்றினார்கள். எனவே அவன் ஒருநாள் அந்தவீட்டிலிருந்து புறப்பட்டு, பல புண்ணிய தேசங்களுக்குச் சென்று, தனது ஞானத்தையும் பக்தியையும் வளர்த்துக்கொண்ட ஒரு மகாபுருஷனாக மாறிப்போனான்.! ஓரிடத்திலே நிற்காமல் பல இடங்களுக்கும் சென்று, ஆங்காங்கே பக்தர்களை ஒன்று திரட்டி, ஸ்ரீகிருஷ்ண பக்தியையும், ஆத்மதத்துவஞானத்தையும் ஆங்காங்கே பரப்பிவந்தான் கோகர்ணன்.!

**துந்துகாரியின் அகாலமரணம் :-**

தனது தாயைத் தவிர அந்த வீட்டில் வேறு யாரும் இல்லாததாலும், துந்துகாரியை நல்வழிப்படுத்தி அறிவுரை கூறுபவர்கள் யாரும் இல்லாத போனதாலும், துந்துகாரியின் அட்டூழியங்கள் கட்டுக்கடங்காமல்போயின.

அவன் தன்வீட்டிற்கு பலவேசியர்களை வரவைத்து, தன் தாயாரின் முன்னிலையிலேயே அவர்களுடன் கூடிக் குலாவினான். அவர்களும் ஒவ்வொரு நாளும் அவனிடமிருந்து பெரும் பொருளைக் கறக்கத் தொடங்கினார்கள். ஒரு நாள் அவனுடைய தாயான துந்துலி அதைக்கண்டு, தட்டிக்கேட்டதால், ஆத்திரம் கொண்ட அவன், தனது தாயாரையும் அடித்துக்கொன்றுவிட்டான்.!

**புனித கயாவில் செய்த தீர்த்தசிரார்த்தம் :-**

இந்தநிலையில் தீர்த்தயாத்திரையில் ஈடுபட்டிருந்த கோகர்ணன் ஒருமுறை கயா என்ற புண்ணிய சேத்திரத்திற்கு வந்தான். அவ்விடத்தில் அவனுடைய உறவினர்கள் சிலரையும், ஊர்க்காரர்களையும் கண்டான் கோகர்ணன். அவர்களிடம் தனது குடும்பத்தின் நலத்தை அவன் விசாரித்தான். அவர்கள், துந்துகாரி தாயையே கொன்றதையும், இறுதியில் வேசியர்களால் கொல்லப் பட்டதையும் எடுத்துரைத்தனர். மிகவும் வருத்தப்பட்ட அவன், அந்த கயா என்ற புனிதத்தலத்தில், பித்ருக்களின் ஆத்ம அமைதிக்காகச் செய்யப்பட வேண்டிய தீர்த்த சிரார்த்தம் என்ற இறுதிச் சடங்கினை வேத, மந்திரங்கள் ஓதப்பட முறைப்படி செய்து முடித்தான்.- தனது தம்பியாகிய துந்துகாரிக்கும்,

அவனது தாயாருக்கும் தேவையானதை ஒரு மகன் என்றமுறையில் அவன் செய்துவிட்டதாகவும் நினைத்துக்' கொண்டு, ஊர்காரர்களின் வற்புறுத்துதலுக்காக அவன் மீண்டும் தன்னுடைய சொந்தஊறுக்கு வந்தான் கோகர்ணன்.!

**துந்துகாரி பூதப்பிரேத உடலின் வேண்டுகோள் :-**

தன்னுடைய ஊருக்கு வந்தவன், வீட்டுத்திண்ணையில் ஒரு நாள் சாயங்காலநேரத்தில் கண்மூடிய நிலையில் தியானத்தில் இருந்தான். அப்போது அவன் கண்முன்னே ஒரு பிரேதபூத உடல் தோன்றி அலைக்கழிந்துகொண்டும், ஆவேசமுடன் சுற்றிக்கொண்டும் இருப்பதை உணர்ந்தான்.. அதைக்கண்டு அஞ்சாத கோகர்ணன் அவன்யாரென்னும், அவன் ஏன் இவ்வாறு பிரேதபூத உடலுடன் அலைகிறான் என்றும் கேட்டான். அதற்கு துந்துகாரியின் அந்தப் பிரேதபூதம், தான் துந்துகாரி என்றும் தனது அம்மாவிற்கு சாந்தியை ஏற்படுத்தி, பூதவுடல் நீங்கி தான், சாந்தியை அடைய வழிவகுக்கவேண்டும் என்று பிராத்தனை செய்தது. அதற்கு கோகர்ணன், தான் கயாவில் செய்த தீர்த்த சிராத்தத்தால், அவன் ஆன்மா சாந்தி அடையவில்லை என்பது அறிந்து, அவன் ஆன்மாவைக்கடைத்தேற்றுவதற்கான வழிமுறை தெரியாமல் தவித்தான்.

**சூரியபகவான் சொன்ன உபாயம் :-**

அடுத்த நாள் காலையில் கோகர்ணன் காலையில், எழுந்து நித்திய கர்மாக்களைச் செய்து முடித்தான். திடீரென தனது தம்பியின் ஆத்மாசாந்திக்கு உரிய வழிமுறைசை் சூரியபகவானிடம் கேட்கலாம் என்று முடிவு செய்தான்

அவ்வாறே சூரிய பகவானிடம் தனது தம்பியான துந்துகாரிணின் ஆன்மசாந்திக்கு வழிவகை கூறுமாறு வேண்ட, அவரும் 'ஶ்ரீமத் பாகவத நாமபுராணம் சப்தாஹ வசனம் ச்ருணு' என்று பதில் அளித்தார். அதாவது ஶ்ரீமத்பாகவத புராணத்தை உன்னுடைய தம்பிக்கு ஏழு நாட்களுக்கு எடுத்துரைத்தால், அப்புனிதமான புராணத்தைக் கேட்பதால், நிச்சயமாக உன்னைடய தம்பியின் துர் ஆத்மா, சாந்தியடைந்து நற்கதியைப் பெறும் என்று கூறினார்.

**ஏழுநாள் சப்தாஹமும், ஏழாம்நாள் அதிசயமும்:-**

கொடியவனாக இருந்தாலும், தனது தம்பியின் ஆத்மாவை நற்கதி அடையவைக்கவேண்டியது தன்னுடைய கடமை என்று நினைத்தான் கோகர்ணன். எனவே ஏழுநாட்களுக்குத் தானே அந்தப்பாகவதபுராணத்தைக் கூறிமுடிக்கலாம் என்று முடிவு செய்தான். ஆனால் சப்தாஹம முடிவில் துந்துகாரிக்கு மோட்சமாகிய நற்கதி கிடைத்ததா, இல்லையா என்பதை எவ்வாறு அறிவது என்று யோசித்தபோது, துந்துகாரியின் துர்ஆத்மாவே ஒரு செயல்முறையையும் கூறியது. தான் ஏழுகணுக்களை உடைய ஒரு மூங்கில் செடியில் ஆவிர்ப்பித்துக் கொள்வதாகவும், ஒவ்வொரு நாள் முடிவிலும் அந்த மூங்கில் செடியின் ஒரு கணு வெடித்தால், தனக்கு பாகவதத்தால் பலன் ஏற்பட்டதாக அர்த்தம் என்றும் கூறினான். எனவே கோகர்ணனும் அதை, ஏற்றுக் கொண்டு, சப்தாஹத்தின் ஒவ்வொருநாள் முடிவிலும் மூங்கில் கணு வெடித்துச் சிதறுவதைக் காணலாம் என்று அறிவித்தான். பாகவதபுராண சப்தாஹம் வளாகத்தில் பெரும் திரளான மக்கள் கூடினார்கள்.

முதல் நாள் கதையின் முடிவில் ஏழுகண்களை உடைய அந்த மூங்கில் செடியின் ஒரு கணு வெடித்துச் சிதறியது. இது எல்லோரையும் ஆச்சரியப்படவைத்தது. இதே போல், ஒவ்வொரு நாளும் கதை முடிவிலும் மூங்கிலின் ஒரு கணு வெடித்துச் சிதற, ஏழாம் நாளில் கடைசி கணுப்பகுதியும் வெடித்துச் சிதறியபோது, அதிலிருந்து ஒரு பிரகாசமான ஒளி வெளிப்பட்டு மேலோகம் நோக்கிச் சென்றது. அதாவது துந்துகாரியின் பாவச்சுமைகள் எல்லாம் ஸ்ரீமத்பாகவதத்தைக் கேட்டதால்:, தீயினில் போடப்பட்டதூசாக மறைந்துபோயின. அவன் பாவங்கள் போக்கப்பட்டதால், அவனுடைய துர்ஆத்மா நற்கதியைப் பெற்றது.! பரமபதப்பேற்றை அடைந்தான் துந்துகாரி.!

பொதுவாக சாந்தி அடையாமல் இறந்துபோன ஒருவருடைய ஆன்மாவானது, கயா புண்ணிய தேசத்தில் தீர்த்தசிராத்தம் செய்தாலே அந்த துராத்மாவினுடைய பாபங்கள் நீங்கிவிடும். அது புனிதம் அடைந்து நற்கதி பெறும். ஆனால் துந்துகாரி செய்த பாவச்செயல்களாகிய தாய்'' தந்தையரையே கொன்றதும், வேசியர் சகவாசமும் மிகப்பெரும் பாவங்கள் ஆகையால் துந்துகாரியின் சூட்சும உடலாகிய ஆத்மாவிற்கு நற்கதி கிடைக்கவில்லை.! ஆனால் அப்பேர்ப்பட்ட பாவிக்கும், ஸ்ரீமத்பாகவதத்தை ஏழு நாட்களுக்கு கதாச்சிரவணமாக –உபந்யாசமாக) கேட்டதால், அவனுக்கும் முக்திப்பிராப்தி வாய்த்தது எனபது இதனால்

அறியப்படுகிறது. ஆகையால், பதினெட்டு புராணங்களில் ஸ்ரீகிருஷ்ணபகவானின் பக்தியை நிலைநாட்டும் இந்த ஒருபுராணத்தைப்படித்தாலே அனைவருடைய ஜன்ம சாபங்களும் நீங்கப்பெறும் என்பதையும், அதனால் மோட்சலோகம் செல்லும் நற்கதியும் உண்டாகும் என்பதையும் இக்கதையால் நாம் அறிகிறோம்.

## 2. நாரதர் அறிவுரையும், வியாசர் விருந்தும்

### (புராணம் தோன்றிய புனிதக்காரணம்)

#### பாகவத புராணமும் - பகவான் வியாசரும்

நான்முகப் பிரம்மாவின் மானச புத்திரர்களுள் ஒருவராக விளங்கியவர் நாரத மகரிஷி. ஸ்ரீமந் நாராயணப் பெருமானாகிய பரப்பிரம்மம், துவாபரயுகத்தில் தனது அவதாரத்தை முடித்துக் கொண்டு, வைகுந்தத்திற்குச் சென்றுவிட்டார். ஸ்ரீகிருஷ்ணரின் உதவியால் பஞ்சபாண்டவர்கள் பாரதப்போரில் ஈடுபட்டு, கிருஷ்ணரின் அறிவுரைப்படி போர்புரிந்து வெற்றியும் கண்டனர். மகாபாரதத்தில் அக்கிருஷ்ணபகவானுடைய அரசியல் வழிகாட்டு நெறிமுறைகளையும், துரியோதனாதியர்களை அழிக்க கிருஷ்ணன் மேற்கொண்ட அற்புதச் செய்திகளையும் மிகவும் விரிவாக, ஒருலட்சத்து இருபத்தைந்தாயிரம் சுலோகங்களால் மகாபாரதக் கதையைப்பாடி முடித்து விட்டார் வியாசபகவான். இவ்வளவு பெரும்பணியைச் செய்திருந்தபோதிலும், வியாசரின் உள்ளத்தில் நிறைவு ஏற்படாமல், அவர் மனக்கலக்கமுற்று இருந்தகாலத்தில், நாரதமகரிஷி அங்குதோன்றி, அவருடைய மனக்கலக்கத்தின் காரணத்தையும் எடுத்துரைத்து, அதைப்போக்கிக் கொள்ள, பகவானின் குணாதிசயங்களை விளக்கும் புராணத்தை இயற்றினால் அவரது மனம் சாந்தம் அடையும் என்று அறிவுரை கூறியதால், அதை ஏற்று வேதவியாசர் நமக்கு அளித்த விருந்துதான் ஸ்ரீமத்பாகவதம் என்ற பாகவதபுராணம் ஆகும். பகவானின் ஓர் அம்சமாகப் பட்ட பெருவிருந்தாக

விளங்கும் இப்புராணம், பக்தர்களுக்காக கருணை உள்ளத்தோடு அப்பெருமான் நிகழ்த்திய அற்புதக் கதைகளையும் கூறுவதாக அமைந்துள்ளது.

**பிதாமகர் பீஷ்மர் போற்றும் வியாசரும் சுகமுனியும் :-**

வேதவியாசராகிய மகரிஷியால், நாரதமுனிவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப, இயற்றப்பட்டதான இந்தப் புராணக்கதையை, பாண்டவர்களின் குலத்தே தோன்றிய பரீட்சத்து மகாராஜாவிற்கு, சுகப்பிரம்மம் என்று போற்றப்படும் சுகமகரிஷி பற்பல முனிவர்கள் நிறைந்திருந்த சூழலில் இதை அம்மன்னனுக்கு உபதேசம் செய்தார். அதன்மூலம் ஸ்ரீகிருஷ்ணபக்தியை இவ்வுலக மக்கள் பெற்று முக்தி அடைவதற்குரிய வழிவகை ஏற்பட்டது. இப் புராணத்தை அருளிய வியாசபகவானின் முன்னோர்களைப் பற்றியும், அவருடைய பாரம்பரியத்தின் பெருமையைப் பற்றியும் பிதாமகர் பீஷ்மர் தன்னுடைய ஸ்ரீவிஷ்ணுசஹஸ்ர நாம ஸ்தோத்திரத்தில்

**வ்யாசம் வசிஷ்ட நப்தாரம் சக்தே: பௌத்ரமகல்மஷம்**
**பராசராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம்.**

**(2.ஆம் ஸ்தோத்திரம்)**

குறிப்பிட்டு வியாசபகவானுக்கு அஞ்சலி செய்கிறபோது, வசிஷ்ட முனிவரின் கொள்ளுப்பேரனும், சக்திமுனிவருடைய பேரனும், பராசரமகரிஷியின் மகனும், சுகமகரிஷியின் தந்தையுமான ஸ்ரீ வியாசரை நான் வணங்குகிறேன் என்று பாடியிருப்பதால் வியாசரின் பாரம்பரியச் சிறப்பு அறியப்படுகின்றது.

**மீனோடு ஆமை கேழல் அரி குறளாய் முன்னும் இராமனாய்த் தானாய் பின்னம் இராமனாய்த் தாமோதரனாய்க் கல்கியும் ஆனான்...**

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரம் (பெரிய திருமொழி.1727) என்னும் தன்னுடைய பெரிய திருமொழிப்பாசுரத்தில் பகவானின் தசாவதாரங்களைக் குறிப்பிடுகிறார்.... இப்பத்து அவதாரங்களையும் கூர்ந்து நோக்கினால், அவை எல்லாம் உள்ளது சிறத்தல் என்னும் பரிணாம வளர்ச்சித் தத்துவத்தின் (தியரி ஆஃப் எவலூஷன்) அடிப்படையில் அமைந்துள்ளதைக் கண்டு வியப் படையலாம்.!

**உலகத்தின் முதல் குரு (ஆசிரியர்) வேதவியாசரே !**

மேலும் ஐந்தாம் வேதம் என்று கருதப்படும் தகுதி உடையதான ஸ்ரீமத் மகாபாரதத்தை அருளிச் செய்தவரும் இவரே! மகாபாரதத்தை , விநாயகப் பெருமானைக்கொண்டு எழுதச் செய்து, அதைத் தந்த முதலாவது பெரிய குரு இவர்தான். மேலும் தன்னைச் சந்தித்து, பரப்பிரம்மத்தின் தத்துவங்களை அறிய விரும்பிய முனிவர்கள் போன்றோர்களுக்கும் குருவாக இருந்து உபதேசம் செய்ததோடு, தன்னுடைய புராணப் படைப்பான ஸ்ரீமத் பாகவதத்தைத் தனது மகனாகிய சுகப்பிரம்மத்திற்கும் (சுகமகரிஷி) குருஸ்தானத்திலே இருந்து, அதை உபதேசம் செய்தார். அனைத்திற்கும் மேலாக இவர் வகைப்படுத்திப் பிரித்திட்ட வேதங்களுள் ரிக் வேதத்தை பைல முனிவரைக் கொண்டும், மகரிஷிமூலமாகுவும், சுமந்து சென்ற முனிவர் மூலமாக அதர்வணவேதத்தையும் குரு சிஷ்ய பாரம்பரிய

முறைப்படி பயிற்றுவிக்க ஏற்பாடுகள் செய்தவரும் இவ்வேதவியாசரே! எனவே கற்றல் கற்பித்தல் முறையின் முன்னோடி வியாசர். ( பிரிடிசெஸ்சர் ஆப் டீச்சிங் அண்ட் லேர்னிங் பிராசஸ்) எனவே முறையான கற்றல் கற்பித்தல் தொழிலுக்குக் கால்கோள் அமைத்தவர் இவரே என்பதால், இவரே உலகத்தின் முதல் குருஸ்தானத்திற்கு உரியவர் ஆவார். எனவே இவரே உலகின் முதல் ஆசிரியர். ஆகவே நாம் கொண்டாடி வருகின்ற ஆசிரியர் தினத்தை, உண்மையாகவும், நியாயப்படியாகவும் கொண்டாட வேண்டுமானால், அதற்கு முழுத் தகுதியும் உள்ளவர் இவர்தான். எனவேதான் இவருடைய பிறந்த நாளை ஆசிரியதினமாக கொண்டாடவேண்டுமானால்- அதற்கு முழுத் தகுதியும் ஒருசில ஆன்றோர்களின் கோரிக்கை யாகவும் உள்ளது.! ஆனால் அவர் பரதவர் என்னும் மீனவர்குலத்தைச் சேர்ந்த பெண்ணின் மைந்தன் எனபதாலோ என்னமோ, தமிழ்நாட்டில் இவருடைய பிறந்தநாள் கொண்டாட்டத்தைப் புறக்கணித்து உள்ளார்கள்..!

**வியாசரின் நிம்மதி இன்மைக்கு நாரதர் கூறிய காரணங்கள் :-**

இத்தனைச் சிறப்புகளை உடைய வியாச பகவான் இதிகாசங்களில் ஒன்றாக விளங்கும், ஒரு லட்சம் ஸ்லோகங்களையுடைய மகாபாரதத்தை அருளிச்செய்து பெரும்புகழ் அடைந்தார். எனினும், இவருக்கு ஏனோ மன அமைதி இல்லாமலே இருந்தது. அத்தகைய கலக்கத்தில் இருந்தபோது, ஒருநாள் நாரதமகரிஷி அவரிடம் வந்தார். வியாசருடைய மனக் கலக்கத்தைப் பற்றி அறிந்த அவர்அவருடைய ஆற்றல்களை எல்லாம் எடுத்துரைத்து

வேதங்களையும், புராணங்களையும் மட்டுமன்றி பல அற்புதப்படைப்புகளை எல்லாம் உலகத்திற்கு அருளிச் செய்த தாங்கள், பகவத் சொரூபத்தைப்பற்றியும் அவருடைய மகிமையைப்பற்றியும் விவரிக்கும் எந்த நூலையும் செய்யவில்லை.! மேலும் மகாபாரதத்தில், ஸ்ரீகிருஷ்ணராகிய பகவான் நிகழ்த்திய அற்புதங்களையும், பாண்டவர்களைக் காக்கும் பொருட்டாகச் செய்த போர்செய்திகள் போன்றவற்றையும,- போரின் தர்மங்களையும், அவற்றிற்குரிய சாதனங்களையும், அரசதர்மங்கள், போர்நியதிகள் போன்றவற்றையும் தான் ஒருலட்சம் ஸ்லோகங்களில் மிகுதியாகப்பாடியுள்ளீர்கள். ஆனால் நீர் உண்மையில் பரமபுருஷரின் மேன்மையான, களங்கமற்ற உன்னதமான பெருமைகளைப் பரப்பவில்லை. இதனால் பகவானின் உள்ளம் உமது மகாபாரதப்படைப்பால் மனத் திருப்தி அடையவில்லை.! அதுவே உமது நிம்மதி இல்லாமைக்கு உரிய காரணம் ஆகும் என்று எடுத்துரைத்தார். எனவே வாசுதேவகிருஷ்ணரின் பெருமைகள் உமது படைப்பில் கூறப்படவேண்டும். என்னும் கருத்தை நேரிடையாகவே வியாச மகரிஷியிடம் நாரத மகரிஷி எடுத்துரைத்தார்.

இந்தக் கருத்தை பாகவதத்தின் முதல் காணம்டம், 5–ஆம் அத்யாயத்தின், 8, மற்றுமம் 9ஆம் ஸ்லோகங்களில் நாரதர் கூறியதால் அறியமுடிகிறது.

**ஸ்ரீநாரத உவாச :**

**பவதா அனுதித ப்ராயம் யசோ பகவதோ அமலம்**

**ஏனைவாஸெள ந துஷ்யேத மன்யே தத் தர்சனம் கிலம்**

என்பதாலும்

**....க்ட்சந ததா வாஸுதேவஸ்ய மஹிமா ஹி அனுவர்ணித :**

என்னும் இச்சுலோகங்கள் அப்பகவானுடைய தோற்றம், அவர்செய்த அற்புதபாலகிருஷ்ணலீலைகள், அவருடைய கல்யாணகுணங்கள், போன்ற பகவானின் மகிமைகளை விளக்கும் காவியத்தை நீங்கள் இதுவரை அருளிச் செய்யவில்லை. அதனால் தான் மனநிறைவு இல்லாமல் தவிக்கின்றீர்கள். என்று கூறினார்... மேலும் தனது முற்பிறவிக் கதையைக்கூறி, அதில் திக்கற்றச்சிறுவனாக இருந்த தான், பகவானுடைய பக்தியில் ஆழங்கால்பட்டுநின்றதால், தனக்கு இப்பிறவியில் பிரம்மதேவன் புத்திரனாகும் பேறு கிடைத்ததையும் கூறிவிட்டுச் சென்றார். எனவே மேலே கூறப்பட்டவாறு ஸ்ரீகிருஷ்ணரின் கல்யாணகுணங்கலையும், அவருடைய உன்னதமான லீலாவிநோதங்களையும் மகிமைகளையும் விளக்கும் ஒரு புராணத்தைப்படைத்தால் உங்களின் மனதிற்கு நிச்சயம் சாந்தி கிடைக்கும்" என்று அருளிச்செய்து சென்றதும் வியாசபகவான் உள்ளத்தில் ஊற்றாகப்பெருகி வந்தது.

**பகவான் பரிபூரண விரிவாக்கம் பாடப்பட வேண்டும் :-**

பெருமானாகிய ஸ்ரீகிருஷ்ணரின் மகிமைகளோடு, பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பூரண விரிவாக்கங்களாகிய மற்ற அவதாரங்களையும் உள்ளடக்கி ஒரு புராணம் இயற்றப்பட்டால்தான் உமது படைப்பாற்றல் முழுமை அடையும். என்று மேலும் நாரதர் அறிவுறுத்தினார். அதைத்தன் மனத்தில் ஏற்ற மகரிஷிவியாசர், கிருஷ்ணரின் மகனாகத் தோன்றிய பிரத்யும்னர், அவருடைய மகனாகிய அநிருத்தர்,

பகவானின் கிருஷ்ணாவதாரத்தில், தன் அண்ணனாக அவதரித்திருந்த சங்கர்ஷணர் எனப்படும் பலராமர் என்கிற பலதேவர் ஆகியோருடைய பெருமைகளோடும் சேர்த்துப் புராணம் ஒன்றைப் படைக்கவேண்டும் என்ற மன எழுச்சி கொண்டார். இந்த எண்ணம் வியாசரின் மனத்தில் ஆழமாக வேரூன்றி வளர்ந்தது.

**பாரோர் உய்வு பெற பாடினார் பாகவதம் :-**

எனவே அப்படிப் பட்டதொரு புராணத்தைப் படைக்கவேண்டும் என்ற உறுதியுடன் வியாசபகவான் சரஸ்வதி ஆற்றின் மேற்குப்பகுதியில் இருந்த சமயா பிராசம் என்ற இடத்திற்குச் சென்றார். அந்த இடத்தில் எப்போதும் மகரிஷிகள் கூட்டங்கூட்டமாய் வந்து தங்கியிருந்து பகவத் தொண்டில் ஈடுபட்டிருப்பார்கள். எனவே அங்கு சென்ற வியாசமகரிஷி தனக்கென ஓர் ஆசிரமத்தை அமைத்துக் கொண்டார். அப்பகுதியைச் சுற்றி ஏராளமான பிர் மங்கள், பத்ரி மரங்கள் என்ற இலந்தைமரங்கள் வளர்ந்திருந்தன. அந்த ஆசிரமத்தில் புறத்தூய்மையோடு அகத்தூய்மையும் நிறைத்துக்கொண்டு, பகவானின் மேற்கண்ட அனைத்துத் தத்துவங்களையும் விளக்கும் ஓர் அற்புதப்புராணமாக வியாசர் பாகவதப்புராணத்து அனைத்துத் தத்துவங்களையும் விளக்கும் ஓர் அற்புதப்புராணமாக வியாசர் பாகவதப் புராணத்தைப் படைத்தார்.

**நாரதமகரிஷியை ஆன்மீக குருவாக ஏற்றார் வியாசர் :-**

நாரதரிஷியின் வாக்கிலிருந்த உண்மையை உணர்ந்த வியாசர், அவரைத்தன்னுடைய ஆன்மீக குருவாகவே

வரித்துக்கொண்டார். அவர் அறிவுறுத்திய வண்ணம், அக்கிருஷ்ணபெருமானாகிய பரமபுருஷனின் மகிமைகளை முழுதுமாய் உலகிற்கு உணர்த்தும் விதமாக ஒரு காவியத்தைப் படைக்கவேண்டும். என்று முடிவெடுத்தார். அந்த முடிவின் வெளிப்பாடே ஸ்ரீமத்பாகவதம் என்னும் சிறப்புப் பாராணமாய் மலர்ந்தது. நமது பாரதத்திருநாட்டின் பக்திமார்க்கத்தின் பெருமையையும், பழமையையும், பாரோர்க்கு அறிவித்திடும் ஒரு புராணமாகவும், பதினெட்டு புராணங்களில் தலை சிறந்ததாகவும் விளங்குகிறது.

எனவே இத்தகைய பல அரியதும், ஆன்மீகப்பாதையை அவணியோர்க்குக் காட்டுவதும், ஸ்ரீகிருஷ்ணபக்தியின் திளைப்பதால் தோன்றிடும் கணக்கற்ற நன்மைகளையும், பக்தரின் குறைதீர்க்க ஓடோடி வரும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஆறுவகைக் கல்யாணகுணங்களையும் கூறுகிற அற்புதப் படைப்பான இந்த ஸ்ரீமத்பாகவதத்தை நமக்குத்தந்துள்ள வேதவியாசரை அனுதினமும், வணங்குவதும், அவருடைய ஸ்ரீமத்பாகவத்தைக் கற்பதும் நமக்குத் தேவையானதொரு கடமையாகும்.

**பாகவதத்தின் குரு பரம்பரை :**

இப்பாகவதப் புராணத்தை ஸ்ரீமந்நாராயணப் பெருமானின் திருவருளால் நான்முகப் பிரம்மா கேட்டறிந்தார். பிரம்மதேவரின் மானசீகபுதல்வர்களில் ஒருவரான நாரத மரிஷிக்குப் பிரம்மதேவன் அதை உபதேசம் செய்தார். திரிலோசஞ்சாரியான இந்த நாரதமுனிவரின் ஊக்குவிப்பாலும், உபதேசத்தாலும் ஸ்ரீமத்பாகவதம் என்னும்

பெயரில் படைத்துக்கொடுத்தார் வியாசபகவான். வேதங்களைப் பிரித்தும், வகைப்படுத்தியும் பெருமை பெற்றவரான வேதவியாசர் என்ற இவர், தன்னுடைய மகனான சுகமகரிஷிக்கு இதை உபதேசித்தார். அந்தச் சுகராகிய மஹரிஷி பரீட்சித்து மகாராசனுக்கு இப்பாகவதத்தைப் போதித்தார். நைமிசாரண்யத்தில் தீர்க்க சத்ரயாகம் செய்த சனகாதி முனிவர்களுக்கு சூதபௌராணிகர் என்ற ஒரு மாமுனிவர் இப்புராணத்தை அங்கு கூடியிருந்த மற்ற ரிஷிகளுக்கெல்லாம் எடுத்துரைத்து ஸ்ரீமந் நாராயண பெருமானின் பரிபூரண அவதாரமான ஸ்ரீகிருஷ்ணா வதாரத்தின் மகிமையினைக் கூறும் இப்பாகவதத்தின் உன்னதமேன்மைகளை எடுத்துரைக்க, அவர்கள் மூலமாக இது உலகெங்கும் பரவி, பரப்பிரம்மமாகிய ஸ்ரீகிருஷ்ணரின் புகழ்பாடும் நிகரற்ற புராணமாக வலம்வருகிறது.

**பாகவத புராணத்தில் கலந்து இயங்கும் (வாழும்) கிருஷ்ணர்:-**

ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தின் நோக்கமெல்லாம் நிறைவேற்றப் பட்டுவிட்டதால், தான் தனது வைகுந்தத்திற்கு மீண்டும் சென்றுவிடப்போவதாக, உத்தவர் என்ற தனது நண்பரிடம் ஸ்ரீகிருஷ்ணர் கூறினார். இதைக்கேள்விப்பட்ட மற்ற யாதவர்களும் மிகவும் மனம்வருந்தி, தங்களையும் அழைத்துக்கொண்டுசெல்லவேண்டும் என்று வேண்டினர். ஆனால் அவர்களுக்கு எல்லாம் வெவ்வேறு மார்க்கங்களை உபதேசித்து அவர்கள் முக்திபெறுதற்குரிய வழிமுறைகளையும் கூறி, தனது பயணத்தைத் தொடர நினைத்தார் கண்ணபெருமான். அப்போது, அவர்களின்

மனக்கலக்கத்தைப்போக்க, "நீங்கள் வருந்தவேண்டாம் எனது சிறப்புகள் எல்லாம் நான் அப்புராணத்தில் உள்ளுறைப் பொருளாக என்றென்றும் விளங்குவேன். என்னோடு தொடர்புகொள்ள நினைப்பவர்களும், என்னருள் பெற நினைப்பவர்களும் அந்தப் பாகவதத்தைக் கற்றால் அதில் நானே கலந்து இயங்குவதால், என்னைத் தொட்டு மகிழ்ந்த நிலையும், எனதருளைப் பெறுதற்கான பேறுகளும் கிடைக்கும்'" என்று கூறிச் சென்றார். அத்தகைய சிறப்புப் பெற்றதே இந்த பாகவதபுராணமாகிய பெரு விருந்தாகும்.

**ஸ்ரீமத்பாகவத்தின் அமைப்புமுறை :**

இத்தகு பெருமைகொண்ட ஸ்ரீமத்பாகவதம் என்னும் இப்புராணம், பன்னிரண்டு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவை, ஸ்கந்தம் அல்லது காண்டம் என்று அழைக்கிறோம். ஒவ்வொரு ஸ்கந்தத்திலும், பற்பல சிறுபிரிவுகளான அத்தியாயங்கள் அமைந்துள்ளன. முதல் ஸ்கந்தங்களில், பகவான் ஸ்ரீமகாவிஷ்ணுவின் படைப்புத் தொழில், மனுக்களின் தோற்றமும், மன்வந்தரங்களாகிய காலப்பகுதிகளும், இக்காலப்பகுதிகளில் பாரதத்தை ஆட்சி செய்த அரசர்கள், பல்வேறு அரசபரம்பரைகள், அவர்களின் வாரிசுகள், அவர்கள் செய்து முடித்த பற்பல சிறப்புச் செயல்கள், செய்திட்ட தவங்கள், அதனால் பெற்றவரங்கள், வரப்பிரயோகங்கள், நாட்டை அரசாட்சி செய்த முறை ஆகியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அடுத்ததாக உள்ள பத்தாம் ஸ்கந்தத்தின் முதற்பகுதி, கண்ணபெருமானின் அவதாரம் மற்றும் லீலாகிருஷ்ணவிநோதங்கள் ஆகிய பகவானின் பிள்ளைப்பிராய வைபவத்தையும், இரண்டாம்

பகுதி, பலராமரேடு சேர்ந்து பகவான் கண்ணபெருமான் நிகழ்த்திய கம்ச. சாணூர, முஷ்டிகன் வதம், போன்ற முக்கியமான அரக்கர்களின் வதத்தையும் கூறுவது ஆகும்.

இதனுடைய மூன்றாம் பகுதியாக, பகவான் பூமியின் பாரத்தை மகாபாரதப்போர்மூலம் குறைத்து அருளியதை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. மேலும் பகவான் தன்னுடைய அவதாரகாலமும், அவதாரநோக்கமும் முடிவு பெற்றதால் வைகுண்டவளநகரை மீண்டும் அடைந்ததைக் கூறுகிறது. பன்னிரண்டாம் அத்யாயம் கல்கி அவதாரம், மற்றும் இனிநடக்கப்போகும் பற்பல நிகழ்வுகளைப் பற்றியும் கூறுவதாக அமைந்த மிகப்பெரும் புராணமாக அனுஷ்டுப் என்னும் இரண்டடி பாவகையால் இதைப்பாடினார். திருக்குறள் இரண்டு அடிகளை உடையதான குறள் வெண்பாவினால் அமைக்கப்பட்டு, உலகப் புகழ்பெற்ற விளங்குவதைப் போன்றே இப்பாவகையால் இயற்றப்பட்ட ராமாயணம், ஸ்ரீமத்பாகவதம் என்னும் இவை இரண்டும் உலகப்பிரசித்தி பெற்றவையாக உள்ளன.

ஸ்ரீமத்பாகவதத்தில். பதினெட்டாயிரம் ஸ்லோகங்கள் உள்ளன. பகவானின் பெருமையையும், மகிமைகளையும் இவர் இந்தப் புராணத்தில்மிகவும் விரிவாகப் பாடியுள்ளார். இதைப்படிப்போர்க்கு இம்மை, மறுமை எனும் இரண்டிற்கும் தேவையான பலாபலன்கள் கிடைக்கும் என்பது உறுதி. இப்புராணமாகிய ஸ்ரீமத்பாகவதத்தை வடமொழி இலக்கிய உலகிற்கு அர்ப்பணம் செய்த பிறகே, அதைப் படைத்தளித்த வேதவியாசருக்கு ஆத்ம திருப்தி ஏற்பட்டது என்றும் கூறுவார்கள்.

**பெயர்க் காரணம் :-**

பாகவதம் என்றால் பகவானுடைய குணாதிசயங்களைப் பற்றியது என்று ஒரு பொருள் கொள்ளலாம். அதாவது பகவானாகிய ஒரு பசு, தன்னுடைய கன்றுக்குட்டித் துள்ளித்திரிந்தோடும் பகுதிகளுக்கு எல்லாம் தானும் அதன்பின்னே ஓடிச் சென்று, அக்கன்றிற்கு எந்த விதமான இடையூறும் ஏற்படாதவாறு, அதைக் காத்துக்கொள்கிறது. அதைப் போல, பகவானாகிய பசு கன்றுக்குட்டிகளாகிய பக்தர்களின் பின்னால் ஓடோடிச் சென்று அவர்களைக் காத்துக் கொள்கிறார் என்று அப்பரப்பிரம்மத்தின் இயல்பைப் பற்றி இப்புராணம் கூறுவதால். இது பாகவதம் என்று அழைக்கப்படுகின்றது.

அதுமட்டும் இன்றி, ஸ்ரீமந்நாராயண பக்தியாகிய ஸ்ரீகிருஷ்ண உணர்வில் ஐக்கியமாகி நின்று, அவரிடத்தே பக்திசெலுத்தி வாழ்ந்துவந்த தன்னுடைய பக்தர்களுக்காக, பெருமான் கொடுத்தருளிய வரங்களையும், முக்தியையும் விளக்கும் பற்பல கதைகளை உள்ளடக்கியதாக இது இருப்பதால், அந்தப்பகவானின் அடியார்கள் சிறப்புக் கூறப்படுவதால் இது பாகவத புராணம் என்று அழைக்கப்படுவதாகவும் பொருள் கூறலாம்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்துள்ள திருப்பாவைப்பாசுரத்தில் (பா.எண்.29)

**இற்றைப்பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா**
**என்றைக்கும் ஏழேழு பிறவிக்கும் உன்தன்னோடு**
**உற்றேமேயாவோம் உமக்கே நாம் ஆட்செய்வோம்**
**மற்றைநம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்**

என்று வேண்டுவதைப்போல, பகவான் கிருஷ்ணரின் அருளைப் பெறுவதற்கும், அவருக்குக் குற்றேவலாகிய பணிவிடைகளைச் செய்வதற்குமே எதிர்பார்த்துக் காத்திருக்கும் தொண்டர்கள் பலப் பலர். அத்தகைய அந்தப்பாகவதர்களின் கதைகளும், அப்பாகவதர்களாகிய பிரகலாதன், துருவன், அம்பரீஷன் போன்றவர்களுக்குச் செய்யப்படும் அநியாயங்களைப் பொறுத்துக்கொள்ள மாட்டான் பகவான் என்பதையும் விளக்கும் பற்பல பக்திக்கதைகளும் இப்பாகவதத்தில் கூறப்பட்டுள்ளதாலும் இது பாகவதபுராணம் என்று அழைக்கப்படுவதாகவும் பொருள் காணலாம்.

**பாகவதத்தைக் கற்பதால் ஏற்படும் நன்மைகள் :**

பதினெண் புராணங்களையும், இரண்டு இதிகாசங் களையும், உபநிடதங்களையும், வேதங்களைக் கற்பதைக் காட்டிலும், ஸ்ரீமத்பாகவதத்தைக் கற்பதே ஒரு மனிதனுக்கு பக்தியை ஏற்படுத்தும். அதனால், முக்தி பெறுவதற்கும் வழி உண்டாகும். மேலும் ஸ்ரீமத்பாகவதத்தால், ஒரு மனிதனுக்கு ஞானமும், வைராக்யமும் ஏற்படும். பரப்பிரம்மனாகிய ஸ்ரீகிருஷ்ணனின் மீது பற்றுக்கொண்டால், ஒவ்வொருவரும் செய்யும் அவர்களுடைய நித்திய கர்மாக்களைக் கூட கர்மயோகமாகவும், பகவானுக்கு உகப்பளிக்கக் கூடியதாகவும் செய்தல் வேண்டும் என்பதும், இப்பாகவதக் கதைகளில் வற்புறுத்திக் கூறப்படும் தத்துவார்த்தங்கள் ஆகும். அத்தகையோர்க்கு, பகவானுடைய திவ்விய மங்கள சொரூபத்தை தரிசிக்கும் பேறு கிடைக்க வழிவகுக்கும். மேலும் பாகவதத்தைக் கற்பவர்களின், சஞ்சித கர்மங்களின்

தாக்கமும், பிராரப்த கர்மாவின் தாக்கமும் அழிந்துபோவதால், அவர்களின் பாவச்செயல்களாகிய தீமைகள் அனைத்தும் தீயினில் தூசாக பொசுங்கிப் போகும். எனவே முக்தியாகிய மோட்சலோக வாழ்வும் எளிதில் கிட்டும் என்ற கோட்பாடுகளும், சாங்க்யயோக தத்துவமான உடல் உயர் (ஆத்மா)வைப்பற்றிய தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன. ஒருவருடைய உடலே அழியக் கூடியது. அவ்வுடலில் இருக்கும் ஆத்மாவானது அழியாதது.. நித்யமானது என்பதையும் இப்புராணத்தைப் படிப்பதால் அறியலாம். இதனால் ஒருவன் தனது சம்சாரபந்தத்திலிருந்து விடுபடக்கூடிய வைராக்யத்தை இப்புராணத்தைப் படிப்போர் முக்தியும் அடைவர்.

ஒருபுராணத்திற்குரிய ஐவகை இலக்கணங்களைப் பெற்றுள்ளதோடு, மனுக்களின் விவரங்களும், அவர்கள் ஆட்சி செய்த காலப்பகுதியான மந்வந்திரம் பற்றிய செய்திகளும், லட்சோபலட்ச காலப்பகுதிக்கு முன்பாகவே, நமது முன்னோர்கள் அளந்தறிந்து கூறியுள்ள மிகச்சிறு காலப்பகுதி முதல், மிகப்பெரும் காலப்பகுதியான கல்பகாலம், பிரளயம், போன்றவை இதில் கூறப்பட்டுள்ளது. இது நமக்குரிய பெரிய பாரம்பரியத்தை உணர்த்துகிறது.

**கல்பகாலம் என்றால் என்ன?**

தற்போது ஆறு மனுக்களின் ஆட்சிக்காலப்பகுதிகள் முடிந்து, ஏழாவது மன்வந்தரம் நடைபெற்றுவருகிறது என்றும், சிராத்ததேவன் இம்மன்வந்தரத்தின் அதிபதி என்றும் கூறப்படுகிறார். இதேபோல் மொத்தம் பதினான்கு மனுக்கள் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. மேலும் பிரம்மதேவனின்

ஒரு பகற்கால முடிவான ஆயிரம் சதுர்யுகங்கள் ஒருகல்பகாலம் என்றழைக்கப்படுகிறது. இரண்டு கல்ப காலங்கள் (இரவுப் பொழிதோடு சேர்த்து) அவருக்கு ஒருநாள் என்றும், இத்தகைய முந்நூற்று அறுபது நாட்களைக் கொண்டது ஒரு வருடம் என்றும், நூறுவருடங்கள் நான்முகப்பிரம்மாவிற்குரிய ஆயுள் என்றும் காலவரையரை நமது புராணங்களில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது ஆச்சரியத்தை வரவழைத்தாலும், இது தான் உண்மை ஆகும்.!

ஸ்ரீகிருஷ்ணபகவானால் அர்ச்சுனனுக்கு பகவத்கீதையில் உபதேசிக்கப்பட்ட பல தத்துவங்களும் அவற்றின் எடுத்துக்காட்டுகளையும், விளக்கங்களையும் நாம் ஸ்ரீமத்பாகவத்தில் காணலாம். குறிப்பாகச் சொல்லப் போனால், சாங்க்யயோக தத்துவம் என்னும் உடல், உயிர், பரமாத்மா (மனிதப்பிறவியின் ஸ்தூல உடல், அதில் உள்ளுறைப்பொருளாய்க் கலந்திருக்கும் பரமாத்மா ஆகிய பரப்பிரம்மம், அவருடைய குணவிசேஷங்கள், மறுபிறவி, அது தோன்றுவதற்குரிய காரணகாரியங்கள் அனைத்தையும் தன்னுள் பொதித்து வைத்துக்கொண்டுள்ள ஒரு மிகப்பெரும் பொக்கிஷம் ஸ்ரீமத்பாகவதம் ஆகும்.

**புருஷார்த்தம் கூறும் பெரும்புராணம் :-**

மேலும் இந்தப்பிறவியின் முடிவில், ஒவ்வொரு ஆத்மாவும், அடுத்த பிறவியை எடுக்காமல், அது பரப்பிரம்மமோடு அந்தமில் பேரின்பத்தின் நிலைக்களனான வைகுந்த வளநகரில் வாழும் பெரும்பேற்றைப் பெறுதலே

அதனுடைய முக்கியமான குறிக்கோளாகும். அந்த நிலையைப்பெறுவதே முக்தி அல்லது மோட்சம் என்று அழைக்கப்படும். இப் பாகவதத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கதையிலும் பகவான் கிருஷ்ணராகிய பரப் பிரம்மத்தோடு தொடர்புடைய ஒவ்வொரு ஆன்மாவும் முக்தியை அடைகின்றன. இவற்றையே தமிழில் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நால்வகை உறுதிப் பொருள்களாகக் கூறியுள்ளனர். இதில் முக்திநிலை என்று குறிப்பிடப்பட்டதையே தமிழில் வீடுபேறு என்கிறோம். இதுவே ஒரு புருஷன் அதாவது ஓர் ஆத்மன் தன் பிறவியின் இறுதியில் அடையப்படவேண்டிய பேறு என்றும், புருஷனாகத்தோன்றியதால் அடைகின்ற அர்த்தம் என்றும் உணர்த்தப்படுவதால் இது புருஷார்த்தம் என்றழைக்கப்படுகிறது.

ஐவகை முக்திகளின் அருங்கருவூலம்... மீண்டும் பிறவாத பேரின்பநிலையே முக்தி எனப்படும். இது ஐந்து வகைப்படும். ஐவகை முக்தி நிலைகளில் ஏதேனும் ஒரு நிலையை பகவான், அந்தந்த ஆத்மாக்களின் கர்மவினைகளின் அடிப்படையில் தந்தருளுகிறார் என்பதையும் இதில் விரிவாக அறிய முடிகிறது. எனவே இம்முக்திநிலையை விளக்கும் இக்கருத்துகளை உடைய பொக்கிஷமாகத்திகழ்வது ஸ்ரீமத்பாகவதம் ஆகும்.. “ஆகையால் ஒருவர் இப்பாகவதம் ஒன்றைக்கற்றால் மட்டும் போதுமானது வேறெந்த புராணத்தையும் கற்கத் தேவையில்லை வேறெந்தக் கடவுளையும் வணங்கத் தேவையும் இல்லை என்ற கருத்தும் இதனால் அறிவுறுத்தப்பட்டுள்ளதை அறியலாம்.

எனவே இத்துணைச் சிறப்புகளை உடையதான ஸ்ரீமத்பாகவதத்தைக் கற்று, ஸ்ரீகிருஷ்ணபக்தியை வளர்த்துக் கொண்டு வாழ்வதே நாம் கடைத்தேறுவதற்கு ஒரே வழி என்பதை உணர்ந்து வாழ்வோமாக! மேலும், திராவிடவேதம் என்று போற்றப்படும் நம்மாழ்வாரின் திருவாய்மொழியில்,

**மாயா! வாமனனே! மதுசூத! நீயருளாய்**
**தீயாய் நீராய், நிலனாய், விசும்பாய், காலாய்,**
**தாயாய் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்**
**நீயாய் நீநின்றவாறு இவை என்ன நியாயங்களே?**

என்று பரப்பிரம்மமான பெருமானை, தாய் முதற்கொண்டு அனைத்து உறவுகளுமாய் நிலம் முதற்கொண்ட ஐவகைப் பூதங்களாய், உலகத்திலுள்ள அனைத்துமாய், அவை அனைத்திற்கும் முழு முதலாகவுமாய், அவற்றையெல்லாம் தன்னகத்தே அடக்கிக் கொண்டுள்ள ஸ்ரீகிருஷ்ணனாகிய ஒருவனாகக் காட்சி தரும் பெருமானே, உன்னை அடியேன் என்னவென்று புகழ்வேன்! உனது ஆயன், மாயன், அச்சுதன், மதுசூதனன், கேசவன் என்ற ஆயிரம் திருநாமங்களில் எந்தநாமத்தைக் கொண்டு உனக்கு பஜனம் ஆகிய நாமசங்கீர்த்தனத்தைப் பாடிமகிழ்வேன் என்று வியப்படைந்து நிற்கும் நிலையிலேயே நாமும் உள்ளோம். எனவே இவற்றுள் நாம் ஏற்றுச் செய்யக்' கூடியதான அனைத்து பக்திநிலைகளில் நம்மால் செய்யக்கூடியனவற்றைச் சிரத்தையுடன் மேற்கொண்டால், அப்பெருமானின் அருளுக்கு உரியவர்களாகி, ஆனந்தப் பெருவாழ்வு வாழலாம்.

## 3. மரணபயம் நீக்கி, பரமபதம் அடைந்தவன்

வேதவியாசர் என்றும், பிரம்மரிஷி என்றும் போற்றப்பட்டவரான வியாசபகவானால் அருளிச் செய்யப்பட்டதான ஸ்ரீமத்பாகவதத்தின் முதல் ஸ்கந்தத்தில் மரணம் கண்டு அஞ்சாத மாவீரனாகிய பரீட்சத்துவின் கதை. முனிவர் எந்த சூழ்நிலையின் காரணமாக இதை பரீட்சத்து(பரீட்சித்து) மகாராஜனுக்கு உபதேசித்தார் என்பது ஸ்ரீமத்பாகவதத்தின் முதல் ஸ்கந்தத்தில் மிகவும் விரிவாகக் (காண்டத்தில்) கூறப்பட்டுள்ளது. இதை அறிந்த பின் பாகவதத்தைக் கற்றால்தான் பாகவதம் செல்லும் பாதையையும், சொல்லும் கருத்துகளையும், கதைகளையும் நம்மால் முழுமையாக அறியமுடியும். எனவே அக்கதை நமது இரண்டாம் கதையாக அமைந்துள்ளது.

### பரீட்சத்து மகாராஜன் யார்?

துரியோதனன் தலைமையிலான கௌரவர்களின் மண்ணாசை காரணமாகவும், தமது உரிமை ராஜ்ஜியத்தைப் பெற, பகவான் கிருஷ்ணரின் உறுதுணையோடு போரிட்ட பாண்டவர்களின் மண்மீட்கும் வேட்கையாலும், இரு திறத்தாருக்கும் இடையே குருசேத்திரத்தில் பதினெட்டு நாட்கள் கடும்போர் நடைபெற்று முடிந்ததை நாம் அறிவோம். மகாபாரதப் போரை முடித்துவைத்ததன் மூலமாக பூமிப்பிராட்டியின் பெரும்பாரத்தையும் குறைத்துவிட்டதால், தான் எடுத்த ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தின் நோக்கம் நிறைவு பெற்றதால், பெருமான் மீண்டும் தன்து வைகுந்தத்திற்குப் புறப்பட்டுப்போய்விட்டார். அவ்வளவில் துவாபரயுகமும்

முடிவுற்றது. யுக சந்தி முடிந்து கலியுகமும் தொடங்கியது. அப்போது, குரு வம்சத்தில் இருந்த ஒரே ஒரு அரசனாக விளங்கியவர்தான் பரீட்சித்து மகாராஜன். பரீட்சித்து பஞ்சபாண்டவர்களில் ஒருவனாகிய அர்ச்சுனனின் ஒரே புதல்வனாகிய அபிமன்யுவின் மகனாவான். எனவே அருச்சுனனுக்குப் பேரனாக இருந்த இவன் ஒருவன் மட்டுமே குருவம்சத்தில் எஞ்சியிருந்த ஒரே வாரிசான அவனுக்கு தருமராசர் பட்டாபிஷேகம் செய்வித்தார். பரீட்சித்துவும் அஸ்தினாபுரத்தைத் நாட்டைத்திறம்பட அரசாட்சி செய்துகொண்டிருந்தான்.

மேலும்பரீட்சத்து கருவில் இருந்தபோது, மகாவிஷ்ணுவின் அருளைப்பெற்றவனாக இருந்ததால், இவனுக்கு விஷ்ணுராதன் என்ற பெயர் முதலில் வைக்கப்பட்டது. மேலும் உத்தரையின் கருவில் இருந்த இவனை அழிக்க, அசுவத்தாமன் அபாண்டவீயம் என்னும் கொடிய அஸ்திரத்தை ஏவியதால், அதன் தாக்கத்தில் இருந்து தனது மறு அஸ்திரத்தால் அக்கருவைக்காத்ததோடு, அக்குழந்தையை அவ்வப்போது பரீட்சித்துக்கொண்டு. (பராமரித்துக்கொண்ட) பகவான் கிருஷ்ணர் இருந்தார் ஆகையினாலும் நாளடைவில் பரீட்சித்து என்ற பெயரே அக்குழந்தைக்கு நிலைத்துநின்றது.

**பரீட்சத்துவின் பண்புநலன்களும் சிறப்பும் :**

இந்தப்பரீட்சித்து மன்னன், மனுவம்சத்தில் தோன்றிய இட்சுவாகு போன்று தனது நாட்டைக்காத்துவந்தான். அக்குலத்திலே அவதரித்த ஸ்ரீராமன்போல அனைவரிடமும், அன்புடன் பழகினான். ஆனந்தம் அளித்தான். தன்னைச்

சரணம் அடைந்தவர்களைக்காத்து வந்தான். யாகம் செய்யும் முனிவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தான். வில்லாற்றலில் தனது பாட்டனாகிய அருச்சுனனைப்போல் ஆற்றல் மிக்கவனாகவும் விளங்கினான்.

**கலிபுருஷனை அடக்கிய வீரன் :-**

இந்நிலையில் நான்காம் யுகமாகிய கலியுகம் பிறந்தது. எனவே, கலிபுருஷனனின் பலத்தால் மக்களுக்குக் கெடுதல்களையும் துன்பத்தையும் கொடுப்பதை அறிந்து, அவனுடைய கொடுமையை அழிக்க அக்கலிபுருஷனோடு போரிட்டு அடக்கினான் இந்தப் பரீட்சித்து மன்னன்.. இறுதியில் தனக்குப்புகலிடம் வேண்டும் என்ற சரணாகதி அடைந்த அவனுக்கு பத்து இடங்களில் மட்டும் ஆதிக்கம் செலுத்திக்கொள்ள அனுமதி அளித்து அஸ்தினாபுரத்தை சிறப்பாக அரசாட்சி புரிந்துவந்தான். (இப் பத்து இடங்கள் யாவை என்பதை விவரிக்கப் பெருகும். முதல் ஸ்கந்தத்தில் இது முழுமையாக விளக்கப்பட்டுள்ளது).

**பரீட்சித்தின் பரம்பரை :-**

விராடமன்னனின் மகனாக இருந்து மகாபாரதப்போரில் உயிர்நீத்த உத்தரனின் மகள் ரேவதி (இராவதி) என்ற பெண்ணைத் திருமணம் புரிந்துகொண்டான் பரீட்சித்து, இவர்களுக்கு நான்கு குமாரர்கள் பிறந்தனர். அவர்களுள் மூத்தவன் பெயர் ஜனமேஜயன் என்பதாகும். மகாபாரதப்போரில் ஈடுபட்டு உயிர்நீக்காமல் இருந்த கிருபாச்சாரியரின் துணைக்கொண்டு கங்கை நதிக்கரையில் மூன்று அசுவமேத யாகங்களையும் நடத்தி, தேவர்களுக்கு

அவிர்பாகம் அளித்த சிறந்த ஒரு அரசனாக விளங்கிவந்தான் பரீட்சித்து.

**தண்ணீர்த் தாகத்தால் தவித்திட்ட பரீட்சத்து :**

வேட்டையாடுதல் என்பது அக்கால அரசர்களுக்கு ஒரு முக்கியமான கடமையாகவும், பொழுதுபோக்காகவும் இருந்தது. தனது நாட்டின் எல்லைப்பகுதியில் வாழந்த குடிமக்களை ஊருக்குள் நுழைந்து தாக்கும் புலி, சிங்கம், கரடி போன்றவற்றின் துன்பத்தில் இருந்து காப்பாற்றவும், குடிமக்களால் பயிரிடப்பட்டுவந்த விளைநிலங்களையும், பயிர்பச்சைகளையும் யானை மான்கள் போன்ற விலங்கினங்கள் அழித்துவிடுவதாலும், மக்கள் மிகுந்த அல்லல் உற்றனர். அம்மக்களின் குறைகளைப்போக்க, எல்லைப் பகுதி காடுகளில் அரசர்கள்வேட்டை யாடுவதைத் தங்கள் கடமையாகக் கொண்டிருந்தனர். அவ்வாறு ஒருநாள் பரீட்சித்து மகாராஜனும் வேட்டையாடுவதற்குச் சென்றார். அன்று நீண்ட நேரம் வேட்டையாடியதால், பரீட்சித்திற்கு மிகவும் உடற்சோர்வு ஏற்பட்டது. களைப்பு மேலிட்டது. தனது களைப்பைப்போக்கிக்கொள்ள தண்ணீர் இருக்கும் இடத்தைத்தேடி அலைந்த பரீட்சித்து, பல இடங்களிலும் அலைந்து திரிந்தும் எங்கும் நீர் கிடைக்காத நிலையில், சற்று தூரத்தில், ஒரு முனிவரின் ஆசிரமத்தைக்கண்டார்.

**சமீக முனிவர் செயலால் சினம்கொண்ட அரசன் :-**

அந்த ஆசிரமத்திற்கு உரியவர் சமீகர் என்ற முனிவர் ஆவார். பரீட்சித்து அங்கு சென்றபோது, முனிவர் தன் கண்களை மூடிக்கொண்டு பகவானுடைய நிஷ்டையில் மூழ்கி

இருந்ததால் அவர் எழுந்து நின்று அரசரை வணங்கவில்லை. உபசரிக்கவில்லை. தண்ணீரவேண்டும் என்று பலமுறை கோரிக்கை வைத்த அரசனுக்குத் தண்ணீர் தரவும் இல்லை. மென்மேலும் அரசன் வேண்டியும், தனக்குத்தண்ணீர் கொடுக்காத அந்த முனிவன்மேல் கோபம் கொண்ட மன்னன், அம்முனிவரை உற்று நோக்கியபோது அவர் உண்மையில் நிஷ்டையில் இருக்கிறாரா? இல்லை தன்னை அலட்சியப்படுத்துகிறாரா என்ற சந்தேகம் அரசனுக்கு எழுந்தது.

**மன்னன் செய்த செயலும், முனிவரின் மௌனமும் :-**

தனது சந்தேகத்தைப்போக்கிக்கொள்ள நினைத்த அரசன் பரீட்சத்து, சுற்றுமுற்றும் பார்த்தபோது, சற்று தூரத்தில் இறந்துபோன பாம்பு ஒன்று கிடந்தது. உடனே அரசன் அந்த இறந்து போன பாம்பைத் தனது அம்பின் நுனியால் லாவகமாக எடுத்து, அதை அம்முனிவரின் கழுத்தைச்சுற்றி மாலைபோல் போட்டான். அதைக்கண்டு பயம்கொண்டு அலறாமல் இருந்ததோடு, சலனமற்ற தவச்சீலராக உணர்ந்துகொண்டு, கோபதாபங்களை அடக்கிக் கொண்டு, தனது அரண்மனைக்குத் திரும்பிவிட்டார் பரீட்சித்துமகாராஜன்.!

**சீற்றம் கொண்ட சிருங்கி கொடுத்திட்ட சாபம் :**

சமீகர் என்ற அந்த முனிவருக்கு சிருங்கி என்ற மகன் ஒருவன் இருந்தான். அரசன் வந்துசென்றபோது, ஆசிரமத்தில் அவன் இல்லை. சமித்துகளைத்தேடிக் கொண்டு வர வெளியிலே சென்றிருந்த அவன், சற்று நேரத்தில் தமது

ஆசிரமத்திற்குத் திரும்பினான். திரும்பிய அவன் தனது தந்தையின் கழுத்தில் இறந்துபோன பாம்பு ஒன்று மாலைபோல் அணிவிக்கப் பட்டிருந்ததைக் கண்டு மனம் கொதித்தான் அந்த மைந்தன். தவசீலரான தனது தந்தைக்கு இந்த இழிசெயலைச் செய்தவன் யாராக இருப்பான் என்று ஆராயவும் அவனுக்கு கோபம் இடம்தரவில்லை. எனவே அவன் "எனது தந்தைக்கு இந்த அபசாரத்தைச் செய்தவன் யாராக இருந்தாலும்., அவன் அடுத்த ஏழாம் நாளில் பாம்புகளின் தலைவனான தட்சகனால் தீண்டப்பட்டு இறக்கக்கடவான்" – என்ற கொடும் சாபம் ஒன்றைக் கொடுத்து விட்டான்.!

**நிஷ்டை கலைந்த முனிவர் நிலைகுலைந்தார் :-**

சற்று நேரத்தில் தனது ஆழ்நிலையோகமாகிய நிஷ்டையில் இருந்து மீண்ட சமீகர், தனது கழுத்தில் இருந்தபாம்பையும், அதைச் செய்தவர் யார் என்பதையும், தனது மகன் கொடுத்திட்ட சாபத்தையும் தனது தவபலத்தால் அறிந்து கொண்டார். தனது மகனின் ஆவேசத்தால், அஸ்தினாபுரத்து அரசனாகிய பரீச்சித்திற்கு ஏற்படப்போகும் துர்மரணத்திற்குக் காரணமாகிப்போன தனது மகனை மிகவும் கடிந்துகொண்டார். சிறந்த பண்பாளராகவும், குடிமக்களைத் தன் கண்ணேபோல் காத்து நல்லாட்சி புரிந்துவருபவரான மன்னனுக்கு, முன்பின் யோசிக்காமல் இப்படி ஒரு சாபம் கொடுத்த உன்செயல் கண்டிக்கத்தக்கது. எனவே நீ உன் செயலுக்காக பகவான் கிருஷ்ணரிடம் மனம் உருகி வேண்டிக்கொள். நானும் அப்பெருமானைச் சரணம்

அடைந்து, மன்னிப்புக்கேட்டுக் கொள்கிறேன்'' என்று மனக்கலக்கத்துடன் கூறிமுனிவர் மனம் வருந்தினார்.

**அரசருக்கு ஏற்பட்ட சாபத்தை அறிவித்தார் சமீகர் :-**

இதற்கிடையில் தனது அரண்மனைக்குத்திரும்பிய பரீட்சித்து, உண்டு களைப்பாறிய பின் காட்டில் நடந்த நிகழ்சிசயை மீண்டும் நினைவு கூர்ந்தார். உண்மையிலேயே யோகநிஷ்டையில் ஆழ்ந்திருந்த முனிவரின் தவநிலையை உணராமல், தான் முனிவருக்குச் செய்தது பெரிய அபசாரம் என்று அவர் நினைத்தார். மன்னிக்க முடியாத தன் செயலுக்காக தனக்கு ஏதேனும் தீங்கு நேரிட இருந்தால், அது தன்னையே வந்து சேரவேண்டும் என்றும். தனது வாரிசுகளுக்கு அதனால் எத்தகைய தீங்கும் நேரிடக்கூடாது என்றும் பகவானிடம் வேண்டிக்கொண்டிருந்தார் பரீட்சத்து. அந்த வேளையில், சமீகமுனிவர் அனுப்பிய ஆள், அங்கு வந்து, முனிவரின் மகனான சிருங்கியால் கொடுக்கப்பட்ட சாபத்தை அரசருக்கு அறிவித்து, தவறுக்கு மன்னிக்கும் படியாகவும் வேண்டிக்கொண்டு சென்றான்.

**இறப்பினைக்கண்டு அஞ்சாத அரசனால், இறவாப் புகழுடைய புராணம் கிடைத்தது :**

தனக்கு ஏற்பட்ட சாபத்தைக்கேள்விப்பட்டவுடன் பண்பாளன் பரீட்சித்து சற்றும் மனம் கலங்கவில்லை. தன் குலத்தைக்காத்தருள் செய்து வரும் பகவான் கிருஷ்ணனின் விநோத விளையாட்டுகளில் இதுவும் ஒன்று என்று தன்னைத்தேற்றிக்கொண்டான். மிகச்சிறந்த ஒரு அரசனாகத் தன்னுடைய கடமைகளை முடித்துவிட்ட அவன், இப்

பிறவியை முடித்துக் கொண்டபின் தான் அடையப்போகும் முக்தியை அடைவதற்குரிய மார்க்கத்தை இந்த ஏழு நாட்களில் தான் அறிந்துகொண்டு, அதன் வழிநடக்கவேண்டும் என்று தீர்மானித்தான். அதனால், தனது மூத்தமகனான ஜனமே ஜயனுக்கு அரசனாக முடிசூட்டுவித்தான்.. தனது மற்ற மைந்தர்களுக்கும் வேண்டிய அறிவுரைகள் தந்து, துறவு பூண்டவனாக, கங்கைக்கரையை அடைந்தான்.

**பரீட்சத்தின் வேண்டுகோள் :-**

பரீட்சத்து மன்னன் துறவு பூண்டு, கங்கைக்கரையில் அமர்ந்துள்ளார். அவர்பிராயோபவேசம் செய்யப் போகிறார் என்பதை மக்குளும் முனிவர்களும் அறிந்துகொண்டனர். பிராயோபவேசம் என்பது, தர்ப்பைப்புல்லைப்பரப்பி, அதன்மீது வடக்குப்பக்கம் திரும்பி அமர்ந்து, இறுதிக் காலத்திற்குத்தனக்கு வேண்டிய ஆத்மஞானத்தைப்பெற்று உண்ணாநோன்பு இருந்து உயிர் துறத்தல் ஆகும்.. இத்தகைய செய்திகள் தமிழ் இலக்கியங்களில், குறிப்பாகப் புற நானூற்றிலும் கூறப்பட்டிருப்பதை அறியலாம். கோப்பெருஞ்சோழன் என்ற சோழ அரசன் வடக்கிருந்த போது, பாண்டியநாட்டு பிசிர் என்ற ஊரைச் சேர்ந்த புலவர் தன்னுடன் வடக்கிருக்க வருவார், தனக்கு உறுதிப்பொருள்களைக் கூறுவார் என்று அசையாத நம்பிக்கையயில் இருந்தான் அரசன் அவனுடைய நம்பிக்கை. வீண்போகவில்லை. பிசிராந்தையாரும் வந்து சேர்ந்து மன்னனோடு வடக்கிருந்தார் என்பதை அறிவதால் பிராயோபவேசம் என்பதைப்பற்றி அறியமுடிகிறது. பரீட்சத்து மகாராஜனின் முடிவினைக்கேள்விப்பட்ட மகரிஷிகளும்,

தேவரிஷிகளும், ராஜரிஷிகளும், பிரம்மரிஷிகளும் ஆங்கே பெருந்திரளாகக் கூடினர். அந்த முனிவர்களுடைய சிஷ்யர்களும் அங்கு வந்துசேர்ந்ததால், பெருந்திரளான கூட்டம் கூடியது. அதைக்கண்ட பரீட்சத்து, "ரிஷி பெருமக்களே! எனக்கு அருள்செய்யும் நோக்கத்துடன் இங்கு நீங்கள் திரண்டுவந்திருப்பது யான் செய்த புண்ணியப் பேற்றின் விளைவே ஆகும். நான் இங்கு அமர்ந்திருப்பதன் நோக்கம், நீங்கள் எனக்கு ஆத்மானந்தத்தைப் போதித்து, சுத்தமான தர்ம நெறிமுறைகளை எனக்கு உபதேசிக்கவேண்டும்."என்று வேண்டிக்கொண்டார்.

**சுகமுனிவரின் வருகையும், பரீட்சத்துவின் வேண்டுகோளும் :**

அப்போது, வியாசமுனிவரின் மகனாகிய கிளிமுகம் போன்ற வடிவத்தை உடையவரான சுகப்பிரம்மம் எனப்படும் சுகமகரிஷி அங்கு வந்தார். அவரைக் கண்டவுடன் மேலும் மனமகிழ்ச்சி கொண்ட பரீட்சித்து, அவரை வணங்கி, "மரணத்தின் விளிம்பில் நிற்கும் ஓர் ஆத்மன், (மனிதன்) என்னென்ன செய்யவேண்டும்,? எவற்றினைக்கேட்டு நடக்கவேண்டும்,? எதைப்பற்றி நினைக்கவேண்டும்,? எதனை உபாசிக்கவேண்டும்?, எவற்றினைப்பேசவேண்டும் என்பன போன்ற தர்மத்தை அடியேனுக்கு அருளிச் செய்யவேண்டும்" – என்று பணிவுடன் கேட்டுக் கொண்டான்.! அதற்கு சுகமுனிவரும் இசைவு தெரிவித்து, ஏற்கனவே தன்தந்தை மூலம் தனக்கு உபதேசிக்கப்பட்டதான ஸ்ரீமத் பாகவதம் என்ற பாகவதப்புராணத்தை விரிவாக அரசனுக்கு எடுத்துரைத்தார். மரணத்தருவாயில் இருக்கும் ஒருவன் தனது மனம், வாக்கு,

காயம், அதாவது எண்ணம் சொல் செயல் என்ற முக்கரணங்களாலும் ஸ்ரீமந் நாராயணப்பெருமானையே நினைத்திருந்து, இறுதியில் அவருடைய பொற்றாமரைப் பாதத்தைப் புகலிடமாக அடைவதே ஒரு ஆத்மனாகிய மனிதன் அடையவேண்டிய இறுதிப்பேறு என்பதை விரிவாக எடுத்துரைக்கும் இப்பாகவதக் கதைகளையும், தத்துவங்களையும், பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு, பரந்தாமன் பேரருளைப் பெற்ற பற்பல அரசர்கள், தவசீலர்கள், யோகிகள், அரச குமாரர்கள் ஆகியவர்களின் கதைகளைப் பற்றியும் அங்கிருந்த அனைத்து முனிவர்களும் அறிந்து கொள்ளுமாறு எடுத்துரைத்தார். முனிசிரேஷ்டர்களும் அவற்றைச் சிரத்தையுடன் கேட்டு. மனத்தில் இருத்தி, பின்னர் பல்வேறு சூழ்நிலைகளில் தங்களை அணுகி, பரப்பிரம்ம சொரூபத்தைப் பற்றிய விளக்கங்களைத் தம்மிடம் கேட்டவர்களுக்கும், ஆத்மஞானத்தை அறிய விரும்பியவர்களுக்கும் எடுத்துரைத்து வந்ததால், பாகவத புராணம் பற்பல இடங்களிலும் பரவலாயிற்று, ஸ்ரீகிருஷ்ணபக்தி இயக்கம் பெரிதும் வளர்ந்து புகழ்பெற்றது.

**மூவுலகும் திரிந்திட்ட முனிவர் நாரதர் :**

கலியுகத்தின் தொடக்கத்தில் நாரதமகரிஷி ஒருமுறை பூலோகத்தைச் சுற்றிப்பார்த்துவரக் கிளம்பினார். பகவானான கிருஷ்ணர் தனது அவதாரநோக்கத்தைப் பூர்த்தி செய்துகொண்டு, தன்னுடைய வைகுந்த லோகத்திற்குச் சென்று விட்டார். அந்தநிலையில் பூலோகத்தைச் சுற்றி வந்த நாரதர் உலகமக்கள் யாரிடத்திலும் பக்தி மிகுதியாக இல்லை என்பதையும், நிலைத்த பக்திக்குத்தேவையான ஞானம்,

மற்றும் வைராக்யம் என்ற இரண்டும் மக்களிடையே கொஞ்சம் கூட இல்லை என்பதை உணர்ந்துகொண்டதால், மிகவும் கவலைதோய்ந்த முகத்துடன் திரிந்துகொண்டிருந்தார்.

**யமுனைக்கரையில் நாரதமுனிவர் கண்ட காட்சி :**

அவ்வாறு திரிந்துவந்தபோது அவர் யமுனை ஆற்றங்கரையை அடைந்தார். அங்கு ஒரு பெண் இளம் வயதை உடையவளாக அமர்ந்துகொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில், இருவர் வயதான ஆடவர்கள் சுயநினைவு இல்லாமல், பூமியிலே படுத்துக்கொண்டு கிடந்தார்கள், அந்தப்பெண் அவர்களை மிகவும் அரும்பாடு பட்டு எழுப்பிக் கொண்டிருந்தாள். ஆனால் அவர்களிடம் எவ்வகைச் சலனமோ, உணர்வோ இல்லாமல் வீழ்ந்துகொண்டே இருப்பதையும், அந்த ஆடவர்களை எழுப்ப முயல்வதையும் அதில் அவள்தோற்றுப்போவதையும் பார்த்து, பெண்ணே நீ யார் ? இந்த இருவரும் யாவர்? இவர்கள் ஏன் எவ்விதச்சலனமும் இல்லாமல் கிடக்கின்றார்கள்? என்று அந்தப்பெண்ணிடம் கேட்டார். அதற்கு அவள் தன்னுடைய பெயர் பக்தி என்றும், தன் அருகில் மயங்கியநிலையில் இருப்பவர்கள் தன்னுடைய குமாரர்களான ஞானமும், வைராக்கியமும் என்று எடுத்துரைத்தாள். ஆனால் இந்தப்பதிலால் நாரதர் திருப்தி அடையாமல், மீண்டும் விசாரித்தார். அவள் தானும் முதியவளாக மாறிப்போய் தளர்ந்து இருந்ததாகவும், ஆனால் இந்த யமுனை நதிக்கரைக்கு வந்தபிறகு அவளுக்கு இளமைமீண்டும் வந்துவிட்டது என்றும் கூறி, ஆனால் ஞானமும், வைராக்கியமும் கொஞ்சமும் உலகத்தில் இல்லாமல்

போனதால், இவர்களிடத்தில் எவ்வித மாற்றம் ஏற்படவில்லை என்றும், அதனால், இவர்கள் இந்த நிலையிலே இருப்பதாகவும் மிகவும் வருத்தமுடன் கூறினாள்.

**நாரதர் உபதேசத்தால் நன்மை ஏதும் விளையவில்லை.!**

அதாவது துவாபரயுகம் முடிந்து கலியுகம் பிறந்துவிட்டதால், ஞானமும், வைராக்கியமும் இவ்வுலகில் சிறிதும் இல்லாமல்போனதையும், மூன்றும் சேர்ந்திருந்தாலே ஒரு ஆத்மனுக்கு முக்தி ஆகிய பேரின்பப்பேறு கிடைக்கும் ஆகையால், இந்த மூவரோடும் சேர்ந்து வந்தவளான முக்தி ஆகிய பெண் தனது வைகுந்தத்திற்கே சென்று விட்டதையும் அறிந்த முனிவர், அந்த இருவருக்கும் புத்துயிர் ஊட்டுவதற்கு பலஉபதேசங்களைச் செய்தார். ஸ்ரீமத்பகவத்கீதை. வேத வேதாமங்களின் சாரத்தையும், புராணஇதிகாச உபதேசங்களையும் அவர்களுக்கு உபதேசித்தார். அவர்கள் கொஞ்சம் உணர்வு பெற்று எழுவதும், மீண்டும் சோர்வடைந்து படுத்துக் கொள்வதுமாக இருந்ததால், நாரதமகரிஷிமிகவும் கவலையோடு பற்பல உபதேசங்களை அவர்கள் காதில் விழுமாறு கூறியும் எந்தப்பயனும் ஏற்படவில்லை.

**சனத்குமாரர் கூறிய உபாயம் :-**

அப்போது அந்த வழியாக பிரம்மபுத்திரர்கள் நால்வரும் ஆகாயமார்க்கத்தில் சஞ்சரித்துச் செல்வதைப் பார்த்தார் நாரதமுனிவர். இந்த நால்வருள்ளும், சனத்குமாரரைத் தனது குருஸ்தானத்தில் வைத்திருந்தவர் நாரதமுனிவர். எனவே அவரிடம் நடக்கும் நிகழ்ச்சியை விளக்கிக்கூறி, ஞான வைராக்கியம் புத்துயிர் பெறுவதற்குரிய உபாயம் இருந்தால்,

கூறுமாறு வேண்டினார், அதற்கு சனத்குமாரர், இவர்கள் புத்துயிர் பெற்று எழுந்திருக்கவேண்டுமானால், ஸ்ரீமத் பாகவதம் என்ற பாகவதபுராணத்தை சப்தாஹ கதாப்பிரவசனமாக கேட்க ஏற்பாடு செய்தால் மட்டுமே இவர்களுக்குப் புத்துயிர் உண்டாகும். மற்ற எந்த உபதேசமும் பயன்படாது என்று கூறிவிட்டுச் சென்றார்.

**நைமிசாரண்யம் விரைந்தார் நாரதமகரிஷி:-**

தான் முன்பு அந்த இருவருக்கும் கூறிய எல்லாவித உபதேசங்களை விடவும், ஸ்ரீமத்பாகவத சப்தாஹா கதாப்பிரவசனமே சிறந்தது என்பதை அறிந்த நாரத மகரிஷி அந்தமூன்று பேரோடும் நைமிசாரண்யம் அடைந்தார். அப்போது வியாசருடைய குமாரரான் சுகமகரிஷி, அந்தப் பாகவதப்புராணத்தை, பரீட்சித்து மகாராஜாவிற்கு ஏழுநாள் கதாச்சிரவணமாக எடுத்துரைக்க நேரிட்ட செய்தியையும் அறிந்து அங்கிருந்த மிகப்பெரும் முனிவர்கூட்டங்களோடும், தேவகணங்களோடும், பக்தர்களோடும் தாங்களும் அமர்ந்து கொண்டு. ஸ்ரீமத்பாகவதம் கேட்க அமர்ந்தார். நாரதரின் நோக்கத்திற்கு ஏற்றவாறே, கதாச்சிரவண முடிவில் பக்தியேபாடு, ஞானமும், வைராக்கியமும் கூட புத்துயிர் பெற்றனர். முக்தியும் அவர்களோடு, வந்து சேர்ந்துகொண்டாள். ஆதனால் நிலைத்த ஸ்ரீகிருஷ்ணபக்தி பூலோகம் எங்கும் பரவிட, மக்கள் பகவானுடைய பக்தி தொண்டில் ஈடுபட்டுவாழ்ந்து, மீண்டும் பிறவாத பேரின்ப நிலையடைந்து, முக்தியையும் பெற்றனர். இக்கதையைத் தன்னுடைய ஸ்ரீமத்பாகவதத்தில் பாடி, உளம் மகிழ்கிறார் வியாசபகவான்.!

**ஏழு நாட்களில் கூறப்படவேண்டிய புராணம் :-**

நமது புராண இதிகாசங்களுள் சிலவற்றை எத்தனை நாட்களில் மற்றவர்கலுக்கு எடுத்துரைக்கவேண்டும் என்ற ஒரு நியதியும் உண்டு. ஸ்ரீமத் ராமாயணத்தை நவாஹமாக எடுத்துரைக்கவேண்டும். அதாவது ஒன்பது நாட்களில் கூறி முடிக்கவேண்டும். இந்தப் பாகவதப்புராணத்தை சுகமகரிஷி பரீட்சத்துவிற்கு ஏழுநாட்களில் எடுத்துரைத்து, அந்த அரசன் முக்தி அடைய வழிவகுத்ததால், இதை சப்தாஹமாக, அதாவது ஏழு நாட்களில் கூறவேண்டும் என்றும், மகாபாரதத்தை அஷ்டாதச நாட்களில், அதாவது பதினெட்டு நாட்களில் கூறி முடிக்கவேண்டும் என்ற நியதியும் உண்டு. அதைப்பின்பற்றியே உபந்யாசகர்கள் இவற்றைத்தற்போது தமது ஆன்மீக நிகழ்ச்சிகளில் பின்பற்றுகிறார்கள் என்பதையும் அறியலாம்.

மேலும் இந்தப்பிறவியின் முடிவில், ஒவ்வொரு ஆத்மாவும், அடுத்த பிறவியை எடுக்காமல், அது பரப்பிரமத்தோடு அந்தமில் பேரின்பத்தின் நிலைக்களனான வைகுந்த வளநகரில் வாழும் பெரும்பேற்றைப்பெறுதலே அதனுடைய முக்கியமான குறிக்கோளாகும். அந்த நிலையைப் பெறுவதே முக்தி அல்லது மோட்சம் என்று அழைக்கப்படும், இப்பாகவதத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கதையிலும் பகவான் கிருஷ்ணராகிய பரப்பிரம்மத்தோடு தொடர்புடைய ஒவ்வொரு ஆன்மாவும் முக்தியை அடைகின்றன. பக்தர்கள் எவ்வாறு பக்தர்களாகின்றனர்? அவர்கள் எத்தகைய முக்தியைப் பெற்றார்கள் என்பதும் இதில் அறியப்படுகிறது.

**பாகவதம் கேட்டதால் பரீட்சித்து அறிந்த ஆத்மஞான தத்துவம்:**

தான் ஏழாம் நாளில் இறக்கப்போகிறோம் என்பதை அறிந்து, அதற்காக மனங்கலங்காத பரீட்சித்து, இறக்கும் முன்பாகத் தான் அடையவேண்டிய ஆத்மதத் துவத்தையும், உறுதிப் பொருள்களையும் அறியவேண்டும் என்ற எண்ணத்திலேதான் சுகமுனிவரிடமும் சரணடைந்து தனது ஆத்ம ஈடேற்றத்திற்கான உறுதிப்பொருள்களை அறிவுறுத்தவேண்டும் என்று விரும்பினான். அதற்காக ஆரம்பிக்கப்பட்ட அந்த ஸ்ரீமத்பாகவதத்தின் சப்தஹா உபந்யாசத்தால், தான் யார்? எங்கிருந்து வந்தோம், இப்பிறவி முடிந்து செல்லவேண்டிய இடம்யாது, இறப்பதற்கு முன்பு அறிந்துகொள்ளவேண்டிய உடலைப்பற்றியும், உயிராகிய ஆத்மாவைப் பற்றிதுமான கோட்பாடுகள்,, நம்மைப்படைத்தவன் யார், அவன் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? அவற்றை நாம் ஏன் நிறைவேற்றவேண்டும்? நிறைவேற்றுவதால் உண்டாகும் நன்மைகள், நிறைவேற்றாதபோது ஏற்படும் தீமைகள், ஆகியனபற்றிய அனைத்துவிதமான கேள்விகளுக்கும் இந்த ஏழுநாள் உபந்யாசத்தின் மூலம் விடைதெரிந்து கொண்டான் பரீட்சித்து மன்னன்.

எனவே தான், அந்த ஏழாம் நாளில் தட்சகன் என்ற பாம்பால் தீண்டப்பட்டு இறக்கப்போகிறோம் என்பதைக் குறித்து சிறிதும் கவலை இன்றி இருந்தான், எல்லாம் வல்ல எம்பெருமான் கண்ணனின் திருவடிநிழலின் பெருமையிலே அவனுடைய பூத உடலை விட்டுப்பிரிந்தது என்பதையும்

அறிந்தான். மேலும் தனக்குக்கிடைத்த கர்ம, ஞான பக்தியுடன் கூடிய மிகப்பெரும் பேற்றால், தான் அடுத்து பிறக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை அறிந்து, ஆனந்தமயனாய் பகவானின் வைகுந்தநகரமாகிய முக்திலோகத்தை அடைந்து சிறப்புற்றான்.

**ஐவகை முக்திகள்**

ஐவகை முக்தி நிலைகளில் ஏதேனும் ஒரு நிலையை பகவான், அந்தந்த ஆத்மாக்களின் கர்மவினைகளின் அடிப்படையில் தந்தருளுகிறார் என்பதையும் இதில் விரிவாக அறியமுடிகிறது. எனவே இம்முக்தி நிலையை விளக்கும் இக்கருத்துகளை உடைய பொக்கிஷமாகத்திகழ்வது ஸ்ரீமத்பாகவதம் ஆகும்.. "ஆகையால் ஒருவர் இப்பாகவதம் ஒன்றைக் கற்றால் மட்டும் போதுமானது. ஒருவர் வேறெந்த புராணத்தையும் கற்கத் தேவையில்லை வேறெந்தக் கடவுளையும் வணங்கத்தேவையில்லை என்ற கருத்தும் இதனால் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

**பிறப்பை வென்று, இறவாப்புகழுடைய புராணம் தந்தவன்**

விதியின் விளையாட்டால், தனக்கு ஏற்படப்போகும் துர்மரணத்தைக்கண்டு சிறிதும் மனங்கலங்காத மாவீரன் பரீட்சித்து. உலகியலைக்காண்கிறபோது, தன்னுடைய இறுதிக்காலத்தைக் குறித்தும், தன் அடுத்த பிறவியைக் குறித்தும் ஏங்கித்தவிக்கும் எம்பெருமானாகிய ஸ்ரீகிருஷ்ண பரப்பிரம்மத்தைப்பற்றி அறியாததும், அவரைச் சரணாகதி அடையாததுமே ஆகும். ஆனால் ஒரு மிகப் பெரும் சாம்ராஜ்யத்தின் பேரரசனாக விளங்கிய பரீட்சித்து,

அவனுடைய பிறவியின் கடைசிகாலத்தைக் கைகொண்ட விதமும், அதனால் பாரததேச மக்களாகிய நமக்கு மிகப்பெரும் கருவூலமாகத்திகழும் ஸ்ரீமத்பாகவதத்தைக் கிடைக்கச் செய்ததும். மிகப்பெரும் ஒரு வீரச்செயலாகவே கருதத்தக்கது ஆகும்.

பிறவி என்ற ஒன்று இருந்தால், இறப்பு என்ற ஒன்றும் இயற்கைதான் என்பார்கள். ஆனால், அந்த இறப்பை ஏற்கிறபோது, தான் மீண்டும் பிறவாத பேரின்பநிலையாகிய முக்தி லோகத்தை அடைவதற்கும், அதற்குரிய மார்க்கங்கள் தெரியாமல் பெரும்பாலான மக்கள் வாழ்கிறார்கள். தனது உடம்பே தான் என்ற அறியாமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆயின் தன் உடல் அழியக்கூடியது, ஆனால் அதனுள் பகவானின் உடலாக இருக்கும் ஆன்மாவானது நித்தியமானது. நேற்று இருந்தது. இன்றும் இருக்கிறது நாளையும் இருக்கும் தன்மையைப் பெற்றது ஆகையால், அந்த ஆன்மாவின் தத்துவத்தை அறிகிற வைராக்கியத்தைப்பெற்று மனிதன் வாழ்ந்தால், அவனுக்கு முக்தியானது சித்திக்கும் என்பதை அறிந்துகொண்டான் பரீட்சத்து. இறப்பு இயற்கை எனினும், அந்த இறப்பை அடுத்து ஒரு மனிதன் எடுக்கப்போகும் அடுத்த பிறவியைப்பெறாமல், இறைவனோடு ஒன்றுவதும், அந்த இறைவனின் வைகுந்தலோகம் அடைவதற்கும் வேண்டிய பகவான் கைங்கர்யத்தை முறையாகப்பெற்ற பரீட்சித்துவின் இந்த வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து நடத்தல் வேண்டும்., பரப்பிரம்ம பெருமானாகிய ஸ்ரீகிருஷ்ண

பகவானின் பேரருளைப்பெற, தாயாரை முன்னிட்டு அவருடைய பாதங்களை நாமும் சரணாகதி அடைவோமாக!

**கண்டேன் கமலமலர்ப்பாதம் காண்டலுமே**
**விண்டே ஒழிந்த வினையாயின எல்லாம்**
**தொண்டே செய்து என்றும் தொழுது வழியொழுக**
**பண்டே பரமன் பணித்த பணிவகையே**

**(திருவாய்மொழி.3708)**

என்பது நம்மாழ்வார் நவிலும் நலவழியாகிய நாராயணமார்க்கம் ஆகும். இப்பாசுரத்தில், தாமரைப் பாதங்களை உடையவனாகிய கண்ணபெருமான் அருச்சுனனுக்கு கீதா உபதேசம் கூறியபோதே எவன் என்னை அனுதினமும் தொழுதுவாழ்ந்துகொண்டு கைங்கர்யம் செய்கிறானோ, என்னிடத்திலே பிரபத்தி மார்க்கமாகிய சரணாகதியை விரும்புகிறானோ அவனுக்கு நிச்சயமாக அந்தப் பிறவியிலேயே ஆனந்தநிலையாகிய மோட்சத்தைத் தருவேன். அவன் எப்போது என் திருவடிகளைச் சரண்புகுந்தானோ, அப்போதே அவனுடைய அனைத்து பாவங்களையும் போக்கிவிடுவேன். ஆகையால் அவனை என்னோடு இணைத்துக் கொண்டு, அவன் இன்புற்று இருக்கும் நன்னிலையைக் கொடுப்பேன் என்கிறார். அவ்வகையில் கண்ணபெருமானின் கமலமலர்ப்பாதத்தைச் சரணடைந்த பரீட்சித்து, பிறவியில்லாத பெரும்பேற்றை அடைந்தான்.

**ஸ்ரீமந் நாராயணாய சரணம் சரணம் பிரபத்யே**

**ஸ்ரீமதே நாராயணாய நம:**

## 4. பக்தன் துருவனும் பகவான் விஷ்ணுவும்

நான்குவகையான வருணாசிரமங்களில் உயர்ந்த நிலையில் இருந்த அந்தணனாகிய அஜாமிளன், தனது வருணாசிரம தருமத்தைப் புறக்கணித்து, இகலோக சுகத்தைத்தேடி அலைந்து, இறுதியில் ஸ்ரீமந் நாராயணராகிய பரம்பிரம்மத்தால் முக்தி அடைந்த வரலாற்றை முன்கதையில் கண்டோம். இந்தத் தலைப்பில், சத்திரியகுலத்தில் தோன்றிய துருவன் என்ற பக்தனுக்குச் சிறுவயதிலேயே ஏற்பட்ட துயரசம்பவத்தையும், அதைப் போக்கிக் கொள்ள மனஉறுதிபூண்டு, கடுந்தவத்தின் மூலம் மகாவிஷ்ணுவின் (விஷ்ணுபகவானின்) துருவ நட்சத்திரமாக இன்றளவும் ஒளிர்ந்துகொண்டிருக்கும் ஒரு பக்திப் பரவசக் கதையை இதில் காண்போம்.

துருவனின் பக்திபரவசக் கதையானது, மைத்ரேய முனிவரால் விதுரருக்குக் கூறப்படுவதாக அமைந்துள்ள ஒரு வரலாற்றுக்கதையாகும். இது, ஸ்ரீமத் பாகவதத்தின், நான்காம் ஸ்கந்தம் எட்டாம் அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது.

பிரம்மதேவன் முழுமுதற்கடவுளான மகாவிஷ்ணுவின் பரிபூரண அம்சமாவார். பிரம்மதேவருடைய மகனாகத் தோன்றிய சுவாயம்புவமனுவின் சந்ததியில் தோன்றியவன் துருவன். சுவாயம்பு மனுவின் மகனாகப் பிறந்த உத்தானபாதன் என்பவன் சுனீதி, மற்றும் சுருசி என்ற இரண்டு மனைவியர்களை மணம்புரிந்துகொண்டான்.. உத்தானபாதனுக்கும், முதல்மனைவியான சனீதிக்கும் மகனாகப் பிறந்தவன் துருவன். இரண்டாம் மனைவியான

சுருசிக்கும் உத்தானபாதனுக்கும் மகனாக உத்தமன் எனபவன் மகனாக இருந்தான். நாளடையில் தனது முதல் மனைவியை விட, இரண்டாம் மனைவியான சுருசியிடமே அரசன் உத்தானபாதன் மிகவும் இன்பம் துய்த்துவந்ததோடு, அவளுக்கும், அவள் மகனாகிய உத்தமனுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்தான். அதைக்கண்டு மனம் கலங்கிய முதல்மனைவியான சுனீதி என்ற மங்கைநல்லாள் தனது நிலையைக்கண்டு வருந்தி இருவருக்குமாக பணிவிடைகளும் செய்துவந்தாள். அவளுடைய மகனான துருவனும் புறக்கணிக்கப்பட்டான்.

**தந்தை மடிமீது தானும் அமரநினைத்தான்:-**

ஒருநாள் உத்தானபாதனின் மடியில் உத்தமன் அமர்ந்து தந்தையிடம் பேசிக்கொண்டு, விளையாட்டில் ஈடுபட்டிருந்தான். அதைக்கண்ட துருவனுக்கும் தனது தந்தையின் மடியில் அமர்ந்து விளையாடவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. எனவே அவன் தனது தந்தையின் மடிமீது அமர்வதைக்கண்ட சுருசி என்ற அந்த இரண்டாம் மனைவி, பாலகன் துருவனைப்பிடித்துக் கீழே தள்ளிவிட்டாள். மேலும், "எனது மகன் உத்தமனுக்கு மட்டுமே தந்தையின் மடியில் மட்டுமன்று, அரியனையில் ஏறி ஆட்சிபுரியும் அதிகாரம் உண்டு. உனக்கு அவை கிடைக்காது. அந்த நிலையை நீ அடையவேண்டுமானால்,- நீ இந்தப் பிறவியை முடித்துக்கொண்டடு.. (இறந்துவிட்டு) மீண்டும் அடுத்தபிறவியில் எனது மகனாகவே வந்து பிறக்கவேண்டும். அல்லது முடிந்தால் நீ பகவான் விஷ்ணுவை வணங்கி, தவம் செய்து அவரிடத்தில் வரம் பெறவேண்டும். இந்த இரண்டில்

எது உன்னால் சாத்தியமோ அதைச் செய்துவிட்டு வா பார்க்கலாம். அப்போதுதான் நீ "நினைப்பது நிறைவேறும்" என்றுகூறி துருவனை அங்கிருந்தும் விரட்டி விட்டாள். இவற்றை எல்லாம் துருவனால் செய்து முடிக்கமுடியாது, அவன் தந்தையின் மடிமீது உட்காருவதற்கே முடியாது. விஷ்ணுவைக்காணவும் முடியாது என்ற எண்ணத்தில் இவ்வாறு இறுமாப்புக்கலந்த சவால்மொழிகளை வீசினாள் சுருசி. இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த உத்தானபாதன் தனது இளைய மனைவியைக் கண்டிக்கவும் இல்லை. கடிந்து கொள்ளவும் இல்லை! அவன் உத்தமனோடு விளையாடிக் கொண்டிருப்பதிலேயே காலம் கழித்தான். துருவனுக்கு ஆத்திரமும் அழுகையும் பீறிட்டுக்கொண்டு வந்தன. விரைந்து ஓடி, தன்னுடைய தாயிடம் நடந்ததைக்கூறி துடித்தான் பாலகன் துருவன்.

**பகவான் விஷ்ணுவை பார்ப்பதே நல்லது :**

தன்னுடைய மகனின் நிலைக்கு வருத்தம் அடைந்ததைத் தவிர சுனீதியால் வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆயினும் அவள் "இளையவளான சுருசி கூறியதில் உன்னால் ஒன்றைச் செய்யமுடியும் ! நீ இறந்து மறுபிறவி எடுத்துவரவேண்டும் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் நீ நினைத்தால், பகவான் விஷ்ணுவை நோக்கித் தவமியற்றி, அவருடைய அருளைப் பெற்றால் உனக்கு அனைத்துவிதமான மங்களங்களும் ஏற்படும். அதை உன்னால் செய்யமுடிந்தால், அதற்குரிய முயற்சியில் நீ ஈடுபாடு கொள் என்று அழுதுகொண்டே கூறினாள்.! மேலும் உனது பாட்டனாராகிய சுவாயம்புவமனுவும் அவர்பல

யோகங்களைப் பெற்றார். அதேபோல் நீயும் உனது போகநிலை நெறியான தவத்தில் முழுமூச்சசு;சுடன் ஈடுபட்டுச் செய்தால் நீ அப்பரம்பொருளைக்காண்பதும், அவர் அருளால் உனது அனைத்துவிதமான ஆசைகளும் நிறைவேறும். இதைத்தவிர நான் வேறு எதையும் செய்யமுடியாத துர்ப்பாக்கியசாலியாக உள்ளேன்.” என்று கூறிவிட்டுச் சென்றாள் சுனீதி.

**கானகம் புறப்பட்டான்.! கடுந்தவம் மேற்கொண்டான் :**

இந்தச் சம்பவம் நிகழ்ந்த, போது துருவன் வெறும் ஆறுவயதும் நிரம்பாத பாலகன் ஆவான்.! ஆறு வயதுடையவன் ஆண்டவனை நோக்கித் தவம் புரியமுடியுமா? வெற்றிபெற முடியுமா?? ஆயிரமாயிரம் ஆண்டுகளாக கடுந்தவம் செய்துவரும் தவயோக முனிவர்களுக்கும் கிடைக்காத பகவானுடைய தரிசனம் பாலகனுக்குக் கிடைக்குமா?

**துருவனைத் தடுத்து திரும்பி போய்விடு என்றார் நாரதமுனிவர் :**

ஸ்ரீமகாவிஷ்ணு பெருமானை நோக்கிக் கடுந்தவம் செய்து, அவருடைய அருள்பெற்று, தன் தந்தையின்மடிமீது தான் உரிமையோடு அமரவேண்டும் என்பதற்காகவும், தான் தன்னுடைய தந்தையின் அரியாசனத்தில் அமரவேண்டும் என்ற இகபர ஆசையிலேயே ஆழந்துகொண்டு, வனத்தை நோக்கிச் சென்ற துருவனைத் தடுத்து நிறுத்தினார். நாரதமகரிஷி. அவனுடைய தலைமீது தன்னுடைய கையை வைத்து ஆசீர்வாதம் செய்த அவர், “பாலகனே ! உன்னுடைய

எண்ணத்தை நான் நன்கு அறிவேன். தவயோகபலத்தால் பரம்பொருளைக்காண்பதும், அவருடைய தரிசனம் கிடைப்பதும் அவ்வளவு எளிதானது இல்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தவயோகநிலையிலே இருந்து சமாதிநிலையிலே இருந்த மிகப்பெரும் தவயோகிகளாலும், பகவானின் தரிசனத்தைப் பெறமுடியாமல்போனபோது, சிறுவனாகிய உன்னால், அதை எவ்வாறு சாதிக்கமுடியும்,! நீ உன் சிற்றன்னையின் கடுஞ்சொல்லால் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டாய் என்பது உண்மைதான். ஆனால் இதைப்போன்று வாழ்க்கையில் நடக்கும் துன்பங்களையும், துயரத்தினையும் ஒரு மனிதன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனவே நீ இப்போது உன்னுடைய வீட்டிற்குத்திரும்பிவிடு. நீ வளர்ந்து பெரியவனானதும். வேண்டுமானால், அப்போது உன்னுடைய இந்த முடிவை நீ மேற்கொள்ளலாம்" என்று அறிவுறுத்தினர்.

ஆனால் துருவன் முனிவரின் அறிவுரையை ஏற்கவில்லை. அவன் மகரிஷியே "நீங்கள் கூறுவது வேண்டுமானால் சாதாரண மக்களுக்கு ஏற்புடையதாகும். ஆனால் சத்திரியகுலத்தில் பிறந்தவனாகியநான், எனது மாற்றாந்தாயின் கூர்வேல்போன்ற கொடு மொழியையும், அவள் எனக்குச் செய்த அநியாயத்தையும் விதி என்று ஏற்றுக்கொள்ளமுடியாது. எனவே என்னைத் தடுக்க வேண்டாம். நான் எடுத்த காரியத்தை முடித்தே தீருவேன். மேலும் நீங்கள் என்மீது பரிவு காட்டுவது என்பது உண்மையானால், நான் என்னுடைய குறிக்கோளில் வெற்றி

பெறுவதற்குரிய வழிமுறைகளைக் கூறுங்கள்'' – என்று வேண்டினான்.

**நாரதமுனிவர் கூறிய உபாயம் :-**

மன உறுதியுடன் துருவன்பேசியதைக்கேட்ட நாரதர் அத்துருவனை அதற்கு மேலும் தடுத்துநிறுத்த முடியாது என்று அறிந்து கொண்டார். எனவே அவர், பாலகனே நீ தர்மநெறி (அறம், பொருள், இன்பம், முக்தி (வீடுபேறு) என்ற புருஷாத்தத்தைப் பெறுவதே உனது முடிவான குறிக்கோளாக அதைப்பெற, நீ பகவானுடைய தாமரைத் திருவடிகளைச் சரணாகதி அடைதல்வேண்டும். இதை நீ செய்வதற்கு ஏற்ற இடம் யமுனை நதிக்கரையில் இருக்கும் மதுவனம் ஆகும். அங்கு நீ சென்று உனது தியானத்தை, குறிப்பாக அஷ்டாங்கயோகத்தைத் தொடங்கி, தொடர்ந்து மூன்றுமுறை நீராடவேண்டும். பிறகு சிறந்த ஆசனம் அமைத்து, பகவான் ஸ்ரீகிருஷ்ணருடைய வடிவத்தை (மூர்த்தத்தை) மனதில் நிறுத்தி ஓம் நமோ பகவதே வாசுதேவாய என்னும் துவாதச மந்திரத்தை ஜபித்தல்வேண்டும். இவ்வாறு ஏழு நாட்கள் இரவுப்பொழுதில் இம்மந்திரத்தை உச்சாடனம் செய்துவந்தால், சித்தர்கள் லோகத்தை நீ காணக்கூடும். இத்தகைய வழிபாட்டினையும் ஒருநாளைக்கு மூன்று முறை நீ செய்தல் வேண்டும்." என்று அறிவுறுத்தினார் நாரதமகரிஷி.

**மனச்சோர்வில் வீழ்ந்த மன்னன் :**

மேலே கண்டவாறு நாரதமகரிஷியிடம் தவத்திற்குரிய வழிபாட்டு நெறியினை அறிந்த துருவன், அவரை வணங்கி, நன்றியைத் தெரிவித்து, தன் தவவாழ்க்கைப்பாதையைத் தொடர்ந்தான். நாரதரும் அங்கிருந்தும் புறப்பட்டு,

உத்தானபாதனைச் சந்தித்து, நடந்ததைக்கூற, அந்த அரசனும் தனது மகன் துருவனுக்குத் தான் இழைத்த கொடுமையை நினைத்து, வெட்கமடைந்து, நாட்டைப் பரிபாலனம் செய்யும் தனது கடமையில் பற்றில்லாமல் போனான். தனது மகன்: துருவனுக்காகவும், அவன் மீண்டும் தனது நாட்டிற்கு வந்துசேரும் நாள் எப்போதோ என்று ஏங்கிக் கொண்டிருந்தான்.

**துருவன் செய்த கடுந் தவம் :**

நாரதர் கூறிய நல்லுரைப்படி, மதுவனத்தை அடைந்த துருவன், யமுனையாற்றிலே நீராடினான். புறத் தூய்மையோடு, மனத்தெளிவும் ஏற்பட்டவனாக அன்றிரவு மிகுந்த கவனத்துடனும், ஒழுக்கமுடனும் இருந்து, முழுமுதற்கடவுளான மகாவிஷ்ணுவை சிரத்தையோடு வழிபட்டான். பின்னர் தனது தவத்தைத் தொடங்கிய துருவன் முதல் மாதத்தில் தனது உயிரைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, மூன்று நாட்களுக்கு ஒருமுறை மட்டும் காய்கனிகளையும், கொட்டைகளையும் உண்டு வந்தான். இப்படி முதல் மாதத்தில் உணவை ஏற்றுக்கொண்ட துருவன் அடுத்த மாதத்தில் தன்னுடைய உணவுப்பழக்கத்தை மாற்றிக்கொண்டான். ஆம். அந்த இரண்டாம் மாதத்தில் அவன் ஆறுநாட்களுக்கு ஒருமுறை மட்டுமே ஆகாரத்தை ஏற்றுக்கொண்டான். ஆனாலும், அந்த இண்டாம்மாதத்தில் அவன் உண்டது காய்ந்த இலைகளையும், புற்களையும் மட்டும்தான்.!

மூன்றாவது மாதம் தொடங்கியவுடன், மேற்கூறப்பட்ட எந்த உணவுப்பொருட்களையும் கூட, ஏற்றுக்கொள்ளாமல்

புறக்கணித்துவிட்டு, ஒன்பது நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் மட்டுமே குடித்தவனாக, முழுமுதற்கடவுளைச் சமாதி நிலையில் வழிபட்டான்.! நான்காவது மாதம் துருவனுக்கு தனது மூச்சினைக்கட்டுப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் தோன்ற, தனது ஆன்மீக குருவான நாரதர் கூறியதற்கு ஏற்றவாறு அதை ஒன்றிய மனதுடன் செய்து, அதில் வெற்றிப்பெற்று, மூச்சினைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றவராக மாறினான். மேலும் இந்த நான்காம் மாதத்தில் அவர்தான் பெற்ற ஆற்றலினால், பன்னிரண்டு நாட்களுக்கு ஒரு முறை மட்டும் காற்றைச் சுவாசித்து தனது உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் கலையில் வல்லவரானார்.

ஐந்தாம் மாதத்தில் நின்றநிலையில் தவம்மேற்கொள்ள நினைத்தார். இந்த நான்குமாத தவயோகத்தில், தனது மூச்சைக் கட்டுப்படுத்தும் கலையில் தேர்ச்சி பெற்றதால், எவ்வித அசைவும் இல்லாமல், ஒருதூணைப்போல ஒற்றைக்காலில் நின்று தவத்தைத் தொடர்ந்தார் துருவன். இந்நிலையில் அவர் தனது மனத்தை முழுவதுமாக ஒரு முகப்படுத்தி, தனது முக்கரணங்களையும், பரப்பிரம்மத்தின் நினைப்பிலேயும், ஸ்மரணத்திலேயும் செலவிட்டார்.

ஐந்து மாதங்கள் முடிந்து, ஆறாம் மாதம் தொடங்கியபோது, துருவன் தனது ஐம்புலன்களையும் வென்றார் அபூர்வ சிறுவனாக மாறிப்போனார். சிறுவனே என்றாலும் ஒரு ஸ்திதப்ரிக்ஞனாக மாறினார் துருவன். மற்றபடியான எவ்விதப்புறச்சூழ்நிலையும் அவரைச் சிறிதும் பாதிக்கவில்லை.! அந்த நிலைக்கு துருவன் மாறியதை

வியாசர் ஸ்ரீமத்பாகவதத்தின் 4. ஆம் ஸ்கந்தம், எட்டாம் அத்யாயம் 77.வது சுலோகத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

**சர்வதோ மன ஆக்ருஷ்ய ஹ்ருதி பூதேந்த்ரி யாஸயம்**
**த்யாயன் பகவதோ ரூபம் நாஸ்தியஞ்ச்சனாபரம்.!!**

அதாவது, துருவன் தான்கேள்விப்பட்டிருந்த பரம்பிரம்ம பெருமானின் வடிவத்தை மனத்தில் நிறுத்தி, அதைத் தரிசிப்பதிலும், அந்த திவ்வியமங்கள சொரூபத்தைக் காண்பதிலும் ஆசை கொண்டவனாகவே தனது மனத்தைச் செலுத்தினானே தவிர, வேறு எவ்விதமான புறத்தாக்குதலுக்கும் அவன் ஆளாகவில்லை என்று கூறுகிறார் வியாசர்.

இதில் வியாசபகவான் கூறுகிற ஒரு தியான நுட்பமும் வெளிப்படுவதைக் காணலாம், அதாவது தனது மனதை ஒருமுகப்படுத்த நினைக்கும் ஒருவன் தனது தவயோக பக்தி நிலையில் தனக்குப்பிடித்தமான ஒரு உருவத்தை இரண்டு புருவங்களுக்கும் இடையிலே நிறுத்தி பயிற்சி செய்கிறபோது, நிச்சயமாக அதில் குறுகிய காலத்தில் வெற்றிபெறலாம் என்பதை இதன் மூலம் விளக்குகிறார். தற்போது உருவத்தை முன்னிறுத்தாமல், அருவத்தை முன்னிலைப்படுத்தி மேற்கூறியவாறு குணடலினி சக்தியைப் பெறும் ஒரு முறையை யோகநிலையில் சில அமைப்புகள் பயன்படுத்துகின்றனர். அத்தகைய யோக நிலை முறை தவறானது என்பது இதனால் விளக்கம் பெறுகிறது. அருவ மற்ற ஒன்றைத் தியானித்து வெற்றிபெறுவது ஆகாத ஒன்று என்பதும், காலவிரயத்தையே ஏற்படுத்தும் என்பதையும் இதனால் அறிந்து, உருவ வழிபாட்டு முறையே தெய்வ

வழிபாட்டிற்கு உகந்த வழி என்பதை ஊர்ஜிதம் செய்கிறார் வியாசபகவான்.!

**துருவன் தவயோக சக்தியால் ஏற்பட்ட தடுமாற்றம் :**

மேலே கூறப்பட்டநிலையில் துருவன் ஒற்றைக்காலில் நேராக நின்றதால், அவரது கால்விரல்களின் அழுத்தத்தினால், பூமியானது ஒருபக்கம் கீழ்நோக்கி இறங்கியது.! மேலும் அத்துருவன் தனது உடலில் உள்ள ஒன்பது ஓட்டைகள் எனப்படும் துவாரங்களைத்தனது தவயோகசக்தியால் மூடி விட்டதால், இப்பிரபஞ்சத்தின் அனைத்து உயிர்களும் மூச்சு விடமுடியாமல் தவித்தனர். அதே நிலைக்குத் தேவகணங்களும் தள்ளப்பட்டனர். எனவே மிகவும் பயந்துபோன அவர்கள், மூச்சுத்திணறலுக்கு உள்ளாகி, தங்களைக் காக்கவேண்டும் என்பதற்காக முழுமுதற்கடவுளான மகாவிஷ்ணுவிடம் முறையிட ஓடினர். அவர்கள் பெருமானிடத்தில் "எங்களைக்காத்தருளும் பெருமானே நாங்கள் தற்போது இதுவரை அனுபவித்து அறியாத ஒரு பெரும் இன்னலுக்கு ஆளாகியுள்ளோம். எங்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு, சுவாசிக்கவும் முடியாமல் அவதிப்படுகிறோம். இதன் காரணத்தை எங்களால் அறியமுடிவில்லை. எனவே "பிரபுவே எங்களைக் காத்தருளவேண்டும். அதற்காகவே உம்மைச் சரணாகதி அடையவந்துள்ளோம் "என்று கலக்கத்துடன் கூறினார்கள்.

**பகவான் ஏற்ற சரணாகதியும், கூறிய பதிலும் :**

அவர்களின் நிலைக்கு வருந்திய பெருமான், அவர்களின் கோரிக்கையை ஏற்று அருள்புரியவேண்டும் என்று

நினைத்தார். அவர் "தேவர்களே! பூலோகத்தில் உத்தானபாதன் என்ற அரசனின் மகனான ஐந்து வயது நிரம்பிய பாலகன் துருவன் என்பவனின் கடுந்தவத்தால் இந்த நிலை ஏற்பட்டது. என்னை நோக்கிக் கடுந்தவம் புரிந்து தனது ஆசையைப்பூர்த்தி செய்துகொள்ள சங்கல்பம் எடுத்திருக்கும் அவன் மிகச்சிறந்த பக்தனாகவும், தவயோகியாகவும் மாறியுள்ளான். அவன்மேற்கொண்டுள்ள கடுந்தவத்தால், இப்பிரபஞ்சத்தின் சுவாசத்தையே அவன் நிறுத்தியுள்ளான். எனவே, இனிமேலும் நான் தாமதியாமல் அவனுக்குக் காட்சிகொடுத்து, அவனுடைய விருப்பங்களைப் பூர்த்தி செய்வதன் மூலம், உங்களுக்கும் நல்லமுடிவு கிடைக்கும். எனவே நீங்கள் பயத்தை நீக்கிக்கொண்டு, ஜாக்கிரதையாக உங்கள் இருப்பிடம் செல்லுங்கள்" என்று ஆறுதல் கூறி அனுப்பிவைத்தார் பகவான்.

**துருவனிடம் சென்ற பெருமான் நிகழ்த்திய அற்புதம் :**

மேலே கூறப்பட்டவாறு துருவன் செய்த யோகநிலை முறையால், அவன் முழுமுதற்கடவுளின் திவ்விய உருவத்தை தனது மனத்தில் நிலைநிறுத்தி யோகநிலையில் நீடித்ததால், அவன் விரும்பிய பகவானின் நான்கு கரங்களுடன் தோன்றும் அற்புதக் காட்சியை தனது மனத்தில் நிலைநிறுத்திக் கொண்டான். நான்கு திருக்கரங்களுடன் கூடிய பெருமானின் திவ்வியமங்கள சொரூபமாகிய அற்புதத்தோற்றத்தை துருவன் தியானித்துப் பெற்றான். அதையே தன்னுடைய மனத்திரையில் பதிந்துகொண்டான். சங்கு சக்கரதாரியாகவும், ஒரு கையில் கதாயுதத்தையும், மற்றொரு கையில் தாமரைமலரினையும் கொண்டுள்ளதோடு, முகம்,

கண்கள், திருவடிகள், ஆகிய அனைத்துமே செந்தாமரை மலர்போல் காட்சியளிக்கும் உடற்பொலிவையும், மகரகுண்டலங்கள், திருத்துழாய்மாலை, மார்பினில் பொன்னாபரணங்கள், இவற்றோடு கூடிய திவ்விய மங்கள சொரூபத்தை அவன் தன்மனதிற்குள்ளேயே எப்போதும் காணமுடிந்தது. அந்தப்பேரின்ப பக்திப்பரவசத்தில் மூழ்கிய துருவன், அத் திருவுருவையே நேரில்கண்டவனாக ஆழ்நிலை யோகத்தில் இருந்தான். அந்தச் சமயத்தில், தனது கருடவாகனத்தின் மீது ஆரோகணித்து வந்த பெருமான், மதுவனத்தை அடைந்தார். துருவனின் பக்திநிலைகண்டு அவரும் பேரானந்தம் அடைந்தார். எனவே அவன்வேண்டும் வரத்தை அளித்து விடவேண்டும் என்ற எண்ணத்துடன், அவன் முன்னே வந்து தோன்றினார். ஆனால் துருவனிடம் எந்த அசைவோ, மாற்றமோ ஏற்படவில்லை. அதனுடைய காரணத்தை அறிந்துகொண்டபெருமான், அவன் தனது மனத்தில் நிலைநிறுத்தி வழிப்பட்டுக் கொண்டுள்ள தனது திருவுருவத்தைத் திடீரென்று மறைத்துக்கொண்டார்.! இதனால் திடுக்கிட்டான் துருவன். தனது மனத்திரையிலிருந்து பகவான் மறைந்த காரணத்தை அறியாத அவன் திடுக்கிட்ட நிலையில் தனது கண்களைத் திறந்து பார்த்தபோது, அவனுக்கு எதிரிலேயே தத்ருபதாக பகவானைக் கண்ட அந்த அரும்பெரும் தரிசனம் அவனுக்குக் சொரூபத்துடன் கூடிய அம்முழுமுதற்கடவுளைத் தனது கண்ணெதிரே கண்டான் அத்துரவன்..! ஆயிரமாயிம் ஆண்டுகளாகத் தமது யோகநிலையால் அறிந்திட முடியாத மகரிஷிகளுக்கும்

கிடைக்காத பெரும் பேற்றினை அத்துருவன் நேரில் கண்டு மகிழ்ந்தான்.

**துருவனின் மெய்ப்பாடுகள் :**

எந்த நோக்கத்தோடு துருவன் யோகநிலை பக்தியில் ஈடுபட்டு கடுந்தவம் புரிந்தானோ, அந்தப்பரப்பிரம்மத்தை நேரில் கண்டபோது, ! அதிர்ச்சியும் ஆனந்தமும் கொண்டான் அச்சிறுவன். பெருமானுடைய பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான்.! பெருமானின் பக்திக் கடலில் மூழ்கித் திளைத்தான்.! தன்னிரு கண்களாலும் அவருடைய பேரழகைப் பருகி மகிழ்ந்தான். அப்பெருமானின் தாமரைப்பாதங்களைத் தன்னுடைய, ஆனந்தக் கண்ணீரால் கழுவி, அதை முத்தமிட்டான். இறுதியில் அப்பெருமானைக் கட்டித்தழுவிக் கொண்டான். பெற்றெடுத்த தந்தையின் மடியில் அமர இடம்கிடைக்காத துருவன் மேற் கொண்ட யோகநிலையாலும் பெருமானையே கட்டிப்பிடித்து. அனைத்து மகிழ்ந்தான் கருணைவள்ளலான அப்பெருமானைப்பார்த்து, பரவசப்பட்ட அவனால், அவரைப்போற்றிப் பாடவும், புகழ்மொழிகள் கூறவும், மந்திரங்களால் ஜபிக்கவும், பாசுரங்களால் போற்றிப்புகழவும் முடியவில்லை.

தன் தந்தையைக் கொன்ற நரசிம்ம மூர்த்தியைக் கண்டு மகிழ்ந்து, அவருடைய கோபத்தைப்போக்கவும், அப்பெருமானை லட்சுமிநாராயணனாகப் பார்க்கவும் பல்வேறு புகழ்மொழிகலைப் பாடினான் பக்தபிரகலாதன். ஆனால் துருவனுடைய நிலை அவ்வாறு இல்லை. தனது

மகனை குருகுலத்திற்கும் அனுப்பி வைக்காமல் இருந்த உத்தமபாதனின் கடமையற்ற முறையும், அவனுடைய ஒருதலைப்பட்சமான விருப்பங்களையுமே நாம் அறிய முடிகிறது. எனவேதான் இச்சூழலில் இருந்த துருவன் அதிலிருந்து மீண்டுவர எடுத்த உணர்ச்சி கரமான முடிவே அவன் பெருமானைக்காண வனம் சென்ற செயலாகும். உணர்ச்சி பூர்வமாக துருவன் அரண்மனையை விட்டு நீங்கியதால், பரப்பிரம்ம பெருமானைப் போற்றிப்பாட முடியாமல்போனது அதற்காக தவித்து நின்றான் அப்பாலகன்.

**பாஞ்ச சன்னியம் செய்திட்ட விந்தை :**

தனது பக்தனாகிய துருவனின் நிலைக்கு இரங்கிய பெருமான், தனது பாஞ்ச சன்னியத்தால் பக்தன் துருவனின் தலைமீது தடவிக் கொடுத்தார். மேலும் அவனது கன்னப்பகுதியிலும் அந்தப் பால்போன்ற பாஞ்சசன்யத்தின் ஸ்பரிசம் படுமாறு அருள்புரிந்தார் பெருமான் மகாவிஷ்ணு. அவ்வளவில் பீறிட்டு எழுகின்ற பெருவெள்ளம் போல துருவனின் மனத்தில் பேரறிவும் பெரும் ஞானமும் ஊற்றெடுத்தன. அதன் விளைவாக அத்துருவன் பெருமழைபோல் பகவானின் புகழ்பாடித் துதித்தான். அவனுடைய போற்றுதல் துதியிலே புளகாங்கிதம் கொண்டபகவானும் அதைக்கேட்டு அனுபவித்து மகிழந்தார். பரப்பிரம்மபெருமானைப் பக்தன் துருவன் வழிபட்ட முறைகள் அனைத்தும் வேதங்கள் கூறும் பகவானின் தோற்றப் பொலிவினையும், கல்யாணகுணங்களை விவரிக்கும் மந்திரப்பொருள்களாகவே வெளிப்பட்டன..

துருவனின் இந்த பக்திப் பரவசப்பெருக்கை மிகவும் விரிவாக தன்னுடைய ஸ்ரீமத்பாகவதத்தில் வியாசபகவான் கூறியுள்ளார்.!

**பாலகன் துருவன் பகவானிடம் கேட்ட வரம் :-**

முனிவர்களாலும் பெறுவதற்கு அரியதான, காணக்கிடைக்காத, சொல்லுதற்கரிய இப்பேற்றினைப் பெற்ற துருவனால் அதற்கு ஏற்றவாறு வரத்தைப்பெற முடியவில்லை. அவனுடைய உள்ளம் மாற்றாந்தாயின் கொடுமையான உள்ளத்தால் பாதிக்கப்பட்டதாலும், தன்னுடைய தந்தையின் மடி மட்டும் அல்லாமல், அரசாட்சியிலும் துருவனுக்கு இடமில்லை என்று அவள் கூறிவிட்டதாலும், துருவனின் மனம் அந்த இரண்டைப் பெறுவதிலேயே நிலைத்திருந்தது. அதனால், அவன் அவற்றைத் தனக்கு அளிக்க வரம்தரவேண்டும் என்ற அற்பத்தனமான வரத்தையே பரம்பொருளிடம் கேட்டான்.

இகலோக வாழ்க்கை பற்றியும், அதன் நிலையற்ற தன்மையைப்பற்றியும் அறியாதவனாகிய துருவனால், அவன் மாயையினால் மூடப்பட்டிருந்த காரணத்தினால், பெறுதற்கரிய பெரும்பேறான பரமபதம் சென்றடையும் பேற்றையோ, முக்தியையோ கேட்டுப்பெறவேண்டும் என்ற ஞானம் ஏற்படாத இளம் வயதினன் அவன். ஆனால், ஆறு வயது பாலகன் ஒருவன், ஆறே மாதங்களில் தான் செய்த கடுமையான தவயோக வலிமையின் காரணமாக, பிரபஞ்சத்தையும், குறிப்பாக தேவ கணங்களையும் சுவாசிக்கமுடியாமல் நிலைகுலைய வைத்த அப்பாலகனின்

பக்தி நிலை, பிரபஞ்சம் உள்ள காலப்பகுதி அனைத்திலும் போற்றப்படவேண்டும் என்ற பெருங்கருணையும் பகவானின் உள்ளத்தில் ஏற்பட்டது.!

எனவே, துருவனின் கடுந்தவத்தால் மகிழ்ந்திருந்த கண்ணபெருமான், அவன் எதிர்பாராததும், கேட்காததும் ஆன முக்தியையும் அவன் பிறவியின் முடிவின் பெறுவதற்கு அருள்புரிந்தார். துருவன் கேட்ட சாதாரன வரங்களை அவர் அருளியதோடு, அப்பெருமான் துருவனிடம், எனது அன்பிற்கு உரியபக்தனே!" நீ விரும்பியவாறே உன்கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். நீ மிகப்பெரும் சக்கரவர்த்தியாக இந்த நிலவுலகத்தைப் பிற்காலத்தில் அரசாட்சி செய்வாய். துருவ மகாராஜன் என்று அனைவராலும் போற்றப்பட்டு வாழும் பெருஞ்சிறப்பை அடைவாய். அதோடு மட்டுமன்று, இந்த ஜடவுடலின் வாழ்வை நீ வாழ்ந்து முடித்தவுடன் அனைத்துலக மக்களாலும் துதிக்கப்படுவாய். நீ என்றைக்கும் மக்களின் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெறுவதற்கு உரிய மிகுதியாகப்பிரகாசிக்கும் ஒரு விண்மீனாய், (நட்சத்திரமாய் விண்ணுலகில் ஒளிர்வாய். அந்த விண்மீன் சப்தரிஷி மண்டலத்தின் மேல் புறத்தே அமையும். மேலும் அது எனது வைகுந்தப்பகுதிக்கும் உட்பட்டதே ஆகையால் நீ என்றென்றும் என்னைவிட்டுப்பிரியாது வாழும் நன்னிலையையும் அடைவாய்" என்று ஆசீர்வாதம் செய்து, வரம்கொடுத்தார். அதனால், மீண்டும் இம்மணுலகிற்குத் திரும்பமாட்டாய்" என்று வரமருளிய பெருமான், துருவமகாராஜா காணுமாறு, தனது கருடவாகனம் மீது ஏறி, தன்னுலகை அடைந்தார்.

பகவான் கண்ணன் அர்ச்சுனனுக்கு அருளிய கீதையில், பரலோகம், பரமபதம், வைகுந்தம் போன்றவற்றைப்பற்றிக் கூறிவந்தபோது பரமபதம் என்பது எங்கு இருக்கிறது, அதன் தன்மை எப்படிப்பட்டது என்ற ஒரு சந்தேகம் அர்ச்சுனனுக்கு ஏற்பட்டதாம். அதைப்போக்க கீதையின் 15–ஆம் அத்.6.ஆம் ஸ்லோகத்தில், பரமபதம்

**“யத் கத்வா ந நிவர்த்தந்தே தத்தாம பரமம் மம”**

என்று பகவான் கூறும் ஒரு அற்புதமான விளக்கமாக அமைந்துள்ளது. அதாவது, எந்த இடத்திற்குச் (லோகத்திற்குச்) சென்ற பிறகு ஒருவர், ஒருவரின் ஆத்மா மீள்வது இல்லையோ அதுவே நான் வாழ்கிற பரமபதம் ஆகும் என்கிறார். சப்தரிஷி மண்டலத்திற்கும் மேலாக உள்ள அந்த நட்சத்திரமண்டலமானது, மஹாப்ரளய காலத்திலும் அழியாதது என்கின்றனர் ஆன்றோர். பகவானால் சுட்டிக்காட்டப்படும் சப்தரிஷி மண்டலம் என்ற ஏழு ஆய்வாளர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உண்மையாகும். அவற்றின் மேலான ஒரு வெளியில் (இடத்தில்) மிகவும் பலபலப்புடனும். பேரொளியுடனும் காட்சியளிக்கும் ஒரு தனி நட்சத்திரமே துருவ நட்சத்திரம் என்பதும் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஓர் ஆன்மீக வரலாற்றோடுகூடிய வானவியல் செய்தியாக உள்ளது. இப் பெருமை நமக்கும், நமது பாரத நாட்டிற்கும் சிறப்பை அளிக்கக்கூடியது ஆகும்.

மேலும்,, சாயுஜ்யம், சாரூப்யம், சாலோக்யம், சாமீப்யம், சார்ஸ்டிம் என்ற ஐந்தும் முக்தியின் ஐந்துவகையான நிலைகள்

என்று ஆன்றோர் குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள் சாயுஜ்யம் என்ற முக்திநிலை மட்டும் சிறந்தது அன்று. ஏனென்றால் இந்த முக்தியைப் பெறும் ஆன்மாக்கள், கர்மவினைப்பயனால் கிடைத்த சுகத்தை அங்கு அனுபவித்து முடிந்தவுடன் மீண்டும் மறுபிறவி எடுத்தாகவேண்டும். பூலோகத்தில் பிறந்து, மீண்டும் தனது பிறவியைக் கடத்தவேண்டும். கர்மவினைகளைச் செய்ய வேண்டும். அதன்விளைவாக அடுத்தபிறவி எடுத்தாகவேண்டும். ஆக இப்படி சாயுஜ்ய முக்திபெறும் ஆன்மாக்கள், இப்பிறவித்தளையில் சிக்கித்தவிக்கவேண்டும். எனவே தான் இந்த சாயுஜ்ய முக்தி வேண்டப்படா ஒன்றாகும். ஆகையால் எவரும் அதைப் பெற விரும்பமாட்டார்கள். ஆனாலும், பகவான் தனக்கு முக்திவேண்டும் என்று தன்னிடம்வரம் வாங்காத அந்தப்பக்தன் துருவனுக்கு, அதைத்தவிர்த்த முக்தி நிலையான கைங்கர்யம் செய்து வாழும் பேரின்ப நிலையேயே கொடுத்தார். துருவனுக்கு சாருப்ய முக்தி கிடைத்தது என்பார்கள்.

**“இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா**
**எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு**
**உற்றோமே யாவோம் உமக்கே யாம் ஆட்செய்வோம்**
**மற்றை நம் காமங்கள் மாற்று”**

என்று ஆண்டாள் நாச்சியார் தனது திருப்பாவையில் (பாசுரம்–29) வேண்டும் அந்த உயரிய கைங்கர்யப் பேற்றை துருவனுக்கு அருளினார் என்று வியாசர கூறியுள்ளார். பரப்பிரம்ம பெருமானின் வாத்சல்ய குணாதிசயத்தைப் போற்றி மகிழ்கிறார். தன்னுடைய பக்தர்களுக்கு அவர்கள் வேண்டுவனவற்றை அளிப்பதோடு, அவர்கள்

வேண்டாதனவற்றையும், அதாவது அவர்கள் கேட்கமறந்ததையும் தானாகவே கொடுக்கும் கல்யாணகுணத்தானை நாமும் வணங்க வேண்டும் என்றதொரு பக்திப் பரவச நிலை, இதைப்படிக்கும் அனைத்து உள்ளங்களிலும் கேட்டு மகிழும் அனைத்து ஆன்றோர்களுக்கும் எழுவது இயற்கையாகும்.

ஆறுமாத காலத்து அருந்தவத்தாலேயே பகவானின் தரிசனத்தைப்பெற்றான் துருவன் என்றால், அது அவனுடைய இகலோக வைராக்கியத்தின் விளைவால் கிடைத்திட்ட பேறே ஆகும். தானமும், தவமும் ஞானமும் வைராக்கியமும் ஒருவர் பெற்று பெருமானின் திருவடிப்பேற்றை அடைவதற்கு, அவர்கள் எடுத்துக்கொள்ளும் கால அளவால் கணக்கிடப்படுவது இல்லை. அவர்கள் தம் கர்மாவாகிய அந்தக்காரியத்தை எவ்வாறு செய்தார்கள், என்பதன் அடிப்படையிலேயே அமையும். ஐம்புலன்களையும் வென்ற ஆன்றோர்களை ஸ்திதப்பிரக்ஞ என்று குறிப்பிடுகிறார் பகவான் கிருஷ்ணர். அத்தகைய ஒரு புலன்களை வென்ற புண்ணிய புருஷனாக துருவன் தவத்தை மேற்கொண்டதால் பகவானின் தரிசனமும், ஆசியும் கிடைத்தது என்பதை அறிந்து எந்தக்கர்மாவைச் செய்வதாக இருந்தாலும், அதைக் கர்மயோகமாகச் செய்தல் வேண்டும் என்ற பகவானின் கீதா உபதேசத்தை நாமும் பின்பற்றி நடந்து நன்னிலை பெறுவோமாக!

## 5. மமதை கொண்ட மன்னனை மாய்த்திட்ட மகரிஷிகள் :

வேதவியாசராலே அருளிச் செய்யப்பட்டதான ஸ்ரீமத்பாகவதம் என்ற தெய்வீகப் பனுவலானது, பரமபுருஷராகிய பகவான் ஸ்ரீகிருஷ்ணருடைய குணநலன்களையும், சிறப்புகளையும் எடுத்துரைக்கும் புராணம் ஆகும். இது ஒரு புராணத்திற்கு வேண்டிய ஐவகையான இலக்கணங்கலையும் உடையதாக இருப்பதால், படைப்புக்காலம் முதற்கொண்டு ஒவ்வொரு மன்வந்திரங்களிலும் அரசாட்சி செய்த அரசர்கள், அவர்களின் வம்சத்தில் வந்தவர்கள் ஆகியவர்களைப் பற்றிய செய்திகளையும் விரிவாகக் கூறுவதாகவும் அமைந்துள்ள இப்பாகவதத்தில் நான்காம் ஸ்கந்தத்தின் பதினான்காம் அத்யாயத்தில், வேனன் என்ற ஒரு கொடுங்கோல் மன்னனின் அட்டூழியங்களைப் பொறுத்துக் கொள்ளமுடியாத மகரிஷிகளும் வேதியர்களும் சேர்ந்து அக்கொடுங்கோல் மன்னனை எவ்வாறு அழித்து நாட்டிற்கு நன்மை புரிந்திட்டனர் என்பதை எடுத்துரைக்கிறது.

### பகவான் கிருஷ்ணர் பகைவரை அழிப்பவர் !

ஸ்ரீமத்பாகவதம் என்னும் புராணம். வைணவக்கடவுளான ஸ்ரீமந் நாராயணனின் பரிபூரண அவதாரம் என்று போற்றப்படுகிற ஸ்ரீகிருஷ்ணரின் வாழ்க்கை வரலாற்றை மிகவும் விரிவாகக் கூறும் புராணநூலாகும். குழந்தைக் கண்ணனாகவும், கோவர்த்தனக் கண்ணனாகவும், துவாரகைக் கிருஷ்ணராகவும், பாண்டவர்கள் தூதனாகவும்,

தேரோட்டியாகவும் அந்த ஶ்ரீகிருஷ்ணர் செய்த அற்புதங்களைப்பட்டியலிட்டு பாரோர்க்கு அப்பெருமானின் பெருமையை அறிவிப்பதுதான் ஶ்ரீமத் பாகவதம் ஆகும்.

பகவான் கண்ணனை கூடாரைவெல்லும் சீர்க்கோவிந்தன் என்று ஆண்டாள் நாச்சியார் அழைத்து ஆனந்தம் அடைவதைப்போல, பேரானந்தம் அடைந்து நமக்குத்தந்துள்ளதே ஶ்ரீமத்பாகவதம் ஆகும்.. ஆனாலும் கண்ணனாகிய அம்முழுமுதல்வன், பகைவர்களை அழிக்கும் தனது கடமையில் சிறிதும் வழுவாதவர் என்பதையும் ஶ்ரீமத்பாகவதத்தின் பல்வேறு இடங்களிலும் காண்கிறோம்.!

**இரண்யகசிபுவை அழித்திட்ட பெருமான்.!**

இந்நூல் பன்னிரண்டு ஸ்கந்தங்களை உடையது. ஸ்கந்தம் என்பது இதனுடைய உட்பிரிவாகும். இதில் அத்யாயம் என்ற சிறுபிரிவுகளும் உள்ளன. அவ்வகையில், ஶ்ரீமத்பாகவதத்தில் உள்ள ஏழாவது ஸ்கந்தத்தில் இரண்யகசிபு என்னும் ஒரு கொடுங்கோல் மன்னனின் வரலாறு கூறப்படுகின்றது. தன் ஆட்சிக்கு உட்பட்ட அனைவரும் தன்னையே கடவுளாக வணங்கவேண்டும். பிரம்மன், விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளை விட, தானே உயர்ந்தவன். தன்னைத்தவிர வேறு எந்த தெய்வமும் இல்லை. என்ற அகந்தையால் ஆட்சி செய்து வந்தவன் அவன். ஆனால் அந்த இரண்யகசிபுவிற்கு மகனாகத்தோன்றிய பக்தபிரகலாதன் அதை மறுத்து, ஶ்ரீஹரியே தெய்வம். அவனே மகாபுரஷன். அவனுடைய ஆற்றலுக்கு ஈடுஇணை யாரும் இல்லை என்று கூறிவந்ததோடு, தன்னோடு உடன் பயின்று வந்த மற்றைய

பிள்ளைகளிடமும் ஸ்ரீஹரியே தெய்வம் என்று பறைசாற்றிவந்தான். ஸ்ரீமந்நாராயண பக்தியில் மூழ்கித் திளைத்திருந்தான். தனக்கு குருக்களாக நியமிக்கப்பட்டிருந்தவர்களுக்கே கேள்விக் கணைகள் தொடுத்தான். பதில் கூறமுடியாமல் தத்தளித்த அவர்களிடமும் ஸ்ரீமந்நாராயணனே பரப்பிரம்மம் என்னும் தத்துவத்தை நிலைநாட்டினான்.

**நரசிம்ம மூர்த்தியாய் வதைத்திட்டார் அசுரனை :**

இவற்றை எல்லாம் கேள்விப்பட்டு அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத இரண்யகசிபு, தன் மகனையே கொன்று விட முடிவெடுத்தான். பலவகைகளில் அவனைக் கொல்ல முயன்ற போதும், அந்தப்பக்த பாலகன் ஸ்ரீஹரியாகிய ஸ்ரீமந்நாராயணனால் காப்பாற்றப்பட்டான். அது கண்டு தாங்காத அரசன் பெருங்கோபம்கொண்டு, “உன் ஸ்ரீஹரி எங்கே இருக்கிறான்” என்று கேட்டு, இறுதியாக ஒரு தூணைச் சுட்டிக்காட்டி, அதிலே உன் பகவான் ஹரி இருக்கிறானா என்று ஏளனமாக்கேட்டான். பிரகலாதன்” என் பகவான் இத்தூணில் மட்டுமன்று எல்லாத் துரும்புகளிலும் கூட இருக்கிறான்” என்று கூறியபோது அத்தூணை எட்டி உதைக்க, அதிலிருந்து பகவான் ஸ்ரீநரசிம்மமூர்த்தியாக வெளிப்பட்டு, அந்த கொடுங்கோலனை வதைத்து, தன் பக்தனுக்கு முடிசூட்டி மகிழ்ந்தார் பக்தபிரகலாதனும் பன்னெடுங்காலம் பக்திமானாக சிறப்பாக ஆட்சிசெய்தான் என்பதையும் நாம் அனைவருமே முன்னரே அறிந்துள்ளோம்.

**இரண்யகசிபுவையும் மிஞ்சிய ஈனன்-வேனன் :**

ஆனால் இந்த இரண்யகசிபுவை விடவும் மிகவும் அகங்காரமும், கோபமும் ஒருங்கே பெற்றவனாகவும் இருந்தவன் வேனன் என்ற மற்றொரு அரசன். ஒழுக்கமற்ற குணங்களையும், கேவலமான நடத்தையையும், அவன் கொண்டிருந்தான். அந்தணர்களையும், முனிவர்களையும் மதித்து நடக்காமல், குடிமக்களை விலங்கினும் கேவலமாக நடத்தியவன் அவன். அகந்தையும், கோபமும், காமமாகிய சிறுமையையும் பெற்றிருந்த அந்த வேனன் என்ற ஒரு கொடுங்கோலனைப் பற்றி பொதுவாக நாம் இதுவரை கேள்விப் பட்டிருக்கமாட்டோம்.! அத்தகைய ஒரு அரசனை மகரிஷிகளாகிய பிராமணர்களே எவ்வாறு கொன்று ஒழித்தனர் என்னும் கதையை இப்போது நாம் காணலாம்.! வேனன் இன்று இக்கொடிய அரசனின் கதையை மைத்ரேயமாமுனிவர், விதுரருக்குக் கூறுவதாக அமைந்துள்ளது.

**துருவன் வம்சத்தில் வந்த வீணனே இந்த வேனன் :**

இளம்வயதில் சிற்றன்னையின் நயவஞ்சகப்பேச்சால் மிகவும் மனவருத்தம் அடைந்த துருவன் என்பவன் ஸ்ரீமகாவிஷ்ணுவை நோக்கிக் கடுந்தவம் இயற்றியவன். மகாமுனிவர்கள் எல்லாம் பகவானின் தரிசனத்தைப் பெறுவதற்காக ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடுந்தவம் புரிந்துவந்தனர். அவர்களுக்கு எல்லாம் காட்சி தராத பரம்பொருளான திருமால், துருவனின் விடாமுயற்சியையும், கடுந்தவம் இயற்றிய அவனுடைய மனத்திட்பத்தையும்

அறிந்து வியந்து ஆறுமாதகாலத்திலேயே அந்தத் துருவனுக்குக் காட்சி கொடுத்து, அவன்வேண்டிய வரங்களையும் தந்தார். அப்படிப்பட்ட துருவனின் வம்சத்திலே சில தலைமுறையினருக்குப்பின்னால் அங்கன் என்ற ஓர் அரசன் பட்டத்திற்கு வந்தான். அவன் சிறப்பான முறையில் அரசாட்சி புரிந்து வந்தான். அவனுடைய வம்சம் அங்கவம்சம் என்றும் அழைக்கப்பட்டது.

**அங்கன் செய்த அசுவமேதயாகம் :**

அக்காலத்தில் நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்த அரசர்கள் பலர், தங்கள் காலத்தில் ஓர் அசுவமேதயாகம் செய்வதையும், யாகத்தின் முடிவில் கிடைக்கும் அவிர்பாகத்தை தேவர்களுக்கும், பகவான் ஸ்ரீவிஷ்ணு போன்ற பெருமான்களுக்கும் அளிப்பதில் பெருமை கொண்டிருந்தனர். அதே நேரம் அவர்கள் செய்த அஸ்வமேதயாகத்தின் பயனாக அவர்களுக்கு, அவர்களின் இஷ்ட தெய்வங்கள் வரம் கொடுப்பார்கள், அதை நன்முறையில் பயன்படுத்தும் அரசர்கள், நாட்டில் பலவிதமான வளர்ச்சிகளைச் செய்து நல்லாட்சி புரிந்து வந்தனர். இத்தகைய யாகங்களை முறைப்படிச் செய்வதற்கு ரித்விக்குகள் என்ற வேதம் கற்ற அந்தணர்கள் இருந்தனர்.

**அவிர்பாகம் பெற்றிட அமரர்கள் (தேவர்கள்) வரவில்லை !**

அங்கனுடயை ஆணைப்படி மேற்கூறிய ரித்விக்குகள் முறைப்படியாக, அரசன் விரும்பியவாறு அந்த அஸ்வமேதயாகத்தைச் செய்து முடித்தனர். ஆனால் யாகத்தின் முடிவில் கிடைத்த அவிர்பாகத்தைப் பெற்றுக்

கொள்ளவுமில்லை. அதனால் மிகவும் மனமுடைந்து போனான் அங்கன் என்ற அந்த அரசன். அவன் ரித்விக்குகளிடம் மிகவும் மனம் வருந்தி அதற்குரிய காரணத்தைக் கேட்டான்.

**ரித்விக்குகள் கூறிய பதில் :**

அதற்கு அவர்கள் "அரசே நீங்கள் மிகவும் நல்லவர். பக்திச் சிரத்தையுடன் யாகம் செய்து முடித்து வைத்தீர். அதில் எவ்விதக்குறைபாடும் இல்லை. ஆனால் உமது முற்பிறவியில் ஒரு சாபக்கேடு ஏற்பட்டதால், உமக்குப்புத்திரப்பேறு இல்லாதபெருங்குறை உள்ளது. எனவே நீங்கள் ஒருமகனைப்பெறவேண்டும்... அம்மகனை நீங்கள் அடைய மகாவிஷ்ணுவை நோக்கி ஓர் ஆராதனைப் பூசையை நடத்தவேண்டும் என்று கூறினார்கள்.!

அங்கன் என்ற அந்த ராஜா உடனடியாக மிகப்பெரிய ஹோமகுண்டம் அமைந்தான். பலவிதமான அந்தணர்களை யெல்லாம் அழைத்து, வேதமுறைப்படி மந்திரங்கள் ஓத வைத்து சிறப்பாக யாகத்தை நிறைவேற்றி முடித்தான். அப்பொழுது ஹோமத்தில் இருந்து தூயவெண்ணிற ஆடை அணிந்து, பொன்மயமான ஒரு மாலையைச் சூடியவனாக ஆடவன் ஒருவன் அதிலிருந்த வெளிப்பட்டான். அவன் கையில் தங்கமயமான ஒருபாத்திரத்தில் பாயசம் இருந்தது. அரசனாகிய அங்கனிடம் அந்த ஆடவன், அப்பாயாசத்தைக் கொடுத்து விட்டு, மீண்டும் அவன் அந்த ஹோமகுண்டத்தின் வழியாகவே மறைந்து போனான்.

**வேனன் பிறந்தான் :**

அரசன் மிகவும் நல்லகுணங்களை உடையவன் என்றாலும், அவனுடைய மனைவியான சுனீதை என்பவள் தீமைகளின் இருப்பிடமாவாள். நற் குணங்களும், பக்தியும் இல்லாதவள். இவளுடைய தந்தை மிருத்யு என்பவன். இவன் மிகப்பெரிய அதர்மவாதி. பழிபாவங்களைச் செய்யக் கூடியவன். இவனுடைய மகளான சுனீதைக்கும் அவளுடைய தந்தையின் அதர்ம குணமே அதிகமாக இருந்தது. எனினும் பிள்ளைப்பேறு வேண்டும் என்ற மனநிலையில் இருந்த அரசன் மனம் மகிழ்ந்து, யாகத்தின் மூலம் தான்பெற்ற விஷ்ணுபிரசாதத்தை (பாயசத்தை) அருந்துமாறு அவளுக்குக் கொடுத்தான். அவளும் அதை வாங்கிப் பருகினாள். அதன்பயனாக காலாகாலத்தில் அவள் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு வேனன் என்ற பெயர் சூட்டி வளர்த்து வந்தான் அரசன்.

**தீமைக்குணங்களின் இருப்பிடம் வேனன் :**

வேனன் வளர்ந்தான். தன் தாய்வழிப் பாட்டனாரைப் போன்றே எல்லாத்தீயகுணங்களின் இருப்பிடமாகவும் அவன் இருந்தான். பொதுவாக ஓர் ஆண்மகன் தன்னுடைய தாயைப்போன்ற குணாதிசயங்களைப் பெறுவான் என்றும், ஒருபெண்ணாணவள் தந்தையின் குணாதிசயங்களைப் பெற்றவளாகவும் வளர்வார்கள் என்பது உடற்கூறு ரீதியாகவும், உலகநடைமுறை ரீதியாகவும் நிருபிக்கப்பட்டுவருவதைப் பார்க்கிறோம் அவ்வகையில் சுனிதையின் தந்தையான மரணதேவனாகிய

ம்ருத்தியுவினுடைய குணாதிசயங்களின் கொள்கலனாய், அதர்மத்தின் ஒட்டுமொத்த உருவமாக இருந்தவள் சனீதை. அவளுடைய குணம் இவளுடைய மகனுக்கு அப்படியே வந்தடைந்தது. ஆகையால் வேனனோடு தீமைக் குணங்களும், யாருக்கும் அடங்காத அராஜக போக்கும் வளர்ந்தன. தன்னுடைய சேர்ந்து விளையாடிய பிள்ளைகளை இவன் அடக்கி, தன் வழிக்குக்கொண்டு வர நினைத்தான். சிறுவர்களை எல்லாம் பலிகொடுக்கப் படுவதற்குரிய ஆடுகளாகக் கருதினான். தனக்கு அடங்காமல் எதிர்ப்புத் தெரிவித்த பிள்ளைகளைக் கொன்றுபோட்டான்.

**மக்கள் யாரும் மதிக்கவில்லை. மனமுடைந்தான் அரசன்!!**

கொடூர குணம் கொண்ட அந்த வேனன் அரசனுடைய மகன் ஆகையால், பொதுமக்கள் யாரும் சென்று அரசனிடம் முறையிட முடியாமல் தவித்தனர். மேலும் வேட்டையாடுவதிலும், சாதாரண விலங்குகளைக்கூட கொடூரமாய்க்கொன்று துடிதுடித்துச் சாவதைக்கண்டு வேடிக்கைப்பார்த்தான். ஆகமொத்தத்தில் நாட்டிலும், காட்டிலும் இருந்த அனைவரும் இந்த வேனனைக்கண்டால் பயந்து கொண்டும், அலறி அடித்துக் கொண்டும் ஓடினார்கள்.! அவன்கண்ணில் படாமல் மறைந்து கொண்டனர். தன்னுடைய மகன் செய்து வந்த அராஜகச் செயல்களும், அதர்ம காரியங்களும் மன்னனுக்குத் தெரியவந்தன. திருத்த நினைத்து புத்திமதி கூறிய தந்தையையே அவன் மதிக்கவில்லை. ஆனால், மாறாக அவனுடைய அதர்ம காரியங்கள் பெருகின.

**நாட்டைத்துறந்து காட்டை அடைந்தான் அங்கன் :**

தவமாய்த் தவமிருந்து பெற்ற தன் பிள்ளை இவ்வாறு அதர்மச் செயல்களில் ஈடுபாடு கொண்டவனாக உள்ளானே? அரசனும், அவன் வாரிசுகளும் மக்கள் பணி செய்வதற்காகத்தானே படைக்கப்பட்டவர்கள்.! ஆனால், தன்மகனே மக்களையே கொல்கிறானே! என்று தவித்தான் அரசன். தன்னுடைய மகனையே அடக்கமுடியாத கையாளாகாத அரசனாக அங்கன் அவர்களுக்குத் தெரிந்தான். எனவே பொது மக்களும் அவனை மதிக்கவில்லை. பிள்ளைப்பேறு வேண்டி, பெற்றெடுத்த தனக்கு இப்படிப்பட்ட மகன் பிறந்தானே என்ற மன உளைச்சலுக்கு மன்னன் ஆளானான். அவனுடைய தூக்கம் போயிற்று. ஆனால் துக்கம் பலமடங்காக வளர்ந்தது. தன்னால் தன் நாட்டுமக்களுக்கு நல்லாட்சி தர முடியவில்லையே என்று ஏங்கித் தவித்த மன்னன் தன் பதவியில் மேலும் நீடிக்கவிரும்பவில்லை. எனவே ஒருநாள், இரவோடு இரவாக நாட்டை விட்டு வெளியேறிவிட்டான். காட்டிற்குள் சென்று எவர்கண்ணிற்கும் தெரியாமல் மறைந்தே வாழத்தொடங்கினான்.

**வேனன் அரசன் ஆனான்.!**

அரசன் தன்னுடைய அரசாட்சியைத் துறந்து எங்கோ சென்றுவிட்டார் என்ற செய்தி நாடெங்கும் பரவியது. அரசனைத்தேடியும் கிடைக்காமல் போனதால், நாட்டிற்கு உடனடியாக ஒரு புது அரசன் வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. தன் கணவனைப்பற்றிக் கவலைப்படாமல்

இருந்த அங்கனின் மனைவியான சுனீதை, தன் மகனே அடுத்த அரசனாக முடிசூட்டப்படவேண்டும் என்று விரும்பினாள். ஆனால், அமைச்சர்களுக்கும், அந்தணர்களுக்கும், படைத்தலைவர்களுக்கும், முனிவர்களுக்கும் வேனனை அரசனாக்குவதில் உடன்பாடு இல்லை. அவனை அரசனாக்குவது பாம்பிற்குப் பால்வார்த்து வளர்க்கும் மடமைத்தனமாகிவிடும் என்று மயங்கினர் மகரிஷிகள். அச்சமடைந்தனர் அந்தணர்கள்.

ஆனால், சுனீதையின் தொடர்ந்த வற்புறுத்தலால் அவர்கள் சுனீதையின் கருத்திற்கு இசைந்தனர். மேலும் வேனன் அரசனாவதைத் தடுப்பது அந்த மூர்க்கனுக்குத் தெரிந்து விட்டால், அவன் நம்மைக் கொன்றே போட்டு விடுவானே என்றும் பலரும் நடுங்கி, வேனன் அரசால்வதற்கு இசைந்தனர். எனவே வேறு வழியின்றி வேனன் அந்தநாட்டின் அரசனாக முடிசூட்டப்பட்டான்.

பொதுவாக அரசர்கள் என்பவர்கள் லோகானாம் க்ஷேம தர்ஸின: என்ற கருத்தை மனதில் கொண்டவர்களாக, அதாவது தன் நாட்டில்வாழும் மக்களின் நலன்களைப் பற்றியே நினைப்பவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறுதான் இந்த வேனனுடைய தந்தையான அங்கன் என்பவர் சிறப்பாக அரசாட்சி செய்திருந்தார். ஆனால், அத்தகைய தனக்கு வேனன் என்ற இந்த இழிபிறவி கொண்டவன் மகனாக வந்து வாய்த்துவிட்டானே என்ற ஏக்கத்தாலேயே, காட்டிற்குச் சென்று தனது உயிரை மாய்த்துக்கொண்டார் அங்கன் என்ற வேனனுடைய தந்தை, தந்தையின் அழிவிற்கே காரணமாகிப்போன அவன்

அதைப்பற்றி யெல்லாம் சிறிதும் கவலைப்படவில்லை. இவனுடைய இந்த இழிகுணங்களைக்கண்டும், அதை மாற்றிக்கொள்ளுமாறு வற்புறுத்தாத இவனுடைய தாயாகிய சுனீதை என்பவளும் ஒரு காரணமாவாள்.!

**அரசனுக்குரிய நல்லியல்புகளாக திருக்குறள் கூறுவது :**

ஒருநாட்டை அரசாட்சி செய்கின்ற அரசன், எப்படிப்பட்ட குணாதிசயங்களை உடையவனாக இருக்கின்றானோ, அப்படித்தான் அந்த நாட்டுமக்களும் இருப்பார்கள்.! இதை "மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி" என்ற பழமொழியும் உணர்த்துவதைக்காணலாம். இதைத்தான் சம்ஸ்கிருதத்தில்," யதா ராஜா, ததா ப்ரஜா" என்பார்கள். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற சங்கப்புலவர் ஒருவரின் பாடல் வரியும் இப்பண்பாட்டை உணர்த்துவதாகவுமே அமைந்துள்ளதையும் அறியலாம், ஆக, இவை எல்லாம் ஒரு அரசன் சிறந்தவனாகவும், கோபமும், கர்வமும் இல்லாத அரசனாகவுமே இருக்கவேண்டும் என்னும் கருத்தை வற்புறுத்துவனவாகவே உள்ளன.

**செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமித நீர்த்து [திருக்குறள்.43]**
**காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம். [தி.கு. இறைமாட்சி.]**

என்னும் இவ்விரு திருக்குறள்களும் இக்கருத்துகளையே உணர்த்துவதால், திருக்குறளானது எக்காலத்திற்கும் பொருந்துகின்ற எண்ணற்ற தத்துவக் கருத்துகளின் கருவூலமாக அமைந்திருப்பதைக் காணலாம். இது

தமிழர்களாகிய நமக்கு கிடைத்துள்ள பெருமையாகும். அதாவது, அரசன் ஒருவன் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும், அவனிடத்தில் இருக்கக்கூடாத குணங்கள் என்னென்ன என்பதைப்பற்றியும் திருவள்ளுவர் தனது பொருட்பாலில் விரிவாகக் கூறிச் செல்கிறார். ஓர் அரசனுக்கு, செருக்கு அதாவது தான் என்ற அகங்காரமும், எடுத்ததற்கெல்லாம் கோபம் கொள்கின்ற துர்க்குணமும், மற்றவர் பொருள்களையும் தானே அனுபவிக்கவேண்டும், என்ற காமமும், இருக்கக்கூடாது. அவ்வாறு இத் தீயகுணங்களைக் கொண்டவனாக அரசாட்சி செய்கிறவனுடைய நாடு மேம்பாடு அடையாது. அந்த நாடு ஒரு சுடுகாடாகி நாளடைவில் அழிந்துபோகும் என்று இத்திருக்குறலில் எடுத்துரைக்கின்றார் திருவள்ளுவர்.

இத்திருக்குறளின் உட்பொருள் என்னவென்றால், தன்னிடம் இருந்து ஒதுக்கி வைக்கப்படவேண்டிய இந்தத் தீயகுணங்களை எந்த அரசன் தன்னிடம் பெற்றுள்ளானோ, அவனுடைய நாடும், அவனும் சிதைந்து, சின்னாபின்னமாகி அழிந்து போவார்கள் எனபதே ஆகும்.

**அஹங்கார, ஆணவத்தில் கசிபையும் மிஞ்சியவன் :**

ஆனால் இரண்யகசிபுவை விடவும் மிகதியான அகங்காரமும், கோபமும் ஒருங்கே பெற்றவனாகவும் இருந்தவன் வேனன் என்ற மற்றொரு அரசன். கேவலமான நடத்தையையும், அந்தணர்களையும், முனிவர்களையும் மதித்து நடக்காமல், குடிமக்களை விலங்கினும் கேவலமாக நட்த்தியவன் அவன். அகந்தையும், கோபமும், காமமாகிய

சிறுமையையும் பெற்றிருந்த அந்த வேனன் என்ற ஒரு கொடுங்கோலனைப்பற்றி பொதுவாக நாம் இதுவரை கேள்விப்பட்டிருக்கமாட்டோம்.! அத்தகைய ஒரு அரசனை மகரிஷிகளாகிய பிராமணர்களே எவ்வாறு கொன்று ஒழித்தனர் என்னும் கதையை இப்போது நாம் காணலாம்.!

**சேர்ந்தாரைக் கொல்லும் சிறுமைக்குணங்கள் :**

ஒருவனுக்கு, காமம், குரோதம் லோபம், மோகம், மதம், மாச்சர்யம் என்ற ஆறு குணங்களும் இருக்கக்கூடாது. ஏனென்றால், அவை அது சேர்ந்துள்ள ஒருவனை நிச்சயமாக அழித்து விடும். இந்த ஆறு அகம்பாவிகளையும் எவன் ஒருவன் நீக்கிவிடுகிறானோ, அவன் நிச்சயமாகத் தன்வாழ்க்கையில் எல்லாச் சிறப்புகளையும் அடைவான். மறுபிறவி அற்ற பேரின்பநிலையையும் பெருவான் என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் இந்துமதத்தின் முக்கியத்துவம் ஆகும். ஆனால், அவற்றைத் தன்னிடம் வைத்துக்கொண்டுள்ள அகந்தை கொண்டவன் தானே கண்டிப்பாக அழிந்து போவான் என்பது உறுதியாகும். எனவேதான் கோபத்தை “சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி” என்கிறார் திருவள்ளுவர். இக்கருத்தை வேனன் என்பவனுடைய வரலாறு தெளிவாகக்கூறுகிறது.

**அதர்மம்புரிந்தான்.! ஆபத்தைத்தேடிக்கொண்டான்.!**

அரசனாக வேனன் முடிசூட்டிக்கொண்ட பிறகாவது அவன் நல்லவனானக திருந்தி வாழ்வானோ என்று சிலபேர் எதிர்பார்த்தனர். ஆனால் அது நடக்கவில்லை. மாறாக, வேனனுடைய அநியாயங்களும் அட்டூழியங்களும் பலமடங்கு

பெருகின. நாட்டு மக்களைத் துன்புறுத்தி அவர்களின் செல்வங்களைக் கொள்ளையடித்தான். சாதாரண மக்களிடமும் அளவிற்கதிகமான வரியைக் கட்டாயப்படுத்தி வசூலித்தான். மக்களும், மந்திரிப் பிரதானிகளும் அல்லல் பட்டனர். இவர்கள் இருதலைக்கொள்ளி எறும்பாய்த் தவித்தனர். எனவே பலபேர் அந்த நாட்டை விட்டே புறப்பட்டுப் போய்விட்டனர். அரசனாகிய வேனனோ அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், தன்போக்கில் அராஜக ஆட்சி புரிந்தான். ஆனால் அந்த நாட்டில் திருடர்கள் பயம் மட்டும் அறவே போய்விட்டது. ஏனென்றால், அரசனே மிகப்பெரும் திருடனாக இருந்ததால், சிறிய திருடர்கள் தமக்கு வேலையில்லை என்பதைத் தெரிந்து கொண்டு, அயல்நாடுகளுக்குச் சென்றுவிட்டனர்.

வேனன் அரசாட்சி ஏற்று சிம்மாசனம் அமர்ந்ததைக்கண்ட சிறு குறு திருடர்களும் மற்றவர்களும் இந்த நாட்டை விட்டு ஓடிப்போய் ஒளிந்துகொண்டதை, கொடிய பாம்புகளுக்கு அஞ்சிய எலிகள் எல்லாம் பயந்துபோய் தத்தம் வளைகளுக்குள் மறைந்துகொண்டன என்று உவமைமூலம் விளக்குகிறார் வியாசபகவான். (ஸ்கந்தம் 4. அத்.14 சுலோகம்.3)

மேலும் தப்பித்தவறி அரசனிடத்தில் மாட்டிக்கொண்டால், அவன் ஈவு இரக்கம் இன்றி தங்களைக் கொன்று குவித்துவிடுவான் என்று எண்ணி பயங்கொண்டு நடுங்கினர். மொத்தத்தில் வேனன் ஆகிய அரசன் கரும்புத் தோட்டத்திலே நுழைந்த மதம் கொண்ட யானையைப்போலவும், முதிர்ந்த நெல் வயலில் நுழைந்தழிக்கும் யானையைப்போலவும்,

நாட்டுமக்களையும், செல்வத்தையும் அழித்து வந்தான். தன்நாட்டையும், மக்களையும் அழித்தான். நாட்டின் வளத்தை வீணாக்கி மகிழ்ந்தான்.

**யாகமும், வேள்வியும் செய்யாமல் எச்சரித்தான் வேனன் :**

நாட்டு மக்களை வதைத்ததோடு, நாட்டில் யாரும் வேள்விகளும், யக்ஞ யாகாதிகளும் செய்யக்கூடாது என்றும், நெய், வெண்ணெய் போன்றவற்றை ஆகுதியாக நெருப்பில் இடக்கூடாது என்றும் தடை விதித்தான். எனவே பகவத் ஆராதனைகளும், பூசைமுறைகளும் தடைபட்டன.! ஸ்ரீமந் நாராயணன் உள்ளிட்ட எந்தக் கடவுளர்களையும் யாரும் உபாசிக்கக்கூடாது என்றும், உபாசனை செய்ய நினைப்பவர்கள் தனக்கே எல்லாவிதமான பூசைகளையும் செய்யவேண்டும் என்றும் கட்டாயப்படுத்தினான். நாத்திகம் பேசுவதும் இறுதியில் அழிந்து போவதுமாகிய கொடுங்கோலர்கள் அக்காலத்திலேயே இருந்துள்ளனர் என்பதற்கு இரண்யகசிபுவின் வதையும், வேனனின் கொடூரமான முடிவும் தற்காலத்து அதர்மிகளும் அறிய வேண்டிய ஓர் அரிய படிப்பினையாகும்.

**அந்தணர்கள் உரைத்த அறநெறிகள் :**

ஆனால் வேனனுடைய இந்த அதர்மச்செயல்களை எப்படியாவது தடுத்து நிறுத்தவேண்டும் என்று சிலமுனிவர்களும் அந்தணர்களும் முடிவெடுத்தனர். எனவே அவர்கள் அரசனை அணுகி “நீங்கள் பரமாத்மாவின் மறு அவதாரம். உங்கள் நாட்டை நல்லமுறையில் அரசாட்சி செய்து, கடவுள் மனம் மகிழுமாறு யாகங்களும் வேள்விகளும்

செய்தல் வேண்டும். அப்போது தான் நாட்டில் மழைவளம் பெருகும். மக்கள் இன்பம் அடைவர். சுபிட்ச்சம் அடைவர். எனவே அதர்ம காரியங்களை நிறுத்திக்கொண்டு, தர்மம் தழைக்கச் செயல்படவேண்டும் என்று அறிவுரை கூறினர்."

**வேனன் அந்தணர்களுக்கு உரைத்த அநியாயமான புத்திமதிகள்:**

முனிவர்களும், ரித்விக்குகளும் கூறியதைக் கேட்ட வேனன் கடகட வெனச்சிரித்தான். அவர்களை இழிவாகப் பேசினான்". உங்களுக்கு (அறம்,) தர்மம் என்பது சரியாகத்தெரியவில்லை. ஒன்றும் அறியாத மூடர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். ஓர் அரசன்தான் தன்நாட்டு மக்களுக்குக் கண்கண்ட கடவுள். நீங்கள் கூறுகிற விஷ்ணு, பிரம்மா, சிவன் மற்றும் இந்திராதி தேவர்களும் அரசனாகிய எனக்குள்ளே அடக்கம் ஆவார்கள். கடவுளர்கள் என்று யாரும் பெரிதாக இல்லை. எல்லாக் கடவுளர்களும் ஓர் அரசனின் உடலில் அங்கமாக இறுப்பவர்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? எனவே அனைத்து தெய்வங்களையும் உள்ளடக்கியவனான நான்தான் தெய்வம். இந்த நாட்டிற்கும் நான்தான் கடவுள் என்றான். இவனுடைய அஹங்காரப்பேச்சையும், தானே அனைத்துக் கடவுளர்களையும் தனது அங்கத்தில் (தேகத்தில் நிறைத்துக் கொண்டுள்ள மாபெரும் கடவுள் என்று கூறும் அவனுடைய துர்மதியை வியாசபகவான், 14.ஆம் அத்யாயம் பதம் (ச்லோகம் 26,27. இவற்றில் கூறியுள்ளார். அவன் மமதைச் சொற்களைக்காண்போம்!

**விஷ்ணுர் விரிஞ்சோ கிரிஸ இந்த்ரோ வாயுர் யமோ ரவி:**
**பர்ஜந்யோ தனோத: ஸோமாசதிர அக்னிர் அபாம்பதி**
**ஏதே சான்யே ச விபுதா: ப்ரபபோ வர-ஸாகயோ**
**தே ஹே பவந்தி ந்ருபதே: ஸர்வ-தேவமயோ ந்ருப:**

என்னும் இச்சுலோகங்களில் "பகவான் விஷ்ணு: பிரம்மதேவன், சிவபெருமான், வாயுதேவன், யமன், சூரியதேவன், மழைக்கடவுள், குபேரன், சந்திரன், பூமியின் ஆதிபத்யதேவன், அக்னிதேவன், வருணன், ஆகிய இக்கடவுளர்கள் எல்லாம் தம்மை வணங்குவோர்களுக்கு வரம்தரும் ஆற்றல் பெற்றவர்கள் ஆவர். ஆனாலும், இந்தக்கடவுளர்கள் எல்லாரும் ஒரு அரசனுடைய தேகத்தில், (உடம்பில்) குடியிருப்பவர்கள் ஆவார்கள். எனவே அனைத்துக்கடவுளர்களையும், தங்களது உடம்பிலே பெற்றுள்ள அரசர்கள், அக்கடவுளர்களை விட மிகவும் சக்தியும், சிறப்பும் உடையவர்கள் என்பது ஏன் உங்களுக்குப் புரியவில்லை. ஆகையால் அனைத்து கடவுளர்களும் எனதுடம்பில் அடக்கம். எனவே நானே கடவுள்." – என்று அகங்கார வார்த்தைகளை அந்தணர்களிடமும், ரித்விக்குகளிடமும் கூறி வலியுறுத்தினான் அந்தவேனன்.

எனவே, யாரேனும் யாகங்களோ வேள்விகளோ செய்ய வேண்டுமென்றால், அதில் என்னைத்தான் உபாசிக்க வேண்டும். எனக்குத்தான் பூசை புனஸ்காரங்கள் செய்யப்பட வேண்டும். ! யாகங்களில் அளிக்கப்படுகிற அவிர்பாகங்களை யாரும் எந்தக் கடவுளர்களுக்கும் அளிக்கக் கூடாது. நானே கடவுள் ஆகையால் அவற்றைப் பெறுகிற முழுஉரிமை எனக்குத்தான் உண்டு என்பதை எல்லோரும்' தெரிந்து

கொள்ளுங்கள். இது என் ஆணை அரசகட்டளையான இதை மீறுபவர்களை நான் அழித்துவிடுவேன்.” என்று எச்சரித்து விரட்டிவிட்டான் அந்த வேனன் ஆகிய அரசன். அவனுக்கு அறிவுரை கூறச்சென்றவர்கள் மனக்கலக்கம் அடைந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவந்துவிட்டனர்.

**ஹுங்காரம் செய்து அகங்கார அரசனை அழித்தனர்.!**

ஆயினும் அதர்மச்செயல்களில் ஈடுபட்டுக்கொண்டு, தர்மவான்களுக்கும், தவசியர்களுக்கும், அறம்வழிச் செல்லும் ஆன்றோர்களுக்கும் அவன் இழைக்கும் அநியாயங்களைத் தாங்கிக்கொள்ளமுடியாது என்னும் முடிவிற்கு அவர்கள் வந்தனர். எனவே அந்த அதர்மியான அரக்க குணம்கொண்ட அரசனை எப்படியாவது அழித்தே ஆகவேண்டும் என்று எண்ணினர். அவனிடம் போரிட முடியாது! அதன்மூலமாக அவனை அழிக்கவும் முடியாது ஆகையால் தமக்குள் நீண்ட நெடிய ஆலோசனை செய்தனர். அவ்வரசனை அறம்பாடி அழிக்கவேண்டும் என்று முடிவுகட்டினர்.

நீண்ட நெடிய ஆலோசனைக்குப்பிறகு அனைவரும் பிருகுமுனிவரின் தலைமையில் ஒன்றுகூடினர். மேலும், யாகத்திலேயும், தவத்திலேயே ம் சிறந்த முனிவர்களை அழைத்து, அந்த யாகவேள்வியில் சமிக்கைகளை இட்டு, பெரும் அறவேள்வி நடத்துவது என்றும், வேள்வியின் இடையிடையே ஹுங்கார மந்திரங்களை ஓதி, அதை அரசனுக்கு எதிராக ஏவி, பயன்படுத்தி, அவன் அழியவேண்டும் என்று சாபம் இட்டு, அதன்மூலம் அந்த வேனனை அழிக்கவேண்டும் என்றும் திட்டமிட்டனர்.

**ராமாயணத்தில் ஹுங்கார மந்திரம் செய்திட்ட விசுவாமித்திரர்:**

இந்த ஹுங்கார மந்திரம் என்பது தவசீலர்களாலும், மகரிஷிகளாலும் ஓதப்படும் மந்திரம் ஆகும். இது மிகவும் வல்லமை படைத்தது. அரக்கர்களையும், தம்மீது தாக்குதல் நடத்தும் எதிரிகள் மீதும் இவர்கள் இம்மந்திரத்தைப் பயன்படுத்தினால், அது எதிரிகளை விரட்டும் சக்திபடைத்தது. தனது யாகத்தைக்காப்பாற்றிக்கொள்ள ராமனோடு லட்சுமணனையும் அழைத்துச் சென்ற விசுவாமித்திர மகரிஷியை தாடகை என்ற அரக்கி எதிர்த்தாள். அவளுக்குச் சொந்தமான தாடகா வனத்தில் அத்துமீறி அவர்கள் நுழைந்ததாகக் குற்றம் சாட்டிய அவள், அம்மூவரையும் விழுங்கிவிடப்போவதாகக் கூறிக்கொண்டு ஆக்ரோஷமாய் வந்தாள். அப்போது விசுவாமித்திர மகரிஷி ஹுங்கார மந்திரத்தை அவள்மீது ஏவினார் என்றும், ராமலட்சுமணர்களுக்கு ஜயம் உண்டாகட்டும் என்றும் வாழ்த்தினார் என்பதையும், வால்மீகி ராமாயணத்தில் சுட்டிக்காட்டிப் பாடியுள்ளார்.. எனவே, தாடகையால் ஒன்றும் செய்யமுடியாமல் பயந்து நடுங்கினாள்.! அவள் வலிமைகுறைந்து, ஆணவம் அகன்று சக்தியற்றுப்போனதால் தன்னை மறைத்துக்கொண்டாள் என்பதையும், அதன்பிறகே இராமனோடு போர்புரிந்து மாண்டாள் என்பதையும் ஸ்ரீமத்ராமாயணத்தின் பாலகாண்டப்பகுதியிலிருந்து அறிய முடிகின்றது.

**நந்திக் கலம்பகம் :**

இதே போல தமிழ்க்காவியவகையிலேயும் அறம்பாடி அழித்தல் என்ற ஒரு செய்தி மிகவும் பிரசித்தி பெற்றதாக உள்ளது. நந்திவர்மன் என்ற அரசனை வீரத்தால் வென்று அழிக்கமுடியாது என்று உணர்ந்துகொண்ட எதிரிகள், கலம்பகம் என்ற சிற்றிலக்கியவகைப் பாடல்களில் அறம் பாடுதலை மிகுதியாகப்பயன்படுத்தி, பாடிக்கொண்டே செல்ல, அந்த நந்தி வர்ம பல்லவனுடைய வீரமும் சக்தியும் குறைந்து கொண்டே வந்தது என்றும், நந்திக்கலம்பகம் என்னும் அந்தப்பிரபந்தம் பாடி முடிக்கப்பட்டபோது நந்திவர்மன் உயிர்விட்டான் என்றும், பின்னர் பகைவர்கள் அவன் நாட்டை அபகரித்தனர் என்பதையும் அறிய முடிகின்றது. நந்திக்கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும் என்னும் வழக்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் இன்றைக்கும் நிலைத்து நிற்பதால் இது உறுதியாகிறது.

**ஹுங்காரம் ஓதும் முறை :-**

இப்படிப்பட்ட சக்திவாய்ந்த இந்த ஹுங்கார மந்திரத்தினை தவசியர்களும், மகரிஷிகளும் தாம்செய்த யாகங்களில் வேதங்களை முறைப்படி ஓதி, இடையிடையே ஹுங்கார மந்திரங்களை ஓதினார்கள். அவனை அழிப்பதற்கு அம்முனிவர்கள் பயன்படுத்திய மந்திர மொழிகள், ஸ்ரீமத்பாகவதத்தின், ஒன்பதாம் காண்டம் 14.ஆம். அத்தியாயம் 31,32,33,34. ஆகிய நான்கு ச்லோகங்களிலும் கூறப்பட்டுள்ளன.

**ஹன்யதாம் ஹன்யதாம் ஏஷ பாப: ப்ரக்ருதி – தாருண**

**ஜீவன் ஜகத் அஸாவ் ஆஸி குருதே பஸ்மாத் த்ருவம்!! (31)**

அதாவது இச்சுலோகங்களில், "உலகத்தினர்க்கு அனைத்துவிதமான மங்களங்களையும், செல்வங்களையும் கொடுப்பவரான பரமபுருஷ பகவானாகிய விஷ்ணுவையே இவன் மதிக்கவில்லை. இவனும் இவனுடைய ஆட்சியும் தொடர்ந்தால், வேனன் இந்த உலகத்தில் உள்ள அனைத்துவகையான மனிதப் பிறவிகளையும், ஜீவராசிகளையும் கொன்று அழித்து சாம்பலாக்கி விடுவான். எனவே யாகத்து வேள்வியே, வேள்வியன் அக்கினி பகவானே,, வேள்வியின் மூலகாரணனான, பகவான் விஷ்ணுவே இவனைக் கொன்றுவிடுங்கள், இவனைக் கொன்றுவிடுங்கள் (ஹன்யதாம் ஹன்யதாம்) என்று அனைவரும் ஒருசேர, ஆவேசமாகக்கத்தினர்!" ஹூங்காரம் செய்தனர்.

இதன் விளைவாக வேனனுடைய உடல் வலிமையற்றுப்போனது. அவனுடல் நன்றி மறந்த செயலுக்காக, பகவான் முனிவர்களின் கோரிக்கையினை ஏற்றார். வேனன் என்ற அந்த வீணன் இறந்தான். யாகம் செய்தோர் அனைவரும் அவனுடைய மரணத்தைக்கேட்டு மிகவும் மகிழ்ந்தனர். நாட்டு மக்கள் அனைவரும் நிம்மதிப்பெருமூச்சு விட்டனர். தங்களின் துன்பம் நீங்கியது என்று பெரிதும் மகிழ்ந்தனர். முனிவர்களையும், வாழ்த்தி, நன்றி கூறினர். பரமபுருஷராகிய பகவானை நெஞ்சார வணங்கினர்.

**தனயன் உடலைப் பாதுகாத்தாள் தாய் :**

அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் திளைத்திருந்தாலும், தனது மகன் வேனனின் அழிவு அவள் தாயான சுனீதைக்குப்பெரும் அதிர்ச்சியாய் இருந்தது. பிள்ளை பாசத்தினால், அவள் தன் மகனின் அட்டூழியங்களைப் பொறுத்துக்கொண்டிருந்தாள். ஆனால் வேனன் இறந்துவிட்டதால், அவனுக்கு வாரிசுகள் யாரும் இல்லாமல்போனதாலும் மிகவும் மனம் வருந்திய அவள் தனது வித்யாபலத்தின் காரணமாக, தனது மகனின் உடலைப் பாதுகாத்து வந்தாள்.

**அரசனை இழந்த நாட்டின் நிலை :-**

கொடுங்கோலனாக இருந்த வேனன் இறந்து விட்டான் என்பதைக்கேள்விப்பட்டவுடன், அந்த அரக்ககுணம் கொண்ட அரசனுக்குப்பயந்து நாட்டை விட்டு ஓடிச்சென்றுவிட்ட திருடர்களும் கயவர்களும் மீண்டும் அந்த நாட்டிற்குத் திரும்பிவிட்டனர். கண்ட கண்ட இடங்களில் சுற்றித்திரிந்து, கொள்ளையிலும், பாதகச்செயல்களையும் செய்தனர். திடீரென ஆங்காங்கே புழுதிப்புயல் வீசியது. அது இயற்கையின் சீற்றத்தால் எழுந்தது அன்று. கயவர்களும், திருடர்களும், கொள்ளையர்களும் ஆங்காங்கே தத்தம் அதர்ம தொழில்களில் ஈடுபட்டு, மக்களைத் துன்புறுத்தி, அனைவரும் சேர்ந்து ஓடியதால் உண்டான செயற்கைப் புழுதிப்புயல் அதுவாகும்.. இவர்களின் அட்டூழியத்தால் நாடே அவதியுற்றது. அல்லல் பட்டது. சுடுகாடாய்

மாறிக்கொண்டிருந்தது. எனவே இதற்கு முடிவு கட்டவேண்டிய நிலைக்கு அந்த முனிவர்களும் தவசியர்களும் தள்ளப்பட்டனர். எனவே அவர்கள் வேனனுடைய தாயான சுனீதையிடம் சென்று, அவள் காப்பாற்றி வைத்திருக்கும் அவளுடைய மகனின் உடம்பிலிருந்து வாரிசை உருவாக்கித்தருகிறோம் என்றும், அவள் காப்பாற்றி வைத்திருக்கும் வேனனின் பிரதேத்தைத் தருமாறும் கேட்டனர். அதைக்கேட்ட சுனீதை பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த தன் மகனின் உடலை அவர்களிடம் கொடுத்தாள்.

சிறந்த அரசனாக விளங்கிய அங்கனின் வம்சமானது, வேனனுடன் முடிவடைந்து விடக்கூடாது என்னும் உயர் நோக்கத்திலேயே முனிவர்கள் இக்காரியத்தில் ஈடுபட்டனர். வேனன் உடலைக் கடைந்து வம்ச விருத்தியை உண்டாக்கலாம் என்று நினைத்தே, அவர்கள் வேனனின் தொடைகளை மிகுந்த விசையோடு கடைந்தனர். ஆனால் அவ்வாறு கடையப்பட்ட போது, அதிலிருந்து எதற்கும் பயன்படாத ஒரு வீணன்தான் தோன்றினான். அவன் மிகவும் குள்ளமான வடிவமும், கறுத்த உடலோடும் வந்தான். பாகுகன் என்ற பெயரைப்பெற்ற அவன், பருத்து கறுத்த கன்னங்கள், சிவந்த கண்கள், பரட்டைத்தலையோடு காட்சியளித்தான். அவன் உருவத்தைப்பார்த்து அதிர்ந்து போயிருந்த முனிவர்களைப்பார்த்து, அவன்" நான் என்னசெய்யவேண்டும் என்று கேட்டான்"

**"நிஷாத "என்றனர் முனிவர்கள்! வேடனாகித் திரிந்தான் பாகுகன்:**

பாகுகன் கேட்ட கேள்விக்கு நிஷாத என்று பதில் கூறினார்கள் முனிவர்கள். அதாவது அவர்கள் அங்கே உட்கார் என்ற பொருளில் நிஷாத என்று கூறினார்கள். ஆனால் நிஷாத என்ற சொல்லிற்கு வேடன் என்ற ஒரு பொருளும் உண்டு. அந்த பாகுகன் தன்னை வேடனாகிப்போ என்று முனிவர்கள் கட்டளை இட்டார்கள் என்று நினைத்துக் கொண்டதால், அவர்கள் கூறியதை ஏற்று நடக்கநினைத்தான் அதனால், ஒரு வேடனாக, கையில் வில்லையும், அம்பையும் ஏந்தியவனாக மாறிப்போனான். அதற்குமேல் அங்கு நின்றிருக்கமுடியாமல், அவன் தன்போக்கிலே சென்றுவிட்டான்.!

**நிஷாதர்கள் வம்ச தொடக்கம் :**

மன்னன் இல்லாமல் தத்தளிக்கும் நாட்டைக் காப்பாற்றவும், நாட்டை ஆட்சி செய்வதற்காகவும், முனிவர்களின் பெரும் முயற்சியால் உண்டாக்கப்பட்ட அம்மனிதன், அதற்குண்டான தகுதியை இழந்தவனாகிய உருவத்தோடும், பண்புகளும் இல்லாமல் தோன்றிவிட்டதால் அவனிடம் மேற்கொண்டு முனிவர்கள் எதையும் கூறவில்லை. அவனும், தன் வில்லோடும், அம்பறாத்தூணியோடும் காட்டை நோக்கிச் சென்றுவிட்டான். வேடர்களின் குலத்தொழிலைச் செய்து கொண்டு, ஆங்காங்கே திரிந்துவரத் தொடங்கினான். இந்தப் பாகுகன் ஆகிய நிஷாதன் என்பவனுடைய வம்சத்தில் தோன்றியவர்களே, பிற்காலத்தில் நிஷாதர்கள் என்ற ஒரு பிரிவினராக, கூட்டம் கூட்டமாக ஆங்காங்கே திரிந்து பிறகு

வேடரினத் தலைவர்களாகவும், விளங்கிவந்தனர். ஆங்காங்கே குருநிலமன்னர்களாகவும் அரசாட்சி புரிந்தனர்.

**தோளைக் கடைந்தனர்., தோன்றினர் இருவர் :**

சிறந்த மன்னனாக விளங்கிய அங்கனுக்கு அவனுடைய மகனாகப் பிறந்த வேனனின் அதர்மச்செயல்களால் வாரிசுகள் இல்லாமல் போய்விடக் கூடாது என்ற பெரிய நோக்கத்தில், முனிவர்கள் அடுத்ததாக வேனனுடைய பிரேதத்தின் தோள்களைக்கடைந்தனர். இப்போது அவர்கள் மகாவிஷ்ணுபகவானை மனதார வேண்டி, தங்கள் முயற்சிக்குரிய நல்லபயனைத் தரவேண்டும் என்ற பிராத்தனையுடன், அவனது புஜங்களை மிகுந்தவிசையோடு கடைந்தார்கள்.! அவர்களின் முயற்சி வீண்போகவில்லை.! அப்போது வலது தோளில் இருந்து ஓர் ஆணும், இடது தோளில் இருந்து ஒரு பெண்ணும் உற்பத்தியானார்கள். முனிவர்கள் எதிர்ப்பார்த்ததைப்போலவே அவர்கள் தெய்வீகத் தோற்றத்தோடு காணப்பட்டார்கள்.! ஆண்மகன் சாட்சாத் ஸ்ரீமகாவிஷ்ணுவின் அவதாரம்போலவும், பெண்ணானவள் ஸ்ரீமகாலட்சுமித்தாயாரைப்போலவும் விளங்கியதால் மனம் மகிழ்ந்த மகரிஷிகள், அந்த ஆண்மகனுக்கு பிருது என்றும், பெண்ணிற்கு அர்ச்சிஸ் என்றும் பெயர் சூட்டினார்கள்.

**பிருது என்னும் புகழ்பெற்ற வம்சம் தோன்றியது :**

பின்னர் அம்முனிவர்கள் திருமால்போன்றும், திருமகள் போன்றும் காட்சியளித்த அந்த இருவருக்கும் திருமணம் செய்து வைத்தனர். அரசனின்றி அல்லல் பட்ட நாட்டிற்கு ஏற்ற மன்னன் இவன்தான் என்று முடிவு செய்த அம்மாமுனிகள்

அவனை நாட்டிற்கு அரசனாக முடிசூட்டி மகிழ்ந்தார்கள்.! மக்கள் மகிழ்ச்சிக்கடலில் திளைத்தனர். வானுலக தேவர்களும் வாழ்த்தொலி செய்து மகிழ்ந்ததோடு. நேரிலேயே வந்து பிருதுவிற்கு நல்லாசி வழங்கி, பரிசுப்பொருள்களையும் கொடுத்துவிட்டுச் சென்றனர். பின்னர் இந்த வம்ச அரசர்கள் பிருது வம்சம் என்ற சிறப்பான பாரம்பரியம் உடையவர்களாக பாரதநாட்டைப் பலகாலம் ஆண்டனர்.!

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறை என்று வைக்கப் படும்.! [தி.குறல்.381. இறைமாட்சி]**

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப, மன்னன் ஒருவன் மாண்புடன் நாட்டை அரசாட்சி செய்தால், அவன் அம்மக்களுக்குக் கடவுளாகவே கருதப்படுவான் என்பதும், முறைமாறி அதர்மச் செயல்புரிந்தால், அறவோர்களாலேயும், அறக்கடவுள் மூலமாகவுமே அழிக்கவும் படுவான் என்பதையும் வேனன் என்ற இவ்வரசனின் கதையிலிருந்து நாம் அறிகிறோம்.! அரசாட்சி புரிபவர்களுக்கு இருக்கவேண்டிய குணநலன்கள் யாவை என்று திருக்குறள் கூறுவதால், இதைப்போன்ற சம்ஸ்கிருத நூல்களின் தத்துவங்களையும் எடுத்துரைக்கும் ஒரு நூலாக நமது திருக்குறள் அமைந்துள்ளது நமக்கெல்லாம் பெருஞ்சிறப்பாகும். பண்பற்ற அரசர்களின் சோகமுடிவுகள், தற்போதைய அரசியலார்களுக்கும் ஓர் எச்சரிக்கை மணியாகும்.

**மேலும், அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை –**

**[தி.குறள்.55. கொடுங்கோன்மை]**

மேலும், ஸ்ரீமத்பகவத் கீதையில், அர்ச்சுனனுக்கு உபதேசங்களைக் கூறிவருகிற பகவான் ஸ்ரீகிருஷ்ணர், கர்மயோகம் என்ற இரண்டாவது அத்தியாயத்தின் அறுபத்தாறாம் ஸ்லோகத்தில்

**நாஸ்தி புத்திரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பாவநா**

**ந சாபாவயத: சாந்திரசாந்தஸ்ய குத: ஸுகம்.**

என்றும்,

அறுபத்தேழாம் ச்லோகத்தில்

**இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோ[அ]நு விதீயதே!**

**ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர் நாவமிவாம்பஸி!!**

என்றும் கூறியுள்ள உபதேச மொழிகள் இங்கு நினைவு கூறத்தக்கவையாகும். அதாவது, “தன்னுடைய மனதையும், புலன் உணர்வுகளையும் வெற்றிகொள்ளாத ஓர் அரசனிடம் நிலையான புத்தி இருக்காது. நிலையான புத்தி இல்லாதவனுக்கு மனதில் எந்த நற்பண்புகளும் தோன்றாது. நற்பண்புகளும் நன் நடத்தையும் அற்றவர்களுக்கு, தமது வாழ்க்கையில் அமைதி கிடைக்காது. எனவே அமைதி அற்ற அவனுக்கு மனதில் சுகம் கிடைக்காது. சுகம் கிடைக்காத அவன் விரைவில் சீரழிந்து போவான். என்ற கருத்தை வலியுறுத்துவதை அறியலாம்.!

ஏனென்றால், நீரில் ஓடிக்கொண்டிருக்கும் ஓடத்தை காற்றானது தனது வேகத்திற்கும், திசைக்கும் இழுத்துக் கொண்டு செல்வதைப்போல, போகங்களில் சிக்கித்தவிக்கும் ஒருவனுடைய மனது, அந்த போகத்தின் பலனால், ஆக்கிரமிப்புச் செய்யப்படுவதால், அது அவனுடைய

புத்தியைக் கெடுத்து விடுகிறது என்பதை அர்ச்சுனா! நீ அறிந்து கொள்! என்ற பகவான் கிருஷ்ணர் இதில் கூறுகிறார்.

அவ்வகையில் அரசபோக வாழ்க்கையில் ஈடுபட்டு, அநியாயங்களைச் செய்ததால் தான், இரண்யகசிபுவும், வேனனும் தங்களது நெறிமுறைகளை மீறிவாழ்ந்து, பகவானின் துவேஷத்திற்கு ஆளாகி மாண்டனர். எனவே எந்த நிலையிலேயும், பகவத் துவேஷமும், அதாவது கடவுள்மறுப்பும், அக்கடவுளையே நிந்தனை செய்வதும் கூடாது. பாகவத துவேஷமும், பண்பற்ற செயல்களுமம் அந்தணர்கள், மற்றும் அறவோர்களின் துவேசமும். (வெறுப்பு) கூடாது என்பதை அறிந்து செயல் படவேண்டும்.

**தற்காலவேனன்போன்றோர் அறியவேண்டிய வேதவாக்கு:-**

ஆனால் நம்மிடையே பெரும்பாலோர் இதை அறிந்திருந்தும், வெளிப்பார்வைக்கு மேற்கொண்ட கொள்கைகளை உடையவர்களாக நடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தமிழக மக்கள் அனைவரும் அறிந்த உண்மையாகும்.. அவர்கள் கடவுளை வணங்கும் பக்தர்களையும், பக்தியோகத்தில் மூழ்கி இருக்கும் பாகவதப்பெருமக்களை இழித்தும் பழித்தும் பேசுதலை தமது வழக்கமாகவும், அவர்களின் சீரற்ற வாழ்க்கைக்குத் தேவைப்படும் சில்லறைக் காசுகளுக்காகவும். இதை ஒரு தொழிலாக மேற்கொண்டு வாழ்கிறார்கள். தெய்வம் கண்டிப்பாக நின்றே கொல்லும் என்பதை அவர்கள் அறியவேண்டும். அவ்வாறு இல்லாது போனால் வேனனுக்கு ஏற்பட்ட விபரீத முடிவே காலப்போக்கில் இவர்களுக்கும் காத்துக்கொண்டிருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம்

தேவையில்லை. இத்தகைய தனிமனித ஒழுக்கம் சாதாரண ஒரு குடிமகன் முதற்கொண்டு அரசாட்சி புரியும் அனைவருக்குமே பொதுவானதாகும்.

இத்தகைய மனப்பான்மை உள்ளவர்கள் இனிமேலாவது திருந்தவேண்டும். அனைவருக்கும் மேலான ஒரு பரப்பிரம்மமாக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உள்ளார் என்பதை அறிந்து நடத்தலே இந்த நானில மக்களுக்கும் நமக்கும் நன்மை பயக்கும் வழிமுறையாகும்.

எனவே –

**ஸ்ரீமந் நாராயணாய சரணௌ சரணம் பிரபத்யே**

**ஸ்ரீமதே நாராயணாய நம:**

என்னும் துவயமந்திரத்தின் பொருளுக்கு ஏற்றவாறு, திருமகள் கேள்வனான ஸ்ரீமந்நாராயணனே நாம் அடையவேண்டிய ஆறு என்னும் உபாயத்தையும் அவனுக்குத் தொண்டுசெய்து வாழ்தலே உபேயம் என்பதையும் அறிந்து செயல்பட்டு, பகவானின் திருவடிப்பேற்றை அடைவோமாக!!



## 6. சதிதேவி தியாகமும், தட்சன் வதையும்

**மாமனார் தட்சனும், மருமகன் சிவனும் :-**

ஸ்ரீமத்பாகவதம் ஒருவர் மற்றொருவரை வீணாக, துவேஷித்தல் தேவை இல்லாமல் அவரை எப்போதும் தரக்குறைவாகப் பேசுதல் ஆகியவை தேவையற்ற குணங்களாகும் என்று பறைசாற்றுகிறது. பொதுவாகவே ஒரு வீட்டின் மாப்பிள்ளை என்றால், அவருக்குப்பலவிதங்களிலும் சீரும் சிறப்பும் செய்யவேண்டும் என்பதே உலகநியதியாகும். இந்த நியதியானது வானுலக தேவர்களுக்கும், அவர்களின் தலைவர்களாக விளங்கும் கடவுளர்களுக்கும் கூடப் பொருந்துவதாகும்.! அப்படிப்பட்ட எதிர்ப்பார்ப்பிலே வாழநினைக்கின்றவர்களை, மாமனார்கள் மதிக்காமல் போனால், அதனாலே அக்குடும்பத்தில் மிகப்பெரும் துன்பநிகழ்ச்சிகளே தொடரும் என்பதும் உலகநியதியாக தற்போதும் தொடர்வதைக் காணலாம். ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் பகவான் அதர்மத்தின் இருப்பிடமாகத்திகழ்ந்த அசுரனும், தனது மாமனுமாகிய கம்சனை அழித்ததை பாகவதக்கதையால் விரிவாகக் கண்டோம். அதேபோல சைவசமயத்தின் வழிபடு கடவுளான பரமசிவன், தன்னுடைய மாமனாராகிய தட்சனை வதம் செய்து நீதியை நிலைநாட்டியதையும், தன்உரிமையைப் பெற்றதையும் ஸ்ரீமத் பாகவதக் கதையால் அறியமுடிகிறது.

தட்சன் ஆகிய அரக்க அரசன், தன்னுடைய மருமகனாக விளங்கிய சிவபெருமானுக்குக் கொடுக்கவேண்டிய மதிப்பையும் மரியாதையையும் தராமல் போனதோடு, பலருடைய முன்னிலையிலும் தனது மருமகனாகிய

சிவபெருமானை இழித்தும், பழித்தும் பேசி, நிந்தனை செய்துகொண்டே இருந்ததால், அந்த தட்சன் என்பவனுடைய ஆயுளை சிவபெருமான் எவ்வாறு முடித்தார், என்பதையும் பாகவதக்கதை எடுத்துரைக்கிறது. இக்கதையின் விரிவைத் தன்னுடைய ஸ்ரீமத்பாகவதத்தில், வியாசபகவான் நான்காம் ஸ்கந்தத்தில் எடுத்துரைத்துள்ளார்.

**ஸ்ரீமத்பாகவதத்தின் கதைப்போக்கு :**

ஸ்ரீமத்பாகவதம் என்ற பாகவதபுராணத்தை அருளிச் செய்தவர் வியாசபகவான் ஆவார். மகாபாரதப் போரில் குருவம்சத்தின் அனைத்து சந்ததியினரும் அழிந்துபோனார்கள் என்றாலும், பாண்டவர்களில் அருச்சுனனின் பேரனானபரீட்சித்து என்பவன் மட்டும் ஸ்ரீகிருஷ்ணருடைய அருளால் காப்பாற்றப்பட்டான். ஒரு முனிபுத்திரனின் சாபத்தால், ஏழுநாட்களில் தான் இறந்துவிடுவோம் என்பதை அறிந்த பரீட்சித்து மகாராஜனுக்கு வியாசருடைய மகனான சுகப்பிரம்மம் (கிளிமுகம்கொண்டவர்) இப்பாகவதக்கதைகளைக் கூறி, தர்மத்தை எடுத்துரைத்து பகவான் திருவடி நிழலை அடைவதற்கு வழிவகுத்துக்கொடுத்தார். இந்தப்புனிதமான பாகவதக் கதையை சுகமுனிவர் பரீட்சித்திற்கு எடுத்துரைத்தபோது, அங்கே பலமுனிவர்கள் எல்லாரும் அமர்ந்திருந்து, அதைக்கேட்டனர். அவர்களுள் சூதபௌராணிகர் என்பவரும் ஒருவர். ஒருமுறை நைமிசாரண்யத்தில் கூடியிருந்த முனிசிரேஷ்டர்கள் பலரும் அந்தச் சூதபௌராணிகரைக்கேட்டபோது, தான் சுக மகரிஷி வாயிலாக முன்பு கேட்ட பாகவதத்தையும், அதன்

கிளைக்கதைகளையும் அனைவருக்கும் கூறிக்கொண்டு வந்தார் சூத பௌராணிகர்..

புராணத்தின்போக்கு இவ்வாறு இருந்தாலும், இடையிடையே வேறு பலமுனிவர்கள், பகவானின் அவதாரபுருஷர்களும், மற்றவர்களுக்குக் கூறும்படியாகவும் சில புராணக்கதைகள் அமைந்துள்ளன. அவ்வகையில் தட்சன் என்ற தன் மாமனாரை அவருடைய மருமகனான பரமசிவன் வதம்செய்த இந்த வரலாற்றை மைத்ரேயர் என்ற மகரிஷி, விதுரருக்குக் கூறியதாக ஸ்ரீமத்பாகவதம் நான்காம் ஸ்கந்தம்(காண்டம்) 4.ஆம் அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது இக்கதையையும், இதில் பொதிந்துள்ள பல்வேறு பக்தி நிலைகளையும் காண்போம்.

**தட்சன் வரலாறு :**

பிரம்மதேவனின் மானச புத்திரர்களில் தட்சன் என்பவரும் ஒருவராவார். இவர் ஒரு பிரஜாபதியாவார். திருமண வயதடைந்து, மனுவின் மகளாகிய பிரசூதி என்பவளை மணம்செய்து கொண்டார். இவர்களுக்குப் பதினாறு பெண்கள் பிறந்தனர். திருமண வயதடைந்தபோது, இவர்களில் பதின்மூன்றுபேரை தருமர் (மாபாரதத்தின் தருமர் அல்லர்). என்பவர் திருமணம் செய்துகொண்டார். மீதியுள்ள மூன்று பெண்களில் ஒருத்தியான சதி என்பவளை பரமசிவன் திருமணம் புரிந்துகொண்டார். இந்தப்பரமசிவனாகிய பெருமானை நம்முடைய இந்துமதப்பிரிவில் மும்மூர்த்திகளில் ஒருவராகக் கருதப்படுபவர். ஆக்கல், காத்தல், நீக்கல் என்ற முத்தொழில்களில் இவர் நீக்கல்தொழிலைச் செய்துவரும்

கடவுளாவார். எனவே தட்சனும், சிவபெருமானும் உறவுமுறையில் மாமனார் மருமகன்களாவார்கள்.!

**சிவபெருமான் மீது தட்சன்கொண்ட விரோதம் :**

தன்னுடைய தந்தையான பிரம்மதேவனின் விருப்பத்திற்கு இணங்க, தன் மகளாகிய சதியை சிவபெருமானுக்கு மணம் முடித்துக்கொடுத்தான் தட்சன். எனினும் சிவபெருமானைப்பற்றிய நல்ல எண்ணமோ நல்மதிப்போ தட்சனுக்கு இல்லை. எனினும் அதைச் சிவபெருமானும் கண்டுகொள்ளாமல் இருந்தார்.

மரீசி என்பவர் பிரம்மாவினுடைய மற்றொரு புதல்வர் ஆவார். ஒருசமயம், அவருடைய தலைமையில், பல முனிசிரேஷ்டர்கள் ஒன்று சேர்ந்து, சத்ரயாகம் என்னும் யாகத்தை நடத்த நினைத்தனர். ஆகையால், அந்த யாகத்தில் பங்கு பெறுவதற்காக, யாகத்தின் முடிவில் அளிக்கப்படும் அவிர்பாகத்தைப் பெறுவதற்காகவும், பிரம்மன், பரமசிவன், மற்றும் இந்திராதி தேவதர்களும் வரவழைக்கப்பட்டிருந்தனர். தட்சனுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்ததால், அவனும் யாகசாலைக்குள் நுழைந்தான்.

**மருமகனாக இருந்தும் மரியாதை தரவில்லையே !**

தட்சன் மிகுந்த தேஜசான உடலைக்கொண்டவன். பார்ப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் நல்லதோற்றம் உடையவன். எனவே தன் அழகின்மீதும், உடலில் பெற்றுள்ள தேஜசாலும் சற்று கர்வம் கொண்டவனாகவும் தட்சன் விளங்கினான். அத்தகையவனான தட்சன் யாகசாலையின் உள்ளே நுழைந்தபோது யாகசாலையில் இருந்த அனைவரும்

எழுந்து நின்று, அவனை வரவேற்றனர். ஆனால் பிரம்மதேவனும், சிவபெருமானும் மட்டும் எழுந்து நிற்கவில்லை. வரவேற்கவும் இல்லை. இதைத் தனக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதினான் தட்சன். எனினும் பிரம்மதேவன் தன்னுடைய தந்தை என்பதாலும், உலகின் குரு என்று அவன் நினைத்ததாலும், அவரை வணங்கிவிட்டு, கோபமாக தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். தனக்கு மருமகனாக இருந்தும், தன்னை வரவேற்காமல் அலட்சியம் செய்தார் பரமசிவன் என்று நினைத்த அவனுக்குக் கோபம் தலைக்கேறியது. தன்னை அவமதித்த அந்தப்பரமசிவனைத் தான் சபையினர் முன்பாக அவமதித்து தூற்றவேண்டும் என்றும் நினைத்தான்.

**தட்சன் கோபமும், சிவ நிந்தனையும் :-**

சிவபெருமான் நடத்தையால் சினம்கொண்ட தட்சன், சபையைப்பார்த்து "சபையோர்களே ! இதோ அமர்ந்திருக்கும் கர்வம் கொண்டவன். இவன் கண்களைப்பாருங்கள்! குரங்குக்கண்ணையுடையவன். இவனுக்கு, மான்போன்ற அழகிய கண்களை உடைய என்மகளைத் தெரியாமல் திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். எனக்கு முதலில் இருந்தே இவனைப் பிடிக்காது. என்தந்தையின் விருப்பத்திற்காக நான் இத்தகைய அநியாயத்தைச் செய்துவிட்டேன். இவன் அகங்காரமும், அயோக்கியத்தனமும் நிரம்பியவன். சுடுகாட்டில் அலைந்து திரிந்துகொண்டு, பூதகணங்களோடு சேர்ந்துகொண்டு பித்தன்போல் ஆடுகிறான். சுடுகாட்டுச் சாம்பலை எவனாவது உடம்பில் பூசிக்கொள்வானா? ஆனால் இந்தப்

பைத்தியக்காரன் அதைப்பூசிக்கொள்வதோடு, மண்டை ஓடுகளைக் கழுத்தில் மாலையாகச் சூட்டிக் கொண்டிருப்பவன். சிவன் என்றால் மங்களகரமானவன், மங்களம் பொருந்தியவன் என்று அர்த்தம் கூறுகிறார்கள். ஆனால் இவன் அமங்களம் நிறைந்தவன். இவன் அசிவன்." என்று கோபாவேசத்தில் உரத்த குரலில் இடி இடியாக இழி சொற்களை வீசினான்.

**தட்சன் கொடுத்தசாபம்:**

தனது மாமனாராகிய தட்சன் இவ்வளவு கடுமையான சொற்களைப்பேசி, தன்னை அவமதித்ததைக்கேட்டும் பரமசிவன் வாய்திறக்கவில்லை. அமைதியாகவே இருந்தார். எத்தகைய அசம்பாவிதமும் வேண்டாம் என்று பொறுமையுடன் சிவன் இருந்தபோதும், தட்சனின் கோபாவேசம் குறையவில்லை. எனவே அவ்வேள்விச் சாலையில் கிடைத்த தண்ணீரைக் கையில் எடுத்து தேவகணங்களிலேயே மிகவும் தாழ்ந்தவனாகிய இவனுக்கு இன்று முதல் யாரும் அவிர்ப்பாகம் தராமல் புறக்கணிக்கப்படுவானாக! என்று நீரைத் தெளித்து சாபமிட்டுவிட்டான். அப்போது அங்கிருந்த சிலபேர்கள் மட்டும் தட்சனிடம் சென்று, சினத்தைக் கைவிட்டுச் சாந்தம் அடையுமாறு வேண்டினார்கள். ஆனால், அதற்குக் கட்டுப்படாத தட்சன், அதற்குமேலும் அங்கிருக்கப் பிடிக்காமல், யாகச்சாலையில் இருந்தும் வெளியேறிவிட்டான்.

**நந்திதேவன் இட்டசாபம் :**

மரீசி முனிவரின் தலைமையில் நடைபெற்ற அந்தச் சத்திரயாகத்தில் பங்கேற்க பரமசிவன் வந்தபோது, அவருடைய வாகனமான நந்திதேவரும் வந்திருந்தார். தன்னுடைய தலைவனாகிய சிவபெருமான், தட்சன் பேசிய பேச்சுக்களையும், அவன் கொடுத்த சாபத்தையும் கண்டும் கேட்டும் ஏதும் எதிர்வினைப்புரியாமல் இருந்தாலும் நந்திதேவரால் அதைப்பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. அவர்மிகுந்த கோபம் கொண்டு, “இந்த தட்சன் தன்னுடைய அழகில் கொண்ட கர்வத்தின் காரணமான சிவபெருமானைச் சபித்தான். எனவே இவனுடைய தேஜஸ் நிறைந்தமுகம் இவனுக்கு நிலைக்காமல்போகட்டும். இவனுக்கு ஆட்டுத்தலை முகம் உண்டாகட்டும், அவன் பேதயுக்தி உள்ளவனாக மாறி, தத்துவத்தை அறியாத சண்டாளன் ஆகட்டும்'' என்று கோபத்துடன் ஒரு சாபம் இட்டான். அதோடு அடங்காமல், இவ்வளவு நடந்தும், இந்தச்சபையில் இருந்த வேதம் ஓதும் ரித்விக்குகளாகியஅந்தணர்கள், தட்சனைத்தடுக்காமல், எதையும் கண்டுகொள்ளாமல் இருந்தனர் எனவே அவர்கள் இனிமேல் தங்கள் ஆத்ம சொரூபத்தை மறந்து, வயிற்றுப்பிழைப்பிற்காக வேதம் ஓதி பிழைக்கும் இழிநிலையை அடையட்டும்” என்றும் சாபங்கள் இட்டான்.

**பிருகுமுனிவன் இட்ட மறுசாபம் :**

இவற்றை எல்லாம் பார்த்த சபையினர் அனைவரும் மிகுந்த பயம் கொண்டனர். ரித்விக்குகள் அலறியடித்து ஓடினர். அப்போது அந்த யாகத்தில் இருந்த பிருகுமுனிவர்'', சிவபெருமானை வணங்குபவர்கள் வேத விரோதிகள்

ஆகட்டும். அவர்கள் பாஷண்டர்களாக மாறட்டும். ஜடாமுடி கொண்டவர்களாகவும், மயானச்சாம்பலை உடலில் பூசிக்கொண்டு, எலும்புமாலைகளைத் தரித்தவர்களாகவும் ஆங்காங்கே அலைந்து திரியட்டும்" என்று மறுசாபம் கொடுத்தார். இவற்றையெல்லாம் கண்ட சிவபெருமான் மிகுந்த வருத்தம் உடையவராக, யாகச்சாலையிலிந்த தனது பூதகணங்களோடு வெளியேறினார். தனது இருப்பிடமான கைலயங்கிரியை அடைந்தார்.

**தட்சன் செய்த யாகங்கள் :**

தட்சன், பரமசிவன் இவர்களுக்குள் ஏற்பட்ட விரோதமும் துவேஷமும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. அப்போது தன் மகனான தட்சனை பிரஜாபதிகளின் தலைவனாக நியமித்தார் பிரம்மதேவர். ஏற்கனவே, கர்வமும் செருக்கும் கொண்டிருந்த தட்சனின் அங்காரமுஆணவமும் மேலும் அதிகம் வளர்ந்தது. தனது புகழை மேலும் நிலைநாட்டிக்கொள்வதற்காக வாஜபேயயாகம் ஒன்றைச் செய்ய விரும்பினான் தட்சன். வாஜபேய யாகம் என்பது மிகவும் சிறப்புடைய ஒருயாகம் ஆகும். நூறு அசுவமேத யாகங்களைச் செய்ததற்கு ஒப்பானது ஒரு வாஜபேயயாகம். இத்தனைச் சிறப்புடைய யாகத்தின் போதும் தன்மகளான சதியையும், மருமகனான பரமசிவனையும் யாகத்திற்கு தட்சன் அழைக்கவில்லை. யாகத்தின் முடிவில் கொடுக்கப்படவேண்டிய அவிர்பாகத்தையும் சிவபெருமானுக்கு தட்சன் வழங்கவில்லை. யாகத்தைச் செய்து முடித்துவிட்டு, மற்றவர்களுக்கெல்லாம்

அவிர்பாகத்தைத்தந்து உபசரித்து அனுப்பிவைத்தான் தட்சப்பிரஜாபதி!

**பிரகஸ்பதிசவ யாகம் :**

வாஜபே யாகத்தைத் தொடர்ந்து பிரகஸ்பதிசவ யாகம் என்னும் மற்றொரு யாகத்தையும் செய்து முடிக்க நினைத்த தட்சன், அதற்கு முனிவர்களையும், தேவர்களையும், தேவரிஷிகளையும் ஒருசேர வரவழைத்தான். அதுமட்டுமன்றி, கந்தர்வர்கள் உள்ளிட்ட இந்திராதி தேவர்களையும் கட்டாயமாகப்பங்கேற்கச் செய்து, அவர்களுக்கு மிகப்பெரும் அளவில் பொன்னையும், விலைமதிப்பற்ற பொருள்களையும், ஆபரணங்களையும் பரிசாகக் கொடுத்து சிறப்புகள் செய்தான். எனவே அனைவரும் தத்தமது கணவன்மார்களோடு பட்டுச் சேலைகளை அணிந்து கொண்டும், பாங்கான அணிகலன்களால் தங்களை அலங்கரித்துக்கொண்டும் அந்தப் பிரகஸ்பதிசவம் என்ற யாகத்தில் பங்கேற்றுவிட்டு, தத்தமது விமான வாகனங்களில் சென்றவண்ணமும், வந்தவண்ணமுமாக இருந்தனர். எல்லாம் இடங்களிலும் அந்த யாகத்தைப்பற்றிய மகிழ்ச்சிகரமான செய்திகளே பிரதிபலித்தன.

**சதிதேவி அறிந்தாள், சங்கடம் அடைந்தாள் :**

தந்தையான தட்சனின் யாகத்திற்கு எல்லோரும் செல்வதைப்பார்த்த சதிதேவி மிகுந்த மனவருத்தத்திற்கு ஆளாகி அவதிப்பட்டாள். தன் தந்தை, தன்னையும் தன் கணவரையும் முறைப்படி யாகத்திற்கு

அழைத்திருக்கவேண்டும்! ஆனால் அவன் உலகநியதியை மறந்த தந்தையாகையால் அதைப்பற்றிக்கவலைப்படாமலே அனைத்து காரியங்களையும் செய்து வந்தான். தன் சகோதரிகள் அனைவரும் தங்களது கணவன் மார்களோடு வந்திருப்பார்கள். அவர்களை எல்லாம் பார்த்துப்பேசிவிட்டு வரலாம் என்று அவளுடைய பெண்மனம் விரும்பிற்று. எனவே அவள் தன் கணவனிடம் சென்று, “பிரபோ! என்தந்தையாகிய தட்சன் தங்களை மதிக்காமல் இந்த யாகங்களைச் செய்கின்றான். அது தவறுதான். இருந்தாலும், ஒருவர் தன்னுடைய நண்பர், ஆசிரியர், கணவன், தந்தை போன்றவர்கள் நடத்தும் நற்காரியங்களுக்கு அவர்கள் அழைக்கவில்லை என்றாலும் கலந்துகொள்ளலாம் என்று ஒரு நியதி உள்ளது. எனவே என் தந்தை என்னை அழைக்கவில்லை என்றாலும், அந்த யாகத்திற்குச் சென்று வரவேண்டும் என்று எனக்கு ஆசையாய் உள்ளது. அங்கே வந்திருக்கும் என் சகோதரிகளையும், என்தாயாரையும் நான் சந்தித்து வருகிறேன். அவர்களைப்பார்த்தே பலநாட்கள் ஆகிவிட்டன. எனவே தாங்கள் வரவிரும்பவில்லை என்றாலும், தயவுசெய்து என்னை அனுப்பிவையுங்கள்.” என்று வேண்டிநின்றாள் சதிதேவி.!

**சங்கரன் சதிதேவிக்கு உரைத்தவை :**

அதற்குச் சிவபெருமான் தேவி, தாட்சாயணி! “உறவினர்கள் நடத்தும் நற்காரியங்களுக்கு அழைப்பு இல்லை என்றாலும் செல்லலாம் என்பது உண்மைதான். ஆனால் அங்கு சென்றபிறகு, அவர்கள் மதிப்புக் கொடுக்கவேண்டும் வரவேற்று உபசரிக்கவேண்டும். உன் தந்தையோ என் மீது

மிகுந்த விரோதமே கொண்டுள்ளான். எனவே நீ அந்தயாகத்திற்குச் சென்றாலும் உனக்கு அங்கீகாரம் கிடைக்காது. உன்னை அவன் வரவேற்று உபசாரம் செய்யமாட்டான். மேலும் தற்போது அவனுக்கு பிரஜாபதி பதவியும் கிடைத்துள்ளதால், அவன்செருக்கு சிரசுவரை ஆட்சி செய்கிறது.. எனவே நீ அங்கு செல்லாமல் இருப்பதே சிறந்தது" என்று அறிவுரையும் ஆலோசனையும் கூறினார் பரமசிவன்.

**பாசம் வென்றதால் பயணப்பட்டாள் சதிதேவி !**

தன்கணவராகிய சிவபெருமான் கூறியது சரியானதுதான் என்று கருதினாள் சதிதேவி. எனினும் அங்கு தன்னுடைய சகோதரிகள் வந்திருப்பார்கள்.! தனது தாயும் தன்னைக்கண்டால் பெரிதும் மகிழ்ச்சி அடைவாள்.! அதே நேரத்தில் தனது தந்தையின் தவற்றையும் சுட்டிக்காட்டி, கணவருக்கும் தந்தைக்கும் சமரசம் உண்டாக்கலாம் என்றும் திட்டமிட்டாள் அவளுடைய பாசம் வென்றது. பதியின் (கணவனின்) சொல் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது. எனவே தன் கணவனிடம் தான் செல்வதற்கு அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுநின்றாள்.

**அனுமதி அளித்தார் ! துணைவியை இழந்தார்.!!**

சதியினுடைய விருப்பத்திற்கு அதற்குமேலும் தடைபோட பரமசிவன் விரும்பவில்லை. எனவே மனைவிக்கு அனுமதி கொடுத்ததோடு. அவளைத் தனது வாகனமான ரிஷபத்தின் மீதேற்றி, அவளுடன் மணிமான், மதன் என்ற இருவரின் தலைமையில் பூத கணங்கலையும் துணைக்கு அனுப்பி வைத்தார். பயம் அற்றுப் போய்வருமாறும் கூறினார்.

சதிதேவி அந்த யாகசாலையின் உள்ளே நுழைந்தாள். யாகசாலையில் வேதஒலிகள் ஒலித்த வண்ணமாகவே இருந்தது. தன்மகள் உள்ளே நுழைந்ததைப்பார்த்தும் பார்க்காதவன்போலவே அவளை அலட்சியம் செய்தான் தட்சன். தட்சனுடைய கோபத்தை அறிந்த அங்கிருந்த மற்றவர்களும் அவளை வரவேற்கவில்லை. என்றாலும், அவளுடைய அன்னையும், சகோதரிகளும் அவளைக்கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். இன்முகத்தோடு வரவேற்று ஓர் ஆசனத்தில் அமரச்சொன்னார்கள். ஆனால் சதிதேவி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எந்த இருக்கையிலும் அமரவில்லை!

**சதிதேவி கொண்ட கோபம் :**

அவள் எந்த இருக்கையையும் ஏற்றுக்கொள்ளாததன் காரணம், அவள் உடலும், உள்ளமும் பதைபதைத்ததாள். அவளால் இருப்புக்கொள்ள முடியவில்லை. அதுமட்டுமல்லாமல், தன்கணவனுக்குக் கொடுக்கப் படவேண்டிய அவிர்ப்பாகமும் கொடுக்கப்படாமல் அந்த யாகம் நடந்து வருவதைக்கண்டு மனம் கொதித்தாள்.! அவளுடைய கோபத்தைக்கண்ட அவர்களோடு வந்த பூதகணங்கள் தட்சனைக்கொன்றாலும் தவறில்லை என்று நினைத்து, அவனைக்கொல்லமுன்னோக்கிச் சென்றனர். அதைத்தடுத்திட்ட சதி,தன் தந்தையிடம் பெருங்கோபம் கொண்டவாறு கேள்விக்கணைகளை வீசினாள்.

**உலக நியதியை உணராத உன்மத்தன் !**

"தந்தையே நீ நடத்தும் இந்த வேள்வியால் நீ அடையப்போகும் பயன் என்ன? முறைப்படி நடத்தப்படாத

இவ்வேள்வி பயனற்றுத் தான்போகும். என் கணவனை எல்லோரும் வணங்கிப் போற்றுகிறார்கள் ! நீ ஒருவன்தான் அவரை மதிக்காமலும், கொடுக்கவேண்டிய மரியாதையைத் தராமலும் நடந்து கொள்கிறாய். மாமனார் ஒருவன், தனது மருமகனுக்குத்தான் முதல் மரியாதைத் தரவேண்டும் என்ற அடிப்படை உலக நியதியை அறியாத மூடன் நீ! அதைப்புரிந்து கொள்ளாமல், மங்களங்களின் இருப்பிடமான எனது கணவனை நீ இகழ்கிறாய். அவர் பெயரை உச்சரித்தாலே எல்லா பாபங்களும் அகன்றுவிடும். அத்தகையவரை நீ வீணாகபகைத்துக்கொண்டு செயல்படுகிறாய்! நீ மிகபெரும் கர்வி! உலகத்தின் சம்பிரதாயங்களையும் அறியாதவன்"– என்று பலவாறு இடித்துரைத்தாள்.!

**சதிதேவி கொடுத்திட்ட சாபம் :**

அத்தகைய உனக்கு மகளாக பிறந்ததையும், வாழ்வதையும் நினைத்து நான் வெட்கப்படுகிறேன்.! வேதனை அடைகிறேன் !! உனக்குப்பெண்ணாகப் பிறந்துவிட்ட பாபத்தைப் போக்கிக்கொள்ள நினைக்கிறேன். என்று கூறி, தன் ஆடைகளைக்களைந்து விட்டு, காவி ஆடையை அணிந்துகொண்டாள்.! உன் சரீரபந்தத்தால் கிடைத்த இந்த உடலை நான் இப்போதே அழித்துக் கொள்ளப்போகிறேன் என்று கூறி, தண்ணீரால் தன்னைத்தூய்மை செய்துகொண்டு, வடக்குதிசை நோக்கி ஆசமனம் செய்த நிலையிலே அமர்ந்து கொண்டாள்!..

**சதிதேவி காவியாடை அணிதலும், காவியின் அடிப்படை நோக்கமும் :**

தாட்சாயணி ஆகிய சதிதேவி தன் தந்தையையும் சாபமிட்டு அழிக்கக்கூடிய சக்தி படைத்தவள். ஆனால்,

அதைச் செய்யவிரும்பாத சதிதேவி, தனது தந்தையின் பாகமான தனது உடலைத்துறப்பதே சிறந்தது என்று தீர்மானித்துக்கொண்டாள்.! அதற்கு ஏற்றவாறே, அவள் செயல்பட்டு, காவியாடையைத் தரித்துக்கொண்டாள்.! ஏனென்றால், ஓர் ஆத்மா, தன்னுடலைத் துறக்கவேண்டு மென்றால்,! அதன் அறிகுறியாக, காவியாடையை முதலில் அணிதல்வேண்டும் என்று ஒரு நியதி உண்டு. காவியாடை அணிதல் என்பது, வைராக்கியத்தின் அடையாளமாகக் கருதப்படக்கூடியதாகும். இல்லறமாகிய கிருகஸ்தத்தைத் துறக்கநினைத்து சந்யாசதர்மம் மேற்கொள்ள நினைப்பவர்களும் அதற்காகவே காவியாடையைத் தரித்துக் கொண்டு, தன்னைப் புனிதமாக்கிக் கொள்கின்றனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. அதற்கு ஏற்றவாறே சதிதேவி செயல்பட்டால், இதன் காரணமாகவே, சம்சாரசாகரமாகிய கடலில் இருந்து விடுபடவேண்டும் என்று நினைக்கும் துறவியர்கள், முதலில் காவியாடையை இன்றும் முதலில் உடுத்திக்கொள்கின்றனர்.!!

**சதிதேவியின் முடிவு :**

தன் கணவனின் சொல்லைக் கேளாமல் வந்ததற்காகவும், வருந்தி கண்ணீர் விட்டாள். தனது மகளின் முடிவை அறிந்தும் தட்சன் அதைத்தடுக்கவில்லை. அவளைத்தடுத்தால், தடுக்கும் தங்கள்மீது பாய்ந்து, தங்களையே தட்சன் அழித்துவிடுவான் என்று நினைத்த எல்லோரும் சதியைத் தடுக்காமலே இருந்து விட்டனர். சதிதேவியும் தன்னுடையயோக சக்தியினால் தீயை உண்டாக்கி, அதில் இறங்கி, தன்னுடைய பூதவுடலை அழித்துக்கொண்டாள்.!

**பூதகணங்களின் செயலும், பிருகுரிஷி உண்டாக்கிய ரிபுக்களும்:**

சதிதேவி தன்னுடலைத் தியாகித்து விட்டதைக்கண்ட பூத கணங்கள் மிகுந்த கோபம் கொண்டன. தட்சனையும் அவன் யாகத்தையும் அழித்துவிடவேண்டும் என்று நினைத்தனர். ஆனால் அங்கிருந்த பிருகுமகரிஷி, பூத கணங்களைத் தடுக்கவேண்டும் என்று நினைத்து மந்திரங்கள் கூறி, யாகத்தில் ஹோமம் செய்தார். உடனே அந்த யாகத்தில் இருந்து ரிபுக்கள் என்ற தேவர்கள் ஆயிரக்கணக்கில் தோன்றினார்கள்.! அவர்கள் பரமசிவனின் பூத கணங்களைத் தடுத்து நிறுத்தி, தாக்குதல் நடத்தினர். இதைச் சற்றும் எதிர்பாராத பூதகணங்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. எனவே பூதகணங்கள் அனைத்தும் பயம்கொண்டவர்களாக, கைலாயம் நோக்கி ஓடிப்போனார்கள்.

**நடந்ததைக் கூறினார் நாரதமகரிஷி !**

அப்போது நாரத மகரிஷி கைலாயம் விரைந்தார். சிவபெருமானைச் சந்தித்து, தட்சன் வேள்வியில் சதிதேவிக்கு நடந்த அவமானத்தையும், அதனால் சதி,தன்னுடலைத் தியாகம் செய்து விட்டதையும், பிருகுமகரிஷியால் யாகவேள்வியில் இருந்து உண்டாக்கப்பட்ட ரிபுக்களால், பூதகணங்கள் துரத்தப்பட்டதையும் எடுத்துரைத்தார்.

**வீரபத்திரன் உண்டானான் :**

நாரதர் கூறியதைக்கேட்ட பரமசிவன் மிகுந்தகோபம் கொண்டார். உடல் நடுக்கமுற, உதடுகள் துடித்தன. ஆத்திரத்தின் உச்சகட்டத்திற்குச் சென்று சிவபெருமான் தன்

ஜடாமுடியைப் பூமியில் ஓங்கி அடித்தார். அதிலிருந்து நீண்டதொரு தலைமுடி பூமியில் விழுந்தது. அது உடனே மனித உருவம் கொண்டு மடமடவென வளர்ந்தது. மிகுந்த உயரம் கொண்டு தோன்றிய அவனுக்கு பரமசிவனைப் போன்றே மூன்று கண்கள் இருந்தன. ஆயிரம் கரங்கள் பெற்றவனாக அவன் இருந்தான். கருமையான நிறமும், சிங்கப்பற்களும் கொண்டவனாக விளங்கிய அவன் சிவபெருமானின் புத்திரனாகக் கருதப்பட்டான். சிவபெருமானைப்போலவே கபாலமாலையைக் கழுத்தில் தரித்தவனாகத்தோன்றிய அவன் கைகளில் பலவிதமான போர்க்கருவிகள் நிறைந்து காணப்பட்டன. அனைத்திற்கும் மேலாக எமனையும் வெற்றிகொள்ளத்தக்கதான சூலாயுதம் ஒன்றையும் ஏந்தியிருந்த அவன் வீரபத்திரன் என்று அழைக்கப்பட்டான்...

**வீரபத்திரனுக்கு சிவபெருமான் இட்ட ஆணைகள் :**

தன் அம்சமாகத் தன்னால் உருவாக்கப்பட்ட வீரபத்திரனின் தோற்றத்தைப் பார்த்து திருப்தி அடைந்தார் சிவபெருமான். அதே நேரத்தில் வீரபத்திரன் சிவனை வணங்கி, தான் என்னசெய்யவேண்டும் என்பதை ஆணையிடுமாறு அவரை வேண்டிநின்றான். அவனிடம், "நீ என் அம்சமாகத்தோன்றியவன். என்னை அவமதித்தும், சதியின் உடல் அழிவதற்குக் காரணமாகவும் இருந்த தட்சனை அழிக்கவேண்டும். அவன் செய்யும் யாகத்தைத் தடுத்துநிறுத்தி, துவம்சம் செய்து மீளவேண்டும். என்னை அவமானப்படுத்திய அந்த தட்சனுக்கு உடந்தையாக

இருந்தவர்களையும் நீ தண்டித்து வரவேண்டும்'' என்று ஆசிகலந்த ஆணையைக் கொடுத்தார் சிவபெருமான்...

**காற்றென விரைந்துசென்றான் கடல்போல ஆர்ப்பரித்தான்!**

சிவபெருமானின் ஆணையைப்பெற்ற வீரபத்திரன், பூதகணங்களோடு தட்சனின் யாகசாலையை அடைந்தான். அவனும் பூதகணங்களும், கடலின் பேரொலிபோல் ஆர்ப்பரித்துக்கொண்டு உள்ளே நுழைந்தனர். அதைக்கண்ட யாகசாலையில் இருந்த அனைவரும் பயம் கொண்டு அலறினார்கள். அதைக்கண்ட தட்சன் மனைவியரும் மற்ற பெண்களும் தட்சன் தன் அகங்காரத்தால் செய்ததவறுக்குத் தண்டிக்கப்படப்போவது உறுதி என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர். சொந்த மகளின் அழிவிற்குக் காரணமான தட்சன் அழிவது தான் நல்லது என்று நினைத்தனர். உள்ளே நுழைந்த பூதகணங்களும், வீரபத்திரனும் தங்களது கையில் பலவகையான ஆயுதங்களையும் ஏந்திக்கொண்டு, யாகசாலையின் நான்கு பக்கங்களையும் வளைத்துக் கொண்டனர். உத்வேகத்துடன் சென்ற சிலர் முதலில் அங்கு பிருகுமுனிவர் இயற்றிக்கொண்டிருந்த யாக அக்கினியை அழித்துவிட்டனர். அதனால் யாகம் தடைப்பட்டது. சிலர் யாகசாலையின் தூண்களை முறித்து விட்டனர். அதனால் யாகசாலை நிலைகுலைந்தது. பாத்திரங்கள் நொறுக்கப்பட்டன. மகரிஷிகள் துன்பப்படுத்தப்பட்டனர்.

**தட்சனுக்கு ஏற்பட்ட துயரமுடிவு :**

இந்தத் தாக்குதல், யாகத்திற்கு வந்திருந்த தேவகணங்களைப் பெரிதும் கலங்கச்செய்தது. மேலும்

பூதகணங்கள் அவர்களை துரத்திக்கொண்டே சென்று துன்பம் விளைவித்தனர். அடித்துத்துன்புறுத்தியதால், பயம் கொண்ட தேவர்கள் ஓடிச்சென்றனர். யாகசாலையினுள் நுழைந்த மணிமான் என்ற பூதங்களின் தலைவன் பிரதான ரித்விக்காக அங்கே இருந்து கொண்டு மந்திரங்கள் ஓதிய பிருகுமுனிவரைக்கட்டிப்போட்டான். மேலும் அவர்கையில் இருந்த ஹோமம் செய்யும் வீசைகளை வீரபத்திரன் பிடுங்கிக்கொண்டான். சண்டீஸ்வரர் சூரியனைக் கட்டிப்போட்டுவிட, நந்திகேசர் பகன் என்பவனைக் கட்டிப்போட்டதோடு, அவனுடைய கண்களையும் தோண்டி எடுத்துவிட்டார். பூஷா என்பவனுடைய பற்களை உடைத்துச் சிதைத்தார் வீரபத்திரன். அதோடு நில்லாமல்,, பிருகுமுனிவருடைய தாடியையும் மீசையையும் பிய்த்துப் போட்டான் அந்த வீரபத்திரன். இவற்றையெல்லாம் கண்ட மற்ற ரித்விக்குகளும், வேதம் ஓதிய விற்பன்னர்களும், மீதமிருந்த தேவர்களும் மூலைக்குஒருவராய்த தப்பி ஓடிப்போனார்கள். ஆனால் பூதகணங்கள் அவர்களை விடாமல், பெரிய பெரிய கற்களை எடுத்து அடித்து அவர்களைத்தாக்கியதால் அனைவரும் படுகாயம் அடைந்தனர். மொத்தத்தில் யாகசாலையானது அமளிதுமளிப்பட்டு போர்க்களம் போல் காட்சி அளித்தது.

**தட்சன் வதம்:**

கோபம் அடங்காத வீரபத்தின், தட்சனைக் கீழே தள்ளி, அவன் மார்பின் மேல் ஏறி அமர்ந்துகொண்டான். தன்னிடம் இருந்த ஒரு கூர்மையான கத்தியைக்கொண்டு அவன் கழுத்தை அரிந்து கொன்று விடமுடிவெடுத்தான். ஆனால்

அவனுடைய கழுத்தானது கத்தியாலும், வேறெந்த கூர்மையான ஆயுதத்தாலும் வெட்டமுடியாதபடியாக இருந்தது. யோசித்துப்பார்த்த வீரபத்திரன் தன்னுடைய கைகளில் இருந்த கூர்மையான நகங்கலைக் கொண்டு தட்சனின் கழுத்தைத் திருகி எடுத்து, சற்று எரிந்து கொண்டிருநத் யாகத்தீயிலே போட்டுவிட்டான். சற்று நேரத்தில தட்சன் தலை பொசுங்கிப்போனது. தட்சன் அழிந்தான்.! அந்தயாகசாலைக்குப் பூதகணங்கள் தீயிட்டுக் கொளுத்தியதால், அது முழுமையாக எரிந்து சாம்பலானது.

**பிரம்மதேவர் கைலாசபயனம் :**

தட்சன் செய்த யாகசாலையில் இருந்து தப்பித்துச் சென்ற சில தேவர்களும் ரித்விக்குகளும் நேராக பிரம்மதேவனிடம் சென்று நடந்தவற்றைக்கூறி அரற்றினார்கள். பதட்டத்துடன் புலம்பிநின்றனர். அதைக் கேட்ட பிரம்மதேவர், தட்சன் சிவபெருமானுக்குக் கொடுக்கவேண்டிய அவிர்பாகத்தைத் தராமல் புறக்கணித்ததோடு, அவரிடம் பகைமைகொண்டும், அலட்சியப்படுத்தியதாலும் நேர்ந்த விபரீதம். அதனால் உண்டான துன்பம் இது. மேலும் சிவபெருமானின் மனைவியான சதிதேவியின் துயர முடிவிற்கும் தட்சனே பொறுப்பாவான். எனவே பரமசிவன் பெருங்கோபம் கொண்டு வீரபத்திரனை உருவாக்கியதால் நேரிட்ட அவலமே இந்த தட்சன் வதையாகிய சம்ஹாரம் என்று அனைவரிடமும் எடுத்துரைத்தார் பிரம்மதேவன்.

**தேவர்கள் முறையீடும் பிரம்மதேவன் பதிலும் :**

எனவே யாகத்தில் கலந்துகொண்ட அனைவரும் அங்குநடந்தவற்றை நினைத்துவருந்தினர். எனவே

அனைவரும் சிவபெருமானைச் சரண் அடைவதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறினார். மேலும் இதற்கு விரைவில் ஒரு தீர்வு காண்பதே சிறந்தது என்று நினைத்த அவர்கள் பிரம்மதேவனிடம் சென்று தட்சன் நடத்த நினைத்த யாகத்தின் அசம்பாவித நிகழ்ச்சிகளைக் கூறினார்கள். அனைத்தையும் கேட்டபிரம்மா, சிவபெருமானின் சிறப்புகளையும், ஆற்றல்களையும் எடுத்துரைத்து, அவரை ஒதுக்கிவிட்டு தக்கன் அந்த யாகத்தைச் செய்யநினைத்தான். சிவபெருமான் மட்டுமன்றி தாமரைத்திருவடிகளை உடையவரான ஸ்ரீமகாவிஷ்ணுவும் இந்த யாகத்திற்கு அழைக்கப்படவில்லை. இவர்களை ஒதுக்கிவிட்டுச் செய்யப்படும் எந்த யாக யக்ஞாதிகளும் ஒருபயனையும் தராது என்பனை நீங்கள் உணரவேண்டும். எனவே சிவபெருமானைச் சாந்தப்படுத்த வேண்டியதே நமது முதற்கடமை. எனவே எல்லோரும் என்னுடன் வாருங்கள் என்று, அனைவரையும் அழைத்துக்கொண்டு கைலாயம் சென்றார் பிரம்மதேவர்.

**கைலாயக்காட்சிகளைக் கண்டு ரசித்தார் பிரம்மா!**

கைலாயம் சென்றபோது வழியில் பல அழகிய, அற்புதக்காட்சிகளையும், இயற்கை வளங்களையும் கண்டவாறே அவர்கள் கைலாயங்கிரிக்குச் சென்றனர். வழியில் குறுக்கிட்ட குபேரனின் அளகாபுரிப்பட்டத்தின் சிறப்புகளையும் கண்டவண்ணம் சென்ற அவர்கள், சௌந்திகம் என்னும் வனத்தை அடைந்தனர். அங்கு ஓடிக்கொண்டிருந்த அழகிய நீரோடையின் அருகில், நூறுயோசனை நீளமும், எழுபத்தைந்து யோசனை அகலமும் கொண்ட ஓர் ஆலமரத்தைக்கண்டனர். பரமசிவனின்

கைலாயமலையின் அழகியகாட்சிகளைப் பதினான்கு ஸ்லோகங்களில் மிக அற்புதமாக வர்ணனை செய்துள்ளார் வியாசபகவான்.! அத்தகைய கைலாயத்தில், ஓர் ஆலமரத்தடியில் பரமநிஷ்டையில் ஆழ்ந்திருந்தார் பரமசிவன். அவரும் அப்போது காவியாடை தரித்திருந்தார்..! மகரிஷிகளும் முனிவர்களும் அவரைச் சுற்றி அமர்ந்திருந்தனர், குபேரன் பரமசிவனை உபாசித்துக் கொண்டிருந்தான். சிவபெருமான் அனைவருக்கும் யோகமார்க்கத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார்.

**கைலாயத்தில் பிரம்மாவும், சிவனிடம் வேண்டுகோளும் :**

அப்போது அங்குவந்த பிரம்தேவரைப்பார்த்த முனிசிரேஷ்டர்களும் தேவர்களும், எழுந்துநின்று பிரம்மதேவரை வணங்கினார்கள். பிரம்மாவின் வருகையை அறிந்த சிவபெருமானும், எழுந்து அவரை வரவேற்று உபசரித்தார். அதை ஏற்றுக்கொண்ட பிரம்மதேவர், தன்னுடன் வந்ததேவர்கள் மற்றும் ரித்விக்குகளோடு அந்த ஆலமரத்தின் அடியிலேயே அமர்ந்தார். பின்னர், பிரம்மதேவன் சிவபெருமானைப்பார்த்து, "தட்சன் தன்னுடை மாயையை வெல்லமுடியாமல் அதற்கு ஆட்பட்டு, அதன் காரமணாகவே தங்களுக்குத் துன்பங்கள் கொடுத்தும், அவமதித்தும் தொல்லைகள் கொடுத்தான். எனவே அவனை மன்னித்து அவனுக்கு உயிர்ப் பிச்சை கொடுக்கவேண்டும் என்று வேண்டினார். மேலும் பிருகுமுனிவருக்கு தாடியும் மீசையும் முளைக்கவேண்டும். பகனுக்குக் கண்பார்வை வழங்கவேண்டும் (சத்ரயாகத்தின் போது கண்ஜாடை காட்டி தட்சனைத்தூண்டிவிட்டவன்) பூஷாவிற்குப் பற்கள் முளைக்க

அருள்புரிவதோடு, பூதகணங்களின் தாக்குதலின்போது காயம் பட்ட அனைவரும் மீண்டும் நல்ல உடல்நலத்தைப்பெறவும் அனுக்கிரகம் தாங்கள் செய்யவேண்டும்" என்றும் பரமசிவனிடம் வேண்டுகோள் விடுத்தார்.

**பரமசிவன் பதிலும், காட்டிய கருணையும் :**

பிரம்மதேவரின் வேண்டுகோளை ஏற்ற பரமசிவன் "பிரம்மதேவரே! குழந்தைகள் தெரியாமல் செய்யும் பிழையை அனைவரும் பொறுத்துக்கொள்வது உலக இயல்புதான். எனவே மாயையின் வசத்தால் கட்டுப்பட்டு மதிமயங்கிய தட்சன் எனக்குச் செய்த தீமைகளை நான்மறந்துவிட்டேன். எனவே தட்சன் உயிர்பெற்று எழுவான். ஆனால் யாகத்தீயில் அவன் தலை பொசுங்கிவிட்டது. எனவே ஓர் ஆட்டின் தலையை இறந்துகிடக்கும் அவன் உடலோடு பொருத்தினால், அவன் மீண்டும் உயிர் பெற்று எழுவான். பிருகு முனிவருக்கும் ஆட்டுத்தாடியும், மீசையும் மட்டுமே முளைக்கும். மற்றவர்கள் அனைவருக்கும் அவரவர் உறுப்புகள் மீண்டும் வந்துசேரும். "என்று அருள் புரிந்தார். இதைக்கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அப்போது பிரம்மதேவர் முன்பு தடைபட்டுப்போன தட்சனின் யாகம் மீண்டும் நடைபெறவேண்டும். அதற்குத்தாங்கள் தங்கள் பூதகணங்களோடு வந்து பங்கேற்றுத் தங்களுக்குரிய அவிர்பாகத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சிவபெருமானும் அதற்கு உடன்பட்டுத் தன் பரிவாரங்களோடு யாக சாலைக்கு வருவதாக ஒப்புதல் தந்தார்.

**பரமசிவனிடம் மன்னிப்புக்கோரினான் தட்சன் :**

அனைவரும் யாகசாலையை அடைந்தனர். யாகசாலையின் ஓரிடத்தில் வதம்செய்யப்பட்ட தட்சனின் உடல்மட்டும் கிடைத்தது. சிவபெருமான் கூறியபடி. ஓர் ஆட்டின் தலையைத் தேடிக்கொண்டுவந்து தட்சன் உடலோடு பொருத்தினார்கள். உடனே ஆட்டுத்தலை தட்சனாக அவன் அனைவர் முன்பும் தோன்றினான்! அவனுடைய மாயை நீங்கிவிட்டிருந்தபடியால் அவன் தன் எதிரேநின்ற சிவபெருமானை வணங்கினான். தான் செய்த தவறுகளை மன்னிக்கும்படி வேண்டினான். தன் மகளின் இறப்பிற்குக் காரணமான தன்னுடைய அறியாமையைக் குறித்து வெட்கப்பட்டு நின்றான். சிவபெருமான் அருள்செய்தவாறே அந்தமோதலின் போது தமது உறுப்புகளை இழந்த அனைவரும் தங்களது அவயவங்களை மீண்டும் பெற்று மகிழ்ச்சி அடைந்தனர்.

**மீண்டும் நடந்தது யாகம்.!**

பிறகு சிவபெருமானின் அனுமதியோடு தன்னுடைய நின்று போன யாகத்தைத் தொடங்கினான். இந்த யாகத்திற்கு தட்சன் பரம்பிரம்மமாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவையும் முறைப்படி அழைத்தான். முன்பு அவன் நடத்திய யாகத்தின் போது பகவான் ஸ்ரீமந்நாராயணனைக்கூட அழைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தட்சன் தன் ஆணவத்தை நிரூபிக்கவும், தன் ஆற்றலை வெளிப்படுத்தவும் செய்யப்புகுந்த யாகம் அது என்பதால், அது முடிவு பெறாததோடு, துன்பமயமாக முடிந்தது என்பதை இங்கு கவனிக்கவேண்டும். எனவே இந்த யாகத்திற்கு மட்டுமே விஷ்ணுபகவானும் வந்திருந்தார்.

**விஷ்ணுவின் வருகையும், பெற்றிட்ட வரவேற்பும் :**

முந்தைய யாகங்கள் நிறைவடையப்போவதில்லை என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்ட அந்த மாமாயன் அவற்றில் பங்கேற்க வரவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால், ஆணவமும். மமதையும் அற்றவனாக, மாயை நீங்கியவனாக முறைப்படி தட்சன் செய்த இந்த யாகத்திற்கு மகாவிஷ்ணுவும் வந்தார்.

அவர் யாகசாலையில் தோன்றியவுடன், அங்கிருந்த பிரம்மதேவன், சிவபெருமான், இந்திரன் உள்ளிட்ட எல்லா தேவர்களும், தேவகணங்களும், கந்தர்வர்கள், வித்யாதரர் போன்றோரும் எழுந்து நின்று, வணக்கம் செலுத்தி, அவருடைய தாமரைத்திருவடிகளில் விழுந்துவணங்கி ஆசியினைப் பெற்றுக் கொண்டனர். இந்தச் செய்தியை.

**தம் உபாகதம் ஆலக்ட்ச்ய ஸுர-கணாதயா: ப்ரணேமு:**
**ஸஹஸொத்தாய் ப்ரஹ்மேந்திர-த்ரயக்ட்ச்ச-நாயகா:**

என்னும்அத்.7.இன் 22 ஆம் சுலோகத்தில் எடுத்துரைக்கிறார் வியாசபகவான்.

இதனால் மனம் மகிழ்ந்த மகாவிஷ்ணு பலவிதமான தர்மநியதிகளை அனைவருக்கும் எடுத்துரைத்தார். அனைத்திற்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல்,

“பிரம்மதேவன், சிவபெருமான், உள்ளிட்ட அனைத்து உயிர்களையும், பரம்பொருளிடமிருந்து (அதாவது தன்னிடமிருந்து) பிரித்துப் பார்க்காதவன் எவனோ, அவனே பிரம்மத்தை அறிந்தவனாகக் கருதப்படுவான். அவனால்தான் அமைதியைப் பெறமுடியும். அவ்வாறு செயல்படாதவனுக்கு,

எப்போதும் அமைதி(சாந்தி) ஏற்படாது. அவன் என்னை அடையவும் மாட்டான்" – என்று கூறினார். அதன்பின்னர் வேதங்கள் எல்லாம் முறைப்படி ஓதப்பட, தடைபட்டு, சண்டையில் முடிந்து துன்பத்தைத்தந்த யாகம், அனைவரின் முன்னிலையிலும் இனிதாக நடைபெற்று முடிந்தது. மகாவிஷ்ணு, பிரம்மா, தேவர்கள், ஆகிய அனைவருக்கும் அவிர்பாகங்கள் கொடுக்கப்பட்டன. மீதமிருந்த அவிர்பாகம் முழுவதும் சிவபெருமானுக்கே வழங்கப்பட்டது. மேலும் அந்த யாகம் முதற்கொண்டு, இனிமேல் நடத்தப்படுகின்ற எல்லா யாக யக்ஞங்களிலும் மீதமான பொருள்களும், அவிர்பாகமும் சிவனுக்கே சேரவேண்டியது என்ற ஒரு முறையும் அன்றுமுதல் ஏற்படுத்தப்பட்டது. பகவான் ஹரியின் அங்கத்தில் இடம்பெற்றுள்ளவர் சிவபெருமான். எனவே அவர் காத்தருளும் பெருமானாகிய விஷ்ணுவைப்போலவே, அனைத்தையும் அப்பெருமானும்(சிவபெருமானும்) அறிந்தவர் ஆவார்.

**ஹர பாபாநி ஹரதாத் திவோ தந்த்தாம் சதாசிவம்!**
**ந ஜ்ஞானாமீதி நோ ப்ருயாத் சர்வக்ஞாபதபாக யத: !!**

என்னும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சமஸ்கிருத ச்லோகத்தில் குறிப்பிட்டுள்ளதைப்போல அவர் அனைவரைப் பற்றியும் நன்கு அறிந்தவர். ஆகையால், அவர் நமது பாவங்களை அகற்றுவாராக! என்றும், நம்மைக் காப்பாற்றுவாராக! என்றும் நாமும் வேண்டினால், அவர் அவற்றை எளிதில் அளிக்கக்கூடியவர். எனவே அத்தகைய குணம் கொண்ட சிவபெருமானை வணங்கு என்பது இதன்பொருளாகும்.

இனிதேமுடிந்த யாகத்தால் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து அவரவர் லோகங்கலுக்குச் சென்றனர். யாகத்தின்போது தன்னுடலைத் தியாகித்துவிட்ட சதிதேவி, அடுத்தபிறவியில் இமவான் என்பவனுக்கும், மேனை என்பவளுக்கும் மகளாகத்தோன்றி வளரந்தாள். அப்பிறவியில் அவள் பார்வதியாக வளர்ந்து பரமசிவனையே திருமணம் புரிந்து கொண்டு பார்வதிதேவியாக தன் பக்தர்களுக்கு அருள்பாலித்துவந்தாள்.!!

**அன்னபூர்னே சதாபூர்னே சங்கரப் ப்ராண வல்லபே!**
**ஞான வைராக்யம் சித்யர்த்தே பிட்க்ஷாம் தேஹி ச பார்வதி !**

என்னும் பார்வதி தேவியைப்பற்றிய ஸ்லோகத்தை அனுதினமும் ஓதி, அவளை வணங்கினால், சிவபெருமானுக்குப் பிரியமானவளும், அன்னபூர்ணியாகவும் உள்ள அப் பார்வதிதேவி, ஞானத்தையும், வைராக்கியத்தையும் அனைவருக்கும் கொடுத்தருள் புரிவாள்.!!

மேலும், மேலே கூறப்பட்டுள்ள சுலோகத்தின் பொருளுக்கு ஏற்றவாறு, சிவபெருமான் அனைவரின் பாவங்களையும் அகற்றுபவராக உள்ளார். அவர்எப்போதும் நமக்கு நன்மை அளிப்பாராக! நம்மைப்பற்றி எதுவும் அவருக்குத் தெரியாது என்று நினைப்பதும் தவறு ஆகும். அவர் முழுமையாக அனைத்தையும் அறிந்தவர். உயர்வைப்பெற்று விளங்கிடும் அவர், பரமபுருஷ பகவானாகிய மகாவிஷ்ணுவின் ஒரு கூறாக விளங்குபவர் என்ற நினைப்போடு, அவருடைய பாதத்தையும் நாம்பணிந்து வணங்கினால், நமது வாழ்க்கையில் மங்களங்கள் பெருகும்!.

## 7. பரதச்சக்கரவர்த்தியின் பல்வேறு பிறவிகள்

### பாரதநாடு என்று பெயர் பெறக் காரணம் :

ஸ்ரீமத் பாகவதத்தின் ஐந்தாம் ஸ்கந்தத்தில் ஜடபரதர் என்ற மிகப்பெரும் ஞானியைப்பற்றிய வரலாறு பேசப்படுகின்றது. ஸாங்கியமதத்தின் கொள்கையான உடல்வேறு, உயிர் வேறு என்ற கொள்கையையும், மனிதமனத்தின் தன்மைகளையும், அதை அடக்கி ஆள்வதால் ஒருமனிதன் பெறக்கூடிய நன்மைகளையும், முதன் முதலில் ரகூகணன் என்ற அரசனுக்கு எடுத்துரைத்தவர் இவர்தான் என்று பலபேர் கருதுகின்றனர். இந்த ஜடபரதர் என்பவர்தான் முன்பிறவியில் பாரதன் என்ற பெயருடன் சிறப்பாக நமது பாரத நாட்டை ஆட்சிபுரிந்தார். எனவேதான் நமது நாட்டிற்கே பாரதநாடு என்ற பெயர் ஏற்பட்டது என்றும் பல அறிஞர்கள் கருதும் ஒருவழக்கம் உண்டு.

ஆயினும், துஷ்யந்தன் சகுந்தலை என்றவர்களின் மகனாகத்தோன்றிய பரதன் என்ற அரசனால் ஆளப்பட்டது ஆகையால் பாரதநாடு என்று நமது நாடு அழைக்கப்படுகின்றது என்பதே பெரும்பாலான வழக்காக உள்ளது. எனினும் ரிஷபதேவர் என்பவருடைய மகனாக அவதரித்த, முதலில் சுட்டிக்காட்டப்பட்ட அரசனே பரதனாக இருந்து ஆட்சிபுரிந்து, மானாகவும், பின்மீண்டும் ஓர் அந்தணனாகவும் பிறவிகள் எடுத்து வாழ்ந்தவன். இவனே பிற்காலத்தில் ஜடபரதன் என்றும், சிறப்புக்காரணமாக ஜடபரதர் என்றும் அழைக்கப்பட்டவர் என்பதால், பல பிறவிகளைப் பற்றியும், அவருக்கு அப்பிறவிகள் ஏற்பட்டதற்குரிய காரணங்களையும் இந்தப்பகுதியில் அற்புத

நிகழ்வுகளால் எடுத்துரைக்கிறார் இதனைப்படைத்தளித்த வியாசபகவான்.

**நாபி மன்னன் செய்த யாகம் :**

நாபி என்ற அரசனுக்கும், மேருதேவி என்ற அவனுடைய மனைவிக்கும் நீண்ட நாட்களாக குழந்தைப் பேறு இல்லை. அதனால் மிகவும் மனம் கலங்கிய மன்னன், மாமாயனாகிய மகாவிஷ்ணுப்பெருமானுக்கு ஒரு யாகம் செய்தார். மிகவும் சிறப்பாக நடைபெற்ற அந்த யாகத்தில், ஒருநாள் பகவான் பட்டுப்பீதாம்பரம் உடுத்தியவராக, இரு கைகளிலும் சங்கு சக்கரங்களை ஏற்ற நிலையில் அனைவரும் காணுமாறு காட்சி அளித்தார். மன்னனும், யாகம் இயற்றிக்கொண்டிருந்த ரித்விக்குகளும் பெருமானை வாழ்த்தி, வணங்கித் துதித்தனர். அப்போது பகவான் அரசனை நோக்கி “உமது யாகத்தால் மனமகிழ்ச்சி அடைந்தேன். உனது குழந்தையில்லாக் குறையைப்போக்க நானே வந்து உனக்கு மகனாகப்பிறக்கிறேன்'' என்று அருள்செய்து மறைந்துபோனார்.

**ரிஷப தேவராய் அவதரித்தார் பெருமான்.!**

யாகத்தின்போது தான்கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்ப, மேருதேவியின் கருவிலே வந்து தோன்றி, பேறுக்கால முடிவில் ஓர் அழகிய ஆண்குழந்தையாய் அவதாரம் செய்தார் பகவான். அனைவரும் கண்டு வியக்கும்வண்ணம் அத்தனை திவ்ய சொரூபத்தை உடையதாக அக்குழந்தை விளங்கியது. அதன் முகப்பொலிவு, பகவானின் முகத்தாமரையை ஒத்திருந்தது. அக்குழந்தைக்கு ரிஷபதேவர் என்று பெயரிட்டு,

வளத்துவந்தார் நாபி அரசர். நல்லாட்சி புரிந்த நாபி, தன் மகனான ரிஷபதேவரிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, வானப்பிரஸ்தம் மேற்கொண்டார். எனவே ரிஷபதேவர் அஜநாபம் என்ற அந்த நாட்டின் அரசனாக முடிசூட்டிக்கொண்டு, மிகச்சிறப்பாக ஆட்சி நடத்தினார். எல்லாவளமும் பெற்ற, செல்வச்செழிப்புள்ள நாடாக அது முன்னேறிச்சென்றது. நாட்டில் எங்கெங்கு பார்த்தாலும் ரிஷபதேவரின் புகழே பாடப்பட்டது. அவர் கண்கண்டகடவுள் என்றே அனைவராலும் போற்றப்பட்டார். உண்மையிலேயே அவர் கடவுளின் அவதாரம்தானே? இந்த உண்மைய அறியாதவர்களும் அவ்வரசனைக் கைகூப்பித் தொழுது வணங்கினார்கள்.!

**இந்திரன் கொண்ட பொறாமை :**

ஒரு சாதாரண அரசனுக்கு இவ்வளவு பேரும் புகழும் ஏற்பட்டு அனைவரும் அவனைப்போற்றித்துதிப்பதை இந்திரதேவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே அவன் பொறாமை கொண்டு அந்த நாட்டின் வளத்தை அழிக்கவேண்டும் என்று நினைத்து, மழைப்பொழிவை நிறுத்திவிட்டான்.! வளம் குன்றியதால், வறுமையைய நோக்கி நடந்தது நாடு.மேலும் தண்ணீர்பஞ்சமும், உணவு பற்றாக்குறையும் ஏற்பட்டது. ஆனால் இதை ஓரளவு பொறுத்துக்கொண்ட அரசன் ரிஷபதேவன், தன் யோக மாயாசக்தியால் மழைபொழியச்செய்தார் ! எனவே பஞ்சம் பறந்தோடியது. தம் மன்னனின் சக்தியை அறிந்த மக்கள் முன்னைவிட அதிகமாகவே அரசனைப் போற்றிப் புகழ்ந்தனர். தனது தோல்வியைக் கண்டு அதிர்ந்து போன இந்திரன்,

அவ்வரசன் ரிஷபதேவர் பகவானின் அம்சம் என்பதை அறிந்துகொண்டான். அதன் முடிவாக, தன்னுடைய மகளான ஜயந்தி என்பவளை அரசனுக்கு மணம்செய்து வைத்தான்.!

**பரதரின் தோற்றம் :**

பகவானின் அவதாரமாக விளங்கிய ரிஷபதேவருக்கும் அவர்மனைவிக்கும் நூறு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுள் மூத்தவன் பெயர் பரதன் என்பதாகும். பகவானின் சொரூபமாக அவதரித்து ஆட்சி நடத்தியவர் ரிஷபதேவர் என்றாலும், அவர் அரசர்கள் மேற்கொள்ளும் ஆடம்பரத்தை விரும்பாதவராக, ஒரு சாதாரணமனிதனைப் போலவே வாழ்ந்தவர். தன்னைப்போலவே தன்னுடைய பிள்ளைகளும் ஒழுக்கசீலர்களாகவும், பகவான் மீது பற்றுக் கொண்டவர்களாகவும், ஆத்மஞானத்தை அறிந்தவர்களாகவும் விளங்கவேண்டும் என்று நினைத்தார். எனவே ஒருமுறை அவர் பிரம்மவர்த்தம் என்ற இடத்திற்குச் சென்றார். அங்கிருந்த பிரம்மரிஷிகளின் முன்னிலையிலும், ஊர்ப் பொதுமக்களின் முன்பாகவும் தன் மகன்களுக்குத் தானே ஆத்ம ஞானத்தையும், தர்மாத்மாவாக வாழவேண்டியதைப்பற்றியும் உபதேசம் செய்தார். எனவே அவருடைய எல்லாப் பிள்ளைகளும் நல்லொழுக்கம் நிரம்பியவர்களாகவே இருந்தனர்.

**அரசன் ஆனார் பரதச் சக்ரவர்த்தி :**

ரிஷபதேவரின் மூத்தமகனாகிய பரதனுக்கு அரசனாக பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. அப்பரதமகாராஜன் நமது நாட்டைச் சிறப்பாக அரசாட்சி செய்ததால்தான் நமது

நாட்டிற்கு பரதநாடு, பாரதநாடு, பரதகண்டம் என்றெல்லாம் பெயர்கள் ஏற்பட்டன என்பதையும் முன்பே கூறினோம். ரிஷபதேவர் குமாரர்களில், பரதனைத்தவிர்த்த தொன்னூற்று ஒன்பது பேரில், ஒன்பது பிள்ளைகள் அரசபோகத்தை விரும்பாமல், பகவத் பக்தியிலே ஈடுபட்டு, வாழத்தொடங்கினார்கள். அவர்கள் பகவானின் பரமபக்தர்களாகவே மாறி, பகவத் கைங்கர்யங்களில் ஈடுபட்டனர். மீதமுள்ள தொன்னூறு பிள்ளைகளில் எண்பத்தொன்பது பேர் வேத வேதாங்களைக் கற்றுக்கொண்டு, வேதியர்களாக மாறிப்போனார்கள். மீதமிருந்த ஒன்பதுபேர் மட்டும் தமக்குள் நாட்டைப் பிரித்துக்கொண்டு அரசாளத்தொடங்கினார்கள்! இப்படிப் பலதரப்பட்ட மக்களைப்பெற்றெடுத்து, பாரதநாட்டைச் செழிப்படையச்செய்த பகவானின் அவதாரமான ரிஷபதேவர் அவதாரம் போற்றுதலுக்கு உரியதாகும்.

**பரத சக்கரவர்த்தியின் சந்ததியினர் :**

ரிஷபச்சக்கரவர்த்தியின் நூறு ஆண்பிள்ளைகளில், மூத்தவனாக இருந்த பரதன், தன் தந்தையாரைப்போலவே அனைத்து ஆற்றல்களை உடையவனாகவும், ஞானியாகவும் திகழ்ந்தான். தன் தந்தை உபதேசத்தைப்பின்ற்றி, நாட்டை அறவழியிலே ஆட்சி செய்தான். அனைவரும் அவனைச் சிறந்த தர்மவான் என்றும் போற்றிப் புகழ்ந்தனர். திருமணப்பருவம் அடைந்த பரதன் விசுவரூபன் என்னும் ஓர் சிற்றரசனின் மகளான பஞ்சஜனீ என்பவளை மணந்து கொண்டான் அவர்களுக்கு ஐந்து ஆண்பிள்ளைகள் பிறந்தனர். சுமது, சுதர்சனன், ஆசமன், ராஷ்ட்ரபஜரத்,

தூம்ரகேது என்ற ஐந்து புத்திரர்களையும் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும், அரசாட்சியில் அக்கறை கொண்டவர்களாகவும் வளர்த்து வந்தார். பரதச்சக்கரவர்த்தி. இவ்வாறு பன்னெடுங்காலம் சிறப்பாக ஆட்சிபுரிந்து மக்களுக்குச்சேவை புரிந்த பரதச் சக்கரவர்த்தி, தன் மக்களிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு, துறவு மனப்பான்மையோடு வானப்பிர்ஸ்த தர்மத்தை மேற்கொள்ள வனத்திற்குச் சென்றார்.

**பரதரின் துறவு வாழ்க்கை :**

தன் பிள்ளைகளிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு கானகம் சென்ற பரதச்சக்கரவர்த்தி, கண்டகீ என்ற நதிக்கரையை அடைந்தார். அந்த இடத்தில் சப்தரிஷிகளில் ஒருவராகத்திகழ்ந்த புலஹர் என்ற மகரிஷியின் ஆசிரமம் இருந்தது. பரதர் அங்குச்சென்று, புலஹரிஷியிடம் உபதேசம் பெற்றுக்கொண்டு, அங்கேயே தானும் தவமிருக்கத் தொடங்கினார். சக்கரவர்த்தியாய் வாழ்ந்த பரதன் முனிபுங்கவராக மாறி, கடுந்தவத்தை மேற்கொண்டு, துறவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் கண்டகீ நதியில் நீராடி, நித்திய, நைமித்ய கர்மங்களைச் செய்துகொண்டு, உபவாசம் போன்றவற்றையும் மேற்கொண்டவராக சிறந்ததொரு சந்யாசியாய்க் காலம் கடத்திவந்தார் பரதர்

**மானுக்கு நேர்ந்த துர்மரணம்.!**

ஒருநாள் பரதர் கண்டகீ நதியில் இறங்கிநீராடிவிட்டு, தனது நித்திய கர்மாக்களைச் செய்து விட்டு, நதிக்கரையில்

அமர்ந்து, ஓம் என்ற பிரணவமந்திரத்தை உச்சரித்த வண்ணம் -உட்கார்ந்திருந்தார் அப்போது முழுமாத கர்ப்பமாய் இருந்த புள்ளிமான் ஒன்று நதியிலே நீர் குடித்துக் கொண்டிருந்தது. அந்தப் புள்ளிமானைக்கண்டுவிட்ட சிங்கம் ஒன்று, அதை வேட்டையாட விரும்பி, கர்ஜனை செய்து அம்மானை நோக்கி பாய்ந்து வரத்தொடங்கியது.! கர்ஜனையைக் கேட்ட அந்த மான் சிங்கத்தையும், அதன்நோக்கத்தையும் புரிந்து கொண்டு, உயிர்பிழைப்பதற்காக பயத்துடன் துள்ளி ஓடத்தொடங்கியது. இயற்கையிலேயே மிகுந்த பயந்த சுபாவம் கொண்ட மானானது மேலும் நடுநடுங்கி ஓடத்தொடங்கியதால், அதன்கர்ப்பம் சிதைந்து நதி நீரில் விழுந்தது. நிறைமாத கர்ப்பம் கொண்டதாக அந்தமான் இருந்தபடியால், அழகிய மான்குட்டியே நீரில் விழுந்து நதிப்பிரவாகத்தில் அடித்துச்செல்லப்பட்டது. நதிக்கரையில் அமர்ந்திர்ந்த பரதமுனிவர் இக்காட்சியைக்கண்டார். நீரில் அடித்துச் செல்லப்பட்ட அம்மான் குட்டியைக் காப்பாற்றினார். மிகுந்த பயத்துடனும், நடுக்கத்துடனும், வேகத்துடனும் ஓடிய மானான குரு மலைக்குகையை அடைந்தது எனினும், அதிச்சியின் காரணமாய் அது இறந்துபோனது.!

**மான் குட்டியை வளர்த்தார், மாயவன் சேவையை மறந்தார் :**

தான் காப்பாற்றிய அந்த மான்குட்டியைத்தானே காப்பாற்றநினைத்தார் பரதமுனிவர். அதனுடைய அழகும், இளமைத்தன்மையும், மருண்ட பார்வையும், முனிவரைப் பெரிதும் மயக்கியது. எனவே அதை பராமரிக்கும் கர்மாக்களையும் செய்யத்தொடங்கினார். அந்த மானைக் குளிப்பாட்டுவது அதை நீர் அருந்தச் செய்வது, பசும்புல்,

உணவு கொடுப்பது போன்றவற்றை நேரம் தவறாமல் அவர் செய்து வந்ததால், ஒரு துறவியாக அவர் செய்யவேண்டிய பகவத் ஆராதனையையும், நித்யகர்மாக்களையும், நித்திய அனுஷ்டானங்களையும் மறந்தார்.

**மானின் பாசத்தால், மானாகவே பிறந்தார் :**

துறவு வாழ்க்கை வாழ்ந்துவந்த பரதரின் வாழ்விலே மான்குட்டி குறுக்கிட்டதால், அவர் துறவு நிலைக்குத் தகுதி அற்றவராக ஆனார். ஆனால், அதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமலே வாழ்ந்து, அவர் முதுமையை அடைந்து, தனது வாழ்நாள் முடிவையும் எதிர்பார்க்கும் நிலைக்கு வந்து விட்டார், ஆனால் அப்பொழுதும் பகவானைப் பற்றிய ஞானமும், பகவத் கைங்கர்ய எண்ணமும் அற்றுப்போனவராக, மரணப்படுக்கையிலும் அந்த மானின் நினைவாகவே இருந்தார். அவர்மரணம் அடையும்போது, ஒரு தந்தையின் அருகில் நிற்கும் மகன் ஒருவன், தனது தந்தையின் பிரிவுக்காக எப்படி வருந்துவானோ, அப்படி அந்தமானும், கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்தது. இக்காட்சியைக் கண்டவாறே, பரதமுனிவரின் உயிரும் பிரிந்தது.

**மரணப்படுக்கையில் எழும் எண்ணங்கள் அடுத்தபிறவியில் ஈடேறும் :**

இறக்கும் தருவாயிலும் அவர்மான்மீது பற்றுக் கொண்டவராக இருந்ததால், அடுத்த பிறவியில் பரதர் ஒரு மானாகவே ஜன்மம் எடுத்தார். இந்தமானாகப்பிறந்த பரதமுனிவருக்குத் தன்னுடைய முன்பிறவியின் நினைவு அற்றுப்போகாமலே இருந்தது. காட்டிலே திரிந்து கொண்டு,

சாதாரண விலங்காக அது நடமாடியது என்றாலும், அந்த மானிற்கு, தன்னுடைய முற்பிறவியின் ஞாபகம் இருந்ததாகையால், தான் முற்பிறவியிலே பரதச் சக்கரவர்த்தி என்னும் சிறப்புடைய அரசனாக இருந்ததும், மான்குட்டியைக் காப்பாற்றி வளர்த்ததோடு அதன்மேலேயே பற்றுக் கொண்டு பகவத் ஆராதனையைக் கைவிட்டதும், நித்ய கர்மாக்களைத் தவறவிட்டதும் நினைவிற்கு வந்தது.

**மன்னன் மானாகப்பிறந்தது ஏன்?**

தன்னுடைய நித்யகர்மாக்களைச் செய்யாமலே விட்டுவிட்டார் பரதரிஷி, வானப்பிரஸ்த தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ கானகம் வந்த அவர், கர்மாவை, கர்மயோகமாகச் செய்யவேண்டும் என்ற எண்ணமும் இல்லாமல், மானின் மீது கொண்ட மோஹம் என்ற சேற்றில் மூழ்கிப்போனார். ஒரு ஸ்திதப்ரக்ஞனாக புலன்களின் செயல்களை வென்று, பற்றற்ற ஒரு ரிஷியாக பகவானின் மனம் மகிழும்வண்ணமாக, கடவுளுக்கே தன்னை அர்ப்பணித்து, ஞானயோகம் பெற்ற ஒரு ரிஷியாக வாழவேண்டிய அவர், தன் சாதாரணக் கர்மாக்களைக் கூடச் செய்யாமல், கடவுள் கைங்கர்யத்தை மறந்தார்.

பகவான் கிருஷ்ணரால், கலிலம் என்றும், கஸ்மலம் என்றும், (சேறு என்றும், சகதி என்றும்) சஞ்சலம் என்றும் பலஇடங்களில் குறிப்பிடப்படும் இந்தப் பற்றுணர்வு, அவருக்குத் தேவையற்றது. எனவே அவரால் புலன்களை வென்ற ஒரு ஸ்திதப்ரக்ஞனாக வாழமுடியாமல் போனது. ஏனென்றால், பகவான் கண்ணனிடத்தில் கீதா உபதேசம்

பெற்றுவந்த அர்ச்சுனன் ஸ்திதப்பிரக்ஞன் என்பவன் யார்? என்று கேட்ட கேள்விக்கு, பகவான் அர்த்தம் கூறுகிறபோது

**ஸ்ரீ பகவான் உவாச :**

**ப்ரஜஹாதி யதா காமாந் ஸர்வாந் பார்த்த மநோகதாந்!**
**ஆத்மந்யேவ ஆத்மநா துஷ்ட: ஸ்திதப்ரஜ்ஞஸ்ததா**
**உச்யதே (2-55)**

என்று சொன்னார்.

எப்பொழுது ஒரு மனிதன் மனதில் உள்ள தன்னுடைய எல்லா ஆசைகளையும், முற்றிலுமாகத் துறப்பதோடு, அந்த ஆத்மாவினால், ஆத்மாவிடமே ஆனந்தமாக இருக்கிறானோ, அப்பொழுது அவன் ஸ்த்திதப்பிரக்ஞன் என்று அழைக்கப்படுகிறான் என்று கூறியுள்ளார். எனவே இங்கு ஸ்த்திதப்பிரக்ஞன் என்ற இந்த வடமொழிச் சொல்லிற்கு, புலன்களை வென்ற புண்ணியன் என்று தமிழ்படுத்திக் கூறலாம். ஆனால், பரதமகரிஷியோ அவ்வாறு புலனடக்கம் இன்றி, கேவலம் ஒரு மானின்மீது பற்றுதல் வைத்து, அதற்காகவே வாழ்ந்துவிட்டதால், அவருடைய வானப்பிரஸ்த குறிக்–கோளையும், புருஷார்த்தமான முக்தியையும் அடைதற்குத் தானே தனக்கு தடை விதித்துக் கொண்டவராகிவிட்டார்.! எனவே இந்த்ரிய ஜயம் பெறாத ஒரு சாதாரண மனிதனாக தன்வாழ்நாளைக் கடத்திவிட்டார். மான்மீது வைத்த பற்றுதலே அவரை மானாகப் பிறக்கச்செய்தது.

**பற்று இன்றி வாழ்தலே பகவானுக்கு உகந்தது :**

**அற்றது பற்று எனில் உற்றது வீடு உயிர்**
**செற்றது மன்னுறில் அற்று இறை பற்றே (திருவாய்மொழி2806)**

**“பற்றிலன் ஈசனும் முற்றவும் நின்றனன்**

**பற்றிலை யாய் அவன்முற்றில் ஒடுங்கே”**

**[தி.வா.மொழி.2807]**

என்ற நம்மாழ்வாரின் வேதநிகர் வாக்கிற்கு ஏற்ப வாழாதுபோனார் பரதச்சக்கரவர்த்தி! கஸ்மலம் என்று கூறி, விட்டொழிக்கவேண்டியது என்று பகவானால் அறிவுருத்தப்பட்டதை விட்டொழிக்காமல், பற்றாகிய பெருங்கடலில் வீழ்ந்து அமிழ்ந்து போனார் அவர்...

**மேலும், பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**

**பற்றுக பற்று விடற்கு [திருக்குறள். 350. துறவு]**

என்ற திருவள்ளுவனின் வாய்மொழிக்கேற்பவும் வாழாது போனார் அந்த மகரிஷி.! அதாவது, இறைவனுக்குப் பற்று கிடையாது. ஆனாலும் எல்லாப்பொருள்களிலும் அந்தராத்மாவாக அவன் உறவு பூண்டு இருக்கிறார்.. எனவே நீயும் பற்றை நீக்கியவனாக, இறைவனுக்குச் செய்யவேண்டிய தொண்டுகளாகிய கைங்கர்யத்தைச் செய்து அந்த இறைவனோடு உன்னை ஐக்கியப்படுத்திக் கொள். என்னும் பொருள்தரும் அவ்வுயர் மறைகளின் பொருளையும் உணராமல் வாழ்ந்து தன் இறுதிநாட்களைக்கடத்திவிட்டார். அப்பரதமுனிவர்.

தன்புலன்களை அடக்கி, ஆசா பாசங்களை வென்று, நாம் செய்வது கடவுளின் கைங்கர்யமே என்று பலன் கருதாமல் தனது கர்மாவைச் செய்பவனே ஸ்திதப்பிரக்ஞன். என்பதை அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும் போது பகவான் திட்டவட்டமாக கூறினார்.

**ஸ்ருதி விப்ரதிபந்நா தே யதா ஸ்தாஸ்யதி நிஷ்ச்சலா**

**ஸமாதா வசலா புத்தி ஸ்ததா யோகம் அவாப்ஸ்யஸி**

**(ப.கீதை.அத்2.சுலோ.53.**

என்னும் சுலோகத்தில் மேலும் ஒரு இலக்கணத்தை அந்தத் ஸ்த்திதப்பிரக்ஞனுக்குக் கூறுவதால் அறியலாம்.. இக்கருத்திற்கு ஏற்ப, பகவானிடம் அசையாத, திடமான, யோகத்தை வைத்துச் செயல்படாமல் போனதே பரதமன்னனின் மான் பிறவிக்குக்காரணம் என்பதை இங்கே அறியமுடிகிறது.

மேலும், மானாகப்பிறந்துவிட்ட மன்னனுக்கு, முன்பிறவி ஞாபகம் அற்றுப்போகாமல் தொடர்ந்து வந்ததால், அந்தமான் தன் முற்பிறவியின் நிலையை அறிந்தது. அதனால் அது மிகவும் வருத்தத்திற்கு உள்ளாகியிருந்தது. அப்பிறவியில் நேர்ந்திட்ட தவற்றிற்காக, மன உளைச்சலுடனே எப்போதும் உலவிக்கொண்டிருந்தது. என்று குறிப்பிடுகிறார் வியாசபகவான்.!

இத்தகைய நிலை ஏற்படுதல் சாத்தியமா? ஒருவரின் முன்பிறவியின் நினைவுகள், அடுத்தபிறவியிலும். தொடருமா? இது சாத்தியமே என்கிறார்' வேதவியாசர்! அதாவது, ஒருவருடைய முன்பிறவியில் அவர்செய்திட்ட புண்ணியங்களும், நற்செயல்களும் நிறைந்தவராக விளங்கிவருகிறபோது. திடீரென்று அவருக்கு மரணம் ஏற்பட்டுவிட்டால், தனது விடுபட்டுப்போன கர்மாவைச் செய்து முடிப்பதற்காக அவர் அடுத்த ஜன்மத்தில் சகல வசதியும் படைத்த ஒரு பெரும் செல்வந்தராகவோ, அல்லது

உயர்குலத்து அந்தணனாகவோ? அல்லது பகவானிடத்திலே தங்களை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு வாழ்கிற ஒரு நற்குடும்பத்திலோ அவர் அடுத்த பிறவி எடுப்பார் என்று கீதையில் கண்ணன் குறிப்பிடுகிறார். ப.கீ. அத்.6..ஸ்லோ.41.)

எனவேதான் ஒருவர் தனது கர்மாவை, கர்மமாகவே செய்யாமல்', கர்மயோகமாக செய்து வாழ்ந்தால், எவ்வளவு தூரம் அவர் அந்தக்கர்மயோகத்தைச் செய்தாரோ? அந்த அளவிற்கு அவருக்கு அதனால் பயன் ஏற்படும் என்றும் கீதை கூறுகிறது.

**தத்ராபி ஹ வா ஆத்மநோ ம்ருகத்வா – காரணம் பகவத் ஆராதன ஸமீஹா னுபாவேனானுஸ்ம்ருத்ய ப்ருஷம் அனுதப்யமான் ஆஹ:**

எனவே இறுதி நேர வாழ்வில் தான்செய்த தவற்றால் உண்டான இந்த மான்பிறவி வாழ்க்கையை முடித்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்தார் அவர் பகவானாலே சுட்டிக்காட்டப்படும் புலன்களை வென்ற ஒரு புண்ணிய புருஷனாக அடுத்தபிறவியில் தனது கர்மயோகத்தை முறைப்படி செய்து முடித்துக் கொள்ளவேண்டும் என்கிறது கீதை. இந்த எண்ணங்கள் எல்லாம் அம்மானின் வடிவிலே இருந்த மன்னன் பரதன் நினைத்தான். எனவே தான் முன்பு வாழ்ந்திருந்த கண்டகீ நதிக்கரையிலேயே வந்து தங்கியது அந்த மான். அங்கு மிகுதியாக இரையைத் தேடிக்கொள்ளாமல், நிராஹாரதீட்சையைக் கடைப்பிடித்து வாழ்ந்தது. எனவே உதிர்ந்த இலைகள் தழைகள் போன்றவற்றையே உண்டு வாழ்ந்து, விரைவாகத் தன்னுடைய அப்பிறவியை முடித்துக் கொண்டது.

**அந்தணன் வீட்டில் அடுத்தபிறவி!**

அந்தணர்களுள் அங்கிரஸ் கோத்திரம் என்ற ஒரு பிரிவு உண்டு. அது மிகச்சிறந்த பிராமணப்பிரிவாகக் கருதப்படும். மானாக இருந்து பழம்பிறவி நினைவால் தன்னுடைய வாழ்க்கையை முடித்துக்கொண்ட பரதச் சக்கரவர்த்தி, அந்த அங்கிரஸின் கோத்திரத்திலே தான் அடுத்துப்பிறவியை எடுத்தார். இரண்டு மனைவிகளை உடைய ஓர் அந்தணனின் இரண்டாவது மனைவியின் ஒரே புதல்வனாக பரதருக்கு அடுத்தப் பிறவி விதிக்கப்பட்டது அந்த அந்தணனின் முதல் மனைவிக்கு ஒன்பது பிள்ளைகள் இருந்தனர். அவர்களிடம் அன்பு, அடக்கம், அழகு, ஆளுமை என்ற எத்தகைய சிறந்த பண்பும் இல்லை. ஆனால், தமது குலவழக்கப்படி, வேத வேதாந்தங்களைக் கற்றுக் கொண்டு வருணாஷ்ரம தர்மத்திலே ஒழுகிவந்தார்கள்.! அதையே தமக்குப் பிழைப்பாகவும் ஏற்றுக்கொண்டனர்.

**பரதச் சக்கரவர்த்தி ஜடபரதர் ஆனார் :-**

தன் சகோதரர்களுக்குச் சொல்லிக் கொடுத்ததைப் போலவே, ஜடபரதனுடைய தந்தையார் ஜடபரதருக்கும் வேதவேதாந்தங்களையும், அப்பியாசங்களையும் கற்றுத் தந்தார். ஆனால் ஜடபரதரோ எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் பரதச்சக்கரவர்த்தியாக இருந்ததும், மானாக பிறவிபெற்றதும், அந்த மான் பிறவியைத் தான் விரைவிலே முடித்துக்கொண்டதும், ஆகிய முன்ஜன்மத்துச் சம்பவங்கள் தற்போதும் அவரது எண்ணத்தை விட்டு நீங்கவில்லை. அதனால் எதிலும் ஒரு

பற்றில்லாமல், எதையும் ஏற்றுக்கொள்ளாமல், எவ்வித உணர்ச்சிகளுக்கும் ஆட்படாதவராகவும், அவற்றை வெளியே காட்டிக்கொள்ளாமலும் அவர் ஒரு ஜடத்தைப்போலவே வாழ்நாளைக் கடத்திவந்தார். ஆனால் சிறந்த உடல் கட்டமைப்புக் கொண்டவராகவும், ஆஜானுபாகுவான தோற்றத்தை உடையவராகவும், அகன்ற மார்பு, முகத்தில் பொலிவு, போன்றவற்றைக் கொண்டவராகவும் விளங்கினார். தன் மகனுடைய இத்தகைய நிலையைக்கண்ட ஜடபரதனுடைய தந்தையார் நோயால் பீடிக்கப்பட்டு, விரைவிலே உயிர்பிரிந்து விட்டார்.

அந்தணனின் இரண்டாவது மனைவியான ஜடபரதனுடைய தாய், உயிர்வாழ விரும்பாமல், தன்னுடைய கணவனோடு தானும் உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்துக் கொண்டாள். தன்மகன் ஜடபரதரையும், தன்னுடைய மற்றொரு மகளையும் மூத்தாளிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றாள் அந்தத்தாய்.

**மாற்றாந்தாயும், சகோதரர்களின் கொடுமைகளும் :**

ஆனால் மாற்றாந்தாயோ அவர்களை மிகவும் கொடுமைப்படுத்தினாள். மிகவும் கடினமான வேலைகளை ஜடபரதருக்குக் கொடுத்து, விரைவாகச் செய்துமுடிக்குமாறு வற்புறுத்துவாள். மறுப்பேதும் கூறாமல் ஒரு ஜடத்தைப்போல அனைத்து வேலைகளையும் செய்துமுடிப்பார் ஜடபரரதர். என்றாலும். ஜடபரதருக்கு கொடுக்கவேண்டிய உணவைக்கூட அவள் தரமாட்டாள். மாற்றாந்தாயின் குமாரர்கள் ஜடபரதரைக் கூலிவேலை செய்யவைத்தனர்

அவருடைய மாற்றாந்தாயும், அவளுடைய குமாரர்களும், ஜடபரதரின் சகோதரர்களான அவர்கள், ஜடபரதனை மிகவும் கேவலமாக நடத்தினார்கள். அவன் எந்தப்பொறுப்பும் இல்லாமல், இங்குமங்கும் அலைந்து திரிந்து கொண்டிருந்ததால், அவனைப் பைத்தியம் என்று கருதினர். பைத்தியம் என்றே பெயரிட்டு அழைத்தனர். ஏதோ சிறிதளவு வேத வேதங்களில் பயிற்சி பெற்றிருந்ததால், அவர்கள் தங்களை அதிபுத்திசாலிகள் என்றும், ஜடபரதன் ஒன்றும் அறியாத அறிவிலி என்றும் முடிவுசெய்து மிகவும் தாழ்ந்த உணவையே ஜடபரதருக்குக் கொடுக்கவைத்தனர். ஜடபரதருடைய மாற்றாந்தாயும் கொடுமைக்காரியாகவே இருந்தாள். அவளும் ஜடபதரைக்கேவலப்படுத்தி கூலிவேலைக்குச் செல்லுமாறு வற்புறுத்தி அனுப்பிவைப்பாள். மாடாய் உழைக்கும் அவனுக்கு புண்ணாக்கு, நொய்யரிசி, உமி, தவிடு, பழையசோறு போன்றவற்றையே உணவாகக் கொடுத்து வந்தார்கள் அவர்கள்.! ஜடபரதர் அவற்றையும் எவ்வித மறுப்பும் கூறாமல் உண்டுவந்தார்.

**தானியம் காக்க வயல்வெளிக்குச் சென்றார் :**

ஜடபரதரின் தந்தைக்குக் கொஞ்சம் நிலபுலன்கள் இருந்தன. கூலிவேலைக்குச் செல்லாத நாட்களில், அவரைக் கட்டாயப்படுத்தி இரவு நேரங்களிலேயும் வயலுக்கு அனுப்பிவைப்பார்கள். அவர்கள் நிலத்தில் தானியங்கள் விளைவதற்குத்தயாராக இருந்ததால், அவரை நிலத்திற்குச் சென்று தானியக்கதிர்களைப் பாதுகாக்குமாறு விரட்டினர். ஜடபரதரும் நிலத்திலேயே சென்று தங்குவார். நன்றாக

உறங்குவார் பனி, மழை, வெய்யில் போன்ற எவற்றையும் பொருட்படுத்தமாட்டார். கண்ட இடத்தில் படுத்து அப்படியே உறங்கிவிடுவார்.

**நரபலி கொடுக்க நினைத்திட்டான் கள்வன் :**

வழக்கம்போல் ஒருநாள் இரவுக்காவலுக்கு வந்த ஜடபரதர், படுத்து நன்கு உறங்கி விட்டார். அந்த ஊரில் மிகவும் பிரசித்தி பெற்ற கொள்ளைக்காரன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் கீழே பலகொள்ளையர்கள் குழுவாகச் செயல்பட்டு, கொலை, கொள்ளைப் போன்றவற்றைச் சாதுரியமாகச் செய்து வந்தனர். ஆனால் அந்தக்கொள்ளையனுக்கு, வாரிசு இல்லை. தனக்குப் பின்னால் இக்கொள்ளையில் ஈடுபட தனக்கு ஒரு மகன் இல்லையே என்று ஏங்கித்தவித்தான். அவ்வூரின் எல்லையில் ஒரு காளிகோயில் இருந்தது. அந்தக்காளியம்மன் பக்தர்கள் கேட்கும் வரங்களைத் தரக்கூடியவள் என்பதை அறிந்தான் அக்கொள்ளையர் தலைவன்.

**தேடித்திரிந்தனர், ஜடபரதர் சிக்கினார் :**

எனவே அவன் காளிதேவியை வணங்கி, தான் அவளுக்கு ஒரு நரபலி கொடுப்பதாகவும், அதைப்பெற்றுக்கொண்டு காளி அவனுக்கு ஒரு மகனைப் பெற்றெடுக்க வரம் தரவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டான். எனவே காளிதேவிக்கு நரபலி கொடுப்பதற்காக, ஒறு நல்ல திடகாத்திரமான மனிதனைத்தேடி, கண்டுபிடித்து, கடத்திவருமாறு அவனுடைய ஆட்களுக்கு அவன் ஆணையிட்டான்.! திருடர்களும் உடனே செயல்பட்டனர். ஊருக்குள்ளே சென்று

பல்வேறு இடங்களிலும் எவனாவது பலியிடுவதற்குரிய சரியான ஆள் கிடைக்கின்றானா என்று தேடித்திரிந்தனர். அல்லலோடும் ஆக்ரோஷத்தோடும் அலைந்தனர். ஆனால் அவர்களுக்கு ஒருமனிதனும் கிடைக்கவில்லை. வயல்வெளிப் பக்கமாக தேடிப்பார்க்கலாம் என்று நினைத்து தேடிக்கொண்டு வந்தபோது ஜடபரதனைக்கண்டனர். நல்ல கட்டுமஸ்தான ஜடபரதனைக் கண்டவுடன் அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, அவனைக் கட்டிப்போட்டு எடுத்துச்செல்ல நினைத்தனர். ஜடபரதன் விழித்துக்கொண்டான்.! ஆனால் அவர்கள் ஏன் அவ்வாறு செய்கின்றார்கள்? எங்கு தூக்கிச்செல்லப்போகிறார்கள் என்று எதுவுமே கேட்காமல் அமைதியாகவே இருந்தான் ஜடபரதன். எனவே அவரை அனைவரும் தூக்கிக் கொண்டு காளிகோயில் கல்தூணில் கட்டிவைத்தனர். தாங்கள் காளியின் நரபலிக்காக ஒறு மனிதனைத் தூக்கிவந்திருப்பதாகவும் தலைவனுக்கு கூறினார்கள்.

**நரபலி கொடுக்க நடந்தன ஏற்பாடுகள்.!**

தன்னுடைய ஆட்கள் கூறிய நற்செய்தியைக்கேட்ட திருடர் தலைவன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். அன்றைய பொழுதும் விடியத்தொடங்கியது. அதிகாலை நேரத்திலேயே ஜடபரதனைக் காளிக்கு காவு கொடுக்கவேண்டும் என்ற ஏற்பாடுகள் விரைவாக நடந்தன. தலைவனும், மற்றவர்களும், குளித்துமுடித்து புத்தாடைகளை அணிந்து கொண்டனர். தங்கள் உடலில் திருநீறு பூசிக்கொண்டும் நெற்றியில் குங்குமமும் இட்டுக்கொண்டனர். தூப தீபங்களை ஏற்றினர். அடுத்ததாக ஜடபரதனையும் அழைத்துச்சென்று நீராட

வைத்தனர். புத்தம் புதிய ஆடைகளை அணிவித்தனர். உடலில் திருநீறு சாற்றினர். நெற்றியில் மிகப்பெரிய குங்குமப்பொட்டையும், சந்தனப்பொட்டையும் இட்டனர். கழுத்திற்கு மாலை அணிவித்தனர். தோள்பட்டையிலும், மணிக்கட்டிலும் கூட பூவைச் சூட்டி அலங்கரித்தனர். பொதுவாகக் கூறினால், பலியிடப்போகும் ஆட்டிற்கு செய்யப்படுகின்ற சடங்குகளைப்போன்றே ஜடபரதருக்கும் செய்து தயார்ப் படுத்தினர். இவற்றுள் எதையும் ஜடபரதர் ஏற்றுக்கொள்ளாமல் தடுக்கவில்லை. வழக்கம்போலவே அசைவற்ற ஜடம் போலவே, எவ்வித உணர்வும் இன்றியே காணப்பட்டார். ஜடபரதரைப் பலியிடுவதற்காக ஒரு பூசாரியை வரச்செய்தான் கள்வர் தலைவன். அவனுடைய கையிலே கூர்மையான மிகப்பெரிய கத்தி ஒன்று இருந்தது. அதைக்காளிபீடத்திலே மஞ்சள் பூசி வைத்த அவன், தனக்குத்தெரிந்த காளிக்குரிய ஸ்தோத்திரங்களையும், மந்திரங்களையும் உரக்கச் சொல்லிக்கொண்டு காளி தேவியை ஆவிர்பவிக்கச் செய்தான்.

**காளிதேவியின் கோரத்தாண்டவம் :**

வெகுநேர பிராத்தனைக்குப்பிறகு, காளிதேவியும் தனது சிலையில் ஆவிர்ப்பித்தாள். (எழுந்தருளினாள்) தனக்காக பலியிடப்போகும் அந்த மனிதனுடைய உடலில் எவ்விதமான அசைவும் இன்றி, இறந்துபோன ஒரு ஜடம்போலவே அவன் இருப்பதைப் பார்த்தாள். மேலும் பிரம்மாவின் வம்சத்திலிருந்து தோன்றியதாலும், பரத சக்கரவர்த்தியாய் இருந்தபோது அவர்செய்த தவத்தின் பயனாலும் அவனுடைய முகத்தில் பிரம்மதேஜஸ் எனப்படும் தெய்வீக

ஒளிவீசுவதையும் கண்டாள் காளிதேவி. அந்த தேஜஸ் காளிதேவியை அக்கினியைப்போல் சுட்டதால், அதைத் தாங்கிக் கொள்ள முடியாத காளிதேவி, மிகவும் ஆக்ரோஷம் அடைந்தாள். கள்வன் தரப்போகும் பலியானது தனக்குத் திருப்திகரமாக இல்லையாதலாலும், அவளுக்கு பயம் ஏற்பட்டதாலும், கொடூரமான அவளுடைய முகத்துப் புருவங்கள் நெறித்தன. தன்னுடைய கடைவாயின்கோரைப் பற்கள் வெளியே தெரியுமாறு,, அந்தக் கோயிலே கிடுகிடுத்துப்போகுமாறு பெருங்கூச்சலிட்டு நகைத்தாள் காளி.

**பெருங்கோபம் கொண்ட காளிதேவி கள்வர் தலைவனைக் கொன்றாள்.!**

காளிக்கு பெருங்கோபம் உண்டானது. கள்வர்தலைவன் பிணம் போன்று உணர்ச்சி அற்ற ஒருவனைத் தனக்குப் பலியிடப்போகிறான் என்பதை அறிந்து தன்னுடைய சிலையினின்றும் வெளிப்பட்டாள். பூசாரியைப்பிடித்துத் தள்ளினாள்.! அவன் சற்று தூரத்திலேபோய் விழுந்து கதறி அழுதான். கள்வனின் ஆட்களைத் துரத்தி துரத்தி அடித்தாள். அப்போதும் கோபம் அடங்காத காளிதேவி. அந்தக்கள்வர் தலைவன் மீது பாய்ந்து அவனைத் தன் பெருத்தவாயில் கவ்விக்கொண்டாள். அவனுடைய ரத்தத்தைப்பருகினாள். அலறியடித்து ஓடிய மற்ற கள்வர்களையும் வதைத்தாள். அனைவரும் மாண்டு போயினர். இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தபோதும் ஜடபரதனிடம் எவ்விதச் சலனமும், உணர்வலைகளும் ஏற்படவில்லை.! காளிதேவியும் மீண்டும் தனது சிலைக்குள்ளே ஐக்கியமாகிவிட்டாள்.

**தனித்துத் திரிந்தான் ஜடபரதன் :**

காளிகோயிலில் நடந்த எதைப்பற்றியும் கண்டுகொள்ளாமலும், கவலைகொள்ளாமலும் சற்று நேரம் அங்கேயே அமர்ந்திருந்த ஜடபரதன், சற்று நேரம் கழித்தவுடன் அங்கிருந்தும் எழுந்து நடந்தான். அவன் விரும்பிய திசையில், கால்போனபோக்கில் நடந்து படுத்துறங்கி, உணவாகத்தனக்குத் கிடைத்தவற்றை எல்லாம் உண்டுகொண்டு காலம் கடத்தினான். குளித்துப் பலநாட்களாகிவிட்டபோதிலும் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் திரிந்து கொண்டிருந்ததால், அவர் அணிந்திருந்த பூணூல் அழுக்கேறிப்போய் இருந்தது. அதே நிலையில் திரிந்தும், அலைந்து கொண்டும் இருந்தபோது ஒருநாள் அவருடையவாழ்க்கையில் முக்கிய திருப்பம் ஒன்று ஏற்பட்டது.

**சிந்து மாகாண அரசன் ரகூகணன் :**

இந்தியத் திருநாடாம் பாரதகண்டத்தின் ஒரு பகுதியாக சௌவீரமும், சிந்து மாகாணமும் பாகவதப்புராணக் காலந்தொட்டே இருந்துள்ளன. இவ்விரண்டு பகுதிகளையும் ரகூகணன் என்ற ராஜா அக்காலத்தில் ஆண்டுவந்தான்.! ஆனால் தற்போது அந்தச் சிந்துமாகாணப்பகுதியெல்லாம் சிதைக்கப்படு, நம்நாட்டினின்றும் துண்டிக்கப்பட்டுள்ளதும், வேறுநாட்டிற்குக் சொந்தமாகிக் கிடப்பதும் ஒரு கசப்பான உண்மையே ஆகும். அந்நிலப் பகுதியான இரு மாகாணங்களையும் ஆண்டு வந்த ரகூகணன் என்ற அரசன், ஆத்ம தத்துவத்தில் பெரும் ஈடுபாடு கொண்டவன். அந்த

ஆத்ம தத்துவத்தில் கபிலமுனிவர் என்பவர் மிகச்சிறந்த யோகியாக இருந்து, தன்னை நாடிவந்தவர் களுக்கெல்லாம் ஆத்மஞானம் போதித்து வந்தார். இதை அறிந்த ரகூகணன், கபிலமுனிவரைத்தேடி, அவரிடம் ஆத்மாவின் தத்துவத்தை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலில் பயணப்பட்டு வந்தான்.

**பல்லக்குத் தூக்கினான் ஜடபரதன்.!**

அக்காலத்தில் தனது தாய்க்கே ஆத்துமஞான யோகத்தை உபதேசித்தவரான கபில முனிவரின் புகழ் எல்லாஇடங்களிலும் பரவியிருந்தது. அவருடைய புகழை அறிந்த ரகூகணன் என்ற அரசன் கபிலமுனிவரைப்பார்த்து, அவரிடம் ஆத்துமாவின் ரகசியத்தையும், ஆத்மதத்துவத்தையும் அறிந்து கொள்வதற்காக, அவருடைய குடிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். வழியில் இகுமதி என்னும் ஒரு சிறிய ஆற்றங்கரையில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டான். மீண்டும் பயணம் செய்யத் தொடங்கியபோது, அவனுடைய பல்லக்குத் தூக்கிகளுள் ஒருவன் நோய்வாய்ப்பட்டான். எனவே அவனால் பல்லக்கு தூக்கமுடியாத நிலை ஏற்பட்டது. எனவே பல்லக்குத்தூக்கிகளின் தலைவன் வேறு ஒருவனைத் தேடிக்கொண்டு வந்தான். அப்போது தற்செயலாக ஜடபரதனைக்கண்ட அவன், கட்டாயமாக அவனைப் பல்லக்கு தூக்க அழைத்துச் சென்றான். நல்ல திடகாத்திரமான கட்டுடலைப் பெற்றிருந்ததால், இவன் காளைமாட்டைப் போலவும், கழுதையைப்போலவும் சுமந்து செல்வான். பளு தூக்குவான் என்று நினைத்து, அழைத்துச் சென்று பல்லக்குத்

தூக்கிகளோடு, ஜடபரதனையும் சுமந்து செல்லுமாறு கட்டளையிட்டான். அதற்கும் எவ்விதப்பதிலோ, மறுப்போ சொல்லாத ஜடபரதன் சிவிகையைத் தானும் தூக்கிக்கொண்டு சென்றான்.

**ஜடபரதனால் ஏற்பட்ட இடையூறு.!**

எந்தவிதமான குறிக்கோள் அற்றவனாகவும், ஜடம்போன்றும் அலைந்து கொண்டிருந்த ஜடபரதன் நடந்து செல்லும் போது, ஒருவிற்கிடை தூரத்திற்கு பூமியைப்பார்த்துக் கொண்டு நடப்பதையே தன்னுடைய வழக்கமாகக் கொண்டிருந்தான்.! ஏனென்றால், தான் நடந்து செல்கின்றபோது, ஏதேனும் புழுபூச்சிகள் இடைப்பட்டால், தான் அவற்றை மிதித்து அழித்துவிடக்கூடாது என்னும் கருத்துடையவனாக அவன் இருந்தான். மேலும் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு செல்வதும் ஒரு தனிப்பட்டக் கலையாகவே அக்காலத்தில் விளங்கிவந்தது. மற்றவர்கள் எல்லாம் சீராக நடந்து பாடிக்கொண்டு செல்ல, அவர்களுக்கு ஈடுகொடுத்து ஜடபரதனால் நடக்கமுடியவில்லை. எனவே மேலும் கீழும், முன்னும் பின்னுமாக பல்லக்கானது அலைபாய்ந்தவண்ணம் சென்றுகொண்டிருந்தது. இதனைக் கண்ட அரசன் மிகவும் கோபம் கொண்டு, சரியான முறையில் தூக்கிச் செல்லப்படவேண்டும் என்று கட்டளை இட்டான்.

**ஜடபரதரின் சிந்தனைகள் :**

எனினும் ஒரு விற்கிடைத் தூரம் பூமியைப்பார்த்தபடியும், ஏதேனும் புழுபூச்சிகளைக்கண்டுவிட்டால், அவற்றை மிதிக்காத வண்ணமாகவும் ஜடபரதன் தாவித்தாவி நடந்ததால்,

பல்லக்கு மேலும் கீழுமாகவும், முன்னும் பின்னுமாகவும், பக்கவாட்டிலும் அப்படியும் இப்படியாகவும் அசைந்துகொண்டே சென்றது. மேலும், இகலோக வாழ்க்கையில் ஈடுபாடு இன்றி, எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருந்தாலும் ஜடபரதனின் மனமெல்லாம் பற்று அறுத்து வாழும் ஒரு துறவியின் மனநிலையையே பெற்றிருந்தது. விருப்பு, வெறுப்பு, இன்பம் துன்பம், வெற்றி தோல்வி ஆகிய அனைத்தையும் ஒரே சமமாகக்கருதும் சமபுத்தியோடு விளங்கினான் ஜடபரதர். கண்ணன் தனது கீதையில் குறிப்பிடும் ஸ்திதப்பிரக்ஞனின் நிலையிலே அவன் இருந்தான். அதாவது புலன் இன்பங்களைத் துறந்தும், அடக்கியும், (இந்திரியக்கட்டுப்பாடு) உடையவனாக அவன் விளங்கியதால், பகவானின் திவ்விய மங்கள சொரூபத்திலேயே அவனுடைய மனம் எப்போதும் திளைத்து இருந்தது. எனவே தான் ஜடபரதன் சிந்துமாகாண ராஜாவான ரகூகுணன் என்ற அரசனுக்குப் பல்லக்குத்தூக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதற்காக வருந்தப்படவில்லை. அவ்வரசன் மீது கோபப்படவும் இல்லை. தான் இத்தகைய பிறவியை எடுத்ததன் காரணம், தனது முற்பிறவிகளின் ஸஞ்சித கர்மாவும், தற்போது அனுபவித்து வரும் பிராரப்த கர்மாவுமே காரணம் என்பதை நன்கு உணர்ந்தான் ஜடபரதன். தனக்குப் பல்லக்குத்தூக்கும் வாய்ப்புக்கிடைத்ததால், தனது ப்ராரப்த கர்மா விரைவில் நீங்கும் என்று அவன் அமைதியடைந்து பல்லக்கைத் தூக்கிச் சென்றான். என்பதும் ஸ்ரீமத்பாகவதத்தால் அறியப்படுகிறது.

**கோபம் கொண்டான் அரசன்! கொடும் வார்த்தைகளை வீசினான்.!**

பல்லக்கின் ஆட்டத்தால், அதில் (சிவிகையில்) அமர்ந்து வந்த அரசன் மிகுந்த சிரமப்பட்டான்.! எனவே அவன் இம்முறைபெருங்கோபம் கொண்டு, பல்லக்குத் தூக்கிகளைக் கடிந்து கொண்டதால், அவர்கள் நாங்கள் ஒழுங்காகத்தான் தூக்கிவருகிறோம்! ஆனால், புதிதாக வந்த இவன் எங்களோடு ஒத்து நடக்காமல், தாமதமாகவும் தாவித்தாவியும் நடக்கின்றான்.! என்று பதில் கூறினார்கள். எனவே அரசனின் கோபம் ஜடபரதன் பக்கம் திரும்பியது. அவன் ஜடபரதரையும் அவனுடைய வாட்டம்சாட்டமான வடிவத்தையும் பார்த்து, இவனா இவ்வாறு நடக்கிறான் என்று ஆச்சரியம் கொண்டு, ஜடபரதனைப்பார்த்து "மூடனே ! என்வார்த்தையைக் கேளாமல் ஏன் இப்படிச்செய்கிறாய்.! பருத்தசரீரம் கொண்ட நீ, இவ்வளவு நேரமாக நீ ஒருவனாகவே என் பல்லக்கைத் தூக்கி வந்ததால் களைப்படைந்து விட்டாயா? என்று மிகவும் ஏளனமாகப் பேசியதோடு, நீ எல்லாம் ஏன் உயிர்வாழவேண்டும்? செத்துப்போகவேண்டியது தானே? நீ வாழந்து வருவதால் எப்பயனும் இல்லை.. நீ பூமிக்குப் பாரமாவாய்! இனியும் என்வார்த்தையை மீறி நடந்தால், உன்னைக் கொன்றுபோடுவேன்." என்று மிரட்டும் தோனியில் பேசினான்.

**உடலையா? உயிரையா? யாரைத் தண்டிக்கப்போகிறாய்?**

மன்னனுடைய இந்த வார்த்தைகளைக்கேட்ட ஜடபரதன், பெரிதாக எவ்வித உணர்ச்சிகளையும் வெளிக்காட்டவில்லை.! எனினும் அவன் மன்னர்காதில் விழுமாறு, "அரசனே நீ கூறுவது

உண்மைதான். நான் பருத்தசரீரம் உடையவன் எனினும் அது யாருக்கும் சுமையில்லை. சொல்லப்போனால் இவ்வுலகில் சுமையானது என்று எதுவுமே இல்லை. அதே போன்று நிச்சயமானதும், நிலைத்து நிற்பதுமான பொருள்களும் எவையும் இல்லை. எல்லாமே அநித்தியம்தான். அழிந்துவிடக் கூடியவைதான்.! சொல்லப்போனால் உனது அரசவாழ்க்கையும் கூட நிச்சயமற்றதே. நித்தியம் என்றால், அரசர்கள் ஆண்டியாவதும், ஆண்டிகள் அரசனாகவும், செல்வந்தர்களாகவும் மாறுவதும் ஏன்? நீ உயர்ந்தவன் என்றும், அரசன், அதிகாரம் மிக்கவன் என்றும் நினைத்துக் கொண்டிருந்தால், நான் செய்யவேண்டியதைச் சொல். அதை விட்டுவிட்டு ஜடம்போல் இருக்கும் என்னைக் கொல்வதால் லாபம் என்ன? விட்டு விடுவதால் நஷ்டம் என்ன? என்று கேட்டுவிட்டு, மேலும் நீ தண்டிக்கப் போகிறேன் என்கிறாயே! யாரைத் தண்டிக்கப்போகிறாய்? என் உடம்பையா? உயிரையா? ஆனால் நீ நினைத்தாலும் என் உயிரைத் தண்டிக்க முடியாது! என்பதைத் தெரிந்துகொள்!" என்று கூறிக்கொண்டே தொடர்ந்து பல்லக்கைத் தூக்கிச் சென்றான்.!

**உண்மையை உணர்த்தினார். உயர்நிலை பெற்றார்.!**

ஜடபரதனின் வார்த்தைகளைக்கேட்ட அரசன் திடுக்கிட்டுப்போனான்.! ஆத்மாவைப்பற்றியும் உடலைப்பற்றியதுமான எவ்வளவு பெரும் தத்துவைத்தை இவர் எடுத்துரைத்தார், ஆத்மாவே நித்தியம்.. மற்றவை எல்லாம் அநித்தியம் என்பதையும், உயிரான ஆத்மாவானது யாராலும் தண்டிக்கப்படவோ அழிக்கப்படவோ முடியாது என்பதனையும் இவ்வளவு அருமையான உபதேசம் போல்

கூறினாரே ? இவர் உணம்மையில் யார், ஒருவேளை, தான் சந்தித்து ஆத்மஞானம் பெறுவதற்காகத்தேடிச் சென்ற கபிலமகரிஷி இவர்தானோ ? என்ற சந்தேகம் கொண்டான். எனவே தன் பல்லக்கிலிருந்தும் கீழே குதித்தான். ஜடபரதரின் கால்களில் விழுந்து வணங்கினான். தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். அவரைப் பல்லக்குத் தூக்கவைத்த தற்காகவும், தரமற்ற வார்த்தைகளைக் கூறியதற்காகவும் வருத்தம் கொண்டு மன்னிப்பும் கோரினான். தாங்கள் ஒருவேளை கபிலமகரிஷி இல்லை என்றாலும், தாங்கள் அறிந்த ஆத்மாவின் தன்மைகளையும், உடலைப்பற்றிய உண்மையையும் எடுத்துரைக்கும் ஆத்ம ஞான தத்துவத்தைத் தாங்கள் எனக்கு உபதேசம் செய்யவேண்டும் என்றும் வேண்டி வணங்கினான். ஜடபரதரே என்று அவரை மரியாதையுடன் அழைத்தார். எனவே ஜடபரதனை நாமும் இனி ஜடபரதர் என்றே குறிப்பிடலாம்.

**ஜடபரதரின் ஆத்ம தத்துவ போதனை.!**

அரசனுடைய இந்த மாற்றத்தால் மகிழ்ச்சியோ பெருமிதமோ அடையவில்லை ஜடபரதர். முன்பு போலவே விருப்பு வெறுப்புகள் அற்றவராகவே இருந்தார். எனினும் ரகூகணன் என்ற அந்த அரசனின் வேண்டுகோளுக்கு இணங்கி, ஆத்மஞான தத்துவத்தை அவன் மனதில் பதியுமாறு எடுத்துரைத்தார்.

அரசனே ! “நமது உடலானது நிலம், நீர், தீ. வளி, வான் என்ற பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உண்டானது. நாளடைவில் வளர்ச்சியடைந்து, பின்னர் முதுமை எய்தி

நோய்க்கு ஆட்பட்டு இறுதியில் அழிந்துவிடக்கூடியது. அழியும் தன்மை உடைய இப் பௌதீக உடலையே அனைவரும், தான் என்றும், நான் என்றும் கருதிக்கொண்டு செயல்பட்டு வருகின்றார்கள். இவர்கள் ஆத்மஞானத்தை அறியாதவர்களாவர். ஆனால் இவ்வுடலை விட்டு வேறுபட்டு நிற்பது ஆன்மா. இதைத்தான் உயிர் என்று அழைக்கின்றோம். இவ்வுயிரானது அழிவு இல்லாதது. பிறவியின் கர்மாவுக்கு ஏற்றபடி, பலவகையாக மாறி மாறி பிறவி எடுக்கக் கூடியது.

**என்னையே உதாரணமாய் ஏற்றுக்கொள்.!**

உதாரணத்திற்கு என்னையே எடுத்துக்கொள்ளலாம். நான் முற்பிறவியில் பரதச் சக்கரவர்த்தி என்று அனைவராலும் புகழப்பட்ட பேரரசனாய் விளங்கினேன். சிறந்த தவசீலனாகவும் வாழ்ந்த நான், ஒரு மான் குட்டியின்மீது கொண்ட அளவுகடந்த பாசத்தால், என்னுடைய பகவத் கைங்கர்யங்களை முடியாத மனத்தால் அவதிக்கு உள்ளானேன். முன்வழக்கத்'தின் மேன்மையை உணராமல்போனேன். அதன் விளைவாக பகவத் கைங்கர்யத்தை மறந்து, ஒரு மான்குட்டிக்குரிய சேவையில் ஈடுபட்டிருந்ததால், மறுபிறவியில் ஒரு மானாகவே எனக்குப் பிறவி உண்டாயிற்று. அப்பிறவி முடிவுபெற்றதால், தற்போது அந்தணகுலத்தில் பிறந்துள்ளேன். ஆனால் எனக்கு என்னுடைய முற்பிறவியின் ரகசியங்களும், நிகழ்வுகளும் நினைவிற்கு வந்துவிட்டதால், அவற்றிலிருந்து மீண்டுவர முடியாமல் எதிலும் பற்றும் பாசமும் இல்லாத ஒரு ஜடத்தைப்போல வாழ்நாளைக் கடத்திவருகின்றேன்.

**உண்மையான பேரானந்த ஊற்று பகவான்தான்.!**

பகவான் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே புருஷோத்தமன். உன்னதமான பரப்பிரம்மம். அவர் ஒருவரே.! இதை அறிந்து அவரைப்பூஜித்து யார் வாழ்கிறார்களோ அவர்களுக்கு நிச்சயம் முக்தி கிடைக்கும். அப்போது அந்த ஆன்மாவானது மீண்டும் பிறவி எடுக்காமல் பகவானோடு நித்தியசூரியாக வாழ்கின்ற பேற்றினைப்பெறும். இப்பேற்றினை ஒருவன் பெறுவதே பேரானந்தம் ஆகும். இதுவே ஓர் ஆத்மன் பெறவேண்டிய இறுதியான குறிக்கோளாகும். இதையே புருஷார்த்தம் எனப்படுவதாகும். எனவேபகவத்பக்தியும் அதைச்செய்வதால் உண்டாகும் இன்பமுமே நிலையானது. இந்த உண்மைத் தத்துவமே பேரானந்தம் ஆகும். ஆனால் இதை அறியாதவர்கள் தமது புலன்களின் இன்பத்தை உண்மையான இன்பம் என்று தவறுதலாக எண்ணியுள்ளனர். இப்புலன் இன்ப உணர்ச்சி கனவிலே கண்டுமகிழும் இன்பத்தைப் போன்றது. கனவு முடிந்தவுடன் காணாமல்போவது, எனவே இவ்வுலக வாழ்க்கையின் மீதும், ஒருவன் பெற்றுள்ள பதவி, போகம், செல்வம் போன்றவற்றில் பற்றுதலும் வைக்காதே! பகவத் விஷயத்தில் பற்றுவைத்துச் செயல்பட்டால் நிச்சயம் முக்தி என்னும் பரமபதப்பேறு கிடைக்கும்" என்றும் அரசனுக்கு ஆத்மஞானபோதனையை விரிவாக உபதேசம் செய்தார் ஜடபரதர்.

**தெளிந்தான் ரகூகணன்., துறந்தான் அரசபோகத்தை :**

ஜடபரதர் கூறிய தத்துவபோதத்தை அறிந்த அரசன் சித்தம் தெளிவடைந்தது. தானும் தனது அரசபோகமும் நிலையற்றவை என்பதனை உணர்ந்தான். எனவே தனது

அரசபதவியைத்துறந்தான். மிகவும் உன்னதமான இந்த மனிதப்பிறவியில், பகவத் சொரூபத்தையே கருத்தில்கொண்டு, பக்தியொடு தியானித்து வாழ்வதே ஆத்மாவிற்கு அடைக்கலத்தைத்தரும் என்ற உண்மையை ஜடபரதர் மூலம் அறிந்துகொண்டான். மேலும் அவரைப்பார்த்து இப்பிறவியில் உமது தொடர்பு அடியேனுக்கு ஏற்பட்டது நான் செய்த பெரும்பாக்கியம் ஆகும். தங்களது பாத தூளியானது அனைவருக்கும் சாந்தத்தைத் தரும் என்பதை அறிந்து கொண்டேன் என்று அரசன் கூறினான். மேலும் ஜடபரதரை வணங்கி, அங்கிருந்தும் புறப்பட்டுச் சென்றான். தன் நகரை அடைந்தான். அங்கு ஏற்கனவே தான் முடிவெடுத்ததைப்போல, அரசபதவியைத்துறந்து, தவம் செய்யத்தொடங்கினான். தவவாழ்க்கையிலே சிறந்த நிலையைப் பெற்று, சிறந்த விஷ்ணுபக்தனாக விளங்கிய அவன் முக்தியை அடைந்தான்.!! பெருமானின் திருவடியைத் தொழுது வாழும் பேரின்பநிலையைப் பெற்றான். பரமபுருஷபகவானாகிய ஸ்ரீகிருஷ்ணர் அர்சுனனுக்கு உபதேசம் கூறிவருகிற பகவத்கீதையின் எட்டாம் அத்யாயம் ஆறாம் ஸ்லோகத்தில்,

**யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜி அந்தே கலேவரம்**

**தம்தம் ஏவைதி கௌந்தேய ததா சத் பாவ பாவித:**

**ப.கீதா.அத்.8.ச்லோகம் 6.**

என்று கூறியுள்ளதற்கு விளக்கம் கொடுப்பதாக இந்த ஜடபரதரின் வாழ்க்கையும், அவர் அடுத்தடுத்து பெற்ற

பிறவிகளும் அணைந்துள்ளதை அறியலாம். இதில், பகவான் ஸ்ரீகிருஷ்ணராகிய மகாபுருஷர்.

"கௌந்தேயனே! ஒரு ஆத்மன் (மனிதன்) அவனுடைய மரணப்படுக்கையில் இறக்கும் தருணத்தில் எந்தெந்த ஸ்வரூபங்களை சிந்தனை செய்துகொண்டும், அவற்றின் தாக்கங்களிலும் இருந்து கொண்டும் தனது சரீரத்தைத் துறக்கிறானோ, அந்ததந்த ஸ்வரூபங்களையே அடுத்தடுத்த பிறவிகளில் அடைகிறான். ஏனென்றால், அவன் எப்போதும் அதே சிந்தனையில் இருந்திருக்கிறான்" என்ற தெய்வீக வாக்கு அதில் நிலைநாட்டப் பட்டிருப்பதால் அறியலாம்.!

**முக்தியடைந்த மகான் ஆனார் ஜடபரதர் :**

இந்த ஆத்மபோதனையை அரசனுக்கு உபதேசித்தபிறகு, ஜடபரதர் ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் பற்பல இடங்களுக்கும் சென்றார். அலைந்து திரிந்துகொண்டிருந்த அவர் பகவத் சொரூபத்தில் மூழ்கியவராக இறுதியில் முக்தி அடைந்தார்.

பரதச் சக்கரவர்த்தி எடுத்த இந்தப்பல்வேறு பிறவிகளைப் பற்றிய வரலாறு ஸ்ரீமத்பாகவதத்தின் ஐந்தாம் ஸ்கந்தம் ஏழாம் அத்யாயம்முதல், பதின்மூன்றாம் அத்யாயம் வரையில் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இக்கதையில் வரும் ஜடபரதரை மானுடபரதர் : என்றசொல்லால் பக்திவேதாந்த சுவாமி பிரபுமாதர் குறிப்பிட்டுள்ளார். இதில் ரகூகணன் என்ற அரசனுக்கு, ஜடபரதராகிய இந்த மானுட பரதர் கூறும் ஆன்மசிரேயஸ் எனப்படும் ஆத்மஞானபோதனையானது மிகவும் விரிவாகக்

கூறப்பட்டுள்ளது. அத்யாயம் 10,11,12,13, ஆகிய நான்கு அத்யாயங்களில் ஜடபரதர் கூறும் போதனை ஸாங்க்யயோகத்தைச் சார்ந்த்ததாகும். அதாவது பகவான் கிருஷ்ணரால் பகவத் கீதை இரண்டாம் அத்யாயத்தில் கூறப்படுகிற ச்லோகங்களுக்கு வியாக்கியானம் கூறும் பகுதியாக இந்த உபதேசங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.!

புரதமன்னர் ஒரு சிறந்த பக்தர் ஆயினும், அவர்தனது ஒரே பிறவியில் புருஷார்த்தம் என்கிற வீடுபேற்றினை அடையும் வெற்றியைப் பெறவில்லை. அரசனாக இருந்து, மானாக மறுபிறவி எடுத்து, மீண்டும் அந்தணராக பிறப்பெய்தி, அதன்பிறகே முக்தி என்ற மோட்சத்தை (வீடுபேற்றை) அடைந்தார் என்பதை இக்கதையின்மூலம் அறிந்தோம். இக்கதையை ஆன்மசிரேயஸ் பெறவிரும்பிய பரீட்சத்து மகாராராஜனுக்கு, சுகமகரிஷி எடுத்துரைத்தார். இதைக் கேட்ட பரீட்சித்து பெரும் மகிழ்ச்சிகொண்டவராக, பகவான் கிருஷ்ணரின் வீரதீரப்பிரதாபங்களையும், பக்தர்களுக்கு அருள்செய்யும் முறையையும் அறிந்து வியப்பெய்தினார்.

பக்தி போதனையிலும், தத்துவத்தின் உறைவிடமுமாகத் திகழும் வியாசமகரிஷியை நான் வணங்குகிறேன். அவரை வழிநடத்தும் பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கும் நாம் நமது வணக்கத்தை உரித்தாக்கி மகிழ்வோமாக!

**ஓம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மநே நம:**

## 8. அஜாமிளனுக்கு அருள் தந்த திருமந்திரம்.!

### ஆயிரம் பெயர்களும், திருமந்திரமும் :

வைணவர்களின் வழிபடு கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணுவை ஆயிரம் பெயர்களால் அழைத்துத் துதிப்பதும், அப்பெயர்களால் அவருக்கு அர்ச்சனைகள் செய்வதும், அவன் அருளைப்பெற, பகவானின் இப்பெயர்களை நாமசங்கீர்த்தனம் செய்வதும் வைணவர்களின் வழிபாட்டுமுறையாகும். எனினும் அப்பெருமான் உயிராகிய ஆன்மாக்களைக்காத்து அருள் செய்பவனாக விளங்குவதால், அவனைக் கோவிந்தா என்றழைத்து குதூகலம் அடைகிறோம். அப்பெருமான் எடுத்த ஸ்ரீராம, கிருஷ்ணாவதாரங்களால் அழைத்துக் கும்பிட்டு மகிழ்கிறோம். எனினும், ஸ்ரீவிஷ்ணுபக்தியிலே ஆழங்கால்பட்டு நிற்கும் பெரியோர்கள், அப்பெருமானை வழிபட, ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து மந்திரத்தை அனுதினமும் சேவிக்கத்தகும் மந்திரமாக அனைவருக்கும் உணர்த்தியும், உரைத்தும் வழிபட்டு வருவதால், இதைத் திருமந்திரம் என்றும், பெருமந்திரம் என்றும் போற்றிப்புகழ்கிறோம். இந்த எட்டெழுத்து மந்திரமான ஓம் நமோ நாராயணாய என்னும் மந்திரம் எல்லோர்க்கும் எல்லா நலன்களையும் வாரிவழங்கும் ஒரு திருமந்திரம் ஆகும். எனவே அது ஸ்ரீவைணவர்களுக்குப் பெருமந்திரம் ஆகும்.

### வைணவமும் சைவமும் :

பரந்து விரிந்து பார்புகழ் விளங்கும் நமது பாரததேசத்தின் மக்களால் பின்பற்றப்படும் சமயப்பிரிவு இந்து மதம் என்று

அழைக்கப்படுகின்றது. இத்தேசத்தில் தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் மக்களால் பற்பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பின்பற்றப்பட்டுவரும் இந்த இந்து சமயத்தின் கோட்பாடுகளும் தத்துவங்களும் பழமையானவை. சிறப்பினை உடையவை.! சநாதன தர்மம் என்று போற்றப்படும் பெருமையுடைய இம்மதத்தில் உள்ள ஆறுபிரிவுகளில், சைவம், வைணவம் என்ற இரண்டும் அம்மக்களின் இரு கண்களாகக் கருதப்படும் பெருமை உடையவையாகும். சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் சிவபெருமானைத் தாங்கள் வழிபடும் கடவுளாகக்கொண்டு நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தால் அவரை ஓதி வணங்குகின்றனர். வைணவர்கள் ஓம் நமோ நாராயணாய: என்னும் அஷ்டாச்சரமந்திரத்தால், காக்கும் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தமது வழிபடும் கடவுளாக ஏற்று வணங்கி வருகிறார்கள்.

**நலம்தரும் மந்திரம் ஓம் நமோநாராயணாய :**

இவற்றுள், வைணவத்திருமந்திரமான இந்த எட்டெழுத்து மந்திரத்தை அனுதினமும் கூறி, பகவானை வழிபடுவோர்க்கு என்ன நன்மைகள் ஏற்படும் என்பதை நாம் அறிந்து கொள்ள ஆவல் எழும். இம்மந்திரத்தின் சிறப்பை ஸ்ரீமத் பாகவதம் என்னும் புராணநூலானது எவ்வாறு எடுத்துரைக்கின்றது என்பதை அஜாமிளன் வரலாறு என்னும் பகுதியிலிருந்து காண்போமாக! ஸ்ரீமந் நாராயணப்பெருமானை வழிபடும் இத்திருமந்திரத்தால் ஏற்படும் நன்மைகளை நமது ஆழ்வார்களும், ஆசாரியப் பெருமக்களும், தத்தம் படைப்புகளிலே எடுத்துரைத்து இன்பம் காண்கின்றனர்.

அவை மட்டுமன்றி, ஸ்ரீமத் பாகவதத்தின் ஆறாம் ஸ்கந்தத்தில் முதல் மூன்று அத்யாயங்களில் ஓர் அற்புதமான கதையின் வாயிலாக இதனுடைய சிறப்பு கூறப்பட்டுள்ளது. அதைக் காண்போம்.

**அஜாமிளனின் இளமைப்பருவம் :**

கன்யா குப்ஜம் என்ற நாட்டில், அந்தணகுலத்தைச்சேர்ந்த அஜாமிளன் என்பவன் வாழ்ந்துவந்தான். அந்தணர் குலத்தைச்சேர்ந்த அவன் தனது குலதர்மத்திற்கு ஏற்ப, வேத வேதாந்தங்களைக் கற்றுத் தேர்ந்தான். உண்மையே பேசினான். அனைவரிடமும். அன்புடன் நடந்துகொண்டான். அதன்காரணமாக சிறந்தவன் என்றும், நல்லொழுக்கம் உடையவன் என்றும் அனைவராலும் போற்றப்பட்டான். பல விரதங்களை அனுஷ்டித்து, ஸ்ரீமந்நாராயண பக்தியில் ஆழ்ந்திருந்தான். தான் கற்ற வேதங்கள் வழிநின்று, ஆங்காங்கே யக்ஞங்கள் செய்வதிலும், யாகங்களில் பங்கேற்று வேதம் ஓதுதல் போன்றவற்றில் ஈடுபட்டும் பங்கேற்றும், அதிலிருந்து கிடைக்கும் சன்மானத்தில் தனது வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தான்.

**பெண்ணைக் கண்டு கடமை மறந்தான்.!**

தன்குலத்தொழிலான யாக யக்ஞாதிகளில் பங்கேற்கும் போது அவனுக்குக் கட்டாயமாகத்தேவைப்படும் குசப்புல் என்ற தர்பையைத் தேடி, அதை அரிந்து எடுத்துக்கொண்டு வருவதற்காக ஒருநாள் அவன் அருகிலிருந்த காட்டிற்குச் சென்றான். திரும்பும் வழியில் அங்கே ஓர் அழகிய பெண்ணைக்கண்டான். வாலிபப் பருவம் நிறைந்தவனாக

இருந்த அவன், அப்பெண்ணின் அழகில் சொக்கிப்போனான். அவன் புத்தி பேதலித்தது. இந்திரியங்களைக் கட்டுப்படுத்த முடியாமல், அவை போனபோக்கில் தனது மனதை அலையவிட்டான். முடிவு.? அவளிடம் தன்மனதைப் பறிகொடுத்து அஜாமிளன் தன்வீட்டிற்குச் செல்லாமல், அப்பெண்ணிடம் கிடைத்த சிற்றின்பபோகத்தில் மூழ்கிக்கிடந்தான் அதனால் அவளிடமே பொழுதைக் கழித்தான்.!

**பெண்ணிடம் சேர்ந்து தீயவன் ஆனான்.!**

தனது குலத்தொழிலான வேத வேதாகமங்கள் ஓதுவதை மறந்தான். யாக யக்ஞாதிகளைச் செய்வதைத் துறந்தான். பெற்றோரையும் உற்றாரையும் உதாசீனம் செய்தான் விருப்பம்போல் செயல்பட்டுத்திரிந்தான். வேசியின் வீடே கதியாகிப்போனான். எனினும் இடையிடையே தன் வீட்டிற்குச் சென்று, வந்து, தனது வீட்டிலிருந்து பணத்தையும், விலை உயர்ந்த பொருள்களையும் அள்ளிச்சென்று அவன் காமப்பசிக்கு அவற்றைக் கனிகைக்கு காணிக்கையாக்கினான். அவள் மடியையே தனக்குரிய மெத்தையாகக் கருதி ஒரு மடியாளானாகிப்போனான். அதாவது சோம்பேறியாகவும்,. தோஷமுடையவனாகவும் வேறு எவ்விதச்செயலிலும் ஈடுபடாதவனாகவும் காலத்தைக் கடத்தினான்.

**பெற்றோர்கள் கவலையும், திருமண ஏற்பாடும் :**

நல்லவன் என்றும், வேதத்தில் வல்லவன் என்றும், சிறந்த ஒழுக்கசீலன் என்றும் அனைவராலும் போற்றப்பட்ட

தன்மகன், இப்படிப்பட்ட தறுதலையாகிப் போனானே என்று அவனுடைய பெற்றோர்கள் மிகுந்த கவலை அடைந்தனர். தனது மகன் தஞ்சமாகிக் கிடக்கும் அந்த வேசிப்பெண்ணிடமிருந்து தனது மகனை விடுவிக்கும் உபாயம் தேடினர். வேறொரு பெண்ணின் மூலமாகத்தான் அது சாத்தியம் என்று உணர்ந்து, அவனுக்குத் திரருமணம் செய்துவைக்க முடிவுசெய்தனர். அவ்வாறு செய்து வைத்துவிட்டால், பெண்வழிச்சேரலில் பெருமகிழ்வு கொண்டுள்ள தனது மகன் திருந்திவிடுவான், அவ்வேசியை விட்டு அகன்று வருவான் என்று நினைத்தனர். எனவே தங்களது குலத்திலே இருந்த உத்தமகுணங்கள் நிறைந்த ஒரு பெண்ணைத்தேடிக் கண்டுபிடித்து, அந்த நங்கை நல்லாளை அஜாமிளனுக்கு மணம்முடித்தும் வைத்தனர்.

**பத்துக்குழந்தைகளைப் பெற்றெடுத்தும், காமப்பசி அடங்கவில்லை!**

குடும்பவாழ்க்கையிலும், குதூகலம் கொண்ட அஜாமிளன் தனது தர்மபத்தினியின் மூலமாக பத்துக்குழந்தைகளைப் பெற்றெடுத்தான்.! அவனுடைய மனைவியாக வாய்த்தவள் மிகுந்த நல்லசுபாவங்கள் நிறைந்தவளாக இருந்தாள். கணவனை எதிர்த்துப் பேசமாட்டாள். கணவனது இன்பமே தன்னுடைய இன்பம் என்று கருதிக்கொண்டிருந்தாள். அஜாமிளன் தன்னுடைய பத்தாவது ஆண்குழந்தைக்கு நாராயணன் என்ற பெயரை வைத்தான். முதலில், தன்னுடைய பூர்வீகத்தால் கிடைத்த பொருளைக்கொண்டு ஓரளவு நிறைவான வாழ்க்கையை வாழ்ந்துவந்த அஜாமிளனுக்கு நாளடைவில் பணத்

தட்டுப்பாடு ஏற்பட்டது. குடும்பத்தை நடத்த முடியாமல் தவித்தான். எனவே வேறு வழியில்லாமல் பாவச்செயல்களில் ஈடுபட்டான். பொய் பேசினான். பொய்சாட்சி சொன்னான்.! திருடினான், சூதாடினான், தீயசெயல்களிலேயே நாட்டம் கொண்டான். அதனால் கிடைத்த பொன்னையும் பொருளையும் முன்பு போலவே வேசியர்களிடம் நாடி, தன் கைப்பொருளை இழந்தான். அவர்களோடு சேரும் மகிழ்ச்சிக்காக செலவிட்டான்.

**"கூடினேன் கூடி இளையவர் தம்மொடும் அவர்தரும் கலவியே கருதி" (பெரிய திருமொழி1).**

என்ற திருமங்கை ஆழ்வாரின் நிலையையே அப்போது அவனும் அடைந்திருந்தான்.

மொத்தத்தில் ஒழுக்கசீலனாகவும், அந்தணச் சிரேஷ்டனாகவும் இருந்த அவன் மகிவும் கேவலமான அந்தணனாக, அனைவரிடமும் நடந்துகொண்டான். மற்றவர்கலிடம் கட்டாயப்படுத்தி பணம் பெற்றுக்கொள்வதும், அதையும் வேசிக்குச் செலவிடுவதையும் வழக்கமாகக் கொண்ட அவனை அனைவரும் இழித்துப்பேசினார்கள்.

**"மறப்பினும் ஒத்துக் கொளலாகும், பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்." (தி.குறள்.134)**

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப, வேதம் ஓதுவதையும், வேதாகமங்களைக் கடைப்பிடித்து வாழும் நிலையையும் கூட அஜாமிளன் கைவிட்டிருந்தாலோ? மறந்துவிட்டிருந்தாலோ கூட பரவாயில்லை! ஆனால் அவனுடைய சுயஒழுக்கம் முழுதுமாய்க் கெட்டுப்போனதே!

இனிமேல் யார் அவனை மதிப்பார்கள்.? மேலும் தினமும் நீராடுவதை மறந்ததோடு, நித்திய அனுசந்தானம் செய்வதையும், காயத்திரி மந்திரம் ஓதுவது போன்ற அடிப்படைக் கடமைகளைக் கூடச் செய்யாமல் திரிந்து வந்தான். அழுக்கேறிய பூணூலோடு அவன் திரிந்து வந்த காட்சிமிகவும் அருவருக்கத்தக்கதாக இருந்தது. அவனுடைய பத்துப்பிள்ளைகளில் கடைசி மகனிடம் மட்டும் சற்று பாசம் கொண்டவனாக இருந்தான். எப்பொழுதும் அவனை நாராயணா நாராயணா என்று அழைப்பதை மட்டும் அனுதினமும் செய்துவந்தான். காரணம் விளையாட்டுப் பருவம் கொண்டிருந்த அந்தமகன்தான், அஜாமிளன் கூப்பிட்டால் ஓடிவந்து, என்னதேவை என்று கேட்டு, தேவையானதைச் செய்துவிட்டுப்போவான்.

**கடைசி பிரயாணத்தில் (மரணப்படுக்கையில்) கண்ட காட்சிகள்!**

அஜாமிளன் எண்பதாண்டு வயதைக்கடந்தான். அவனை மூப்பு அதாவது வயோதிகம் மிகவும் வாட்டிவதைத்தது. கெட்ட நடத்தை உடையவனாக அவன் வாழ்ந்ததால் பற்பல நோய்கள் அவனைப் பற்றிக்கொண்டன. நெய்க்குடத்தைச் சூழ்ந்துகொள்ளும் எறும்புகள்போல, அவனுடைய உடலை, பற்பல நோய்களும் பற்றிக்கொண்டன. அதன் காரணமாக அவன் தன்னுடைய அந்திம காலத்தை நெருங்கிவிட்டதை அறிந்துகொண்டான். மரணப் படுக்கையிலே வீழ்ந்து கிடந்தான். ஒருநாள் அவனுக்கு தான் மரணம் அடையப்போகிறோம் என்ற எண்ணமும் வந்தது. அவனுடைய ஆயுட்காலமும் முடிவடைந்து போனதால்,

அப்பாதகனை தமது பாசக்கயிற்றால் கட்டி இழுத்துச்செல்ல யமதூதுவர்கள் வந்தனர்.!

**எமன் கிங்கரர்களும், நாராயணர் தூதுவர்களும் :**

எருமைக்கடா வாகனத்தின் மீதேறி வந்த எமதூதுவர்கள், கறுத்த நிறத்தையும், கொடூரமான முகத்தோற்றத்தையும் உடையவர்களாக இருந்தனர்.! கற்றையான மீசையையும், கண்களில் தீப்பொறி பறக்குமாறு கட்டுமஸ்தான உடலுடன் வந்த அவர்கள், அஜாமிளனின் உயிரைப்பறிக்க தமது பாசக்கயிற்றை வீசினர். இறக்கும் தருவாயில் இருந்த அஜாமிளன் தத்ரூபமாக இக்காட்சியைக்கண்டான் அவன் பெரும் பயம் கொண்டான். யாரையாவது துணைக்கு அழைக்கவேண்டும் என்று நினைத்த அவனுக்கு, தெருவிலே விளையாடிக்கொண்டிருந்த தன்னுடைய மகனின் நினைவு வந்தது. எனவே தன்னைக் காப்பாற்ற தன்மகன் வருவான் என்ற ஆவலால் உரத்த குரலில் மூன்று முறை நாராயணா நாராயணா நாராயணா என்று கூவினான். ஆனால் அன்று மகன் வரவில்லை. ஆனால் அதிசயம் ஏற்படும் வகையில், அவனுடைய கூக்குரலைக்கேட்ட நாராயணப் பெருமானின் தூதுவர்கள் நான்குபேர் அந்த இடத்திற்கு உடனே வந்து சேர்ந்தார்கள்.! அந்த நாராயண தூதுவர்கள், எமதூதுவர்களாகிய கிங்கரர்கள் தம்முடைய பாசக்கயிற்றால் அஜாமிளன் உயிரைப்பறிப்பதைப் பார்த்து, அதைத் தடுத்து நிறுத்தினார்கள். ஏனென்றால், பகவானுடைய திருநாமத்தை விடாமல் ஜபித்துவந்த (தனது கடைசி மகனின் பெயரை அடிக்கடிதுணைக்கு அழைத்ததால்,) நாமசங்கீர்த்தனத்தைச் செய்த பக்தி நிலைக்கு தள்ளப்பட்டிருந்தான் அஜாமிளன்.

**அவசேனாபி யன் – நாம்நி கீர்த்திதே சர்வ–பாதகை:**

**புமான் விமுச்யதே ஸத்ய: ஸிம்ஹ த்ரஸ்தைர் ம்ருகைர் இவ**

என்பது கருடபுராணத்தின் ஒரு ச்லோகமாகும்.

இது கூறும் பொருளென்ன என்று பார்ப்போம்.! “பகவானுடைய புனித நாமத்தை ஒருவன் கதியற்ற நிலையிலோ, அதைச் செய்யவேண்டும் என்ற விருப்பம் இல்லாத நிலையிலோ இருந்து கூட ஒருவன் ஜபித்துவிடுவான் என்றால், அதற்கும் பெரும்பயன் நிச்சயமாகக் கிடைக்கும். எவ்வாறு என்றால், ஒரு சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்ட சிறுசிறு மிருகங்கள் எல்லாம் எப்படி பயம்கொண்டு மூலைக்கு ஒன்றாக சிதறி ஓடிப்போகுமோ அதைப்போல, ஒருவனுடைய பாவச்செயல்களின் விளைவுகள் எல்லாம் சிதைந்து ஓடிப்போகும். அதனால் அவன் புனிதத்துவம் பெறுகிறான் முக்திக்கு வழிவகுத்துக்கொள்கிறான் என்னும் இக்கருத்திற்கு ஏற்றவாறு, அஜாமிளன் தனது மகனாகிய நாராயணனை அடிக்கடி அழைத்ததால், அவனையும் அறியாமல் அவன் புனிதப்பணியைச் செய்தவனாகவே பகவான் விஷ்ணுவாலும், அவன் தூதுவர்களாலும் கருதப்பட்டான். எனவே புண்ணிய ஆத்மாவான அந்த அஜாமிளனை நரகலோகம் கொண்டுசெல்வது தகாத தர்மம் என்பது நாரயணத்தூவர்களின் கருத்தாகும். ஆயின், இதனை அறியாது திகைத்த எமதூதுவர்கள், தங்களுடைய கடமையைச் செய்யவிடாமல் தடுத்த அவர்கள் யார் என்பதை அறியாமல், அந்தவிஷ்ணுதூதுவர்களிடம் நீங்கள் யார்? எங்களுடைய கடமையைச் செய்யவிடாமல் ஏன் தடுக்கின்றீர்கள்? என்று கோபமுடன் கேட்டனர்.

**எமதூதுவர்களுக்கும், நாராயண தூதுவர்களுக்கும் நடந்த சம்வாதம் (சொற்போர்)**

எமதூதுவர்களின் வினாவிற்கு விஷ்ணு தூதுவர்களும், தங்களைப்பற்றி எடுத்துரைத்து, இவன் நாராயணா என்னும் திருமந்திரத்தை எப்போதும் கூறியுள்ளான். மரணப் படுக்கையிலும், மூன்று முறை எங்கள் தலைவராகிய விஷ்ணுபகவானை வணங்கியுள்ளான். தன்வாழ்நாளில் பகவானின் பெயரை நாமசஙாகீர்த்தனம் செய்யும் வழிபாட்டு முறையில் இவன் பக்தி செலுத்தி இருக்கிறான்.

**ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ**
**அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி மாசுச:**
**(ப.கீ.அத் 18.ஸ்.66).**

என்னும் பகவத்கீதை உபதேசத்திற்கு ஏற்றவாறு, அவன் எங்கள் பெருமானின் பாதக்கமலங்கலைச் சரணாகதி செய்திருக்கிறான். எனவே அவன் செய்த பாவங்கள் எல்லாம் நீங்கிப்போனது!. எனவே நாங்கள் இவனை விஷ்ணுலோகம் அழைத்துச் செல்லப்போகிறோம் என்றார்கள். ஆனால், இதை ஏற்க மறுத்த எமதூதுவர்கள், இவனைப்பற்றி உங்களுக்கு முழுமையாகத்தெரியாது. இவன் பிறப்பிலே பார்ப்பணனாக இருந்தும், அக்குலத்தின் பெருமைகளை எல்லாம் சீரழித்த சண்டாளன். ஸ்த்ரீலோலன். காயத்திரி மந்திரமும் ஓதாத கயவன். நித்திய அனுசந்தானமும் செய்யாமல், நிம்மதியாய் வேசிகளோடு காலம் கடத்திய மா பாதகன். எனவே எமது எமதர்மராஜனின் தீர்ப்புப்படி, இவன் யம லோகத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு தண்டனை பெறப்போகும் ஒரு கொடூரன். ஆகவே இவனிடம் கருணை

காட்டக்கூடாது. எங்களின் கடமையைச் செய்ய விடுங்கள் என்று வேண்டினர்.

ஆனால் விஷ்ணு தூதுவர்கள் அதை ஏற்க மறுத்து, எப்பொழுது இவன் எங்கள் தலைவனின் பெயரைக்கூறி வணங்கினானோ அப்போதே அவன் செய்த அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபட்டவனாகக் கருதப்படுவான். எனவே இவனை நீங்கள் எமலோகம் கொண்டு செல்வதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்று கூறினர். எனவே எமதூதுவர்கள் தமது தலைவனாகிய எமதர்மராஜனிடம் இதை எடுத்துரைக்கலாம் வாருங்கள் என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு அங்கிருந்தும் சென்றுவிட்டனர். அக்காட்சிகளையும், யம தூதுவர்களும், விஷ்ணு தூதுவர்களும் உரையாடிய வார்த்தைகளையும் நன்றாக கவனித்துக்கொண்டிருந்தான் அஜாமிளன். அவன் கண்களில் கண்ணீர்ப்பெறுக்கெடுத்தது. தன்னைக் காப்பாற்ற வருமாறு தன்னுடைய மகனை நாராயணா! என்று அழைத்ததற்கே இவ்வளவு சிறப்பு இருக்கிறது என்றால், நாம் முன்பு போலவே ஒரு நல்ல அந்தணனாக, நாராயணபக்தனாக வாழ்ந்திருந்தால் எவ்வளவு நன்மைகள் கிடைத்திருக்கும் என்று யோசிக்கத்தொடங்கி மெல்லமெல்ல அந்த நாராயண நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தான்.

**எமதர்மராஜன் எடுத்துரைத்த மறுமொழி !**

இதற்கிடையில் எமதர்மராஜனிடம் சென்ற தூதுவர்கள் அஜாமிளன் உயிரைத் தாங்கள் பிடித்தபோது அங்கே நாராயணனின் தூதுவர்கள் வந்ததையும், அவர்கள் கூறியதையும், அஜாமிளனைக் காப்பாற்றியதையும்

எடுத்துரைத்தனர். இதைக்கேட்டு எமதர்மன்கோபிப்பான், கர்ஜனை செய்வான் என்று எதிர்ப்பார்த்த எமதூதுவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது ஏனென்றால்,. எமதர்மன் புன்னகைத்தான். நல்ல காரியம் செய்தீர்கள்! என்று புகழ்ந்தான். தான் மட்டுமன்றி அழித்தல்தொழிலில் ஈடுபட்டுவரும் ம்ருத்தியுவும், சிவபெருமானும் கூட மகாவிஷ்ணுவின் கட்டளைக்கு அடங்கியவர்களே! நாங்கள் மட்டுமன்றி, பிரம்மாதி இந்திர தேவர்களும் அவருக்குக்கட்டுப்பட்டவர்களே! நீங்கள் இதை நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். உங்கள் கடமையைச் செய்யும் போது நாராயணபகவானின் பக்தர்கள் பக்கமே செல்லவேண்டாம். பகவான் நாராயணன் தனது பக்தர்களுக்குக் கட்டுப்பட்டவர். அவர்களுக்காக எதையும் செய்யக்கூடியவர். எனவே விஷ்ணு பக்தர்களிடம் நீங்கள் மிகவும் உஷாராகவே செயல்படவேண்டும் என்று ஆணையிட்டதால், மீண்டும் அந்த எம தூதுவர்கள் அஜாமிளனை அண்டவில்லை. அஜாமிளன் உயிர்பிழைத்தான். எனினும் அவன் நடத்தையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது!

**மனமாற்றம் தந்து முக்தி அளித்த பெருமான் :**

அந்தணனாகப் பிறந்து, அதர்மச் செயல்களையே செய்து, பெற்றோர்க்கும், மற்றோர்க்கும் வேண்டாத இழிந்தவனாக இருந்த அஜாமிளன் தன் இறுதிப்பயணத்தில் உச்சரித்த நாராயணா என்னும் மந்திரத்தால் தனக்குக் கிடைத்த புனர் ஜன்மத்தை நினைத்துப்பார்த்தான். தனது நடத்தை எவ்வளவு கீழ்த்தரமாக இருந்தது என்பதை

நினைத்துப்பார்த்த அவனுக்கே அவன்மேல் வெறுப்பு ஏற்பட்டது. தான் செய்த பாவக்காரியங்களுக்காகப் பிராயச்சித்தம் தேடிக்கொள்ள நினைத்தான். பகவானின் திருவடிகளைப்பற்றிக் கொள்ளநினைத்தான். அதனால் பக்தி வெள்ளத்தில் திளைத்தான்., தனக்கு புனர்ஜன்மம் அளித்த ஸ்ரீமந்நாராயணபகவானின் திருநாமத்தையே அனுதினமும் சேவித்து இன்பம் கண்டான். இறுதியில் கங்காநதி தீரத்திற்குச் சென்றான். புனித கங்கையில் நீராடி, தனது பாபங்களை எல்லாம் தொலைத்தவனாக, யோகத்தில் ஆழ்ந்தான். பகவானைத் தியானித்தபடியே அவன் ஆத்மஞானம் பெற முயன்றான். அம்முயற்சியில் வெற்றியும் கொண்டான். அந்நிலையில் அவன் உயிரும் பிரிந்தது.

**அந்தமில் பேரின்பத்து வைகுந்தம் அடைந்தான் :**

அஜாமிளனின் உயிர்பிரிந்தவுடன், விஷ்ணுதூதர்கள் மீண்டும் வந்தனர். அவனை வைகுந்தம் அழைத்துச் செல்வதற்காக, பொன் விமானம் ஒன்றை எடுத்துவந்தனர். அதில் அவனை அமரச்செய்து மீண்டும் பிறவாத பேரின்ப நகரமாகிய வைகுந்தத்திற்கு அவனை அழைத்துச் சென்றனர். அதனால் அஜாமிளன் என்றென்றும் பகவானின் பொற்றாமரைத்திருவடிகளைப்பிரியாது வாழும் நற்கதி அடைந்தான். முக்தி அவனுக்குக் கிடைத்தது.

பரமபுருஷராகிய பகவான் கிருஷ்ணன், அர்ஜுனனுக்கு உபதேசித்த பகவத்கீதையின் எட்டாம் அத்யாயத்தில், ஐந்தாம் ஸ்லோகத்தைப்பார்ப்போம். அதில் பகவான்,

**அந்த காலே ச மாம் ஏவ ஸ்மரந் முக்த்வா கலேவரம்**

**ய: ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி ந அஸ்தி அத்ர ஸம்சய**

என்று கூறியுள்ளார்.

அதாவது, அர்ச்சுனா! எந்த மனிதன் மரணகாலத்திலும் என்னையே நினைத்துக்கொண்டு தன் சரீரத்தை துறக்கிறானோ (உயிர்விடுகிறானோ) அவன் என் சொரூபத்தையே அடைகிறான். இதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம் என்பது ஸ்ரீகிருஷ்ண பரப்பிரம்த்தின் அருள்வாக்காகும். அதற்கு ஏற்ப, அந்திமகாலத்தில், கங்கைக்குச் சென்று நீராடி, தன்பாவங்களைப்போக்கிக் கொண்ட அஜாமிளன் பகவத் பக்தியில் மூழ்கினான். பிராட்டியை முன்னிட்டே பகவானைப் பற்றவேண்டும் என்னும் தத்துவத்தையும் அறிந்துகொண்ட அந்த அஜாமிளன், அதனால்,

**நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே சுரபூஜிதே**

**சங்க சக்ர கதா ஹஸ்தே மஹாலட்சுமி நமோஸ்துதே**

என்னும் மஹாலட்சுமித்தாயாரின் மந்திர ச்லோகங்களோடு, பகவான் ஆராதனையைப் புனித தீர்த்தமான கங்கைக்கரை தீரத்தில் அமர்ந்து புடம்போட்ட தங்கம்போல, புத்துணர்வு பெற்றவனாக மாறிப்போனான். பெரியபிராட்டியாரோடும். கூடிய அப்பரம் பிரம்மத்தின் உபாசனையிலும்,யோகநிலையிலும் பெரும் ஈடுபாடு கொண்டு, அன்றாடம் ஸ்ரீமந் நாராயணனாகிய

அப்பெருமானின் அகலகில்லேன் இறையும் என்று அவர்மேல் மங்கை உறை மார்பனாகிய ஸ்ரீமந் நாராயணப்பெருமானின் நாமமாகிய "ஓம் நமோ நாராயணாய: "என்னும் திருமந்திரத்தையே பக்திச்சிரத்தையுடன் ஓதி உபாசனை செய்துவந்தான். ஆகையால் அந்த அஜாமிளன் பகவானின் திருவடிப்பேற்றை அடைந்தான்.! அந்தணனாகப்பிறந்து, அவனது வருணாசிரம தர்மத்தைமறந்து, அதைப் புறக்கணித்து, மாயையினால் பீடிக்கப்பட்டு, மனம்போனபோக்கில் வாழ்க்கையை நடத்திய அந்த அஜாமிளனைத் திருத்தி, அவனைத்தன் பக்தனாக மாற்றிக் கொண்ட பகவானின் பெருங்கருணையை, இக்கதையைப் படிப்போர் நன்கு அறியலாம். எனவே கடைசி காலத்திலேகூட, ஒருவன் தனது கடந்தகால பாபங்களை நினைத்து, அதிலிருந்து தன்னைக்காக்க பெருமானைச் சரணாகதி அடைந்து, தன்னைக்காக்குமாறு வேண்டிக்கொண்டால், எத்தகைய பாவகாரியங்கள் செய்த பாபிகளின் இறுவினைக் கர்மாக்களையும் போக்கி, பகவான் தன் முக்திலோகத்திற்கு அவர்களை அழைத்துக்கொள்வான் என்ற கருத்து இதனால் வெளிப்படுவதை அறியலாம்.

ஸ்ரீகிருஷ்ணனாகிய பரப்பிரம்மம், அர்ச்சுனனுக்கு அருளிச் செய்த கீதாவுபதேசத்தின் 18.ஆம் அத்.66.ஆம் சுலோகமான சரமஸ்லோகத்தில், கூறியுள்ள அருளுறைக்கு, ஒரு வியாக்கியானம் கூறும் கதையாக இந்த அஜாமிளன் கதை அமைந்திருப்பதைக் காணலாம்.

**இக்கதையால் நாம் அறிவது :**

பகவானுடைய புனிதமான நாமஜபமாகிய நாமசங்கீர்த்தனம் கொடிய பாவங்களின் விளைவுகளில் இருந்தும், அவற்றின் தாக்கத்திலிருந்தும் நம்மைக் காக்கக் கூடியது ஆகும். எனவே இந்த நாம சங்கீர்த்தனமே அகில உலகினர்க்கும் மங்களகரமான ஒரு பக்திமுறையாகும். இதை முறைப்படி அனுதினமும் செய்வதால் ஒருவன் எல்லா நன்மைகளையும் பெற்று இன்புற்று வாழ்வான் எனபதே இதனால் அறிவுறுத்தப்படும் நியதி ஆகும்.

**நலம் தரும் மந்திரத்தை நாமும் ஓதுவோம்!**

**"ஓம் நமோ நாராயணாய:"**



## 9. இந்திரனின் பாவத்தால் ஏற்பட்ட தண்டனைகள்

நமது தாய்த்திருநாடான பாரதத்தின் மக்களால் பன்னெடுங்காலமாக பின்பற்றப்பட்டு வருவது சநாதனதர்மத்தின் அடிப்படையிலான இந்துமதம் ஆகும். நம் மதத்தின் கடவுள் கொள்கையும், தத்துவங்களும், உபதேசங்களும் கோட்பாடுகளும் மிகவும் உயர்ந்தவை. எனவேதான் இன்றளவும் அது தனித்தன்மையுடனும், பெரும்பாலான மக்களாலும் பின்பற்றப்பட்டு வரும் சிறப்புடன் திகழ்கிறது.. தொன்மையும் சிறப்பும் உடைய நமது ஹிந்து மதமானது சநாதன தர்மத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதில் விளக்கப்பட்டுள்ள தத்துவங்கள், உலகப்படைப்பு, காலநிர்ணயம், கடவுளர்களின் அருட்கருணை ஆகியனவற்றை அறிகிறபோது நமக்கு மலைப்பே ஏற்படுகின்றது.

இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போன்ற, இம் மதக்கோட்பாடுகளுள் முக்கியமானதான, உடல், உயிர் (ஆத்மா), பரமாத்மா, ஜீவாத்மா ஆகியனவற்றைப் பற்றிக் கூறப்பட்டுள்ள தத்துவார்த்தங்கள் உலகத்தின்வேறு எந்த மதத்திலும் கூறப்பட்டுள்ள மற்றொரு ஈடுஇணையற்று விளங்கும். மற்றொரு கோட்பாடு நமது கர்மவினையைப் பற்றியது. ஒரு உயிர் ஆகிய ஆத்மா, அது செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் ஏற்ற விளைவுகளைக் கண்டிப்பாக அடைந்தே தீரவேண்டும் என்பதையும், அவை அனைத்தும் ஓர் ஆத்மன் செய்யும் பாவ, புண்ணியங்களின் அடிப்படையில் அமையும் என்பதையும் அறியமுடிகிறது.

இதைத் தான் கர்மவினை (தியரி ஆப் கர்மா) என்று ஆங்கிலத்தில் அழைக்கின்றார்கள். ஒருவன் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், அல்லது தேவனாகவும், கடவுளாக இருந்தாலும் அவரவர்கள் செய்யும் செயலுக்கு ஏற்ப, தண்டனையோ நன்மையோ கண்டிப்பாகக் கிடைக்கும். அது இப்பிறவியின் கடைசிகால கட்டத்திலோ , அன்றி அடுத்தடுத்த பிறவியிலோ அனுபவித்தே ஆகவேண்டும் என்பது விதிக்கப்பட்ட விதி. இதற்கு ஏற்ப, தேவர்களின் தலைவனாகக் கருதப்படும் தேவேந்திரன், அவன் பல்வேறு காலகட்டங்களில் செய்த தீய செயல்களுக்காக, அதாவது அவன் செய்த பாப கர்மாக்களுக்காக தண்டனை பெற்றதை சில சம்பவங்கள் மூலம் உணர்த்துவதே இக்கதையின் கருவாகும்.

**புலனடக்கம் இல்லையேல், புகழ் அழிந்து போகும் :**

உலகப்பொதுமறை என்று போற்றப்படுகிற திருக்குறளில் முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்தில்.

**“ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான்**
**இந்திரனே சாலுங் கரி [தி.குறள்.25.]**

என்ற அற்புதமான ஒரு கருத்தைக் கூறியுள்ளார். திருவள்ளுவர். அதாவது ஒருவன், அவன் தேவேந்திரனாகவே இருந்தாலும், தனது ஐம்புலன்களையும் அடக்கி ஆள்பவனாக வாழவேண்டும். அவ்வாறு புலனடக்கம், அதாவது இந்திரியங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு ஒருவன் தள்ளப்பட்டால், அவன் எல்லாராலும் இகழப்படுவான். என்று கூறி, தான் கூறும் இந்தக்கருத்திற்கு

தேவேந்திரனே போதுமான ஆதாரம் ஆவான் என்று குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்.

**கௌதம மகரிஷி கொடுத்திட்ட சாபம் :**

புலனடக்கம் இல்லாமல், கௌதம மகரிஷியின் மனைவியாகிய அகல்யாவை அடைய நினைத்த தேவேந்திரன், அம்முனிவராலே சபிக்கப்பட்டான். அவன் அகல்யாவை அடையநினைத்துச் செய்த பாபகாரியத்தால், அவன் உடலெங்கும் பெண்ணுறுப்பானது ஆயிரக்கணக்கில் தோன்றியதால், அருவறுப்புத்தோற்றத்தை அவன் பெற்றான் என்பதை இத்திருக்குறள் உணர்த்துவதை அறியலாம். இதனாலேயே அவனுக்குக் கண்ணாயிரம் என்ற பெயரும் உண்டானது என்பார்கள்.

தேவேந்திரன் பெற்ற இந்தச்சாப வரலாறு, இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் வால்மீகி முனிவராலும், கம்பநாட்டாழ்வாராலும் கூறப்பட்டுள்ளது. தான் தவறு செய்துவிட்டதால், கௌதமருடைய சாபத்திற்கு அஞ்சிய தேவேந்திரன், ஒரு பூனையாகத் தன்னை உருமாற்றிக்கொண்டு ஓட நினைத்தான். எனினும், மகரிஷி

**ஆயிரம் மாதர்க்கு உள்ள அறிகுறி உனக்கு உண்டாக என்று**
**ஏயினான் அவையெலாம் வந்து இயைந்தன இமைப்பின் முன்னம்.**

**(கம்பர். பாலகாண்டம். பாடல். 478.)**

என்று

இந்திரனைச் சபித்தார். உடனே கண்ணிமைப் பொழுதில் ஆயிரம் பெண்குறிகள் அவன் உடம்பில்தோன்ற

அருவருப்பான தோற்றத்துடன் நின்ற அவன்,, அவமானப்பட்டு மறைந்துபோனான் என்று கூறுகிறார் கம்பர்.

இது மட்டுமன்றி அவன் செய்த பாபகாரியங்களையும், அதனால் அவன்பெற்ற தண்டனைகளையும் ஸ்ரீமத் பாகவதம், எடுத்துரைக்கிறது. அதன்விரிவை ஸ்ரீமத்பாகவதத்தின் வழிநின்று காண்போம். புலனடக்கம் பெறவேண்டியதின் அவசியத்தை அறிவோம்.

**குருவை மதிக்காத கொடியவன் ஆனான் :**

ஒருநாள் இந்திரனின் சபை கூடியிருந்தது. அப்போது தேவலோகமாதர்களான ரம்பா, ஊர்வசி, மேனகா, திலோத்தமா ஆகிய அனைவரும் ஆடல் பாடல்களிலும், பலவிதமான கேளிக்கைகளிலும் ஈடுபட்டு, அங்கிருந்தவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தார்கள். தன்னுடைய அந்தச்சபையில் அலங்கரிக்கப்பட்டதோர் உயர்ந்த ஆசனத்தில், தனது மனைவியான சசியோடு அமர்ந்து அனைத்துக் கேளிக்கைகளையும் ரசித்துக்கொண்டிருந்தான் தேவேந்திரன். அப்போது தேவர்களின் குருவான பிரகஸ்பதி அவையினுள் நுழைந்தார்! அதைக்கண்டு காணாதவன்போல இருந்த இந்திரன் தனது குருவை வரவேற்கவில்லை. அவருக்கு எவ்வித மதிப்பும் மரியாதையும் தராததோடு, அமர்வதற்கு ஆசனமும் கொடுக்கவில்லை. அமரச் சொல்லவும் இல்லை. எனவே தனக்கு ஏற்பட்ட அவமரியாதையைத் தாங்கிக்கொள்ள முடியாத பிரகஸ்பதி, அங்கிருந்து சென்றுவிட்டார். சற்றுநேரம் கழித்த பிறகு, இந்திரன் தன்குருவிற்கு, தான்செய்து விட்ட

அவமரியாதையை நினைத்தான். தனது குருவைச் சந்தித்து, அவரிடம் மன்னிப்புக்கேட்டு மறுபடியும் அழைத்து வந்து விடலாம் என்றும் நினைத்தான். ஆனால், இதை அறிந்த குரு பிரகஸ்பதி. தன்னுடைய யோக சக்தியால் தன்னை மறைத்துக்கொண்டார். எனவே இந்திரன் கண்களுக்கு அவர் புலப்படவில்லை. இந்திரனும் அவரைப்பல இடங்களிலும் தேடிய பிறகு, மிகுந்த சோர்வுடன் தனது சபையை அடைந்தான்.

**தேவர்கள் அனைவரும் தோற்று ஓடினர் :**

தேவர்களின் பங்காளிகள் அசுரர்கள். இவர்கள் அரக்க குணம் படைத்தவர்கள். இவர்கள் சுக்கிராச்சாரியாரைத் தங்களது குருவாகக் கொண்டு, அனைத்து மரியாதைகளையும் செய்து வந்தனர். அவரிடம் இருந்த திறமைகளுக்காக அவரை எப்போதும் துதித்தவர்களாகவே இருந்தார்கள். தமது குருவின் நல்லாசிகளோடு அவர்கள் இருந்தனர். இந்த நிலையில் தேவலோகத்தை விட்டு, குருபிரகஸ்பதி சென்றுவிட்டார் என்ற செய்தியானது அவர்களுக்குத்தெரியவந்தது. உடனே அவர்கள் இத்தருணத்தில் தேவலோகத்தின்மேல் படை எடுத்துச் சென்று, தேவேந்திரன் உள்ளிட்ட தேவர்களை விரட்டிவிட்டு அதைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்று நினைத்தனர். அதைத்தங்களது குருவிற்குத் தெரியபடுத்த, அவருடைய சம்மதத்தோடு அந்த அசுரர்கள் தேவலோகத்தை முற்றுகையிட்டு, தனது குருவின் யோசனைகள் படி, அதைக் கைப்பற்றிக் கொண்டனர். தேவேந்திரன் உள்ளிட்டோரை

அங்கிருந்தும் விரட்டியடித்தனர் தேவர்கள் தமது சொகுசுவாழ்க்கையை இழந்து தவித்தனர்.

**தேவர்களின் துன்பத்திற்கு தேவேந்திரனே காரணம் :**

அசுரர்களாகிய தமது பங்காளிகளோடு தாங்கள் செய்த போரில், எளிமையாகத் தோற்கடிக்கப்பட்டதற்கு தங்கள் குரு இல்லாததே காரணம் என்று அவர்கள் கருதினர். தேவேந்திரன் செயலுக்காக அதிருப்தியும் அடைந்தனர். இருந்தாலும், அவனுக்கு பயந்தவர்களாக, இப்பிரச்சனைக்குத் தீர்வுவேண்டும் என்றுதேவர்கள் வற்புறுத்தவே, தேவேந்தின் அவர்களை பிரம்மதேவரிடம் அழைத்துச் சென்றான். அவரிடம் தங்களுக்கு ஏற்பட்ட நிலையை அவர்கள் விளக்கிக்கூறினார்கள். பிரம்மதேவரும் இந்திரனின் செயலைக் கண்டித்தார்.

மேலும், இந்திரா! “நீங்கள் செய்த பாவத்தின் காரணமாகவே இந்த தாழ்ந்த நிலைக்குத்தள்ளப்பட்டீர்கள். சிறப்புமிக்க உங்கள் குருவான பிரகஸ்பதியை நீங்கள் உதாசீனம் செய்தீர்கள்.! ஆனால் அசுரர்களோ தங்கள் குருவை அனுதினமும் ஆராதனை செய்து வாழ்கிறார்கள்! அவருடைய அனுக்கிரகத்தைப்பெற்று அந்த அரக்கர்கள் போரிட்டதால்தான் எளிதில் உங்களை வென்று, விரட்டி அடித்தார்கள். உங்களுக்கும், உங்கள் தலைவனான இந்திரனுக்கும் ஏற்பட்டுள்ள கர்வமே இதற்குக் காரணம்” என்று எடுத்துரைத்தார்.

**குருவின் அருள் எத்தகையது?**

அப்போது பிரம்மதேவருக்கு ஒரு ச்லோகம் நினைவிற்குவர, அவர் அதை அனைவருக்கும் எடுத்துரைத்தார்.

**மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம்**

**யத் கிருபா தம் அஹம் வந்தே ஸ்ரீ -குரும் தீர – தீர- தாரணம்**

அதாவது குருவினுடைய அருள் கிடைத்தால், ஒரு ஊமையன் கூட மிகப்பெரிய பேச்சாளனாக மாறமுடியும். எழுந்து நிற்கவோ நடக்கவோ முடியாத முடவன் கூட கடுமையான ஒருமலையை நடந்தும் கடந்தும் போகமுடியும்! இது ஒரு சாஸ்திரவிதியாகும்.. முன்னேற நினைப்பவனுக்கும், மோட்சம் அடைய நினைப்பவனுக்கும் குருவின் திருவருள் எவ்வளவு உறுதுணையாக நிற்கும் என்ற அடிப்படைத் தத்துவத்தைக் கூட நீ மறந்துவிட்டாய்..! உனது செல்வம் உனது கண்ணை மறைத்தது. எனவே நீ தர்மம் தவறிவிட்டாய். குருநிந்தனை தீராத பழியாகும்.. அதைச்செய்துவிட்டாய்! என்றும் கடிந்துரைத்தார். அதனால் தர்மத்தை மீறிய உனக்கும் தண்டனை உறுதி என்று. கோபமுடன் கூறினார்.

**சரணம் அடைந்த தேவர்களுக்கு பிரம்மதேவர் தந்த ஆலோசனை :**

தன் தவற்றை உணர்ந்த தேவேந்திரனும், அந்ததேவகணங்களும் தலைகுனிந்து நின்றார்கள்.! பின்னர், சற்று நேரம் ஆலோசனை செய்தார் பிரம்மதேவர். தேவர்களுக்கு தற்போது ஒரு குரு தேவைப்படுகிறார் என்று நினைத்து, துவஷ்டா என்பவரின் மகனான விசுவரூபன்

(விஸ்வரூபர்) என்பவரைக் குருவாக ஏற்றுக்கொள்ளும் படியாக அறிவுறுத்தினார். மேலும் துவஷ்டாவும், விசுவரூபரும் அசுரர்களின் உறவினர்கள்.! என்றாலும் நீங்கள் விசுவரூபனை வேண்டினால், அவர்கண்டிப்பாக உங்களுக்கு உதவி செய்வார். குருவாகவும் அமைந்து தேவைப்படும் உதவிகளைச் செய்வார் என்றும் எடுத்துரைத்து இதைத்தவிர தற்போது வேறு வழியில்லை என்று கூறிமுடித்தார். மகிழ்ச்சி அடைந்த தேவர்கள் அவ்வாறே நடப்பதாகக் கூறி புறப்பட்டுச் சென்றனர்.

**விசுவரூபன் தேவர்களின் குருவானார் :**

துவஷ்டாவின் மகனான விஸ்வரூபரை (விசுவரூபரை) அவர்கள் வணங்கினார்கள். அவர் சோமபீதம், சுரபீதம், அன்னாதம் என்ற பெயர்களைக் கொண்ட ஓர் அபூர்வமனிதராகவும், சிறந்த அந்தணனாகவும் விளங்கினார். தவவலிமையிலும் சிறந்தவர் ஆகையால்தான் தேவர்களின் குருவாக இருப்பதற்குரிய அவரது தகுதிகண்டு பிரம்மா அவரைத்தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார். அவரைக் கண்டவுடன் அவரது தோற்றத்தால் ஈர்க்கப்பட்ட தேவர்கள் “தவத்தில் மிகப்பெரியோரே ! தாங்கள் எங்களின் குருவாகவும், புரோகிதராகவும் இருந்து அசுரர்களை வெற்றிபெற எங்களுக்கு உதவி செய்யவேண்டும்” என்று அவரிடம் வேண்டினார்கள். அதற்கு விசுவரூபர் நான் யாருக்கும் புரோகிதராக இருக்கவிரும்புபவன் இல்லை. ஏனென்றால், புரோகிதம் செய்யும் போது எனது பிரம்மதேஜஸ் குறைந்து விடும் என்று நம்புகிறவன் நான். ஆனால், தேவர்களாகிய நீங்களே வந்து எனனிடம்

கேட்பதால், உங்களுக்கு குருவாக இருந்து தேவைப்படும் உதவிகளைச் செய்கிறேன். என்று கூறினார். அதற்கு இந்திரனும் ஏனைய தேவர்களும் முழுதுமாகச் சம்மதம் தெரிவித்தனர்.

**நாராயண கவசத்தின் மேன்மை :**

தேவேந்திரனைத்தனது சிஷ்யராக ஏற்றுக்கொண்டதால், விஸ்வரூபர் அவனுக்கு நாராயண கவசத்தின் மேன்மையை எடுத்துரைத்து, அதை அப்யாசம் செய்துவைத்தார் ஓம் நமோ நாராயணாய என்ற எட்டெழுத்து மந்திரத்தையும், ஓம் நமோபகவதே வாசுதேவாய என்ற துவாதச (பன்னிரண்டு எழுத்துகளையுடைய) மந்திரத்தையும் உபாசிக்கும் முறைகளை இந்திரனுக்கு அப்யாசம் செய்து வைத்தார் விஸ்வரூபர். இவற்றை உபாசிக்கும்போது, ஒவ்வொரு அட்சரத்தையும் (எழுத்தையும்) உச்சரிக்கும் போது, நமது உடலின் எந்தெந்த உறுப்புகளைத் தொட்டு, நாராயணப் பெருமானை உள்ளூர தியானித்துக்கொண்டே மந்திரா உபாசனம் செய்யவேண்டும் என்பதை விசுவரூபர் தன்னைச் சரணடைந்த இந்திரனுக்குப் பயிற்றுவித்தார். மேலும் பகவானுடைய திரு அவதாரங்களுள் எந்தெந்த அவதாரம் எந்தெந்த தீமைகளில் இருந்து ஒருவனைக் காப்பாற்றும் என்பனபோன்ற மிகச்சிறந்த ஒரு மந்திரக்கவச நூலாகவும் இது திகழ்கிறது. மேலும், நாராயண கவசத்தைப் பக்தியுடன் ஓதுபவர்களுக்கு, பேய் பிசாசுகளின் அச்சுறுத்தல் இருக்காது. மேலும் நோய்நொடிகளும் ஒருவனை அண்டிவராது. நாராயண கவசத்தை அறிந்தவர்களின் எதிரிகள் அழிந்து போவார்கள் என்று அதன் உபயோகத்தை அறிந்த இந்திரன்

நாள்தோறும், அம்மந்திரக் கவசத்தைப் பயபக்தியுடன் பாராயணம் செய்து வந்தான். அதன் விளைவாக அவனுக்குப் பெருமளவு பலமும், வீர்யமும் உண்டானது. அதன் துணைக்கொண்டு இந்திரன் அசுரர்களின் மீது படைஎடுத்துச் சென்று, அவர்களை வென்று, மீண்டும் தனது தேவலோகத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

**குருவையே கொன்றான் கொடியவனாம் இந்திரன் :**

தங்களை நாடிவந்த தேவர்களிடம் பிரம்மதேவர் முன்பே கூறியதைப்போல விசுவரூபர் அசுரர்களின் உறவினர் என்பதை அறிந்திருந்தான் இந்திரன். அந்த விசுவரூபர், அசுரர்களின் தாய்வழிமாமன் ஆவார். எனவே அவர்கள்மீது பாசம் வைத்திருந்த அவர்தான் தேவர்களுக்காகச் செய்யும் ஒவ்வொரு யாக யக்ஞாதிகளின் போதும், அசுரர்களுக்கும் அவிர்பாகத்தை யாரும் அறியாவண்ணம் கொடுத்துக் கொண்டு வந்தார். அது ஒன்றும் அவ்வளவு பெரிய குற்றமில்லை. இத்தனை நாட்களாக, விசுவரூபரின் இச்செயலைக்கண்டும் காணாமலும் இருந்த இந்திரனுக்கு, நாராயண கவச உபாசனையால் தனக்குக் கிடைத்திட்ட வலிமையையும், திறமையையும் அறிந்ததால், மீண்டும் கர்வமும், பொறாமையும் ஏற்பட்டது தேவேந்திரனுக்கு! எனவே குருவின் இச்செயலை மேலும் சகித்துக்கொள்ளமுடியாமல் போன தேவேந்திரன், சினத்தை அடக்கமுடியாத மூடனாகிய அவன், குருவின் மீது பகைமை கொண்டான். இத்தகைய நன்றிகெட்ட குணம் அந்த இந்திரனுக்குப் பெரிதும் இருந்தது.

**பிரம்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப்பட்டான் இந்திரன் :**

ஒருவன் எவ்வளவு பெரிய நன்றியை அவனுக்குச் செய்திருந்தாலும், அதைப்பெற்றுக்கொண்டு பலனை அனுபவித்தவுடனே அதை மறந்து போகும் துரோக குணம் உடையவன் இந்திரன். எனவே, தனக்கு நாராயணன் கவசத்தை உபதேசித்து, அசுரர்களை வெல்வதற்கு அருள்செய்த குருவையே தனது வாளால் வெட்டி எறிந்தான் அந்தக்கொடியவன், எனினும் விசுவரூபரின் மூன்று தலைகளும் முறையே கபிஞ்சலம், கலவிங்கம், தித்திரி என்ற மூன்று பறவைகளாக மாறி, உயிர்ப்பெற்றுப் பறந்துபோயின. குருவைக் கொன்ற குற்றத்திற்காக இந்திரனை பிரம்மஹத்திதோஷம் பிடித்துக்கொண்டது.

**பிரம்மஹத்தி தோஷத்தைப் பிரித்துக் கொடுத்த தந்திரக்காரன் :**

தன்குருவாக இருந்து, நாராயண கவசத்தை உபதேசம் செய்து கொடுத்த விசுவரூபரை, நன்றி மறந்த தேவேந்திரன் கொன்றுவிட்டான். அதனால் அவனுக்கு பிரம்மஹத்திதோஷம் பீடித்துக்கொண்டது. இதை விரைவிலே அகற்றிக் கொள்ளவேண்டும் என்று விரும்பினான் இந்திரன். இருந்தாலும் ஒரு வருட காலம் அதன் தாக்கத்தால் பலதுன்பங்களை அனுபவித்தான். எத்தகைய உயர்ந்த பதவியில் இருந்தாலும், ஒவ்வொருவர் செய்கின்ற ஒரு கர்மாவிற்கும், அதன் தாக்கத்தால் நன்மையும் தீமையும் ஏற்படும் என்பதை அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும். அப்படி இருந்தும் பதவியில் கர்வம் பிடித்து அலைபவனான

இந்திரனுக்கு பிரம்மஹத்திதோஷம் பீடித்து வாட்டியது என்பது அனைவருக்கும் ஒரு பாடமாக அமைந்துள்ளதை அறியலாம். இத்தோஷத்தை ஒருவருடகாலம் அனுபவித்த இந்திரன், அதை மிகவும் தந்திரமாக பூமி, மரம், தண்ணீர், என்ற மூன்று இயற்கைப் பொருள்களுக்கும், (பூதங்கலுக்கு), பெண்ணினத்திற்கும் ஆக நால்வருக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டான்.

**தோஷத்திற்கு நிவர்த்தியும் கொடுத்தான்.!**

இந்திரனின் தோஷத்தை அவைகள் ஏற்றதால், தோஷத்தால் பீடிக்கப்பட்ட நிலங்கள் களர் நிலமாக மாறிப்போய்விட்டன. மரங்கள் பிசின் என்ற அழுக்குத்தோன்றி வெட்டப்பட்டன. தண்ணீருக்கு நுரை தோஷமாக மாறியது. பெண்களுக்கு மாதவிடாயாகவும், அக்காலத்தில் உதிரப்பெருக்கும் உண்டானது. இதை உணர்ந்து கொண்டு அவை இந்திரனிடத்தில் முறையிட்டபோது, அதற்கும் ஒரு தோஷ நிவர்த்தியாக ஒவ்வொருவருக்கும் வரம் கொடுத்து அவன், தப்பித்துக்கொண்டான். அதன் காரணமாக பூமியில் பிளவு, விரிசல், பள்ளம் போன்றவை ஏற்பட்டால் அவை தானாக மறைந்துபோகும் என்று பூமிக்குவரம் அளித்தான். மரத்திற்கு வெட்டப்பட்டாலும் மீண்டும் துளிர்த்து மரமாவாய் என்று வரம் கொடுத்தான். நீர் நுரையைப்பெற்றாலும், அது எங்கும் ஓடோடிச் செல்லக்கூடிய சர்வவியாபியாக விளக்கும் என்றவரத்தைக் கொடுத்தான் பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் துன்பப்பட்டாலும், அவர்கள் வயிற்றிலே கருவைச் சுமந்தாலும், பேறுக்காலம் வரையில் ஆண்களோடு கூடி

இன்புறலாம் என்ற வரத்தையும் கொடுத்தான். எனவே அவையெல்லாம் அமைதி அடைந்தன.. தனக்கு ஏற்பட்ட தோஷத்தைப்போக்கிக் கொண்டு சிலநாட்கள் இன்பமுடன் திரிந்துவந்தான் இந்திரன்.

**இந்திரனைப் பழிவாங்க துவஷ்டா செய்த யாகம் :**

தன் மகனாகவும், தேவர்களின் குருவாகவும் இருந்து இந்திரனால் கொலை செய்யப்பட்ட தனது மகனின் மரணத்திற்காக, இந்திரனைப்பழிவாங்க நினைத்தார் துவஷ்டா. எனவே ஒரு யாகத்தைச் செய்து, அதில் இந்திரனை அழிக்கக் கூடிய மந்திரங்களை உச்சாடனம் செய்து யாகத்தை நடத்தினான் துவஷ்டா என்ற விசுவரூபனின் தந்தை. அப்போது அந்த யாகத்தின் ஹோமாக்கினியில் இருந்து, துவஷ்டாவின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் பிரளய காலத்து எமனைப்போன்ற தோற்றம் உடைய ஒருவன் தோன்றினான்.!

**விருத்தாசுரன் தோன்றினான்.! விரட்டினான் தேவர்களை!!**

துவஷ்டா செய்த யாகத்தின் ஹோம அக்கினியிலிருந்து தோன்றியவன் விருத்தாசுரன் என்று அழைக்கப்பட்டான். மழைக்காலத்து கருமேகம் போன்ற தோற்றத்தைப் பெற்றிந்தான். அவனுடைய வாய் ஒரு பெரும் குகை போன்று காணப்பட்டது. அதிலிருந்த வளைந்தகோரைப்பற்கள், வெண்ணிறக் கத்தியைப்போல் மின்னின. யாகத்திலிருந்து தோன்றிய வுடன் அவன் செய்த பெரும் கர்ஜனையைக்கேட்ட அங்கிருந்த அனைவரும் பயம் கொண்டு ஓடி ஒளிந்தனர். அவன் துவஷ்டாவை வணங்கி நின்றபோது தேவர்களையும்

தேவேந்திரனையும் தாக்கிக் கொல்லுமாறு ஆணையிட்டார் துவஷ்டா!

**விருத்தாசுரன் செய்த போர்!**

தனது தோற்றத்திற்குக் காரணமான துவஷ்டாவின் ஆணைப்படி, விருத்தாசுரன் தேவர்களோடு போர்செய்ய ஆயத்தம் ஆனான். அவன் பூமிக்கும் வானத்திற்குமாகத் தன்னுடைய உருவத்தைப் பெருக்கிக்கொண்டான். தனது எதிரிகளை விரைந்து அழிக்கக்கூடிய கொடிய ஆயுதங்களைத் தன் கைகளில் பற்றிக்கொண்டு சிம்ம கர்ஜனை செய்து கொண்டு தேவர்களை நோக்கி ஓடி, அவர்களைத் தாக்கினான். அவனுடைய தோற்றத்தையும், கர்ஜனையையும் கேட்ட தேவர்களும் பயத்தோடு தாங்கள் வைத்திருந்த ஆயுதங்களை விருத்தாசுரன்மேல் எறிந்தார்கள். ஆனால், அந்த விருத்தாசுரன் அவற்றை எல்லாம் மிகச்சாதாரணமாக தனது கைகளால் பற்றிக் கொண்டு, அவற்றை உடைத்துச் சிதைத்ததோடு, தனது வாயிலும் போட்டுக்கொண்டு மென்று விழுங்கினான். கடித்தும் துப்பினான். தேவர்கள் தமது அஸ்திரங்கள் பயனற்றுப்போவதை அறிந்து, அவனுடையதாக்குதலுக்கு எதிர்நிற்கமுடியாமல் நாலாத்திசைகளிலும் பஞ்சாய்ப்பறந்து போனார்கள். தனித்து விடப்பட்ட இந்திரன், அசுரனோடு போர் செய்து பார்த்தான். எனினும் அவனையும் விருத்தாசுரனையும் பலமாகத்தாக்கி காயங்களை உண்டாக்கினான். எனவே அதற்கு மேலிருந்தால் தன்னால் உயிர் பிழைக்கமுடியாது என்று முடிவு செய்த இந்திரனும் ஓடிப்போனான்.

**பகவான் மகாவிஷ்ணுவைச் சரணடைந்த தேவர்கள் :**

தன்னுடைய அற்பப்புத்தியினாலும், அவரச செயலான குருவை வதைத்ததாலேயும், தனக்கும், தன்னுடைய தேவகணங்களுக்கும் இந்த இழிவான நிலை தோன்றியது என்பதை இந்திரன் உணர்ந்தான். எப்படியாவது விருத்தாசுரனை அழித்தால் மட்டுமே தங்களால் நிம்மதியாக வாழமுடியும் என்று நினைத்த அவன் நீண்ட ஆலோசனை செய்தான். இறுதியில் பரப்பிரம்மமான பகவான் ஸ்ரீமகாவிஷ்ணுவைச் சரணடைய முடிவெடுத்தான். எனவே எல்லாரையும் அழைத்துக்கொண்டு விஷ்ணுலோகம் சென்ற இந்திரன் ஸ்ரீமந்நாராயணனாகிய அப்பெருமானைத் தனது கணங்களோடு சரண் அடைந்தான்.

**இந்திரனுக்கு உபாயத்தைக் கொடுத்தார் பகவான் நாராயணர்:**

தன்னைச் சரணடைந்த தேவர்கள், அவர்கள் அனுபவித்துவரும் துன்பநிலையையும், இந்திரன் செயலையும் பகவானிடம் எடுத்துரைத்தனர். கொடும் தோற்றத்தை உடையவனாகிய விருத்தாசுரனைத் தங்களால் அழிக்கமுடியாது என்று கூறி புலம்பினார்கள். எனவே பிரபு மகாவிஷ்ணு அவர்கள் மீது இரக்கம் கொண்டார். அவர்களின் சரணாகதியை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு உதவி புரிவதாக முடிவெடுத்தார். எனவே அவர், இந்திரன் உள்ளிட்ட தேவர்களைப்பார்த்து, “நீங்கள் அனைவரும் அதர்வ மகரிஷியின் மகனான ததீசி என்ற முனிவரிடம் செல்லுங்கள். அவர் மிகுந்த தவசீலர். தன்னுடைய மனம், வாக்கு, இந்திரியங்களை அடக்கியவராக விளங்கும் பரமஞானி.

அவரிடம் சென்று தன்னுடைய முதுகுத்தண்டு எலும்பினைத்தானமாகத்தருமாறு வேண்டுங்கள். அதைக்கொண்டு, நீங்கள் உங்கள் பழையகுருவான பிரகஸ்பதியை துதித்து வணங்கி, அவர் மூலமாக வஜ்ராயுதம் என்ற ஆயுதத்தைச் செய்து, அதைபோரில் பயன்படுத்தினால் மட்டுமே விருத்தாசுரன் அழிவான். அவன் என் பக்தியோடு அவதாரம் செய்தவன். போரில் கொல்லப்பட்டாலும் நான் அவனுக்கு முக்தி அளிப்பேன். எனவே ததீசி மகரிஷியிடம் சென்று, இவ்வுபாயத்தை நானே கூறியதாக அம்முனிவரிடம் தெரியபடுத்துங்கள்." என்று கூறி மறைந்துபோனார் பகவான்.

**மீண்டும் தேவாசுர போர் :**

தேவர்களும், அசுரர்களும் ஒருவரோடு ஒருவர் பலமுறை போரிட்டு உள்ளார்கள். அண்ணன் தம்பி உறவு முறையினர்களான அவர்களுடைய சண்டை எப்போதும் முடியாததாக, தொடர்ந்து கொண்டே இருக்கும். இந்திரன் பழிபாதச்செயலையும், அவனைப்பழிவாங்குவதற்காக துவஷ்டா படைத்த விருத்தாசுரனைப் பற்றி அறிந்த அரக்கர்கள் விருத்தாசுரனோடு, ஆயிரக்கண்க்கில் திரண்டு போருக்கு வந்தார்கள். தனது இனத்தவர்களான தேவர்கள், இந்திரன் செய்த பிழையால் பெருமளவு துன்பப்பட்டு விட்டார்கள் எனவே தற்போது அவர்களைக்காப்பாற்றும் பொறுப்பு தனக்கு ஏற்பட்டுள்ளதை அறிந்து வெளிப்பட்டார். தேவர்களும் அவரை வணங்கி வஜ்ராயுதம் செய்துகொடுத்து, தங்களுக்கு உதவவேண்டும் என்று கெஞ்சினார்கள். மனமிரங்கிய பிரகஸ்பதியும் இதுவே ஸ்ரீமந்நாராயணனின் விருப்பம் என்பதையும் அறிந்து, தேவர்களின் கோரிக்கையை

ஏற்று, ததீசியின் முதுகெலும்பைக்கொண்டு மிகுந்த வலிமை உடையதான வஜ்ராயுதம் என்னும் ஆயுதத்தைச் செய்து கொடுத்தார். இது தனது அருளால் உண்டாக்கப்பட்ட ஆயுதம் ஆகையாலே தான், பகவான் கிருஷ்ணர் கீதையை அர்ச்சுனனுக்கு உபதேசித்தபோது, "நான் ஆயுதங்களில் வஜ்ராயுதமாக இருக்கின்றேன்" என்றும் அருளிச் செய்துள்ளார்.! (கீதை.அத்.10. விபூதியோகம்)

**தோல்வியைத்தழுவி ஓடினர் அசுரர் :**

பிரகஸ்பதி செய்துகொடுத்த வஜ்ராயுதத்தோடு இந்திரனும் அவனது தேவகணங்களும் ஒருபக்கமாகவும், விருத்தாசுரனுடைய தலைமையில் அசுரகணங்களும் போரிடத் தயாராகி ஒருவரை ஒருவர் தங்களது முழுப்பலத்தையும் பயன்படுத்திப் போர்புரிந்தார்கள். ஆனால், பகவான் விஷ்ணுவின் அருளாலும், ததிசி மகரிஷியின் தியாகத்தாலும் கிடைத்த வலிமைமிக்க வஜ்ராயுதம் தேவர்கள் வசம் இருந்ததால், அதன் தாக்கத்தை அசுரர்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. எனவே பயம்கொண்டு ஓடினார்கள். பயந்து ஓடியவர்களுக்கு விருத்தாசுரன் பலவாறாக யுத்தநியதியை எடுத்துச்சொல்லி தடுத்தபோதும், உயிருக்குப்பயந்த அவர்கள் ஓடியே போனார்கள்.

**விருத்தாசுரன் தேவேந்திரன் போர் :**

தனித்துவிடப்பட்டான் விருத்தாசுரன் என்றாலும் அவன் சற்றும் மனம்தளராமல் இந்திரனை எதிர்தான். இந்திரன் செய்த இழிந்ததும், துரோகம் நிறைந்ததுமான

குருவைக்கொன்ற ஈனச்செயலை எடுத்துரைத்து, வார்த்தைகளால் அவ்விந்திரனை வாட்டி எடுத்தான் விருத்தாசுரன். அதற்கு மறுப்புரைக்கும் நிலையில் இந்திரன் இல்லை.! என்னதான் தேவேந்திரனாக அவன் இருந்தபோதும், அவனுக்கு மதிப்பு மரியாதையும் நிலைத்து நிற்பதில்லை. அதன்காரணம் அவனுடைய கர்மவினைகளே ஆகும். எனினும் தன்னிடமிருந்த வஜ்ராயுதத்தை உடனடியாகப் பிரயோகம் செய்யாமல், இந்திரன்போரிட்டு வந்ததால், அவ்வளவு எளிதாக விருத்தாசுரனை அவன் நெருங்கமுடியவில்லை. ஒருபாணத்தை இந்திரன் விருத்தாசுரன்மேல் எறிந்தபோது. அதைத்தடுத்து விடுவான் விருத்தாசுரன். சிலநேரங்களில், அதை வைத்தே, எதிர்த்தாக்குதலையும் நடத்தினான்.! போரில் இந்திரன் அமர்ந்திருந்து வந்த ஐராவதத்தின் மத்தகத்தில் ஓங்கி அடித்தான் விருத்தாசுரன்.. ஐராவதம் பெரும்காயமடைந்து பிளிறியது.

எனவே தன் கையிலிருந்த வஜ்ராயுதத்தை வெளியில் எடுத்தான் இந்திரன். அதைக்கண்ட அசுரன் தனது அழிவிற்காகவே பகவான் ஸ்ரீமந்நாராயணனால் உண்டாக்கப்பட்டது என்பதை அறிந்த அசுரன், அதை வணங்கினான். முன் இந்திரனை அழிக்க நினைத்த துவஷ்டா, ஸ்ரீமந் நாராயணனாகிய முழுமுதற்கடவுளின் அருளால் அந்தத் யாகத்தைத் தொடங்கி நடத்தினான். ஆகையால் அந்த யாகத்திலிருந்து தோன்றிய விருத்தாசுரனும், விஷ்ணுபக்தி உடையவனாகவே யாகஹோமத்திலிருந்து தோன்றியவன்! ஆகையால், அந்த ஆயுதத்தால் தான் முக்திலோகத்தை

அடையப்போவதை எண்ணி இன்பம் அடைந்தான். இந்திரன், விருத்தாசுரனின் மேல் பல்வேறு அஸ்திரங்களைப் பயன்படுத்தித் தாக்கியபோதும், இந்திரனால் அந்த விருத்தாசுரனை வீழ்த்த முடியவில்லை. கொடூரமான தாக்குதலிலும், விருத்தாசுரன் அழிபடாமல் இருக்கவே. தனது வஜ்ராயுதத்தை இந்திரன் பயன்படுத்த வெளியில் எடுத்தான் தேவேந்திரன். அதைக் கண்டு "அடே மூடா! இந்த வஜ்ராயுதத்தை வைத்துக் கொண்டா இவ்வளவு நேரமாக போரிட்டாய். அநீதி செய்பவன். தன் செயலுக்கு தண்டனை பெற்றேதீரவேண்டும், தவறு செய்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பமுடியாது என்பதை நீ உணர்ந்து கொண்டாய். எனவே என்னுடைய படைப்பானது உனக்கு புத்திமதியைக் கொடுத்துவிட்டது. பரப்பிரம்ம பெருமானாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவின் அருளால் உனக்குக் கிடைத்த இந்த வஜ்ராயுதத்தை நீ பயன்படுத்து. அதனால், என்னுடல் அழிக்கப்படும். எனினும் நான் அந்தப் பெருங்கருணை கொண்ட பகவானின் திருவடித்தாமரையை அடைவேன். எனவே நீ வஜ்ராயுதத்தை என்மேல் பிரயோகப்படுத்துவாயாக"– என்று கூறி வஜ்ராயுதத்தின் தாக்குதலை ஏற்கத்தயார் ஆனான் விருத்தாசுரன்.!

**விருத்தாசுரனின் புகழ்மிக்க அழிவு :**

இந்திரனும் அதைப்பயன்படுத்தத் தொடங்கினான். வஜ்ராயுதத்தின் தாக்குதலால் விருத்தாசுரனுடைய வயிறு வெளியே வந்து விழுந்தது. எனினும் அவனது தலையை அந்த வஜ்ராயுதம் அறுத்தெடுக்க ஓராண்டு காலம் ஆகிவிட்டது! வஜ்ராயுதம் ஏவப்பட்ட 360 நாட்களுக்குப் பிறகு, விருத்தாசுரன்

கொல்லப்படவேண்டிய காலமாக பகவான் நிர்ணயித்த நேரம் வந்தபிறகே, அவனுடைய தலை, அறுக்கப்பட, விருத்தாசுரன் வீரமரணம் அடைந்தான். பரப்பிரம்மப் பெருமானாகிய விஷ்ணுவின் அனுக்கிரகத்தால், உண்டான் வஜ்ராயுதத்தால் தான் அழிவு பெறப்போவதற்காகவே காத்திருந்து, அதனால் உயிர் துறந்த விருத்தாசுரனுடைய பக்தி திகைப்பிற்கு உரியது. எனவே அசுரன் எண்ணப்படியே அவன் ஆன்மாவானது நேரடியாக பகவானுடைய திருவடித்தாமரையை அடைந்தது! விருத்தாசுரனின் அழிவால் தேவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். தங்களுக்கு உதவிசெய்த ஸ்ரீமந்நாராயணராகிய முழுமுதற்கடவுளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர்.

**இந்திரனைப் பிடிக்கத் துரத்திவந்த பிரம்மஹத்தி :**

தேவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர் என்றாலும், தனக்கு குருவாக வரித்துக்கொண்ட விசுவருபர் என்பவரிடமிருந்து நாராயண கவசத்தை அறிந்துகொண்டு, அதன் மூலம் புதுபலம் பெற்றதால், நன்றிகெட்டவனாகிய இந்திரன் ஒருநாள் தனது குருவையே கொன்றதையும், அதனால் அவனை பிர்மமஹத்திதோஷம் வாட்டியதையும் அறிந்தோம். அத்தகையவன் தற்போது யாகத்தின் ஹோமாக்கினியில் தோன்றியன் ஆகிய விருத்தாசுரனைக் கொன்றதால், இந்த முறையும் அவனைப் பிரம்மஹத்திதோஷம் பிடித்துக்கொள்ள வந்தது. அது தற்போது ஒரு சண்டாளப்பெண்ணின் வடிவத்தில் வந்தது.! அவள் மிகவும் கறுத்த உடலையும், கோரமான வடிவத்தையும், கோரைப்பற்களையும், நரைத்துப்போன தலைமுடியினைக்

கொண்டவளாகவும், சிவந்த நிறத்து ஆடையை அணிந்தவளுமாக, கண்டோர் அருவருக்கும் தோற்றமும் கொண்டவளாக ஓடோடி வந்தாள். பார்த்தோரை பயம் கொள்ளவைக்கும் வடிவத்தினை உடையவளாக, அவள் இந்திரனைக்கவ்விப்பிடிக்க ஓடோடி வந்தாள்!. மேலும் அப்பெண்ணின் உடலில் மீனின் முடைநாற்றம் மிகுதியாய் வீசியது.

**ஓடி ஒளிந்தான் தாமரைத் தண்டினுள் :**

தன்னைப்பிடிக்கத் துரத்திவந்த பிரம்ஹத்தியிடமிருந்து தப்பித்துக்கொள்ளத் தலைதெறிக்க ஓடினான் இந்திரன். ஆனால் பிரம்மஹத்தியோ அவனை விடுவதாய் இல்லை. பத்துத்திக்குகளுக்கும், பறந்து பறந்து அவன் ஓடினாலும், அவனுக்குப் போட்டியாய் அதுவும் ஓடித்துரத்தியது,. துன்புறுத்தியது. இப்படி பலநாட்கள் ஓடியோடி அலுத்துப்போன இந்திரன், இனியும் தன்னால் ஓடமுடியாது என்று உணர்ந்தான். எனவே அப்பெண்வடிவ தோஷத்தின் கண்களுக்குப்புலப்படாதவாறு எங்கேனும் ஒளிந்துகொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான். அப்போது அவன் மானச சரோவர் பக்கம் ஓடிக்கொண்டிருந்தான். அவன் கண்முன்னே தாமரை மலர்கள் மிகுதியாகப் பூத்துக் குலுங்கிய அழகிய தடாகம் ஒன்றைக்கண்டான். எனவே இந்திரன் அங்கிருந்த ஒருதாமரைத்தண்டினுள் நுழைந்து கொண்டான். விடாமல் துரத்திவந்த பிம்மஹத்தி இந்திரனைக்காணாமல் ஏங்கித்–தவித்தது. எப்படியும் அவன் எங்கிருந்து வெளிப்பட்டாலும் அவனைப்பிடித்துக் கொண்டு வாட்டி வதைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சுற்றித்திரிந்து வந்தது பிரம்மஹத்தி.

**பதவியும், பட்டமும் இன்றி, ஓராயிரம் ஆண்டுகள் சிறைவாசம்:**

பிரம்மஹத்திக்குப் பயந்துபோன இந்திரன், அது பிடிக்கமுடியாதவாறு தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஓராயிரம் ஆண்டுகள் அத்தாமரைத்தண்டிலேயே ஒளிந்துகொண்டு காலத்தைக்கழித்தான். பாவம்! தேவர்களின் அதிபதி, ஐராவதத்தின்மேல் ஆரோகணித்து வருபவன், தேவலோக மாதர்களின் களிப்பாட்டங்களைக்கண்டு மகிழ்ந்தவனுக்கு ஏற்பட்ட நிலையினை எண்ணிப் பார்க்கவேண்டும்.! இதற்கெல்லாம் காரணம் அவனுடைய சுயநலமும், நன்றி கெட்டதன்மையும், பதவிவெறியும், குருவையே கொன்ற பாவமும் தான் காரணம் என்பதை, இக்கதையைப் படிப்போர் நன்றாக அறியலாம். இந்திரன் பெற்ற சாபங்கள், அனைவருக்கும் ஒருபாடமும், படிப்பினையும் ஆகும். ஆகையால் மனிதர்களாயினும், தேவர்களே ஆயினும், தவறு செய்தல் கூடாது தவறுக்கும் கர்மாவிற்கும் நிச்சயமாக பலாபலன்கள் கிடைக்கும். எனவே தீமையை ஒழித்து, நன்மையைக்கடைப்பிடித்தால், அது அனைத்துலோகத்திற்கும் அந்தந்த லோக வாசிகளுக்கும் நன்மையையே தரும் என்பதைப்புரிந்து கொள்ளவேண்டும்.!

**தண்டனை அடைந்தபின், மீண்டும் பதவி பெற்றான்.!**

ஆயிரம் ஆண்டுகள் இந்திரன் தாமரைத்தண்டினுள் ஒளிந்துகொண்டே கிடந்ததால், தேவர்கள் யாகம் செய்வதும், இந்திரனுக்கு அவிர்பாகம் கொடுப்பதும்

தடைபட்டுப்போனது!. அதனால் தேவர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளானார்கள். அதனால் அவர்களின் பலம் பெரிதும் குன்றிப்போனது. எனவே தாங்கள் அசுரர்களால் மீண்டும் தாக்கப்படும் அபாயத்திற்கு ஆளாகி விடுவோம் என்று பயந்த தேவர்கள் நகுஷன் என்ற ஓர் அரசனை நாடினார்கள். அவன் யோகபலம், வித்தைகள், தவம்போன்றவற்றில் சிறந்தவனாக இருந்ததாலும், நூறு அஸ்வமேத யாகங்கள் செய்தவன் ஆகையாலும், அவனைத் தங்களுக்குத் தற்காலிக இந்திரனாக ஏற்றுக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தனர். தேவர்களின் தலைவனாகத் தனக்குக்கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள நினைத்த அந்த நகுஷன் தேவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டான். அதனால் அவன் தேவேந்திரனாக பதவி வகித்தான்.

**நகுஷனின் ஆணவமும், பாம்பாக மாறியதும் :**

தனக்கு எதிர்பாராத முறையில் இந்திரப்பதவி கிடைத்ததால், ஆணவமும் செருக்கும் கொண்டவனாக மாறிப்போனான் நகுஷன். அவனது நடத்தைகளால் தேவர்கள் பெருமையோ, நிம்மதியோ அடையவில்லை. மகரிஷிகளையும், தேவர்களையும் துச்சமாகக் கருதி செயல்பட்டான் அந்த நகுஷன். பதவி சுகத்தால், தர்மத்தை மறந்தான். அதர்ம வழியில் செயல்பட்டான். முன்னாள் இந்திரனின் மனைவியான சசியைத்தானும் அடைய வேண்டும். அவளுடன் சுகமாக வாழவேண்டும் என்று நினைத்தான். அதனால் தேவர்கள் அவன்மேல் அதிருப்தி அடைந்தனர்.

**அகத்தியரை சர்ப்பசர்ப்ப என்று அதட்டினான் நகுஷன் :**

ஒருநாள் இந்திரப்பதவியின் இறுமாப்புடன் நகுஷன் பல்லக்கில் பவனி வந்தான்.! பயணத்தின்போது தனது பல்லக்குத் தூக்கிகள் பல்லக்கைச்சுமந்து கொண்டு மெதுவாகச் சென்றனர். அதனால் பயணத்தில் மகிழ்ச்சி ஏற்படாத நகுஷன் வேகமாச்செல்லுமாறு கட்டளையிட்டான். ஸர்ப்ப ஸர்ப்ப என்று கத்தினான். ஸர்ப்ப என்றால் வேகம் என்றும், பாம்பு என்றும் இரண்டு அர்த்தங்கள் உள்ளன. வேகமாகச் செல் என்று அதட்டியும், பல்லக்குத் தூக்கிகளால் வேகமாகச் செல்ல அவர்களால் முடியவில்லை. அப்போது வெளியில் எட்டிப்பார்த்தான்.! அந்த வழியாக அகத்தியமுனிவர் சென்று கொண்டிருந்தார். ஏற்கனவே சாதுக்களையும், மகரிஷிகளையும் மதிக்காமல் அவர்களுக்குத் தொல்லைகளைக் கொடுத்துவந்தவன் இந்த நகுஷன் என்ற தற்காலிக இந்திரன். அகத்தியரைப் பார்த்தவுடன், அவர் யார், எத்தகையவர் என்பதையும் அறியாத நகுஷன், அவரை அழைத்துத் தனது பல்லக்கைத் தூக்கிக்கொண்டு வருமாறு கட்டளையிட்டான்.

**தற்காலிக இந்திரனும் சர்ப்பம் (பாம்பு) ஆகிப்போனான் :**

அகத்திய முனிவரும் ஒரு பதிலும் கூறாமல், மறுப்பும் தெரிவிக்காமல், பல்லக்குத் தூக்கிகளோடு சேர்ந்து தானும் அப்பல்லக்கைத் தூக்கிச் சென்றார். அப்போதும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. எனவே அவன் சர்ப்ப சர்ப்ப என்று அதட்டினான். சம்ஸ்கிருதத்தில் சர்ப்பம் என்றால் விரைவாக என்று அர்த்தம். அவர்கள் விரைவாகவும் வேகமாகவும் நடக்கவேண்டும் என்பதற்காக அவ்வாறு அதட்டினான்.

பல்லக்கில் அமர்ந்து வருவதோடு இறுமாப்புடன் தங்களை அலட்சியப்படுத்தி சர்ப்ப சர்ப்ப என்று அதட்டிய அவன் சர்ப்பமாக, அதாவது பாம்பாக மாறவேண்டும் என்று சாபமிட்டார் அகத்தியர். மகரிஷியின் வாக்கு பலித்தது. உடனே அவன் பாம்பாக மாறிப்போனான்.

(ஆனால் உண்மையான இந்திரன் மனைவியான சசி தேவியை இவன் அடையநினைத்து, அவளிடம் சென்றபோது, கோபம் கொண்ட சசி, அவனைப் பாம்பாகுமாறு சபித்தாள். அதனால் அவன் பாம்பாகிப்போனான் என்றும் சிலநூல்கள் கூறுகின்றன.)

எவ்வாறு இருந்தாலும், மகரிஷிகளுக்கு இழைத்த தீமையின் பயனாகவும், மாற்றான் மனைவியை அடைய நினைத்த பாதகச்செயலுக்காகவும், இந்திரப்பதவியில் இருந்த அரசன் பாம்பாகமாறிப்போனதை அறிகின்றபோது தவறு செய்பவர்களுக்குத் தண்டனை உறுதி என்பது இச்சம்பவத்தாலும் நிரூபிக்கப்படுவதை அறியலாம்.

**மீண்டும் காலி இந்திரப்பதவி :**

இந்திரனாக இருந்த நகுஷன் பாம்பாக மாறிப்போனதால், தேவர்கள் தங்களுக்கு மீண்டும் இந்திரன் இல்லாமல் தவித்தனர். அதனால் யாக யக்ஞாதிகள் செய்வது நின்றுபோனாதால், தேவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருந்த அவிர்ப்பாகம் கிடைப்பதில்லை.

**பிரம்மஹத்தி நீங்கி வெளியில் வந்தான் இந்திரன் :**

எனவே வாட்டமுற்று இருந்த அவர்கள், நீண்ட ஆலோசனைக்குப்பிறகு இந்திரனுக்காக ஒரு அசுவமேத

யாகத்தைச் செய்தார்கள். தன்னைத்துரத்தி வந்த பிரம்மஹத்திக்குப் பயந்து வாழ்ந்திருந்த இந்திரன் அன்னமும் ஆகாரமுமின்றி இந்த ஆயிரம் ஆண்டுகளையும் தாமரைத்தண்டினுள் கழித்துவிட்டான். தற்போது, மீண்டும் அசுவமேதயாகம் செய்யப்பட்டதால், புத்துணர்வு பெற்றவனாக, ஈசான மூலையின் அதிபதியான பரமேசுவரனைத் துதித்தவண்ணம் தாமரைத்தண்டிலிருந்து வெளியே வந்தான் அதைக்கண்டு தேவர்கள் மகிழ்ச்சி அடைந்து, அவனை மீண்டும் இந்திரனாக்கி அவனிடம் தேவலோகத்தை ஒப்படைத்தனர். தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை மனதில் கொண்டவனாக இந்திரன் தேவலோகத்தை ஆண்டுவந்தான்.! இந்திரன் செய்த செயல்களுக்கு, அவன் அடைந்திட்ட இன்னல்கள் அனைவருக்கும் ஒரு படிப்பினை ஆகும்.

சதுர்வர்ணம் என்ற நால்வகை மனிதப்பிறவியின் எப்பிரிவைச் சேர்ந்தவனாக ஒருவன் இருந்தாலும், அல்லது தேவேந்திரனைப்போன்ற உயர்ந்த நிலையில் இருந்தாலும், அவரவர்கள் செய்யும் கர்மாக்களின் அடிப்படையில், அவர்களுக்குப் பாவ புண்ணியங்கள் வந்துசேரும், அக் கர்மப்பலனை ஒவ்வொருவரும் அனுபவித்தே தீரவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இந்திரன் தன்னுடைய பாவவினைகளால் துன்புற்ற கதைச்செய்திகளை ஸ்ரீமத்பாகவதத்தின் ஆறாம் காண்டத்தால் அறிகிறோம். எனினும் அதனுடைய 13.ஆம் அத்தியாயம் இந்திரனைப்போன்று பாவச்செயல்கள் புரிந்த

பாவியர்களுக்கு ஏற்படும் துன்பங்கலை விளக்கமாக எடுத்துரைக்கிறது.

**இதைக் கற்பதால் விளையும் பயன்கள் :**

மேலும் இக்கதையைக் கேட்பதாலும், கூறுவதாலும் மனிதர்களுக்கு ஏற்படும் பயன்களாக, இந்தப் பதின்மூன்றாம் அத்யாயத்தின் 23.ஆம் ஸ்லோகமான இறுதிச் சுலோகத்தில் வியாசபகவான் கூறுவதைக்காண்போம்.

**தன்யம் யசஸ்யம் நிகிலாக மோசனம்**

**ரிபுஞ்சயம் ஸ்வஸ்தி அயனம் ததாயுஷம் (பாகவத புராணம்.)**

**(6-13-23.)**


அதாவது இதைக்கற்பதால் தன்யம். அதாவது செல்வம் பெருகும், யாஸ்யம் புகழ் உண்டாகும், நிகிலா அக மோசனம் -- எல்லாப்பாவங்களில் இருந்தும் விமோசனம் கிடைக்கும், ரித்யும் ஜயம் – சத்துரக்களாகிய எதிரிகளை தாக்கி அழித்து வெற்றியைக்கொடுக்கும், ஸ்வஸ்தி அயனம் – அதாவது எல்லாமங்களகரமான நிகழ்வுகளையும் தொடர்ந்து அளிக்கும், அவ்வாறே ஆயுஷ்யம் – நீண்ட ஆயுளையும் கொடுக்கும் என்பது இந்தச்சுலோகத்தின் பொருளாகும்.

எனவே, ஒருவன் எவ்வளவு பாவச்செயல்களைச் செய்தாலும், அதிலிருந்து அவன் விடுபடவேண்டுமென்றால், அவன் தன் தவற்றினை உணர்ந்து, வருந்தி, தன்னைக்காப்பாற்றுமாறு பரப்பிரம்மபெருமானாகிய ஸ்ரீமந்நாராயணனின் திருவடித்தாமரைகளைத் தஞ்சம் அடையவேண்டும். அப்படித் தஞ்சம் அடைந்து சரணாகதி செய்தால், பெருமான் நிச்சயம் அதற்கு வழிகாட்டி

அருள்புரிவார் என்பதற்கு இந்திரனுடைய இந்த வரலாறு சான்றாகும். இதைப்புரிந்துகொள்வதன் மூலமாக ஒருவன் தன்னுடைய அனைத்துப்பாவங்களில் இருந்தும் விடுபடுவான். மேலும் அதன் தாத்பரியத்தைப் புரிந்து செயல்படுபவர்களுக்கு, எதிரிகளை வெற்றிகொள்ளும். திறமையையும், வழிவகைகளையும் பகவான் கொடுத்தருள்புரிவார் என்பதையும் உணர வேண்டும். மங்களகரமான இந்த வரலாற்றை அடிக்கடி படிப்பதன் மூலமும், சிரவணம் செய்வதன் மூலமும் ஒருவர் தன்வாழ்நாளில் அனைத்து மங்களங்களையும் பெறுவார் என்பதே இதில் கூறப்பட்டுள்ள நியதி ஆகும்.

**நாமும் படிப்போம்.! நல்வாழ்வு பெறுவோம்!**

**பகவான் திருவடியைப் பற்றுவோம்! பேரின்ப நிலை அடைவோம்.!!**



## 10. முனிவர்கள் சாபத்தை முடித்துவைத்த ஹரிபகவான் !

புராண இதிகாச காலங்களில் பற்பல முனிவர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை நாம் அறிகிறோம். அவர்களுள் தமிழ்முனிவன் என்றும், குறுமுனிவன் என்றும், (குட்டையான தோற்றம் உடையவர்) போற்றப்பட்டவர் அகத்தியமுனிவர் என்பவராவார். இந்த அகத்தியமுனிவரால் சாபத்தைப் பெற்ற ஓர் அரசன், தனது அடுத்த ஜன்மத்தில் (பிறவியில்) ஒருயாணையாகப் பிறந்தான். தேவபாலர் என்ற வேறு ஒரு முனிவரின் சாபத்திற்கு ஆளான ஒரு கந்தர்வன் ஒரு முதலையாகத் தனது அடுத்தபிறவியை எடுத்தான். இந்த இருவருடைய சாபங்களை பகவான் ஸ்ரீஹரி எவ்வாறு நீக்கி, அவர்களுக்கு அருள்பாலித்து, அவர்களது முன்பிறவி சாபங்களை நீக்கி, மேன்மையை அளித்தார் என்பதைப்பற்றிய ஓர் அற்புதக்கதையானது, கஜேந்திரமோட்சம் என்னும் பகுதியில் ஸ்ரீமத்பாகவதத்தில் இடம் பெற்றுள்ளது.

### மன்வந்த்ரமும் பகவான் நாமமும் :

நான்காம் மன்வந்திரத்தில் இவ்வரலாறு நடைபெற்றது. அப்போது தாமசர் என்பவர் மனுவாக இருந்தார். அந்த மன்வந்திரத்தில் விஷ்ணுபகவான், ஹரிமேதா என்பவரின் மனைவியான ஹரிணியின் கருவிலிருந்து உருவானார். ஆகையால் அம் மன்வந்திரத்தில் பகவான் பெயர் ஸ்ரீஹரி என்பதாகும். எனவே கஜேந்திரனுக்கு மோட்சம் அளித்த பகவானின் திருநாமம் ஸ்ரீஹரி என்பதாகையால், இக்கதையில் பகவானின் திருப்பெயர் ஸ்ரீஹரி என்றே பயன் படுத்தப்பட்டுள்ளது.

**பெருங்கருணை கொண்டவர் பகவான் ஸ்ரீஹரி :**

மனிதர்களுக்கு எல்லாம் மேம்பட்டவராக இருக்கின்ற கடவுளை நாம் பகவான் என்றும், பெருமான் என்றும், இறைவன் என்றும், பிரம்மம் என்றும், பரப்பிரம்மம் எனவும், பரமபுருஷர் என்றும் பலபெயர்களில் அழைக்கின்றோம். பகம் என்ற சம்ஸ்கிருதச் சொல்லிற்கு ஆறு என்ற ஒருபொருளும் உண்டு. ஞானம், சக்தி, பலம், தேஜஸ், வீர்யம், ஐஸ்வர்யம் ஆகிய ஆறு சிறந்தகுணங்களைப் பெற்றவராகிய பெருமானை பகவான் என்று அழைப்பது மிகவும் பொருத்தமாகும். மனிதர்களாக இருந்தாலும் சிங்கம், யானை போன்ற விலங்கினங்களாக இருந்தாலும், முதலை மீன்போன்ற நீர்வாழ்பிராணிகளாக இருந்தாலும், இந்தப்பகவான் ஆகிய கடவுளை அன்றாடம், வணங்குபவர்களுக்கு அருள்புரிபவர் இப்பெருமான். ஆபத்துக்காலத்தில் அவரை நினைத்து கொண்டவர். பகவான் ஸ்ரீஹரியாகிய அந்தக்கடவுளாகிய இறைவன் வேண்டும் வரங்களைக் கொடுப்பார். மனிதன் மட்டுமல்லாமல், யார் ஆபத்தில் இருந்தாலும் அப்போது தங்களுக்கு உதவி செய்யுமாறு மனதார வேண்டுபவர்களுக்கு அந்தப்பெருமான் ஓடோடிவந்து உதவிகள் செய்வார் ஆபத்தைப்போக்குவார். சாபங்களை நீக்குவார்.

இந்தச் சிறுகதையில் ஸ்ரீஹரியாகிய பெருமான் முதலில் குறிப்பிட்டதைப்போல, ஒரு யானைக்கு ஏற்பட்ட துன்பத்தை எவ்வாறு போக்கினார் என்பதையும், ஒரு முதலைக்கு ஏற்பட்ட சாபத்திற்கு எப்படி சாப விமோசனம் தந்து அருள்செய்தார் என்பதையும் பார்க்கப்போகிறோம்.

முன்வினைப்பயனால், ஒரு யானையாக மாறிப்போன மிகவும் வலிமையும் மதமும்கொண்ட ஒரு யானையானது, ஒருபெரிய நீர்நிறைந்த தடாகத்தில் இருந்த முதலையிடம் மாட்டிக்கொண்டதால், அது முதலையால் அழிக்கப்படும் நேரம் வந்து விட்டதை அறிந்து கொண்டு, தன்னைக் காத்தருள வேண்டும் என்று ஸ்ரீஹரி பகவானிடம் அந்த யானை வேண்டியதையும், அதைப்பகவான் காப்பாற்றியதையும் ஒரு கதைச் சம்பவத்தின் மூலம் ஸ்ரீமத்பாகவதம் விளக்குகிறது. இக்கதையானது, ஸ்ரீமத்பாகவதம் எட்டாம் ஸ்கந்தம் (காண்டம்) இரண்டு, மூன்று, நான்கு ஆகிய மூன்று அத்யாயங்களிலும் வர்ணிக்கப்படுகிறது.

தன் பலத்தையெல்லாம் நீர் நிலையில் இழந்துவிடக்கூடிய அந்த யானையானது, அதற்கு தீமையைக்கொடுத்துத் துன்புறுத்திய முதலையின் வாயிலிருந்து அவ்வாறு உயிர் மீண்டது. பெருமான் ஸ்ரீஹரி அந்த யானையை எவ்வாறு காத்தருளினார் என்பதையும் ஸ்ரீமத்பாகவத புராணம் எடுத்துரைப்பதன் மூலம், மனித வர்க்கம், மட்டுமன்றி, எவ்வகை உயிராக இருந்தாலும், அவை கடவுள் சிந்தனையை உடையனவாகவும், தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினாலும், உடனுக்குடன் உதவி செய்யக்கூடிய பெருங்கருணாமூர்த்தி அந்தப்பகவான் என்பதை நிரூபணம் செய்கிறார் வியாசர். ஆக, பகவான் ஆகிய பரம்பொருளின் கருணை இருந்தால், ஒருவன் எத்தகைய ஆபத்திலிருந்தும் காப்பாற்றப்படுவான் என்னும் கருத்தைக்கூறுவது இக்கதையாகும்.

**பூலோகமும் தேவலோகங்களும் :**

நாம் பூலோகம் என்ற பூமிப்பகுதியில் வாழ்ந்து வருகிறோம். வடமொழியில் பிருத்வி என்றால் பூமி என்பது பொருளாகும். எனவே நாம்வாழும் இந்தப்பகுதி பூலோகம் என்று அழைக்கப்படுகிறது. இப்பூலோகத்தில், இந்தப்பிறவியில் நாம் செய்கின்ற பாவங்களுக்கும், புண்ணியங்களுக்கும் ஏற்றவாறு நமக்கு அடுத்தபிறவி கிடைக்கும். புண்ணியம் செய்தவர்கள் மனிதனைவிட உயர்ந்த பிறவியான தேவர்களாகவும், அத்தேவர்களின் பலபிரிவினர்களான கந்தர்வர்கள், வித்யாதரர்கள், யக்ட்சர்கள், சித்தர்கள், சாரணர்கள், கின்னரர்கள், அப்ஸரர்கள் போன்ற பல உயர்பிறப்புகளை அடைவார்கள். அவர்கள் வாழ்கின்ற அந்தப்பகுதி அவர்களுக்குரிய லோகமாக அழைக்கப்படும். எனவே கந்தர்வர்கள் வாழந்த இடம் கந்தர்வலோகம் எனப்பட்டது.

**திரிகூட மலைவளம் :**

தாமச மனுவின் காலப்பகுதியான நான்காம் மன்வந்திரத்தில் பாற்கடலின் இடையில் திரிகூடம் என்ற ஒரு உயர்ந்த மலை இருந்தது. இத் திரிகூடமலை எண்பதாயிரம் மைல்கள் உயரமுடையதோர் கண்ணைக்கவரும் மலையாகும். அது வெள்ளி, இரும்பு, தங்கம், ஆகியவற்றால் ஆக்கப்பட்ட மூன்று உச்சிகளை உடையதாக இருந்தது. இதுதான் பிற்காலத்தில் திரிபுரம் என்றபெயரோடும் அழைக்கப்பட்டுள்ளது. மூன்று உச்சிகளை உடையது ஆகையாலேதான் அது திரிகூடமலை என்றே

அழைக்கப்பட்டது. மேலே கூறப்பட்டமூன்று சிகரங்கள் மட்டுமல்லாமல், வேறுபல உலோகங்களாலும் உண்டாக்கப்பட்டிருந்த பலசிகரங்களை உடையதாகவும் அம்மலை விளங்கியதால், அது மேலுலக வாசிகளின் இன்பச் சுற்றுலாத்தலமாக விளங்கியது.

**திரிகூடத்தின் இயற்கை எழில் :**

மேலும், அழகிய மலர்கள் பூத்துக்குலுங்கும் வானளாவிய மரங்கள், செடி கொடிகள், தண்மையான (குளிர்ந்த) புதர்கள் போன்றவை நிறைந்திருந்ததால், பச்சைக்கம்பளம் போர்த்திக் கொண்டுள்ள அழகிய இயற்கைப்பெண்ணாக அப்பகுதி காட்சி அளித்தது. அவை மட்டுமன்றி எண்ணற்ற நீர்வீழ்ச்சிகளின் தோற்றத்திற்கு அம்மலை பெயர் பெற்றிருந்தது. நீர் வீழ்ச்சிகளின் சலசலக்கும் ஓசையானது வானுலக கந்தர்வர்களும், வித்தியாதரர்களும் பாடும் தெய்வீக கானத்திற்கு பக்கவாத்தியமாக முழங்கும் மத்தளத்தின் ஓசையாய் எங்கும் எதிரொலித்தது. இம்மலையைப்பற்றியும், அதைச் சுற்றியிருந்த இயற்கைச் சூழலைப்பற்றியும் வர்ணித்துக் கூறுகிற வேதவியாசரின் கற்பனைத்திறன் படிப்போர்க்கு மலைப்பைத்தருவனவாகும். இவ்வர்ணனைகளை ஆழ்ந்து படித்தறியும் திறமை ஒருவருக்கு ஏற்பட்டால், அவர் தற்காலத்தில் பல விருதுகளைப் பெறும் கவிஞர்களுக் கெல்லாம் மாபெரும் கவிஞராகிப் போவார் என்றும் கூறலாம்.

உயர்ந்து நிற்கும் திரிகூடமலை, அதன் அடியில் மலர்ச்சோலை. அதன் நடுவே அம்மலையிலிருந்து

பெருக்கெடுத்து ஓடிவரும் நன்னீரெல்லாம் திரண்டு நிரம்பியிருந்த ஓர் அழகிய ஏரி என்று இயற்கையின் பேரழகை வாரியிறைத்துக் கொண்டிருந்தது அப்பகுதி. இவ்வளவு வர்ணனை விளக்கங்கள் தேவைதானா? என்ற வினா எழுப்புவோர்களுக்கு, விடை என்னவென்றால், இம்மலையைப் பற்றிய வர்ணனைகளையே ஒரு அத்தியாயத்தில் பாடியுள்ளார் வியாசபகவான் என்கிறபோது, இவ்வளவு கூட விளக்கம் தரவில்லை என்றால், வியாசர் நம்மை மன்னிக்கமாட்டார்.! எனவே தான் இவ்வர்ணனைவிளக்கம் என்பதையும் கூறிக்கொள்கிறேன். ஆக, தாமரை மலர்கள் பூத்ததோர் அழகிய தடாகமாகக் காண்போரைக் கவர்ந்துகொண்டிருந்தது அந்தப்பகுதி.

**ரிதுமத் மலர்ச்சோலை :**

அங்குள்ள மலைக்குகை ஒன்றின் அருகில், வருணபகவானுக்குச் சொந்தமான உத்யானம் (மலர்ச்சோலை) ஒன்று இருந்தது. அந்த அழகு மலர்ச்சோலை ரிதுமத் என்னும் பெயரோடு விளங்கிற்று. அம்மலர்ச் சோலையின் நடுவில், தாமரைமலர்கள் பூத்துக்குலுங்கும் நன்னீர்த் தடாகம் ஒன்று இருந்தது. அதைச்சுற்றிலும் மணம் வீசும் பலவகை மலர்கள் எல்லாம் பலவண்ணங்களில் பூத்துக்குலுங்கிக் கொண்டு இருந்ததால், காண்போரைக் கவரக்கூடியதாக அது இருந்தது. அத்தகைய தடாகத்திற்கு தன்மனைவியோடு வந்த ஹு ஹு என்ற கந்தர்வன் ஒருவன் அதில் குதித்து, நீராடி விளையாடினான்.

**தேவபாலர் கொடுத்த சாபத்தால், முதலையானான் கந்தர்வன் :**

அந்தச் சமயத்தில் தேவபாலர் என்ற பெயருடைய மகரிஷி ஒருவர் அந்தத்தடாகத்தில் நின்றவாறு மந்திரங்கள் ஜபித்துக்கொண்டும், பகவானைக்குறித்த யோகநிலையிலும் ஆழ்ந்திருந்தார். அதைக்கண்ட அந்தக்கந்தர்வன் நீருக்குள்ளேயே நீந்திவந்து, விளையாட்டுத்தனமாக அந்த மகரிஷியின் காலைப்பற்றி இழுத்தான். முதலைதான் தன் கால்களைப் பற்றிக்கொண்டது என்று நினைத்து பயங்கொண்டு தன் காலை உதறினார். ஆனால் அப்போது நீருக்குள் இருந்து கந்தர்வன் வெளியில்வந்து முனிவரைக்கண்டு சிரித்தான். கந்தர்வனின் இந்த செயலைக்கண்டு கடுங்கோபம் அடைந்தார் முனிவராகிய தேவபாலர். அவனைச் சபிக்கவேண்டும் என்று நினைத்தார். தண்ணீருக்குள் முதலைபோல் வந்து காலைப்பற்றி இழுத்ததால் அவனை முதலையாகிப்போகுமாறு அந்த முனிவர் சாபம்கொடுத்துவிட்டார். பயந்து போன அந்தக்கந்தர்வன் தனது தவற்றை உணர்ந்தான். தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். தனக்கு சாபவிமோசனம் தருமாறும் கெஞ்சினான். அதனால் மன இரக்கம் கொண்ட அந்த மகரிஷி பகவான் விஷ்ணுவின் சுதர்சனச் சக்கரத்தால், உனது வாய் பிளக்கப்படும் போது உனது சாபம் நீங்கும். என்று சாப விமோசனம் கொடுத்தார். நடந்த நிகழ்ச்சிகளைக்கண்ட ஹுஹு என்ற கந்தர்வனின் மனைவி மிகவும் வருந்தினாள். வேறு வழியின்றி தனது கந்தர்வலோகத்திற்குச் சென்றுவிட்டாள். இவ்வளவில்,

முனிவரின் சாபம் பலித்ததால், அந்தக் கந்தர்வன் முதலையாகமாறி மேலே குறிப்பிடப்பட்ட அந்தத் தடாகத்திலேயே வாழ்ந்துவந்தான்.

**அகத்தியரின் சாபமும், யானையாய் மாறிய இந்திரத்துய்ம்னனும்:**

தாமசன் என்பவர் நான்காம் மனுவாக இருந்த அதே காலத்தில், பாண்டியநாட்டை இந்திரத்துய்ம்னன் என்ற ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் சிறந்த விஷ்ணுபக்தன். விஷ்ணு பகவானுக்குரிய விரதங்களை மேற்கொண்டும், நீதிநெறிமாறாமலும் தன்னுடைய நாட்டை அவன் ஆண்டுவந்தான். நாராயண பக்தியின் மேலீட்டால், குலபர்வதம் என்ற இடத்திற்குச் சென்ற அவன், அரசபதவியில் ஆசையின்றி, மகுடத்தைத்துறந்து ஜடாமுடி தரித்தவனாக தவம்செய்யத் தொடங்கினான். தவத்தின் போது மௌனவிரதத்திலும், பகவான் ஆராதனையிலும் மனம் ஒன்றிப்போய் இருந்தான் இந்திரத்துய்ம்னன். ஸ்ரீமந்நாராயணனுடைய மந்திரத்தை ஓயாமல் உச்சரித்துக் கொண்டு இருந்தான்.

அப்போது ஒருநாள் அகத்தியமுனிவர் தன்னுடைய சீடர்களுடன் அங்குவந்தார். தியானத்தில் திளைத்திருந்த அவன், அங்குவந்த முனிவரைக் கவனிக்காமலும், அவரை வரவேற்காமலும், இருந்துவிட்டான். இதைக்கண்ட அகத்தியர் மிகுந்த கோபம் அடைந்தார். தன்னை அவன் அவமதித்து விட்டதாகக் கருதினார். எனவே தான் வந்ததைக்கவனியாமல் அலட்சியம் செய்த அவனை யானையாய்ப்போகுமாறு சபித்துவிட்டார் அகத்தியர். அதைத்தெரிந்து கொண்ட அவன்,

அதற்காக மனம் வருந்தாமல், முனிவர்கொடுத்த சாபத்தை ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும் என்று முடிவுசெய்தான். எனவே அந்த அரசன் யானையாக மாறிப்போனான். மேலே கூறப்பட்டதான் ரிதுமத் என்ற பகுதியின் உத்யானத்தில் (மலர்ச்சோலைக்கருகில்) யானைகளின் அரசனாகவும், பலயானைகளைப் பட்டத்து மகிஷிகளாகக் கொண்டவனுமாகக் கம்பரீத்துடன் வாழ்ந்துவந்தான். அப்போது அவனுக்கு கஜேந்திரன் என்ற பெயர் ஏற்பட்டிருந்தது. கஜபதி என்றும், அதாவது யானைகளின் தலைவன் என்ற பெயரிலும் அவன் அழைக்கப்பட்டுவந்தான்.

**கஜேந்திரனுக்கு ஏற்பட்ட துன்பம் :**

எனவே முதலையாக மாறிப்போன கந்தர்வனும், யானையாக மாறிப்போன அரசனும், ரிதுமத் பகுதியிலேயே வாழ்ந்துவந்தனர். ஒருநால் கஜேந்திரன் தனது பெண்யானைகளுடனும், குட்டிகளோடும், அந்த உத்யாவனத்திற்கு வந்தது.. அங்கிருந்த பூம்பொய்கையில் தனது பெண்யானைகளோடும், குட்டிகளோடும் நீராடும் விருப்பத்தின்மேலீட்டால், அதற்குள் இறங்கியது. இந்த கஜேந்திரயானை. விருப்பம் தீர நீராடியதோடு, தன்னுடைய குட்டியானைகளையும் குளிப்பாட்ட நினைத்து, தன் தும்பிக்கையால் நீரை உறிஞ்சி எடுத்து குட்டிகளின்மேல் பாய்ச்சி குளிப்பாட்டி, தனது கடமையைத் தீர்த்துக்கொண்டிருந்தது. பின்னர் அத்தடாகத்திலிருந்த பொன்னிறமான அழகிய ஒரு பூவைப்பறித்து, அதைப் பகவானுக்குச் சூட்டினால், பகவான் மனம் மகிழ்வாரே என்னும் தன்னுடைய முந்தைய பிறவியின் பூர்வஜென்ம

எண்ணத்தால், மேலும் சற்று ஆழமான பகுதிக்குச் சென்று அப்பூவைப்பறிக்க நினைத்தது. அப்போது தேவபாலரின் சாபத்தால், முதலையாகிப்போன கந்தர்வனும் அக்குளத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்ததால், கஜேந்திரன் ஆழப்பகுதிக்குள் இறங்கிவிட்டதைப் பார்த்தவுடன் முதலையானது யானையின் காலைக் கெட்டியாக கட்டிக் கொண்டது. கஜேந்திரன் அரசனாகையாலும், மிகுந்தபலம் உள்ளவனாக இருந்ததாலும், முதலையின் பிடியிலிருந்து எளிதாக தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தான்.. காலை விடுவித்துக்கொள்ள முயன்றான்.. ஆனால் முடியவில்லை.!

காரணம் அவை போராட்டத்தைத்தொடங்கிய இடம்தான்.! யானை மிகுந்த வலிமை படைத்தது என்றாலும், அது தண்ணீருக்குள் இறங்கிவிட்டதனால், அதன்பலம் குன்றிப்போனது. அதே முதலையானது தண்ணீரை விட்டு வெளியே வந்துவிடுமானால், யானை என்ன, ஒருசாதாரண நாயும் கூட அம்முதலையைக்கடித்துக் குதறித் தள்ளிவிடும்.. தின்றுவிடும். இதைத்தான் தன்னுடைய உலகப் பொதுமறையான திருக்குறளில்.

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற (தி.குறள்.495)**

**காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு (தி.குறள் 500)**

என்ற மேலே கண்ட இரண்டு திருக்குறட்பாக்களிலும் இடனறிதல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

**ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்த போராட்டம் :**

இவ்வாறாக முதலையால் கௌவப்பட்ட தனது காலை விடுவித்துக்கொள்ள நினைத்து யானை போராடியது. அதனால் முடியாமல்போனதை அறிந்த அதனுடைய பெண்யானைகள் எல்லாம் தனது கணவனான கஜேந்திரனுக்கு உதவிசெய்ய மிகப்பெரும் யானைக்கூட்டமே திரண்டுவந்து கஜேந்திரனை இழுக்கும் முயற்சிப் போராட்டத்தில் ஈடுபட்டன. எனினும் ஒருபயனும் இல்லை.!

கஜேந்திரன் இந்த ஆபத்தில் மாட்டிக்கொண்டதால், அதற்கு உணவும் கிடைக்கவில்லை. உணவை எடுத்துக்கொள்ள முதலையும் விடவில்லை. ஆனால் முதலையோ தண்ணீருக்குள்ளேயே இருந்ததால் அதற்கு வேண்டிய ஆகாரமும் கிடைத்தது. எனவே அக்கஜேந்திரன் என்ற யானையானது மிகவும் சோர்வடைந்து முழுதுமாக முதலையால் விழுங்கப்படும் நிலைக்கே வந்து விட்டது. ஆம். கிட்டத்தட்ட அந்தத்தடாகத்தின் மையப்பகுதிக்கு அது முதலையால் கவர்ந்திழுத்துக் கொள்ளப்பட்டது. தான் முதலையால் உண்ணப்பட்டு விடுவோமோ என்னும் அச்சமும் அதன் மனத்தில் ஏற்பட்டதால், மிகவும் அதிர்ந்து போனது கஜேந்திரன்.

இறுதியாக அது ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.! இனிமேல் தன்னுடைய முயற்சியினாலோ, தன்னுடைய சகாக்களின்

முயற்சியாலோ தான் உயிர்பிழைக்கமுடியாது என்பதை அது உணர்ந்தது. ஆதிமூலமாக விளங்கும் பகவான் ஒருவனே தன்னைக்காத்து ரட்சிக்கக்கூடியவன் என்பதையும், எனவே அப்பெருமானைச் சரணாகதி அடைந்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டுவதுதான் ஒரே வழி என்றும் முடிவெடுத்தது.

**பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி**
**ததஹம் பக்தயுபஹ்ருதம் அஸ்னாமி ப்ரயதாத்மந:**

**(ப.கீதை.அத்9.ஸ்ச்லோ.26)**

என்பது பக்தர்களுக்கு பகவான் கிருஷ்ணர் கூறும் எளிய வழிபாட்டுமுறையாகும். அதாவது தன்னுடைய பக்தர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அளிப்பது எனக்கு எவ்விதச் சிறுபொருளாக இருந்தாலும் அதை எனக்கு பிரதி உபகாரம் கருதாமல் ஏற்றுக் கொள்வேன் என்று கூறியுள்ளதை இங்கு நினைவில் கொள்ளலாம்.. தங்கத்தாமரையைப் பறித்து, அதைத்தனக்கு அர்ப்பணம் செய்யநினைத்த கஜேந்திரனின் குற்றேவலை ஏற்றுக்கொள்ள நினைத்தார் பகவான் ஸ்ரீஹரி. மேலும் அந்த கஜேந்திரன் பெருமானைச் சரணடைய நினைத்தது. அப்போது தனது பூர்வஜென்மப் பயனாக அந்த யானைக்கு பகவானைப் பூஜிப்பதற்குரிய சில மந்திரச் சுலோகங்கள் ஞாபகத்திற்கு வந்தன. ஆனால் தன்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றக்கூடிய தயாளகுணமும் கருணையும் கொண்ட பெருமான் யார் என்பதை அந்த யானை சரியாக அறிந்திருக்கவில்லை.

எனவே அது "இந்தப்பிரபஞ்சத்தைப்படைத்தும், அதன்மூலப்பொருள்களை முற்றிலும் பெற்றவராகவும், அறிந்தவராகவும், பிறப்பு அற்றவராகவும், என்றென்றும் நித்யமாக இருப்பவருமான பரமனுக்கு நான் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்". என்றும்,

"எல்லாச் சித்திகளுக்கும் எஜமானராகவும் பக்குவமடைந்த யோகிகளால் இதயமத்தியில் காணப்படுபவராகவும் உள்ள பரமபுருஷனுக்கு என் பணிவான வணக்கங்களை அர்ப்பணம் செய்கின்றேன் என்றும், மூவகைச் சக்திகளையும் ஆளும் தன்மை படைத்தவராகவும், தஞ்சம் அடைந்த ஆத்மாக்களைக் காப்பாற்றுகிற பண்பைப் படைத்தவராகவும் உள்ள பரமபுருஷனுக்கு நான் என்னுடைய ஆபத்துக்காலத்திலும் பணிவான வணக்கத்தைச் சமர்ப்பணம் செய்கின்றேன் "என்றும் மந்திரங்கள் கூறி ஜபித்தது. அப்பகவானைப் போற்றித் துதித்தது. வணங்கியது. அதேநேரத்தில் முதலையின் தாக்குதலால் அல்லலுற்றும் அரற்றியது.

ஸ்ரீமத் பாகவதத்தின் எட்டாம் காண்டம், மூன்றாம் அத்யாயம் ஸ்லோகம் இரண்டு முதல் முப்பத்து மூன்று ஸ்லோகங்கள் வரையில் கஜேந்திராழ்வான் (யானை) பரமபுருஷணைத் தியானித்து வணங்கியதை வியாசர் மிகவும் அற்புதமாகக் கூறி பரப்பிரம்ம குணாதிசயங்களை விளக்குகிறார்.

**ஸ்ரீ-கஜேந்திர உவாச**

**ஓம் நமோ பகவதே தஸ்மை யத ஏதச் சித்-ஆத்மகம்**
**புருஷாயாதி – பீஜாய பரேசாயாபி தீமஹி**

*இதில் யானையின் அரசனான கஜேந்திரன் பிரபஞ்சத்தின் முழுமுதல்வனாகவும், பரம அதிகாரியாகவும் இருக்கும் எந்த ஒரு கடவுளைப்பற்றியும் எந்த ஒரு தனிப்பட்ட பெயரையோ குறிப்பிடவில்லை. பிரம்மதேவர். சிவபெருமான், இந்திரன் , பஞ்சபூதநாதர்கள் ஆகிய எவரையும் குறிப்பிட்டுக்கூறவில்லை. ஆனால் அந்த கடவுளர்களின் தலைவராக விளங்கும் அவரே அனைத்திற்கும் மூலகாரணம் ஆவார். பிரம்மாதி தேவர்களாலும் வணங்கப்படக்கூடியவரும் அவரே! மேலும் ஒவ்வொரு ஜீவராசியின் இதயத்திற்குள்ளும் அவர் புகுந்து இருக்கிறார். அவரை நான் வணங்குகிறேன். என்று அக்கஜேந்திரனாகிய யானை பகவானைத் துதித்ததாகப் பாடியுள்ளார் வியாச மஹரிஷி!*

*ஆகையால் யானை நம்மைச்சரணடையவில்லை என்று நினைத்து மேலே கூறப்பட்ட எந்தக்கடவுளர்கலும் கஜேந்திரனின் உதவிக்கு வரவில்லை. காப்பாற்றும் முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால், முதலையால் கௌவப்பட்டு துன்பத்திற்குள்ளாகி தன்னிடம் சரணாகதியடைந்த அந்த யானைகளின் தலைவனைக்காத்து ரட்சிக்கவும், அருள்பாலிக்கவும் பகவான் வந்தார். அந்தக்காட்சியை வானவீதியில் கண்ட யானையானது நிச்சயமாக தான் பகவான் ஹரியால் காப்பாற்றப்படுவோம்*

என்ற திடசித்தத்தை அடைந்தது. தன்னுடைய துயரம் தீர்க்கவந்த அப்பெருமானை வாழ்த்திப்போற்ற தான் பறித்து வைத்திருந்த அந்தப் பொற்றாமரைப் பூவை, தன் துதிக்கையால் ஏந்தி வானத்தைநோக்கி நீட்டியது. அது

**"நாராயணா அகில குரோ பகவான் நமஸ்தே"**

என்று பகவானைத்துதித்தது. (ஸ்ரீமத்பாகவதம். எட்டாம் ஸ்கந்தம். அத்யாயம் 3.ஸ்லோகம் 32.)

அதாவது "எம்பெருமானே நாராயணா அகிலத்தின் இறைவனே பகவானே ஸ்ரீஹரியே எனது பணிவான வணக்கங்களை நான் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்" என்று கூறி வணங்கியது. தன்னைப் பகவான் ஸ்ரீஹரி காப்பாற்றுவார் என்று உறுதிகொண்டது. ஏனென்றால், ஸ்ரீஹரி ஆகிய பெருமானே அனைத்து தேவர்களுக்கும் மேலானவன் என்று அக்கஜேந்திரன் நினைத்தது.

அந்தநேரத்தில் கருடன் மீதேறி வந்த பகவான் ஹரி அங்குவந்து கருடன் மீதிலிருந்து இறங்கி, கஜேந்திரனை முதலையுடன் சேர்த்து ஆழமான நீர்நிலைக்குள் சிக்கிக் கொண்டிருந்த யானையை இழுத்தார். அதனுடன், காலைக்கவ்விக்கொண்டிருந்த முதலையும் கரைக்குவந்தது.. இதற்குள் இக்காட்சியைக்கண்ட இந்திரன் உள்ளிட்ட எல்லாத்தேவர்களும் அந்த இடத்தில் வந்து கூடிவிட்டனர். யானை அரற்றியபோது, எவ்விதத்திலும் வந்து உதவ அவர்கள் முன்வரவில்லை. ஆனால் பகவான் வந்தவுடனே அனைவரும் அங்கு ஒன்று சேர்ந்தனர்.! காரணம் கஜேந்திரன் தமது பெயரைக்கொண்டு அழைத்து, காப்பாற்றுமாறு

கேட்கவில்லை என்று இருந்தனர். ஆனால் தேவர்களுக்கெல்லாம் தேவனாகவும், கடவுளர்களுக்கு எல்லாம் முதன்மைக் கடவுளாகவும் இருக்கும் விஷ்ணுபகவான், உடனே அந்தயானையின் துயர்துடைக்க ஓடிவந்தார் என்னும் கருத்து இங்கு விளக்கம் பெறுகிறது.

பகவான் ஸ்ரீஹரியின் புகழ்பாடும் தாள்ளபாக்க அன்னமய்யா அவர்களின் கீர்த்தனையில்,

**ஹரி அவதாரமுலே அன்னி தேவதலு**

**ஹரி லோனிவே ப்ரஹ்மாண்டம்புலு**

**ஹரி நாமமுலே அன்னி மந்த்ரமுலு**

**ஹரி ஹரி ஹரி ஹரி ஹரி அனவோ மனஸா**

என்ற அவருடையகீர்த்தனையானது, அனைத்து தேவர்களும் ஸ்ரீஹரியின் அம்சங்கல் என்பதையும்., ஹரிபகவானின் வயிறே அனைத்து லோகங்களும் என்பதையும், ஹரி நாமத்தை ஜபிப்பதே அனைத்து மந்திரங்களினும் சிறந்தது என்றும் கூறி, அத்தகைய பகவானை எனது மனமே நீ சரணாகதி அடைவாயாக என்று தனதுமனத்திற்கு அறிவுறுத்துகிறார் அன்னமய்யா சுவாமிகள். எனவேதான் எல்லாக் கடவுளர்களும் கஜேந்திரனின் கோரிக்கையை ஏற்காமல் இருக்க, முழுமுதல் மூர்த்தியான பகவான் ஸ்ரீஹரி தனது கருடவாகனத்தின் மீதேறி பறந்து வந்தார்.

தன்னைச் சுற்றி நின்ற தேவர்களின் முன்னிலையில் பகவான் தனது சக்கராயயுதத்தால் முதலையின் வாயைப்பிளந்தார். யானையின் துன்பத்தைப் போக்கினார்.

கொல்லப்பட்ட முதலையின் உருவில் இருந்த கந்தர்வன் தன்னுடைய பழைய உருவத்தைப்பெற்று, தன்னைச் சாபத்திலிருந்து விடுவித்த பகவானுக்கு நன்றிகூறி, அவரது தாமரைப் பாதங்களில் விழுந்துவணங்கி தன்னுடைய கந்தர்வலோகம் சென்றான்.

அதோபோல், அகத்தியமுனிவரால் சபிக்கப்பட்டிருந்து, யானையாய் மாறிப்போன இந்திரத்துய்ம்னன் என்ற அரசனும் தான் பகவானோடு பரமபதத்தில் இரண்டறக்கலந்து வாழும் பேற்றினை, அதாவது முக்தியைத் தருமாறு வேண்டினான். ஏனென்றால், கஜேந்திரன் தன்னுடைய முந்தைய பிறவியில் நாராயணமந்திரத்தை ஜபித்து மோட்சம் அடையவே விரும்பி இருந்தவராவார்.. அதன் காரணமாக அவர் பகவானைத்தியானித்து கொண்டிருந்த போதுதான் அதைப் புரிந்துகொள்ளாத அகத்திய முனிவர், அவ்வரசன் தன்னை அவமானப்படுத்திவிட்டான் என்று தவறாகக் கருதி, அப்பாண்டிய மன்னனை யானை ஆகுமாறு சபித்துவிட்டார். அப்பிறவியில் ஈடேறாமல் போன அவனுடைய விருப்பம், அடுத்த இந்தப் பிறவியிலேயே பூர்த்தி செய்யப்பட்டது பெரிய வரப்பிரசாதம் ஆகும். ஏனெனில் சில ஆன்மாக்கள் இத்தகைய பேற்றினைப் பெறுவதற்கு எத்தனையோ ஜன்மங்களை (பிறவிகளை) எடுத்தெடுத்து உழலவேண்டும். ஆனால் அவ்வரசனுக்கு இந்த யானைப்பிறவியிலேயே இப்போது பகவானால் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டது. அதனால் கஜேந்திரனுக்கு அவன் விரும்பிய முக்தியானது இப்பிறவியில் வழங்கப்பட்டது.

**பகவானின் அருள்பெற பாரபட்சம் கிடையாது, பக்தியே பிரதானம்:**

தேவபாலக முனிவரால் சபிக்கப்பட்ட ஹுஹு என்ற கந்தர்வன் முதலையாகி, ரிதுமத் மலைப்பகுதியின் தடாகத்தில் வாழ்ந்திருந்தான் என்றும், தனக்கு சாபவிமோசனம் கேட்டபோது, பகவான் ஸ்ரீஹரியின் சக்கராயுதத்தால் நீ கொல்லப்படும் போது, சாபவிமோசனம் பெறுவாய் என்றும் முனிவர் கூறியிருந்தார். அதற்கு ஏற்ப கருடவாகனத்தின் மீது பறந்தோடி, பூலோகத்திற்கு வந்த ஸ்ரீஹரி, சங்கடத்தின் உச்சநிலையில் துடித்துக் கொண்டிருந்த தனது பக்தனான கஜேந்திரனைக் காப்பாற்றுவதற்காக, தனது சுதர்சனச் சக்கரத்தை ஏவினார் அது அம்முதலையின், குகைபோன்ற வாயைத்தாக்கி, கிழித்துப்போட்டதால், யானை மரணத்தருவாயிலிருந்து விடுவிக்கப்பட்டது. பகவானின் கையில் இருந்த சுதர்சனச் சக்கரம் தன்னைத்தாக்கியதால், பகவானுடைய ஸ்பரிசம் பெறுகின்ற வாய்ப்பு அம்முலைக்குக் கிடைத்தது. அந்த ஸ்பரிசத்தொடர்பினைப்பெற்றதாலேயே, முதலையாக சாபம் பெற்றிருந்த கந்தர்வனும், தனது சாபம் நீங்கப்பெற்றதால், தன்னுடைய பழைய கந்தர்வ தோற்றத்தை மீண்டும் அடைந்தான். பெருமகிழ்ச்சி கொண்ட அவன் கந்தர்வ இசைபாடி ஆடிக்களித்தான். “பகவானே உனது தெய்வீகத்தோற்றத்தைக்காண தேவர்களும், முனிவர்களும் ஆண்டாண்டு காலங்காலமாகத் தவம் செய்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்.! அவர்களுக்கு எல்லாம் தரிசனம் தராத தாங்கள், உமது பக்தனாகிய கஜேந்திரனுக்கு அருள்புரிவதற்காக திருவுள்ளம் கொண்டதால்,

தந்துவிட்டீர்கள்.! உமது கருணையே கருணை என்று அவனுக்குத் தெரிந்த விதத்தில் பகவானைப்பூஜித்து, பரமபுருஷ பகவானிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு, தனது கந்தர்வலோகத்திற்குச் சென்றான்.

**விஷ்ணு பகவான் - ஒரு கருணைக்கடல் :**

தனக்கு அபச்சாரம் செய்தாலும், அதைப் பொறுத்துக் கொள்ளும் பகவான், அடியார்களுக்கு யாரேனும் துன்பம் கொடுத்தால் அதைப் பொறுத்துக் கொள்ளமாட்டார். இதை, பக்தபிரகலாதன், துருவன், திரௌபதி, சுக்கிரீவன், விபீஷணன், போன்ற பலபக்தர்களின் மூலம் நிருபித்துக் காட்டியுள்ளார். கஜேந்திரன் இத்தனை ஆண்டுகலாக, முதலையால் கொடூரமாகக் கவ்வப்பட்டு இருந்ததால், அதனுடைய காலில் ஏற்பட்டிருந்த காயத்தைக் கண்டு, மனமிரங்கிய பகவான், அதன் வலியைப்போக்க, தனது உத்திரீயத்தால் (மேலாடையால்) விசிறிக் கொடுத்தத்தோடு, தனது பவளச்செவ்வாயாலும் ஊதி விட்டாராம்.!

**ஆபத்பாந்தவன் - அனாதை ரட்சகன் :**

பகவானின் பெருங்கருணை புல்லரிப்பை ஏற்படுத்துகிறது அன்றோ? எனவே, தன்னைச் சரண் அடைந்தவர்கள் ஞானம் கைவரப்பெற்ற மாமுனிவர்களாக இருந்தாலும், உயர்ந்த மனிதவர்க்கத்தில் தோன்றியவர்களாக இருந்தாலும், யாக யக்ஞாதிகள் செய்கின்ற அந்தணர்களாக இருந்தாலும், பசுக்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட குடிப்பிறப்பை உடையவரான சண்டாளர்களாக இருந்தாலும், விலங்குகளாகவும், பட்சிகளாகவும் இருந்தாலும் பாரபட்சம்

காட்டாமல் அனைவருக்கும் பெருங்கருணை புரிந்து ஆட்கொள்ளும் ஆபத்சகாயன் என்பதையும், அனாதையர்களுக்கும் புகலிடமாய் விளங்குபவன் என்பதையும் நாம் அறிகிறோம். இங்கு பரமபுருஷராகிய பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் மற்றொரு திருநாமமாகிய ஸ்ரீஹரி பகவான் இந்தக் கஜேந்திரனுக்கு அருள்பாலித்தபெருமான் என்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

இக்கருத்தை பகவான் ஸ்ரீகிருஷ்ணர், அர்ச்சுனனுக்கு தனது கீதையை உபதேசம் செய்தபோது,

**வித்யா விநய ஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி**

**சுனி சைவ ஸ்வபாகே ச பண்டிதா: ஸமதர்சிந:!!**

**(கீதை. அத்.5.ஸ்லோகம்.18.).**

என்று கூறியுள்ளார். உண்மையில் இது அனைத்தும் அறிந்த தத்துவ ஞானிகளுக்குரிய இலக்கணமாக பகவான் கிருஷ்ணர் கூறியிருந்தாலும், அத்தத்துவங்களின் இருப்பிடமான பகவானுக்கு, இக்குணம் மிகவும் பொருத்தமானதாகும். எனவே, வையத்தில் வாழ்கின்ற சிறந்த பேற்றினை நாம் நன்முறையில் பயன்படுத்தி, பக்தியோடு இறைவனைத்தியானித்து வந்தால், நமக்கு வேண்டிய நன்மைகளை விரைவாய்க் கொடுத்திடுவான் அந்தப் பரம தயாளன்.

பரமபுருஷரான ஸ்ரீ கிருஷ்ணன் யானையாகிய கஜேந்திரனைக் காத்துரட்சித்து அருள்புரிவதற்காக, முதலையின் வாயைப்பிளந்து, யானையின் காலை விடுவித்து, இரண்டினுக்கும் மோட்சம் அளித்த வரலாற்றை

ஆழ்வார்ப்பெருமக்கள் பெரும்பாலானோர் பாடியுள்ளார்கள். அவற்றை உரைக்கின் கதைபெருகும். ஆயின், ஆழ்வார்கள் மட்டுமன்றி, இதிகாசங்களைத் தமிழில்பாடிய பல புலவர்களும், பகவான் யானையைக் காத்ததையும், முதலையை வதைத்ததையும் தமது பாடல்களில் பாடியுள்ளனர் என்கிறபோது அவர்களின் பக்திநிலையை நம்மால் அறியமுடிகிறது.

தன்பக்தர்களைக் காப்பதில் பெரிதும் மனம்மகிழ்பவன் பெருமான். இங்கு யானையாகிய விலங்கினத்தைக் காத்திட்டதால் அகம் மகிழ்ந்த பகவான் ஸ்ரீஹரி, தனது பாஞ்ச்சன்ய சங்கத்தை எடுத்து முழக்கினார். இக்காட்சிகளைக் கண்டு கொண்டிருந்த பிரம்மாதி தேவர்கள் எல்லோரும் வியக்கும் படியாக, பகவான் தனது கருடவாகனத்தின் மீதேறி, பறந்து செல்ல, அவரோடு கஜேந்திரயானையாக வாழ்ந்து கொண்டிருந்த இந்திரத்துய்ம்னனுடைய ஆன்மாவும் ஜோதி சொரூபமாய் பகவானோடு வான் நோக்கிச் சென்றது.

இங்கே ஒரு கேள்வி எழுப்பலாம்.! யானையாக் காப்பாற்றுவதற்காக எல்லாம் எல்லபெருமானாகிய பகவான், அந்தத் தடாகத்திற்கு வந்துதான் முதலையை அழிக்க வேண்டுமா? யானையை அங்கு வந்துதான் காப்பாற்ற முடியுமா? அவர்வாழும் பரமபதத்திலிருந்தே இதைச் செய்துவிட்டிருக்கலாமே? என்னும் ஒரு கேள்வி பலபேருடைய மனதிலும் எழலாம்.. ஏனென்றால் பகவான் ஸ்ரீமந்நாராயணனே எல்லார்க்கும் தலைவன்! (ஸர்வஸ்வாமி:) எல்லாரையும் இயக்குபவனும் அவனே ஸர்வேச்வரன்)

போன்ற அரும்பெரும் குணங்களாகிய பத்தொன்பது குணங்களையும் ஒருங்கே பெற்றுள்ள குணக்குன்று அவன்தானே? அவற்றின் தொகுப்பான அறுவகைக் குணங்கலையும் ஒருங்கே பெற்றுள்ள குணக்குன்று அவன்தானே? அப்படியிருக்க, யானை துன்பமுற்றிருந்த இடத்திற்குவந்துதான் உதவவேண்டுமா? என்றெல்லாம் கேட்டாலும் கேட்கலாம். ஆனால் பெருமானுடைய பக்தர்களுக்கு உதவும் தொழிலைமட்டும் அவர் செய்யாமல், அவர்களுக்குத் தன் தரிசனத்தையும் கொடுத்து, ஆனந்தப்படுத்தவேண்டும் என்ற நினைப்பு மேலோங்கி காட்சிகொடுத்து அருள்பாலிக்கின்றார் என்பதே உண்மையாகும். இதை உலகறியச்செய்கின்றார் பெருமான் ஸ்ரீஹரி.

எனவேதான், துன்பத்தில் துவண்டு கிடந்து, தான் இனிமேலும் உயிர் பிழைக்கமுடியாது என்ற நிலைக்கு வந்து விட்ட யானை, தான் இறக்கப்போகிறோம் என்பதற்காக வருத்தப்படவில்லை! தான் பகவானுக்கு அர்ப்பணம் செய்ய நினைத்து பறித்திட்ட பொற்றாமரைப்பூவை பகவானுக்குச் சமர்ப்பிக்கமுடியாமல்போனதே என்பதற்காகவே பெரிதும் வருந்தியது. எனவே, அதை ஏற்றுக்கொள்வதற்காகவும், தனது தரிசனம் கிடைத்தால் துன்பக்கடலில் துவண்டிருந்த யானைக்குத் தன்னுடைய தரிசனம் பேரானந்தத்தைத் தரும் என்பதற்காகவே அந்த ஸ்ரீஹரி பகவான் நேரடியாகவே யானையாக் காக்க வந்தார் என்று அறிந்துகொள்ளும்போது. அப்பெருமானுடைய கருணையை அறிந்தால் மெய்ச்சிலிர்ப்பு உண்டாவதை உணரமுடிகிறது அன்றோ?

**புராணங்கள் கூறும் புண்ணிய நாமம் :**

மேலும், விஷ்ணுபுராணம், கருடபுராணம், ஸ்கந்தபுராணம் ஆகிய பலபுராணங்கள் பகவான் ஸ்ரீஹரியின் நாமத்தை உச்சரிப்பதாலேயே ஒருவனுடைய அனைத்து பாபங்களும் ஓடிப்போய்விடும் என்பதை உணர்த்துகின்றன. ஏற்கனவே நாம்முதலில் பகவானுடைய திருநாமம் ஹரி என்று குறிப்பிட்டோம். அதற்கு ஏற்ப,

**ஸக்ருத் உச்சாரிதம் யேன ஹரிர் இதி அசர த்வயம்**

**பத்த பரகரஸ் தேனமோட்சாய கமனம் ப்ரதி –**

என்னும் ஸ்கந்தபுராணசுலோகம் கூறுவதைக் காண்போம்.

அதாவது, "ஹ–ரி. என்னும் இரண்டு அட்சரங்களைக் (எழுத்துகளை) கொண்டுள்ளதான பகவானுடைய புனிதப்பெயரை (நாமத்தை) ஒருவன் ஒருமுறை பக்தியோடு சேவித்தால், அவனது முக்திக்கு உரிய வழியானது உறுதி படுத்தப்படுகிறது. என்பது இந்தச்சுலோகத்தின் பொருளாகும்."எனவே, தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டிய கஜேந்திர யானையானது, ஆதிமூலமே! ஹரி! ஹரி! என்று அரற்றியதால், அதன் துன்பத்தைப்போக்க விரைந்தோடிவந்த பகவான் ஸ்ரீஹரி, அதற்கு முக்தியையும், தந்தருளினார் என்பது மெய்ச்சிலிர்ப்பை உண்டாக்குகிறதன்றோ? மேலும் பகவானின் பக்தியில் ஈடுபடுவதும், அப்பெருமானின் பேரருளையும் தரிசனமத்தையும் விலங்குவர்க்கங்களும் பெறலாம் என்பதை உலகறியச் செய்யும் பகவானின் விருப்ப வெறுப்பற்ற தன்மை இதன்மூலம் வெளிப்படுகிறது.

கஜேந்திரனுக்காக பெருமான் ஓடோடிவந்து, அதைக்காப்பாற்றியதைப் பெரும்பாலான ஆழ்வார்ப் பெருமக்கள் தங்களது பாசுரங்களில் பாடி உள்ளக்களிப்பு அடைந்துள்ளனர். அவர்களுள், திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழியின் 1140. ஆம்பாசுரத்தில்

**கொழுங்கலரும் மலர்ச்சோலை குழாங்கொள் பொய்கை**
**கோள் முதலை வாளெயிற்றுக் கொண்டற்கு எள்கி**
**அழுந்திய மா களிற்றினுக்கு அன்று ஆழியேந்தி**
**அந்தரமே வரத்தோன்றி அருட்செய்தானை**

மிகச்சிறந்த வர்ணனைகளோடு கஜேந்திர ஆழவான் காப்பாற்றப்பட்டதை அறிவித்துமகிழ்கிறார் ஆழ்வார்.

மேலும் இவரே,

**மீனமர் பொய்கை நாள்மலர்கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த**
**கானமர்வேழம் கை எடுத்து அலறக் கறா அதன்காலினைக்கவ்வ**
**ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்று ஆழிதொட்டானைத்**
**தேனமர்சோலை மாடமாமயிலைத்திருவல்லிக்கேணிக் கண்டேனே (பெ.தி.மொழி.1076).**

ஏன்ற பாசுரங்களின் மூலமாக, மலர்களும், பூக்களும் நிறைந்திருந்த தடாகத்தில் நினைத்ததால், தடாகத்தில் பூத்திருந்த ஒரு பொற்றாமலரைப்பறித்து அதைப் பகவானுக்குச் சூட்ட நினைத்ததால், பொய்கையில் இறங்கிய கஜேந்திரனை, முதலைக்கவ்விக்கொள்ள, அதிலிருந்து தப்பித்துக்கொள்ள நினைத்த யானை, தன்னுடைய முயற்சி

பயனற்றுப்போனதை அறிந்து, இறுதியில் பகவானுடைய திருவருளே தன்னைக்காக்கும் என்று நினைத்கயித திரௌபதியைப்போல இதுவும் நினைத்து தஞ்சம் அடைந்து பகவானை வேண்ட, உடனே பெருமான் ஓடோடிவந்து அதைக்காப்பாற்றினார் என்பதை எடுத்துரைக்கிறார்.

மேலும் அந்தக்கஜேந்திரன் என்ற யானை, தனது உயிர்போய்விடும் என்று பயம் கொண்டு பெருமானைத் துணைக்குவருமாறு அழைக்கவில்லை. தான்' பகவானுக்குச் சூட்ட நினைத்துப் பறித்த தாமரைப் பூவை அவருடைய திருவடிக்குச் சமர்ப்பிக்க முடியவில்லையே என்னும் அந்தக்கஜேந்திர ஆழ்வானின் கோரிக்கையை ஏற்று, அது தனது பொற்றாமரைப் பாதங்களைக் கண்டுவணங்கி, தன்னுடைய பிரார்த்தனையைப் பூர்த்தி செய்துகொள்ளட்டும் என்பதற்காகவே பகவான் நேரடியாக காட்சி தர விரைந்து வந்தார். என்கிறபோது, பெருமான் எளியவர்களையும் காக்கும் ஒரு தீனரட்சகன், என்பதும், தீனவத்சலன் என்பதையும் அறியமுடிகிறது.!

பகவான் கிருஷ்ணரால் தனது சாபவிமோசனம் பெற்ற கஜேந்திரனும், ஹூஹூவும் தத்தமது லோகத்திற்குச் சென்றார்கள் என்று பாகவதம் கூறுவதால், இவ்விரண்டு உயிரினங்களுக்கும், சாயுஜ்யம் என்ற முக்தியே கிடைத்தது என்பதையும் இக்கதையால் அறிகிறோம். முக்திநிலையில் இதனினும் மேம்பட்டதாக உள்ள சாலோக்கியம் போன்ற முக்தி நிலையைப்பெற, ஆறறிவு படைத்த மானிடவர்க்கம் அடைந்திட முயல வேண்டும்.

**இந்தக் கதையைத் தெரிந்து கொண்டதால், நமக்கு என்னபயன் உண்டாகும்.?**

அதற்கு, வியாசபகவானே இந்த எட்டாம் ஸ்ந்தத்தின், நான்காம் அத்யாயம், 14,15,25 ஆகிய மூன்று சுலோகங்களில் எடுத்துரைக்கிறார்.

இக்கதையைக் கேட்பவர்கள் பூலோக வாழ்க்கையிலிருந்து, விடுபட்டுச் செல்லும்போது, தேவர்கள் உள்ளிட்ட தேவகணங்களாகப் பிறவி பெறுவார்கள். சிறந்த பக்தர்கள் என்னும் பேற்றைப் பெற்று வாழ்வார்கள். கலியுகத்தின் கொடுமைகளால் ஏற்படக்கூடிய கொடிய தாக்குதல் இவர்களுக்கு ஏற்படாது. மேலும் அதிகாலையில் எழுந்தவுடன் இதைப்பக்திச் சிரத்தையோடு படிப்பவர்களுக்கு, கெட்டகனவுகள் தோன்றாது. மேலும் அதன் தாக்கமும் ஏற்படாது. கஜேந்திரனாகிய இந்த பக்தன்பரமபுருஷரைப் போற்றித்துதித்த மந்திரங்களை, அதிகாலையில் ஓதுபவர்களுக்கு, நிச்சயமாக, மீண்டும் மறுபிறவியில்லாத, பகவானோடு நித்தியசூரியாய் வாழ்கின்ற, பெரும் பேறும் கிடைக்கும்.!

மேலும், உலகப்பொதுமறையான திருக்குறளிலும், பரப்பரம்மமாகிய பகவானைத் திருவள்ளுவர், விருப்பும், வெறுப்புகளும் அற்றவர் என்று குறிப்பிட்டுள்ளார். அத்தகையவனது திருவடிகளைத் தஞ்சம் அடைகின்றவர்களுக்கு, எப்போதும் நிலைத்த துன்பங்கள்

உண்டாவது இல்லை என்பது அவருடைய கணிப்பு ஆகும். அதையும் மீறி, ஒருவனுக்கு விதிப்பயனால் ஏற்படுகின்ற வேறு எந்தத் துன்பமாக இருந்தாலும், பகவானைச் சரணடைந்துவிட்டால், உடனுக்குடன் ஓடோடி வந்து அப்பெருமான் காப்பாற்றுவார் என்ற நியதி இக்கதையில் தெள்ளத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளதை அறிந்து இன்புறலாம்.

**ஓம் நமோ பகவதே வாசுதேவாய**



## 11. பரமபுருஷ பகவான் எடுத்த மச்சாவதாரம்

பரப்பிரம்மமாகிய பகவான் எடுத்த மச்சாவதராம் என்னும் பாகவதக் கதையானது ஸ்ரீமத்பாகவத்தின் எட்டாவது ஸ்கந்தத்தில் வேதவியாசரால் விரித்துரைக்கப்படுகிறது. மச்சம், (மீன்), ஆமை, வராகம் போன்ற இழிந்த பிறவிகளை எடுத்து தான், பகவான் அந்தந்த அவதார நேக்கத்தை நிறைவேற்ற வேண்டுமா! அவர்வாழும் பரமபதவுலகிலிருந்தே அனைத்தையும் சாதிக்கமுடியாதா? முடியும். முடியும் என்றால் இத்தகைய அவதாரங்கள் ஏன் என்று கேட்கலாம்.! உண்மைதான். ஆனால் பகவான் இத்தகைய பிறவிகளாக அவதாரம் எடுப்பது, எத்தகைய தாழ்ந்த நிலைக்கும் தான் இறங்கி வந்து, தன் பக்தர்களைக் காக்கக்கூடியவன் என்றும், குறிப்பாக ஆவினங்களையும், அந்தணர்களையும் (பசுக்களையும், பார்ப்பனர்களையும்) தன்னால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களையும் (ஆத்மாக்களையும்) தேவையான பொழுதெல்லாம் காப்பாற்றுவதற்காகத் தோன்றுபவர் என்பதை தன் பக்தர்களும், மற்றவர்களும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய அவதாரங்களை எடுக்கின்றார் பகவான்.

இந்த அவதாரங்களின் போது பகவான் இரண்டு விதமான அம்சங்களைப் பெறுகிறார். ஒன்று (சுய அம்சம்) ஸ்வாம்சம் எனப்படுவதாகும். இதில் பகவான் தன்னுடைய சுய அம்சமாகவே இருப்பார். இரண்டாவது விபின்ன அம்சம். (விபின்னாம்சம்) எனப்படும். இந்த அம்சத்தில் பகவான் ஒரு குறிப்பிட்ட அவதார நோக்கத்திற்காகத் தேவைப்படும்

பிறவியாக வந்து தோன்றி, அவதார நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்வார். அவ்வளவே!. அதன் பிறகு, தான் எடுத்த மனிதர்கள், ரிஷிகள், விலங்குகள், மற்றும் நீர் நிலங்களில் வாழ்பவையான எந்தப் பிறவிகள் (அவதாரங்கள்) எடுத்தாலும், அந்ததந்த பிறவிகளின் எந்தக் குணமும், அப்பிறவியில் செய்த கர்மாக்களின் தாக்கமும், அதனால் ஏற்படக்கூடிய தோஷங்களும் பகவானிடத்தில் சற்றும் அண்டாது. நிலைத்திருக்காது. பகவானின் இக்குண விசேஷத்தை ஹேயப்பிரத்ய நீகத்துவம் என்று அழைப்பார்கள். அதாவது தோஷம் தட்டாதவர் என்பது இதன் பொருளாகும்.

**கல்ப காலமும், நைமித்யப் பிரளயமும்.!**

பெருமான் எடுத்த மச்சாவதாரம், ஆறாம் மன்வந்திரத்தில் ஏற்பட்ட அவதாரம் ஆகும். மேலும், தற்போது ஏழாவது மன்வந்த்ரம் நடைபெறுகிறது என்றும், சிராத்ததேவன் இம்மன்வந்த்ரத்தின் அதிபதி என்றும் கூறப்படுகிறார். இதேபோல் மொத்தம் பதினான்கு மனுக்கள் உள்ளனர் என்றும், இவர்களின் காலப்பகுதிகள் முழுவதும் நிறைவுறும் போது, பிரம்மதேவனுக்கு ஒரு பகற்காலம் முடிவடையும் நேரமாகவும் வரையறுத்துள்ளார் பகவான். இப்படிப்பட்ட ஓர் இரவுப்பொழுதுடன் சேர்த்து, அதாவது இரண்டு கல்பகாலங்கள் பிரம்மாவின் ஒரு நாள் ஆகும்! இத்தகைய முந்நூற்று அறுபது நாட்களைக் கொண்டது ஒரு வருடம் என்றும், நூறுவருடங்கள் பிரம்மாவிற்குரிய ஆயுள் என்றும் காலவரையரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது ஆச்சரியத்தை வரவழைத்தாலும், இதுதான் உண்மையாகும்.!

பகற்பொழுதின் முடிவில் நைமித்யப் பிரளயம் என்பதும், ஆயுள் முடிவில் மஹாபிரளயம் என்பதும் ஏற்படும் என்பதும் கூறப்பட்டுள்ளது.!

"நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" என்னும் திருமழிசை ஆழ்வாரின் கருத்து, எல்லாப்புராணங்களிலும், பகவத்கீதை உள்ளிட்ட பல உபநிஷதங்களிலும் கூறப்பட்டுள்ள கருத்தேயாகும். அவ்வகையில் இவ்வண்டத்தின் அதிபதியான பரமபுருஷராகிய பகவானால் படைக்கப்பட்ட பிரம்மதேவனுடைய ஆயுள் நூறு வருடமாகும். தேவமானப்படி என்று அழைக்கப்படும் தேவவருஷங்களின் கணக்குப்படி, 432,00,00,000 வருஷங்கள் பிரம்மாவிற்கு ஒருபகற்பொழுது முடிவுறும் காலமாகும்.!

மன்வந்திரத்தின் அடிப்படையில் கூறினால், பிரம்மாவின் இந்தப் பகற்காலம் ஆயிரம் சதுர்யுகங்களைக் கொண்டது ஆகும். எழுபத்தொரு சதுர்யுகங்களைக் கொண்டது ஒரு மன்வந்தரம் என்றும், பதினான்கு மன்வந்திரங்களைக் கொண்டது பிரம்மாவின் ஒரு பகற்பொழுது காலம் என்பதும் பரமபுருஷன் ஏற்படுத்திக் கொடுத்துள்ள கால நிர்ணயம் ஆகும்.! பிரம்மாவின் இந்த பகற்காலம் ஒரு கல்பம் என்றும், கல்பகாலம் என்றும் அழைக்கப்படுகிறது.

**நைமித்யப்பிரளயம் :**

ஒரு கல்பகாலம் முடிவுறும் நேரத்தில் அண்டத்தில் ஏற்படும் ஒரு மிகப்பெரிய அழிவு நைமித்தியப்பிரளயம் என்று அழைக்கப்படுகிறது. பிரம்மதேவனின் பகற்பொழுதின்

முடிவான அக்காலப்பகுதியில் பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம் எனப்படும் மூன்று லோகங்களும் அழிந்துவிடும். அப்போது, தான் படைத்திட்ட அனைத்து உயிர்களாகிய ஆன்மாக்களைப் பரமபுருஷராகிய பகவான் தனக்குள் ஐக்கியமாக்கிக்கொள்வார். இதைத்தான் லயம் என்பார்கள். பிறகு அதே கால அளவுள்ளதான, பிரம்மாவின் இரவுப்பொழுது முடியும் வரை, பகவானோடு லயத்திலிருந்தவை மீண்டும் வெளியிடப்பட, அவை தம்முடைய கர்மவினைகளுக்கு ஏற்றவாறு வெவேறு பிறவிகள் எடுக்கும் என்பது பரமபுருஷ பகவான் விதித்துள்ள விதியாகும்.

ஆத்மா நிலையானது. அதைப்படைத்த பகவான் நிலையானவர். கர்மவினைகளுக்கு ஏற்றவாறு ஆன்மாக்கள் மறுபிறவி எடுக்கும். ஆனால் அது அழிவற்றது என்ற ஆத்மாவின் தத்துவத்தையும், உடலும், ஆத்மாவும் வெவ்வேறானவை என்ற கோட்பாட்டினையும், உலகத்தில் உள்ள வேறு எந்தமதமும் இவ்வளவு விரிவாக எடுத்துரைக்கவில்லை.! இது நமது இந்துசமயத்திற்கே உள்ள மிகப்பெரும் சிறப்பாகும்.

**வேதத்தை அபகரித்த ஹயக்கிரீவன் :**

பரமபுருஷராகிய பகவான் உலகத்தோர் நன்மை அடையும் பொருட்டு, வேதங்களை உருவாக்கி,, அதைக்காப்பாற்றும் பொறுப்பினைப் பிரம்மாவிடம் ஒப்படைத்திருந்தார். பிரம்மதேவரும் அதைப் பாதுகாப்பாகவும், மிகுந்த கவனத்துடனும் வைத்திருந்தார்.

ஆனால், அப்போது, பிரம்மதேவனின் பகற்பொழுது முடிந்து விட்டதால், இரவின் தொடக்கத்தில் பிரம்மதேவர் உறங்கிவிட்டார். அப்பொழுது அவர் வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்த வேதங்கள் அவர்வாயிலிருந்தும் வெளிவந்துகொண்டிருந்த வேத அறிவை, அவருக்கு அருகிலே இருந்தவனான் ஹயக்கிரீவன் என்னும் அரக்கன் கவர்ந்து கொண்டான்.! அதைப்பிரம்மா கவனிக்காமல், மேலும் உறங்கிக்கொண்டே இருந்தார். ஆகையால் அங்கிருந்த ஹயக்கிரீவன் என்ற அந்த அசுரன் வேதங்களைக் கவர்ந்து எடுத்துச் சென்று மறைந்துகொண்டான்.

இச்சம்பவத்தை, ஸ்ரீமத்பாகவதம் எட்டாம் காண்டம் (ஸ்கந்தம்) இருபத்து நான்காம் அத்தியாயத்தின் எட்டாம் ச்லோகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் வேதவியாசர்.

**“காலேன ஆகத-நித்ரஸ்ய தாது சிசயிஷோர்பலீ**

**முகதோ நிஸ்ருதான் வேதான் ஹயக்ரீவ அந்திகே அஹரத்”**

என்கிறார். (முகம் என்றால் இங்கு (ஸம்ஸ்க்ருதத்தில்) வாய் என்று அர்த்தம். முகதோ என்றால் முகத்திலிருந்து அதாவது வாயிலிருந்து வெளிவந்த வேதத்தை,)

பிரம்மாவின் பகற்காலமுடிவில், அவருக்கு உறக்கம் வருவதைப்போல் இருந்ததால், அவர்படுத்து உறங்கினார். அப்போது அவரது சக்திவாய்ந்த வாயிலிருந்து வெளிவந்த வேதத்தை, ஹயக்ரீவன் அபகரித்தான் என்று பொருளாகும்.

**பரமபுருஷர் எடுத்த மச்சாவதாரம் :**

முன்னரே குறிப்பிட்டதைப்போல, பரமபுருஷபகவானின் இருபத்தொரு அவதாரங்களின் தோற்றமும், அந்த

அவதாரங்களின் நோக்கமும் ஸ்ரீமத்பாகவதம் எனப்படும் பாகவத புராணத்தில் கூறப்பட்டுள்ளன. என்றாலும் பரப்பிரம்மமாகிய பெருமான் எடுத்த மச்சாவதாரம்,: கூர்மாவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம், பரசுராம அவதாரம், ராமாவதராம், பலராம அவதாரம், ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் ஆகிய ஒன்பது அவதாரங்களும், அந்தந்த அவதார காலங்களில் பெருமான் செய்தனவாகிய அற்புதச் செயல்களுமே இப்பாகவதத்தில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அந்தந்த அவதராங்கள் எடுத்து, பகவான் நிகழ்த்திய துஷ்ட நிக்ரஹ, சிஷ்ட பரிபாலனம் ஆகிய தர்ம நெறி ஒவ்வொரு அவதாரத்திலும் நிறைவேறப்பட்டதையும் தெற்றென விளக்குகிறது ஸ்ரீமத்பாகவதம். அவ்வகையில் பரமபுருஷ பகவான் எடுத்த முதல் அவதாரமான மச்சாவதாரத்தில், அவர் வேதங்களைக்காப்பாற்றி மீட்டுக் கொடுத்ததையும், காப்பாற்றினார் என்பதையும் உள்ளடக்கிய இந்த மச்சபுராணவரலாறு, ஸ்ரீமத்பாகவதத்தின் எட்டாம் ஸ்கந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

சாக்சுஷ மனுவின் ஆட்சிக்காலத்தில், ஒரு ராஜரிஷி இருந்தார். அவருடைய பெயர் சத்தியவிரதர் என்பது ஆகும். அவர் தனது முந்தைய பிறவியில், தென்னாட்டில், பாண்டிய நாட்டின் அரசராக இருந்தார். அவர் ஒரு நாராயணபக்தர் ஆவார். ஸ்ரீமந்நாராயண பக்தர்களுக்கு உதவிகள் செய்பவராகவும், பகவானுக்கு சிறந்த கைங்கர்யங்கள் செய்வதிலும் காலத்தைக் கழித்து வந்தார் அவர். சத்தியவிரதர் என்ற பெயரோடு, ஒருசிறந்த முனிபுங்கவராக, ராஜரிஷியாக

வாழ்க்கை நடத்திக்கொண்டு வந்தார். கிருதமாலா என்ற ஒரு நதிக்கரையில் ஆசிரமம் ஒன்றை அமைத்துக் கொண்டு, ஸ்ரீமந் நாராயணரைக்குறித்து தவம் செய்து வந்தார். இந்த கிருதமாலா நதியே பாண்டியநாட்டின் தலைசிறந்த வைகையாறு என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

**சத்தியவிரதரும் நற்பண்புகளும் :**

அப்போது, பகவான் ஸ்ரீ மகாவிஷ்ணு, ஏழுநாட்களுக்குப் பிறகு இந்நிலவுலகத்தில் ஏற்படப்போகும் பிரளயத்திலிருந்து, தனது பக்தரும், மகாயோகியுமான சத்தியவிரதரையும், மகரிஷிகள் உள்ளிட்ட அனைத்து ரிஷிகளையும், ஜீவராசிகளையும், காப்பாற்றவேண்டும் என்று எண்ணினார். அவ்வாறு அவர்களைக்காத்தருள செய்வதோடு வேதங்களைக் களவாடிச் சென்ற ஹயக்கிரீவனையும் வதம்செய்து, வேதங்களை மீட்டு அதை, மீண்டும் பிரம்மதேவரிடம் சேர்ப்பிக்கவேண்டும். என்றும் நினைத்தார். இந்நிலையில், பெருமானை அடையவேண்டிய வேட்கையிலேயே எப்போதும் தியானத்தில் இருந்தவரான சத்தியவிரதர் பெருமானின் பேர் அருளைப்பெறுவதற்காக நெடுங்காலம், உபவாசம் இருந்து வந்தார். அவர் எப்போதும் வெறும் நீரை மட்டுமே குடித்து உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார். அனுதினமும் பகவத் ஆராதனையும், அனுட்டானங்களையும் செய்துவந்தார்.

**மீனாகமாறிய பகவான் சத்தியவிரதரிடம் உரைத்தவை :**

கிருதமாலா என்ற அந்த நதிக்கரையில் தவம் இயற்றிக்கொண்டிருந்த அவர் ஒருநாள் ஆற்றின் நீரில் இறங்கி,

தர்ப்பணம் செய்வதற்காக, தனது கைகளால் தண்ணீரை முகந்து எடுத்தார். அப்போது அவரது கை நீரில் ஒரு சிறிய மீன்குஞ்சு தென்பட்டது. எனவே அதை மீண்டும் ஆற்றுநீரில் கொட்டி கலந்துவிடவேண்டும் என்று நினைத்தார். உடனே அந்த மீன் அரசரே! இந்த ஆற்றுநீரில் என்னை உண்டுவிடக்கூடிய பல பெரியமீன்களும், சுறா போன்ற ஜந்துக்களும் உள்ளன. அவற்றின் அபாயங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளவே, நான் உன்னைச் சரணாகதி அடைந்தேன். உன் கைகளில் புகலிடம் அடைந்தேன். எனவே என்னைக்காப்பாற்றவேண்டியது உங்கள் கடமை அல்லவா? அதைச்செய்யாமல் என்னை மீண்டும் ஆற்றுநீரில் கலந்துவிடுவது தர்மம் ஆகாது என்று கூறியது. அந்த மீன் கூறியதன் உண்மைத்தன்மையை உணர்ந்த சத்தியவிரதர் அதைப்பிடித்து, தனது கமண்டலத்தில் போட்டுக்கொண்டு தனது ஆசிரமத்திற்குச் சென்றார்.

**விட்ட இடங்களில் எல்லாம் வேகமாக வளர்ந்த மீன் :**

அடுத்தநாள் காலையிலே சத்தியவிரதர் தனது கமண்டலத்தைத் திறந்து பார்த்தபோது, சிறியகுஞ்சாக இருந்த அந்த மீன் கமண்டலத்தின் அளவிற்குப் பெருக்கம் அடைந்து விட்டு, நீந்த முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. அதைக்கண்ட சத்தியவிரதர் ஆச்சரியம் கொண்டார். அப்போது, அந்த மீன் அரசே, இந்தக்கமண்டலம் நான் இருப்பதற்குப் போது மானதாக இல்லை. எனவே தாங்கள் என்னை தயவுசெய்து வேறு ஒரு பெரிய பாத்திரத்திற்கு மாற்றுங்கள் என்று வேண்டிக் கொண்டது. அம்மீன் கூறியது உண்மைதான் என்று அறிந்த அவர்,

அதைத்தம்மிடத்தில் இருந்த ஒரு மிகப்பெரியபாத்திரத்திற்கு மாற்றினார்.

சற்று நேரத்திற்கெல்லாம் பாத்திரத்தின் அளவிற்கு வளர்ச்சி பெற்றுவிட்ட அது, சத்திய விரதரிடம் தன்னை வேறு ஒரு பரப்பளவு மிகுந்த இடத்திற்கு மாற்றுமாறு பவ்வியமுடன் கேட்டது. அதனுடைய கோரிக்கையை மறுக்கமுடியாத சத்தியவிரதர், மிகவும் அரும்பாடு பட்டு, அதை அருகிலே இருந்த ஒரு குளத்தில் விட்டுவந்தார். சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார் சத்தியவிரதர். ஆனால் அவருடைய நிம்மதி நிலைக்கவில்லை. ஏனென்றால், சந்தியவிரதர் குளத்தில் சேர்த்திட்ட அந்த மீனானது குளத்தைவிடப் பெரிதாக வளர்ந்து, அக்குளத்தையே அடைத்துக் கொண்டிருந்தது. சத்தியவிரதருக்கோ தாங்க முடியாத ஆச்சரியமாக அந்த மீனின் வளர்ச்சி இருந்தது.

மீண்டும், அந்த மச்சாவதராம் கொண்டிருந்த பகவான் சத்திய விரதரைச் சோதிக்கவேண்டும் என்று நினைத்து, தன்னை அதைவிடப் பெரிதான ஒரு நீர்நிலையில் சேர்க்குமாறு மன்றாடியது. அதைத் தன்னால் செய்து முடிக்கமுடியாது என்று அவர் நினைத்தார். ஏனென்றால், அதைத்தூக்கிச் செல்லும் அளவு சக்தியும் பலமும் தன்னுடைய பூத உடலுக்கு இல்லை என்பதை அறிந்து, தனது யோகசக்தியால் அதைப்பெரிய ஒரு ஏரியில் விட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் அதே வளர்ச்சி, மச்சத்திடமிருந்த அதே வேண்டுகோள். தன்னைச் சரணம் அடைந்து விட்ட அந்த மச்சத்தை (மீனை) காப்பாற்றவேண்டியது, அதன் கோரிக்கையை நிறைவேற்றுவதையும், தன்னுடைய கடமையாகக் கருதிய

சத்திய விரதர், வேறு வழியின்றி அதன் வேண்டுகோளை ஏற்று, உதவினார். தன்யோக சக்தியின் மூலம் அந்த மச்ச வடிவத்திலிருந்த பகவானைக் கடலுக்குள் எடுத்துச் சென்று சேர்த்திட முடிவுசெய்தார்.

**சத்தியவிரதர் வினாவும், மச்சாவதார பகவான் அளித்த பதிலும் :**

தான் சேர்க்கும் எல்லாநீர்நிலைகளிலும் உடனுக்குடன் பல்கிப் பெருத்து பெருவளர்ச்சி அடைந்துவிடுகிற இந்தமீன் கண்டிப்பாக ஒரு சாதாரண மீனாக இருக்கமுடியாது என்ற முடிவிற்கு வந்துவிட்டார் சத்தியவிரதர். மேலும், தான் அனுதினமும் வழிபட்டுப் பூசைசெய்து வரும் பரமபுருஷராகிய பகவான் தான், தன்னைச் சோதிக்க இப்படிப்பட்ட தொரு மீனாக வந்துள்ளாரோ? என்ற பெருத்த சந்தேகமும் அவருக்கு ஏற்பட்டது. எனவே அவர் தனது சந்தேகத்தை அந்தமச்சமாகிய மீனிடமே கேட்டார். உடனே அந்த மீன் சிரிப்புச் சத்தத்தை ஏற்படுத்தியது. சத்திய விரதரே உமது யூகம் சரியானது தான். ஸ்ரீமகாவிஷ்ணுவாகிய நானே இந்த மச்சாவதாரத்தை எடுத்துவந்துள்ளேன். ஆனால், இது தம்மைச் சோதனை செய்வதற்காக அன்று.! உம்மையும் உம்மோடு நான் என்னுடைய படைப்புகளையும் காப்பாற்றி அருள் புரியவே இந்த அவதாரத்தை எடுத்துவந்துள்ளேன் என்று பகவான் கூறினார்.

மேலும் அவர் சத்தியவிரதரைப்பார்த்து, “ராஜரிஷியே! இன்றைக்கு ஏழாம் நாள் ஒரு மிகப்பெரிய பிரளயம் உண்டாகப்போகிறது. நைமித்தியப் பிரளயம் எனப்படும்

அப்பிரளயகாலத்தின் போது பூமண்டலமும், அதனோடு நீங்கள், எனது படைப்புகளான பல்வேறு ஆத்மாக்களோடு தப்பித்து எம்மை அடைவதற்காகவே இந்த மச்சாவதாரத்தை எடுத்துள்ளேன். அப்பிரளயத்தின்போது, ஒரு மிகப்பெரிய படகினை நான் தயார் செய்து அனுப்புகிறேன். நீர்ப்பெருக்கில் மிதந்து கொண்டே அது உம்மிடம் வந்து சேரும். அப்போது நீங்களும், சப்த ரிஷிகளும் அதில் ஏறிக்கொள்ளவேண்டும். அப்படகில் பலவகையான மூலிகைகளைச் சேகரித்து ஏற்றிக் கொள்வதோடு, அதிகமான தானியங்களையும், மூட்டைகளாகக் கட்டி, நான் அனுப்புகிற படகில் அவற்றையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டு என்னிடம் வந்தடையவேண்டும்" என்று கூறினார்.. மேலும், "ஊழிக்காலத்து நீர் அலைகள் கோரத்தாண்டவம் ஆடுவதால், படகு அப்படியும், இப்படியும் அசைந்து கொண்டு மூழ்கடித்து விடுவதைப்போன்றே மிதந்து வந்துகொண்டிருக்கும். அதைக்கண்டு யாரும் பயப்பட வேண்டாம். எனது திருநாம மந்திரத்தைச் சேவித்தவாறே பயணித்தால், கடலிடையே நான் ஒரு மிகப்பெரிய திமிங்கலத்தின் வடிவத்தில், வலிமையான கொம்புகளோடு காத்துக் கொண்டு இருப்பேன். நீங்கள் வாசுகியாகிய பாம்புதேவரை வணங்கி வேண்டினால் அப்போது அவர் உங்களிடம் வருவார். அவரைக் கொண்டு நீங்கள் என்னுடைய கொம்புகளோடு வாசுகி பாம்பினால் படகை இணைத்துக் கட்டிவிடுங்கள்". என்று கூறியபின் பரமபுருஷபகவான் மறைந்துபோனார்.

**ஏழாம் நாள் வந்தது ! பிரளயமும் தொடர்ந்தது :**

புகவான் கூறியதைக்கேட்ட சத்தியவிரதர் மலைப்பில் ஆழ்ந்துபோனார். தனக்கு பெருமான் இட்ட கட்டளையைத் தவறாமல் சிறப்பாகச் செய்வது குறித்து ஆலோசனை செய்தார். அவர் கூறியவாறே மூலிகைகளையும், மிகுதியான தானியங்களையும். சேகரித்து வைத்துக்கொண்டு, அந்த ஏழாம் நாளுக்காகக் காத்துக்கொண்டிருந்தார். நதிக்கரையில் அமர்ந்து கொண்டு பகவானின் நாமங்களைச் சேவித்துக் கொண்டு யோகநிலையில் ஆழந்திருந்தார் சத்திய விரதர். அந்த ஏழாம் நாளும் வந்தது. மேகங்கள் வெடித்துச் சிதறின. மழை அலையலையாய்க் கொட்டியது. பூலோகம் வெள்ளப்பெருக்கால் மூழ்கடிக்கப்பட்டது. எங்கெங்கு காணினும் வெள்ளப்பெருக்கே.! தனிமையில் தவித்த சத்தியவிரதர், படகினை எதிர்ப்பார்த்துக் காத்திருந்தார். அப்போது பெருமானை கூறியதைப்போலே, படகு ஒன்று அவருக்கருகே வந்தவுடன், அவர் பகவானின் கட்டளைக்கு ஏற்ப, தானியங்களையும், மூலிகைகளையும் ஏற்றிக்கொண்டார், அங்கு தோன்றிய சப்பதரிஷிகளும் படகில் ஏறிக்கொண்டனர். படகு அசைந்தாடிக்கொண்டே அப்படு சென்றது. அங்கே பகவான் கூறியவாறு, மிகப்பெரிய திமிங்கல வடிவில் ஒரு மச்சமாகக் (மீனாக)காட்சி அளித்தார்.

இந்த மச்சாவதாரத்தை

**“கொழுங்கயலாய் நெடுவெள்ளம் கொண்டகாலம்**

**குலவரையின் மீதொடி, அண்டத்தப்பால்**

**எழுந்து விளையாடும் ஈசன் எந்தை**

**இணையடிக் கீழ் இனிதிருப்பீர்"**

(பெ.தி.மொழி.1449) என்ற பாசுரத்தில் கொழுத்தும், பெருத்தும் மிகப்பெரும் வடிவெடுத்தும் அந்த மீன் சத்தியவிரதருக்குக் காட்சி அளித்தது. என்று பாடுகிறார் திருமங்கை ஆழ்வார். தன்னுடைய கொம்பில் படகினைக்கட்டுமாறு ஏற்கனவே பகவான் சத்தியவிரதருக்குக் கூறியிருந்ததால், அதன் ஒற்றைக் கொம்பைப்பார்த்தபோது, அது, வானை முட்டுகிற அளவு உயர்ந்து இருந்தது என்றும், அதன்வால்பகுதியானது தரையைத் தொட்டுச் சுழற்றுமாறு அவ்வளவு மிகபெரியதாய் அந்த மச்சாவதாரத்தைப் பெருமான் பெற்றிருந்தார் என்பதை வியாசபகவானும் கூறுவதால் அறியமுடிகிறது.

எனவே, அலைகளை உடைய கடலிடையே காணப்படும் ஒரு மலைபோன்ற தோற்றத்துடன் பகவானின் அந்த மச்சாவதாரம் விளங்கியது. அப்போது சத்தியவிரதர் வாசுகி பாம்பினைக் கயிறாகக்கொண்டு, பகவானுடைய பெருத்து நீண்ட தந்தங்களில் தான்பயணித்து வந்த படகினைக் கட்டிவிட்டார். அதனால் அப்பிரளய காலத்தின் அழிவு பகவான் எடுத்த மச்சாவதாரத்தால் காப்பாற்றப்பட்டது.

இப்படியாக, பிரம்மதேவனின் கல்ப காலமுடிவான அந்தப் பகற்பொழுதின் முடிவில் ஏற்பட்ட பிரளயத்திலிருந்து சத்தியவிரதரும் மற்றவர்களும் பரமபுருஷராகிய பகவானால்

காப்பாற்றப்பட்டனர். பிரம்மாவின் இரவுப்பொழுது முடியும் போது, பூலோகத்தைச் சூழந்திருந்த நீரானது முழுதுமாக வற்றிப்போனதாலும், பிரம்மாவின் அடுத்த கல்பகாலமாகிய பகற்பொழுது தொடங்கியதாலும், பூவுலகில் மீண்டும் தன்னுடைய சிருஷ்டிகளைப் படைப்பிக்கும் காலம் வந்ததை உணர்ந்த பரமபுருஷன், சத்தியவிரதர் உள்ளிட்டோர் முதல் சப்தரிஷிகள் வரையிலான மனிதவர்க்கத்தினரையும், தேவர், பசு, (விலங்குகள்) பட்சி, (பறப்பன), தாவரம், நீரில் வாழ்வன, ஊர்வனவாகிய ஏழுவகைப்பட்ட உயிரினங்களையும் பிரம்மாவைக் கொண்டு மீண்டும் படைத்தருளினார். மேலும் பிரம்மாவின் இரவுப்பொழுது கழிந்து அவர் தன்னிடம் பாதுகாக்குமாறு கொடுத்த வேதங்களைக் காணாமல் மிகவும் பதைபதைத்தார். பகவான் கேட்டால் என்னமறுமொழி கூறுவது என்று ஏங்கித்தவித்தார். பகவானும், மனிதர்களின் நல்வாழ்விற்காகத்தான் படைத்த வேதங்கள், ஹயக்கிரீவனால் கவரப்பட்டதை அறிந்திருந்தார் ஆகையால், மறைந்து கொண்டிருந்த ஹயக்கிரீவனைத் தேடிச் சென்று, அவனை வதம் செய்து, அவனிடம் இருந்து வேதங்கலை மீட்டுக்கொண்டு வந்தார். மேலும் கலக்கக்கடலில் மூழ்கியிருந்த பிரம்மதேவரைக்கண்டு, ஆறுதல் கூறி, மீண்டும் அவற்றைப் பாதுகாக்கும் படி ஒப்படைத்தார். தன்னிடம் இருந்த வேதங்களின் உட்பொருளை அறியவிரும்பிய பிரம்மாவிற்கு, வேறொரு காலகட்டத்தில் வேதோபதேசமும் செய்வித்தருளினார்.!

பிரம்மதேவரின் வாயிலிருந்து, வேதங்களை ஹயக்கிரீவன் அபகரித்தான் என்பதை, இந்த அத்யாயத்தின் எட்டாம் ச்லோகத்தில் எடுத்துரைத்துள்ள வியாசர், அடுத்த ஒன்பதாம் ஸ்லோகத்தில் பின் வரும் செய்தியைக் கூறுகிறார்.

**ஜ்ஞாத்வா தத் தானவ இந்த்ரஸ்ய ஹயக்கிரீவஸ்ய சேஷ்டிதம்**

**ததார சபரீ ரூபம் பகவான் ஹரி ஈச்வர:**

என்னும் இச்சுலோகத்தில், ஹயக்கிரீவ அசுரனுடைய சேஷ்டிதத்தை, அதாவது திருட்டுச்செயலை அறிந்து கொண்ட ஸ்ரீஹரியாகிய பகவான், ஒரு சஃபரீ ரூபத்தை, அதாவது மீன் வடிவத்தை, (மச்சாவதாரத்தை) எடுத்தார்.. ஸ்ரீஹரிபகவான் அந்த ஹயக்கிரீவனைக் கொன்றார்.. அடுத்த பத்தாம் ஸ்லோகத்தைக் காண்போம்.

**தத்ர ராஜ-ரிஷி: கச்சின் நாம்னா ஸத்யவ்ரதோ மஹான்**

**நாராயண பர அதப்யத் தப:ஸ ஸலின ஆசன:**

என்பதில் முதல் வார்த்தையான தத்ர என்பது அது சம்பந்தமாக, அல்லது அங்கு அல்லது அதற்காக, இதற்காக என்ற பொருள்களைத் தரும் சொல்லாகும் தமது பரம பக்தரானவரும், நீரை மட்டுமே உண்டு உயிர்வாழ்ந்து பகவானுக்கு உபாசனைகள் செய்து வருபவருமான ஸத்யவிரதரைக் காப்பாற்றும் பொருட்டு, அதற்காக இந்த ஒரு மச்சாவதாரம் எடுத்தார் என்று அறியமுடிகிறது.

மேலும், வைணவசம்பிரதாயப்படி கல்விக்கடவுள் என்று ஸ்ரீஹயக்கிரீவப்பெருமானையும் நாம் அழைக்கின்றோம். அந்த ஹயக்கிரவப் பெருமான் வேறானவர். இங்கே, இந்த மச்சாவதாரத்தில் குறிக்கப்படும் ஹயக்கிரீவன் என்பவன் ஓர் அசுரன் ஆவான். இந்த அசுரவதத்தை நிறைவேற்றவும், வேதத்தையும், அதன் படைப்புக்களைக் காப்பார்றவும் பகவான் இந்த மச்சாவதாரத்தை எடுத்தார்.!

வைவஸ்வத மனுவின் பாரம்பரியத்தில் தான் சூரியகுலம் தோன்றியது. இக்குலத்தின் இட்சுவாகு என்ற அரசனின் பரம்பரையிலே இருந்துதான்,, பகவான் தன்னுடைய ராமாவதாரத்தை எடுத்துவந்து, தர்மத்தைக் காத்து, அதர்மிகளையும், அரக்கர்களையும் அழித்து, பதினோராயிரம் ஆண்டுகல் சிறப்பாக ஆட்சிபுரிந்து ராமராஜ்யத்தைப்புவி எங்கும் உண்டாக்கினார் என்பதை அறிதல்வேண்டும். பிரம்மாவின் கல்பகாலத்தில் ஏற்பட்ட அந்தப்பிரளயத்தின்போது, பகவான் மகாவிஷ்ணு அனைத்து உயிர்களையும் தனது உதரத்திற்குள் அடைத்து வைத்து அடைகாத்திருந்து,, படைப்புக்காலம் தொடங்கியபோது, அந்தந்த ஆத்மாக்களின் பாவபுண்ணியங்களுக்கு ஏற்றவாறு அவற்றை மீண்டும் உருவாக்கினார். அந்த காலப்பகுதியில் வைவஸவதமனு தோன்றியதால், அந்த காலப்பகுதி வைவஸ்வத மந்வந்திரம் எனும் அழைக்கப்பட்டது.

பகவானும், அவனால் படைக்கப்பட்டதான ஆத்மாவும் நிரந்தரமானவை. அந்த ஆத்மாக்கள் நீரினால் கரையாது

தீயினால் வேகாது. வாளால் சிதைப்பட்டு அழிக்கவும் முடியாது. ஆத்மாவும், அதனைப்படைத்தவனுமான பகவானுமே நித்தியமானவர்கள். மற்றவை எல்லாமே அநித்யமானவை. அதாவது அழியக்கூடியவை என்ற பகவத் கீதையின் ஸ்லோகப்பொருளும் இக்கதையால் நிலை நிறுத்தப்படுவதை அறிய முடிகிறது.

மேலும் தற்போது வைவஸ்வதமனுவின் காலமே நடைபெறுகிறது. தற்போது, பகவான் ஸ்ரீகிருஸ்ணாவதாரம் முடிந்து ஐயாயிரத்து நூற்று இருபது ஆண்டுகள் முடிந்துபோயின. இந்தக்கலியுகத்தின் காலப்பகுதி, நான்கு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் ஆண்டுகளாகும் என்று ஸ்ரீமத்பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. இந்தக்காலக் கணக்குப்படி இன்னும் எத்தனையோ ஆண்டுகள் இந்த யுகம் முடிய தேவைப்படுகின்றன என்று அறியும் போது நமக்கு மலைப்புதான் உண்டாகிறது. இவ்வாண்டுகளுக்குள் நாம் எத்தனை எத்தனை பிறவிகள் எடுத்தும், எவ்வகைப்பட்ட பிறவிகள் எடுத்தும் அல்லல் உறப்போகிறோம் என்பதை நம்மால் அறியமுடியாது. ஆனால், இந்தப் பிறவிப்பெருங்கடலாகிய துனபத்தில் இருந்து மீளுவதர்கு பகவானுடைய திருவடித் தாமரைகளைச் சரணம் அடைந்தால், அவர் நம்மைக்காத்தருள் செய்வார். எனவேபரப்பிரம்ம பெருமானாகிய ஸ்ரீகிருஷ்ணரின் திருவடிச் சேவையில் ஈடுபட்டு, பக்தி யாளர்களாய் வாழ்தல் வேண்டும். மேலும்

**ஜன்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத:**

**த்யத்வா தேஹம் புனர்ஜன்ம நைதி மாம் ஏதி ஸோ(அ)ர்ஜுனா**

என்று ப.கீ.தை அத்.4. ச்லோ.9 இல் பகவான் அர்ச்சுனனுக்கு அறிவுறுத்தியவாறு, பகவான் கிருஷ்ணர் எடுத்த அவதாரமும், அந்த அவதாரநோக்கத்தில் அவர்செய்த கர்மாக்கள் அனைத்துமே தர்மமானவையே என்பதை அறிந்து கொள்ளவேண்டும். அதாவது பகவான் கிருஷ்ணருடைய பிறப்பைப் பற்றிப் பெருமைகொள்ளாமல், அவரும் ஒரு அரசனாக வாழ்ந்த மனிதன் தான் என்று தாழ்ச்சி கூறுவதும், தர்மத்தை நிலைநிறுத்தவும், தர்மிகளைக் காக்கவும், அவர்செய்த செயல்கள் மாயங்களும், சூதும் வாதும் நிறைந்தவை என்று விமர்சனம் செய்வதும் கூடாது. அவர்செய்த கர்மாக்கள் அனைத்துமே தர்மத்தை நிலைநாட்ட செய்யப்பட்டவை. ஆகையால் அதையே அவருக்குரிய தர்மம் என்று முடிவு எடுத்து, அவர்வழி நடக்கவேண்டும்.


ராமோ விக்ரஹவாந் தர்ம: என்பது ராமனின் வடிவமே தர்மத்தின் வடிவம் என்று கூறுவதைப்போல, கிருஷ்ணதர்மம் சநாதனம் என்பதையும் அறிகிறபோது, பகவான் செய்த அனைத்தும் தர்மத்தின் பாற்பட்டவை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த எனது அவதாரத் தத்துவத்தை அறிந்து நடப்பவர்களுக்கு, யான் இந்தப் பிறவியிலேயே மோட்சத்தை அளிப்பேன் என்று கூறும் பகவானின் உருதிமொழியைப்பின்பற்றுபவர்களுக்கு,

இப்பிறவியின் முடிவிலேயே முக்தி கிடைக்கும் என்ற உண்மையை உணர்ந்து வாழ்வோமாக!

**கிருஷ்ணாய வாசுதேவாய தேவகி நந்தனாய ச**

**நந்தகோப குமாராய கோவிந்தாய நமோ நம:**

என்னும் மந்திரத்தை அனுதினமும் ஓதி, அரும்பயன்களைப்பெற்று உய்வோமாக!



## 12. ஏகாதசி விரதத்தால், சிறப்புற்ற அம்பரீஷன்

### அம்பரீஷர், மகாராஜன் அருங்குணங்கள் :

வியாச மகரிஷியால் நமக்கு அளிக்கப்பட்டுல்ள ஸ்ரீமத்பாகவதத்தின் ஒன்பதாம் ஸ்கந்தத்தில், அம்பரீஷன் என்ற ஓர் அரசனுடைய விஷ்ணுபக்தியும், (வாசுதேவ கிருஷ்ணபக்தியும்,) அதனால் அவனடைந்த சிறப்புகளும் விரிவாகக் கூறப்பட்டுல்ளது சூரியவம்சத்தில், நாபகன் என்ற பெயருடைய ஓர் அரசனுக்கு, அம்பரீஷன் என்ற அருந்தவப்புதல்வன் ஒருவன் இருந்தான். தன்தந்தையான நாபகனுக்குப்பிறகு அம்பரீஷன் அரசனாக விளங்கினான். ஆட்சியைச் சிறப்பாக நடத்திவந்தான். செல்வ வளம் கொழிக்கும் நாட்டின் சிறப்பான ஆட்சிபுரிந்த மன்னனாக அவன் விளங்கினான். ஆனாலும் அவன் உலகப் பொருள்களின்மீது எவ்விதப்பற்றும் கொள்ளாதவனாக விளங்கினான்.

அவனுடைய குணவிசேஷத்தையும், பௌதிக உலகமாகிய இப்பூலோகத்தின் உடைமைகளின் மீதும் பற்றற்ற ஒரு புண்ணிய புருஷனாகவே அவன் விளங்கிவந்தான். ஏனெனின் அச்செல்வமெல்லாம் ஒரு மண்சட்டியைப் போன்றது! எந்தநேரத்திலும் கைதவறுமானால் மண்சட்டி உடைந்து சுக்குநூறாகிவிடுவதைப் போன்ற நிலையாமையை உடையது என்பதனையும் அவன் தன் ஞானத்தால் அறிந்தவனாக இருந்தான். ஆனால் சிறந்த பக்திமானாக இருந்தான். வாசுதேவ கிருஷ்ணரின் பக்தியில் ஊறித்திளைத்தவன் அவன். அதுமட்டுமன்றி

அப்பெருமானுடைய பக்தர்களுக்குத் தன் செல்வத்தைக் கொடுத்து உதவும் கைங்கர்யச் செம்மலாகவும் விளங்கினான். இத்தகைய அம்பரீஷ மகாராஜனின் சிறப்பை, ஸ்ரீமத்பாகவதத்தில் ஒன்பதாம் ஸ்கந்தம் (காண்டம்) நான்காம் அத்யாயம் 17–ஆம் சுலோகத்தில் வியாசபகவான் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

**வாஸுதேவே பகவதி தத் பக்தேஷு ச சாதுஷு**

**ப்ராப்தோ பாவம் பரம் விச்வம் யேனேதம் லோஷ்டவத் ஸ்ம்ருதம்**

என்னும் இதில் பரமபுருஷரான் வாசுதேவனிடத்திலும் அவன் பக்தர்களான அடியார்களிடத்தும், (சாதுக்களிடத்தும்,) சிறந்த பக்தி கொண்டவராக அம்பரீஷர் விளங்கினார் என்றும், அவருடைய பக்தியின்காரணமாக தன் அரசபோகத்தையும், அரச செல்வத்தையும் துச்சமாக நினைத்தார். தனது அரசவாழ்க்கையை ஒரு மண்சட்டியாக நினைத்துவாழும் ஞானத்தைப் பெற்றிருந்தார் என்பதையும் வியாசபகவான் விளக்குகிறார்.

இவ்வாறாக ஸ்ரீமந்நாராயணபக்தியில் மூழ்கிய மனத்தை உடையவனாகவும் இருந்தான். அரசன். புலன்களின் பாதுகாவலரான வ்ருஷிகேசன் என்னும் திருநாமத்தைப் பெற்ற பகவானின் திருவடித்தாமரையைப் பூஜிப்பதிலும், அப்பெருமான் எழுந்தருளியுல்ள திருக்கோயில்களில் தன் துணைவியோடும் சென்று குற்றேவல் செய்யும் பணியினைச் செய்துவந்தார் என்பதையும் இப்பகுதியின் பற்பல ச்லோகங்களில் அழகுறக்கூறிச் செல்கிறார் வியாச மஹரிஷி.!

ஓர் பேரரசனாக விளங்கிய அவன் பரந்தாமனுக்காக ஒரு கோயிலையே நிர்மானித்தான். தன்துணைவியுடன் அங்கு செல்வார். பூசைக்காலங்களில் அங்கு செய்யப்படவேண்டிய மெழுகிடுதல், அலகிடுதல், (கோலம் போடுதல்), பூக்களைப்பறித்துத்தொடுத்தல், போன்ற கைங்கர்யங்களை அவருடைய மனைவி மிகவும் பக்திச்சிரத்தையுடன் செய்வார். அரசனும் பெருமானுக்குத் தேவைப்படும் சந்தனக்கலவைத் தயாரித்துக் கொடுத்தல், ஆகிய கைங்கர்யங்களைச் செய்துமுடித்து நாமசங்கீர்த்தனையுடன் கூடிய பஜனை போன்றனவற்றிற்கு ஏற்பாடுகள் செய்து, அதில் அரச தம்பதியினர் பக்திச் சிரத்தையோடு ஈடுபட்டு வாழ்ந்தனர். மேலும், ஆண்டாள் நாச்சியார் தனது திருப்பாவை ஐந்தாம் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ள் பூசைமுறையை விடாமல் செய்துவந்தவர் இந்த அரசர்.

**தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது**
**வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க**
**போயபிழையும் புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்**

என்பதற்கு ஏற்றவாறு தூயநெஞ்சம் உடையவனாகவும், தனது மனம், மொழி, செயல் என்ற முக்கரணங்களாலும், அனுதினமும் அந்தப்பரமாத்மனின் பக்தியில் மூழ்கியிருந்தார். சிறப்பானமுறையில் அந்தப்பெருமானுக்கு பற்பல உபவாசங்கள் இருந்தார். மேலும், பகவத் கைங்கர்யங்கள் ஆகிய பகவானின் பக்தர்களுக்கு ஏற்ற சேவைகளையும், செய்துவந்து, அவர்களுக்குத் தேவைப்படும் பொருள்களையும் அவ்வப்போது கொடுத்து மகிழ்ந்தார்.

உபாசனைகளையும் கடைப்பிடித்தவராகவும், திருமாளின் திருத்தொண்டில் ஈடுஇணை அற்றவராகவும் அம்பரீஷன் விளங்கினார். அரசனே என்றாலும், ஒரு சாதாரண பக்தனைப்போல பகவத்தொண்டில் ஈடுபட்டுவந்தார். மேலும் ஸ்ரீமந்நாராயணனை உபாசிக்கும் பல்வேறு விரதங்களையும் முறை தவறாமல் கடைப்பிடித்து வாழும் ஒரு பரமபாகவதனாகவும், ஹரிதாசனுமாக அவர் விளங்கிவந்தார்..

**சுதர்சன சக்கரம் பெற்று சிறப்பாக ஆட்சி செய்தான்...**

அம்பரீஷன் யாகங்கள் செய்வதிலும், அதனுடைய அவிர்பாகங்களை நாராயணனுக்கும், மற்ற தேவர்களுக்கு அளிப்பதிலும் பெரும் ஆவல்கொண்டிருந்தான். சரஸ்வதிநதிக்கரையில், பல அஸ்வமேதயாகங்களைச் செய்தான். தேவர்கள் புடைசூழவந்த பெருமான் அவன், அந்தயாகங்களால் பெரும் புண்ணிய சீலனாக விளங்கினான். எனினும், அவன் தான்செய்த அந்த யாகங்கலின் புண்ணியங்களையும் பலாபலன்களையும் ஸ்ரீமந்நாராயணராகிய மகாவிஷ்ணு பெருமானுக்கே அர்ப்பணம் செய்து தாரை வார்த்துக் கொடுத்துவிட்டார். அதனால் மனம்மகிழ்ந்த ஸ்ரீமந்நாராயணனும், தன்னுடைய சக்கராயுதத்தையே அந்த அம்பரீஷனுக்குப் பரிசாக அளித்துவிட்டார். பெருமானுடைய சுதர்சனச் சக்கரத்தின் வலிமையினாலும், பாதுகாப்பாலும் அம்பரீஷன் எவ்விதத் துன்பமும் அற்றவனாக ஆட்சி செய்து வந்தான்.

**விரதங்களின் பொதுவான நன்மைகள் :**

பகவானுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய பல்வேறு உபவாசங்களைச் செய்வதிலும், (உபவாசம்.. உண்ணாநோன்பு) அப்பகவானின் பக்தியில் மனதைச் செலுத்தி பூசை முறைகளைச் சிறப்பாகச் செய்வதிலும் மிகுந்த நாட்டம் கொண்டவன் அரசன். அவன்மட்டுமன்றி, அவனுடைய மனைவியும் சிறந்த பக்தி ஒழுக்கம் நிறைந்தவளாகவும், தன் கணவன் செய்கின்ற அனைத்துப் பூசை புனஸ்காரங்களில் தானும் பங்குபெறுகின்ற பத்தினிப்பெண்ணாகவும் அரசி விளங்கினாள்.! எனவே அரசன் மிகுந்த மகிழ்ச்சியோடு தனது பக்திப்பயணத்தை வெற்றிகரமாக நடத்துவது அவனுக்குச் சாத்தியமானது. இத்தகைய மனநிலையில் வாழத்தொடங்கிய அரசன், தனது பற்றுக்களை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கிக் கொண்டார். அரசனைக்கண்ட மக்கள் அனைவரும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பக்தியிலே மிகுந்த ஈடுபாடு கொண்டு. மனநிறைவோடு வாழ்ந்துவந்தார்கள்.

**கார்த்திகை வளர்பிறை ஏகாதசி விரதம் :**

ஒருமுறை அரசனும், அவனது மனைவியும் சேர்ந்து, ஒரு வருட காலம் ஏகாதசி விரதத்தை மேற்கொண்டனர்.. ஏகாதசி விரதம் என்று அழைக்கப்பட்டாலும், தசமி, ஏகாதசி, துவாதசி என்று மூன்று திதிகளிலும் தொடர்ந்து செய்யப்பட்டு முடிக்கப்படவேண்டிய சிறப்பிற்குரிய விரதம் இந்த ஏகாதசி விரதம் ஆகும். கார்த்திகை மாத சுக்கிலபட்ச ஏகாதசி அன்றைக்கு பகவான் தன்னுடைய யோகநித்திரையைக் கலைத்துக் கொள்ளும் நாளாகையால், அக்கார்த்திகை மாத

ஏகாதசியும், அடுத்து வரும் பிருந்தாவன துவாதசியும் மிகவும் சிறப்புடையவை ஆகும்.

**அரசனின் பிருந்தாவனப்பயணம் :-**

எனவே அந்த நாளன்னு தன்னுடைய தொடர் ஏகாதசி விரதத்தை முடித்துக் கொள்ள நினைத்த மன்னன், அந்த ஆண்டின் கார்த்திகை மாதம் சுக்கிலபட்ச (வளர்பிறை). ஏகாதசி விரத நாளன்று அரசன் தன்னுடைய பரிவாரங்களோடு, ஶ்ரீகிருஷ்ண ஜன்ம பூமியாகிய பிருந்தாவனத்திற்குச் சென்றார். அவரோடு சடங்குகளைச் சிறப்பாக நிறைவேற்றிக் கொடுக்கும் அந்தணர் கூட்டம் ஒன்றும் சென்றது.

**பிருந்தாவன துவாதசி விரதமும் ஏற்பாடுகளும் :**

தன் மனைவி மக்களோடு பிருந்தாவன் சென்ற அரசன், அதற்கு முந்தைய நாளான தசமி திதியிலேயே யமுனைக்குச் சென்ற மன்னன் அதில் புனித நீராடினான். பின்னர் விழா முடிவிற்காக சங்கல்பமும் செய்து கொண்டார். அன்று முழுதும் உபவாசம் இருந்தார். ஶ்ரீஹரியின் மகிமைகளை விளக்கும் கதாகாலட்சேபம் போன்றவைகளை அன்றிரவு நடத்தி, உண்ணாமலும் உறங்காமலும் விரதத்தைக் காத்தார். பொழுது விடிந்தவுடன், அரசனும் அரசியும் மிகுந்த பக்திச்சிரத்தையுடன் மீண்டும் யமுனைக்குச் சென்று நீராடினார்கள். பெருமளவில் பற்பல பிரசாதங்கள் தயாரிக்கப்பட்டன. அதை பகவானுக்கு கண்டருளப்பண்ணி, அனைவருக்கும் உணவளித்து, மீதியானதைத் தான் உண்டு மகிழவேண்டும் என்று நினைத்தான் அம்பரீஷன்.

அடியார்களின் சேஷத்தைத் தான் உண்ணவிரும்பினார். எனவே விரதமுடிவிலே மேற்கொள்ளப்படவேண்டிய பாரணை செய்யப்படவேண்டிய நேரமும் வந்தது.

**விரதத்தை முடிக்க நினைத்திட்டார் அரசர் :**

ஆக, பற்பல விரதங்களை மேற்கொண்ட புண்ணிய ஆத்மாவான அரசன் அம்பரீஷன், அவன் மனைவியும் ஓராண்டு காலத்திற்கு ஏகாதசி துவாதசி விரதத்தை மேற்கொண்டிருந்தனர் அம்பரீஷரும், அவரது பத்தினியும்,, கார்த்திகை மாதத்துத் துவாதசியில் மூன்று நாட்கள் உபவாசம் மேற்கொண்டிருந்து விரதத்தை முடிக்க நினைத்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்தனர். பகவான் கண்ணன் தவழ்ந்து விளையாடிய யமுனை நதிக்கரையில் புனித நீராடினர். அருகே இருந்த மதுவனம் என்ற இடத்தில் பகவானுக்கு அபிஷேகம் செய்ய நினைத்தான் அம்பரீஷன். எனவே ஆயிரம் குடங்களில் யமுனை நதியின் தீர்த்தத்தைக் கொண்டுவந்து, சிறப்பான முறையில் அபிஷேகத்தைப் பூர்த்தி செய்தான். மிகுந்த உற்சாகத்துடன் தனது துவாதசி விரதத்தை முடிக்கும் இருதிச்சடங்கான பாரணை செய்யும் நேரத்தில், அங்கே துர்வாச மகரிஷி வந்து தோன்றினார்.

**வந்தார் துர்வாசர் வந்தது பிரச்சனை :**

துருவாச முனிவரைப்பற்றிய பலசெய்திகள், இதிகாசங்களிலும், ஸ்ரீமத்பாகவதத்திலும் இடம் பெற்றுள்ளன. துர்வாசர் ருத்திரருடைய (சிவனின்) மானச புதல்வரும் ஆவார். சிறந்த தவவலிமை பெற்றவர். தனது தவப்பயனால் எப்போதும் மிகுந்த கர்வத்துடனே ஆங்காங்கு செல்வதும்,

பலபேருக்குச் சாபங்கள் கொடுத்து, துன்பப்படுத்துவதையும் தமது பொழுது போக்காகக் கொண்டிருந்தவர். துரியோதனின் துர் ஆலோசனைப்படி, வனவாசத்திலிருந்த பாண்டு புத்திரர்களின் விருந்தாளியாக ஆயிரம் சிஷ்யர்களோடு சென்று, திரௌபதியை அவமானப் படுத்தியும், பாண்டவர்களுக்கு சாபமும் தர சென்றவர் இவர் எனினும் ஸ்ரீ கிருஷ்ணப் பரப்பிரம்மத்தின் பேரருளால் விருந்துண்ணாமலேயே ஓடோடி வந்துவிட்டவர். இந்திரனுக்குச் சாபமிட்டு, இந்திரலோகத்துச் செல்வங்களைத் திருப்பாற்கடலில் மூழ்கடித்தவர். அந்த முனிவர்தான் தற்போது அம்பரீஷனிடம் பிருந்தாவன துவாதசியான அந்த நன்னாளில் அரசன் முன்னே தோன்றி நின்றார். துர்வாசர் என்றாலே பிரச்சனைதானே! என்ன நடந்தது என்பதை அறிவோம்.!

**விரதத்தை முடித்து, விருந்துண்ண அழைத்தார் :**

மிகச்சிறந்த தவவலிமைபெற்றவர் துர்வாச முனிவர். அதனால் அவருக்குத் தன்னைப்பற்றி எப்போதும் உயர்வாகக் கருதிக்கொல்ளும் ஓர் ஆணவப்போக்கு அவரிடம் இருந்தது. அதனால் தவசியான அவர், பெருமாபாலும், பலருக்கும் துன்பத்தை ஏற்படுத்தும் ஒரு தவ முனிவராகவே அவர் கருதப்பட்டார். எனினும் தன் விரதமுடிவுக்காலத்தில் அங்கே வந்த துர்வாசரை அரசன் மகிழ்ச்சியோடு வரவேற்று, அவருக்கு ஆசனம் அளித்து, அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி வரவேற்றார். பின்னர், அன்றைய துவாதசி விரத முடிவின்போது தன்னோடு விருந்துண்ண முனிவரை வேண்டினான் அம்பரீஷ அரசன்.! துர்வாசரும் அதற்கு

இணக்கம் தெரிவித்தார். எனினும் யமுனைக்குச் சென்று நீராடி விட்டு நண்பகல் சந்த்யா வந்தனத்தை முடித்துவிட்டு வருவதாக கூறிவிட்டுச் சென்றார் துர்வாசர்.

**துர்வாச முனிவரால் தொடங்கிய சிக்கல் :**

அரசனும் அதற்கு இசைவு தெரிவித்தார். எனவே நீராடிவிட்டு வருவதற்காக யமுனைத்துரைக்குச் சென்றார் முனிவர். அவருடைய தீயபுத்தி வேலை செய்தது. அம்பரீஷனின் பக்தியையும், அதிதியாகிய தனக்கு அவன் எவ்வித சிறப்பு அளிக்கிறான் என்பதையும் சோதனை செய்து பார்க்கவேண்டும் என்ற கொடூர எண்ணம் அவர்மனத்தில் உதித்தது. எனவே வேண்டுமென்றே காலத்தைக் கடத்தினார். ஆனால் விரதத்தை முடிக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தார் அரசர். இந்நிலையில் துர்வாசர் வெகுநேரமாகியும் திரும்பவில்லை. அவருடைய வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த அரசன் அம்பரீஷருக்கு என்னசெய்வதென்று புரியவில்லை. ஏனெனில், துவாதசி திதி முடிவதற்கு அரைமணிநேரமே மீதமிருந்தது. அந்த அரை மணி நேரத்திற்குள் பாரணையை முடித்துவிட வேண்டும். இல்லையென்றால் அரசதம்பதியினர் கடைப்பிடித்து வந்த ஓராண்டு கால துவாதசி விரதமும் வீணாகிப்போகும். மேலும் விரதத்தை முழுமையாகச் செய்து முடிக்கமுடியாத பெரும் தவறும் ஆகிவிடும். இது தெய்வக்குற்றமாகவே கருதப்படும். அதனால் பல தீமைகளும் நேரிடலாம். ஆனால் துர்வாசரை அழைத்துவிட்டு, அதிதியாகிய அவர் வருமுன்பாகவே விரதத்தை முடித்துவிட்டால், முனிவருடைய கோபத்திற்கு ஆளாகநேரிடும். எனவே என்ன செய்வது என்று தெரியாம்ல

இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தார் அம்பரீஷன். எனினும், சில அந்தணர்களை அழைத்து, இதற்கு உபாயம் இருந்தால் கூறுமாறு வேண்டிக்கொண்டான்.

அரசனின் நிலையைப் புரிந்துகொண்ட அந்த அந்தணர்களும், அரசன் நினைத்ததைப்போல, தண்ணீரை மட்டுமே சிறிது பருகலாம் என்றும், அவ்வாறு செய்வது சரியான வழிமுறையே ஆகும் என்றும் அரசனின் கருத்தை ஆமோதித்தனர். தீர்த்தத்தை மட்டும் குடித்தால், (தண்ணீர் பருகுதல்) அது விரதத்தை முடித்துக் கொண்டது போலவும் ஆகும். விரதம் தொடர்ந்து இருப்பதைப்போலவும் கருதப்படும்.. ஏனென்றால் தீர்த்தம் பருகுதல் தோஷம் அற்றதாகும். எனவே உபவாச காலத்தில் நீரைப் பருகுவது என்பது உணவு போலவும் ஏற்றுக்கொள்ளப்படும் எனவே இரண்டிற்கும் பொதுவானதாகக் கருதப்படும் தண்ணீரை மட்டும் பருகிய அரசன், பாரணையை முடித்துக் கொண்டுவிட்டார். விரதமும் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேறியதாக மகிழ்ச்சியுற்றார். இவ்வழிமுறையானது பாகவதத்தின், 9.ஆம் காண்டம், 4.ஆம் அத்யாயம், 40.ஆம் ஸ்லோகத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

**அம்பஸா கேவலே நாத கரிஷயே வ்ரதபாரணம்**

**ப்ராஹுர் அப்பகக்ஷணம் விப்ரா ஹி அசிதம் நாசிதம் ச தத்**

என்பதில் அம்பஸா கேவலேன என்றால், வெறும் தண்ணீரை மட்டுமே, குடித்தல் என்று பொருள்படும்., பிராமணர்களே நான் என்னுடைய விரதத்தை முடித்துக் கொள்ளப்போகிறேன் வெறும் நீரைமட்டும் சிறிதளவு உண்டால், அது விரதம் தொடர்வதற்கும், முடிவுபெற்றதற்கும்

அடையாளம் என்று வேத சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது அன்றோ? எனவே அம்முறையைக் கடைப்பிடிக்கப் போகிறேன். அதிலே உங்களுக்கு உடன்பாடு உண்டா என்று அவர்களிடமும் கேட்டார். அவர்களும் இது உபாசனை விதிக்கு உட்பட்டதே என்று கூறியதால். மேற்கண்டவாறு விரதத்தை முடித்தார் மன்னர்..

மேலும், அபோ ஸ்னாதி தன் நை வாசிதம் நை ன வாசிதம் என்று வேதங்களில் சொல்லப் பட்டிருந்ததை அந்த ராஜரிஷி அறிந்துவைத்திருந்ததால், தன்னுடைய முடிவை பிராமணர்களுக்கும் கூறிவிட்டு, அவர்களுக்கு தரப்படவேண்டிய சம்பாவனைகளையும் கொடுத்துவிட்டு. ஸ்ரீமந் நாராயணரையே மனதில் தியானித்த வண்ணம் அமர்ந்திருந்தார். துர்வாசரின் வருகைக்காகவும் காத்துக் கொண்டிருந்தார்.

**கோபம் கொண்ட துர்வாசர் செயல் :**

ஆனால் சற்று நேரத்திற்குப் பிறகு அங்கே வந்த துர்வாசர் அரசன் செய்த செயலை தன் தியான திருஷ்டியால் (ஞானக்கண்ணால்) கண்டறிந்துகொண்டார். விரத முடிவிற்குத் தன்னை வரவழைத்துவிட்டு, வருமுன்பாகவே அரசன் விரதத்தை முடித்து விட்டதை தனக்குச் செய்த மிகவும் அவமானமாகக் கருதினார். வெறும் தீர்த்தப்பிரசாதத்தை மட்டுமே எடுத்துக் கொண்டார் அரசர். முனிவர் வந்தபிறகு மற்றைய பிரசாதங்களை அவருக்குக் கொடுத்து, அவருண்ட மீதியை (சேஷத்தை) தான் உண்ணநினைத்திருந்தார் அரசர் ஆகையால் அதில் குற்றம் ஏதும் இல்லை. ஆனால், அவருக்கு அரசன்மீது அளவற்ற கோபம் உண்டானது. பசியினால்

இருந்ததால் அவருடைய கோபமானது மேலும் பலமடங்காக வளர்ந்தது. தன்னை விரதத்தை முடிப்பதற்காக அழைத்துவிட்டு, தனக்கு உணவு படைத்துவிட்ட பின்பே அரசன் தன் மிச்சிலை உண்பான் என்று எண்ணியிருந்தார் துர்வாசர். அதுதான் முறையென்றாலும், அவ்வாறே செய்வதற்கு அரசனும் தயாராக இருந்தபோதும், முனிவர் காலம் தாழ்த்தி வந்ததே இவ்வளவிற்கும் மூலகாரணம் என்பதை அம்முனிவர் நினைத்துக்கூடப்பார்க்கவில்லை. ஆனால் தன் தவ வலிமையின் கர்வத்தால், அரசனைத் தண்டிக்கவேண்டும் என்று நினைத்தார் துர்வாசர்.

**பூதத்தை உண்டாக்கி வலிமையைக்காட்டினார் :**

அம்பரீஷ ராஜரிஷி, அவருக்குத் தன்சூழ்நிலையைக் கூறுவதற்கும் வாய்ப்பளிக்காமல், "அரசனே உனக்கு எவ்வளவு கர்வம், என்னை அதிதியாக (விருந்தினராக) வருமாறு அழைத்துவிட்டு, நான் வருவதற்கு முன்பாகவே விரதத்தை நீ முடித்துவிட்டாய் அதனால் நீ என்னைப் பெரிதும் அவமதித்துவிட்டாய். உன் கர்வத்தை இப்போதே அடக்குகிறேன் பார் என்று கூறி கொதித்து எழுந்தார். அம்பரீஷன் எவ்வளவோ மன்றாடியும் பயனில்லை. எனவே அந்த முனிவர் தன் ஜடாமுடியிலிருந்து ஒன்றை பிடுங்கிப்போட்டு, அதைப் பூதமாகுமாறு, அம்பரீஷனைக் கொல்லுமாறும் கட்டளை இட்டார்.

துர்வாசரின் தலைமுடியானது ஒரு துர்த்தேவதையாக மாறியது. பூமி அதிருமாறு, கையில் ஒரு சூலத்துடனும்,, மாபெரும் உருவத்துடனும் நெருப்பைக் கக்கிக்கொண்டு, அம்பரீஷனை அழிக்க நெருங்கி வந்தது. ஆனால்

அதைக்கண்டு சற்றும் மனம் கலங்காத அரசன், பகவான் மகாவிஷ்ணுவை எண்ணியவாறு, அவருடைய நாமாவளியைத் துதித்துக்கொண்டு நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருந்தார். ஏனென்றால்,

**கலங்காமல் நின்றார் கர்மயோகி அம்பரீஷன் :**

**நாராயண பரா: ஸர்வே ந குதஸ் ச ந பிப்யதி**

என்னும் வேதவாக்கானது "ஸ்ரீமந் நாராயண பக்தர்கள் இவ்வுலகில் தங்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களைக் கண்டு கலங்கமாட்டார்கள் என்றும், பகவானையே துதித்து இருப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளதற்கு ஏற்றவாறு, துர்வாசரால் உண்டாக்கப்பட்ட அந்த துர்த்தேவதையான ஒரு பைசாசத்தைக் கண்டு சிறிதும் அஞ்சாமல், ஓரடியும் பின்வாங்காலம், நின்ற நிலையிலேயே இருந்தார். அப்போது ஏற்கனவே பகவான் ஸ்ரீமந்நாராயணனால் அம்பரீஷனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சுதர்சனச்சக்கரம் தோன்றி, அரசனைக் காப்பார்ற முயன்றது. துர்வாசரால் உண்டாக்கப்பட்ட அந்தப்பேயைத் தன்னுடைய பெரும் அக்னிச்சுடரால் சுட்டெரித்தது. அதனோடு நில்லாமல் தன் தலைவராகிய பெருமானின் அடியவரான அம்பரீஷ மகாராஜனுக்கும் தீமை விளைவிக்க நினைத்த முனிவரையும் சுட்டெரித்து விடவேண்டும் என்ற எண்ணத்தில் அது அம்முனிவரை நோக்கிச் சென்றது...

**எட்டுத்திசைகளிலும் இந்திரலோகத்திலும் யாரும் உதவவில்லை:-**

கொழுந்துவிட்டு எரிகிற காட்டுத்தீயானது பாம்பைப் பின்தொடர்ந்து செல்வதைப்போல, பகவானின்

சுதர்சனச்சக்கரம் அம்முனிவரை எரித்து அழித்துவிட பின் தொடர்ந்தது. தனது முதுகுவரையிலே வந்துவிட்ட சக்கரத்தின் தாக்குதலில் இருந்து தப்பிக்க, ஆகாயத்திலும், மலைக் குகைகளுக்குள்ளும், துவாரபாலகர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து திசைகலுக்கும் ஓடினார். அப்பொழுதும் சுதர்சனம் அவரைவிடவில்லை. தன்னைத் துரத்திவந்த சுதர்சனச்சக்கரத்தின் தாக்குதலிலிருந்து தப்பிக்க நினைத்ததாக துர்வாசமுனிவர் மேலுலகம் நோக்கி ஓடினார். வழியில் இந்திரலோகத்தைக்கண்டார். எனவே இந்திரனை அணுகி தன்னைக்காப்பாற்றுமாறு வேண்டலாம் என்று நினைத்தார் முனிவர். சக்கரன் என்பது தேவேந்திரனுக்கு உரிய வேறு ஒரு பெயர் ஆகும். எனவே சக்கரா சக்கரா என்று அலறியவண்ணம் துர்வாசர் ஓடியபோது, அந்த சப்தத்தைக்கேட்ட் சக்கரன் எனப்பட்ட இந்திரன் துர்வாசர் ஓடிவருவதையும், சுதர்சனம் பின் தொடர்ந்து வருவதையும் பார்த்தவுடன் அதிலிருந்து தான் தப்பித்துக்கொள்ள நினைத்து முனிவருக்குத் தெரியாதவண்ணம் ஓடி ஒளிந்துகொண்டான்.

**சத்யலோகத்தில் துரவாசர் :**

ஓர் இமைப்பொழுதில் நடந்து விட்ட இந்த விபரீதத்தைப் புரிந்துகொண்ட முனிவர், தன் கர்வம் அடங்கப்பெற்றதால் பயம் கொண்டார். தன்னைக்காப்பாற்றிக்கொல்ள வேண்டும் என்பதற்காக ஓடோடிச் சென்றார். ஆனால் பகவானின் சுதர்சனச் சக்கரமானது முனிவரை விடாமல் துரத்தியது. பூவுலகில் இருந்த மலைகள், குகைகள், மடுக்கள், சோலைகள் போன்றவற்றில் எல்லாம் புகுந்து, மறைந்து சென்றார் துர்வாசர் எனினும், பகவானின் சுதர்சனச்சக்கரம் அவர்

கதையை முடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில், விடாமல் துரத்திச் சென்றது. திடீரென்று அம்முனிவருக்கு, பிரம்மதேவனின் நினைவு வரவே, அவரிடம் சென்றால், நம்மைக் காப்பாற்றுவார் என்று நினைத்து, சத்தியலோகத்தைச் சரண் அடைந்தார். பிரம்மதேவரின் சத்தியலோகத்திற்குச் சென்ற பின்பும், சக்கரத்தாழ்வார், அம்முனிவரைத் துரத்தியதால், பிரம்மதேவரிடம் தனக்கு அம்பரீஷன் பொருட்டாக, பகவான் ஸ்ரீமந்நாராயணரின் சுதர்சனச்சக்கரத்தால் ஏற்பட்டுள்ள பெரும் ஆபத்தை எடுத்துரைத்து, இப்பேராபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றுமாறும் வேண்டினார்.

ஆனால், இந்தச் சம்பவம் ஏற்பட்டதற்கான காரணத்தை, துர்வாசர் எடுத்துரைத்தபோது, அம்பரீசனின் பக்தியும், அவருக்கு துன்பம் ஏற்படுத்த நினைத்த முனிவரின் கர்வமே காரணம் என்பதை பிரம்மா நன்கு புரிந்து கொண்டார். எனவே துவாதசி விரதத்தின் மகிமையை உணராமல், முனிவர் செய்த செயலுக்காக, அவர் துன்பப்படுவது சரியானதே என்பதை பிரம்மதேவர் உணர்ந்துகொண்டார்.

**பிரம்மதேவரின் பதில் :-**

அவர்தன்னைக்காப்பாற்றுமாறு வேண்டிய துர்வாசருக்கு பிரம்மதேவர் கூறிய அறிவுரையை ஸ்ரீமத்பாகவதம் 9 ஆம் அத்யாயம் 53, 54, ஆம் சுலோகங்களில் எடுத்துரைக்கிறது. அதில், 54ஆம் ச்லோகத்தில்,

**அஹம் பவோ தக்ஷ ப்ருகு-ப்ரதானா**

**ப்ரஜேச பூதேசஸுரேசமுக்யா:**

**ஸர்வே வயம் யன்நியமம் ப்ரபன்னா**

**மூர்த்ந்யர்பிதம் லோகஹிதம் வஹாம:**

கூறியுள்ள கருத்து என்னவென்றால், “நானும், சிவபெருமானும், தட்சன், பிருகு போன்றவர்களும், அவர்களுக்கு ஒப்பான மற்ற முனிவர்களும், பகவான் ஸ்ரீமந்நாராயணரைச் சரணம் அடைந்து வாழ்பவர்கள், மேலும், இவ்வுலகத்து அனைத்து உயிரினங்களைக் காத்து வருகிற பிரஜாபதிகள் போன்றவர்களும், மனித சமூகத்தை ஆள்பவர்களும், தேவர்களுமாகிய அனைவருமே அவரது கட்டளைக்கு உட்பட்டு நடப்பவர்களே, ஆகையால் நான், இந்த விஷயத்தில் உமக்கு எந்த உதவியும் செய்யமுடியாது” என்று கூறி, துர்வாசரின் கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

மேலும் பிரம்மதேவர் துர்வாசரிடம் “நீ பகவான் விஷ்ணுவின் அடியார்களுக்குத் துன்பம் கொடுக்க நினைத்தாய். பகவானோ தனது பக்தர்களிடம் அதிகமான விருப்பம் உடையவர். அவருடைய பக்தர்களுக்கு யார் எந்த துன்பத்தைத்தர நினைத்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ளமாட்டார். அவருடைய திவ்யச்சக்கரமும் அத்தகையதே! எனவே இந்த விஷயத்தில் நான் உனக்கு உதவி செய்யமுடியாது என்று கைவிரித்துவிட்டார்.!

**கைலாயத்திலும் இதே கதை :**

மனமுடைந்துபோன மகரிஷி அங்கிருந்தும் தப்பித்துக்கொண்டு சிவபெருமான் வாழும் கைலாயங்கிரியை அடைந்து, அவரிடம் உதவிகேட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்து கைலாயம் நோக்கி

காற்றாய்ப் பறந்தார். கைலாயத்தில் சிவபெருமானின் தரிசனமும் கிடைத்தது. உடனே முனிவர் அவரிடமும் தன்னுடைய நிலையை எடுத்துச்சொல்லி, தன்னைச் சுதர்சனச்சக்கரத்திடமிருந்து காப்பாற்றவேண்டும் என்று வேண்டினார். சிவபெருமான் தன்னை நோக்கித் தவம்செய்பவர்கள் யாராக இருந்தாலும், உடனே அவர்களுக்கு கேட்கும் வரத்தை அளித்துவிடுபவர் ஆவார். ஆனால், இந்த விஷயத்தில் தான் உதவி செய்யமுடியாது என்பதற்குரிய காரணத்தையும் ஸ்ரீமத்பாகவதம் எடுத்துரைக்கிறது. இதே பகுதியில், 56முதல் 59.ஆம் சுலோகங்கள் வரையிலான ஸ்லோகங்களின் தமிழ் அர்த்தத்தை மட்டும் பார்ப்போம்,

“எனது அருமைப்புதல்வனே!! நானும், பிரம்மாவும் மற்றதேவர்களும், நாங்களே உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்துடன், இந்த அண்டத்தில் அலைந்து கொண்டிருக்கிறோம். ஆனால் பரமபுருஷராகிய அந்த விஷ்ணுவிடம் போட்டிபோடும் வலிமை எங்களுக்குக் கிடையாது.

மேலும் நானும், சனகர், சனந்தர், சநாதனர், சனத்குமாரர் ஆகிய பிரம்மதேவரின் புதல்வர்களும், நாரதமகரிஷியும், கபிலர் தேவலர், இயமன், ஆசுரி, மரீசி போன்ற அனைத்து முனிகணங்களும் கூட பகவான் விஷ்ணுவின் லீலைகளை முழுதுமாக அறிந்துகொள்ளமுடியாதவர்களாகவே இருக்கிறோம். எனவே சுதர்சனச் சக்கரத்தின் தாக்கத்தை எங்களாலேயே பொறுத்துக் கொள்ள முடியாதது ஆகும், வேண்டுமானால், நீ உன் தவறை உணர்ந்து அந்த

விஷ்ணுபகவானையே சரண் அடைந்தால் அவர் உன்னைக்காப்பாற்றலாம்'' என்று கூறி துர்வாசருக்கு உதவிபுரிய மறுத்துவிட்டார்.

**வைகுந்த வாசன் உணர்த்திய தத்துவம் :-**

எனவே வேறு வழியின்றி வைகுந்த வளநகர்நோக்கி வாயுவேகத்தில் பறந்து சென்ற துர்வாசர், அங்கே அன்னை மகாலட்சுமியோடு இருந்த விஷ்ணுவை வணங்கினார். பின்னர் தான் செய்து விட்ட தவற்றையும் எடுத்துரைத்து, பகவானின் ஸ்ரீசக்கரம் தன்னை அழிக்கத் துரத்திவருவதையும் எடுத்துரைத்தார். தன்னைக் காப்பாற்றுமாறும் வேண்டினார். ஆனால் அப்பெருமான் துர்வாசருக்கு அளித்த மறுமொழியானது, 63.ஆம் ச்லோகம் முதல்,70 ஆம் ச்லோகம் வரையில் மிகவும் விபரமாகக் கூறுகிறது. அவற்றில் 63.ஆம் ஸ்லோகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

**ஸ்ரீபகவான் உவாச**

**அஹம் பக்த பராதீனோ ஹி அஸ்வ தந்த்ர இவ த்விஜ**
**ஸாதுபிர் க்ரஸ்த - ஹ்ருதயோ பக்தைர் பக்த-ஜன-ப்ரய:**

இதில் "முனிவரே ! நான் முற்றிலும் என் பக்தர்களின் கட்டுப்பாட்டில் உள்ளவன். வேறுவிதமாகச் சொல்லப்போனால், நான் அவர்களுக்கு அடிமைப்பட்டவன். என்னுடைய பக்தர்கள் பூலோக வாழ்க்கையின் அனைத்து ஆசைகளையும் துடைத்து எறிந்து விட்டு, என்னை மட்டுமே தங்களின் இதயத்தில் அமரவைத்துல்ளார்கள். எனவே எனக்குப்பிரியமான என்னுடைய பக்தர்களின் செயலுக்கு

நான் தடைவிதிக்கமுடியாது என்னும் கருத்தை இதில் கூறியுள்ளார்.

மேலும் இத்தகைய சாதுக்கள் இல்லாமல், நான் எந்த ஐஸ்வர்யத்தையும், ஆனந்தத்தையும் அனுபவிக்கமுடியாது.! என்மீது பக்திகொண்ட அவர்கள், தங்களுடைய சொந்தங்களைக்கூட எனக்காக தியாகம் செய்து விடுகிராற்கள். அத்தகைய வைராக்கியம் பெற்றுள்ள அவர்களை நான் என்றைக்கும் கைவிடமாட்டேன். என் பக்தர்கள் என்னையன்றி வேறொன்றும் அறியாதவர்கள். நானும் அவர்களைத் தவிர வேறு எவரையும், எதையும் நினைப்பதும் இல்லை. அப்படியிருக்க, நான் அவர்களை எவ்வாறு கைவிட முடியும்?" என்றெல்லாம் துர்வாசர் புரிந்து கொள்ளும்படியாக, தனது பக்தர்களின் பெருமையை எடுத்துரைத்தார் ஸ்ரீமகாவிஷ்ணு!

**அகம்பாவமும், ஆணவமுமே காரணம் :**

மேலும் துர்வாசருடைய துர்க்குணத்தையும் சுட்டிக்காட்டவிரும்பிய பரமபுருஷராகிய பகவான், ஒரு பிராமணனுக்கு தவமும், கல்வியும் நன்மை அளிப்பவைதான். ஆனால் அதைத் தவறான முறையில் பயன்படுத்துகின்றவர்களுக்கு, அவை நன்மையைத்தராமல், ஆபத்தைத் தரக்கூடியதாகவே அமையும் என்று சுட்டிக்காட்டி, பிராமணர்களுக்கு ஒழுக்கமே பிரதானம் என்பதையும் உணர்த்தினார்.

**பிரஹ்ற மம்ஸ் தத் கச்ச பத்ரம் தே நாபாக-தனயம் ந்ருபம்**
**--க்ட்சமா பய மஹா பாகம் தத: சாந்திர் பாவிஷ்யதி.!!**

என்னும் ச்லோகத்தின் -வாயிலாக, தமது ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரு உபாயத்தையும் பகவான் துர்வாசருக்கு அறிவுரையாகக் கூறினார். அதாவது, அந்தணரே ! நீங்கள் இந்த ஆபத்திலிருந்து மீளவேண்டுமானால், நாபக மகாராஜனின் புத்திரரும், ராஜரிஷியும், அரசனுமாக விளங்கி வருபவருமான அம்பரீஷ மகாராஜனிடம் உடனே சரணம் அடைந்து விடுங்கள்.! அவர் உமது குற்றங்களைப் பெரிது படுத்தாத குணசீலர்!

**அம்பரீஷனின் அருங்குணங்களாக பகவான் விஷ்ணு உரைத்தவை :-**

அதுமட்டுமின்றி, அம்பரீஷன் என்மீது அபரிமிதமான பக்திபூண்டவன். அத்தகைய சிறப்பான ஓர் அரசனுக்கு நீங்கள் துன்பம் கொடுக்க நினைத்துள்ளீர்கள். எனவே இது மிகப்பெருங்குற்றமாகும். அரசன் மிகச்சிறந்த பக்திமான் என்றாலும், நான் அவனிடம் கொடுத்து வைத்திருந்த சுதர்சனச்சக்கரமானவன் தன் கடமையைச் செய்வதற்காகவே உன்னை விரட்டி வருகின்றான். அவனும் என்பக்தனே ! என் பக்தர்களுக்கு எதிரிடையாக நான் ஒரு செயலும் செய்யமாட்டேன். எனவே நீங்கள் என்னைச் சரணம் அடைவதை விடுத்து, அம்பரீஷமகாராஜனையே சரணம் அடைந்து, உங்கள் தவற்றைப்பொறுத்துக்கொள்ளுமாறு வேண்டுங்கள். நிச்சயமாக நல்லதே நடக்கும் என்று மறுமொழி கூறிவிட்டார்.

**திருந்தினார் முனிவர் திரும்பினார் பூலோகம் :**

உயிர் மீது கொண்ட ஆசையினால் வேறு வழி இல்லாமல் மீண்டும் பூலோகத்திற்கே திரும்பி ஓடிவந்தார் துர்வாசர். ஸ்ரீ

மகாவிஷ்ணு கூறிய உபாயத்திற்கு ஏற்றவாறு, அவர் அம்பரீஷரிடம் சரணடைந்து அவர்பாதங்கலைப் பற்றிக்கொண்டு தனது பிழையைப் பொறுத்து, தனக்கு உயிர்ப்பிச்சைத் தருமாறு வேண்டி நின்றார். இயல்பாகவே நல்ல சிந்தனையும், பக்தி ஒழுக்க மேம்பாட்டிலும் சிறந்திருந்த அந்த அரசன் துர்வாசரைப்பணிந்து மகரிஷியே! தாங்கள் என்னை வணங்கவேண்டாம்! தங்களைப் போன்ற ஞானிகளைக் காப்பாற்றவேண்டியது என் போன்ற அரசர்களின் கடமை அல்லவா? என்று ஆறுதல் கூறினார். மேலும் சுதர்சனமாகிய அன்பிற்குரியவரே! தயவு செய்து நீங்கள் எனக்காக இந்த அந்தணச் சிரேஷ்டரை துன்பப்படுத்தாமல் விட்டுவிடவேண்டும். இவருக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும் இவரைப்போன்றவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வாழ்வதையே நான் என் குறிக்கோளாகக் கொண்டவன். அதனால் தான் என் குலம் விருத்தி அடையும். நானும் பெருமான் பக்தியில் ஊறித்திளைத்து நின்று மென்மேலும் பலவிரதங்களின் மூலம் பகவானை அடையமுடியும்" என்றும் பலவாறாக அச்சக்கரத்தாழ்வாரிடம் வேண்டினார். உடனே பெருமானின் சக்கரமும் துர்வாசருக்கு எவ்விதத்தீங்கும் செய்யாமல் விட்டகன்றது.

**தடைபட்டவிரதம் திருப்தியாய் முடிந்தது :**

சுதர்சனச்சக்கரத்தால் துரத்தப்பட்ட துர்வாசர் மூன்று லோகங்களுக்கும் சென்று திரும்பி மீண்டும் பூலோகம் வந்தபோது ஓராண்டு முடிவுபெற்றது. அது வரையில் மன்னன் எவ்வித ஆகாரத்தையும் எடுத்துக்கொள்ளாமல், தண்ணீரை

மட்டுமே குடித்து வாழ்ந்துகொண்டிருந்தார். மகரிஷியின் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த அரசனுக்கு, அவர்திரும்பி வந்தது பெரும் மகிழ்ச்சியைத்தந்தது. முன்பு தடைப்பட்டுப்போன அதே துவாதசி விரதத்தை தற்போது எவ்விதத்தடங்கலும் இல்லாமல் செய்து முடித்து பகவானின் பேரருளுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ள நினைத்தார். எனவே அவர் துர்வாசரைநோக்கி முனிசிரரேஷ்டரே! என்னுடைய விரதம் முழுமை அடைய தாங்கள் அருள்புரியவேண்டும். என்னுடன் சேர்ந்து உணவு உண்ணவேண்டும் என்று வேண்டிநின்றார் அரசர்.

**விருந்துண்டு மகிழ்ந்தார், விடை பெற்றுச் சென்றார் :**

துர்வாசரும் அரசனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். எனவே துவாதசி விரதமுறைப்படி, மாமுனியை அமரவைத்து, விருந்து பரிமாறிய அரசன், பிறகு பிரசாதத்தில் எஞ்சியதை உண்டு தனது விரதத்தை முடித்தார். அரசனின் பக்திச்சிரத்தையை உணர்ந்த அம்முனிவர், பகவானின் பக்தர்களால் சாதிக்கமுடியாதது என்பது எதுவும் இல்லை. என்று புளகாங்கிதம் அடைந்தார். அரசனை வாழ்த்தி விடைபெற்றுச் சென்றார்.

**வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்மை இல[தி.குறள்.4]**

**கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை [தி.கு.9]**

இவ்விரண்டு திருக்குறட்பாக்களும் திருவல்ளுவர் அருளிச் செய்துள்ள திருக்குறளின் கடவுள் வாழ்த்துப்பகுதியில் அமைந்துள்ளவையாகும்.

பரமபுருஷனாகிய பகவான் தன்னைச் சரணம் அடைந்த பக்தர்களில், இவர்வேண்டியவர் என்றோ? இவர் வேண்டாதவர் என்றோ வேறுபாடு பார்ப்பது இல்லை. தான் உருவாக்கிய நால்வகை வர்ணத்தாருள்ளும், அவர்கள் வேதம் ஓதும் அந்தணர்களாக இருந்தாலும், ஆயுதம் ஏந்தும் அரசனாக இருந்தாலும், வாணிகம் செய்யும் வைசியனாக இருந்தாலும், அல்லது தொண்டுபுரியும் வேளாளனாக இருந்தாலும், தன் பக்தர்கள் அனைவரையும் ஒரே விதமான கண்கொண்டு நோக்குபவர் பெருமான் என்பதையும், அத்தகைய பெருமானின் திருவடிகளை வணங்காதவர்கள் வைத்துக் கொண்டுள்ள தலையாகிய உறுப்பால், அவருக்கு மட்டும் அன்றி வேறு எவருக்கும் எந்தவிதமான நன்மையும் கிடைக்காது என்பது இத்திருக்குறளின் பொருளாகும். ஆனால் அம்பரீஷன் அடக்கமும் பணிவும் கொண்ட அரசனாக வாழ்ந்ததால் அவன் புகழ் இன்றளவும் நிலைத்து நின்றுள்ளது.

அந்தப்பக்தியின் காரணமாகத்தான், ஒரு பிராமண முனிவரால் சபிக்கப்பட்டபோதும், அச்சாபமானது, அரசனாகிய அம்பரீஷனைத் தொடக் கூட முடியாமல்போனதன் காரணம் அம்பரீஷனின் அதீத பக்திப்பிரவாகமே காரணம் என்பதை அறியமுடிகின்றது. சுகமுனிவர் திருவாயிலிருந்து இக்கதையைக் கேட்டுவந்த பரீட்சித் மகாராஜனே இவ்வாறு கூறி, வியப்படைந்தார்

என்பதை இந்த அத்யாயத்தின் 14,15,16, ஆம் சுலோகங்களாலும் அறியமுடிகின்றது.

**முக்திநிலையடைந்தான் அம்பரீஷ அரசன்.!**

அதன்பின்னரும் நாள்தோறும் சேவித்து, பரமபாகவதராக வாழ்ந்து, பகவத் பக்தியிலும், பாகவத அபிமானத்திலும் சிறந்தவராக விளங்கிவந்தார். நாளடைவில் வானப்பிரஸ்த தருமத்தில் நாட்டம் கொண்டார். எனவே தனது புதல்வர்களிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு, பகவானின் திருவடியே நாம் பற்றவேண்டிய பெரும் பொக்கிஷம் என்ற கருத்துடன் பகவானை நோக்கித் தவமிருந்து இறைவனின் திருவடி நிழலை அடைந்தான் அரசன்.!

**இந்தக்கதையைக் கேட்பதால் ஏற்படும் நன்மை :-**

இந்தக் கதையைக் கேட்பவர்களுக்கும் கூறுபவர்களுக்கும் கிடைக்கும் பயன் என்ன என்பதை வேதவியாசர் கூறுவதைப் பின்வரும் ச்லோகம் உணர்த்துகிறது.

**அம்பரீஷஸ்ய சரிதம் யே ஸ்ருண்வந்தி மஹாத்மன:**
**முக்திம் ப்ரயாந்தி தே ஸர்வே பக்யா விஷ்ணோ:ப்ரஸாதத: பதம்**

அதாவது இக்கதையைக் கேட்டோரும், கூறினவர்களும் தமது தூய பக்தி நிலையின் காரணமாக நிச்சயம் முக்தி அடைவார்கள். அல்லது அவர்கள் உடனே தங்களை ஒரு நல்ல தூய பக்தனாக மாற்றிக்கொண்டு இவ்வுலகில் வாழ்வாங்கு வாழும் பெருநிலையை அடைவார்கள் என்கிறார் வியாசமகரிஷி!

**ஓம் நமோ பகவதே வாஸுதேவாய**

**சாந்தாகாரம் புஜக சயனம் பத்மநாபம் ஸுரேசம்**
**விஸ்வாதாரம் கனக சத்துருஸம் மேகவர்ணம் சுபாங்கம்**
**லக்ஷ்மி காந்தம் கமல நயனம் யோகிர் வித்யான கம்யம்**
**வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வ லோகைக நாதம்**

என்னும் வாசுதேவ பகவானின். இந்த மந்திரத்தை அனுதினமும் நாமும் சேவித்து நன்மையெலாம் ஒருங்கே பெற்று வாழ்வோமாக!

**ஓம் தத் ஸத்.**



## 13. நலம் தரும் மந்திரம் நாராயணாய

**கதையைக்கூறும் காரணம்...**

பாகவதக்கதைகளில் பக்தியும் முக்தியும் என்னும் இந்த நூலில், இதற்கு முன், அஜாமிளன் என்ற அந்தணன் ஓம் நமோ நாராயணாய என்னும் மந்திரத்தைச் சேவித்ததால், நாமகீர்த்தனமாகக் கூறியதால், அல்லது உச்சரித்து வாழ்ந்ததால் ஏற்பட்ட பல பலன்களைக் கண்டோம். ஆனால் அவ்வாறு ஒருவர் அந்த நாமத்தைச் சேவிக்காமல் சத்சங்கத்தோடும் சேவித்து மகிழாமல்,, அதாவது உச்சாடனம் செய்து வாழாமல் போனாலும், அதை ஒருவர் சேவிக்க (எடுத்துரைக்க) மற்றொருவர் அதைக் கேட்டாலும், அத்திருநாமமானது பிறவிப் பிணியை அறுத்து உயர்பிறவியை அளிக்கவல்ல உயரிய மந்திரம் ஆகும். அதை விளக்கும் ஒரு கதையையும் நாம் இங்கு காணலாம். இக்கதையானது ஸ்ரீமத்பாகவதத்தில் இடம்பெறவில்லை என்றாலும், ஸ்ரீமந்நாராயண நாமத்தின் பெருமையை அறிந்துகொள்ள உதவுவதால், அக்கதையினையும் இங்கே கண்டால், அது நிச்சயம் அனைவருக்கும் நற்கதியைத்தரும் நாராயணமந்திரப்பயனை முழுமையாக அறிந்துகொள்ள உதவும். ஆகையால் அதனையும் இங்கு கண்டு, மகிழலாம்..

**நாரத மகரிஷியும், நாராயணர் பெருமையும் :**

படைக்கும் கடவுளாக விளங்கிவரும் பிரம்மதேவரின் மானச புத்திரர்களில் ஒருவராகத் தோன்றியவர் நாரதர். நாரதமகரிஷி ! இவர் எப்போதும் நாராயணா.. நாராயணா..

என்று முக்காலத்திலேயும் ஸ்ரீமந்நாராயணப் பெருமானின் திருநாமத்தை ஓதியும், உச்சரித்தும் உலகெங்கும் சுற்றித்திரிந்தும் வாழ்ந்தவர். ஸ்ரீமந் நாராயணனே முழுமுதற்கடவுள் என்றும், சூரியமண்டலத்தின் மத்தியில் எப்போதும் ஒளிவீசிக் கொண்டிருக்கும், அந்த ஸ்ரீமந்நாராயணனை நான் எப்போதும் வணங்குகிறேன் என்றும் அவருக்கு வணக்கங்களை உரித்தாக்கி வருகின்றவர் ஆவார். தாமரை மலரில், வீற்றிருக்கும் அந்தப்பகவான் விஷ்ணுவின் சங்கு சக்கரங்களைத் தனது புஜங்களில் தரித்துக்கொண்டும், முதலை வடிவத்தையுடைய குண்டலங்களைத் தனது காதுகளில் அணிந்துகொண்டு,, கிரீடத்தையும், கௌஸ்துப மாலையையும் அணிந்தவராகவும், சக்கரதாரியாகவும் காட்சி அளிக்கின்றவர் ஆவார். பகவானுடைய திவ்வியத் தோற்றப் பொலிவினால், பெரிதும் வசீகரிக்கப்பட்டவர் நாரதர். எனவேதான் அத்தகைய பெருமானை எல்லாக் காலங்களிலும் போற்றி வாழ்பவர். அதனால்தான் அப்பெருமானின் திருநாமத்தை நாராயணாய நாராயணாய என்று எக்காலத்திலும் சேவிப்பவர் அந்த நாரதமகரிஷி.!

மேலும், பகவத்கீதையின் பத்தாம் அத்யாயமான விபூதியோகத்தில், தான் எந்தெந்த சொரூபங்களாக உள்ளவர் என்பதை அர்ச்சுனனுக்கு எடுத்துரைக்கிறார் பகவான் கிருஷ்ணர். 'ஆதித்யாநாம் அஹம் விஷ்ணு:' என்று இருபத்தோராம் சுலோகத்தில் கூறத்தொடங்கியவர், 26 ஆம் ச்லோகத்தில்,

**அஸ்வத்த: ஸர்வவி ருக்ஷாணாம் தேவர்ஷீணாம் சநாரத :**

என்று கூறியுள்ள ச்லோகத்தால், பகவான், தான் மகரிஷிகளில் நாரதமகரிஷியாக உள்ளதாகக் கூறுவதால், அவருக்கும், நாரதருக்கும் உள்ள பாசப்பிணைப்பும், பக்திநிலைப்பாடும் புலனாகிறது.

கலிகாலத்தின் தொடக்கத்தில், நாரதர் பல திவ்வியதேச யாத்திரை மேற்கொண்டார். என்றும், ஆனாலும் அவருடைய மனதிற்கு சாந்தம் ஏற்படாமல் போனதாகவும், பற்பல இடங்களிலும் திரிந்த அவர் ஒருநாள் யமுனாநதிக்கரையில், பக்தி என்ற பெண்ணைக்கண்டார் என்றும் பாகத்தின் முற்பகுதியிலேயே கூறப்பட்டுள்ளது. அவளோடு, மிகவும் தளர்ந்துபோன வயோதிக நிலையிலே ஞானமும் வைராக்கியமும் இருப்பதைக்கண்டு மனம் வருந்திய நாரதர் அந்த இருவரையும் எழுப்ப அரும்பாடுபட்டும், அவர்கள் எழவில்லை. புத்துயிர் பெறவும் இல்லை. அதற்காக வருந்திய நாரதருக்கு, ஓர் அசரீரி ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. நாரதரே, ஞானமும். வைராக்யமும் புத்துயிர் பெறுவதற்கு நீங்கள் லோக நன்மைக்கேற்ற செல்யகளைச் செய்யவேண்டும் என்றது.

வேதங்களையும், வேத சுருதிகளையும், புராண இதிகாசங்களையும் பகவத்கீதையையும் கரைத்துக் குடித்த பண்டிதரான அவர் இத்தனை நாட்கள் தாம் படித்தவை அனைத்தும் வீணா என்ற சந்தேகத்திற்கு ஆட்பட்டு, துயருற்ற போது, பிரம்மபுத்திரர்களான சனகாதி முனிவர்கள் நால்வரும், அங்கே தோன்றினர். அவர்கள் நாரதரிடம், "நாரதரே! நீங்கள் கங்கைக்கரையில் ஸ்ரீமத் பாகவதத்தை

ஏழுநாட்களுக்கு அனைத்து முனிவர்களுக்கும் உபதேசிக்கவேண்டும். அப்போதுதான் தங்கள் மனம் சாந்தம் அடைவதோடு, இவ்வுலக மக்களுக்கும் பயன்விளையும்" – என்றும் கூறினார்கள்.

அதற்கு ஏற்றவாறு, அந்த நான்கு பிரம்மபுத்திரர்களோடும், அத்ரி, புலஸ்தியர், ப்ருகு, வசிஷ்டர்போன்ற முனிவர்களும் ஒன்றாக சேர்ந்திருந்தபோது, ஸ்ரீமத்பாகவத்தை ஏழுநாட்களுக்கு உபதேசமாகக் கூற ஏற்பாடு செய்தார் நாரதர். அதன்பிறகே, அதாவது ஸ்ரீமத்பாகவதத்தைக் கேட்டபின்னரே நாரதர் மனச்சாந்தி அடைந்தார் என்றும் ஸ்ரீமத்பாகவதத்தால் அறியமுடிகிறது.

**நாரதமகரிஷியால் விளையும் நன்மைகள் :**

அவர் மூன்று உலகங்களுக்கும் தான் விரும்பியபோது செல்லக்கூடியவர். ஆவர் பாரததேசத்தில் இருந்த முதன்முதல் விண்வெளிப் பயணி ஆவார். அனைத்துலோகங்களிலும் ஆங்காங்கே நடைபெற்றுவரும் முக்கியமான செய்திகளைத் தன் ஞானக்கண் மூலம் அறியும் ஆற்றல் பெற்றவர். தான் அறிந்த செய்திகள் மற்ற லோகங்களிலே இருக்கின்றவர்களோடு தொடர்பு உடையது என்றால், நடந்த நிகழ்ச்சிகளை அவர்களுக்குக் கூறிவிடுவார். இதனால் பெரும் பிரச்சனைகளும், சச்சரவுகளும் அடிக்கடி ஏற்படும். என்றாலும் இவர்கொடுத்த அந்தச் செய்தியும், அதன் விளைவுகளும் கடைசியில் நல்லமுடிவை ஏற்படுத்தும். எனவே நாரதரின் கலகம் நன்மையில் முடியும் என்று அனைவரும் கூறுவர். அதே நேரத்தில் தனக்கு ஏதேனும் பாதிப்பை அவர் வருகை ஏற்படுத்துமோ என்று மும்மூர்த்திகளும், அனைத்து

தேவர்களும் அரண்டு போவார்கள். எனவே தான் இவரைக் கலகக்காரர் என்றும், திரிலோக சஞ்சாரி என்றும் அனைவரும் குறிப்பிட்டுக் கூறுவார்கள்.

ஸ்ரீமந்நாராயணனின் திருநாமத்தையே இவர் எப்போதும், எங்கு சென்றாலும் உச்சரித்துக்கொண்டு செல்பவராகையால், பகவான் நாராயணனும் இவர்மேல் அலாதியான பிரியம் உடையவராக இருந்தார். எனவே "நாரதரை நாராயணப் பெருமானின் உள்ளம்" என்றே கற்றறிந்த சான்றோர் கருதுகின்றனர். திரிலோக பகவானிடம் எப்போதும் பக்திகொண்டு, அவர் திருநாமத்தைச் செப்பியவண்ணமே என்றும் எங்கும் திரிந்துவருபவர்.! அம்மந்திரத்தைத் தன்னுடைய தாரக மந்திரமாகவும் ஏற்றவர் ஆவார்.

**நாரதருக்கு ஏற்பட்ட சந்தேகம் :**

இவ்வாறு இருக்கையில், ஒருநாள் நாரதருக்கு ஒரு சந்தேகம் உண்டானது. நாம் எப்போதுமே நாராயணா என்னும் திருமந்திரத்தை ஓதிவருகின்றோமே? நாராயணப் பெருமானின் பக்தர்களும் இத்திருமந்திரத்தை அனுதினமும் ஆராதனை செய்து வருகின்றனர்.! இவ்வாறு ஸ்ரீமந்நாராயணனை வணங்குவதாலும், ஓம் நமோ நாராயணாய என்னும் மந்திரத்தை ஓதிவருவதாலும் நிச்சயமாகவே ஏதேனும் ஒரு பலன் கிடைக்குமா? என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.! என்ற ஆவலும் ஐயமும் எழுந்தது.

இச் சந்தேகத்தை யாரிடம் கேட்டு, உண்மையை அறிந்து கொள்வது என்ற கேள்வியும் அவர் மனத்தில் எழுந்தது.

பிரம்மதேவர், சிவபெருமான், மற்றைய இந்திராதி தேவர்களிடம் இந்தச் சந்தேகத்திற்கு விளக்கம் கேட்டுத் தெரிந்துகொள்வதை விட, ஸ்ரீமகாவிஷ்ணுவாகிய நாராயணரிடமே இதற்குரிய பதிலைப்பெறுவதே மிகவும் சிறந்தது என்று முடிவு செய்தார்.

**நாராயணனரைச் சந்தித்தார் நாரதமகரிஷி :**

நாராயணாய என்னும் நாமத்தின் பெருமையை அறிந்து கொள்ள முடிவெடுத்த நாரதர், அப்பெருமான் வாழும் வைகுந்த வளநகரத்திற்குச் சென்றார். நாராயணக்கடவுளின் நல்லாசிகளையும் பெற்றுக்கொண்டார். சற்று நேர ஓய்விற்குப்பிறகு, நாரதரின் வருகைக்கான காரணத்தை பெருமான் கேட்டார். அதற்கு நாரதர் "பெருமானே! அடியேன் எப்போதும் தங்கள் திருநாமத்தை ஓதிவருபவன். பூலோகத்திலும் உங்களது அடியார்கள் உம்முடைய இந்தத் திருமந்திரத்தை அனுதினமும் சேவித்து வருகின்றனர். அதனைத் தமது நித்திய அனுசந்தத்தோடு சேர்த்தும் ஓதிவருகின்றனர். இவ்வாறு அவர்கள் பயபக்தியுடன் உச்சரித்துப்போற்றும் நாராயண நாமத்தால் எத்தகைய பயன் ஏற்படும் என்பதை அடியேன் தெரிந்து கொள்ளவே இங்கு வந்தேன். தயவு செய்து என்கேள்விக்குரிய பதிலைத் தாங்கள் கூறவேண்டும்" என்று பகவானிடம் வேண்டிக் கொண்டார். இதைக்கேட்ட பகவான் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி புன்னகை பூத்தார். நாரதருடைய இந்தச் சந்தேகத்திற்கு விடையளிக்க வேண்டும் என்று விரும்பினார்.

### ஸ்ரீமந் நாராயணப்பெருமான் நாரதருக்கு ஏற்படுத்திய அனுபவங்கள் :

வைகுந்தவாசராகிய பெருமான் புன்னகைத்தவாறே அங்கிருந்தவாறே பூலோகத்தை நோக்கினார். அப்போது பூமியிலே நகர்ந்து நகர்ந்து நெளிந்து நெளிந்து கொண்டே சென்று கொண்டிருந்த ஒரு புழுவைக் கண்டார். அதை நாரதருக்கும் காட்டினார். உடனே பெருமான், நாரதரே! அங்கே சென்று கொண்டிருக்கும் அந்தப் புழுவைப்பாருங்கள். அது உங்களுக்கும் தெரிகின்றதல்லவா? தாங்கள் மண்ணுலகம் சென்று, ஊர்ந்து சென்று கொண்டிருக்கும் அந்தப் புழுவினுடைய காதில் என்னுடைய நாராயண மந்திரத்தை ஓதுங்கள். அம்மந்திரத்தின் பயனைத் தாங்கள் காண்பீர்கள் என்றார். அதற்கு இணங்கிய நாரதர் மிக விரைவாக பூலோகத்திற்கு இறங்கிவந்து, பெருமான் சுட்டிக்காட்டிய அந்தப்புழுவின் அருகே சென்று அதனிடத்தில் நாராயணாய என்னும் மந்திரத்தை மூன்றுமுறை ஓதினார். உடனே அப்புழுவானது துடிதுடித்து இறந்துவிட்டது.! வேறு ஏதோ ஓர் அற்புதத்தை எதிர்பார்த்து வந்த நாரதருக்கு, புழு இறந்துவிட்டது அதிர்ச்சியைத் தந்தது. உடனே இச்சம்பவத்தைச் சொல்வதற்காக மீண்டும் வைகுந்தம் சென்றார் நாரதர்.!

### பட்டாம் பூச்சிக்கு நேர்ந்த பரிதாபம் :

தன்னிடம் மீண்டும் வந்த நாரதரைப் புன்முறுவலுடன் வரவேற்றார் நாராயணர். ஆனால் நாரதரின் முகத்திலோ கவலையின் சுவடே தெரிந்தது. மேலும் நாரதர், பெருமானே

உங்களுடைய நாமத்தைக் கூறுவதால் ஏற்படும் நன்மையை அறியவிரும்பி வந்த எனக்கு, பூலோகத்திலே ஊர்ந்து சென்ற புழுவைக்காட்டி அதனிடம் நாராயணநாமத்தைக் கூறச்சொன்னீர்கள்! நானும் அவ்வாறே செய்தேன். ஆனால் உமது திருப்பெயரைக்கூறியவுடன் அதைக் கேட்ட புழுவானது இறந்து போய்விட்டதே! இது என்ன? இதுவா உமது நாமத்தால் விளையும் நன்மை என்று வருத்தத்துடன் கேட்டார். அதைக்கேட்ட நாராயணப்பெருமான், நாரதா! கவலைவேண்டாம்.! இந்தமுறை நான் சொல்வதைக்கேள்.! என்று கூறி முன்பு போலவே பூலோகத்தில் மகிழ்ச்சியாய்ப் பறந்து திரிந்த ஒரு பட்டாம் பூச்சியைச் சுட்டிக்காட்டி, இந்தமுறை அந்தப்பட்டாம் பூச்சியிடம் சென்று எனது திருநாமத்தை ஓதுவாயாக என்றார். சற்று முரண்டுபிடித்த நாரதரைச் சமாதானப்படுத்தி, பகவான் அனுப்பி வைக்க, நாரதரும் பூலோகத்திற்கு இறங்கி வந்து, அந்தப் பகவான் சுட்டிக்காட்டிய பட்டாம்பூச்சியின் காதில் ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து மந்திரத்தை ஓதிய உடனே, அப்பட்டாம் பூச்சியும் இறந்து தரையில் விழுந்தது. இந்தமுறை நாரதர், அவர் கூறியவாறே செயல்பட்டபோது, பட்டாம் பூச்சியும் இறந்து போனதைச் சற்றுக் கோபமுடனே கூறினார்.

**பஞ்சவர்ணக்கிளியின் பரிதாபமுடிவு :**

நாரத மகரிஷியின் கோபம் கலந்த வாசகத்தைக்கேட்டும், கலக்கமில்லாத மனத்தினரான அந்த மாயவன் புன்னகையையே பதிலாகத்தந்து, பூமியிலே, ஒருமாமரத்தின் கிளையில் அமர்ந்து மகிழ்ச்சியுடன் இருந்த ஒரு

பஞ்சவர்ணக்கிளியைக் காண்பித்து, அதனிடம் நாராயண மந்திரத்தை எடுத்துரைக்குமாறு அறிவுறுத்தினார். ஆனால் நாரதர் இணங்கவில்லை. எனினும் அம்மகரிஷியை ஒருவாறு சமாதானப்படுத்தி. தன் வேண்டுகோளுக்கு இணங்கச்செய்து பூலோகம் அனுப்பிவைக்க, நாரதரும் அவ்வாறே செயல்பட்டதால், பாடித்திரிந்துவந்த அந்தப் பைங்கிளிக்கும் அதே சோக முடிவு ஏற்பட்டது.! நாரதருக்கு துக்கமும், வெறுப்பும் அதிகமாக உண்டானது. அவர் மீண்டும் வைகுந்தலோகத்திற்கு விரைவாய்ச் சென்றார்.!

**துள்ளித் திரிந்த மான்குட்டிக்கு திடீரென்று ஏற்பட்ட துயரமுடிவு!**

வைகுந்த வாசலில் நுழைந்தபோதே அவர் பகவானே, பகவானே எங்கே இருக்கிறீர்.? என்ன உமது விளையாட்டு? நாராயண மந்திரத்தின் பெருமையை நான் அறியவும், அதை உலகிற்கு உணர்த்தவுமே நான் உம்மிடம் வந்தேன். தாங்களும் பதிலுரைப்பதாகக் கூறியவுடன் உமது சொற்படியே செயல்பட்டேன். ஆனால், அவையெல்லாம் உமது மந்திரத்தை நான் ஓதியதைக்கேட்டவுடன் தத்தமது உயிரைப் பிரிந்து விட்டனவே? இது தான் உமது நாமத்தின் உயர்வா? இத்தகையதா உமது நாமத்தின் மகிமை? என்று பகவானிடம் பொரிந்து தள்ளினார். ஆனால், பகவானும் முன்புபோலவே நாரதரை அமைதியடையச் செய்து, இந்த முறை காட்டிலே இருக்கும் ஒரு நீரோடையில் தாகம் தீர நீரைப்பருகிய ஒருமான் குட்டியைச் சுட்டிக்காட்டி, அதனிடம் மேற்கூறியவாறே செயல்படச் சொன்னார் பரமபுருஷர். நாரதர் அதை ஏற்க மறுத்தார் எனினும், கட்டளை இடுவது காக்கும்

கடவுளாயிற்றே! என்னசெய்வது என்று புரியாமல் விழித்தாலும், இறுதியில் அம்மாசிலா மாணிக்கமான அந்த இறைவனின் சொற்படி செயல்பட்டார்.! ஆனால், அந்தோ பரிதாபம்! துள்ளித்திரிந்த அம்மான்குட்டியும் எகிறி விழுந்து துடிதுடித்து தன் பிராணனை விட்டது.

**கன்றுக்குட்டி இறந்துபோனால், கட்டிப்போட்டு அடிப்பார்களே யாதவர்கள்?**

நாராயண மந்திரம் தன்காதில் நாரதரால் ஓதப்பட்டவுடன் துடித்துவிழுந்து இறந்துபோன மான்குட்டியின் நிலைக்குத் தான் தான் காரணமோ என்று நினைத்து, மனம் கலங்கினார் நாரதர். இந்தமுறை வைகுந்தவாசனை வாட்டி எடுத்துவிடவேண்டும் என்ற கோபமுடன், தன்னிடம் மீண்டும் வந்த நாரதரை மகிழ்ச்சியுடனேயே வரவேற்றார் பகவான்.! ஆனால் நாரதருக்கோ பெருமானுடைய அமைதியையும், புன்முறுவலையும் கண்டு பெருங்கோபமே உண்டாயிற்று! இருந்தாலும் தன்னுடைய கோபத்தை அவரிடம் காட்டமுடியுமா? சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி என்பதைப்போல, வைகுந்தத்திலே கிடந்த பெருமானிடம் தானாக வந்து மாட்டிக்கொண்டவர் அவர்தானே? ஓம் நமோ நாராயணாய மந்திரத்தின் பெருமையை அறிய விரும்பிய தனக்கு ஏதோ ஒரு விடையைத் தருவதற்காகவே பெருமான் இந்த லீலாவிநோதத்தை நடத்துகின்றாரோ என்னமோ? அதனால் தன்னுடைய உணர்வுகளை அடக்கிக்கொண்டு, பகவானே என் சந்தேகத்திற்குரிய பதில் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் தாங்கள் சொன்னவாறு நாராயணன் திருநாமம் ஓதப்பட்ட

அனைத்து உயிரிகளுமே அவற்றினுடைய ஆன்மாவைப்பிரிந்து விட்டனவே? என்று வருத்தமும் சினமும் கலந்த தோனியில் நாராயணரிடம் கேட்டுநின்றார் நாரதர். அப்போது பூலோகத்தின் ஆயர்பாடியில் ஒருமாட்டுத் தொழுவத்தையும், அதில் அப்பொழுதுதான் கன்றை ஈன்ற ஒரு பசுவானது தனது நாவால் அக்கன்றின்மேல் இருந்த திரவ மாசுக்களைத் தன்னுடைய நாவால் நக்கி எடுத்து, அதைச் சுத்தம் செய்து, பாசத்துடன் தனது இளங்கன்றினுக்குப் பால் புகட்டிக்கொண்டிருந்தது. அந்தக் காட்சியை நாரதருக்குக் காண்பித்தார் ஸ்ரீமந்நாராயணன். அக்காட்சியை நாரதரும் கண்டார். பகவான் நாரதரிடம் நாரதரே அதோ இந்த இளங்கன்றிடம் சென்று, நாராயணா என்னும் திருமந்திரத்தை ஓதுங்கள் என்றார்.

அவ்வளவுதான் நாரதர் வேர்த்து விறுவிறுத்துப்போனார். பிரபோ! இவ்வளவு நேரமாக நீங்கள் நாராயண மந்திரத்தை அவற்றின் காதில் ஓதச்சொன்ன உயிர்களுக்கு உடையவர்கள் (சொந்தக்காரர்கள்) என்று எவரும் இல்லை. அதனால் அவையெல்லாம் இறந்து போனாலும், கேட்பதற்கு யாரும் இல்லை. ஆனால் இந்த ஆயர்களின் கன்றினுக்கு முன்பு போலவே மரணம் நேரிட்டு விட்டால், என்கதி என்னவாகும்.? தங்களின் பரிபூரண அவதாரமான ஸ்ரீகிருஷ்ணனின் குலத்தவர்களான அந்த யாதவர்கள் என்னைத் தூணில் கட்டிப்போட்டு தோலை உரித்துவிடுவார்களே? அத்தகைய நிலைக்கு நான் ஆளாகவேண்டும் என்பது தான் தங்களின் எண்ணமா? என்னால் முடியாது. முடியவே முடியாது.! என்று மறுப்புக்கூறினார். ஆனால் பகவான் நாரதருக்கு ஆறுதல்

கூறி, யாரும் காணாதநேரத்தில் நான் சொன்னதைச் செய்யுங்கள் என்று ஆறுதல்கூறி, யாரும் காணாதநேரத்தில் நான் சொன்னதைச் செய்யுங்கள் என்று மீண்டும் கூறி வலியுறுத்தினார். வேறு வழியின்றி, நாரதரும் அதை ஏற்றுக்கொண்டு. யாதவர்கள் யாரும் தன்னை அறியாமல் இருக்கும் போது அந்த மாட்டுத்தொழுவத்தில் நுழைந்து அங்கிருந்த அந்த இளங்கன்றின் காதில் ஓம் நமோ நாராயணாய என்னும் திருமந்திரத்தை ஓத, உடனே அக்கன்றுக்குட்டியும் விழுந்து இறந்து விட்டது. அரண்டு மருண்டுபோன நாரதர் தப்பித்தோம் பிழைத்தோம் என்று எண்ணியபடி அங்கிருந்தும் மிகவேகமாக வைகுந்தம் திரும்பினார்.

**காசிராஜன் ஆண்குழந்தை காதிலே ஓதுக!**

வேர்த்து விறுவிறுத்து தன்னிடம் வந்து நின்ற முனிவரிடம் நடந்ததை அறிந்தும் அறியாதவர்போலவே கேட்டார் பகவான். ஆனால், இந்த முறை நாரதரால் தன்னுடைய சினத்தை அடக்கமுடியாமல் என்னை தண்டிக்க நினைத்துத்தான் இவ்வாறு செய்கிறீர்களா பிரபு? என்னால் கன்றுக்குட்டி இறந்ததை யாதவர்கள் அறிந்திருந்தால், என் கதி என்ன ஆகியிருக்கும்? மாட்டுத் தொழுவத்திலேயே என்னை மடக்கிமடக்கி அடித்து கட்டிப்போட்டிருப்பார்களே! ஏன் இந்த ஆபத்தான பணியில் ஈடுபடுத்துகிறீர்கள்.? என்று அழாத குறையாகக் கேட்டுநின்றார் நாரதர். அதற்கு பெருமான் திருமால், மகரிஷியே தங்களின் சந்தேகம் தீரும் நேரம் நெருங்கிவிட்டது என்று கூறி பூலோகத்தில் காசிமாநகரத்தில் நடந்து கொண்டிருந்த ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டினார்.

அந்த நகரத்தின் தலைவனான காசிமகாராஜனுக்கு நெடுநாட்களாக புத்திரப்பேறு இல்லாமல் இருந்தது. பகவானுடைய பெருங்கருணையினால் அன்றைக்குத் தான் அவனுடைய குறை நீங்கியது. ஆம் ! அவனுக்கு அழகிய ஓர் ஆண்மகன் பிறந்தான். அந்த வைபவத்தை அனைவரும் கொண்டாடிக்கொண்டு இருந்தார்கள். அக்காட்சியைச் சுட்டிக் காட்டிய பகவான் ஸ்ரீமந் நாராயணன், அக்குழந்தையின் காதிலே நாராயண மந்திரத்தை உச்சாடனம் செய்து வாருங்கள் என்றார்.!

**மகரிஷி! என்னைத்தெரியவில்லையா?**

ஆனால் மகரிஷி நாரதர் நாராயணருடைய சோதனையை நிறைவேற்ற விரும்பவில்லை.! தவமாய்த் தவமிருந்து, இன்றைக்குத்தான் காசிராஜனுடைய மகப்பேறு இல்லாத குறை நீங்கியுள்ளது! அக்குழந்தையின் காதிலே சென்று நாராயணாய: என்னும் திருமந்திரத்தை ஓதச்சொல்கிறாரே? ஒருவேளை, இதுவரை நிகழ்ந்துவிட்ட மரணங்கலைப்போல, இக்குழந்தைக்கும் உயிர்ச் சேதம் ஏற்பட்டுவிட்டால், தனக்கு மரணதண்டனை அல்லவா கிடைக்கும்.? போதுமடா சாமி.! இந்தச் சோதனையில் நான் ஈடுபடமாட்டேன்.! என்று மறுப்புரைத்து அங்கிருந்தும் சென்றுவிட நினைத்தார்.! மேலும் குழந்தையைக் கொன்ற கொடும்பாதகச் செயலால் தனக்கு எவ்வளவு பெரிய பாவம் உண்டாகும்.? எத்தனை ஜென்மம் எடுத்து இந்தப் பாவத்தைப்போக்குவது? வேண்டவே வேண்டாம் என்று நினைத்தவரின் உடல் நடுங்கியது. வாய் வறண்டுபோனது. சரியாகப்

பேசமுடியாமல் தட்டுத்தடுமாறி "பகவானே இந்த விஷப்பரிசோதனையில் எனனை ஈடுபடுத்தவேண்டாம்". – என்று கெஞ்சினார். ஆனால் பகவானோ "மகரிஷியே கவலையோ பயமோ தேவையில்லை. இதுவே கடைசி சோதனை. இதற்குமேல் தங்களை வேறு எந்தச் செயலிலிலும் இந்தப் பணிக்காக ஈடுபடுத்தமாட்டேன். எனவே இதை நிறைவேற்றினால், ஒருவேளை உங்களின் சந்தேகத்திற்கு உரியவிடை கிடைக்கலாம்" – என்றார்.

எனவே ஒருவாறு தனது மனதைத் தேற்றிக்கொண்ட நாரதமகரிஷி காசிராஜனின் அரண்மனைக்குச் சென்றார். அவரைக் கண்டவுடன் அரசன் பெருத்த மகிழ்ச்சி அடைந்தான். நாரதரை நல்லமுறையில் வரவேற்று, சிறந்த முறையில் உபசரித்தான். மேலும், மகரிஷிகளே ! நீங்கள் இங்கு வந்த நேரம் மிகவும் நல்லது. எனக்கு ஆண்குழந்தை பிறந்துள்ளான்! அவனைத்தாங்கள் கண்டு. ஆசீர்வதிக்க வேண்டும். அதை எங்களின் தவப்பயனாக நாங்கள் கருதுவோம் என்று வேண்டினான் அரசன். வேறு வழியின்றி நாராயணர் விட்டவழி என்றும், சர்வம் கிருஷ்ணார்ப்பணம் என்றும், மனத்தால் நினைந்து, நாராயணா! நாராயணா! என்னும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டே குழந்தையின் அருகில் சென்றார். மெல்லக் குனிந்து, அக்குழந்தையின் காதில் ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து மந்திரத்தை ஓதினார். அப்போது பிறந்த அக்குழந்தை பேசியது! "மகரிஷிகளே! என்னை யாரென்று தெரியவில்லையா?" என்று கேட்டது.!

**பிறந்தகுழந்தை பேசியது பிரமித்தார் அரசர்.!**

அரசனும், அமைச்சர் பெரும்க்ள் உள்ளிட்ட அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். பிறந்த குழந்தை நாரதரை அழைத்துப் பேசுகின்றதே! இது என்ன அதிசயம் என்று மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர். அதே நிலையில்,, மலைப்பெய்தி நின்ற நாரதரைப்பார்த்து குழந்தைமேலும் பேசியது. திரிலோக சஞ்சாரியே! எனது வணக்கத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். நான் ஓர் அற்பப்புழுவாய்ப் பூமியில் ஊர்ந்து சென்றுகொண்டு இருந்தேன். அப்போது தாங்கள் என்னையே தேடிவந்து, நாராயண மந்திரத்தை என் காதில் சேவித்ததால், அப்பிறவியும் அகன்றது.

நான் ஒரு பஞ்சவர்ணக்கிளியாகப் பறந்து திரிந்தேன். அப்பிறவியிலேயும், அதை அடுத்த பிறவிகளிலேயும் நானே புள்ளிமானாகவும், ஆயன் வீட்டுக் கன்றுக்குட்டியாகவும் பிறவிகள் எனக்கு உண்டானது. தற்போது அப்பிறவிகள் எல்லாம் நீங்கப்பெற்று, தற்போது காசிமகாராஜனின் வாரிசாக நான் பிறக்க எனக்கு உயர்ந்த இப்பிறவி கிடைத்ததற்கு தாங்கள் என் காதிலே ஓதியும், உச்சரித்தும், உச்சாடனம் செய்ததுமான ஓம் நமோ நாராயணாய: என்னும் உயர்மந்திரமே காரணமாகும் என்று கூறியது.

**நாராயணா என்னும் மந்திரத்தின் பெருமையை நாரதர் அறிந்து வியந்தார்.!**

அப்போதே பிறந்த காசிராஜனின் ஆண்குழந்தை பேசிய பேச்சுக்களை, அதன் உண்மைப்பொருளை ஆராயத்

தொடங்கினார் நாரதமகரிஷி! ஓரறிவு கொண்ட ஓர் அற்பப்புழுவாக பூமியிலே ஊர்ந்து சென்றுகொண்டிருந்த அந்தப்புழுவே, படிப்படியாக உயர்பிறப்புகளை எடுத்து, தற்போது மனிதப்பிறவியில், ஆண்குழந்தையாக, அதுவும், அரசனின் குழந்தையாகப் பிறவி எடுத்ததன் காரணம் நாராயணா என்னும் திண்ணிய நாமத்தின் மகிமையே என்பதை அறிந்து கொண்டார். நாராயண மந்திரத்தின் நன்மை என்ன? என்று தான் கேட்ட சந்தேக வினாவிற்கு நேரடியாக பதில் கூற விரும்பாத பகவான் ஸ்ரீமந் நாராயணன், தன்னை அனுபவபூர்வமாக அறிந்து கொள்ளச்செய்யவே தன்னிடம் இச்சோதனைகளைச் செய்தார் என்பதை அறிந்துகொண்டார். காசிராஜனுக்கும், அவன் குழந்தைக்கும் ஆசீர்வாதம் செய்து, மீண்டும் வைகுந்தம் சென்றார் நாரதர். முன்பு போலவே புன்னகைத் தவழும் தனது செந்தாமரை முகத்தோடு நாரதரை வரவேற்றார் நாராயணபெருமான். நாரதரிடத்திலே முன்பு இருந்த கலக்கமும், பயமும், நீங்கியிருப்பதையும், மாறாக சாந்தமும் தெய்வீக முகப்பொலிவும் நாரதரிடம் மீண்டும் குடிகொண்டிருப்பதைக் கண்டார். தன் சந்தேக வினாவிற்கு தெள்ளத்தெளிவாய்ப பதில் கொடுத்த பகவானை புகழ்ந்துபாடினார். எண்ணம், சொல், செயல் என்ற முக்கரணத்தாலும் அனுதினமும், பகவான் திருப்பெயரை ஓதிவந்த அவர், தன்னுடைய மகதி என்ற வீணையிலிருந்து மீட்டிய கானம் இசைப்பேரருவியாய் எங்கும் ஒலித்தது. ஓம் நமோ நாராயணாய என்ற மந்திரம் ஒருவனுடைய பாபங்களைப் போக்ககி, பரமபத வைபவத்தையும், தரக்கூடியது என்னும் உள்ளத் தெளிவை அவருக்கு உண்டாக்கியது. அவருடைய சந்தேகம் தீர்க்கப்பட்ட

நிலையில், சாந்தமும், அமைதியும் கொண்டதால், அவரது திருவாயிலிருந்து மீண்டும் ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்துமந்திரம் இடையறாது ஒலித்துக்கொண்டே இருந்தது.

**திருமங்கை ஆழ்வார் கூறும் நாராயணநாமத்தின் பெருமை:**

நாராயண நாம மந்திரத்தின் மேன்மையை நாரத மகரிஷிக்கு அனுபவபூர்வமாக உணர்த்த நினைத்த ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந்நாராணரின் லீலா விநோதங்களை உலகறியச் செய்யும் இந்த மந்திரத்தின் பெருமையை லீலாவிபூதி எனப்படும் இவ்வுலகிலே வாழ்கிற மக்கள் அறிந்துகொள்ள இத்திருவிளையாட்டினைச் செய்துகாட்டினார் பகவான். ஸ்ரீமந்நாராயணபக்தியில் ஊறித்திளைத்து, ஆழங்கால்பட்டு நின்றவர்கள் ஆழ்வார்கள் என்று நமது பக்திமார்க்கத்தில் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் ஸ்ரீமந்நாராயணனைப் புகழ்ந்தும், அவருடைய லீலாவிநோதங்களில் மனதைப்பறிகொடுத்தும், வாழ்த்தியும், வணங்கியும் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்று அழைக்கப்படுகிறது. பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார், தனது பெரிய திருமொழி என்னும் பிரபந்தத்தில்,

(பெரியதிருமொழி, முதற்பத்து, முதல் திருமொழி, பாசுரம்-.9) பாசுரத்தில், நாராயண மந்திரத்தின் மகிமையைத் தொகுத்து உரைக்கிறார்.

ஆம்! ஒரு மனிதனுக்குத் தேவைப்படும் நல்வாழ்க்கைக்குத் தேவைப்படும் அனைத்துத்

தேவைகளையும் அம்மந்திரத்தைச் சேவிப்பதால் கிடைத்துவிடும் என்பதை அனுபவபூர்வமாக அறிந்தே இதைக் கூறுகிறார் திருமங்கை ஆழ்வார்.

அதாவது, ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து திவ்விய மந்திரமானது, ஒருவனுடைய முற்பிறவியின் பாவங்களைப் போக்கி, பகவான் பக்தியிலும், பாகவதபக்தியும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வாழும் சிறந்த உயரிய குலத்தில் ஒருவனைப் பிறவி எடுத்துவாழ வழிவகுக்கும்.! மேலும் அம்மனிதப் பிறவியின் வாழ்விற்குத் தேவையான செல்வத்தையும் கொடுக்கும்.. அம்மந்திரத்தையும், பகவானான ஸ்ரீமந்நாராயணரின் பக்தியிலும் ஈடுபட்டு வாழும் அடியவர்களுக்கு, நேர்ந்த துன்பங்களையும், பாவங்களையும் நிர்மூலமாக்கி அழித்துவிடும். சொர்க்கலோகத்தில் வாழும் இன்பம் நிறைந்த வாழ்க்கையையும், எப்போதுமே துன்பமிலாது பேரின்ப நிலையிலே வாழக்கூடிய முக்திலோகத்தையும் கொடுக்கும், வாழ்க்கையில் வெற்றிமேல் வெற்றி பெறத்தேவையான வலிமையையும் மனோதிடத்தையும் கொடுக்கும் என்று பட்டியலிடுகிறார் இந்த ஆழ்வார்ப் பெருந்தகை!. அப்போதும் அவருக்கு மனநிறைவு ஏற்படாமல் போனதால், ஒருவனைப் பெற்றெடுத்த தாயானவள், தன்மகனுக்கு என்னென்ன நன்மைகளைக் கொடுப்பாரோ அவை எல்லாவற்றையுமே இந்த ஓம் நமோ நாராயணாய: என்ற மந்திரம் கொடுத்துவிடும் என்று கூறி, அம்மந்திரத்தின் பெருமையை முடித்துக் கொள்கிறார்.

ஆம்.! இப் பாசுரத்தில் நாராயணா என்னும் நாமத்தின் மகிமையை போற்றிப்புகழும் ஆழ்வார், ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து மந்திரத்தை ஒருவன் சேவித்தாலும், மற்றவர்கள் கூற அதைக்காதில் கேட்டாலும், தாங்களே அப்பெருநாமத்தைப்போற்றி வணங்குவதாலும், நாமசங்கீர்த்தனம் செய்வதாலும், ஏற்படுகின்ற நன்மைகளை ஓரளவிற்குப் பட்டியலிடும் திருமங்கை ஆழ்வாரின் பாடல் நயம் போற்றுதற்குரியது ஆகும். ஆம்! இது எவ்வளவு பெரிய உண்மை என்பதை இக்கதையிலிருந்தும் நாம் அறியமுடிகின்றது அல்லவா? அனைவரும் ஓம் நமோ நாராயணாய என்னும் பெருமந்திரத்தைச் சேவிப்போம்.! இப்பிறவியில் அனைத்து வளத்தையும் பெற்று வாழ்ந்து, மறுபிறவி அடையாதவாறு முக்தியையும் பெறுவோமாக!

இம்மந்திரத்தின் சொந்தக்காரரான ஸ்ரீமந்நாராயணப் பெருமானின் பரிபூரண் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில், பகவான் கண்ணபெருமானுடைய அனைத்து லீலாவிநோதங்களையும் பக்திச்சிரத்தையோடு படிப்போர்க்கும், கேட்போர்க்கும், அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வோர்களுக்கும் தமது வாழ்க்கையில் ஏற்படும், நல்ல விளைவுகளையும், வியாசமகரிஷியின் வழிநின்று நாம் அறிந்து மகிழ்கிறோம்.!

**பகவத்கீதையில் பரப்பிரம்ம வழிபாடு:-**

மேலும், ஸ்ரீமந்நாராயணப் பெருமானின் பரிபூரண அவதாரமான ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில், பாரதப் போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசித்து. அவனுடைய சந்தேகங்களையும், தன்னுடைய உண்மையான

அவதாரத்தையும், அதன்நோக்கத்தையும் அவனுக்கு எடுத்துரைத்த அருள்மொழிகளே பகவத்கீதையாகும். 4.ஆம் அத். 11ஆம் ச்லோகமாக

**யே யதா மாம் ப்ரபத்யந்தே. தாம்ஸ் ததைவ பஜாம்யஹம்**
**மம வர்த்மாநுவர்த்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச:**

என்னும் ச்லோகம் அமைந்துள்ளது.. இதில், கண்ணபெருமான், “பார்த்தா! என்னுடைய பக்தர்களில் யார் எந்தப்பயனை விரும்பி என்னுடைய அர்ச்சாவதார நிலைகளில் எதைத் தேர்ந்தெடுத்து, வழிபடுகிறார்களோ, அவர்கள், விரும்புபவைகளை எல்லாம் நான் அவர்களுக்குக் கொடுத்து மகிழ்கிறேன்.” என்று அறிவுறுத்தி உபதேசம் செய்துள்ளார்.

அதாவது, என் பக்தர்கள் எந்த உருவத்தில் என்னை அர்சிக்கிறார்களோ(வணங்குகிறார்களோ) அந்த உருவத்தில் நான் அவர்களுக்குக் காட்சி தந்து, அந்த உருவத்திலேயே நான் அவர்களை அனுபவிக்கச் செய்கிறேன். என்று கூறுவதால், எளிமை, இனிமை, நீர்மை போன்ற குணங்களைக் கொண்டவனாகிய பகவான், ஞானம், பலம், ஐஸ்வர்யம், சக்தி, தேஜஸ், வீர்யம் என்ற நிலைகளில் எழுந்தருளி, பக்தர்கள் வேண்டியதைத் தருவேன் என்கிறார் இதேகருத்தை

**தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே**
**தமர் உகந்தது எப்பேர் மற்றப்பேர் – தமர் உகந்து**
**எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே**
**அவ்வண்ணம் ஆழியான் ஆம்**

**(முதல்.திரு. அந்.பாசு.44).**

ஆகிய மேற்கண்ட பாசுரத்தில் பொய்கை ஆழ்வார் கூறியுள்ளதைக்காணலாம்.

அதாவது, பகவான் கண்ணன் அவருடைய அடியார்கள் விரும்பும் உருவத்திலும், விரதங்களிலும் மனம் மகிழ்ந்து, அவர்கள் இடும், ஆஸனம், ஒப்பனை, போன்ற உபசாரங்களை உகப்புடன் ஏற்றுக்கொண்டு அவர்கள் வேண்டியவற்றை எல்லாம் கொடுக்கக்கூடியவர் என்பதை இந்தப் பாகவதக் கதைகளின் மூலமாக நாம் அறிந்துகொண்டோம். இதில், பலதரப்பட்ட பக்தர்கள், வெவ்வேறு காரணங்களுக்காக, பகவானை வெவ்வேறு உருவங்களில் வழிபட்டு. வெவ்வேறு வகையான பலாபலன்களைப் பெற்றுள்ளார்கள் என்பதையும் நாம் அறிவதால், எல்லாம் வல்ல அப்பரம்பொருளாகிய பரப்பிரம்மத்தை நாமும், நமக்கு ஏற்றவகையில் வழிபட்டு, இம்மைக்கும், மறுமைக்கும் வேண்டிய உறுதிப் பொருள்களைப் பெற்று வாழ்தல் வேண்டும். புருஷார்த்தம் என்னும் நால்வகை உறுதிப்பொருள்களையும் அடையவேண்டும் என்று நினைக்கின்றவர்களுக்கு பெருமானின் நாராயண என்ற நாமமே உபாசித்தும், உச்சரித்தும் வாழ்வதற்கு உரிய ஒரே வழியும் ஆகும் என்பதை,

**கண்ணன் கழலிணை நண்ணும் மனம் உடையீர்**
**எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே!.**

என்ற தனது திருவாய்மொழிப் பாசுரத்தில் நம்மாழ்வார் பாடி அறிவுறுத்துவதையும் காணலாம். அதாவது, கண்ணனாகிய எம்பெருமானைச் சரணடைய விரும்புவோர் எப்போதும் ஓம்

நமோ நாராயணாய என்னும் மந்திரத்தைத் தமது உள்ளத்தில் நிறைத்து வாழ்ந்தால், அது அவர்களுக்கு தாம் வேண்டியனவற்றை எல்லாம் கொடுக்கும் என்கிறார்.

எனவே ஸ்ரீமந் நாராயணனே நமக்குத் தந்தையும், தாயுமாவார். அனைத்து உறவினர்களாகவும் நண்பர்களாகவும் உள்ளவர் அவரே, மேலும் நாம் கற்கும் கல்வியும், சேர்க்கின்ற சென்ற செல்வமுமாக விளங்குபவரும் அவரே! அனைத்திற்கும் மேலாக, அனுதினமும் நாம் போற்றித் துதித்து வாழவேண்டிய பரப்பிரம்மமும் அவரேயாவார். எனவே இந்த திருமந்திரத்தை மனதிற் கொண்டு நாம் வாழ்வோமாக. பகவானை அனுதினமும் பூசை செய்கின்றபோது, மேலே கூறிய கருத்தினை விளக்கும்,

**த்வமேவ மாதா பிதா த்வமேவ**

**த்வமேவ பந்துஸ்ச சகாத்மேவ**

**த்வமேவ வித்யா திரவிணம் த்வமேவ**

**த்வமேவ ஸர்வம் மம தேவதேவா!**

என்ற ச்லோகத்தினையும் சேர்த்து சேவித்து, நாம் இந்த லீலாவிபூதியான் உலகத்திற்கும்,, நித்தியவிபூதியான வைகுந்த வளநகர்த்திற்கும் தேவைப்படும் எல்லா உறுதிப் பொருள்களையும் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக! வெல்க ஆன்மீகம்.! வாழ்க பாரதம்.!!

**ஓம் நமோ நாராயணாய!**

## 14. விடாமுயற்சி வெற்றியைத் தரும்.!

**"ஆரப்தம் உத்தம ஜனா: ந பரித்யஜந்தி"**

என்னும் சமஸ்கிருத ச்லோகம், உத்தம குணம் கொண்ட மேன்மக்கள், தாங்கள் தொடங்கிய செயலை எக்காரணம் கொண்டும் பாதியில் நிறுத்திவிடமாட்டார்கள். தமக்கென எவ்வித பலனையும் எதிர்பாராமல், தாம் எடுத்துக்கொண்ட ஒரு கர்மாவை, கர்மயோகமாகச் செய்துமுடிக்கும் விடாமுயற்சியை உடைய அவர்கள், தங்களின் நோக்கத்தை நிறைவேற்றி முடிப்பார்கள் என்பதே மேலே கூறப்பட்ட சுலோகத்தின் உட்பொருளாகும்...

இதன் பொருளுக்கு ஏற்ப, உத்தம குணமுடையவனாகவும், விடாமுயற்ச்சி உடையவனாகவும் வாழ்ந்த பகீரதன் தனது முன்னோர்களான சகரபுத்திரர்களின் முக்திக்காக எவ்வாறு விடாது முயற்சி செய்து தனது நோக்கத்தைச் சாதித்துக் காட்டினான் என்பதை ஸ்ரீமத்பாகவதம் கூறியுள்ளது.

**மேலும் செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார். [திருக்குறள்.26.]**

என்பது திருவள்ளுவர் வாக்கு. சாதாரண மனிதர்களால் செய்து முடிக்க முடியாத கடினமான செயல்களைச் செய்து முடிப்பவர்கள் பெரியோர்கள் என்று அழைக்கப்படுவார்கள். அவர்கள் உத்தமகுணமுடைய மேன்மக்களாவர். அந்த அரிய (கடினமான) செயலைச் செய்து முடித்ததற்காக அதைச் செய்து முடித்தவர்கள் பெருமையும் பெரும்புகழும் அடைவார்கள். அவர்களுடைய பெயரும், அவர்செய்த

வரலாற்றுச் சிறப்புமிக்கச் செயல்களும் எப்போதும், அதாவது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் கழிந்தபிறகும் போற்றப்படும். அந்த வகையில், ஆகாயத்தில் ஓடிக்கொண்டிருந்த கங்கை நதியினை பூலோகத்திற்குக் கொண்டு வந்ததால், பூமண்டலத்தையே செழிப்பாக மாற்றுவதற்கு பெரும் முயற்சி கொண்டு வாழ்ந்து, தனது விடா முயற்சியால், தனது முன்னோர்களுக்கு ஏற்பட்டிருந்த சாபத்தைப்போக்கி, அவர்களை முக்திபெறச் செய்தவன் பகீரதன் என்ற ஓர் அரசன் ஆவான். இந்தக் கதையானது ஸ்ரீமத்பாகவதத்தின் ஒன்பதாம் காண்டத்தில் (ஸ்கந்தத்தில்) எட்டாவது அத்யாயத்திலும், ஒன்பதாவது அத்யாயத்திலும் கூறப்பட்டுள்ளது.

எனவே தான் தற்காலத்திலும் யாராவது ஒருவர் ஒரு பெரும் செயலைச் செய்து சாதனையைப் படைத்தார் என்றால், அதைப் பகீரதப்பிரயத்தனம் செய்து முடித்தார் என்று புகழ்கிறோம். எனவே அத்தகைய ஒரு மன்னனைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டியது தற்காலச்சந்ததியர்களுக்கு ஒரு ஊக்கத்தை அது ஏற்படுத்தும். அந்தப்புராண வரலாற்றைப் பின்வரும் கதையால் அறிந்து நாமும் ஊக்க முடையவர்களாகவும், விடாமுயற்சியோடு உழைப்பவர்–களாகவும் வாழ்ந்து சாதனையாளர்களாக மாறுவோம்.

**சகரனின் முன்னோர்கள் :**

முன்னொரு காலத்தில் சகரன் என்ற சிறப்பான மன்னன் ஒருவன் இருந்தான். அவனுடைய முன்னோர்கள் அனைவருமே வெற்றியும் வீரமும் நிறைந்தவர்களாகவும், பக்தி ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவும் விளங்கினர்.

அவனுடைய முன்னோர்களில் ரோகிதர் என்ற மன்னன் இருந்தான். அவனுடைய பரம்பரையில் ஹரிதர் என்பவரும், அவனுக்கு மகனாக சம்பா என்பவரும் இருந்தார்கள். இவர் சம்பா என்ற ஒரு நகரத்தை நிறுவி, அதைத்தானே ஆட்சிசெய்து வந்தார். இவருக்கு அடுத்து, சுதேவர், விஜயர், உருகுகர், விருகர், பாகுகர் என்ற பற்பல அரசர்கள் அப்பரம்பரையில்தோன்றி, சிறப்பாக ஆட்சி நடத்தி, பின் இறைவனடி சேர்ந்தனர்.

பாகுகர் நாட்டை ஆண்டு வந்தபோது, அவருக்கு எதிரிகள் பலபேர் உண்டாகினர். அவர்கள் எல்லாம் ஒன்றாகச்சேர்ந்து, பாகுகன் மீது படையெடுத்து, அவனது நாட்டையும் அபகரித்துக்கொண்டனர். செல்வமும், அரசாட்சியும், பட்டமும் பதவியும் நிலையற்றவை என்பதைப்புரிந்து கொண்ட பாகுகன், தனக்கு ஏற்பட்ட முடிவை ஏற்றுக்கொண்டவனாக, காட்டிற்குத் தன்னுடைய மனைவியோடும் சென்று, தவத்தில் ஈடுபாடு கொண்டு, தவமியற்றி தன் வாழ்நாளை முடித்துக்கொண்டான். ஆனால் அப்பொழுது அவன் மனைவி கருவுற்றிருந்தாள். ஆயினும் கணவனிடம் மிகுந்த அன்புடையவளாக இருந்த அவள், தன் கணவனுடன் தானும் உடன்கட்டை ஏறி, தன்னையும் அழித்துக்கொள்ள தீர்மானித்தாள்.! ஆனால், அரசனும் அரசியும் காட்டில் வாழ்ந்தபோது அவர்களுக்கு, அக்காட்டிலே வாழ்ந்து வந்த, தவ ஒழுக்கத்திலே சிறந்த பலமுனிவர்களின் தொடர்பு ஏற்பட்டிருந்தது எனவே ஔரவர் என்னும் மிகச்சிறந்த ஒரு முனிவரின் தலைமையிலே இயங்கி வந்த அந்த முனிவர் கூட்டம், அரசி உடன் கட்டை ஏறுவதைத்தடுத்து.

அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் மூலமாக மிகச்சிறந்த ஓர் அரசப்பரம்பரை உண்டாகி புகழ்பெரும் என்றும் கூறினர். அரசி உடன்கட்டை ஏறுவதைத் தடுத்தனர். அரசியும் அதை ஏற்றுக்கொண்டாள். உடன்கட்டை ஏறி தனது உயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணத்தைக் கைவிட்டாள்.!

**சகரன் பிறந்தான்.!**

பாகுகன் என்ற அந்த அரசனுக்கு வேறு சில மனைவியர்களும் இருந்தார்கள். தாங்கள் கணவனை இழந்து தவிக்கும் வேளையில், முதல் மனைவிக்கு மட்டும் குழந்தைப்பாக்கியம் கிடைக்கின்றதே! என்று அவர்கள் பொறாமைப்பட்டனர். எனவே அவளையும் அவள்குழந்தையையும் அழித்து விடவேண்டும் என்று முடிவுசெய்து, அரசிக்கு உணவில் விஷம் கலந்து கொடுத்து உண்ணச்செய்தனர். ஆனாலும் பகவானின் பேரருளால், அவளுக்கும், அவள் குழந்தைக்கும் எவ்விதத் தீங்கும் ஏற்படவில்லை.! விஷம் உண்ட நிலையிலேயே அவள் குழந்தையைப்பெற்றெடுத்தாள். அந்தக்குழந்தைக்கு சகரன் என்ற பெயர் சூட்டப்பட்டது. சகரன் என்ற சொல்லிற்கு விஷத்துடனே பிறந்தவன் என்பது பொருளாகும்.

**பகைவர்களை அழித்தான். பட்டம் சூட்டிக்கொண்டான்.!**

சகரன் வளர்ந்து வந்தான். அவனுக்கு வேண்டிய கல்விகேள்வியாகிய அனைத்தையும் குல குருபோல விளங்கிவந்த ஔரவர் கற்றுக் கொடுக்க, சகரன் அவற்றில் மிகச்சிறந்த தேர்ச்சி பெற்றான். தக்க சமயம் எதிர்ப்பார்த்துக் காத்திருந்து, தனது நாட்டைக் கைப்பற்றிக்கொண்டதோடு.

தனது பெற்றோர்களைக் காட்டிற்கு விரட்டியடித்த அந்தக்கயவர்கள் ஆகிய அரசர்களைப் போரில் வெற்றிகொண்டான். எதிரிகள் ஓட்டம் பிடித்தனர். சகரன் அரசனாக முடிசூட்டிக்கொண்டு., அற்புதமான ஆட்சியைத் தனது மக்களுக்கு அளித்துவந்தான்.

**சகரனின் வாரிசுகள் :**

சகரனுக்கு இரண்டு மனைவியர்கள் இருந்தனர். அவர்களுள் முதல் மனைவியின் பெயர் கேசினி என்பதாகும். கேசினிக்கு ஒரேயொரு பிள்ளை. அவன்பெயர் அசமஞ்சன் என்பதாகும். இரண்டாவது மனைவி சுமதி என்பவள். அவளுக்கு அறுபதினாயிரம் பிள்ளைகள் இருந்தனர். மனைவி மக்களோடும் பிள்ளைகளோடும் சிறப்பான ஆட்சி செய்து வந்த சகரன் ஸ்ரீமந்நாராயணனை வழிபடும் பக்தனாகவும் விளங்கிவந்தான். அப்போது ஔரவர் அவனிடம் நாராயணனைப்பூசை செய்து, அசுவமேதயாகம் ஒன்றைச் செய்யுமாறு அவனுக்கு கட்டளை இட்டார். குருவின் ஆலோசனையை ஏற்ற சகரன் உடனே அசுவமேதயாகம் செய்யத்தொடங்கினான்.!

**அசுவமேதயாகம் என்றால் என்ன?**

சமஸ்கிருதத்தில் அசுவம் என்ற சொல்லுக்கு, குதிரை என்று பொருளாகும். குதிரையை மையப்படுத்தி செய்யப்படும் யாகம் ஆகையால், இது அசுவமேதயாகம் (அசுவமேதயாகம்)என்று அழைக்கப்பட்டது. அஸ்வமேத யாகம் செய்ய விரும்பும் அரசன், அதைச்செய்வதற்குரிய ஓர் இடத்தைத்தேர்வு செய்து கொண்டு, அங்கே யாகபூமியமைத்து, சங்கல்பம் செய்து கொண்டு.

அலங்கரிக்கப்பட்ட தனது குதிரையைக் கட்டவிழ்த்து விடுவார். அக்குதிரையைப் தொடர்ந்து சிறிதளவு படைவீரர்கள் செல்வார்கள். அக்குதிரை நாட்டின் பலபாகங்களுக்கும் செல்லும். அக்குதிரையை யாரும் தடுக்கவில்லை என்றால், வேள்வியைச்செய்யும் அந்த அரசனின் தலைமையை அந்தப்பகுதியில் ஆட்சிபுரிந்துவரும் அரசர்கள் ஏற்றுக்கொள்வதாக அர்த்தமாகும். அவர்கள் சிற்றரசர்களாக இருந்துகொண்டு, யாகம் செய்யும் அரசனுக்கு கப்பப் பணம் செலுத்தி வாழ்வதற்கு ஒப்புக்கொள்கின்றனர் என்று அர்த்தமாகும். அவ்வாறு இல்லாமல், யாரேனும் அக்குதிரையை அடக்கி, கட்டிவைத்துவிட்டால், அவர்கள் யாகம் செய்யும் மன்னனை எதிர்க்கிறார்கள் என்று அர்த்தமாகும். அப்படிப்பட்ட வேளையில், யாகம் செய்யும் அரசன், எதிர்க்கும் நாட்டரசன்மேல் போர்தொடுத்துச்சென்று, வெற்றிகொண்டு, அவன் நாட்டைக்கைப்பற்றி, அந்த நாட்டரசனைச் சிறையில் அடைத்து, தனது குதிரைப்பயணத்தைச் தொடரச் செய்வான். இறுதியில் குதிரை திரும்பி வந்தவுடன் யாகத்தை வேதவிற்பன்னர்களைக் கொண்டும், முனிசிரேஷ்டர்களைக் கொண்டு தொடர்ந்து சிறப்பாக நடத்திமுடிப்பான். யாகத்தின் முடிவில் கடவுளர்களுக்கும், தேவர்களுக்கும் அவிர்பாகம் கொடுப்பான். அதைப்பெற்றுக்கொண்ட அனைத்து தேவர்களும் அம்மன்னனுக்கு ஆசீர்வாதம் செய்து வேண்டிய வரங்களையும் கொடுப்பார்கள். எனவே அவ்வரசன் மேலும் பொன்னும் பொருளும் பெற்று சிறப்பாக அரசாட்சி செய்வான்.!

**இந்திரனின் பொறாமையும், சூழ்ச்சியும் :**

இத்தகைய பெருமையுடையதான அசுவமேதயாகங்கள் நூறு செய்து முடிக்கின்றவர்கள் தேவலோகத்தின் தேவேந்திரனாக பதவி உயர்வு பெறுவார்கள். ஆகையால் யார் அசுவமேத யாகம் செய்தாலும் அதைப் பொறுக்கமுடியாமல் தவிக்கும் தேவேந்திரன் இத்தகைய அசுவமேதயாகங்கள் செய்யப்படுவதை முதலிலேயே தடுத்து நிறுதிதிவிடுவான்.! ஏனென்றால் அவனுடைய பதவிக்கு ஆபத்துவந்துவிடும் என்று பயப்படும் குணம்கொண்டவன் அந்த இந்திரன். அவன் பலவகையான சூழ்ச்சிகளின் மூலம் அந்த யாகங்களைத் தடுத்து நிறுத்திவிடுவான். மகாபலி என்ற அசுரச் சக்கரவர்த்தி 100வது அசுவமேத யாகத்தைச் செய்தபோது, இந்த இந்திரன் பகவான் ஸ்ரீமந்நாராயணனிடம் மன்றாடி, அதைத்டுத்து நிறுத்த வேண்டினான். அதனால்தான் பெருமானும் வாமன அவதாரம் எடுத்து, மகாபலியின் யாக பூமிக்குச்சென்று, தனது காலடியால் மூன்றடி மண் தானமாக வேண்டும் என்று கேட்டுப்பெற்றதையும், மாபலி சம்மதித்து, தாரைவார்த்துத் தந்தவுடன் பெருமான் திரிவிக்கிரமனாக வளர்ந்து தன் இரண்டடிகளால் மூவுலகத்தையும் அளந்து பெற்றதையும், பின்னர் அதை இந்திரனுக்கு தானமாக வழங்கியதையும் முன்பே கண்டிருக்கிறோம். இத்தகைய மனநிலை பெற்றவனான இந்திரன் தற்போது சகர மகாராஜன் செய்ய நினைத்த அசுவமேத யாகத்தையும் தடுத்து நிறுத்திவிட எண்ணினான். ஆகையால் யாரும் அறியாதவாறு சகரனின் யாகக்குதிரையைக் களவாடிச்சென்று பாதாளலோகத்தில் மறைத்துவைத்து விட்டான். அதிலும் மேலும் ஒரு

சூழ்-ச்சியாக அங்கே கபிலமுனிவர் என்பவர் தவத்தில் மூழ்கியிருந்த பகுதியில் அவருக்கருகில் அக்குதிரையைக் கட்டிவிட்டு யாரும் அறியாமல் மறைந்து போனான். குதிரை திடீரென்று மாயமாகிவிட்டதை அறிந்து வருந்திய அதனுடன் சென்ற வீரர்கள் அரசனிடம் சென்று செய்தியைத் தெரிவித்தனர்.

**சகரப் புத்திரர்களின் தேடுதல் வேட்டை :**

தன் தகப்பனார் செய்து வந்த அசுவமேதயாகம் தடைப்பட்டதை அறிந்த சகர புத்திரர்கள் கொதித்து எழுந்தனர். சகரனும் அந்த யாகக்குதிரையைத்தேடி மீட்டுக்கொண்டு வரவேண்டிய பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார். எனவே சகரனின் புதல்வர்களான அறுபதினாயிரம் பேரும் பூலோகம் முழுவதையும் சல்லடை போட்டுத்தேடுவதைப்போல பற்பல இடங்களிலும் தேடிப்பார்த்தனர். ஆனால் அவர்களுக்கு அக்குதிரை கிடைக்கவில்லை.

**சாம்பலாகிப் போனார்கள் சகரனின் புதல்வர்கள்!**

பூலோகம் முழுவதிலும் தேடிவிட்டபிறகு, அவர்கள் பாதாள லோகம் சென்றனர். அப்போது கண்ணை மூடிக்கொண்டு யோகநிலையிலே ஆழ்ந்திருந்த கபில முனிவரையும், அவருக்கு அருகில் யாகக்குதிரைக் கட்டப்பட்டு இருப்பதையும் பார்த்தனர். கபிலமுனிவர், பகவான் ஸ்ரீமந்நாராயணப் பெருமானின் அம்சமாகவே அவதரித்தவர் ஆவார். ஆத்மதத்துவ ஞானத்தை அறிய யோகநிலையிலே மூழ்கியிருந்தார் அவர். அந்த முனிவர்தான்

குதிரையைக் களவாடியவர் என்று சகரபுதல்வர்கள் முடிவெடுத்தனர். முனிவர் ஏன் அத்தகைய செயலைச் செய்யப்போகின்றார் என்பதைச் சிறிதும் ஆராய்ந்து பார்க்காத சகரபுதல்வர்கள், பெருங்கோபத்துடன் கபில முனிவரைக் கொன்றுவிட நினைத்து தம்கைகளில் இருந்த ஆயுதங்களால், அவரைத் தாக்குவதற்குச் சென்றார்கள். ஆக்ரோஷமாக அவரை நெருங்கினர். முனிவரின் தவ வலிமையால் அவருடைய உடலைச்சுற்றிலும் ஒளிவட்டம் வீசிக்கொண்டிருந்தது. அது அவருடைய தவப்பயனால் மிகவும் வெப்பம் மிகுந்ததாக மாறியிருந்தது. இதை அறியாமல் சகர புதல்வர்கள் அம்முனிவரைக் கொல்ல நெருங்கியதால், அவ்வெப்பத்தின் காரணமாக எல்லோரும் எரிந்து சாம்பலாகிப்போனார்கள். இது எவருக்கும் தெரியாமல்போனது. குதிரையைத் தேடிச்சென்ற தனது புதல்வர்கள், வராததைக்கண்டு மிகவும் மனக்கலக்கம் அடைந்தான் அரசன் சகரன்.

**அஞ்சுமசனின் தேடுதல் வேட்டை :**

இந்தச் சூழ்நிலையில் சகரனின் முதல்மனைவிக்கு அஞ்சுமசன் என்ற ஒருமகன் இருந்தான். அவன் சிறந்த ஞானி. எதிலும் ஈடுபாடு இல்லாமல் இருந்த அவனை அனைவரும் முட்டாள் என்றும், மூர்க்கன் என்றும் ஏளனம் பேசி, அவனை நாட்டை விட்டே துரத்திவிட்டனர். எனினும் அவனுக்கும் திருமணமானதால், அஞ்சுமான் என்ற ஒரு மகன் அவனுக்குப்பிறந்தான். அவன் தன்னுடைய தாத்தாவான சகர மன்னனின் பாதுகாப்பில் வளர்ந்து வந்தான். குதிரையைத் தேடிச்சென்ற தன்புதல்வர்கள் திரும்பாததால், அவர்களைக்

கண்டுபிடித்து வரவேண்டிய பொறுப்பை மன்னன் தன் பேரனிடம், அதாவதுஅஞ்சுமனிடம் ஒப்படைத்தான். அஞ்சுமனும், தனது சிற்றப்பன்மார்களைத் தேடிச்சென்றான்.!

**கபிலமுனிவரைக் கண்டான்!**

பூமண்டலம் முழுவதும் தேடிய அஞ்சுமான், அவர்களைக் காணாததால், பெரும் கலக்கம் அடைந்தான். இருப்பினும் மனம்தளராமல், அவன் சிற்றப்பன்களாகிய சகரபுதல்வர்கள் சென்ற வழியிலேயே தானும் தேடிக்கொண்டு சென்றான். மிகவும் அரும்பாடுபட்டு, கபிலிமுனிவர் இருக்கும் இடத்தருகே சென்றான் அஞ்சுமான். அங்கே அவனுக்கு வியப்பைத்தரும் வகையில், யாகக்குதிரை கட்டப்பட்டிருப்பதைக் கண்டான். ஞானியான அஞ்சுமான், தனது சிற்றப்பன்களைப்போல கோபம் கொள்ளாமல், அம்முனிவரையும், அவருடைய தெய்வீகத் தோற்றத்தையும். கண்டு, அவரை வணங்கி நின்றான். பிறகு, கபிலமுனிவரின் அருளால் நடந்தன எல்லாவற்றையும் அறிந்துகொண்டான்.

**அஞ்சுமனின் ஆராதனையும், கபிலர் கூறிய அறிவுரையும் :**

தனது சிற்றப்பன்கள் அறிவு அற்றவர்களாக செய்ய நினைத்த மூடச்செயலுக்காக வருந்தினான். பகவானின் ஆவேச அவதாரமான கபிலமுனிவர் மனம்மகிழும் வண்ணம், எம்பெருமானே! இன்றுவரை பிம்மதேவரால் கூட உம்முடைய உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடியவில்லை.! தியானத்தாலோ, மனக்கற்பனையினாலோ கூட உம்மைப்பற்றி அறிந்துகொள்ளமுடியாத நிலையில் தாங்கள் இருக்கிறீர்கள்.

அத்தகைய உம்மைப்பற்றி சாதாரண மனிதர்களாலும், தேவர்களாலும், பசு (விலங்கு), பட்சி தாவரங்களால் செய்யநினைத்ததை மன்னித்து அருளவேண்டும் என்பன போன்ற வேண்டுதல்களால் கபிலரை ஆராதித்தான். (அத்யாயம் 8.ஸ்லோகம் 21,22, போன்றவை).

அம்சுமானின் வணக்கத்தையும், தவிப்பையும் கண்ட அம்முனிவர், அஞ்சுமானிடம் உனது தாத்தாவினுடைய யாகக்குதிரையை முதலில் மீட்டுசென்று ஒப்படைப்பாயாக. அதனால் உனது தாத்தாவின் தடைபட்டுப்போய்நிற்கும் அசுவமேதயாகம் தடங்கலின்றி நடைபெறும். அடுத்ததாக உன்னுடைய சிற்றப்பன்களுக்கு நற்கதி கிடைக்கவேண்டு மென்றால், அவர்களின் சாம்பல்மீது புனித கங்கையின் நீர் பாய்ச்சப்படவேண்டும். இதைத்தவிர வேறு வழியில்லை என்று ஓர் உபாயத்தையும் கூறினார்.

**குதிரையுடன் சென்றான் – யாகம் பூர்த்திசெய்தான் :**

அஞ்சுமனும் யாகக்குதிரையோடு சென்று, அதைத்தன் பாட்டனாரிடம் ஒப்படைத்து நடந்தனவற்றை எடுத்துரைத்தான். தனது யாகம் முற்றுப்பெற்றதாயினும், தனது குமாரர்களை சகர மன்னன் இழந்துவிட்டதால் பெருந்துன்பம் கொண்டான்! எனவே மேலும் தான் ஆட்சியில் நீடிக்க விரும்பாமல், தனது பேரனாகிய அஞ்சுமானை நாட்டின் அரசனாக்கிவிட்டு, கானகம் சென்ற சகரன், ஔரவ முனிவரின் உபதேசங்களைப்பெற்று, சில ஆண்டுகள் வாழ்ந்து உத்தமகதியான பரமபதப்பேற்றை அடைந்தான்.!

**ஆகாய கங்கை :**

மகாபலி சக்கரவர்த்தியிடம் வாமன அவதாரத்துடன் மூன்றடி மண் தானமாகப்பெறச்சென்ற பகவான், அதைத் தருவதாக, மகாபலியிடமிருந்து உறுதிகிடைத்ததால், தனது உருவத்தைத் திரிவிக்கிரமனாக மாற்றிக்கொண்டு, மிகப்பெரும் உருவுகொண்டு, மண்ணுலகம் முழுமையையும் ஓரடியால் அளந்து கொண்டார். விண்ணுலகத்தை மற்றொரடியால் அளக்கமுற்பட்டார். அப்போது அவருடைய பாதமானது பிரம்ம தேவரின் சத்திய லோகம் வரையிலே நீண்டு சென்றதால், தன்லோகத்திற்கு வந்த அப்பாதத்திற்குப் பூசை செய்தார் பிரம்மதேவர். அப்பாதபூசை நீரே கங்காநதியாக, விண்ணுலகில் பெருக்கெடுத்து ஓடியது. எனவே அது ஆகாய கங்கை என்றும் அழைக்கப்பட்டது.

**அஞ்சுமனின் முயற்சி :**

சகரனுக்குப்பிறகு அரசனாக முடிசூட்டிக்கொண்ட அஞ்சுமான், கபில முனிவரின் யோசனைப்படி, கங்கையை பாதாளத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றால் அதற்கு என்னவழி என்று ஆராயத்தொடங்கினான். முதலில் அந்த ஆகாய கங்கையை எவ்வாறு பூமிக்குக்கொண்டு வருவது? பூமிக்கு வந்தாலும் மீண்டும் எப்படி அதைப் பாதாளம் வரை அழைத்துச்சென்று, தனது சிற்றப்பன்களின் உடல்கள் எரிந்து போன சாம்பல்மேல் பாயவைப்பது என்று பெரும் ஆலோசனையிலேயே சகரனின் பேரனான அஞ்சுமான் ஆலோசித்து வந்தான். எனவே இது பகவானை வேண்டுவதால்தான் சாத்தியப்படும் என்று முடிவு செய்து, பகவானின் அருளைப் பெறுவதற்காக, தவம்

இயற்றத்தொடங்கினான். ஆனாலும் அவனுடைய எண்ணம் நிறைவேறாத முன்பே அவன் மரணமடைந்தான். முக்திபெற்றான்.!

**திலீபனும், பகீரதனும் :**

சகரமன்னனின் மகனாக விளங்கிய அஞ்சுமனுக்கு திலீபன் என்ற மகன் இருந்தான். அஞ்சுமனின் மறைவிற்குப்பிறகு, திலீபன் அரசாட்சியை ஏற்றான். அவன் சிறப்பாக ஆட்சிசெய்த அரசனாக இருந்தாலும், தனது கொள்ளுப்பாட்டனாராகிய சகர மகாராஜனின் புதல்வர்களின் நற்கதிக்காக, அதாவது, அவர்கள்மேல் புனித நீர்க்கங்கையைப் பாதாளலோகம் அழைத்து வரவேண்டியது தன் கடமை என்று உணர்ந்தான். அதுவே தன்னுடைய தந்தைக்கும், அவருடைய பாட்டனாருக்கும் ஆத்ம சாந்திக்கான கடமையாகும் என்று கருதினான். எனவே திலீபனும் மிகவும் முயற்சிசெய்து கங்கையைக் கொணரவேண்டும் என்ற பெருமுயற்சியில் ஈடுபட்டு, அதற்காகத் தவத்தையும் மேற்கொண்டான். ஆனாலும் அவராலும் அது முடியாமலே போய்விட்டது. திலீபனும் பரமபதம் அடைந்தான்.

**பகீரதனின் எண்ணமும், முடிவும் :**

இந்நிலையில், திலீபனின் மகனாக விளங்கிய பகீரதன் என்பான், அடுத்த அரசனாக முடிசூட்டிக்கொண்டான். தனது மூதாதையர்களின் எண்ணத்தை நிறைவேற்றுவதையும், சகரராஜனின் புதல்வர்களுக்கு நற்கதி கிடைக்கும் பொருட்டு கங்கையைக் கொணர்வதையுமே தனது வாழ்க்கையின்

இலட்சியமாகவும், அதையே தனது முழுமுதற் கடமையாகவும் கொண்டான். அதற்குரிய செயல்பாடுகளிலும் முழுமூச்சாக ஈடுபட்டான். எனவே அதை நிறைவேற்றுதற்குரிய ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டான்.

**கங்கா தேவியைக் குறித்து கடுந்தவம் :**

சிந்தனையின் முடிவில் அவன் முதலில் கங்காதேவியை நோக்கித் தவம் செய்து, அவளிடமிருந்து வரம் பெற்று, தன் மூதாதையர்களான சகரனின் புதல்வர்களுக்கு முக்தியை அளிக்கமுடியும் என்று முடிவு செய்தான். ஏனென்றால், கபிலமுனிவர் கூறிய சொற்களாக அவன்பெற்றோர்கள் கூறியவை அவன் காதில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருந்தது. அதாவது, சகர புதல்வர்களின் உடல்கள் எரிந்து போன சாம்பல் மீது, கங்காநதியின் புனிதத்தீர்த்தமானது பாய்ச்சப்பட்டால்தான், அவர்கள் நற்கதி அடைவர் என்று அவர்கூறிய உபாயம் பகீரதனின் மனத்தில் ஆழப்பதிந்திருந்தது. எனவே, தான் அங்கிருந்து தனது முயற்சியைத் தொடங்கவேண்டும் என்று நினைத்து, முதலில் கங்காதேவியை நோக்கிஅவன் கடுந்தவம் செய்ய முடிவெடுத்தான்.! அதைக் கங்காதேவி பாய்ந்தோடிவரும் ஹரித்துவாரத்தில் செய்ய நினைத்து. அவ்விடத்தில் கடுந்தவம் புரியத்தொடங்கினான்.!

**காட்சியளித்தாள் கங்கா ! வரம்கேட்டான் பகீரதன் :**

தன்னை நோக்கி கடுந்தவம் புரிந்துவரும் பகீரதனின் தவவலிமையைப் பார்த்து மனம் மகிழ்ந்த கங்காதேவி, அவன்முன் தோன்றி, “பகீரதா ! உன் தவத்தினால் நான்

பெருதும் மகிழ்ந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ, அதைத்தயங்காமல் கேள். தருகிறேன்!" என்று கூறினாள்.!. உடனே. பகீரதன் தன் மூதாதையர்களான சகரனின் புதல்வர்களுக்கு நேரிட்ட துர்க்கதியை எடுத்துரைத்து, அவர்கள் நற்கதி(முக்தி) அடைவதற்காக, கங்கை உதவி செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.

ஏனென்றால்,

**கீதா கங்கா ச காயத்ரி கோவிந்தேதி ஹ்ருதி ஸ்திதே**
**சதுர் ககார ஸம்யுக்தே புநர் ஜன்ம ந வித்யதே**
**(மஹாபாரதம். பீஷ்மபர்வம். ச்லோகம்.3.)**

என்னும் ஸ்லோகப் பொருளுக்கு ஏற்ப, ஸ்ரீமத்பகவத்கீதையும், கங்காதீர்த்தமும், காயத்தரி மந்திரமும் கோவிந்தப்பெருமானும் ஆகிய இந்தநான்கும் திவ்வியமானவையாகும். இந்த ககர எழுத்துக்களின் வார்த்தைகளான கீதை, கங்கை, காயத்திரி, கோவிந்தன் என்ற நாமங்கள் எவன் ஒருவனுடைய மனதில் ஆழப்பதிந்து உள்ளனவோ, அவனுக்குமறுபிறவி என்பது கிடையாது. அதோடு அவற்றைக் கொண்டுள்ளவனுடைய மனதில் தோன்றும் எண்ணங்கள் அனைத்தும் பகவான் கோவிந்தனின் அருளால் நிறைவேறும் என்பதும் இச்சுலோகத்தின் பொருளாக உள்ளது. அவ்வாறு பகவானின் நினைப்பையே தனது அருஞ்செயலுக்கு அடித்தளமாக அமைத்துக் கொண்ட பகீரதன், தனது முயற்சியில் வெற்றிபெற விடாமுயற்சியில் ஈடுபட்டான். எனவேதான் முதற்கண் கங்காதேவியை நோக்கிக் கடுந்தவம் புரியத்தொடங்கினான்.

**கங்கையின் சந்தேகமும், பகீரதன் அளித்த உறுதியும் :**

தனக்குக் காட்சியளித்த கங்காதேவியிடம் பகீரதன் வேண்டிய கோரிக்கைக்கு கங்காதேவி இணக்கம் தெரிவித்தாள். என்றாலும் அவள் இரண்டு சந்தேகங்களைப் பகீரதனிடம் எடுத்துரைத்தாள். "நான் என்னுடைய இந்த வேகத்திலேயே பூமியின் மீது விழுந்தால், பூலோகம் அதைத் தாங்காது. பேரழிவுகள் ஏற்படும். எனவே என்னுடைய வேகத்தைத் தடுத்து நிறுத்தி, வேகத்தைக்குறைத்து, பூமியில் விழச்செய்ய வேண்டும்! அவ்வாறான ஆற்றல் பெற்றவர் யார் என்பதை நீ அறிந்து கொள்ளவேண்டும். மேலும் நான் பூலோகத்தில் பாய்கின்றபோது, பாபம் செய்தவர்கள் என்னிடத்தில் நீராடுகின்றபோது, அப்பாவியர்களின் தீமைகள் அகலும், ஆனால் அதை ஏற்றுக்கொள்ளும் என்னுடைய பாவச்சுமை அதிகரித்துவிடுமே! இதற்கு என்ன செய்வது" – என்று கேட்டாள்..

**பகீரதனின் மறுமொழி :**

பகீரதன் அவளிடம் "தாயே உன்னுடைய நீர்ப்பிரவாகத்தைத் தாங்கி, அதை மெதுவாகப்பாய்ச்சுகின்ற ஆற்றலானது சிவபெருமானுக்கு உள்ளது. எனவே நான் அவரிடமும் வரம் பெற்றுவிடுவேன். மேலும் உன்னுடைய நீரில் பாபியர்கள் மட்டுமின்றி, தர்மசீலர்களும், முனிவர்களும் அதிகமாய் நீராடுவார்கள். அவர்களின் நீராட்டத்தால் உண்டாகும் புனிதத்தன்மையால், உனது புனிதத்தன்மை கெடாமல் பாதுகாக்கப்படும் என்றும் சமாதானம் கூறினான்." தனக்கு உதவ வேண்டும் என்று கங்காதேவியிடம் மீண்டும் வேண்டிநின்றான் பகீரதன். அவனுடைய கோரிக்கையை

ஏற்றுக்கொள்வதாகக்கூறிய கங்கா அங்கிருந்து மறைந்து போனாள்.

**சிவபெருமானை நோக்கித் தவம் செய்தான் பகீரதன் :**

தான் கங்காதேவியிடம் கேட்ட வேண்டுகோளை நிறைவேற்றிக்கொள்வதற்காக, அடுத்ததாக சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் மேற்கொள்ளத் தொடங்கினான். சிவபெருமான் தன்னை நோக்கித் தவம் செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தர்மிகளா? அதர்மிகளா? அவர்கள் பெறப்போகும் வரத்தின் பயனால் மனித குலத்திற்கும், மற்றவர்களுக்கும் இன்பம் நேருமா? அல்லது துன்பம் நேருமா என்பதை எண்ணிப்பார்க்கமாட்டார். மிக விரைவிலேயே தவம் செய்பவர்களின் கண்முன்னே தோன்றி, அவர்கள் கேட்கும் வரத்தையும் கொடுத்துவிடக்கூடியவர். ஆகையினாலே அவருக்கு ஆசுதோஷ் என்ற பெயரும் உண்டு. மேலும் அவர் மற்றவர்கள் செய்யும் தவத்தின் மீது விரைவிலேயே திருப்தியும் அடைந்து விடுவார். இதை ஸ்ரீமத் பாகவதம் ஒன்பதாம் காண்டம், ஒன்பதாம் அத்யாயம் எட்டாம் ச்லோகத்தால் அறியமுடிகின்றது.

**“இதி உக்த்வா ச ந்ருபோ தேவம் தபஸாதோஷயத் சிவம்**
**காலேன அல்பீயஸா ராஜம்ஸ் தஸ்யேச: ஸ்மதுஷ்யத”**

என்பது அந்தச் சுலோகம் ஆகும். இதில் “மங்களகரமானவரும் ஈசனுமாகிய சிவபெருமான், தன்னை நோக்கித் தவம் புரிந்தவரான அரசன் பகீரதனிடம் மிக விரைவில் திருப்தி அடைந்தார்.” என்று கூறப்பட்டுள்ளதால் அறியமுடிகின்றது. எனவே பகீரதனுக்கு அருள்புரிய

நினைத்த சிவபெருமான், அந்த அரசன்(பகீரதன்) முன்தோன்றி, விரும்பும் வரத்தைக்கேட்குமாறு அருள்புரிந்தார்.

**சிவபெருமானின் ஒப்புதல் :**

சிவபெருமானிடம் தன்னுடைய சீரிய நோக்கத்தையும், அதற்காக கங்காதேவியிடம் தான் பெற்ற வரத்தையும் எடுத்துக்கூறி, ஆகாய கங்கையானவள், பூமியில் பாய்ந்தோடி வருகின்றபோது, அவளுடைய நீர்ப்பிரவாகத்தைத் தடுத்து நிறுத்தி, அவளை பூமிக்கு எவ்விதச் சேதத்தையும் ஏற்படுத்தாதவாறு மென்மெல்லப் பாய்ச்சுதல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டான் அரசன் பகீரதன். சிவபெருமானும் அதற்கு இசைவு தெரிவித்து "பகீரதா! உன் எண்ணப்படி நான் கங்கையை என் தலை மீது தாங்குகிறேன்" என்று ஒப்புக்கொண்டார்.

**பூமிக்குப் பாய்ந்து வந்தாள் பூலோக கங்கையானாள்!**

சிவபெருமானின் ஒப்புதலை அறிந்த கங்காதேவி, பெரும்வேகத்துடன் ஆகாயத்தில் இருந்து பரமசிவனின் தலைமேலே பிரவேசிக்கத்தொடங்கினாள்.! தன்னுடைய தண்ணீர்பெருக்கால் கர்வம் கொண்டவளான கங்கா, சிவபெருமான் தலைமேலே பாய்கின்றபோது, "இவர் என் வேகத்தை எவ்வாறு தாங்கப்போகின்றார்.? நான் இவரையும் அல்லவா அடித்துக்கொண்டு போய்விடுவேன்" – ! என்ற கர்வத்தோடே பிரவகித்தாள். அதை அறிந்த சிவபெருமான் அவள் கர்வத்தை அடக்கநினைத்தார். எனவே கங்கையை உடனடியாக வெளியே விடாமல், தன்னுடைய தலையில் இருந்த ஜடாமண்டலத்தில் அவளை அடைத்துக்கொண்டார்.

அந்தச்சடாமுடி மண்டலத்திலிருந்து கங்கையால் வெளிவரமுடியவில்லை. அதனுள்ளே அடைக்கப்பட்டு பலஆண்டுகள் வெளிவரமுடியாமல் தவித்தாள்.!

**மீண்டும் தவம்புரிந்து மீட்டெடுத்தான் கங்கையை !**

சிவபெருமானின் ஜடாமுடிமண்டலத்தின் மீது பாய்ந்த கங்கை பல ஆண்டுகளாகியும் வெளியே வராததால் கலக்கமுற்றான் பகீரதன். அவன் என்னசெய்வான்.! மீண்டும் சிவபெருமானைச்சரணம் அடைந்து, கங்கையை விடுவித்து வெளியேற்றுமாறு வேண்டினான். எனவே மீண்டும் தன் கோபத்தை அடக்கிக்கொண்ட சிவபெருமான், கங்கையை விடுவித்தார். இதற்குள் கங்காதேவியின் சீற்றமும் கர்வமும் சற்று தணிந்தது. எனவே ஆகாய கங்கையாக இருந்தவள், பகீரதனுக்காக பூமிக்கு வந்து பூலோக கங்கையானால். பகீரதனுக்காக உலகிற்கு வந்தவள் ஆகையினாலே பாகீரதி என்ற பெயரும் கங்காநதிக்கு இதனால் ஏற்பட்டது.

**கங்கையைக் குடித்து விட்டார் ஜான்கு மகரிஷி!**

சிவபெருமான் தன்னுடைய ஜடாமுடியிலிருந்து கங்கையை மெதுமெதுவாக விடுவித்ததால், கங்கா ஏழு கிளைகளாகப்பிரிந்து பாய்ந்தோடினாள். அவை பற்பல திசைகளில் ஓடின. கங்கையைச் சிவபெருமான் பூமியில் விட்ட இடம் பிந்துசரஸ் என்று அழைக்கப்படுகின்றது. இதில் ஏழாவது பிரிவு மட்டும் பகீரதனைப் பின்தொடர்ந்து சென்றது. பகீரதன் தேரில் ஏறிக்கொண்டு முன்னே செல்லச்செல்ல, கங்கை அவனைப் பின்தொடர்ந்து ஓடினாள். பெரும் ஆரவாரத்துடன் அவள் சென்றபோது, வழியில் ஜன்கு என்ற

மகரிஷி தவம் செய்து கொண்டு, யோகநிஷ்டையில் மூழ்கியிருந்தார். மகரிஷியைக்கண்டு கங்கா விலகியோடி இருக்கலாம்.! ஆனால் அவளோ இன்னும் கர்வத்தோடே இருந்ததால், வழியிலிருந்த அந்த முனிவரை அடித்துக்கொண்டு செல்ல முற்பட்டாள்! அதனால் பெருங்கோபம் கொண்ட அந்த ஜன்குமகரிஷி கங்கையை முழுதுமாக குடித்துவிட்டார். அவருக்குள் கங்கா அடக்கமாகிப்போனாள்.

**ஜான்கவி என்னும் பெயர்பெற்றாள் கங்கா :**

தேரில் சென்றுகொண்டிருந்த பகீரதன் சற்று தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்தான். கங்கையைக் காணாமல் திகைத்தான்.! மகரிஷியின் அருகிலிருந்த தடத்தை அறிந்துகொண்டவன், நடந்துவிட்ட செயலைக்கண்டும் மிகவும் அதிர்ந்து போனான். தன்னுடைய இவ்வளவு முயற்சிகளும் வீணாகிப்போய்விடுமோ என்று பயந்தான். ஆனால், முயற்சியைக் கைவிடாத அரசன் பகீரதன், முனிவரைப்பணிந்து வணங்கி, தனக்காக கங்கையின் பிழையைப் பொறுத்தருளுமாறும், தன்னுடைய முன்னோர்களின் நற்கதிக்கு உதவிசெய்யுமாறும் வேண்டினான். மேலும் தங்கள் வயிற்றுள் இருந்து மீண்டும் கங்காதேவி வெளிப்படுவதால், அவள் தங்களின் புதல்வியாக பூலோகத்தாரால் என்றும் அழைக்கப்படுவாள்'' – என்று கூறினான் பகீரதன். அவனுடைய கோரிக்கையை ஏற்ற மகரிஷி, கங்காவைத் தன்னுடைய காதின் துவாரத்திலிருந்து வெளியில் விடுவித்தார். கங்காவும் மீண்டும்

பாய்ந்தோடினாள். அன்று முதல் அவளுக்கு ஜன்குவின் மகள் என்ற பொருளைத்தரும் ஜான்கவி என்ற பெயரும் ஏற்பட்டது.

**பாதாளலோகத்திற்கும் பாய்ந்திட்டாள் கங்கை :**

ஜான்கவி என்ற புதுப்பெயரோடு பொங்கி ஓடிய கங்கை, பகீரதன் வேண்டுதலுக்கு ஏற்ப, பாதாளலோகத்திற்கும் சென்றாள். சகரனின் அறுபதினாயிரம் புதல்வர்களும் யாகக்குதிரையைத் தேடிச்சென்றபோது, அது பூலோகத்தில் எங்கும் கிடைக்காமல்போனதால், அடுத்ததாக, அவர்கள், கூர்மையான ஈட்டிகளைக் கொண்டும், சூலாயுதங்களைக் கொண்டும் பூமியைத்தோண்டி பாதாளம் சென்றனர் என்பதை முன்பே பார்த்தோம். தற்போது, பகீரதனும், அந்தப்பாதாள மார்க்கத்திலியே கங்கையை அழைத்துச் சென்றான். அப்போது, பகீரதன் இதற்கு முன் கபிலமுனிவரைத் தான்கண்ட அந்த இடத்திற்கு கங்கையும் வந்து சேர்ந்தாள்.! கங்காதேவி தனது புனித நீரை, சகர மகாராஜனின் அறுபதினாயிரம் புதல்வர்களும் எரிந்து சாம்பலாகிப்போயிருந்த அப்பகுதியில் பாய்ந்தோடச் செய்தாள்.! அவ்வளவில், ஆராயாமல் கபிலமுனிவரைக் கொல்ல நினைத்த அநியாயச் செயல்களுக்காக எரிந்துபோன அவ்வுடலின் ஆன்மாக்கள் எங்கும் செல்ல இடமின்றி தத்தளித்துக் கொண்டிருந்தன.

**கங்கையின் புனிதநீரால் சகரபுதல்வர்கள் பெற்றிட்ட பேறு.!**

பகீரதன் செய்த தவத்தால், குளிர்ந்த, பவித்ரமான கங்கையின் புனித நீரால் அவர்களின் ஆன்மாக்கள் சொர்க்கம் சென்று சேர்ந்தன.! தனது மிகப்பெரிய, அரிய முயற்சியால்,

தங்களது முன்னோர்களின் ஆத்மாக்களுக்கு மோட்சத்தைத் தேடித்தந்த பகீரதன் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தான். சகர புதல்வர்கள் மட்டுமல்லாமல், தங்களது நோக்கம் நிறைவேறாமல் மறைந்து போன, தனது பாட்டன், தந்தை போன்றவர்களுக்கும் அப்புனித நீரால் பகீரதன் தர்ப்பணம் செய்ததால், அவர்களுடைய ஆன்மாக்களும் முக்தி அடைந்தன.

**வாழையடி வாழையாய் உழைத்திட்ட அரசகுலம் :**

சகரபுதல்வர்களின் மோட்சத்திற்காக, ஒரு தனிப்பட்ட மனிதனாக மட்டுமல்லாமல், சகரனின் வழியில் வந்த அனைவருமே, தங்கள் பரம்பரையினருக்கு ஏற்பட்ட சாபத்தைப் போக்கி கொள்ள எவ்வளவு முயன்றனர் என்பது தெளிவாகிறது. எனினும் பகீரதனுக்கு முன் இருந்தவர்கள் வெறும் தவநிலைக்கு மட்டுமே சென்றனர். ஆனால் அவர்களின் எண்ணமும் நோக்கமும் நிறைவேறாத முன்பே இறந்துவிட்டனர். ஆனால் பகீரதன் மட்டுமே தன் முயற்சியில் வெற்றி பெற்றான்.! ஏனெனில், தன்நோக்கத்தை எவ்வாறு நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்று பலவகையிலும் யோசித்துச் செய்து, வெற்றிகண்டவன். கர்ம, ஞான, பக்தியோகங்களால் நிறைந்தவனான பகீரதன் எதை எவ்வாறு செய்தல்வேண்டும் என்பதை நன்கு ஆராய்ந்து செய்தான். ஆகையால்தான் அவன்தன் குறிக்கோளில் வெற்றி அடைந்தான்.

**மேலும் எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்**
**திண்ணிய ராகப் பெறின்,**

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப, திண்மையான, அதாவது விடாமுயற்சியை உடையவனாக இருந்த பகீரதன், தனது முயற்சியால் நினைத்ததை முடித்துக் காட்டியதையும் நாம் அறிகிறோம். பகீரதனுடைய இப்புனிதக் கதையைக் கேட்பவர்களும், படிப்பவர்களும், தங்களுடைய நோக்கத்தில் வெற்றி பெறுவார்கள் என்பதை பரமபுருஷராகிய பகவான் அனைவருக்கும் உணர்த்துகிறார்.

விடாமுயற்சியாளர்களுக்கு, ஊக்கத்தைத் தருவதாக உள்ள இச்சம்பவம், செயற்கரிய செயல்களைச் சாதிக்கவேண்டும் என்று விரும்புவோர்களுக்கு ஒரு முன்னுதாரணம் ஆகும்.!

**இக்கதையால் நாம் அறிவன யாவை?**

சாம்பலாகிப்போன சகரபுத்திரர்களின் உடல்கள்மீது, கங்கைநீர் பட்டமாத்திரத்தில், சகரகுமாரர்கள் சுவர்க்கலோகம் சென்றனர் என்று அறிகிறோம், அவ்வாறு இருக்க, அந்தக் கங்கையை நோக்கித் கடுந்தவம், புரிந்தவனும், அவள் கட்டளையை நிறைவேற்ற சிவபெருமானிடமும் மீண்டும் ஜான்கு முனிவரிடமும் எவ்வாறு எல்லாம் பகீரதன் வேண்டுகோள்களை வைத்து, தன்னுடைய பெரும் செயலை செய்து முடித்துக்கொண்டான் என்பது. இக்கதையைப் படிக்கும் அனைவருக்கும் ஒரு சிறந்த உதாரணம் ஆகும். மேலும் இவனுக்கு பகவான் சிறந்த முக்திலோகத்தைக் கொடுத்தார் என்பதும் அறியமுடிகிறது. மேலும் நயமுடன் பேசும் இன்சொற்களையும், முன்பின் யோசித்து முடிவெடுத்தலே சிறந்த வழிமுறை என்பதையும் பகீரதனின் இக்கதையினால் நாம் அறிகிறோம்.

**கங்கை நீர் பட்டதால் சுவர்க்கம் கிடைக்குமா?**

**ந ஹி ஏதத் பரம் ஆச்சர்யம் ஸவர்துன்யா யத் இஹோதிதம்!**

**ஆனந்த சரணாம் போஜ ப்ரஸுதாயா பவ-ச்சித: பதம்.**

**24.(ச்லோகம்.)**


இது சாத்தியமானதே என்பதை வியாசபகவான் மேலே கூறப்பட்டுள்ள சுலோகத்தின் மூலம் விடையளிக்கிறார் பரமபுருஷராகிய மகாவிஷ்ணு பெருமானின் பாதத்தாரையிலேயிருந்து கங்கா தேவி ஊற்றெடுத்து ஓடிவருகிறாள். பகவான் திரிவிக்கிர அவதாரத்தின் போது, தன்னுடைய சத்தியலோகத்திற்குள் நுழைந்த பகவானின் திருவடிகளுக்குப் பிரம்மதேவன் செய்த அபிஷேக நீரே கங்கையாகப்பிரவகித்து ஓடினாள் என்று புராணம் கூறுகிறது. எனவே கங்கையாற்றிற்கு பகவானுடைய திருவடிப்பேற்றின் சம்பந்தம் நேரிடையாகக் கிடைத்தது. அதனால் அது புனிதம் அடைந்தது. அப்புனிதத்தன்மையின் காரணமாகவும், அக்கங்கையின் தண் என்ற (குளிர்ச்சியான) நீரின் தன்மையாலும், கபிலமுனிவரின் துப்பிழம்புச் சுடரின் தாக்கத்தால் எரிந்துபோன சகரபுதல்வர்களின் சாம்பல் மீது அக்கங்கையின் நீர் பாய்ந்ததால், சகரபுதல்வர்கள் பகீரதனின் முயற்சியால் சொர்க்கலோகம் அடைதலாகிய சாயுஜ்ய முக்தியை அடைந்தார்கள்.! ஏழு புண்ணிய தீர்தங்களுள் முதலானதாகவும், முக்கியமானதாகவும் உள்ள கங்கையில் நீராடி புனிதத்துவம் பெறுவதும், பகவானுடைய திருவடிப்பேற்றை அடைவதும் பாரததேசத்திலே பிறந்துள்ள ஒவ்வொரு பாரதீயனுக்கும் உரிய கடமை என்றும் உணர்வோமாக!

எனவே ஒரு செயலில் ஈடுபடுவர்களுக்குத் தேவையான பண்பு நலன்கள் யாவை என்பதற்கு பகீரதனின் பண்புநலன்கள் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.! நாமும் இத்தகைய நற்குணங்களைப் பெற்றுவாழ்ந்தால், எத்தகைய அரிதான செயலாக இருந்தாலும், அதை விடாமுயற்சியாலும், பகவானுடைய பேரருளாலும் சாதித்துக்காட்டலாம் என்பதற்கு இவ்வரலாற்றுக் கதை மிகப்பெரும் எடுத்துக்காட்டு ஆகும்.

**நாமும் விடாமுயற்சியோடு உழைப்போம்.!**

**பகவானைச் சரணம் அடைவோம்!!**

**வெற்றி பெறுவோம்,!!!.**



## 15. கிருஷ்ணன் இருக்குமிடம் - வெற்றிகளின் விளைவிடம்..!

பொதுவாக ஓர் அரசகுடும்பத்தில், ஒரு தந்தையோ அல்லது பாட்டனாரோ தனது வாரிசுகளுள் எவரையேனும் ஒருவரை தங்கள் நாட்டின் அரசராகப் பிரகடனப்படுத்தி, (அறிவித்து) அவருக்குப் பட்டாபிஷேகம் என்ற முடிசூட்டுவிழாவை நடத்தி வைப்பார்கள். ஆனால், ஸ்ரீமகாவிஷ்ணு எடுத்த ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில், உக்கிரசேனன் என்ற தன்னுடைய பாட்டனாருக்கு, (தாத்தாவிற்கு) ஸ்ரீகிருஷ்ணர் பட்டாபிஷேகம் செய்துவைத்த ஒரு வரலாற்றுக்கதை மிகவும் சுவைநிரம்பிய ஒன்றாகும். அதைத்தான் ஸ்ரீமத்பாகவதத்தின் பத்தாம் ஸ்கந்தம் முதற்பகுதியில் மிகவும் விரிவாகக் கூறியுள்ளார். அதன் படைப்புக் கர்த்தாவான வேதவியாச மகரிஷி. ஸ்ரீகிருஷ்ணரின் அவதாரக் காலப்பகுதியான துவாபரயுகத்தில் ஏற்பட்ட பல்வேறு அரசபரம்பரை மாற்றங்களால், அரசராக இருந்த வசுதேவருடைய தந்தையான சூரசேனரை, கம்சனின் தந்தையாக இருந்த உக்கிரசேனர் வென்று அவருடைய நாட்டைத் தன்னுடைய நாட்டோடு இணைத்துக்கொண்டார். மேலும், யது வம்சம், போஜவம்சம், அந்தக வம்சம் போன்ற வேறுபல வம்சத்து ராஜாக்களையும் வென்று, மிகுதியான பலம்படைத்த ஒரு பேரரசனாக விளங்கிவந்தார் உக்கிரசேனர்.

**உக்கிரசேனரும், சூரசேனரும் :**

இத்தகு சூழ்நிலையில்தான், தன்படைத் தளபதியாகவும், சூரசேனரின் மகனுமாக விளங்கிய வசுதேவருக்கு, தன்னுடைய தம்பிமகளான தேவகியைத் திருமணம்

செய்துகொடுத்தார் உக்கிரசேனர். தேவகர் என்னும் பெயர்பெற்றிருந்த உக்கிரசேனருடைய தம்பி மகள் ஆனதால், தேவகி என்றே பெயர்பெற்றிருந்த அவளுக்குப் பிறந்த எட்டாவது ஆண்குழந்தைதான் ஸ்ரீகிருஷ்ணர். ஆனால் கிருஷ்ணரின் பிறப்பிற்கு முன்னரே தேவகியும், வசுதேவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். கம்சனுடைய காலக்கிரகச் சிறையிலே அடைபட்டிருந்த இருவருக்கும் எட்டாவது ஆண்குழந்தையாய் அவதரித்தவர்தான் ஸ்ரீகிருஷ்ணர்.

**கம்சனின் முன்பிறவி :-**

கம்சன் தன்னுடைய முன்பிறவியில், காலநேமி என்ற ஓர் அசுர அரசனாகப் பிறந்தவன் ஆவான். அந்தப்பிறவியில் அவன் ஸ்ரீமகாவிஷ்ணுவால் கொல்லப்பட்டான். கம்சன் போஜவம்சத்தைச் சேர்ந்தவன். ஆகையால் அவன் யது வம்சமான யாதவர்களிடத்தில் பெரும் பகைமை கொண்டிருந்தான். அந்த யது வம்சத்தில் தற்போது மகாவிஷ்ணுவின் அம்சமான ஸ்ரீகிருஷ்ணர் தோன்றியுள்ளதாலும், அசரீரி உரைத்த தெய்வீகவாக்காலும், அக்கிருஷ்ணனால் தனக்கு மரணம் நேரிடுமோ என்று பயந்தான். எனவேதான், கிருஷ்ணரின் பிறப்பை அறிந்துகொண்ட அவன், இளம்வயதினனாக இருக்கும்போதே அக்கண்ணனைக் கொன்றுவிடவேண்டும் என்று முடிவுகட்டியே பல அரக்கர்களை ஏவிவிட்டு, குழந்தைக்கண்ணனை அழிக்கமுற்பட்டான்.! ஆயின், அந்த எல்லா அரக்கர்களையும், விளையாட்டைப்போல அழித்துவிட்ட கிருஷ்ணர்,, தன்னுடைய ஏழுவயதில் தாய் மாமனாகிய கம்சனை வதைத்து, மீண்டும் உக்கிரசேனரை

அரசராக அறிவித்து அவருக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார் என்பது சற்று சுவையான நிகழ்வாகவே கருதப்படும். எனவே ஸ்ரீ கிருஷ்ணபகவான் தன்னுடைய தாய்மாமனான கம்சனை வதம் செய்ததையும், அவ்வதைக்குப்பிறகு, பலராம கிருஷ்ணர்கள் தமது பாட்டனாராகிய உக்கிரசேனரை கம்சனுடைய சிறையிலே இருந்து விடுவித்து அவரை மீண்டும் அரசராக அறிவித்து முடிசூட்டிமகிழ்ந்ததுமாகிய வரலாற்றுப் பின்னணி இக்கதையில் விரிவாகக்கூறப்பட்டுள்ளது.

**கம்சவதம் :-**

ஸ்ரீமத்பாகவதத்தின் பத்தாம் ஸ்கந்தத்தில் பரப்பிரம்மமாகிய ஸ்ரீ கிருஷ்ணர் கம்சவதை செய்த புராணத்தை அனைவரும் அறிவோம். அதிலும் பாலகிருஷ்ணருடைய லீலாவிநோதங்கள் அனைவரும் விளக்கமாக அறிந்தவை. ஆகையால். ஸ்ரீகிருஷ்ணரின் இளம் பருவ நிகழ்ச்சிகளைச் சுருக்கிக் கூறிவிட்டு, கிருஷ்ணருடைய மதுராநகரப்பிரவேசம், அங்கே நடந்த நிகழ்வுகளே ஆகியனவற்றை இக்கதையில் சற்று விரிவாகக் கூறியுள்ளேன். எனவே கம்சவதையை மிகவும் சுருக்கமாக எடுத்துரைத்துவிட்டு, அக்கதையிலுள்ள சில முக்கியமான நிகழ்வுகளை நினைவூட்டி முடித்துக்கொண்டு, உக்கிரசேனர் பட்டாபிஷேகம் செய்து கொண்டதையும் இதில் கூறியுள்ளேன். எனவே இக்கதை, பாட்டனாருக்கு (தாத்தாவுக்கு) பட்டாபிஷேகம் செய்துவைத்த பேரன் என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது.

**ஸ்ரீகிருஷ்ண அவதார நோக்கம் :**

எப்பொழுதெல்லாம் தர்மத்திற்குத் தலைக்குனிவும், அதர்மத்திற்கு அரசாட்சியும் கிடைக்கின்றதோ, அக்காலங்களில் நான் அவதாரங்கள் எடுத்துவந்து, அதர்மிகளை அழித்து, தர்மத்தை நிலைநாட்டி, நல்லவர்களான சாதுக்களைக் காப்பேன் என்று பகவான் கிருஷ்ணர் தன்னுடைய பகவத்கீதையில் கூறியுள்ளார்.

**யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத**
**அப்யுக்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்.**

**பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்**
**தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே:**

என்னும் பகவத்கீதை 4ஆம் அத்யாயத்தின் 7,மற்றும் எட்டாம் ஸ்லோகங்களில் கூறியுள்ளார். இவற்றால், தர்மத்தை நிலைநாட்டவும், அரக்கவதைகளைச் செய்யும் பொருட்டு, நான் அனைத்து யுகங்களிலேயும் தேவையான காலங்களில் அவதாரம் எடுத்துவந்து, அவதாரநோக்கத்தைப் பூர்த்தி செய்த பிறகு, என் வைகுந்த வளநகரை மீண்டும் அடைவேன். என்று கூறியுள்ளதே இவற்றின் உட்பொருளாகும். அதற்கு ஏற்றவாறு, பூமியில் பகவான் எடுத்துவந்த இரண்டு மனித அவதாரங்களில், பரிபூரண அவதாரம் என்று போற்றப்பட்ட ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் நடத்தியதுதான் கம்சவதம். இப்பூலகில் கிருஷ்ணாவதாரம் எடுத்துவந்த பெருமான் நூற்றுஇருபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து தனது அவதாரத்தின் நோக்கங்களைப்பூர்த்தி செய்துகொண்டு மீண்டும் தனது வைகுந்தத்தை அடைந்தார்.

**கம்சனும் தேவகியும் :**

உக்கிரசேனன் என்ற அரசனின் மூத்தமகனாகப் பிறந்தவன் கம்சன் என்ற கொடியவன். கம்சனுடைய சிற்றப்பாவான தேவகன் என்பவனுக்கு மகளாகப்பிறந்தவள் தேவகி. சூரசேனன் என்ற மற்றொரு அரசன் அக்காலத்தில் மதுரா நகரத்தை ஆட்சிசெய்து வந்தான். அந்த அரசனின் மகனாகப்பிறந்தவர் வசுதேவர் என்பவர். வசுதேவருக்கும் ரோகிணி என்பவளுக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பிறகு சில ஆண்டுகள் வரையில் ரோஹிணியோடு வாழ்க்கை நடத்தினார் வசுதேவர். யாதவர்களுக்கும், விருஷ்ணி வம்சத்தவர்களுக்கும் போஜர் வம்சத்தைச்சேர்ந்த கம்சன் பெரும் கொடுமைகளைச் செய்துவந்தான். எனவே, தன்மனைவியான ரோஹிணியை, மதுரா நகரத்தின் யமுனாநதிக்கரையில் இருந்த கோகுலம் என்ற ஆயர்பாடியின் சிற்றரசனாக இருந்த நந்தகோபர் என்ற யது வம்சத்தின் சிற்றரசரிடம் பாதுகாப்புடன் வாழ்ந்துவருமாறு அனுப்பிவைத்திருந்தார் வசுதேவர்.

**வசுதேவர், தேவகி திருமண ஊர்வலம் :**

இந்நிலையில், தேவகருடைய மகளான தேவகிக்கும், வசுதேவருக்கும் மீண்டும் திருமணம் நடைபெற்றது. பலதாரமணம் (பலபெண்களை மணந்து கொள்ளல்) அக்காலத்து அரசர்களின் வழக்கமாகவும் இருந்ததால்,

திருமணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. தேவகியிடம், கம்சன் அளவற்ற பாசம் வைத்திருந்தான். எனவே, திருமணம் முடிந்தபோது, தேவகியை சீர்வரிசைப்பொருள்களோடு அனுப்பிவைத்த சடங்கில் பங்கேற்ற கம்சன், அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் திருமணத்தம்பதிகளை அமரவைத்து, தானே ரதத்தையும் ஓட்டிச் சென்றான்.

**வானில் கேட்ட அசரீரியால், வதைக்கத் துணிந்தான் தங்கையை:!**

ஊர்வலத்தின்போது திடீரென்று வானிலிருந்து ஒரு குரல் கேட்டது.! " அடே கம்சா! எந்தத்தங்கையின் மீது நீ இவ்வளவு பாசம் கொண்டுள்ளாயோ, அதே தங்கையின் வயிற்றில் பிறக்கப்போகும் எட்டாவது ஆண்குழந்தைதான். உனக்கு யமனாவான்.! அவனாலே நீ கொல்லப்படுவாய்.! இது சத்தியவாக்கு!" என்று ஒலித்தது. இதைக்கேட்ட கம்சன் கலக்கமும், ஆவேசமும் கொண்டவனாக, தேவகியை அப்போதே கொன்று விடலாம் என்று நினைத்து, தன் கைவாளை உருவிக்கொண்டு தேவகியின் மீது பாய்ந்தான். ஆனால் அவ்வாறு செய்வது பெரும்பாவம் என்றும், பெண்கொலை செய்வது வம்சத்தையே அழித்துவிடும் என்றெல்லாம் பற்பல அறிவுரைகளையும், வேண்டுகோளையும் வைத்துச் சமாதானப்படுத்தினார் வசுதேவர். மேலும் தன் மனைவிக்குப் பிறக்கும் எல்லாக் குழந்தைகளையும், அவை பிறந்தவுடனே கம்சனிடம் ஒப்படைத்து விடுவதாகவும் வசுதேவர் சத்தியம் செய்தார். கம்சன் குழந்தைகளை அழித்துக்கொள்ளலாம் என்றும்

வாக்குறுதி கொடுத்தார். ஆகையால் கம்சன் சமாதானம் அடைந்தான்.

### மக்கள் அறுவரைக் கல்லிடை மோதிக்கொன்ற கொடுங்கோலன் ஆனான் :

வசுதேவருக்கும் தேவகிக்கும் முதல் ஆண்குழந்தை பிறந்தது. தான் வாக்களித்தவாறே அக்குழந்தையைக் கம்சனிடம் வசுதேவர் ஒப்படைத்தார். அதை வாங்கிக்கொண்ட கம்சன், சற்று சிந்தனை செய்து, இக்குழந்தையால் தனக்கு அழிவில்லையே! இதை ஏன் கொல்லவேண்டும் என்று நினைத்து அதைக்கொல்லாமல் முதலில் அவரிடமே ஒப்படைத்து விட்டான். வசுதேவரும் மகிழ்ச்சியோடு செல்ல, அங்கு வந்த நாரத மகரிஷியின் வார்த்தை ஜாலங்களால் மதிமயங்கி, அக்குழந்தையை மீண்டும் கொண்டுவரச்செய்து, அதைக்கல்லில்மோதிக்கொன்று விட்டான் கம்சன். இதேபோன்று, அடுத்ததாக ஆறு கழந்தைகளையும் கல்லிலே மோதி உயிர்நீக்கச் செய்தான். பச்சிளம்பாலகரை கல்லிடைமோதி அழித்த கொடியவனாக கம்சன் மாறினான்.

### மாயாசக்தியால் பகவான் செய்த கரு மாற்றங்கள் :

இந்தநேரத்தில் தேவகி ஏழாம் முறையாக கர்ப்பம் தரித்தபோது, ஆறுமாதக் கருவை, நந்தகோபாலரின் பாதுகாப்பில் இருந்த வசுதேவரின் முதல் மனைவியான ரோஹிணியின் வயிற்றை அடையுமாறு கர்ப்பத்தையும், கருவையும் மாற்றினார் மகாவிஷ்ணு. அதன் விளைவாக, அடுத்த ஆறுமாதங்கள் கழித்து ரோஹிணிக்குப்பிறந்த ஆண்குழந்தைக்கு பலராமன் என்று பெயர்வைத்து அன்போடு அதை வளர்த்துவந்தார்கள்.

எட்டாம் குழந்தையாய் உருவானார் பகவான்.! தேவகியின் ஏழாம் கர்ப்பம் சிதைந்து போயிற்று என்று அனைவரும் நினைத்தனர். பலராமன் பிறந்ததை கம்சன் உள்ளிட்ட சத்துருக்கள் எவரும் அறியவில்லை. இந்தநேரத்தில் பகவான் தன்னுடைய லோகமாயாவை அழைத்து கோகுலத்தின் அரசனான நந்தகோபாலரின் வயிற்றில் கருக்கொண்டு பெண்குழந்தையாகப்பிறக்குமாறு ஆணையிட்டார். தானும் அதே நேரத்தில் தேவகியின் வயிற்றில் எட்டாவது கர்ப்பமாய் கருக்கொண்டார். பன்னிரண்டு மாத நிறைமாத கர்ப்பமாக இருந்த தேவகிக்கு, கம்சனுடைய காலக் கிரகச் சிறையில், நான்கு திருக்கைகளோடு கூடியவராகவும், ஆயிரம் கோடி சூர்யப்பிரகாசம் கொண்டவராகவும் அவதரித்தார் பகவான் கிருஷ்ணர்.

**ஒருத்தி மகனாய்ப் பிறந்தார்.! ஒருத்தி மகனாய் வளர்ந்தார்.!!**

கம்ச வதையை நிறைவேற்றும் பொருட்டாக, குழந்தை இட்ட வேண்டுகோளை ஏற்ற வசுதேவர், தனது ஆண்குழந்தையைத் தலைமேல் சுமந்துகொண்டு. யமுனை ஆற்றைக்கடந்து சென்று, ஆயர்பாடியின் நந்தகோபர் மாளிகையில் தான்பெற்ற செல்வத்தை வைத்துவிட்டார். கண்ணனின் ஏவலால் அங்கு பெண்குழந்தையாகப் பிறந்திருந்திருந்த. யோகமாயையாகிய யசோதையின் பெண்குழந்தையைத் தூக்கிக்கொண்டு சிறைச் சாலையை அடைந்தார். அனைத்து ஆயர்பாடி மக்களின் தூக்கம் கலைந்தபின்னர், குழந்தை அழுகைஒலி கேட்டு விழித்திட்ட

நந்தகோபர் தனக்கு ஆண்குழந்தை பிறந்துள்ளான் என்பதை அறிந்து பெருமகிழ்வு கொண்டார். நந்தகோபாலரும் யசோதையும், ஆயர்பாடி ஆயர்கள் அனைவருமே மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார்கள்.! எண்ணையும் சுண்ணமும் எதிரெதிர் தூவி, பேரின்பக்கடலில் மூழ்கித் திளைத்தனர்.

தான் சுமந்து சென்ற பெண்குழந்தையை காலக்கிரகச் சிறையின் உள்ளே வசுதேவர் எடுத்துச்சென்றவுடன், காவலர்களுக்கு மாயாசக்தியால் ஏற்பட்டிருந்த தூக்கம் கலைந்ததால், குழந்தை அழுத சத்தம்கேட்ட அச்சிறைக் காவலர்கள் ஓடோடிச் சென்று கம்சனை அழைத்து வந்தனர். அவனும் அக்குழந்தையைக் கொல்லநினைத்து வாளால் சிதைத்து அழிக்க வானை நோக்கி வீசியபோது, அக்குழந்தை மேலே பறந்துபோய்விட்டது. கம்சனைப்பார்த்து “உன்னைக் கொல்லப்போகின்றவன் ஏற்கனவே பிறந்து விட்டான்” என்று கூறி, வான்வழியே பறந்துசென்று விந்தியாசலம் அடைந்தது.

**பாலகிருஷ்ணர் செய்த அசுர வதைகள் :**

நாளடைவில் தன்னை அழிக்கப்போகின்றவன் ஆயர்பாடியின் கோகுலத்தில் கிருஷ்ணன் என்ற பெயரோடு வளர்ந்து வருகிறான் என்பதை அறிந்த கம்சன் அவனைக் கொன்று விட பற்பல பூதகணங்களையும், அரக்கர்களையும் அனுப்பிவைத்தான். தாய்போல் உருமாறி வந்து, விஷம் கலந்தபாலைக்கொடுத்து அழித்துவிடலாம் என்று வந்த முதல் அரக்கி பூதனையை முதன்முதலாக முடித்துக்கட்டினார் பாலகிருஷ்ணர். அடுத்ததாக சகடாசுரன், த்ருணாவர்த்தன், வத்ஸாசுரன், கபித்தாசுரன், அகாசுரன்,, தேனுகாசுரன், பிரலம்பாசுரன், வியோமாசுரன், போன்ற பலகொடிய

அரக்கர்களை அழித்ததோடு, இறுதி யாக வந்த பக்காசுரன் என்ற கொக்காசுரன் வரையில் அனைவருமே விஷ்ணு பகவானின் அவதாரமான ஸ்ரீகிருஷ்ணரால் அழிக்கப்பட்டார்கள்.

ஸ்ரீகிருஷ்ணன் கோகுலத்தில் கோபால கிருஷ்ணனாகவும், பிருந்தாவனத்தில் லீலைகள் புரிந்தபோது பிருந்தாவனக் கிருஷ்ணன் என்றும், கோவர்த்தனத்தைக் குடையாய்ப்பிடித்து ஆயர்களையும், ஆநிரைகளையும் இந்திரனின் கோபத்தால் பெய்விக்கப்பட்ட பெரும் கலம்மையிலிந்து காப்பாற்றிய கோவர்த்தனக் கிருஷ்ணனாகவும் வளர்ந்தும், அற்புதங்களைச் செய்தும் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். எனவே “இவன் ஆயர் புத்திரன் இல்லை. அருந்தெய்வம் என்று கூறிய சான்றோர்களின் கூற்றை மெய்ப்பித்துக் காட்டினார் பாலகிருஷ்ணர்.

**பகவான் கிருஷ்ணரின் மதுரா பிரவேசம் :**

ஸ்ரீகிருஷ்ணருக்கு பத்து வயது பூர்த்தியாகியது. அவரை அழிப்பதற்கு வேறு எந்த அசுரனும் தன்னிடம் இல்லாமல் போனதால், சூழ்ச்சியின் மூலம் பலராம கிருஷ்ணர்களை அழித்துவிட முடிவெடுத்தான் கம்சன். எனவே, தான் தன் தலைநகரமான மதுராவில் செய்யப்போகும் தனுர்யாகத்திற்கு இருவரையும் அழைத்துவருமாறு அக்ரூரர் என்பவரை அனுப்பிவைத்தான் கம்சன். யாதவ புத்திரர்கள், மதுராவில் நுழைந்து, யாகசாலையை நெருங்கும்போது பயிற்சி கொடுத்தும், மதம் ஏற்றியும் வைக்கப்பட்டிருந்த குவலயாபீடம் என்னும் யானையின் மூலம் அவர்கள்

இருவரையும் கொன்று விடவேண்டும் என்று திட்டம் தீட்டியிருந்தான் கம்சன்.! ஒருவேளை அது நிறைவேறாமல் போனால் சாணூரன், முஷ்டிகன் என்று இரண்டு மிகப்பெரும் மல்லர்களைக்கொண்டு அழித்துவிடவேண்டும் என்பதே அவன் எண்ணமாகும்.

அக்ரூரர் அழைத்தபோதே கம்சனுடைய சூழ்ச்சியை அறிந்து கொண்டார் கிருஷ்ணர். தன் பிறவியின் நோக்கத்தையும், அதைவிரைந்து முடிக்கவேண்டும் என்றும் விரும்பிய கிருஷ்ணர் பலராமனோடு மதுரா நகரம் புகுந்தார். அவர்களோடு பலயாதவச் சிறுவர்களும் சென்றார்கள். மதுரா நகரத்து மக்கள் அனைவரும் ஸ்ரீகிருஷ்ண பலராமர்களது தெய்வீகத் தோற்றங்களால் பெரிதும் கவரப்பட்டனர். இருவரையும் பாராட்டி வணங்கினர்.

**வாய்க் கொழுப்பால் அழிந்த சலவைத் தொழிலாளி :**

மதுராவில் நுழைந்த பலராம கிருஷ்ணர்கள்.. மதுராவில் பெண்களை மயக்கும் அதிரூபசௌந்தர்யர்களாக இருவரும் வீதிவழியே நந்து சென்றபோது பெண்கள் மட்டுமன்றி கண்டோர் அனைவரும் களிப்படைந்தனர். கோகுலத்து கோபிகைகளைப்போலவே, கண்ணனின் அழகினைக்கண்ட மதுராநகரத்து மங்கையர்களும் அக்கண்ணனின் அழகில் மயங்கினர் என்று பாடியுள்ளார் புராணகர்த்தா வியாசபகவான்.! பொதுமக்கள் அனைவரும் இவ்விரு பாலகர்களும் தெய்வப்பிறவியே என்று தீர்மானித்து மகிழ்ந்தார்கள். கம்சனின் கொடூர திட்டத்தை அறிந்தவர்கள் இத்தகைய பாலகனைக்கொல்லமுயன்றுள்ள கம்சனை எல்லோரும் தூற்றினர். அவன் அழியப்போவது உறுதி என்றும்

சாபம் இட்டனர். இந்நிலையில் வீதியில் ஒரு சலவைத்தொழிலாளியைக் கண்ட கிருஷ்ணர் தங்களுக்கு நல்ல ஆடைகளைத் தருமாறு கேட்டார். ஆனால் திமிரிபிடித்த அந்த சலவைத்தொழிலாளி "ராஜா கம்சன் அணியவேண்டிய இந்த ஆடைகளைக்கேட்க உங்களுக்கு எவ்வளவு துணிச்சல் என்று கூறி," ஏளனம் செய்தான். அவன் இறுமாப்பைக்கண்ட கிருஷ்ணர் இவன் தண்டிக்கப் படவேண்டியவவன் என்று கருதினார். எனவே தன் வலிமை வாய்ந்த கைகளால் அவனுடைய கழுத்தைப் பிடித்துத் திருக்கிக்கொன்றார். அதைக்கண்டு அவனுடைய பணியாளர்கள் எல்லாரும் பயந்துபோய் ஓடிவிட்டனர். கிருஷ்ணபலராமர்கள் உயர்ந்த ஆடைகளைத் தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டு, மற்றயவற்றைத் தம் ஆயர்குல நண்பர்கள் அணிந்துகொள்ளக் கொடுத்தனர். அதை அணிந்து கொண்டபின் அனைவரும் தமது வீதிப்பயணத்தை மேலும் தொடர்ந்தனர். அக்கிரமக்காரர்களுக்கு மட்டுமன்றி, அவர்களுக்குத் துணைபோகும் மற்றவர்களும் தண்டிக்கத்தக்கவர்களே என்பதை இதன்மூலம் கிருஷ்ணர் அனைவருக்கும் உணர்த்தினார். மேலும் ஒரு தையற்கடைக்காரரிடம் தங்களுக்கு வேண்டிய புதிய ஆடைகளையும் தைத்துக் கொடுக்குமாறு கேட்டனர். அவனும் பக்திச்சிரத்தையோடு அனைவருக்கும் புத்தாடைகளைத் தைத்துக்கொடுத்தான்.

**மாலா காரருமம், கூனியும் பெற்ற பேறுகள் :**

சுதாமா என்ற மாலாகாரர் செய்த தொண்டு: அடுத்ததாக பலராம கிருஷ்ணர்கள், சுதாமா என்ற பூமாலைத்

தொடுப்பவரிடம் பூக்கடைக்காரர் இருவரையும் அழைத்தார். அவர் அனுதினமும் கம்சன் அணிந்து கொள்வதற்குத் தேவையான மலர் மாலைகளைத் தருபவர். யாதவச்சிறுவர்கள் இருவரையும் கண்ட அவர் "இத்தனை நாட்களாக நான் கம்சனாகிய கொடுங்கோலனுக்கு மாலைகளைக் கொடுத்துவந்தேன். அதை அணிந்துகொள்ளத் தகுதி அற்றவன் அவன். இன்றைக்கு நீங்கள் என்மலர் மாலைகளை அணிந்து என்னைச் சந்தோஷப் படுத்தவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். பிறகு இருவரையும் சற்றுநேரம் அமரவைத்து மணம் வீசும் மலர்களைத் தேர்ந்தெடுத்து கிருஷ்ணபலராமர்கள் சூட்டிக்கொள்ள மாலைகளைக் கொடுத்தான். அதை இருவரும் ஏற்று அணிந்ததால் அவன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். பிறகு, அந்த மாலாகாரர் எனப்பட்ட பூவியாபாரி சுதாமர் தனக்கு கிருஷ்ணரிடம் என்றென்றும் மாறாத அன்பையும், பக்தியையும் கொண்டவனாக தான் இருக்கவேண்டும் என்று வரம்வேண்டினான். அந்தப்பேற்றை மனமுவந்து கொடுத்த அந்த முகுந்தன், அவன் விரும்பியவாறு, அவனது குடும்பத்தார்களுக்கும் தேவையான நீண்ட ஆயுள், வலிமை, அழகு, புகழ் ஆகிய பேறுகளையும் பெறுவதற்கு அருள்புரிந்தார்.

ஒருவன் சந்தர்ப்ப வசத்தால் கொடியவர்களுக்குத் துணையாகவோ, பணியாளனாகவோ இருந்தாலும், அவர்கள் அதற்கு வருந்தி, பகவான் கிருஷ்ணருடைய பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டால், அவர்கள் செய்த பாவகர்மாக்கள் அழிக்கப்பட்டு பக்தியும், முக்தியும் பெறலாம் என்பதற்கு பூவியாபாரி சுதாமரின் வரலாறு உதாரணமாகும்

அதே நேரத்தில் தனது கர்வத்தால் அழிந்துபோன சலவைத்தொழிலாளியின் மறைவு, பகவானை எதிர்ப்பவர்களின் முடிவினை உணர்த்துவதாகவும் அறியமுடிகிறது.

**திரிவக்ரா என்ற கூனி பெற்ற பேறு :-**

அடுத்ததாக இருவரும் கூன்விழுந்த ஒரு பெண்ணைக் கண்டனர். அவள் உடல் கூன்விழுந்துபோனதால், கூனி என்றே மற்றவர்களால் அழைக்கப்பட்டாள்.! ஆனால் அவள் பெயரை ஸைரந்த்ரீ என்றும் குறிப்பிடுவர். அவளுடைய கழுத்து, மார்பு, இடை ஆகிய மூன்று இடங்களிலும், கோணல் விழுந்துபோனதால், அவள் திரிவக்ரா என்று அழைக்கப்பட்டாள். அவளும் கம்சனுக்குச் சந்தனம் அரைத்துத்தரும் கடமையை அனுதினமும் செய்து வந்தவள். என்றாலும், வேறு வழியின்றி, பிழைப்பிற்காக கம்சனுக்கு இத்தொழிலைச் செய்துவந்தாள் அவள். மதுராவில் பிரவேசம் செய்துகொண்டிருந்த அந்த யதுகுலச் சிறுவர்களின் அழகைக்கண்டு மயங்கினாள் அவள்.. அவர்களுடைய தெய்வீகத்தோற்றம் அவளைப்பெரிதும் கவர்ந்தது. எனவே அவள்,. இவ்விருவருக்கும் சுண்ணாம்பு கலவாத தூய்மையானது, மணம் வீசுவதுமாக சந்தனத்தை அரைத்துக்கொடுக்க வேண்டும் என்று முடிவுசெய்து அவர்களைத் தம்மிடம் அழைத்து, சிறந்த சந்தனக்கலவையை அவர்களின் மேனியிலே பூசிவிட்டு பேருவகை அடைந்தாள்.

தனக்கு பயன்கருதாமல் கைங்கர்யம் செய்த அவளுக்கு ஏதேனும் ஒரு உதவி செய்யவேண்டும் என்று விரும்பினான்

கண்ணன்,. பலநாட்களாக கூன்விழுந்த முதுகினை உடையவளாக இருந்து கம்சனுக்குச் சந்தனம் அரைத்துக் கொடுக்கும் பணியைச் செய்திருந்த அப்பெண்ணின் பாதங்களைத் தன்னுடைய கால்விரல்களால் அழுத்திக்கொண்டு, கை விரல்களால் அவளுடைய முகத்தாடையைப் பற்றி, ஒரே அசைவில் அவளுடைய கூன்விழுந்த முதுகையும், மார்பினையும், கழுத்தினையும் ஸ்ரீ கிருஷ்ணர் நிமிர்த்தியதோடு, அவளை ஓர் அழகிய பெண்ணாகவும் மாற்றியருளினார். இந்த அதிசயத்தைக் கண்ட எல்லாமக்களும் வியப்பும் மதிப்பும் கொண்டு அவர்களை வணங்கினார்கள். கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

அதனால் அந்த திரிவக்ரா என்ற கூனி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். அவளுடைய கைங்கர்யத்தால் ஈர்க்கப்பட்டவரான, ஸ்ரீகிருஷ்ணர் அவளுக்கும், அவள் விரும்பியவாறே பின்னாளில் முக்தி பெற அருளாசிபுரிந்தார்.. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தவமிருக்கும் யோகியர்களுக்குக் கிடைக்காத அப்பெரும் பேறானது, மாலாகாரரான சுதாமாவிற்கும், ஸைரந்த்ரி என்ற திரிவக்ராவிற்கும் கிடைத்ததைப்பார்த்த நகரத்துமக்கள் பெரும் வியப்படைந்து, கிருஷ்ணரின் தெய்வீக சக்தியையும் பாராட்டினார்கள். அந்தக்கூனியினுடைய அப்பழுக்கற்ற கைங்கர்யத்தால் இந்தப்பேறு கிடைத்தது என்பதை அறியும் போது, அக்கூனியின் பக்திப்பரவசநிலையால் ஏற்பட்ட அப்பெரும்பாக்கியத்தை நாம் அறியமுடிகிறது.!

**யாகமேடையில் இருந்த வில்லை முறித்தார் கிருஷ்ணர் :**

இவ்வாறாக நகரத்தின் பற்பல தெருக்களிலும் வலம்வந்த அவ்விருவரும், நகரத்தின் சதுக்கத்தை அடைந்தனர். அப்போது எல்லாமக்களும் இவர்களுக்கு மலரும் தாம்பூலங்களும் கொடுத்து வரவேற்று தங்களது மகிழ்ச்சியையும், கிருஷ்ணர் மீது அவர்கள் கொண்டிருந்த பக்தியையும் வெளிப்படுத்தினார்கள். பிறகு யாக சாலை அமைக்கப்பட்டிருக்கும் இடத்தை அறிந்து கொண்ட அவர்கள், அங்கு சென்றனர். யாகமேடையில் அழகியதாகவும், பெரியதாகவும் அலங்காரம்செய்ப்பட்டதாகவும் ஒரு வில் வைக்கப்பட்டிருந்தது. இருவரும் அங்குச்சென்றபோது காவலர்கள் கிருஷ்ணரைத் தடுத்தார்கள். ஆனால், அத்தடையைத் தன் கையால் தட்டிவிட்டு உள்ளே நுழைந்த கிருஷ்ணர், யாகமேடையில் கம்சன் ஏற்பாடு செய்து வைத்திருந்த அத்தனுசை (வில்லை) தனது இடது கையால் அநாயாசமாக எடுத்து, அதை நாணேற்றி இமைப்பொழுதில் இரண்டாக உடைத்தார். வில் ஒடிந்த ஓசை கம்சனுக்குக் கேட்டதால், அவன் வயிறு கலங்கியது. தன்னைக் கொல்லப்போகும் யமன் வந்துவிட்டானோ! என்றுஎண்ணி எண்ணிக் கலங்கினான். தனுசு(வில்) உடைக்கப்பட்டதைக் கண்ட காவலர்தலைவன் மற்றவர்களைப்பார்த்து "அவனைப் பிடியுங்கள். கொல்லுங்கள்" என்று கட்டளை இட்டான். உடைக்கப்பட்ட அந்தவில்லின் இரண்டுதுண்டுகளில் ஒவ்வொன்றை கிருஷ்ணரும் பலராமரும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டனர். தங்களைத் தாக்கவந்த அவர்களைக் கிருஷ்ணபலராமர்கள் விற்களின் துண்டுகளைக்கொண்டு

பலமாகத் தாக்கி, அவர்களைத் துவம்சம் செய்து அழித்தனர். சுற்றியிருந்த எல்லாமக்களும் மகிழ்ச்சிக் கடலில் திளைத்து ஆரவாரம் செய்தனர்.

**தீய கனவுகளால் திகைத்திட்டான் கம்சன் :**

யாகமேடையில் அலங்கரித்து உயரமான இடத்தில் வைக்கப்பட்டிருந்த அந்த வில்லை உடைத்தும், எதிர்த்தவர்களைத் தாக்கியும் அழித்த அவ்விருவரும், மகிழ்ச்சியுடன் நகரை அந்தமாலைப்போதில் மீண்டும் வலம் வந்தனர். கம்சனை அழிப்பதற்காக வானுலகத்திலிருந்து வந்த தேவர்களோ இவர்கள் என்று அந்நகரமக்கள் கண்டு அதிசயித்தனர். பின்னர் இருவரும் தம்முடைய இருப்பிடத்திற்குச் சென்றுவிட, அன்றைய இரவுப்பொழுதை பயம் கலந்த கலக்கத்துடன் கழித்தான் கம்சன். கனவிலே மட்டுமின்றி, விழித்திருந்தபோதும் பல துர்ப்பலன் அளிக்கும் காட்சிகளை அவன் கண்டான். கண்ணாடிமுன் நின்று பார்த்தால் அவன் தலையைக் காணோம்.! வானத்தை நோக்கினால் சந்திரசூரியர்கள் இரண்டிரண்டாகக் காட்சியளித்தார்கள். அவன் நடக்கும் போது ஈரத்தரையிலும் அவன் பாதச்சுவடுகளின் தடத்தைக் காணவில்லை. கழுதைகள் பூட்டப்பட்ட வண்டியை பிசாசுகள் ஓட்டிச் செல்ல, தான் அவற்றில் பிரயாணம் செய்வதுபோல் கனவு கண்டான். அந்தக் கம்சன். ஆடையில்லாம்ல இருக்கும் தன்னுடலில் மலர்மாலைகள் மட்டும் போடப்பட்டிருப்பதைக் கண்டான் மொதத்தில் அவன் மரணத்திற்கான நிமித்தங்களைக்கண்ட கம்சன் பரிதவித்துப்புலம்பினான். துணைக்கு வருமாறு தன்னுடைய தலைசிறந்த மல்லர்களான முஷ்டிகன்

என்பவனையும், சாணூரன் என்பவனையும் அழைத்து, தன்னுடன் இருக்குமாறு வேண்டிக்கொண்டான்.

**குவலயா பீடம் என்னும் யானையின் வதம் :**

அடுத்தநாள் பொழுது விடிந்த உடன் கிருஷ்ணனும் பலராமனும் நீராடி முடித்தனர். தூய்மையான ஆடைகளை அணிந்து கொண்டும், தங்களைச்சிறப்பாக அலங்காரம் செய்து கொண்டும் அவர்கள் மதுரா நகரத்தினுள் நுழைந்தனர். அன்றைய நாளில் மல்யுத்தக்களத்தில், தனது மதம்கொண்ட யானையின் மூலமாகக் கிருஷ்ணனைக் கொன்று விடவேண்டும் என்பது கம்சனுடைய சதித்திட்டம் ஆகும். ஒருவேளை அதனிடமிருந்து கிருஷ்ணன் தப்பித்துக் கொண்டாலும் தன் மல்லர்களைக் கொண்டு கிருஷ்ணனைக் கொன்றுவிடவேண்டும் என்னும் திட்டம் தீட்டியிருந்தான் அந்தக்கொடியவன். தனது வாழ்க்கையின் இறுதிநாள் அதுதான் என்பதை அறியாத அந்த மூடன், அந்த நாளைக்கிருஷ்ணனுக்கு இறுதிநாள் என்று கண்க்கிட்டு வைத்தான்! ஆனால் அந்த நல்லநாளே ஸ்ரீகிருஷ்ணப் பிரபுவின் அவதார நோக்கமான கம்சவதம் நிகழ்ந்த நாளாக அமைந்தது. அதர்மமும், அதர்மிகளும் அழிக்கப்பட்ட புனிதமான நாளாகவும் அந்த நாள் பெருமை பெற்றது.!

பேரிகைகளும் முரசங்களும் பறைகளும் அழிக்கப்பட்டதால் மல்யுத்தக் களத்திலிருந்து பேரோசைகள் ஒலித்தவண்ணம் இருந்தன. அக்களத்தில் தன் நண்பர்களோடு, பலராம கிருஷ்ணர்கள் நுழைய முயன்றனர். அவர்களைத் தடுப்பதற்காகவே, நுழைவு வாயிலில் ஆயிரம்

யானைகளின் பலத்தைக்கொண்டதான குவலயாபீடம் என்னும் அந்தயானையைக் கட்டிவைக்குமாறும், கிருஷ்ணன் உள்ளே நுழையும்போது பயற்சிக் கொடுக்கப்பட்டிருந்த அந்த யானையின் மூலமாக கிருஷ்ணனையும் பலராமனையும் கொன்றுவிடுவது என்பதும் தான் கம்சனது திட்டமாகும்.

அத்திட்டத்திற்கு ஏற்றவாறு, உள்ளே நுழையமுயன்ற கிருஷ்ணரைத் தடுத்து நிறுத்தியதோடு, அவர்மீது மதம் கொண்ட யானையையும் ஏவி விட்டான் யானைப்பாகன். அவனுடைய திட்டத்தைப்புரிந்து கொண்ட பகவானின் பரிபூரண அவதாரத்தினராகிய ஸ்ரீ கிருஷ்ணப்பிரபு, அந்தயானையைக் கொல்வது என்று தீர்மானித்தார். அதற்குத்தயாராக தன்னுடைய ஆடைகளை இறுக்கிக் கட்டிக்கொண்டார். பாகனின் ஏவுதலால் யானை பகவானைத் தன்னுடைய கூர்மையான தந்தங்களால் குத்திக்கொல்ல ஓடிவந்தது. அப்போது மிகச்சாதுர்யமாக அதனிடமிருந்து தப்பித்து, யானையின் பின்புறம் சென்று அதன் வாலைச்சுண்டி இழுத்தார். அத்துன்பத்தால் பிளறியது யானை. கிருஷ்ணன் எங்குள்ளார் என்று கண்டறியமுடட்டியாத நிலையில் திணறியது. உடனே அதன் முன்னே தாவிக்குதித்தார் பெருமான். கிருஷ்ணரை நேராகக் கண்டுவிட்டதால் மதம்கொண்ட அந்தயானைத் தந்தங்களால் பூமியில் நின்றிருந்த கிருஷ்ணரைக் குத்துவதற்கு முயன்றது. அத்தாக்குதலில் இருந்து பகவான் சற்று புரண்டு படுத்துக்கொண்டதால், அதன் தந்தங்கள் பூமியில் ஆழப்பதிந்து கொண்டன. அதை விடுவிக்க யானைத்திமிறி முயன்றபோது, பின்புறம் போன கிருஷ்ணன். அதன்

பின்னங்கால்களை உறுதியுடன் பற்றிக்கொண்டு, அதைத் தன் வலிமைமிக்க கைகளால் கரகரவெனச் சுற்றி, பூமியில் ஓங்கி அடித்தார். குவலயாபீடம் என்ற அந்த மதம் கொண்ட யானையானது மாண்டுபோனது.

கம்சனின் சதித்திட்டம் தவிடுபொடியானது. சுற்றி நின்றிருந்தவர்கள் அனைவரும் அக்கிருஷ்ணனின் வீரத்தைக்கண்டு அதிசயித்துப்போற்றினர். குவலயாபீடம் பகவானால் கொல்லப்பட்ட இவ்வதிசயத்தை, வேறு சிலபுராணங்களிலும், ஆழ்வார்கள் அருளிச்செயலான நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்திலும் பரவலாக கூறப்பட்டு பகவான் கிருஷ்ணரின் பரப்பிரம்மசொரூபம் விளக்கப்படுகிறது.

**யானைப்பாகனும் ஏகினான் எமலோகம்.!**

பிருந்தாவனக் கிருஷ்ணராக பகவான் வாழ்ந்து வந்தபோது, கன்றுக்குட்டியாக வந்த வத்சாசுரனைப் பின்னங்கால்களால் பிடித்துச் சுழற்றி, விளாமரமாக நின்ற கபித்தாசுரனையும் வதைத்தவரான கிருஷ்ண பகவானுக்கு இது ஒன்றும் பெரிய காரியமாகத் தெரியவில்லை. எனவே அக்குவலயா பீடம் வதைக்கப்பட்டதை அறிந்த அதன்பாகன் ஓடிவந்து பகவானைத்தாக்கநினைத்தபோது, அவனையும், அவன் ஏவிவிட்ட மற்றைய பாகர்களையும், கிருஷ்ண பலராமர்கள் அழித்தனர்.

அரங்கத்தில் இருந்தவர்கள் அதிசயத்தால் வாய்பிளந்து நின்று, அதிலிருந்தும் மீண்டு பெரும் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். யானையைக் கொன்ற பிறகு கிருஷ்ணன்

அதனுடைய தந்தங்களைப்பிடுங்கி எடுத்துக்கொண்டார். அவற்றுள் ஒன்றினைத் தன்தோள்மீது போட்டுக்கொள்ள, பலராமன் மற்றொன்றைத் தன்தோள்மேல் போட்டுக்கொண்டனர். பிறகு அவர்கள் திவ்வியதோற்றம் கொண்டவர்களாக மல்யுத்த களத்திற்குள் நுழைந்தனர்.! கோசலநாட்டு மக்கள், ஸ்ரீராமனை வீதி உலாவில் கண்டபோது அவர் அழகைக்கண்டவரர்கள் “தோள்கண்டார் தோளே கண்டார்., தொடுகழல்கமலம் அன்ன தாள்கண்டார் தாளே கண்டார்” – (க.ரா.பாலகாண்டம்.) என்று கம்பன் வர்ணனைசெய்து புகழ்ந்ததைப்போல, பிரபுவான கிருஷ்ணனின் அழகில் ஈடுபட்டவர்களும் அவருடைய உறுப்புலநன்களால் கவரப்பட்டு, அவற்றின் அழகை அனுபவித்து நின்றார்கள்.!

**முஷ்டிகன், சாணூரன் அறைகூவல் :-**

மல்யுத்தக்களத்தில், மிகப்பெரிய மேடை ஒன்றை அமைத்து அதன்மீது உயர்ந்ததொரு இருக்கையில் கம்சன் அமர்ந்துகொண்டிருந்தான். அங்கு சாணூரன், முஷ்டிகன் என்ற பிரசித்தி பெற்ற மல்லர்களோடு, மேலும் ஆயிரக்கணக்கான மல்லர்களும், பொதுமக்களும், மற்றைய தேசத்து அரசர்களும் கூடியிருந்தார்கள்.! அப்போது சாணூரன் பலராம கிருஷ்ணர்களைக் கண்டு, உங்கள் இருவரைப்பற்றியும், உங்களின் வீரப் பராக்கிரமங்களையும், அசுரர்களை அழித்து நீங்கள் நடத்திய லீலா விநோதங்களையும், நாங்கள் மிகுதியாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். நீங்கள் காட்டிலே ஒருவரோடு ஒருவர் மல்யுத்தம் செய்து மகிழ்ந்தீர்கள் என்பதையும் அரசர்

அறிந்து வைத்துள்ளார். எனவே நீங்கள் எங்களோடு மல்யுத்தம் செய்தால் அதைக்கண்டு மன்னனும், மற்றவர்களும் கண்டு களிப்படைவார்கள். நீங்கள் கம்சராஜனுக்குக் கட்டுப்பட்ட கோகுலச்சிறுவர்கள். எனவே அரசன் கட்டளைக்கு அடிபணிந்து மல்யுத்தம் புரிந்தால், நல்லது. இல்லையென்றால் அரச கட்டளையை மீறியவர்களாகக் கருதப்பட்டு, தண்டனை பெறுவதற்கும் வாய்ப்புகள் உண்டாகும் என்று கூறினான். இம்மல்யுத்தத்தினால் தங்களைக் கொல்வதற்கே கம்சன் திட்டம் தீட்டியுள்ளான் என்று இருவரும் நன்கு உணர்ந்துகொண்டார்கள்.

**மல்யுத்தப் போட்டியை மகிழ்ச்சியாய் ஏற்றனர் :**

ஆனால் அதை உடனே ஏற்றுக்கொள்ளாதவர் போல, கிருஷ்ணன் "மாமல்லரே நீங்களோ மிகச்சிறந்த முறையில் பயிற்சி பெற்ற மாமல்லர்கள். நாங்களோ இடைக்குலத்துச் சிறுவர்கள். பலம் பெருந்திய உங்களோடு பலமற்ற நாங்கள் மோதுவது அதர்மம் என்று அனைவரும் ஆத்திரப்படுவார்கள். எனவே நன்றாக யோசித்துப் பாருங்கள்." – என்று பயம் கொண்டவர்போல் நடித்தார்.! ஆனால் அதற்கு நீங்களும் பலசாலிகள் தான். கிருஷ்ணா நீ செய்த அரக்கர் வதங்களையும், இறுதியாக இங்கே வந்து நூறுயானை பலம் கொண்ட குவலயா பீடத்தை அழித்ததும் எங்களுக்குத் தெரியும்.! எனவே மல்யுத்தம் செய்யத் தயாராகுங்கள்'' என்று கட்டளைத் தோனியில் விடை கூறினான். எனவே கிருஷ்ணன் இசைவு தெரிவிக்க, சாணூரனுடன் கிருஷ்ணனும், முஷ்டிகனுடன் பலராமனும்

மோத வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு மல்யுத்தம் தொடங்கியது.

**சிங்கம்போல் சீறி: சிதைத்து அழித்தனர் மல்லர்களை!**

போட்டியைப் பார்க்கவந்தவர்கள். இங்கு அநியாயம் நடக்கின்றது. மிகபலசாலிகளான, இவர்கள் சிறுவர்களோடுப் போர்புரிவது அநியாயம் என்று ஆர்ப்பரித்தனர். ஆனால், அவற்றை காதில் வாங்கிக்கொல்ளாமல், இரண்டு ஜோடியினரும் மிகவும் கொடூரமாக அடுத்தவர்களைத் தாக்கிக் கொள்ளத்தொடங்கினார்கள். கூட்டதித்லிருந்த பெண்கள் கிருஷ்ணரின் சிறப்புகளை நினைத்து பூஜிக்கவேண்டும் இந்தக் கம்சன். ஆனால், பூஜிக்கபடவேண்டியவர்களை இவர்கள் இப்படிக் கொடுமைப்படுத்துகிறார்களே! என்று மிகவும் இரக்கம் கொண்டு வருந்தினர்.

**யாதவர்கள் ஏக்கமும், போட்டியின் முடிவும் :-**

போட்டி நடைபெற்ற திடலுக்கு, நந்தமகாராஜா, மற்றும் யாதவக் குலத்தவர்களும் நிரம்பி வழிந்தனர். தங்கள் குழந்தைகளுக்கு என்ன தீங்கு ஏற்படுமோ என்று நடுங்கியவண்ணம் இருந்தார்கள். கிருஷ்ணபலராமர்கள் வெற்றிபெறவேண்டும் என்று ஏங்கித் தவித்தனர். இதைக் கிருஷ்ணர் அறிந்தார். எனவே சாணூரனை வதைப்பதில் தாமதம் கூடாது என்று முடிவுசெய்து, சானூரனைத் தனது முஷ்டியால் ஓங்கி ஓங்கி மூன்றுமுறைக் குத்தினார். சபையோர் குதூகலம் கொண்டனர். சாணூரனும் கிருஷ்ணரைத் தாக்கினான். அந்தக்குத்து பகவான் மேல்பட்ட

பூமாலைபோல எவ்வித வருத்தத்தையும் அவருக்குத் தரவில்லை. எனவே கிருஷ்ணன் அந்தச்சாணூரனின் இரண்டு கைகளையும் பிடுத்துக்கொண்டு, அவனைத்தலைக்குமேலே தூக்கி, கரகரவெனச் சுழற்றி, தரைமீது ஓங்கி அடித்துத்துவைத்தார். சாணூரன் செத்துமடிந்தான். இதேபோல முஷ்டிகன் பலராமரைத்தாக்கியபோது, அதைத்தடுத்துக்கொண்ட பலராமன், தனது பலங்கொண்ட மட்டும் ஓங்கி முஷ்டிகனின் முகத்தின்மேல் குத்துவிட்டார். அதைத்தாங்கிக்கொள்ளமுடியாத முஷ்டிகன் இரத்தவாந்தி எடுத்து கீழே விழுந்து சரிந்தான். அவனும் செத்துமடிந்தான். கம்சனுக்குப் பக்கபலமாகவும், அதர்மக்காரியங்களைச் செய்வதற்கு கம்சனுக்கு உறுதுணையாய் இருந்துகொண்டு நம்பிக்கைக்கொடுத்து வந்தவர்களுமான அவர்கள் இருவரும் மாண்டுபோனார்கல்.

**மல்லர்கள் அனைவரும் மாண்டனர் கூண்டோடு :-**

சாணூரணும், முஷ்டிகனும் மடிந்தது கண்டு கோபம் கொண்ட அசலன், சாலன், தோசாலன், என்ற அடுத்தகட்ட மாமல்லர்கள் பலராம கிருஷ்ணர்களைத்தாக்கி அழிக்கவந்தபோது, அவர்களைப்பிடித்து, அவர்களின் தலையைத்திருகிக் கொன்றார்கள் கிருஷ்ண பலராமர்கள். அதைக்கண்ட மற்ற மல்லர்கள் உயிர்பிழைத்தால்போதும் என்று ஓடி ஒளிந்து கொண்டார்கள். பேரிகைகளும், வெற்றிமுரசுகளும் ஒலித்த ஓசையானது எட்டுத்திக்கும் எதிரொலித்தது. இத்தகைய காட்சிகளைக்கண்டு பரவசத்தில் திளைத்தமக்கள் கிருஷ்ணர் வாழ்க, பலராமர் வாழ்க என்று வாழ்த்தொலி பெற்றவரான ஆண்டாள் நாச்சியார், தனது

திருப்பாவையில் “மாவாய்ப் பிளந்தானை மல்லரை மாட்டிய தேவாதிதேவனைச் சென்று நாம் சேவித்தல், ஆ! வா! என்று அருள்செய்வான் அக்கிருஷ்ணன்'' என்று பாடிப்பரவியுள்ளதையும் அறிந்து இன்புறுகிறோம்.!

தனது திட்டங்கள் எல்லாம் தவிடுபொடியானதைக் கண்ட கம்சன் நடுநடுங்கிப்போனான். தனது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்தான். முரசுகள் ஒலிக்கப்படுவதை நிறுத்திவிட்டு, அவனுடைய நண்பர்களாக இருந்தவர்களைப் பார்த்தும், படையினரைப் பார்த்தும் பின்வரும் கட்டளைகளை இட்டான்.! “இந்தயாதவச் சிறுவர்களையும், அவர்களோடு வந்தவர்களையும் அடித்து விரட்டுங்கள். அவர்களுடைய உடைமைகளைப் பறித்துக்கொள்ளுங்கள். எனக்கு எதிராகச் செயல்பட்ட குற்றத்திற்காக அந்த நந்தராஜனைப் பிடித்துச் சிறையில் அடைத்துச் சித்திரவதைசெய்து கொல்லுங்கள். அயோக்கியனான வசுதேவனையும் பிடித்துச் சிரச்சேதம் செய்யுங்கள். அதுமட்டு மல்லாமல் எப்போதுமே எனக்கு எதிராகச் செயல்பட்டுவந்த எனது தந்தையான உக்கிரசேனனையும் கொன்றொழியுங்கள்'' என்றும் கட்டளைகள் இட்டான்.

பழிபாவத்திற்கு அஞ்சாத கம்சனுடைய கட்டளைகள் கிருஷ்ணருக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. அவர் ஒரு இமைப்பொழுதில் கம்சனின் காவலர்களைக் கடந்துபோய், அழகிய உயர்ந்த மேடையில் அலங்காரமாய் வீற்றிருந்த அந்த அரக்கனை, அவன் தலைமுடியைப் பிடித்துக் கீழே இழுத்துத் தள்ளினார். அவனுடைய கிரீடம் தரையிலே விழுந்து

உருண்டது. அந்தமேடையிலேயே அவனைத்தள்ளி, அவன் மார்பின்மீது ஏறி அமர்ந்துகொண்ட கிருஷ்ணர், தன்னுடைய முஷ்டியினால், ஓங்கி அடித்தார். அதன் வலிமையைத் தாங்கமுடியாத கம்சன் மூச்சுத்திணறியும், ரத்தம் கக்கியவாறும் வீழ்ந்து கிடந்தான்.! ஆம் அந்தக்கம்சன் அகில உலகநாயகனான ஆண்டவன் கிருஷ்ணரால் மாய்க்கப்பட்டு மடிந்து போனான். பரப்பிரம்ம பெருமானாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் தனது அவதாரநோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாக நடத்திய இந்த கம்சவதையினைத் தனது பத்தாம் ஆண்டு முடிந்து பதினோராம் ஆண்டில் ஏழுமாதங்களும், பதினான்காம் நாள்களும் நிறைந்த அந்தக்காலத்தில் நிறைவேற்றினார். அதாவது சித்திரைமாதத்தின் இருபத்தைந்தாம் நாளில் கம்சவதையானது நிறவுற்றது.! பகவான் பரப்பிரம்ம ஸ்ரீகிருஷ்ணன் கம்சவதத்தையும், அவருடைய லீலாவிநோதங்களையும் பாடிக்களிக்கின்றனர் பெரும்பாலான ஆழ்வார்கள் அவர்களுள் திருமங்கை ஆழ்வார்.

**வில்லார் விழவில் வடமதுரை விரும்பி விரும்பா மல்லடர்த்து கல்லார் திரள்தோள் கஞ்சனைக்காய்ந்தான்**

**(பெ.தி.மொழி.1512)**

என்ற பாசுரத்தின் மூலம், மலைபோன்ற திரண்ட தோள்களை உடையவனாகிய கம்சனின் மதுராநகரத்திற்குச் சென்ற கிருஷ்ணன், அங்கு நடந்த தனுர்விழா என்ற வில் விழாவிற்காக வைக்கப்பட்டிருந்த வில்லின் உடைத்ததையும், குவலயாபீடம், நாணூரன் முஷ்டிகன் ஆகியவர்களோடு

மல்யுத்தத்தை விரும்பாதவர்கள்போல் நடித்து, இறுதியில் அதன் மூலமாகவுமே கம்சனாதி அரக்கர்களை அழித்ததையும் பாடி மகிழ்கிறார் திருமங்கை ஆழ்வார்.

**முக்தி அடைந்தான் கம்சன் :**

அவனுடைய உடலையும் இழுத்துச்சென்று தூரத்தில் எறிந்து அவன் அழிந்து போனதை அனைவருக்கும் உணர்த்தினார் அகிலாண்ட நாயகன். அப்போது கம்சனின் உடலிலிருந்து வெளிப்பட்ட பேரொளி ஒன்று ஆகாயத்தைநோக்கிச் சென்று மறைந்தது. ஆம் கம்சனின் உயிர் மோட்ச லோகத்தை அடைந்தது. இது சாத்தியமா? கொடூரனாகிய கம்சன் முக்தி பெற்றது எப்படி என்ற கேள்வி எழலாம்.! சம்ஸ்கிருதத்தில் தத் பாவ பாவித: என்று ஒரு வேதத்தொடர் உண்டு. அதாவது ஒருவன் எப்பொழுதும் எதைப்பற்றிய எண்ணத்திலேயே இருக்கின்றானோ, அவனுக்கு அந்த எண்ணத்திற்கு உரிய பலாபலன்கள் கிட்டும் என்பது இதன் பொருளாகும்.

மேலும் இதே கருத்தை, வியாசபகவான் தன்னுடைய ஸ்ரீமத்பாகவதம் ஆகிய இந்தநூலின், பத்தாம் காண்டம், இரண்டாம்பாகம், 44.ஆம் அத்யாயம், 3.9 – ஆம் சுலோகத்தில் பின்வருமாறு கூறுகிறார். அதாவது,

**ஸ நித்யதோத் விக்ன– தியா தம் ஈச்வரம்**
**ப்ரபன்ன அதன் வா விசரன் ஸ்வபன் ஸ்வஸன்**
**ததர்ஸ சக்ராயுதம் அக்ரதோ யதஸ்**
**தத் ஏவ ரூபம் துரலாபம் ஏவ..**

என்பது இந்த ச்லோகம் ஆகும்.

இதில், ‘பரமபுருஷ பகவானாகிய கிருஷ்ணர் தன்னைக்கொன்று விடுவார் என்று அல்லும் பகலும் அனவரதமும் ஆழ்ந்த கவலையிலேயே காண்ப்பட்டான் கம்சன். ஆகையினால் அவன் பருகும்போதும், உண்ணும்போதும், உறங்கும் போதும், மூச்சுக்காற்றை சுவாசிக்கும்போதும் கூட, சக்கராயுதத்தைக் கையில் கொண்டுள்ளவனாகிய பெருமான், தன் முன்னால் வந்து நிற்பதைப்போலவே கண்டுகண்டு பயந்தான். பயந்தான் என்றாலும் அவனுடைய எண்ணம், சொல், செயல் என்ற அனைத்தும் ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றியே இருந்ததால், இது ஸ்மரணம் என்ற பக்தியின் பாற்படும். மேலும் அவன் கண்ட அத்திருக்காட்சியே அவனுக்கு மோட்சத்தைக்கொடுத்தது என்று கூறப்பட்டுள்ளதால், கம்சன் முக்திலோகம் அடைந்ததை அறியமுடிகிறது. அதாவது, கம்சன் எப்பொழுது பார்த்தாலும், கிருஷ்ணன், என்று ஸ்ரீகிருஷ்ணப் பிரபுவின் நினைப்பிலேயே இருந்ததால், அவனுக்கு முக்தி வாய்த்தது என்பதுதான் உண்மை, மேலும் அவன் ஸாரூப்ய முக்தி அடைந்தான் என்பார்கள். அதாவது அந்தமில் பேரின்பத்து அடியாரோடு இருத்தலாகிய நிலையைப் பெற்றான் கம்சன்.!

**கம்ச சகோதரர்களைப் பலராமன் கொன்றார்.!**

கம்சனுக்கு கங்கன், நியக்ரோதகன் உள்ளிட்ட எட்டு இளைய சகோதரர்கள்(தம்பிகள்) இருந்தார்கள். அவர்கள் தங்கள் அண்ணனாகிய கம்சனின் இறப்பிற்குக் காரணமான கிருஷ்ணரைக் கொல்லவேண்டும் என்ற ஆவேசத்துடன் அவர்கள்மேல் பாய்ந்தார்கள். அவர்களை எல்லாம் பலராமன் எதிர்த்துத் தாக்கினார். தன் கையில் கிடைத்த

ஆயுதங்களைக்கொண்டும், பரிகம் என்ற சிறப்பு வாய்ந்த ஆயுதம் கொண்டும், வீறுகொண்ட சிங்கம் ஒன்று, எளிய மிருகங்களை வேட்டையாடி அழிப்பதுபோல் அழித்துமாய்த்தார். பலராமர் அவர்களை வதம் செய்து முடித்தார். அவர்கள் இறந்ததை அறிந்த அவர்களுடைய மனைவிமார்கள் ஓடோடி வந்து அழுது புரண்டனர். அவர்களுக்கு கிருஷ்ணர் ஆறுதல் மொழிகளைக்கூறி, தேற்றினார். மாண்டவர்களுக்கு செய்யப்பட வேண்டிய ஈமக்கிரியைகளை இருவரும் முன்னின்று நடத்தி முடித்தார்கள்.

**பெற்றோர்கள் ஆசியினைப் பெற்று மகிழ்ந்தார்கள் :**

அதன்பின்னர் கம்சனுடைய காலக்கிரகச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த வசுதேவரையும், தேவகியையும், அதாவது தங்களது பெற்றோர்களை அச்சிறையிலிருந்து விடுவித்தனர். அவர்களின் திருவடிகளில் விழுந்து “அம்மா அப்பா” என்று நா தழுதழுக்க அழைத்தனர். தன்னுடைய குமாரர்களை அப்பொழுதுதான் முதன்முதலாகக்கண்டனர் வசுதேவரும். தேவகியும், அவர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்ததோடு, தம் புத்திரர்களுக்கு ஆசியும் வழங்கினர்.

**பாட்டனார் உக்கிரசேனரைப் பணிந்து கிருஷ்ணர் செய்த விண்ணப்பம் :**

பெற்றோர்களின் ஆசிகளைப் பெற்றுக்கொண்ட பிறகு, அவர்கள், தன் பாட்டனாராகிய உக்கிரசேனரை மீண்டும் அரசராக்க முடிவுசெய்தனர். எனவே கம்சனால் சிறையில்

அடைக்கப்படிருந்த அவரைவிடுவித்து, அவரிடம் சென்ற கிருஷ்ணர், “தாத்தா உங்கள் மகனாகிய கம்சனையும், மற்றவர்களையும் நாங்கள் வதம்செய்துவிட்டோம் என்பதால் எங்கள் மீது கோபம் கொள்ளவேண்டாம்.! அது விதிப்படியே நடந்தது. மேலும் கம்சன் நமது இனத்தவர்களையும், தர்மசீலர்களையும் கூட மிகுதியாகத்துன்புறுத்தி வந்தார். எனவேதான் இத்தகைய துர்மரணத்திற்கு அவர் ஆளாக நேரிட்டது. எனவே தாங்கள் மீண்டும் இந்த நாட்டு அரசராக பட்டாபிஷேகம் செய்து கொள்ளவேண்டும். யாதவர்கள் இந்த நாட்டை முடிசூடி ஆளக்கூடாது என்ற சாபத்தை யயாதி அரசன் கொடுத்துவிட்டதால், யது குலத்தைச்சேர்ந்த நாங்கள் மதுராவை அரசாளமுடியாது. எனவே, போஜவம்சத்தைச் சேர்ந்த நீங்கள்தான் மீண்டும் அரசராகவேண்டும். என்று பாசமுடன் கேட்டுக்கொண்டார். மேலும் தங்களுடைய ஆதரவும், அன்பும் பெற்ற படைவீரர்களாக இருந்து கொண்டு உங்களுக்கு வேண்டிய அரசகாரியங்களையும் செய்து வருகிறோம். என்று வேண்டிக்கொண்டனர். உக்கிரசேனரும் அதற்கு இசைவு தெரிவித்ததால், பட்டாபிஷேகத்திற்குரிய ஏற்பாடுகளை இருவரும் செய்யத்தொடங்கினர்.

**பாட்டனாருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்த பேரன் :**

உக்கிரசேனர் முடிசூட்டிக்கொள்ள இசைவு தெரிவித்ததால், கிருஷ்ணர் வாயு பகவானை அழைத்தார். இந்திரலோகத்திலே இருக்கும் சுதர்மை என்ற இந்திரனுடைய சபையைக் கொண்டுவருமாறு கட்டளை இட்டார். இந்திரனும் மறுப்பேதும் சொல்லாமல், தன்சபையை அனுப்பி

வைத்தான்.! அதே நேரத்தில் கம்சனுக்குப்பயந்து பலஇடங்களுக்கும் சிதறிப்போய் இருந்த மற்ற யாதவர்கள், விருஷ்ணிகள், அந்தகர்கள், தாசர்கள் போன்றவர்கள் எல்லாம் மதுராவிற்கு வரவழைக்கப்பட்டனர். சுதர்மை சபையிலே யாதவர்கள், அமர்த்தப்பட்டனர். பின்னர் ஆகம விதிப்படி, உக்கிரசேனருக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார் கிருஷ்ணர். எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தனர். முடிசூட்டுவிழாவில் பங்கேற்ற அனைவருக்கும் பொன்னும் பொருளும் வெகுமதிகளாகக் கொடுக்கப்பட்டன.! உக்கிரசேனரின் பட்டாபிஷேகம் இனிதே நிறைவேறியது.

**மதுரா நகரமக்கள் அடைந்த மகிழ்ச்சி :**

உக்கிரசேனர் முடிசூட்டுவிழாவையும், பலராம கிருஷ்ணர்கள் அவருக்குப் பக்கபலமாக இருந்து அரசுபுரிதலையும் கண்ட மதுராநகரத்து மக்கள் பெரிதும் மகிழ்வுற்றனர். அந்நாட்டு முதியவர்கள் கூட முழுபலத்துடனும், வலிமைமிக்கவர்களாகவும், உற்சாகத்துடனும் பணியாற்றினர். கண்ணனின் கமலமலர்போன்ற கருணையுடைய முகத்தின் தேன்சுரையை அனுபவித்து வாழ்ந்து வந்தனர். கண்ணபெருமானும், பலராமனும் தமது தந்தையான நந்தமகாராஜாவிடம் வந்தனர். அவர்கள் மிகுந்த பாசத்தோடு நந்தராஜனைப்பார்த்து, தந்தையே நீங்களும் தாய் யசோதையும் எங்களை மிகவும் பாசத்தோடு வளர்த்தீர்கள். எங்களிடம் பரிவும் பாசமும் காட்டி வளர்த்ததை ஒருபோதும் நாங்கள் மறவோம். நீங்களே எங்களுக்கு உண்மையான பெற்றோர்கள் ஆவர். ஏனெனின்,

**ஸபிதா ஸா ச ஜனனீ யௌ புஷ்ணீதாம் ஸ்வ-புத்ர-வத்!**

**சிசூன் பந்துபிர் உத்ருஸ்ருஷ்டோன் அகல்பை: போஷ-ரக்ஷணே!!**

**(10.3.அத்.45. ச்லோ.22.)**

என்று கூறினர். அதாவது, ஒருவருக்கு பெற்றதாய் தந்தையர் யார் என்பதில் பெரியநாட்டம் கூடாது. உறவினர்களால் பராமரிக்கவும் பாதுகாக்கவும் முடியாதபடி கைவிடப்பட்ட குழந்தைகளை யார் யார் தமது சொந்த மகன்களைப்போல் பாசப்பொழவுடன் வளர்க்கிறார்களோ, அவர்களே அக்குழந்தைகளுக்கு உண்மையான தாய்தந்தையர்கள் ஆவார்கள். அதற்கேற்ப தாங்கள் இருவரும் எங்கள் மீது கொண்ட அன்பையும் பராமரிப்பையும் யார்தான் மறப்பர்.? என்று கூறி, மறக்கமுடியாத நினைவுகளில் மூழ்கினர். எனினும் நீங்கள் அனைவரும் தற்போது நமது ஊருக்குத் திரும்புங்கள்.! தற்போது இங்குள்ள தாய்தந்தையரையும், உறவினர்களையும் திருப்திப் படுத்தவேண்டிய நிலையிலே உள்ளோம் என்று கண்ணீர்மல்கக் கூறினார்கள். மேலும் நந்தமகாராஜனோடு வந்திருந்த அனைத்து விரஜாவாசிகளுக்கும் பொன்னும் பொருளும், துணிமணிகளும் கொடுத்து திருப்திப்படுத்தி அனுப்பிவைத்தனர்.

**வசுதேவம் சுதம் தேவம் கம்ச சாணூர மர்த்தனம்**

**தேவகி பரமானந்தம் கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்**

**கிருஷ்ணாய வாசுதேவாய தேவகி நந்தனாய ச**

**நந்தகோப குமாராய கோவிந்தாய நமோ நம:**

என்னும் ஸ்ரீகிருஷ்ணபகவானின் திருமந்திரங்களை அனுதினமும் சேவித்து வாழ்வோமாக!

## 16. பழியைப் போக்கி வாழ்ந்த உத்தம புருஷன்.!

ஆயர்குலத்தினில் தோன்றிய அணிவிளக்கான பகவான் கிருஷ்ணரின் லீலாவிநோதங்களையம், அவர் ஆற்றிய அரும்பெரும் அற்புதச் செயல்களையும் விரிவாகக் கூறுவதுதான் ஸ்ரீமத்பாகவதம் என்னும் பாகவதபுராணம் என்பதை முன்னரே கறியுள்ளோம். மேலும்,

**ஆதௌ தேவகிதேவி கர்ப்ப ஜனனம் கோபிக்ருஹே வர்தனம்**
**மாயா பூதாநி ஜீவிதாப ஹரணம் கோவர்தனனோத் துவாரணம்**
**கம்சச் சேதன கௌரவாதி ஹரணம் குந்திப்ரஜாபாலனம்**
**ஏதத் பாகவதம் புராணசகிதம் ஸ்ரீகிருஷ்ண லீலாம்ருதம்**

என்னும் ச்லோகத்தின் விளக்கத்திற்கு ஏற்ப, “தேவகியின் வயிற்றிலே பிறந்து, கோபியர்களின் இல்லங்களிலே வெண்ணெய் அபகரணம் செய்தவர்களோடு கூடியிருந்து குதூகலித்து,, மாயாபூதனையை வதம்செய்து, கோவர்த்தனமலையைக் குடையாகப் பிடித்து, கம்சவதை புரிந்து குந்தி புத்திரர்களான பாண்டவர்களைக் காத்திட்ட பரந்தாம கிருஷ்ணனின் அனைத்து லீலாவிநோதங்களும் நிறைந்த ஒரு அமிர்தக்கடலே ஸ்ரீமத்பாகவதம் ஆகும் என்பதை நாம் அறிகிறோம்.

ஆனாலும், அவர் ஒரு சாதாரண மனிதனாகப் பிறந்ததால், அவருடைய தெய்வீகத் தன்மையை அறியாமலும், அவரே பரப்பிரம்மம் ஆகிய பெருமான் என்பதை உணராமலும் பலபேர் அவருக்கு எதிராகச் செயல்பட்டார்கள். துரியோதனாதியர்களும், கர்ணன், சகுனி, ஜராசந்தன், சிசுபாலன், தந்தவக்த்ரன் போன்றவர்களும் பகவானை நேரம்

கிடைத்தபோதெல்லாம் தூற்றிக்கொண்டும், துவேஷித்துக் கொண்டும் காலம் கடத்தியவர்கள் ஆவர், ஆனாலும், தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம், தான் சாதாரண மனிதப்பிறவினன் அல்லர் என்பதையும், தானே நித்தியபுருஷனான புருஷோத்தமன் என்றும், ஆதிமூலவன் என்றும், அனைத்து தேவகணங்களுக்கும், பிரம்மாதி கடவுளர்களுக்கும் எல்லாம் தலைவன் என்பதையும் நிரூபணம் செய்து கொண்டுவந்தவர் பெருமான் கிருஷ்ணர்.

**பகவான் என்றாலும், பழிக்கு அஞ்சியவர் கிருஷ்ணர் :**

பகவான் ஆகிய பெருமான், தான் மனிதனாகப் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வந்ததால், சிலநேரங்களில் அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கும், பழிபாவங்களுக்கும், பயந்தவராக, அதிலிருந்து விடுபட்டு தான் எவ்விதப்பாவமும் குற்றமும் செய்யாதவன் என்பதையும், வீண் பழி ஏற்பட்டபோது, அதைத்துடைத்தெறிந்து, தான் அப்பழுக்கற்றவன் என்பதையும் உலகத்தினர்க்கு நிரூபித்துக்காட்டியுள்ளார். அவ்வகையில் சியமந்தகமணி என்னும் அபூர்வமானதொரு இரத்தினத்தின் மூலம் தனக்கு ஏற்பட்ட பழிபாவத்தை எப்படி நீக்கிக் கொண்டார் பரப்பிரம்மமாகிய ஸ்ரீகிருஷ்ணர் என்பதை இக்கதையின் வாயிலாக நாம் அறிகின்றோம். அதே நேரத்தில் இக்கதையில் வரும் கதாபாத்திரங்கள் பகவான்மேல் வைத்திருந்த பக்தியின் உயர்வையும் இதில் அறிந்து மகிழலாம்.

ஸ்ரீமத்பாகவதத்தின் பத்தாம் ஸ்கந்தம் மூன்று பிரிவுகளை உடையது ஆகும். இதில் மூன்றாம் பகுதியில் பகவான்

கிருஷ்ணருக்கு ஏற்பட்ட கள்வன் (திருடன்) என்ற பழியை அவர் எவ்வாறு துடைத்து எறிந்தார் என்பது இப்பகுதியில் உள்ள 56.மற்றும் 57. ஆம் அத்யாயங்களில் கூறப்படுகிறது.

**ஸத்ராஜித்தும், சூரியபகவானும் :**

ஸத்ராஜித் என்பவன்- பெருமான் அவதரித்த யாதவகுலத்திலே பிறந்து அரசாட்சி செய்துவரும் ஒரு மன்னனாவான். இவன் சூரிய பகவானின் பெரும்பக்தன். சூர்யபகவானுக்காகப் பலயாகங்களைச் செய்து, அவரை உபாசனை செய்து வந்தவன். சொல்லப்போனால், இவன் சூர்யனைத் தன்னுடைய குருவாகவே கொண்டு பக்திச் செலுத்தியவன். ஆகையால், இவனுடைய பக்தியில் சிறப்பை அறிந்த சூர்யதேவன் இந்த அரசனுக்கு ஒரு அபூர்வமான மாணிக்க மணியை அன்பளிப்பாகக் கொடுத்தார். அதன்பெயர் சியமந்தக மணி என்பதாகும். இதைப் பத்திரமாக தனது பூசை அறையில் வைத்து ஸத்தராஜித் பூஜித்துவந்தான். ஆகையால் அது தினந்தோறும் எட்டுபாரம் (170 பவுண்டு) தங்கத்தை ஸத்ராஜித்திற்கு உற்பத்திசெய்து கொடுத்தது.

இச்செய்தியை 56 ஆம் அத.11ஆம் ச்லோகத்தில் விவரமாகக் கூறியுள்ளார் வியாசமகரிஷி.

**தினே தினே ஸ்வர்ணபாரான் அஷ்டௌ ஸ்ருஜதி ...**

**அப்யர்சிதோ மணி..**

என்னும் இதில், ஒவ்வொரு நாளும் அந்தச் சியமந்தகமணி எட்டுபாரம் எடையுள்ள தங்கத்தை உற்பத்தி செய்யும் என்றும், அது எந்த இடத்தில் முறையாக பூஜிக்கப்படுகிறதோ, அந்த இடத்தில் பஞ்சம் இருக்காது,

மரணபயம் ஏற்படாது, அகால மரணம் குறித்து அஞ்சப்படவேண்டியதில்லை. பாம்புக்கடி மரணமோ, மனக்கோளாறோ, வியாதியோ ஏற்படாது என்று மேலும் அதன் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

அத்தகைய அந்த சியமந்தக மணியைப் பெற்றிருந்ததால், மிகுந்த செல்வச்செழிப்புடையவனாக ஸத்ராஜித் விளங்கி வந்தான். அதன் காரணமாக, தனது செல்வச்செழிப்பை அனைவருக்கும் பெருமைகாட்டிக்கொள்ள பல இடங்களுக்கும் பயணம் செய்து வந்தான்.

**பகவான் கிருஷ்ணரைக் காண வந்தான் ஸத்ராஜித்!**

ஒரு நாள் ஸத்ராஜித் கிருஷ்ணரைக் காண்பதற்காக துவாரகை நகரத்தெருக்களில் நடந்து வந்தான். சூர்யதேவன் கொடுத்த அபூர்வமான அந்த சியமந்தக மணியை ஒரு மாலையாகச்செய்து அதைக் கழுத்தில் அணிந்துகொண்டு வந்தான் அவன். அதை அணிந்து கொண்டு வந்ததால், அவனுடைய தேகத்தில் சூரியஒளி பரவியிருந்தது. சிறந்த தேஜஸ் கொண்டதாக அவன் முகமும் திகழ்ந்தது. எனவே துவாரகை நகரத்து மக்கள், தமது அரசனைப்பார்க்க சூர்யதேவனே நேரில் வருகிறார் என்று நினைத்தார்கள் சிலர்ஓடோடிச் சென்று, ஸ்ரீகிருஷ்ணரிடம் சூர்யபகவான் தங்களைக் காணும் பொருட்டு வந்து கொண்டிருக்கிறார் என்றும் கூறினார்கள். ஆனால் அவர்களின் அறியாமையைப்பார்த்து புன்னகைத்த கிருஷ்ணர், வருவது ஸத்ராஜித் என்னும் அரசன்தான் என்று அவர்களிடம் கூறினார். அதேபோல், சற்றுநேரத்தில் கிருஷ்ணரின் இருப்பிடத்தை

அடைந்த ஸத்ராஜித் பகவானை வணங்கி, தன்னுடைய சியமந்தக மணிமாலையின் சிறப்பையும், அது எட்டுபாரம் பொன்னைத் தினமும் தருவதையும், சூர்யனுக்கும், தனக்கும் உள்ள குருசிஷ்ய நிலைபற்றியும் எல்லாம் எடுத்துரைத்தான். அதைப் பகவானும் கேட்டு இன்புற்றார். சிறிது நேரத்திற்குப்பிறகு ஸத்ராஜித் அங்கிருந்து புறப்பட்டுப்போய்விட்டான்.

**நோய்வாய்ப்பட்டார் உக்கிரசேனர் :**

கம்ச வதைக்குப்பிறகு கிருஷ்ணபலராமர்கள், தமது பெற்றோர்களைச் சிறையிலேயிருந்து விடுவித்தார்கள். பிறகு தமது பாட்டனாரான அந்த உக்கிரசேனரை மதுராவிற்கு அரசனாக்கி மகிழ்ந்தார்கள். அவரும் சிறப்பாக அரசாட்சி செய்து கொண்டு வந்தார்.! எனினும், அவருக்கு வயது அதிகமாகிப் போனதால், வயது முதிர்ச்சியின் காரணமாக பலநோய்களுக்கு ஆளானார். அதுமட்டுமன்றி வேறு சில உபாதைகளும் இருந்ததால், அதைப்போக்க நினைத்தார் பகவான்.

**கிருஷ்ணரின் வேண்டுகோளை நிராகரித்த ஸத்ராஜித்.!**

இத்தருணத்தில் தன் பாட்டனாருடைய பிணியைப் போக்குவதற்கு, ஸத்ராஜித்திடம் உள்ள சியமந்தக மணிமாலை பெரிதும் உதவும் என்று எண்ணிய பெருமான், தன் தாத்தாவிற்காக, அதைப் பெற்று வர ஸத்ராஜித்திடம் சென்றார். அது பொன்னைச்சுரந்து கொடுப்பதோடு, எங்கு இருக்கின்றதோ, அங்கு செல்வவளம் கொழிப்பதோடு பிணியின் தாக்கமும் இருக்காது. கள்வர்பயமும் ஏற்படாது

ஆகையால் தனது பாட்டனாருடைய பிணியைப்போக்க அந்த அபூர்வமணிமாலை உதவும் என்று நினைத்து, அதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என்ற கோரிக்கையை கிருஷ்ணர் முன்வைத்தபோது, அவன் கிருஷ்ணருக்கு அதைக் கொடுக்கமுடியாது என்று மறுத்துவிட்டான்!. கிருஷ்ணருடைய வரலாற்றையும், வீரத்தையும், தங்கள் குலத்தின் பெருமையை உணர்த்துவதற்காக அவர் அவதாரம் செய்துள்ளவர் என்பதை எல்லாம் மறந்து போய் மறுத்துவிட்டான் ஸத்ராஸித்.. பொருள்களின் மேலும், புகழின்மேலும் கொள்ளும் ஆசையானது, மனிதர்களை எவ்வாறு சீரழித்து விடுகின்றது என்பது இதனால் தெரிகின்றது. என்றாலும், அதைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாத பகவான், தனது அரண்மனைக்குத் திரும்பிவிட்டார். நாளடைவில் அந்த சம்பவத்தையும் அவர் மறந்தே போனார்.

**பிரசேனனின் புத்தியற்ற செயல் :**

ஸத்ராஜித்திற்கு தம்பி ஒருவன் இருந்தான். அவன்பெயர் பிரசேனன். அரச காரியங்களில் ஈடுபாடு ஏதும் இன்றி இருந்த அவனுக்கு, காட்டு விலங்குகளை வேட்டைஆடுவதில் மிகவும் விருப்பம். ஒருநாள் அவன் காட்டிற்குச்சென்று வேட்டையாடி வரலாம் என்று நினைத்த தன் அண்ணன் பூசை அறையில் வைத்திருந்த சியமந்தக மணியை ஸத்ராஜித்திற்குத் தெரியாமல் எடுத்து, தன் கழுத்தில் அணிந்து கொண்டான். மணியின் பெருமையை ஓரளவு அறிந்து வைத்திருந்த அவன், அதைக்கழுத்தில் அணிந்து கொண்டு வேட்டையாடினால், எப்படிப்பட்ட கொடிய விலங்காலும் தன்னை

எதிர்க்கமுடியாது, தனக்கு மரணமும் உண்டாகாது என்று தப்புக்கணக்கு போட்டான். ஆனால் அதனுடைய பவித்திரத்தை (புனிதத்தன்மையை) அவன் அறியவில்லை. ஆகையால் பூசையறையில் இருந்த அம்மணியைத் தன் அண்ணனான ஸத்ராஜித்திற்கும் தெரியாமல் அதை எடுத்துச் சென்று, அதைத் தன் கழுத்தில் போட்டுக்கொண்டு, குதிரை மீதேறி வேட்டைக்காக காட்டிற்குக் கிளம்பிவிட்டான். பூசையறையில் இருந்தால் மட்டுமே அச்சியமந்தக மணி அனைத்துபலன்களையும் கொடுக்கக்கூடியது. கழுத்தில் அணிந்து கொண்டாலோ, அதனுடைய பவித்திரத்திற்கு பங்கம் ஏற்பட்டாலோ, அது தன் சக்தியை இழந்து,, தான் இருக்கும் இடத்தை விட்டு வெளியேறிவிடும் என்பதை அறியாத அந்த மூடன் மிகவும் அலட்சியமாக வேட்டையாடிக் கொண்டிருந்தான்.!

**உடல்தூய்மை கெட்டதால், சியமந்தக மணி பிரிந்து சென்றது :**

வேட்டையாடிக் கொண்டிருந்தபோது, அவனுக்கு இயற்கை உபாதை ஏற்பட்டதால், அங்கிருந்த ஒருமரத்தினடியில் தனது சிறுநீரைக்கழித்தான்.! ஆனால் உடனே தன்னைத்தூய்மைப்படுத்திக் கொள்ளநினைத்தான். ஆனால் அவனுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே தன்னைச்சுத்தி செய்துகொள்ளாமல் போனதால், அம்மணியின் புனிதத்தன்மை கெட்டுபோய்விட்டது. அதனால் அது சிறப்புச் செயல்களை இழந்துபோனது. மேலும் தோஷமும் பற்றிக்கொண்டது தூய்மையில்லா உடம்போடு மீண்டும் குதிரைமீது ஏறி அமர்ந்துகொண்டு காட்டின்

உட்பகுதிவரை வேட்டைக்காக அவன் ஊடுருவிச் சென்றுவிட்டான்.!

**சிங்கத்தால் அடித்துக் கொல்லப்பட்டான் பிரசேனன்.!**

காட்டின் உட்பகுதியில் கொடிய மிருகங்களின் நடமாட்டம் மிகுதியாக இருந்தது. ஆனாலும் அதைப்பற்றிக் கவலைப்படாத அவன், சியமந்தக மணி தன்னிடம் இருக்கும் கர்வத்தால், மிகவும் அலட்சியமாக குதிரைமீதிருந்து வேட்டையாடிக் கொண்டிருந்தான். அப்போது,, திடீரென்று ஒரு கொடிய சிங்கம் அவன்மீது பாய்ந்து, அவனைத் தாக்கிக்கொன்றது, அவனுடைய குதிரையையும் கொன்றுவிட்டது. கீழே விழுந்து கிடந்த அந்தச் சியமந்தகமணியைத் தன் வாயினால் கவ்விக் கொண்டு சற்று தூரத்தில் இருந்த தன் குகைக்குள்ளே சென்று மறைந்தது.

**சிங்கத்தைக் கொன்று சியமந்தகமணியை அடைந்தார் ஜாம்பவான்!**

ஜாம்பவான் நித்தியசூரிகளுள் ஒருவர். ஸ்ரீமந்நாராயணப் பெருமான் ஸ்ரீ ராமராக அவதாரம் எடுத்திட்ட திரேதாயுகத்திலும் வாழ்ந்தவர் இந்த ஜாம்பவான், பிரம்மதேவரின் மானச புத்திரர்களில் இவரும் ஒருவர். ஸ்ரீராமமூர்த்திக்குப் போரில் உதவி செய்வதற்காக தனது அம்சமாக ஜாம்பவானைப்படைத்து அனுப்பிவைத்தார் பிரம்மா. ஸ்ரீராமரின் அவதார காலமான பதினோராயிரம் ஆண்டுகாலம் நிறைவடைந்து, துவாபரயுகம் நடந்து கொண்டிருந்தபோது, ஸ்ரீகிருஷ்ணபகவானின் அவதாரத்திலும் வாழ்ந்துகொண்டிருந்தவர் இந்தச் சாம்பாவன். இந்த யுகத்தில்,

ஜாம்பவானுக்கு ஜாம்பவதி என்ற ஒருமகளும் இருந்தாள். அவள் இளமைப்பிராயத்தை உடையவளாக இருந்தாள்.

கொடிய சிங்கம் ஒன்று, தனது வாயில் சூரியனைப்போல் பிரகாசிக்கும் ஓர் அற்புத மணியைக் கவ்விக்கொண்டு, தனது குகைக்குள் சென்று மறைந்ததை ஜாம்பவான் கண்டார். எனவே அங்கு சென்று அந்த மணியைப் பற்றி முழுமையாகத்தெரிந்துகொள்ள விரும்பிய ஜாம்பவானை அந்தச் சிங்கம் எதிர்த்தது. வேறு வழியில்லாமல், அதனிடம் போரிட்டு, அச்சிங்கத்தைக் கொன்று, சியமந்தக மணிமாலையை தான், வாழ்ந்துகொண்டிருந்த மற்றொரு குகைக்குக் கொண்டுவந்துவிட்டார். அந்த அற்புத மணியைத் தன் விளையாட்டுப் பொருளாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தாள் ஜாம்பவான் மகளான ஜாம்பவதி.!

**ஸத்ராஜித் பரப்பிய பழிச்சொல் :**

தனது அரண்மனைக்காவலர்கள் மூலம் தனது தம்பி வேட்டையாடகாட்டிற்குச் சென்றான் என்பதையும், அவன் தன் கழுத்தில் சியமந்தகமணி மாலையை அணிந்துகொண்டு சென்றான் என்பதையும் தெரிந்து கொண்டான் ஸத்ராஜித். ஆனால் தன் தம்பி திரும்பி வராததைக்கண்டு அதிர்ச்சி அடைந்தான். சிலநாட்களாகியும் அவன் திரும்பி வராததால், அவன் சியமந்தகமணிக்காகக் கொலை சொய்யப்பட்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்தான். ஆனால் இதை யார் செய்திருப்பார்கள்.! என்று பெரிதாக ஆலோசிக்கத் தொடங்கினான். பலநாட்களுக்கு முன்னர் தன்னுடைய

அந்தமணியைத் தனக்குத் தருமாறு கிருஷ்ணன் வந்து கேட்டதையும், தான் தருவதற்கு மறுத்துவிட்டதையும் அவன் நினைத்தான். எனவே அந்த மணிக்காக வேட்டாயாடக் காட்டிற்குச் சென்றபோது, தன் தம்பியைப் பின்தொடர்ந்து சென்ற கிருஷ்ணன், தனது தம்பியைக் கொன்று விட்டு, அந்தச் சிறப்புமிக்க சியமந்தக மணியை அபகரித்துக்–கொண்டிருக்கவேண்டும் என்று முடிவு கட்டினான். அதை ஸ்ரீகிருஷ்ணரிடமும் கேட்காமல், உறுதி செய்துகொள்ளாமல், தான் நினைத்ததே சரியானது என்ற முடிவுடன் கிருஷ்ணனே அம்மணியைக்கவர்ந்துகொண்டான் என்ற வீணான பழிச்சொல்லை அவர்மீது சுமத்தினான்.! நாடு நகரம் எங்கிலும் வாழும் அனைவரிடமும் இச்செய்தி காட்டுத்தீபோல் பரவியது.

**பழிசொல்லைக்கேட்டுப் பதைபதைத்தார் பகவான் !.**

தன்னிடம் வருவோர்க்கெல்லாம் இந்த வீண்பழியை கிருஷ்ணர் மீது சுமத்திக் கொண்டிருந்தான் ஸத்ராஜித்.! கிருஷ்ணன் பாவி என்றும், மணிக்காகத் தன் தம்பியை வதைத்து விட்ட கொலைகாரன் என்றும், மணியைக் கவர்ந்து கொண்ட கள்வன் என்றும் வாய்கூசாமல் தனது பழிச்சொல்லை வேகமாகப்பரவச்செய்தான். பரப்பப்பட்ட செய்தியை, உண்மைதான் என்றும், இச்செயல்களைக் கிருஷ்ணர் செய்திருப்பார் என்றும் பலபேரும் எண்ணத்தொடங்கினார்கள். எனவே கிருஷ்ணரைப் பார்த்த அவர்களின் பார்வையானது மாறுபட்டது.! இதன் காரணத்தை அறியாமல் கிருஷ்ணரும் தன் கடமைகளைச் செய்து கொண்டிருந்தார்.

நகரம் முழுமையும் கிருஷ்ணர் மீது பரப்பப்பட்ட இந்த அபவாதமாகிய பழிச்சொல், ஒருநாள் கிருஷ்ணருக்கே தெரியவந்தது. அதைக்கேட்டு மிகவும் மனம் கலக்கமடைந்தார் அவர். ஆனால் தானே ஸத்ராஜித்திடம் சென்று, தான் சியமந்தக மணியைக் களவாடவில்லை என்றும், பிரசேனனுடைய முடிவிற்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதையும் எடுத்துக் கூறலாம் என்று நினைத்தார். ஆனால் அதைஸத்ராஜித் ஏற்றுக்கொள்வானா? சந்தேகத்தின் உச்சகட்டத்திலேதான், அவன் தன்மீது இந்தப் பழிபாவச்செயல்களைச் சுமத்தியிருக்கிறான். இந்த நிலையில் அவனிடம் சென்று தான் குற்றமற்றவன் என்று கூறினால், அவன் நம்புவானா? நிச்சயமாக நம்பமாட்டான். ஆனால் அதே நேரத்தில் இதைக் கண்டுகொள்ளாமல் விடவும் முடியாது. தன்மீது மதிப்பும் மரியாதையும் கொண்டுள்ள அனைத்துமாந்தர்களும், குடிமக்களும் பழிசொல்லை உண்மையானது என்று நினைத்து விட்டால் அது தன் கௌரவத்தைப் பாதிக்குமே! அண்டை நாட்டரசர்கள் கேட்டால், அதனால் பற்பல பின் விளைவுகள் ஏற்படுமே என்று சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தார்.

**காட்டை நோக்கிப்புறப் பட்டார் கண்ணப் பெருமாள் :**

தன்மீது சுமத்தப்பட்டுள்ள வீண்பழியைப்போக்கிக் கொள்ள நினைத்த பெருமான், தனது நம்பிக்கைக்கு உரிய சில வீரர்களையும்,, ஸத்ராஜித்தின் நம்பிக்கைக்கும் உரியவர்களாக, நியாயம் அறிந்த சில நன் மக்களையும் தன்னோடு அழைத்துக் கொண்டு, பிரசேனன் வேட்டையாடச் சென்ற காட்டிற்குக் கிளம்பினார். ஏனென்றால், அங்கு சென்று

தேடினால், பிரசேனனும், மணியும் காணாமல் போனதற்குரிய தடயங்கள் ஏதேனும் கிடைக்கலாம் என்று நினைத்து, தனது திட்டத்தையும் அவர்களுக்குச் சொல்லி, அழைத்துச் சென்றார். சிலநாட்கள் அங்குமிங்கும் அலைந்து, ஒருநாள் பிரசேனன் வேட்டையாடிய அப்பகுதிக்கு அனைவரும் வந்தனர்.

**தடையம் கிடைத்தது ! மணி எங்கே போனது?**

அப்பகுதியில் சிங்கம் நடமாடியதற்கான கால்சுவடுகள்ா தெரிந்தன!. சற்று தூரத்தில் பிரசேனன் வேட்டைக்குப் பயன்படுத்திய குதிரை தாக்கப்பட்டு உருக்குலைந்து இறந்து கிடந்தது. மிகுதியான ரத்தக்கறைகள் நிலத்தில் ஆங்காங்கே காணப்பட்டன. இவற்றை எல்லாம் பார்த்தவர்கள், வேட்டையின் போது பிரசேனனும், குதிரையும் சிங்கத்தாலே தாக்கப்பட்டுதான் உயிர் இழந்து போனார்கள் என்பது உறுதியாகத்தெரிந்தது.! ஆனால் சியமந்தக மணி எங்கே ? ஒருவேளை தாக்குதலை நடத்திய சிங்கமே அதன் ஒளிப்பிராகத்தைக் கண்டு எடுத்துச் சென்றிருக்கலாம்! எனவே அருகில் ஏதேனும் மலைக்குகை இருந்தால், அங்கே சிங்கத்தையும், மணியையும் காணலாம். அல்லது ஏதேனும் தடயங்கள் கிடைக்கலாம் என்று நினைத்து மணியைத்தேடிச் சென்றார்கள்.

**சிங்கத்தின் குகையில் சிங்கமும் இறந்து கிடந்தது!**

மணியைத்தேடிக்கொண்டு சென்ற கிருஷ்ணரும், அவருடன் வந்தவர்களும், சிங்கத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்றார்கள்.! அந்தச்சுவடுகள் ஒரு

மலைக்குகையில் சென்று முடிவடைந்தது. எனவே கிருஷ்ணரும் அவரோடு வந்தவர்களும் அக்குகைக்குள் நுழைந்து தேடிப்பார்த்தார்கள்.! சற்று நேரத்திற்குப் பிறது, அங்கே ஒரு சிங்கமும் கொல்லப்பட்டு, வீழ்ந்து கிடப்பதைப்பார்த்தார்கள்.! எனவே அதுதான் பிரசேனனையும், குதிரையையும் கொன்று, மணியைக் கவர்ந்து வந்த சிங்கம் என்பது ஊர்ஜிதமாயிற்று! ஆனால் மணி எங்கே ? அக்குகைக்குள் எங்கு தேடியும் அது இல்லாததால், யாரோ வேறொருவர் அக்குகைக்குள்ளே நுழைந்து, சிங்கத்தைக் கொன்று, சியமந்தக மணியையும் கவர்ந்து சென்றிருக்கவேண்டும் என்று முடிவு செய்தனர்.

**பாதிப்பழி தீர்ந்தது! மீதிப்பழி எப்படி?**

ஸத்ராஜித்தின் தம்பியான பிரசேனன் ஸ்ரீகிருஷ்ணரால் கொல்லப்படவில்லை என்பதும், அவனைக் கொன்றது ஒரு சிங்கம்தான் என்பதும் அனைவருக்கும் ஊர்ஜிதமானது. எனவே கிருஷ்ணர் பிரசேனனைக்கொன்று, அபூர்வமணியைத் தனதாக்கிக் கொண்டார் என்று ஸத்ராஜித் போட்டிருந்த பழியில் பாதிப்பழி நீங்கி விட்டது. எனினும் மிகச்சிறப்புமிக்கதான சியமந்தக மணியையும் அவர் களவாடவில்லை என்பது தெரியவந்தால்தான், தன்மீது சுமத்தப்பட்ட அபாண்டமான வீண் பழி அகலும் என்று பரமாத்மா நினைத்தார். எனவே தன்னுடைய வீரர்களோடும், ஸத்ராஜித்தின் நம்பிக்கைக்கு உரிய குடிமக்களோடும், அம்மாசிலாமணியை அடையத் தேடிப் புறப்பட்டார்.!

**இருண்ட குகையில் ஒளிர்ந்தது என்ன?**

பல இடங்களிலும் அலைந்து திரிந்தவர்கள், அடுத்ததாக வேறொரு பெரும் மலைக்குகையைக் கண்டார்கள். இருள்மயமான அக்குகையினுல் இருந்து மிகப்பெரிய ஒளி வீசிக்கொண்டிருந்தது.! இது எவ்வாறு சாத்தியம்? குகை என்றால் இருட்டாகத்தானே முழுதும் இருக்கவேண்டும். ஆனால் ஒருபகுதியிலிருந்து பேரொளி வருவதால், அது சியமந்தக மணியின் ஒளியாகத்தான் இருக்கவேண்டும் என்று மற்றவர்களுக்கு கிருஷ்ணர் எடுத்துரைத்தார். ஆம்! அதுதான் உண்மை என்றுணர்ந்தனர் அனைவரும். எனவே தன்னுடன் வந்தவர்களைக் குகைவாயிலிலேயே காத்திருக்குமாறும், தான் மட்டும் தனியே சென்று, அங்கு யார் இருந்தாலும் அவர்களிடமிருந்து மணியைக் கைப்பற்றி எடுத்து வருவதாகவும் கூறிவிட்டு உள்ளே நுழைந்தார் பெருமான்.!

**துவாரகை திரும்பியவர்களால் ஏற்பட்ட திருப்பம் :**

கிருஷ்ணர் சொன்ன ஆலோசனைகளை ஏற்ற அவருடன் வந்தவர்கள் குகை வாயிலில் காத்துக் கொண்டிருந்தனர். கிருஷ்ணர் குகையினுள் நுழைந்து பன்னிரண்டு நாட்கள் ஆகிவிட்டன. ஒரு நிலவரமும் தெரியவில்லை. வெளியில் இருந்தவர்களுக்கு ஏற்ற உணவும், குடிக்க நீரும் கிடைக்காமல் போனது, இத்துன்பத்தை அவர்களால் பன்னிரண்டு நாட்களுக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. எனவே அனைவரும் துவாரகைக்கு திரும்பி அவருடைய உறவினர்களுக்கும், நகர மக்களுக்கும் தாங்கள் அறிந்த உண்மைகளைக் கூறிவிடவேண்டும் என்று முடிவுகட்டினர்.

**காக்கும் கடவுளையே காப்பாற்ற வேண்டினர் :**

எனவே துவாரகைக்குத் திரும்பிய அவர்களும், ஸத்ராஜித்தின் ஆட்குளும் பகவான் கிருஷ்ணர் நிரபராதி! அவருக்குத் தற்போது ஏற்பட்ட துன்பங்களுக்கெல்லாம் ஸத்ராஜித்தே காரணம் என்று தங்கள் தங்கள் தலைநகரங்களில் அனைவருக்கும் விளக்கிக்கூறினார்கள். எனவே தங்கள் அரசன்மீது அநியாயமாகப் பழிபோட்ட அந்த ஸத்ராஜித்தை அனைவரும் தூற்றினார்கள். அவன் அகந்தை கொண்டவன் என்றும், முன்பின் ஆராயாமல் பழிபோடுவதில் கைதேர்ந்த சதிகாரன் என்றும் அவன் காதிலே விழுமாறு ஏசிபேசி, இழிவார்த்தைகளைக் கூறினார்கள், மேலும் அனைத்துக் குடிமக்களும் பலராமன், சாத்தகி போன்றவர்களும், அங்கிருந்த அம்மன் கோயிலுக்குச் சென்று பகாவன் கிருஷ்ணர் எவ்வித ஆபத்திலும் சிக்காமல், பத்திரமாக வந்து சேரவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார்கள். அகில அண்டத்தையே காத்துரட்சிக்கும் பெருமானையே காத்தருள் செய்யவேண்டும் என்று அம்மனிடம் வரம் கேட்ட அவர்களின் கோரிக்கை அறியாமையா? அன்பின் வெளிப்பாடா?

**இருபத்தெட்டு நாட்கள் நடந்த இடைவிடாதபோர் :**

இஃது இவ்வாறு இருக்க, குகையினுள் நுழைந்த கிருஷ்ணர் மெதுமெதுவாக அதன் உட்புறத்தை அணுகினார். அங்கு தான் தேடிக்கொண்டு வந்த சியமந்தகமணி ஒரு தொட்டிலிலே கட்டி, தொங்கவிடப் பட்டிருப்பதைக் கண்டார். யாரும் அங்கே இல்லாததால், அதை எடுக்க முயற்சி செய்தபோது, அங்கிருந்த பணிப்பெண் (தாதி) ஒருத்தி ஒரு புதியவரைத் திடீரென்று பார்த்ததால் அலறினாள். அந்த அலறல் ஓசையைக்கேட்ட ஜாம்பவான் உடனே வெளியே வந்து பார்த்தபோது, தன் மகளின் அருகே ஒரு புதிய மனிதன்

நிற்பதைப்பார்தத்து, கோபம் கொண்டு, அவர்யார்? எதன் பொருட்டு அங்கே வந்தார்? எனபதை எல்லாம் கேட்காமலேயே, அவருடன் மோதத் தொடங்கினார். அத் தாக்குதலைச் சமாளிக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்ட பகவான் கிருஷ்னரும் எதிர்த்துப்போரிட்டார்.!

**ஜாம்பவான் கொண்ட சந்தேகம் :**

முதலில் இருவரும் ஒருவரை ஒருவர் தங்களது கைகளால் தாக்கிக் கொண்டார்கள். அதன்பிறகு, அக்குகைக்குள்ளே இருந்த கற்களையே ஆயுதங்களாகத்தாக்கிக் கொண்டார்கள். இருவருக்கும் இடையே நடந்த அந்த யுத்தமானது இருபத்தெட்டு நாட்கள் நடைபெற்றது. அந்த நிலையில் ஜாம்பவான் மிகவும் களைத்துப்போனார். அவரால் மேற்கொண்டும் போர்செய்யமுடியாமல்போகுமோ? என்ற பயம் வந்தது. அதே நேரத்தில், மிகவும் பலசாலியான தன்னோடு, சரிக்குச்சமமாகப்போரிட்டுக் கொண்டு சலிப்பும் சோர்வும் அடையாமல் உள்ள இந்த மனிதன் ஒரு சாதாரண மனிதனாக இருக்கமுடியாது. இவர் மிகவும் சக்தியும் வல்லமையும் பெற்ற ஒரு பரபிரம்மத்தின் சொரூபமாகத்தான் இருக்கவேம்டும் என்று முடிவெடுத்தார். உணர்ச்சிபூர்வமாக முடிவெடுத்துச் சண்டையிட்ட ஜாம்பவானுக்கு இப்போது தான் அறிவு வேலைசெய்யத் தொடங்கியது.!

ஒருவேளை ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் அவதாரமாகக் கூட இவர் இருக்கலாம். அவருடன் அறியாமல் யுத்தம் செய்தோமே என்று தன் மடமையை எண்ணி வருந்தியவர், தடாலென்று புதியவரின் திருவடியில் வீழ்ந்து மன்னிப்புக்கோரினார்.! உடனே அவரைத்தடவிக் கொடுத்த

பகவான் கிருஷ்ணர் தானே பரப்பிரம்மமான பரம்பொருள் வாசுதேவகிருஷ்ணர் என்றும், சியமந்தக மணியால் தனக்கு ஏற்பட்ட பழிச்சொல்லையும் எடுத்துரைத்து, அதைப்பெறு வதற்காகவும், தன்மீது ஏற்பட்டப் பெரும்பழியைப் போக்கிக்கொள்வதற்காகவுமே தான் வந்ததையும் எடுத்துரைத்தார்.

**மணியோடு மகளையும் கொடுத்தார் ஜாம்பவான்?**

ஜாம்பவான் மலைப்பிலும், மகிழ்ச்சியிலும் திளைத்தார். பரப்பிரம்மத்தை எதிர்த்துப்போரிட்ட தனது அறிவற்ற செயலுக்காக மீண்டும் மீண்டும் மன்னிப்புக்கோரினார். பகவான் தனது அன்பான சொற்களால் அவருக்கு ஆறுதல் கூறினார். தான் விரைவாக துவாரகை செல்லவேண்டியதின் அவசியத்தையும் கூறினார். உடனே ஜாம்பவான்.! தாங்கள் இந்த மணியை எடுத்துச்செல்வதோடு எனது மகளான ஜாம்பவதியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கெஞ்சினார்.

**பழியைப் போக்கிக் கொண்ட பகவான்.!**

தன்மீது ஸத்ராஜித்தால் வீணாகப்பழிசுமத்தப்பட்டதைப் போக்கிக் கொள்ள நினைத்த பகவான், அப்பழியிலிருந்து விடுபட வேண்டிய முயற்சிகளைச் செய்து அதில் வெற்றியும் பெற்றவராக வீடு திரும்பினார். துவாரகைக்கு, கிருஷ்ணர் வருகிறார் என்ற செய்தியானது நாடெங்கும் பரவியது. கிருஷ்ணரின் உறவினர்களும், ஊர்மக்களும் மகிழ்ச் சிக்கடலில் திளைத்தவர்களாக பகவானை வரவேற்றனர். கிருஷ்ணர் நேராகத் தன் பாட்டனாரானரும், அரசருமாகிய

உக்கிரசேனரிடம் சென்றார். அங்கு ஸத்ராஜித்தும் அழைத்துவரச் செய்யப்பட்டான். அரசனின் முன்னிலையில், தன்னோடு தேடுதல் முயற்சியில் ஈடுபட்டவர்களின் ஆதாரப் பேச்சுகளோடும் தன் மீது வீண்பழி சுமத்தி விளையாடிய ஸத்ராஜித்தின் பழிச்சொற்களை முறியடித்து தான் நிரபராதி என்பதை நிரூபணம் செய்தார் அந்த எல்லாம் வல்ல எம்பெருமான்! ஆராயாத மன்னன் ஸத்ராஜித்தும் தனது செயலுக்காக வருந்தி மன்னிப்புக்கேட்டான். அனைவர் முன்னிலையிலும் சியமந்தக மணி ஸத்ராஜித்திடம் ஒப்படைக்கப்பட்டது. பழியைத் துடைத்தெறிந்தார் பகவான். கிருஷ்ணர்.

**பிராயச்சித்தம் செய்தான் ஸத்ராஜித்.!!**

இதற்கிடையில் ஜாம்பவானின் வேண்டுகோள்படி, அவர் மகளான ஜாம்பவதியையும் மணம்முடித்துக் கொண்டார் கிருஷ்ணர். தனது சியமந்தக மணியை அரசர் உள்ளிட்ட அனைவர் முன்னிலையிலும் பெற்றுக்கொண்ட ஸத்ராஜித், தனது செயலுக்காக மிகவும் வெட்கப்பட்டான். தனது யாதவ குலத்தைச் சேர்ந்தவரும், அனைவராலும் பகவான் என்றும், பெருமான் என்றும் போற்றப்படுபவரான கிருஷ்ணர்மேல், தான் ஆராயாமல், அபூர்வமான சியமந்தக மணியைத்திருடிய கள்வன் என்றும், தனது தம்பியைக் கொலை செய்த குற்றவாளி என்றும் பழிசுமத்தியதை எண்ணியெண்ணி மனவருத்தம் கொண்டான் ஸத்ராஜித். கிருஷ்ணர் எந்த குற்றமும் அற்றவர் என்பதையும், தன் அவசர புத்தியாலும், அகங்காரத்தினாலும் அவர்மீது சுமத்திய பழிகளை நினைத்து நினைத்து ஆணவம் அழிந்து நின்றான். எத்தனை அரிய

முயற்சிகளை மேற்கொண்டு, தான் குற்றமற்றவன் என்பதையும், பழிபாவங்லுலுக்கு அஞ்சும் பண்பாளன் என்பதையும் நிரூபித்துக்காட்டினார் கிருஷ்ணர் என்பதையும் உணர்ந்தான் அவன். தன்னால் சுமத்தப்பட்ட குற்றங்கலிலிருந்து அவர் விடுபட்டுவிட்டாலும், தன்னால் பலதுன்பங்களுக்கு ஆளான, அவருக்கு ஏதேனும் பிராயச்சித்தம் செய்யவேண்டும் என்றும் இடையறாது எண்ணினான். எனவே தன்னுடைய ஒரே மகளாக விளங்கும் சத்தியபாமை என்ற நங்கை நல்லாளைக் கிருஷ்ணருக்குத் திருமணம் செய்து கொடுத்து, தனக்கு அன்பளிப்பாக சூர்யதேவன் கொடுத்த அந்தச் சியமந்தக மணியையும் சீர்ப்பொருளாகச் சேர்க்கவேண்டும் என்றும் முடிவு செய்தான்.. விந்தைகள் புரியும் சியமந்த மணியோடு, தன் அன்பு மகளான சத்தியபாமாவையும் பலரும் அறிய பரந்தாமனிடம் ஒப்படைத்தார்.! வேறு வழியின்றி அவளை ஏற்றுக்கொண்டார் பரப்பிரம்ம கிருஷ்ணன்.

**ஸ்ரீ கிருஷ்ணர் சத்யபாமை திருமணமும், சியமந்தக மணியை மீண்டும் ஒப்படைத்தலும்.!**

மனம் மாறிய நிலையில், ஸத்ராஜித் தனக்கு அளித்த மங்கை நல்லாளை பகவான் கிருஷ்ணர் ஏற்றுக்கொண்டார். பலராமன் போன்றோர்களும் மனம் மகிழ, அனைத்து நன்மக்களின் ஆசி மொழிகளோடு சத்யபாமைக்கு, ஸ்ரீகிருஷ்ணருக்கும் ஒரு நல்ல நாளில் திருமணம் நடைபெற்று முடிந்தது. அப்போது, பெருமான், ஸத்ராஜித்திடம் சியமந்தக மணியைக் கொடுத்து இது உமக்குச் சூர்யதேவனால் கொடுக்கப்பட் வரப்பிரசாதம் ஆகும். எனவே இதை நீங்களே

வைத்துக்கொண்டிருங்கள்.! உங்களிடத்திலே இருந்தாலும், இதன் பயன்கள் எல்லாம் எனக்குக்கிடைக்கும். என்று கூறி, சிறப்பிற்குரிய சியமந்தக மணியை ஸத்ராஜித்திடமே ஒப்படைத்துவிட்டார். ஸத்ராஜித் அரசனுக்கு ஆண்வாரிசுகள் வேறு யாரும் இல்லையாதலால், அம்மணி எங்கிருந்தாலும், அதன் பயன் சத்தியபாமைக்கு உரியது ஆகையாலும், அதனால் அது தனக்கு உரியதாகும் என்பதாலும் பகவான் கிருஷ்ணர் இவ்வாறு கூறினார். எனவே சிமயமந்தக மணியால், ஸ்ரீகிருஷ்ணருக்கு,, ஜாம்பவதியும், சத்யபாமையும் மனைவியர்களாக அமைந்தார்கள். இதனால், திருமணவாழ்வின் வைபவமும் சிலநாட்கள் சுபமாகக்கழிந்தது.!

**அரக்கு மாளிகையில் ஐவரும் மாண்டனரோ?**

தங்களது சகோதரர்கள் இருந்தும், பாண்டுபுத்திரர்களின் மீது பெரும்பகைமை உணர்வும், பொறாமையும் கொண்டிருந்தான் திருதராஷ்டிரன் மகனான துரியோதனன். எனவே அவர்களை அழித்துவிடவேண்டும் என்று நினைத்து, வாராணாவதம் என்ற நகரத்தில், புரோசனன் என்பவனைக்கொண்டு, எளிதில் தீப்பற்றி எரியக்கூடிய வகையிலான ஒரு அரக்குமாளிகையினை உருவாக்கினான் துரோயதனன். தங்களின் சிற்றன்னையான குந்திதேவியையும், பாண்டவர்கள் ஐந்து பேரையும் நயமாகப்பேசி, அவர்களைப் பத்து நாட்களுக்கு வாரணாவதத்தில் தங்கி ஓய்வெடுத்துக்கொள்ளுமாறு வஞ்சகமொழிகள் பேசி, அனுப்பி வைத்தான் துரியோதனன், ஆனால், பாண்டவர்களோ, விதுரர் அனுப்பிய ஆளின் மூலமாக துரியோதனனின் சூழ்ச்சிக்கு பலியாகாதவாறு

தப்பித்துக் கொண்டார்கள். எனினும் பாண்டவர்கள் மீண்டும் அஸ்தினாபுரத்திற்குச் செல்லாமல், மாற்று வடிவங்களில் தேசாந்திரம் செய்தார்கள். ஆகையால் பாண்டவர்கள் ஐந்துபேரும் அரக்குமாளிகையில் எரிந்தழிந்து போனார்கள் என்று எல்லோரும் நம்பினார்கள். எனவே மக்கள் அச்செய்தி அறிந்து துடித்துப் புலம்ப, பலநாட்டு அரசர்கள் திருதராஷ்டிரனைச் சந்தித்து, பாண்டவர்களின் அகாலமரணத்திற்கு ஆறுதல் கூறி சென்று கொண்டிருந்தார்கள்.

**உலக நடைமுறையைக் கருதி ஒப்புக்குச் சென்றார் கிருஷ்ணர் :**

தன் அத்தையான குந்திதேவியும், அவளது புதல்வர்களும் அரக்குமாளிகையில் இருந்து. தப்பித்துக் கொண்டனர் என்பதைப் பரம்பொருளின் அவதாரமான கிருஷ்ணர் தனது ஞானக்கண் கொண்டு அறிந்து கொண்டார். இருப்பினும் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், தான் பலராமரை மட்டும் அழைத்துக்கொண்டு, ஆறுதல் மொழிகூறி வருவதற்காக அஸ்தினாபுரம் சென்று விட்டார்.! அங்கேயே சில நாட்கள் தங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

**கூட்டுச்சதி செய்தனர் மூவர், கொல்லப்பட்டான் ஸத்ராஜித்!**

பகவான் கிருஷ்ணரின் பரத்துவத்தை நன்கு அறிந்தவர் அக்ரூரர். அவரைத் தெய்வமாகக்கண்டு சிந்தை குளிர்ந்தவர்.! கிருதவர்மா என்பவரும் ஶ்ரீகிருஷ்ணருக்கு நெருங்கிய நண்பராக விளங்கியவர். மேலும் சததன்வா என்ற ஒரு யாதவர் குலத் தலைவனும் துவாரகையில் இருந்தான். இவன்

ஸத்ராஜித் மகளான சத்யபாமையின் மீது ஒருதலைக்காதல் கொண்டிருந்தான். அவளைத்திருமணம் செய்து கொள்ளவும் தீர்மானித்திருந்தான் ஆனால் அவன் ஆசையில் மண் விழுந்தது.! யாரும் எதிர்பாராதவாறு சத்யபாமை, ஸ்ரீகிருஷ்ணர் திருமணம் திடீரென்று நடைபெற்று முடிந்தது. எனவே கோபக்கனலோடு, பொறாமைத் தீயில் தவித்துக்கொண்டிருந்த அவனை அக்ருரரும், கிருதவர்மமரும் தூண்டிவிட்டார்கள். அறிஞரும் ஆண்டவனின் திருவுருவே கிருஷ்ணரை என்பதை அறிந்திருந்த அக்ரூரருக்கு பொருளாசை திடீரென்று பிடித்துக்கொண்டது. எனவே ஸத்ராஜித்திடம் இருக்கின்ற சியமந்தக மணியை அடைய அக்ரூரர் ஓர் அருமையான திட்டம் தீட்டினார். பொருளாசை என்னும் பித்து, யாரை, எந்தநேரத்தில் பிடித்து ஆட்டுவிக்கும் என்பதையாராலும் நிர்மானிக்கமுடியாதல்லவா? இதற்கு அக்ரூரரும் அடிபணிந்து போனார். தன்னிடம் வந்து ஆலோசனைகள் கேட்ட சததன்வாவிற்கு இருவரும்சேர்ந்து தூபம் போட்டார்கள்.! ஸத்ராஜித் மாளிகைக்குச் சென்று, அவன் உறங்கிக் கொண்டிருக்கும்போது, அவனைக்கொன்றுவிட்டு, சியமந்தக மணியைக் கவர்ந்துகொண்டு வந்துவிடுமாறு துர் ஆலோசனைக் கூறினார்கள். கிருஷ்ணரும் பலராமரும் துவாரகையில் இல்லாத இந்தத்தருணமே சிறந்தது என்றும் அவசரப்படுத்தினார்கள். அவர்கள் திட்டத்திற்கு ஆளாகிப்போன சததன்வா தூங்கிக்கொண்டிருந்த ஸத்ராஜித்தைக் கொன்று விட்டு, சியமந்தகமணியைத் திருடிச்சென்றான்.!

**துடித்துப் புலம்பினாள் சத்யபாமா! துவாரகை சென்று முறையிட்டாள்..!!**

தனது தந்தை கொல்லப்பட்டதை அறிந்தவளான சத்யபாமை துடிதுடித்தாள். தந்தையை இப்படி

கொடூரமாகக்கொன்றவன் யாரென்று தெரியாமல் தவித்தாள். வீரம் நிறைந்தபெண்ணாகிய அவள் தனது தந்தையை உடனடியாக அடக்கம் செய்துவிடாமல், அதைப் பாதுகாக்கும் பொருட்டு தைலம் நிறைந்த கொப்பரையில் கிடத்தி, பாதுகாக்குமாறு கூறிவிட்டு, துவாரகையை நோக்கிச் சென்றாள்.! அவளது திடீர் வருகையால் துணுக்குற்ற ஸ்ரீ கிருஷ்ணர், செய்தியை அறிந்தவுடன் கொதித்து எழுந்தார். தனது மாமனாரைக் கொன்றவன் யாராக இருநாதுலம், அவனைக்கொன்று ஒழிப்பேன் என்று சத்யபாமைக்கு உறுதிகூறினார். தனது தமையனாராகிய பலராமரையும் உடன் அழைத்துக்கொண்டு, வேகமாக விரைந்தார் துவாரகைக்கு.!

**சததன்வாவின் கலக்கமும், கூட்டாளிகள் புறக்கணிப்பும் :-**

ஸ்ரீகிருஷ்ணர் துவாரகைக்குத் திரும்பி விட்டார் என்பது அறிந்த சததன்வாவின் உடல்வியர்த்து உள்ளம் பதைபதைத்தது. ஏதோ ஒருவேகத்திலும், அக்ருரரும், கிருதவர்மரும் கொடுத்த துர்ப்போதனையாலும் ஸத்ராஜித்தைக்கொன்று விட்டு அவனுடைய சியமந்தக மணியையும் அபகரித்துக் கொண்டோமே.! உண்மை தெரிந்தால் கிருஷ்ணர் நம்மை நிச்சயம் அழித்துவிடுவானே! என்னசெய்வது என்று பதைபதைத்தான். கிருதவர்மரிடம் சென்று, கிருஷ்ணரிடமிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினான். ஆனால் அவரோ, முட்டாளே ! நான் ஏதோ விளையாட்டிற்காகக் கூறியதை உண்மையென்று நம்பி, கொலையும் கொள்ளையும் செய்த உன்னைக் கிருஷ்ணரிடமிருந்து யாரும் காப்பாற்றமுடியாது.! கொடுங்கோலனாகிய கம்சனையும், அவன் குலத்தையும்

வேரோடு அழித்த சர்வ வல்லமை படைத்த அவரிடமிருந்து, உன்னை நான் மட்டுமல்ல வேறு யாராலும் காப்பாற்றமுடியாது.! என்று நையாண்டி செய்து துரத்திவிட்டான் கிருதவர்மா!

**அக்ரூரர் செய்த அநியாயம் :**

கிருதவர்மாவினால் கைவிடப்பட்ட சததன்மா நேராக அக்ரூரரிடம் சென்றான். வேர்த்து விறுவிறுத்து தன்னைக்காணவந்த அவனைப் பார்த்து," நீ உயிர்மேல் கொண்ட ஆசை எனக்கு நன்றாகப் புரிகின்றது. நீ செய்தது பெரும் தவறு. கண்டிப்பாக, கிருஷ்ணர் உண்மையைத் தெரிந்து கொள்வதோடு உனது உயிரையும் பறித்து விடுவார். இது உறுதி. உனக்காக நான் அவரை எதிர்க்கமுடியாது. வேண்டுமானால் நீ திருடிவந்த சியமந்தக மணியை என்னிடம் கொடுத்து விடு. எங்கேனும் ஓடிச்சென்று பிழைத்துக்கொள்.! நான் கிருஷ்ணரைக் கண்டு அவரிடம் மணியை ஒப்படைத்துவிட்டு, ஏதேனும் கூறி அவரைச் சமாளித்துக்கொள்கிறேன்.!" இந்த மணிக்காகத்தான் சததன்வன் ஸத்ராஜித்தை ஆராயாமல் கொன்று விட்டான். எனவே தாங்கள் பெரிய மனது வைத்து சததன்வாவை மன்னித்து விடுங்கள் என்று வேண்டினால் அவர் நிச்சயம் உன்னை மன்னித்து விடுவார்." என்று போலியான உறுதிமொழியைக் கொடுத்தார் அக்ரூரர். அதை உண்மை என்று நம்பிய அந்த மூடன் உடனே அச்சியமந்தக மணியைக் கொடுத்து விட்டு, உயிர்பிழைக்க விரும்பி, ஒரு குதிரையின் மீது ஏறிக்கொண்டுபறந்துபோனான்.

**சததன்வாவை வதைத்தார் கிருஷ்ணர்.!**

இதற்குள் துவாரகைக்குள் நுழைந்திட்டார்கள் கிருஷ்ணபலராமர்கள். அப்போது சததன்வா அவனுடைய குதிரையின்மீது புயல்வேகமாய்ப் போய்க்கொண்டிருப்பதை

அவர்கள் பார்த்துவிட்டார்கள். எனவே ஸத்ராஜித்தைக் கொன்றவன் அவன்தான் என்றும், தன்னிடமிருந்து தப்பிக்கவே அவன் எங்கோ சென்று கொண்டிருக்கிறான் என்றும், பகவான் முடிவெடுத்தார். ஆகையால் பலராமருக்கும் அவன் செல்வதைக்காண்பித்து விட்டு, அவனை வேகமாகப் பின்தொடர்ந்து சென்றார் கிருஷ்ணர். பலராமரும் பின்தொடர்ந்து சென்று கொண்டேயிருந்தார். சததன்வாவின் குதிரை மிதிலைநகரம் வரையில் வேகமாய் ஓடியது. அதற்குமேல் அதனால் ஓடமுடியாமல்போனதால், அது சோர்வடைந்து கீழே விழுந்து விட்டது.

எனினும், உயிர்மேல்கொண்ட ஆசையின் காரணமாக, சததன்வா நிற்காமல் மிக வேகமாக ஓடத்தொடங்கினான். கிருஷ்ணரும் விடாமல் துரத்திக்கொண்டு சென்றார். அவனால் அதற்குமேலும் ஓடமுடியவில்லை.! தன் நேரத்தை அதற்குமேலும் வீணடிக்கவேண்டாம் என்று நினைத்த கிருஷ்ணர், தனது சுதர்சனச் சக்கரத்தை அவன்மேல் ஏவினார். அது விரைந்து சென்று, அக்கொடியவனுடைய தலையைக் கொய்தது. தரையின் மேல்விழுந்த அவனது உடல் துடிதுடித்தது. அப்போது அங்கு சென்ற கிருஷ்ணர் அவனிடம் சியமந்தக மணியைத்தேடினார். ஆனால் அது அவனிடம் இல்லை. அதற்குள் பலராமரும் அங்கு வந்து சேர்ந்தார்.

**சியமந்தக மணியை மீண்டும் காணோம்!**

சததன்வா ஸத்ராஜித்தை கொலைசெய்து விட்டு, சியமந்தக மணியையும் அபகரித்துச் சென்றான் என்பதைக் கிருஷ்ணர் அறிந்தார். ஆனால் அது அவனிடம் இல்லையே! அப்படியானால் அது எங்கே? அதை அபகரித்தவர்யார்? என்ற சிந்தனையில் மூழ்கினார் பகவான்.! ஆனால் ஒருவேளை,

சியமந்தகமணியைக் கைப்பற்றிக்கொண்டு, தன்னிடம் கிடைக்கவில்லை என்று, கண்ணன் மறைக்கின்றானோ என்ற சந்தேகமும் பலராமருக்கு ஏற்பட்டது. ஆனாலும் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. தாங்கள் விரைவாக துவாரகை சென்று சததன்வா வதைக்கப்பட்டதைச் சத்தியமாமைக்குத் தெரிவித்து, அவளைச் சமாதானம் செய்து, ஸத்ராஜித்திற்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்கலைச் செய்யவேண்டும் என்பதை பலராமருக்கும் நினைவூட்டினார். கிருஷ்ணர்.

**மிதிலைக்குச் சென்று வருகிறேன்.!- புறப்பட்டார் பலராமர்.!**

கிருஷ்ணர் கூறியதை ஆமோதித்த பலராமர், கிருஷ்ணருக்கு துவாரகை செல்ல அனுமதி அளித்தார். தாங்கள் மிதிலை வரையிலே வந்து விட்டதால், அந்த நாட்டின் அரசனாகிய ஜனகன் மிகவும் வேண்டியவர் என்றும், தன்னுடைய நண்பர் என்றும் கூறி, தான் அங்கு சென்று சிலநாட்கள் கழித்தபின், துவாரகைக்கு வருவதாகவும் கூறிவிட்டார். எதிர்வரப்போகும் பாரதப்போருக்கு, அவ்வரசனும் தங்களோடு இணைந்துகொள்ள ஒரு வாய்ப்பை இப்பயணம் ஏற்படுத்தும் என்று சிந்தித்த கிருஷ்ணர், மறுப்பு ஏதும் கூறாமல், தான் மட்டும் துவாரகைக்குத் திரும்பினார்.!

**பலராமரின் சீடனானான் துரியோதனன் :**

துவாரகைக்குத் திரும்பிய ஸ்ரீகிருஷ்மர், சததன்மாவின் இறப்பைப்பற்றி எடுத்துரைத்து, ஸத்ராஜித்திற்கு ஈமக்கடன்களைச் செய்து முடித்தார். சத்யபாமை சிறிது ஆறுதல் அடைந்தாள்.! இந்நிலையில், தனது மிதிலாவிற்கு பலராமர் வருகிறார் என்பதை அறிந்த அரசன், அவருக்குச்

சிறப்பான முறையில் வரவேற்புக் கொடுத்தான். பலராமரைக் கட்டித்தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டு, தனது விருந்தினர் மாளிகையில் தங்கவைத்து சிறப்பானமுறையில் உபசாரங்கள் செய்து கொண்டிருந்தார்.

### சியமந்தக மணியால் திரும்பவும் பழி விழுந்தது.!

பலராம கிருஷ்ணர்கள் துவாரகைத்திரும்பியபோது, சததன்வாவைக் கொன்றபோது, அவனிடமிருந்த சியமந்தக மணியையும் பறித்துக்கொண்டார் கிருஷ்ணர் என்றும், ஆனால் எதற்காகவோ அதைத்தன் அண்ணனிடம் கூட மறைத்துவிட்டார் என்றும் ஒரு வதந்தி வேகமாகப்பரவியது. எனவேதான் தம்பியின் மீது கோபித்துக் கொண்டபலராமர், மிதிலைக்குச் சென்றுவிட்டார். இதற்குக் காரணம் சியமந்தக மணிதான் என்றும் புரளி பரப்பபட்டது. அஸ்தினாபுரத்து அரசிளங்குமரன் துரியோதனன் இதை அறிந்து மிகவும் சந்தோஷம் அடைந்தான். பலராமர் சிறந்த கதாயுதப்போர் வல்லுநர். அவரிடம் தான் கதாயுதப்பயிற்சி எடுத்துக்கொண்டால் வீமனுக்கு இணையாகத்தானும் கதாயுத வீரனாகலாம் என்று நினைத்து, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரைந்து மிதிலைக்குச் சென்றான். அங்கு பலராமரைப்பார்த்து, மிகவும் பவ்வியமாகவும், இனிய மொழிகளைப்பேசியும் அவன் பலராமர் மனத்தைக் கவர்ந்தான். ஆனால், பாண்டவர்களையும், தங்களது அத்தையான குந்தியையும் அரக்குமாளிகையில் தங்கவைத்து, அதைக் கொளுத்திய கொடூரச்செயல் செய்தவன் துரியோதனன் என்பதும் பலராமருக்குத் தெரியாது! கௌரவர்கள் ஆததாயிகள் (பஞ்சமாபாதகம் செய்தவர்கன்) என்பதை அறியாத பலராமர், துரியோதனனை

மிகவும் நல்லவன் என்றும், இனிய சுபாவங்களை உடையவன் என்றும் நம்பிவிட்டார். எனவே அவனுக்கு கதாயுதப்பயிற்சி அளிக்க மகிழ்ச்சியோடு சம்மதித்தார். அச்சந்தர்ப்பத்தை நன்முறையில் பயன்படுத்திக் கொண்ட துரியோதனன், கதாயுதத்தில் கைதேர்ந்தவன் ஆனான்.!

**மீண்டும் பழிக்கு ஆளானார் பகவான்கிருஷ்ணர்..!**

ஸத்ராஜித்திற்கு ஈமக்கிரியைகள் எல்லாம் செய்து முடிக்கப்பட்டதால், சிலநாட்களில் மனம்தேறினாள் சத்தியபாமை! தற்போது மீண்டும் சியமந்தகமணியைத் தானே கவர்ந்து வைத்துக்கொண்டும், அது தன்னிடம் இல்லை என்று அண்ணனிடமும் நாடகமாடிவிட்டார் கிருஷ்ணன் என்றும் பழிச்சொல்லானது எங்கும் பரவியது. உண்மையில் பார்க்கப்போனால், ஆண்வாரிசு இல்லாத ஸத்ராஜித்திற்கு ஒரே வாரிசாக இருப்பவள் சத்தியபாமை ஆகையாலும், பாமை தன் மனைவியானதாலும், சியமந்தக மணியைப் பெற்றுக்கொள்ளவும், வைத்துக்கொள்ளவும் முழு உரிமை கிருஷ்ணருக்கு உண்டு.! ஆனால், அது தன்னிடம் இல்லாதபோது, எப்படி சும்மா இருக்கமுடியும்? இவ்வீண்பழியை எவ்வாறு ஏற்கமுடியும்? எனவே மணி இருக்கும் இடத்தைக் கண்டறிந்து, அதை எல்லோர்க்கும் உணர்த்தவேண்டிய கடமையும் தனக்கு மீண்டும் வந்துவிட்டதாக உணர்ந்தார் பெருமான் ஆகையால் மணி இருக்கும் இடத்தைத் தேடியறிய முற்பட்டார்!

**தேசாந்திரம் சென்றனர். கிருதவர்மாவும், அக்ரூரரும்.!**

சியமந்தகமணியைத்தேடும் படலத்தைக் கிருஷ்ணர் தொடங்கி விட்டதால், அவர் உண்மையினை

அறிந்துகொள்வார். ஆதலால் தங்களுக்கு நிச்சயமாக கிருஷ்ணரால் தண்டனை கிடைக்கும் என்று எண்ணிய கிருதவர்மாவும், அக்ரூரரும் பயம்கொண்டனர். அதிலிருந்தும் தப்பித்துக் கொள்ள நினைத்து,, துவாரகையை விட்டு, பற்பல ஊர்களுக்கும் தேசங்களுக்கும் பயணப்பட்டு சென்றார்கள். சததன்வாவை ஏமாற்றி, அதை அக்ரூரர்தான் வைத்துக்கொண்டுள்ளார் என்பது கிருதவர்மாவிற்குத் தெரியாது.! தான் சததன்மாவைத் தூண்டிவிட்டு, ஸத்ராஜித்தின் கொலைக்கு தூபம்போட்டுவிட்டோமே என்று பயந்தே கிருதவர்மா துவாரகையை விட்டு வெளியேறி விட்டார். ஆனால் ஆசையால் அற்பத்தனம் செய்து, மணியையும் அபகரித்து விட்ட கொடுஞ்செயலுக்காக பயந்து போன அக்ரூரர், எங்கும் தங்காமல், வேறு இடங்களுக்கு விடாமல் பயணம் செய்து கொண்டிருந்தார்.

சென்ற இடமெல்லாம் சிறந்த வளம் ஏற்பட்டது.! அக்ரூரர் சிறப்பு மிக்க அந்த ஆபூர்வமணியைத் தன்னுடைய ஆடையில் முடிந்து வைத்துக் கொண்டே பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார். முதலில் இருவர்மீதும் சந்தேகம் கொண்டு, அவர்களைக் கண்காணிக்குமாறு, ஒற்றர்களை ஏவிவிட்டிருந்தார் பகவான் கிருஷ்ணர். கிருதவர்மாவை விட, அக்ரூரரே மிகவும் அலைந்து கொண்டுள்ளார். அவர்நிதானத்தை இழந்து அடிக்கடி தவிக்கின்றார். மேலும் அவர் செல்கின்ற இடங்களில் எல்லாம் மழை மிகுதியாகப் பெய்கிறது. மக்கள் சுபிட்சம் அடைகிறார்கள் என்ற செய்தி கிருஷ்ண பரப்பிரம்மாவிற்குத் தெரிவிக்கப்பட்டது.! சியமந்த மணி ஒருவரிடம் இருந்தால்தான், அத்தகைய மழைவளம் ஏற்பட சாத்தியப்படும். ஆகையால், மணியை அக்ரூரரே கவர்ந்து வைத்துக் கொண்டுள்ளார் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொண்டார்பகவான் கிருஷ்ணர்.!

**கிருஷ்ணரின் கட்டளையால் துவாரகை திரும்பினார்:-**

இச்செய்திகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து அறிந்த பெருமான், அக்ரூரரை உடனே நாடு திரும்ப உத்தரவிட்டு, அக்ரூரரை அழைத்து வருவதற்காக, தனது ஆட்களை அனுப்பி வைத்தார். இந்த நிலையில் மிதிலையில் இருந்து பலராமரும் வந்துவிட்டார். பரப்பிரம்மமான பெருமான -ஸ்ரீகிருஷ்ணரின் வீரர்கள் அக்ரூரரை நாடுதிரும்ப அழைத்தபோது, பயம் கொண்ட அக்ரூரர் எவ்வித திருட்டுத்தொழிலை அக்ரூரர் செய்து விட்டிருந்தாலும், அவர்தனது பழைய நண்பர்., என்பதையும், தன்னைப் பரப்பிரம்மமாகக்கண்டு, தரிசித்த பரமபக்தர் என்பதையும், கிருஷ்ணர் சிறிதும் மறக்கவில்லை.! எனவே, அவர் நல்ல முறையிலேயே அக்ரூரரை வரவேற்றரா.

**அக்ரூரரிடம் பகவான் உரைத்தவை :**

சபைக்கு வந்த அவரைப்பார்த்து, "பெரியோரே! சியமந்தக மணி தங்களிடம் தான் உள்ளது எனபதை நான் நன்கு அறிவேன்.! ஆனால் (பலராமனைச் சற்றுநேரம் உற்றுப்பார்த்து) என்னுடைய நெருக்கமான உறவினர்களோ அதை நான்தான் வைத்துக் கொண்டு, மறைத்துவருகிறேன் என்று எண்ணுகிறார்கள். அதனால் எனக்கு மீண்டும் பழிச்சொல் ஏற்பட்டு, நான் அல்லலுக்கு ஆளாகியுள்ளேன்.! எனக்கு தற்போது ஏற்பட்டுள்ள பழியையும் நான் போக்கிக்கொள்ள வேண்டும். ஏனென்றால், நான் இந்நாட்டு அரசன். அனைவருக்கும் ஒழுக்கத்திலும், நடத்தையிலும் முன்னுதாரணமாகத் திகழவேண்டியவன். ! இன்றைக்கு இப்பழிசொல்லை நான்போக்கிக் கொள்ளாவிட்டால், மக்களிடையே நான் குற்றவாளியாகவே கருதப்படுவேன்.

**அக்ரூரர் ஒப்படைத்தார், அகன்றது பழிச்சொல்.!**

எனவே தாங்கள் மறைந்து வைத்துள்ள சியமந்தக மணியை என்னுடைய உறவினர்கள் நிறைந்த இந்தச்சபையில் தாங்கள் ஒப்படைக்கவேண்டும்.! என்பழியைப் போக்கிக்கொள்ள உதவ வேண்டும்" என்றும் கூறி முடித்தார். சற்று நேரம் பயம் கொண்ட பார்வையோடு சுற்றுமுற்றும் பார்த்த அக்ரூரர், வேறு வழியில்லாமல், தான் தன்னுடைய மேலாடையில் மறைத்து வைத்திருந்த சியமந்தக மணியை அவிழ்த்து, அனைவருக்கும் காட்டி, தன்னை மன்னித்து விடுமாறு அழுதுபுலம்பி பகவானிடம் ஒப்படைத்தார்.!

**அகன்றது அண்ணனின் அவநம்பிக்கை.!**

சபையில் இருந்த அனைவரும் ஆரவாரம் செய்தனர். மனநெகிழ்ச்சி கொண்ட பலராமர் விரைந்து சென்று, தனது தம்பியான ஸ்ரீகிருஷ்ணரை, அணைத்து உச்சிமோந்து மகிழ்ந்தார். அவருக்கு வாழ்த்தும் கூறினார். எனவே ஒருவன் தன்மீது பழிச்சொற்கள் சுமத்தப்படும்போது. அதைப் போக்கிக் கொள்ளமுயன்று, அதைப் போக்கிக்கொள்ள வேண்டிய கடமை அரசன் முதல் ஆண்டிவரையிலான அனைவருக்கும் பொதுவானதொரு தர்மம் என்பதை அவனியோர்க்கு உணர்த்தினார் ஸ்ரீகிருஷ்ணபகவான்! பகவான் கிருஷ்ணருடைய வாழ்க்கை வரலாறும், அவர்செய்த ஒவ்வொரு செயலும், அவர்கூறிய நன்மொழிகளும், அனைவருக்கும் அறிவுரை பகரும் செயல்களே ஆகும். இம்மைக்கு நன்மையும், மறுமைக்கு முக்திக்கும் வழிவகுக்கும் புனிதச்செயல்களாகும்.!

**சிறப்புப்பலன் :**

சியமந்தக மணியின் இந்த வரலாற்றைக் கற்பவர்களுக்கும் இதை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுபவர்களுக்கும், தொலைந்துபோன அவர்களின் செல்வங்களும், பொருள்களும் உடனே கிடைத்துவிடும். மேலும், திருடர்களால் களவாடப்பட்ட அனைத்தும் விரைவில் திரும்பக் கிடைத்துவிடும் என்பது ஐதிகம் ஆகும். எனவே, பரப்பிரம்மமாகிய பவித்திரமானவை. திவ்வியம் நிறைந்தவை (புனிதமானவை) என்று புரிந்து கொண்ட அனைவருக்கும், இப் பிறவியிலேயே முக்தி கிடைக்கும்.! எனபதை கீதா உபதேசத்தில், கிருஷ்ணப்பரப்பிரம்மமே கீழ்க்கண்ட ச்லோகத்தில் அர்ச்சுனனுக்கு எடுத்துரைத்துள்ளார்.

**ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்த்தி தத்த்வத:**
**த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாம் ஏதி ஸோ(அ)ர்ஜுநா!**
**(பகவத்கீதா. அத் 4.ச்லோகம்.9).**

என்பதே அனைவரும் அறிந்து நடப்பதற்குரிய ஒரு கடவுட்கொள்கையாகும்.

ஸ்ரீமத்பாகவதத்தின் இரண்டாம் ஸ்லோகம்.

**ஸ்ரீமத் பாகவதே மஹா – முனி க்ருதே கிம் வா பரைர் ஈச்வர:**
**ஸத்யோ ஹிருதி அவருத்யதே அத்ர க்ருதிபி:**

**கஸ்ஸுஷு பிஸ் தத் க்ச்ட்சனாத் !**

என்று கூறுவதால்-, "மஹாபுருஷராகிய வியாசரால், அவருடைய முதிர்ந்த அனுபவத்தின் வெளிப்பாடாக, எழுதப்பட்டதான இந்த ஸ்ரீமத் பாகவதம் என்னும் புராணம்

ஒன்றே பகவான் கிருஷ்ணரின் இறையுணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது எனவே இதைத் தவிர்த்த வேறு எந்த சாஸ்திரத்திற்கும் அவசியம் ஏற்படாது.! வேறெந்த புராணத்தையும் கற்கவில்லையே என்ற மனத்துயரமும் ஏற்படாது என்கிறார். ஏனென்றால், இந்தப்பாகவதத்தின் செய்தியை ஒருவர் பக்தியுடனும், கவனத்துடனும், பணிவுடனும் கேட்பாரேயானால், அது அவருடைய அறிவை வளர்த்து ஞானநிலையை அடையச் செய்யும். அதுமட்டுமின்றி, அவருடைய இதயக்கோயிலில் பரமபுருஷராகிய அக்கிருஷ்ணபெருமான் என்றென்றும் நிலைத்து நிற்பார்." என்னும் உண்மையையும் உணர்த்தப்படுகிறது. எனவே ஸ்ரீமத்பாகவதம் பயில,, நமது இந்தப்படைப்பில், அமைந்துள்ள இப்பதினேழு கதைகளையும் பாங்குடன் கற்போம்.! அவ்வாறு கற்றால்தான் அக்கதைகளில் புதைந்திருக்கும் பகவத்பக்தியாகிய பரவசம் நமக்குக் கிடைக்கும். அப்பரவசமே ஸ்ரீகிருஷ்ணப் பெருமானின் திருவருள் பெறுதற்கு உறுதுணையாக விளங்கும்.

இவ்வுயர்நிலை பக்தியைப்பெற்று, பெருமானின் திருவருளால் பல வளமும் பெற்று பாரோர் போற்ற வாழ்ந்திடுவோம்.!!

எம்பெருமானே! வசுதேவரின் புதல்வரான ஸ்ரீகிருஷ்ணராக அவதாரம் எடுத்த பெருமானே! அண்டமெங்கும் நிறைந்திருக்கும் முழுமுதற்கடவுளே! உமக்கு எம்முடைய வணக்கங்களைச் சமர்ப்பணம் செய்கிறேன். படைத்தல். காத்தல், நீக்குதல், என்னும் முத்தொழில்களின் மூலகாரணனாக உள்ள உன்னை நான் அனுதினமும் ஆராதனை செய்கிறேன். (1.1.1), என்னும் பாகவதத்தின் முதல் ஸ்லோகம் வழிநின்று நன்மைகள் பெற்று வாழ்வோமாக!

# 17. பாணாசுரன் கர்வம் அழிதலும் உஷா கல்யாணமும்

### பகவான் எடுத்த கிருஷ்ணாவதாரம் :

பூமியில் தர்மத்திற்குத் தலைக்குனிவும், சாதுக்களாகிய தர்மிகளுக்கு அதர்மிகளால் துன்பமும் தொல்லையும் ஏற்படுகின்ற போது, நான் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டேன். அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலைநாட்ட எல்லா யுகங்களிலும், தேவைப்படும் காலங்களில் நான் அவதாரம் எடுத்துவருவேன்.. அதன் மூலம் தர்மத்தை நிலைநாட்டுவேன் என்ற கொள்கையை உடையவர் ஸ்ரீகிருஷ்ணபகவான். பகவத்கீதையில் அர்ச்சுனனுக்கு இதை எடுத்துரைத்த பகவான், பல்வேறு காலகட்டங்களில் இருபத்தொரு அவதாரங்கள் எடுத்து, தன் கூற்றை மெய்ப்பித்துக்காட்டியுள்ளார்.

### ஸ்ரீராம் கிருஷ்ண அவதாரங்கள்

எனினும் பகவான் எடுத்த பத்து அவதாரங்களே தசாவதாரம் என்ற தலைப்பில் பலராலும் பரவலாகப்பேசப்படுகின்றது அவற்றுள்ளும், இராவணாதி அரக்கர்களின் வதைக்காக ஸ்ரீமந்நாராயணராகிய பெருமான் ஸ்ரீராமனாக எடுத்த அவதாரமும், கம்சனாதி அரக்கர்களைக் கொன்றொழிக்க எடுத்த ஸ்ரீகிருஷ்ணாவதாரமும் மிகவும் சிறப்பிற்கு உரியனவாகும். இவற்றுள் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் எடுத்துவந்த பகவான் நூற்று இருப்பத்தைந்து ஆண்டுகள் இப்புவியல் பிறந்து, வாழ்ந்து, பற்பல லீலைகள் புரிந்து தன் அவதார நோக்கத்தை இனிதாக நிறைவேற்றிய பின்னர்

வைகுந்தம் சென்றடைந்தார். இப்பரமபுருஷரின் அவதார மேன்மையை வியாசபகவான், மிகப்பெரும் புராணமாக வடமொழியான சமஸ்கிருதத்தில் எழுதியுள்ளார். இதுவே ஸ்ரீமத்பாகவதம் என்றழைக்கப்படும் பாகவதபுராணம் என்பதாகும்.

**ஸ்ரீமத் பாகவதத்தின் அமைப்புமுறை :**

இந்தப் பாகவத புராணம் என்ற பாகவதத்தில் பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உள்ளன. ஸ்கந்தம் என்பது இதன் மிகப்பெரிய பகுதியாகும் இதைக், காண்டம் என்றும் பெயரிட்டு அழைக்கலாம். ஒவ்வொரு ஸ்கந்தத்திலும் பல ஸ்லோகங்களால் கதையை நடத்திச்செல்கிறார் வியாச பகவான். ஸ்லோகம் என்பதை, பதம் என்ற சொல்லாலும் அழைக்கலாம்.

உஷா கல்யாணம் என்னும் இந்தக் கதை ஸ்ரீமத்பாகவதத்தின், பத்தாம் ஸ்கந்தம், இரண்டாம் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

**பகவான் கிருஷ்ணரின் பரம்பரை :**

எட்டுபேர் பட்டத்து மகிஷிகள்...

ஸ்ரீகிருஷ்ணராகிய பரம்பிரம்மம், பல்வேறு காலகட்டங்களில் பற்பல மனைவியர்களை மணந்து கொண்டவர். இருப்பினும், விதர்ப்ப நாட்டுமன்னராகிய பீஷ்மகர் என்பவனின் மகளான ருக்மிணிதேவி என்பவளே பகவான் கிருஷ்ணருடைய முதல் மனைவியாவாள். தன்மீது அவள் கொண்டிருந்த பெரும் காதலைப்புரிந்துகொண்ட கிருஷ்ணர் அவளைக்கடத்திவந்து கடிமணம்

புரிந்துகொண்டார். அதன் பிறகு சத்யபாமா, ஜாம்பவதி, நக்னஜித், காளிந்தி, லட்மணா, மித்ரவிந்தை, பத்ரை என்பவர்களையும் மணந்து கொண்டதால், இந்த எட்டுபேரும் கிருஷ்ணரின் பட்டத்து ராணியார்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் ஒவ்வொருவரோடும், வியாபகம் என்ற நிலையில், அதாவது (ஒரே நேரத்தில், ஒரே வடிவத்தில் பலதோற்றங்களை எடுத்துக்கொள்ளும் நிலை) ஒரு மிகச்சிறந்த கிருகஸ்தனாகவே வாழ்ந்து காட்டினார். இவர்களுள் நக்னஜித் என்பவள்தாள், நம்முடைய தமிழ் இலக்கியங்களிலும், ஆண்டாளின் அருளிச்செயலான திருப்பாவையிலும் நப்பின்னை என்று போற்றப்படுபவள் என்பதும் பல அறிஞர்களின் முடிவாகும்.

**நரகாசுரன் வதமும், பதினாறாயிரம் பெண்களைக் கிருஷ்ணர் மணத்தலும் :**

பகவான் வராக அவதாரம் எடுத்துக்கொண்டு, பூமிதேவித்தாயாரை இரண்யாட்சனிடம் இருந்து காப்பாற்றி வந்தபோது, பகவானுக்கும், பூமாதேவித் தாயாருக்கும் உண்டானவன்தான் நரகாசுரன். உறவுமுறையில் இவனும் பகவானின் மகனாகவே கருதப்படுபவன். இவன் பிராக்ஜோதிஷபுரம் என்னும் நாட்டை ஆண்டுவந்தான். ஆனால் இவன் அரக்ககுணம் கொண்டவனாக மாறி வளர்ந்தான். தன்னுடைய நகரத்தைச்சுற்றி மிகப்பெரும் கோட்டையை எழுப்பிக்கொண்டு, தேவர்களுக்குத் துன்பம் விளைவிப்பதைத் தன் பொழுதுபோக்காகக் கொண்டு வாழ்ந்தான். அதோடு நில்லாமல், பதினாராயிரம் அரசகுமாரிகளை அபகரித்துவந்து, (சிறைப்பிடித்துவந்து,)

அவர்களைப் பாதாளச்சிறையில் அடைத்து வைத்தான். அவர்கள் படும் துன்பங்களைக்கண்டு சந்தோஷப்பட்டான். இவனுடைய அநியாயச் செயல்களைப் பொறுத்துக் கொள்ளவோ, எதிர்க்கவோ முடியால் அவதியுற்ற இந்திரன், கிருஷ்ணரிடம் நரகாசுரனை வதம் செய்யுமாறு சரணாகதி அடைந்தான். அவனுடைய வேண்டுகோளை ஏற்ற பகவான், அந்த நரகாசுரனை அழித்து அவன் சிறையில் அடைத்து வைத்திருந்த பதினாராயிரம் பெண்களையும் விடுதலை செய்தான். பிறகு அப்பெண்கள் அனைவரும் வேண்டிக் கொண்டதை ஏற்ற பகவான், அவர்களைக்காக்கும் பொருட்டு திருமணமும் புரிந்து கொண்டார். எனவே ஸ்ரீகிருஷ்ணருக்கு மொத்தத்தில் பதினாறாயிரத்து எட்டுபேர் மனைவியர்களாக இருந்தனர். சிலர் பதினாராயிரத்து நூற்றுஎட்டு மனைவியர்களோடு சிறப்பான ஒரு கிருஹஸ்தராக கிருஷ்ணர் வாழ்ந்தார் என்றும் கூறுவார்கள்.

**பட்டத்து ராணிகளுக்குப் பத்து பத்துப் பிள்ளைகள் :**

ஸ்ரீகிருஷ்ணரின் மனைவியர்களான ருக்மிணி தேவி முதற்கொண்ட எட்டு பேர்களுக்கும், தலா பத்து பிள்ளைகள் பிறந்தனர். எனவே என்பது பேர் கிருஷ்ணருக்குப் பிள்ளைகளாவார்கள். இவர்கள் தம் தந்தையைப்போலவே அழகும், வீரமும் நிறைந்தவர்களாக விளங்கினார்கள். ருக்மிணியின் முதல் பிள்ளையாக அவதாரம் செய்தவன் பிரத்யும்னன். மேலும் கிருஷ்ணருக்கும், ருக்மணிக்கு மட்டும், பத்துப் பிள்ளைகள் பிறந்ததோடு, சாருமதி என்ற பெண்ணும் பிறந்தாள். இவளைக் கிருதவர்மன் என்பவரின் மகனான பலி என்பவனுக்குத் திருமணம் செய்துவைத்தார்கள்.

**பலிச்சக்ரவர்த்தியும் பாணாசுரனும் :**

இந்தபலி என்ற அரசன்தான் மாவலி என்றும், மகாபலி என்றும், மாபலிச்சக்ரவர்த்தி என்றும், மகாபலிச்சக்கரவர்த்தி என்றும் அழைக்கப்பட்டவன் இவனிடம் தான் பெருமான் வாமனமூர்த்தியாக அவதாரம் கொண்டுவந்து, மூன்றடி மண் வேண்டுமென்று யாசகம்கேட்டு, அவன் இசைவு தந்து, தாரைவார்த்துத்தந்தவுடன், திரிவிக்கிரமனாக வளர்ந்து, அதனால் ஓங்கி உலகளந்து,, மூன்று உலகையும் தனது இரண்டடிகளால் அளந்து எடுத்துக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.. இந்தப்பலியின் பிள்ளைகளில் ஒருவன்தான் பாணாசுரன் என்பவன்.

**பிரத்யும்னன் பிறந்தான் :**

ஸ்ரீகிருஷ்ணருக்கும், ருக்மிணிக்கும் மூத்தமகனாகப் பிறந்தவன் பிரத்யும்னன். இவன் கிருஷ்மனைப்போலவே மிக்க அழகுடையவனாகவும், தன் தந்தையைப்போன்றே அறிவு-, ஆற்றலும், சாதுர்யகுணங்களும் நிறைந்தவனாக இருந்தான். இவன் சாட்சாத் மன்மதன் என்ற காமக்கடவுளின் மறு அவதாரம் என்றே கருதப்பட்டவன். திருமண வயது வந்தவுடன், இவனுக்கு மாயாவதி என்ற பெண்ணை மணம் முடித்திருந்தார்கள். ருக்மணியைத் திருமணம் செய்துகொள்ள அவளைப்பகவான் தேரிலேற்றிக் கடத்திவந்தபோது, அவரை விடாமல் துரத்திவந்து போரிட்டு, இறுதியில் கிருஷ்ணரிடம் தோல்வியுற்று அவமானப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டவன் ருக்மிணியின் மூத்த சகோதரன் ருக்மி என்பவன். இதன் காரணமாக

கிருஷ்ணருக்கும், ருக்மிக்கும் பகைமை நீடித்து வந்தாலும், தனது சகோதரியான ருக்மிணிக்காக அவள் நல்வாழ்க்கையை விரும்பும் அண்ணனாகவே ருக்மி இருந்தான். இந்நிலையில் பிரத்யும்னனுக்கு, ருக்மியின் மகளான ருக்மவதி என்பவளை இரண்டாவதாக பிரத்யும்னனுக்கு மணம் செய்து வைத்தார்கள்.

**அநிருத்தன் தோன்றினான்.!**

பிரத்யும்னனுக்கும், ருக்மவதிக்கும் அழகியதோர் ஆண்குழந்தை பிறந்தது. அந்த மகன் அநிருத்தன் என்று அழைக்கப்பட்டான். எனவே ஸ்ரீகிருஷ்ணர் அநிருத்தனின் தந்தை வழிப்பாட்டனார். ருக்மி அவனுக்கு தாய்வழிப் பாட்டனாராவான். இப்படியாக ஸ்ரீகிருஷ்ணரின் குடும்பம் ஆயிரக்கணக்கில் விரிவடைந்திருந்தது. கிருஷ்ணரின் பேரனான் அநிருத்தனுக்குத் திருமணவயது வந்தபோது, ருக்மி தனது பேத்தியான ரோசனாவை மணம் செய்து கொடுக்கவிரும்பினான். ஆனால் பகவான் கிருஷ்ணனுக்கு இதில் விருப்பம் இல்லை. என்றாலும், ருக்மிணியின் விருப்பத்திற்காக, அத்திருமணமுடிவை ஏற்றுக்கொண்டார். எனவே இருவருக்கும் போஜகடகம் என்னும் இடத்தில் பலவேறு பிரச்சனைகளுக்கிடையில் திருமணம் நடைபெற்று முடிந்தது.

**சிவபெருமானிடம் வரம்பெற்றான் பாணாசுரன்.!**

பலி அரசனுக்கு நூறு புதல்வர்கள் பிறந்தார்கள் அவர்களுள் மூத்தவன் பெயர் பாணாசுரன் (வாணாசுரன்) என்றும் அழைக்கப்படுபவன்) என்பதாகும். இவன் ஆயிரம்

கைகளை உடையவனாவான். இவன் சோணிதபுரம் என்ற நாட்டை அரரசாட்சி செய்து வந்தான். மேலும் இவன் ஒரு சிவபக்தன். சிவபூசை செய்வதிலும், சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதுமாக இருந்தான். இவனை எல்லோரும் புகழ்ந்து வந்தார்கள். எனினும், தனக்கிருந்த ஆயிரம் கரங்களை நினைத்து மிகவும் கர்வம் கொண்டு விளங்கினான். சிவபெருமான் தனது பிரசித்தி பெற்ற தாண்டவ நிருத்யத்தை ஆடியபோது பாணாசுரன் தனது ஆயிரம் கரங்களாலும் மத்தளம் அடித்து, சிவனைப்பரவசம் அடையச்செய்தான். அதனால் சிவன் மனமகிழ்ச்சி அடைந்தார். எனவே அவனுக்குக் காட்சிக் கொடுத்து, வேண்டிய வரங்களைக்கேட்குமாறு அருள்புரிந்தார். சிவபெருமான். அப்போது பாணாசுரன் தனது தலைநகரான சோணிதாபுரத்தை யாரும் தாக்காமல் காவல்காத்துக் கொண்டு வரவேண்டும் என்றும், யாராவது தாக்கினால், அவர்களோடு போர்புரிந்து எதிரிகளை வெல்லவும், தேவைப்பட்டால் அவர்களை அழிக்கவும் வேண்டும் என்ற வரத்தையும் கேட்டுப் பெற்றுக்கொண்டான் பாணாசுரன். தன்னுடைய(அழித்தல்) நீக்கல் தொழிலோடு, சோணிதபுரத்தைக் காப்பாற்றும் காவலன் தொழிலையும் செய்யவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார் சிவபெருமான். சிவபெருமானை ஆசுதர்ஷி என்றும் அழைப்பார்கள்- ஆசுதர்ஷி என்றால், விரைவாகக் காட்சி கொடுப்பவர் என்று அர்த்தமாகும். அதாவது தன்னை நோக்கித் தவம் செய்பவர்களுக்கும், வேண்டுபவர்களுக்கும்

காலத்தைக் கடத்தாமல் விரைவாக வந்து காட்சி கொடுப்பவர் வரமும் அருளுபவர் என்பதே இதன் பொருளாகும்.

**எதிரிகளே இல்லை என்று எக்காளமிட்டான் பாணாசுரன் :**

சிவபெருமானிடம் தனது நாட்டைக் காவல்செய்து காப்பாற்றும் பொறுப்பை ஒப்படைத்து விட்டதால், எவ்வித வேலையும் இல்லாமல்,- திணவு எடுத்த தோள்களோடு திரிந்து வந்தான் பாணாசுரன். பலரையும் அணுகி, அவனோடு யுத்தத்திற்கு வருமாறு அறைகூவல் விடுவான். அவர்கள் பயத்தினால் ஓடிப்போவார்கள் அல்லது பெரும்பாலும் மறுத்து வந்தார்கள். எனவே அவனுடைய ஆயிரம் கைகளுக்கு வேலை இல்லையே என்று அல்லல்பட்டான் பாணாசுரன். ஒருமுறை தனது கைகளுக்குத் தகுந்த வேலைகள் இல்லாதுபோனதால், தான் அலுத்துப்போனதால், தன்னிடம் போர்செய்யவருமாறு சிவபெருமானையே அழைத்தான்.! பாணாசுரனுடைய இந்த வீரத்தின் கர்வத்தை, திருமங்கை ஆழ்வார் தன்னுடைய பெரியதிருமொழியில் “போராளன் ஆயிரம் தோள் வாணன் மாளப்” போர்புரிந்தான் பெருமான் என்ற தொடரால் குறிப்பிட்டுள்ளார். (பெ.தி.மொழி.20701) அதாவது தனது ஆயிரம் தடந்தோள்களையும் பார்க்கப்பார்க்க அது அவனுக்குப்பெரும் மகிழ்ச்சியையும் கர்வத்தையும் கொடுத்ததாம். அதனால் தனக்கு முன்னே வருபவர்களை எல்லாம் பார்த்து என்னோடு போர்புரிய வாவா என்று அழைப்பானாம். அந்த இறுமாப்பிலேதான் அவன் சிவபெருமானையும் போருக்கு அழைத்தான்.

**சிவபெருமான் தந்த பதிலுரை :-**

அதைக் கேட்ட சிவபெருமான் தான் அவனோடு போர் புரிய விரும்பவில்லை என்று மறுத்துவிட்டார். மேலும் பாணாசுரா! இன்னும் கொஞ்சம் நாட்கள் பொறுத்துக்கொள். அப்போது உனக்கு இணயாக, உன்னைவிட வலிமைமிக்க ஒரு வீரன் வருவான். நீ அப்போது அவனுடன் போரிடு. அதன்பின் உன் எண்ணம் ஈடேறுவதோடு, உன் நாட்டுக் கொடியும் தேசத்தில் பறக்காத ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று பதிலுரைத்தார்.

சிவபெருமானின் இப்பதிலுரையின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டான் பாணாசுரன்.! இவனை வாணன் என்றும், வாணாசுரன் என்றும் அழைக்கின்றனர் ஆழ்வார்கள்.! (உ.ம் மாயப்பொருபடை வாணன் பெரி. பல்லாண்டு.)

**உஷாவின் அந்தப்புரம் :**

பாணாசுரனின் மகள் உஷா என்பவள். இவள் சிறந்த அழகி., இனிய சொற்களால் எவரையும் கவரக்கூடியவள். இயற்கையின் மீதும், அதன் எழிலார்ந்த காட்சிகளை ரசித்து மகிழும் நுண்கலை விருப்பம் கொண்டவள். அவளுக்கு என்று ஒரு தனி அந்தப்புரத்தை அமைத்துக்கொடுத்திருந்தான் பாணாசுரன். ஆடவர்கள் எவருமே அந்தப்பக்கம் போகக்கூடாது என்றும் ஆணையிட்டிருந்தான் அவன். எனவே உஷா தன்னுடைய மனதைக் கவர்ந்த தோழிகளோடு இன்பமாகப் பொழுதைக்கழித்து வந்தாள். ஒருநாள் பௌர்ணமிக்கால இரவு நேரம். அந்த இரவில், தன்

தோழிகளிடம், விளையாடி மகிழ்ந்த உஷா, உறங்கச்சென்றாள். உறக்கத்தில் ஏற்பட்ட தொரு கனவில், அவள் ஓர் அழகிய மன்மதனைப்போன்ற தோற்றத்தை உடையவனான ஓர் ஆடவனைக்கண்டாள். அந்த ஆடவன் அவளருகே வந்து, அவளது கையைப்பிடித்து, அவளிடம் ஏதேதோ காதல் மொழிகளைப்பேசினான். அவனையும், அவனுடைய காதல் மொழிகளையும் உஷா விரும்பினாள், தானும் அவனோடு தனித்திருக்கும்போது, மிக்கமகிழ்ச்சியில் மிதப்பதாகவும் உணர்ந்தாள். இந்த நிலையில் திடீரென்று உறக்கம் கலைந்து எழுந்தவள் கனவில் கண்ட வாலிபனை நனவில் காணாது வருந்தினாள்.! அவனது பிரிவு அவளுக்குத் துன்பத்தைத் தந்தது. குளிர்ந்து பரவியிருந்த நிலவொளி அவளுக்கு வெம்மையைத்தந்தது. அந்த நிலையில் அவள் புலம்பத் தொடங்கினாள்.

**சித்ரலேகாவின் சாதுர்யமும் (திறமையும்,) செயலும் :**

பாணாசுரனின் மூத்த மந்திரிகளுள் ஒருவன் கும்பாண்டான் என்பவன். அவனுக்கு சித்திரலேகா என்ற பெண்ணொருத்தி இருந்தாள். அவளும் அழகிய தோற்றத்தை உடையவளாக இருந்தாள். எனவே தனது மற்றைய தோழியர்களை விட, சித்திரலேகையைத் தனது அந்தரங்கத் தோழியாக அவள் நினைத்துப் பழகி வந்தாள். கனவிலே இருந்து விழித்தெழுந்த உஷாவிடம் காரணம் கேட்டாள் தோழி சித்ரலேகா! உஷாவும் அவளிடம் தனது கனவில் நடந்தவற்றை மறைக்காமல் எடுத்துரைத்தாள்.! மேலும் அந்த ஆணழகன்மீது தனக்கு ஏற்பட்ட புதுமையான உணர்வையும், அனுபவத்தையும் எடுத்துரைத்தாள். அந்த வாலிபனை

மட்டுமன்றி, வேறு எந்த ஆடவனையும் இதுவரை நேரில் பார்க்காத உஷாவிற்கு இந்த ஆடவன் எப்படிக்கனவில் வந்தான்.?! இது சாத்தியமா? என்று யோசித்தாள் தோழி. ஆனால், தான்கண்ட ஆடவனைப்பிரிந்து தன்னாலே வாழமுடியாத ஒரு நிலை தனக்கு ஏற்பட்டிருப்பதை எடுத்துரைத்து தனக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டாள்.

**சித்ரலேகா வரைந்த ஓவியங்கள் :**

சித்ரலேகா ஒரு சிறந்த யோகினியாவாள். சித்திரங்கள் வரைவதில் மிகவும் கெட்டிக்காரி. அவள் தன் யோக சக்தியால் எங்கு வேண்டுமானாலும் பறந்து செல்லக்கூடிய ஒரு வரத்தைப் பெற்றிருந்தாள். மேலும் அவள் தனது கண்களை மூடி, யோகத்தில் ஆழ்ந்து, தேவையான சித்திரங்களை வரையக்கூடிய திறமையும் பெற்றிருந்தாள். எனவே அவள் உஷாவிடம் கவலை அடைய வேண்டாம் என்று கூறி, “நான் என் சக்தியால் அழகான ஆடவர்களின் படங்களை உனக்கு ஓவியமாய் வரைந்து காட்டுகிறேன. அவர்களுள் உனது கனவில் வந்தவனை நீ அடையாளம் காட்டினால், அவன் எங்கிருந்தாலும் எனது யோகசக்தியால் அவனைக் கவர்ந்து வந்து விடுவேன். உன்னிடம் ஒப்படைப்பேன் என்று” ஆறுதலும் கூறினாள்.

**உள்ளம் கவர்ந்தவனை உறுதியாய் கூறு!**

சித்ரலேகா முதலில் மேலுலக வாசிகளில் அழகான தேவகணங்களையும், பின்னர், கந்தர்வர்கள், விஞ்சையர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், சித்தர்கள், யக்ட்சர்கள்,

வித்யாதரர்கள் போன்றவர்களின் சித்திரங்களையும் தனித்தனியே வரைந்து காட்டிக்கொண்டு வந்தாள். ஆனால் அவர்களில் யாரையும் தான் கனவில் காணவில்லை என்று மறுத்துவிட்டாள் உஷா. அடுத்ததாக, ஸ்ரீகிருஷ்ணர், பலராமன், போன்றவர்களின் ஓவியத்தை வரைந்து காட்டிய சித்ரலேகா, பிரத்யும்னனின் சித்திரத்தை வரைந்து காட்டியபோது," இவன்தானோ" என்று சற்றுக் குழப்பமடைந்தாள். உற்று கவனித்த பின்னர் அந்த ஓவியத்தின் சொந்தக்காரன் அவனும் இல்லை என்று மறுத்தவுடன், அடுத்ததாக அநிருத்தனின் சித்திரத்தை வரைந்து காட்டினாள். தன்னுடைய சிந்தை கவர்ந்த கள்வன் அவன்தான் என்பதை அறிந்த உஷா, வெட்கத்துடன் தலைகவிழ்ந்தாள். எனவே தன் தலைவியான உஷாவின் இதயத்தைத் திருவடியவன் அவனே என்பதையும், அவனுடைய பிரிவைத் தாங்க முடியாதவளாகத்தான் உஷா கலங்குகிறாள் என்பதையும் அறிந்து கொண்டாள் சித்ரலேகா.

**ஆகாய மார்க்கமாய்க் கவர்ந்து வந்தாள் :**

தான் உஷாவிற்குக் கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்றவாறு, அநிருத்தனைக் கவர்ந்து வரவேண்டியது தன் கடமை என்பதைஉணர்ந்தாள் சித்ரலேகா, எனவே முதலில் அவன் துவாரகையில் இருப்பதைத் தன்யோகசக்தியால் அறிந்து கொண்டாள், எனவே அன்றைய இரவு, அனைவரும் உண்டு முடித்து உறங்கும் வேளை வரட்டும் என்று காத்திருந்தாள். முன்னிரவு நேரம் கழிவதற்குச் சற்று முன்பாக தனது யோக சக்தியினால், வான்வழியே பறந்து சென்று துவாரகையை அடைந்தாள். அங்கே தனது மாளிகையில், மணம்வீசும்

பஞ்சனையில், அழகாய் உறங்கிக் கொண்டிருந்தவனாகிய அநிருத்தனைக் கட்டிலோடு தூக்கிவந்து சோணிதபுரத்தின் உஷா மாளிகையில் கொண்டுவந்து இறக்கிவிட்டாள்.!

**அநிருத்தன், உஷாவின் அன்புப் பரிமாற்றங்கள் :**

அன்றைய இரவுப்பொழுதைக் கழித்து, கண்விழித்துப் பார்த்த அநிருத்தன், தான் ஒரு புதிய இடத்தில், புதுமையானதொரு சூழலில் இருப்பதை உணர்ந்தான். அவன் முன்னே நாணமும், அழகும் உருக்கொண்டு வந்ததைப்போன்ற தோற்றத்துடன் உஷா அமர்ந்திருந்தாள். தனது முத்துச் சிரிப்பையும், மோகனப்பேச்சையும் அவன்மேல் வாரியிறைத்தாள் உஷா. அவனுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்ய ஆயத்தமாய் இருந்தாள். உஷாவின் அழகில் மயங்கிப்போன அநிருத்தன் அவளது உபசாரங்களைத் தடுக்கவில்லை. மாறாக, ஆறாக் காதலன்புடன் நோக்கி, அவளைத் தழுவிக்கொண்டான். உஷாவின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை முழுதுமாய் மறந்து போன அநிருத்தன், அவளோடு இரண்டறக் கலந்து இன்பமும் துய்த்தான். இன்பத்தின் எல்லைக்கு உஷாவை அழைத்துச் சென்றான். அவர்களுடைய இந்த உறவு முறை தொடர்ந்தது.

**உஷாவின் உடல் வேறுபாட்டை உணர்ந்தனர் தோழியர்!**

இக்களவுப் புணர்ச்சியானது ஒவ்வொரு நாளும் தொடர்ந்தது. தன் எண்ணம் ஈடேறியதை அறிந்து, ஆத்ம திருப்தியோடு இருந்தாள் உஷா, பின்னர் இருவரும் ஒருவருக்கொருவர் தங்களின் அன்பை வெளிப்படுத்தும்

உரையாடல்களிலும், விளையாட்டிலும் காலத்தைக் கடத்திவந்தார்கள். அவர்களின் இணைபிரியா நட்பினால், உஷாவின் உடலில் பலமாற்றங்கள் ஏற்பட்டன.! அவள் முகமானது முன்பைவிட பொலிவு பெற்றிருந்தது. அநிருத்தனின் சேர்க்கையால் அவள் கர்ப்பம் அடைந்துவிட்டாள் என்பதைத் தோழியர்கள் உணர்ந்தார்கள்.! விஷயம் வெளியில் தெரிந்து விட்டால் என்னசெய்வதென்று திகைத்துக் கொண்டிருந்தார்கள்.

**பயந்துபோன காவலர்கள் பாணாசுரனிடம் கூறினார்கள்:**

தோழியர்கள் பயந்தது ஒருநாள் அரங்கேறியது.! ஆம்! அவளுடைய பணியாட்களில் சிலர் உஷாவின் உடல் மாறுதல்கள் ஒரு ஆடவனாலேதான் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அதிகமான பாதுகாவலையுடைய இவள் அந்தப்புரத்தில் எப்படி வேறொரு ஆடவன் புகமுடியும் என்று அங்கலாய்த்தனர். எனவே இதை பாணாசுரனுக்குத் தெரிவித்து விடவேண்டும் என்று விரைந்து சென்று, அவனிடம் கூறினார்கள். அதிர்ச்சி அடைந்தான் அசுரன். காவலர்கள் கூறியதின் உள்ள உண்மையைக் கண்டறிய விரும்பிய அவன், உடனே உஷாவின் அந்தப்புரத்தினுல் அதிரடியாய் நுழைந்தான். அப்போது உஷாவும், அநிருத்தனும் மிகுந்த நெருக்கத்துடன் ஏகாந்தமாய் அமர்ந்து கொண்டு கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். ! ஆயிரம் கைகளோடும், அடங்காத கோபத்துடனும் தனது அந்தப்புரத்தில் தந்தை நுழைந்து விட்டதை அறிந்த உஷா கதிகலங்கிப்போனாள்.! நிலைமையைப் புரிந்துகொண்ட அநிருத்தன், பாணாசுரன் தாக்கினால் எதிர்தாக்குதலுக்குத்

தன்னைத் தயார் படுத்திக் கொண்டான்.! அவன் எதிர்பார்த்தது போலவே அநிருத்தனை பாணாசுரனும், அவ்வசுரனின் வீரர்களும் தாக்கத்தொடங்கினார்கள்.

**அநிருத்தன் எதிர்த்தான்! அடித்துத்தள்ளினான் வீரர்களை!**

தன்னிடம் அப்போதைக்கு எந்த ஆயுதமும் இல்லை என்றாலும், அங்கு தனக்குக் கிடைத்த இரும்புத்தடி ஒன்றை எடுத்துக்கொண்டான் அநிருத்தன். அதன்மூலம் தன்னைத் தாக்கவந்த அசுரனையும், அவன் வீரர்களையும் சரமாரியாக அடித்து விரைந்து அழித்தான். தன் மகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த ஆணழகன், வீரமும் பெற்றவனாக விளங்குகிறான் என்பதை ஒருகணம் பாணாசுரன் நினைத்திருந்தால், இந்தத்தாக்குதல் தேவையற்றது என்பதை அவன் அறிந்திருப்பான். ஆனால் அவனுடைய அறிவுசெயலற்றுப் போனதால், அநிருத்தனை விரோதியாகவே நினைத்து அழித்துவிடத் துடித்தான் அசுர அரசன். ஆனால் அவனுடைய எண்ணம் ஈடேறவில்லை எதிரிகளை அழித்த அநிருத்தன் மாளிகையிலிருந்து வெளியேறி விட்டான். அதை அறிந்த அரக்கன் உடனே மீதமிருந்த வீரர்களோடு சென்று, நாகபாசத்தால் அநிருத்தனைக் கட்டிப்போட்டு, அவனைச்சிறைப்பிடித்துக் கொண்டான். அநிருத்தன் சிறை பிடிக்கப்பட்டதை அறிந்த உஷா மிகவும் துன்பம் கொண்டாள். அவனை விடுவித்து, தனக்கு மணம் செய்விக்கவேண்டும் என்றும் தந்தையிடம் கெஞ்சினாள் உஷா, ஆனால் தன்மகளின் கோரிக்கையை நிராகரித்ததோடு, அவள் தன்னுடைய கன்னித்தன்மையை

இழந்து விட்டதற்காக அவள்மீது அவமானமும், அருவருப்பும் கொண்டான். பழிதீர்க்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தால், அவன் சிறைச்சாலையிலேயே அநிருத்தனைப் அடைத்துவிட்டான்.

**நடந்ததை எடுத்துரைத்தார் நாரதமுனிவர் :**

அநிருத்தன் துவாரைகையை விட்டுவந்து கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் முடிந்து விட்டநிலையிலும், அவன் எங்கு இருக்கின்றான், என்ன ஆனான்? என்பதை அறியமுடியாமல் அனைவரும் ஏங்கிக்கொண்டு இருந்தார்கள்.! பற்பல இடங்களிலும் தேடித்தேடி அலுத்துப்போயிருந்த அச்சமயத்தில், நாரத மகரிஷி துவாரகை சென்று, அநிருத்தனுக்கும், பாணாசுரன் மகள் உஷாவிற்கும் ஏற்பட்ட காதலையும், அதன் பயனாக உஷா கருவுற்றதையும், அனைத்து விருஷ்ணி வம்சத்தவர்களுக்கும் எடுத்துரைத்தார். அநிருத்தன் சிறைபிடிக்கப்பட்டிருக்கும் செய்தி அறிந்ததால் சீறி எழுந்தனர் யாதவர்களும், விருஷ்ணிகளும்.!

**திரண்டன யாதவர் படைகள்! எதிர்த்தார் சிவபெருமான்.!**

கிருஷ்ணர் பலராமன் தலைமையில், பிரத்யும்னன் உள்ளிட்ட பதினெட்டு அக்ரோணி சேனை வீரர்கள், சோணிதபுரத்தின் மேல் படையெடுத்துச் சென்றனர். ஆனால் அந்த நகரத்தின் காவல்தெய்வமாக சிவபெருமான் இருந்ததால், கிருஷ்ணர் படைகளை அவர் எதிர்க்கவேண்டியதாயிற்று. சிவபெருமான் போருக்குக் கிளம்பியதால் இவருக்கு, இந்தச்சமயத்தில், தான் உதவவேண்டும் என்று தேவகணங்களின் தலைவரான சுப்பிரமணியர் (முருகர்) நினைத்தார். இப்போரில்

தந்தையோடும், தம்பியோடும் கணபதியும் கைகோர்த்தார். சிவபெருமானின் உதவிக்கு வரநினைத்த காளிதேவியும் சிவபெருமான் படைகளோடு சேர்ந்துகொண்டாள். எனவே கிருஷ்ணர் படைகளைத் தன் தலைமையிலேயும் தாக்கத்தொடங்கினார் சுப்பிரமணியர் என்ற முருகர். சிவபெருமானோடு பூதகணங்களும், இடாகினிப் பேய்களும், காளிதேவியும் களத்தில் குதித்தன. பயங்கரமாக நடைபெற்ற அப்போரில், பிரத்யும்னன் சுப்பிரமணியனை எதிர்த்துப்போரிட்டார். தாக்குதலில் சுப்பிரணமியருக்கு உடலில் காயம் ஏற்பட்டதால், தன் மயில் வாகனத்தின் மேலே ஏறிப்பறந்துபோனார் முருகன். சித்ரலேகையின் தந்தையான கும்பாண்டான் என்பவனையும், கூபகரணன் என்பவனையும், பலராமர் தாக்கிக்கொண்டிருக்க, சிவபெருமானுக்கும், கிருஷ்ணருக்கும் கடும்போர் நடைபெற்றது.

**ஸ்ரீ கிருஷ்ணருக்கும், சிவபெருமானுக்கும் நடந்த கடும்போர்:**

கிருஷ்ணருக்கும், சிவபெருமானுக்கும் நடைபெற்ற போரானது மிகவும் உக்கிரமானதாக இருந்தது. தமது அஸ்திர சஸ்திரங்களால் இருவரும் மாறிமாறித் தாக்கிக் கொண்டார்கள். பிரம்மாஸ்திரம், வாயு அஸ்திரம், அக்கினி அஸ்திரம் போன்றவற்றையும் இருவரும் பயன் படுத்தினார்கள். மேலும் சிவபெருமான் அக்கினிஜுவாலை உருவத்தை உண்டாக்கி, அனைவரையும் சுட்டெரிக்குமாறு ஏவினார். அதைக்கணண்'ட கிருஷ்ணர் குளிர்ஜுவர உருவத்தை உண்டாக்கி அதனை அழித்துத் தடுத்து நிறுத்தினார். இவ்வளவில், பலராமர் தன்னுடைய முசலம்

என்ற ஆயுதத்தைக்கொண்டு கும்பாண்டனையும், கூபகர்ணனையும் தாக்கி, கீழே தள்ளியதைப்பார்த்த படைகள் பயம் கொண்டு ஓடின். சிதறிச் சின்னாபின்னமாயின.

இத்தருணத்தில்தான் பாணாசுரன் போரிட வந்தான். அப்போது ஸ்ரீகிருஷ்ணர் சிவபெருமான் மேல் சோர்வை உண்டாக்கி, கொட்டாவியை ஏற்படுத்தும் ஓர் அஸ்திரத்தை ஏவினார். அது அவரைத்தாக்கவே, அவர் போர் செய்யாமல் ஒதுங்கி விட்டார். பாணாசுரன் பகைமை உணர்வோடு பகவானைத் தாக்கவந்தான். அவன் கிருஷ்ணரைத் தாக்கத்தொடங்க, பகவானும் அவன்மேலே ஆறாத சினம் கொண்டு தாக்கினார். கடுமையான அந்தப்போரில் கிருஷ்ணருடைய தாக்குதலைத் தடுக்கமுடியாமல் திணறினான் அசுரன். எனவே அவன் வணங்கிவந்த கோடரா என்ற தேவதையைத் தன்மனத்தால் அழைத்தான். அசுரனுக்கும், அந்தப்பேய்ப்பெண்ணிற்கும், தாய்–மகன் போன்ற உறவுமுறை இருந்தது. தன்னுடையமகனான பாணாசுரனைக் காப்பாற்ற ஆடைகள் ஏதுமின்றியும், தலைவிரிகோலத்தோடும் ஓடி வந்தகோடரா கிருஷ்ணர் முன்னே வந்து நின்றாள். அவளுடைய நிர்வாண தோற்றத்தைக் காணவிரும்பாத கிருஷ்ணர் முகம் சுளித்து, வேறு பக்கம் திரும்பிக்கொண்டார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட பாணாசுரன் போர்க்களத்திலிருந்து தப்பித்து ஓடிவிட்டான்.

எனவே கிருஷ்ணருக்கும், சிவபெருமானுக்கும் மீண்டும் போர் தொடங்கியது. இப்போதும் பகவான் கிருஷ்ணரும்,

பெருமான் சிவனும் கடுமையாக மோதிக்கொண்டனர். எனவே மீண்டும் அஸ்திர, சஸ்திர பிரயோகங்களை அளவில்லாமல் இருவரும் பயன்படுத்தினார்கள், சிவன் தனது மிகச்சக்திவாய்ந்த சிவஜுரத்தை ஏவிவிட்டார். அதன் தாக்கத்தைக் குறைக்கவும், தனக்கு வெற்றி கிடைப்பதற்காகவும், கிருஷ்ணர் நாராயணஜுரத்தை ஏவிவிட்டார். நாராயண ஜுவரத்தின் கடுமையான தாக்குதலை, சிவஜுரத்தால் எதிர்த்து நிற்க முடியாமல்போனது. எனவே அது பகவான் கிருஷ்ணரிடம் சரணடைந்து, தன்னைக்காப்பாற்றிவிடுமாறும், தன்னைப் பிற்காலத்தில் ஏற்படப்போகும் தேவாசுர போர்களில் பயன்படுத்ததிக் கொள்ளுமாறும் வேண்டியது. அதன் கோரிக்கையை ஏற்ற பகவான் கிருஷ்ணர் அதை அழிக்காமல் தன்னுடைமை ஆக்கிக்கொண்டார்., அதைக்காப்பாற்றி விட்டார் கிருஷ்ணபகவான்.

**மீண்டும் திரும்பினான் பாணாசுரன் :**

இந்நிலையில் தனது நகரத்திலிருந்து புதிய தெம்போடும், பெருத்த சேனைகளோடும் வந்த பாணாசுரன் கிருஷ்ணரை மீண்டும்தாக்கத் தொடங்கினான். பாணாசுரனை வதம்செய்து அழிப்பதில் இனியும் காலம் தாழ்த்தக்கூடாது என்று முடிவு செய்த, பிரபு ஸ்ரீகிருஷ்ணர், தனது வெற்றிதரும் பாஞ்சன்யத்தை எடுத்து முழக்கினார். அச்சங்கத்தின் பெருத்த நாதஒலியால் பாணாசுரனின் படைவீரர்கள் பயம்கொண்டு ஓடினார்கள். மேலும் பெருமான் தனது சக்கராயுதத்தை, பாணன்மேல் ஏவிவிட்டார். தீப்போலும் சுடரொளியை வீசிக்கொண்டு சென்ற அச்சக்கராயுதம், பாணாசுரனுடைய

ஒவ்வொரு தோள்களையும், (கைகளையும்) வெட்டிவீழ்த்திக்கொண்டே சென்றது, தனது கரங்கள் துண்டிக்கப்பட்டபோது, அசுரன் அலறிய சத்தம் எட்டு திக்குகளிலும் எதிரொலித்தது.

**ஸ்ரீகிருஷ்ணரிடம் சமாதானம் பேசினார் சிவபெருமான் :**

பாணாசுரனுக்கு ஏற்படப்போகும் அழிவினைச் சிவபெருமான் உணர்ந்து கொண்டார். எனினும், அவனைக்காப்பாற்றவேண்டியது தன்னுடைய கடமை என்பதை உணர்ந்த அவர் கிருஷ்ணரிடம் சென்று அசுரனைக் காப்பாற்றும் முயற்சியோடு கிருஷ்ணரிடம் பேசத்தொடங்கினார். “பெருமானே. எல்லாம் வல்லபிரபுவே! பாணாசுரன் தனக்கு இருந்த ஆயிரம் கைகளால் ஆணவம் கொண்டு திரிந்தவன். அமரர்களாகிய தேவர்களையும், அறவோர்களாகிய முனிபுங்கவர்களையும் பெருத்த துன்பங்களுக்கு உள்ளாக்கி மகிழ்ந்து வந்தவன், எனவே அவன் தங்களுடைய “அதர்மிகள் வதமும் அறவோர்கள் காப்பும்” என்னும் கோட்பாட்டின் படி அதாவது (துஷ்ட நிக்ரஹ: சிஷ்டபரிபாலனம்) அழிக்கப் படவேண்டியவன்தான். என்றாலும், அவன் என்னுடைய பரமபக்தன் ஆவான். எனக்குச்சேவைகள் செய்ததன்மூலம், என்னுடைய மனதைக்கவர்ந்து, அவனுடைய நாடான சோணிதபுரத்தைக் காப்பாற்றும் காவல்தொழிலை எனக்கே கொடுத்து விட்டான். அக்கடமையைச் செய்ததால்தான் அடியேன் தங்களை எதிர்த்துப் போராட வேண்டிய இக்கட்டான நிலைக்குத்தள்ளப்பட்டான். எனவே தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும்.” என்று வேண்டினார்.

**பக்தபிரகலாதன் வழித்தோன்றலே பாணாசுரன் என்றார் :**

மேலும் "பாணாசுரனுக்கும் உயிர்ப்பிச்சைக் கொடுக்கவேண்டும் என்றும் உறவுமுறையோடு வேண்டினார். அதுமட்டுமின்றி மகாபலிச்சக்கரவர்த்தியின் மகன் இந்த பாணாசுரன். உங்கள் சிறந்த பக்தனான பிரகலாதனுக்கு உறவினன். இரண்யகசிபுவைத்தாங்கள் வதம்செய்தபோது, அவன் மகன் பக்தபிரகலாதனுக்கு, இனிமேல் உன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு கொடியவர்களாக இருந்தபாலும் அவர்களை வதம்செய்து அழிக்கமாட்டேன் என்ற வாக்குறுதியையும் கொடுத்து உள்ளீர்கள்! இவனைக்கொன்றால் பக்தபிரகலாதனுக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றாமல் போகும் இழிநிலையும் தங்களுக்கு ஏற்பட்டுப்போகும். எனவே பாணாசுரனை மன்னிக்க– வேண்டியது தங்கள் கடமை என்பதையும்" சிவபெருமான் கிருஷ்ணருக்கு உணர்த்தினார்.

**பாணாசுரனைக் கொல்லமாட்டேன் ! பகவானின் உறுதிமொழி :**

சிவபெருமான் எடுத்துக் கூறியதன் உண்மைத்தன்மையை அறிந்த பகவான் கிருஷ்ணர். சிவபெருமானுக்கு வாணனை வதம்செய்யமாட்டேன் என்று உறுதி அளித்தார். இதற்குள் பாணாசுரனுடைய தொள்ளாயிரத்து தொன்னூற்றாறு கரங்கள் சுதர்சனச் சக்கரத்தால் துண்டிக்கப்பட்டு விட்டன. நான்கு கரங்கள் மட்டுமே மீதமிருந்த நிலையில் சுதர்சனச் சக்கரத்தை அழைத்துகக்கொண்டார் ஸ்ரீகிருஷ்ணர். எனவே, அதிகமான கரங்களைப் பெற்றிருந்ததால் ஆணவம் கொண்டிருந்த

அசுரனின் கரங்கள் துண்டிக்கப்பட்டதாகவே இருக்கும். அவை மீண்டும் பொருத்தப்பட மாட்டாது. நான்கு கைகளோடு அவன் வாழட்டும். தங்களுக்கும் சேவை செய்யட்டும் என்று அருள்புரிந்தார். சிவபெருமானின் வேண்டுதலால் பாணாசுரன் உயிர்பிழைத்தான். பாணாசுரனுக்கும் ஸ்ரீகிருஷ்ணருக்கும் நடைபெற்ற இந்தப் போரினைப்பற்றி ஸ்ரீமத்பாகவதம் எடுத்துரைக்கின்றது. ஸ்ரீமத்பாகவதத்தின் இச்சம்பவத்தைத் திருவரங்கத்தமுதனார் தன்னுடைய இராமானுச நூற்றந்தாதியில்,

**“கார்த்திகை யானும் கரிமுகத்தானும் கனலும் முக்கண்**
**மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு மூவுலகும்**
**பூத்தவனே என்று போற்றிட வாணன் பிழை பொறுத்த**
**தீர்த்தனை ஏத்தும் இராமாநுசன் என்றன் சேமவைப்பே”.**

என்று கூறியிருப்பதனாலும் அறிய முடிகின்றது. மேலும் திருப்பல்லாண்டைப் பாடிய பெரியாழ்வார்.

**“மாயப்பொருபடை வாணனை ஆயிரம்தோளும் பொழிகுருதி**
**பாயச்சுழற்றிய ஆழிவல்லானுக்குப்பல்லாண்டு கூறுதுமே”.**

என்றும் போற்றிப் புகழ்ந்துள்ளதால் : ஆழ்வார்களின் பெருமையும் இதனால் அறியப்படுகின்றது. மேலும்,

**வல்லிகொழுநன் முதலாய மக்களோடு முக்கணான்**
**வெள்கியோட விறல்வாணன் வியன்தோள வனத்தைத்துணித்து**
**உகந்தான்**

**பெ.தி.மொழி(1513) என்ற பாசுரத்தாலும்**

**“.......ஈசன் தன் படையொடும் கிளையோடும்**
**ஓட வாணனை ஆயிரம் தோள்களும் துணித்தவனுறை கோயில்”**
**(பெ.தி.மொழி.1262.)**

என்ற பாசுரத்தாலும், முருகப்பெருமான் முதலானோரும் பாணாசுரனுக்குத்துணையாக வந்து போர்புரிந்ததால், அவர்களும் தோற்று ஓடிப்போனார்கள் என்ற செய்தியைக் கூறியுள்ளார்.

இதனால் ஒருவர் எவ்வளவு சிறப்பும் வீரமும் பெற்றவர்களாக இருந்தாலும், அவர்கள் அதர்மத்திற்கும் அதர்மிகளுக்கும் துணையானால், அவர்களுக்கும் வெற்றி கிடைக்காது என்பதையும் இந்தப்போரின் முடிவு வெளிப்படுத்துவதை அறியலாம்.

**உஷாவை ஒப்படைத்தான் உயிர்பிழைத்த பாணாசுரன் :**

தனது அகங்காரம் அழிக்கப்பட்டதை அறிந்த பாணாசுரன், வெட்கித் தலைகுனிந்து நின்றான். தனது மகளின் மனம்கவர்ந்த ஆணழகன் கிருஷ்ணனின் பேரனான அநிருத்தன் என்பதையும் அறிந்தான். எனவே அவனை விடுவித்து, ஸ்ரீகிருஷ்ணரோடு அவனை அனுப்பி வைக்கவேண்டும் என்று முடிவு செய்தான். தன்னுடைய நாட்டிற்கு விரைந்து சென்று, அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அநிருத்தனையும், உஷாவையும் அலங்காரம்செய்து அமர்த்தி அழைத்துவரச்செய்தான். மங்கள வாத்தியங்கள் எங்கெங்கும் முழங்கின, தனது மகளான உஷாவையும் ஸ்ரீகிருஷ்ணருடைய பேரனான் அநிருத்தனையும் ஸ்ரீகிருஷ்ணரிடம் ஒப்படைத்தான் பாணாசுரன்.

பயத்திலிருந்து விடுதலைபெற்ற பாணாசுரன், தன் தலையானது தரையில் படுமாறு நெடுஞ்சாண் கிடையாக நிலத்தில் விழுந்து ஸ்ரீகிருஷ்ணருக்கு வணக்கம் தெரிவித்தான்.

தனதுகமகளை அவள்மனம்கவர்ந்த கள்வனான மாயவனின் பேரனுக்கு மணம் செய்து கொடுக்க முழுமனதோடு விரும்பினான். தனது மகளைத்திருமணம் முடித்துக் கொள்வதில் தனக்குப் பரபூரண சம்மதம் என்பதையும், பரமபுருஷரிடம் தெரிவித்தான். அதோடு நிற்காமல் ஏராளமான செல்வங்களையும் தன்னுடையமகளுக்குச் சீர்வரிசையாகத் தந்தான். பகவானும் உஷாவையும், அவனுடைய காணிக்கைகளை ஏற்றுக் கொண்டார்.

**உஷா - அநிருத்தன் திருமணம் :**

தான் வந்த நற்காரியத்தைச் சுபமாக முடித்துவிட்டதால் மனம் மகிழ்ந்தார் ஸ்ரீகிருஷ்ணர். சங்கரராகிய சிவபெருமானிடமும், பாணாசுரனிடமும் விடைபெற்றுக் கொண்டனர் யாதவ சகோதரர்கள். எனவே வெற்றிக் களிப்போடும், தங்கள் இளவரசனை மீட்டெடுத்த மகிழ்சிசயோடும் ஸ்ரீகிருஷ்ணபலராமரின் படைகள் அனைத்தும் துவாரகையை நோக்கிச்சென்றன. காணாமல் போயிருந்த அநிருத்தன் தகுந்த துணைவியோடும் துவாரகைக்கு வருகிறான் என்பதை அறிந்த மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்தார்கள். தமது வீடுகளையும், வீதிகளையும் அலங்கரித்தார்கள். அனைவருமாகச் சேர்ந்து, ஸ்ரீகிருஷ்ணபலராமர்களுக்கு பெரும் வரவேற்பு அளித்தனர். அளவற்ற ஆனந்தம் கொண்டவர்களாக அனைவரும் அரண்மனைக்குச் சென்றார்கள். பின்னர் ஒரு நல்ல சுபமுகூர்த்தநாளில் உஷாவிற்கும் அநிருத்தனுக்கும் திருமணம் இனிதே முடிவுற்றது.

பாணாசுரன் பகவான் கிருஷணரோடு போரிட்டதையும், அப்போரில், அவனுடைய தொள்ளாயிரத்து தொன்னூற்றாறு தோள்களைப் பகவான் தன்னுடைய சுதர்சனச்சக்கரத்தால் அரிந்துதள்ளியதையும், பெரியாழ்வார் மட்டுமன்றி மற்றைய ஆழ்வார்களும் பாடியுள்ளனர்.

**இக்கதையைக் கேட்பதன் பலாபலன் :**

பாணாசுரன் என்ற இவ்வாணாசுரனை, பகவான் ஸ்ரீகிருஷ்ணர் வெற்றிகொண்ட இக்கதையைக் காலை நேரத்தில் படித்தும், கேட்டும் இன்புறும் அடியார்களுக்குத் தம்முடைய வாழ்வில் எவ்விதத்தோல்வியும் ஏற்படாது. என்றும் அனைத்துவிதமான வெற்றிகளையும் பெற்று வாழ்வாங்கு வாழ்வார்கள் என்பதையும் சுகமுனிவர் பரீட்சத்திற்குக் கூறினார்.

இதை, ஸ்ரீமத்பாகவதத்தின் அறுபத்து மூன்றாம் அத்யாயத்தின் இறுதி ஸ்லோகமான

**ய ஏவம் கிருஷ்ண-விஜயம் சங்கரேண ஸ சம்யுகம்**
**ஸம்ஸ்மரேத் ப்ராதர் உத்தாய ந தஸ்ய ஸ்யாத் பராஜய:**

என்னும் 53. ஆம் சுலோகத்தால் அறியலாம்.

**ஓம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மநே நம:!**
**யுத்ர யத்ர ஸ்ரீகிருஷ்ண... சேர்க்க.**

## 18. ஜராசந்தனுக்கும் சாயுஜ்ய முக்தி

பண்டைக்காலத்தில் பாரதத்தில் இருந்த பற்பல நாடுகளுள் மகதநாடு என்பதும் ஒன்றாகும். துவாபரயுகத்தில் பரப்பிரம்ம பெருமானாகிய ஸ்ரீகிருஷ்ணர், தர்மத்திற்கும் தர்மவான்களுக்கும் நலிவு ஏற்படுகின்றபோது, அவர்களைக்காக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் தான் அவதாரம் எடுப்பதாகவும் தனது கீதாஉபதேசத்தில் அர்ச்சுனனிடம் அறிவுறுத்தியதை நாம் அறிவோம். அவ்வகையில், தர்மத்தின் வழியில் நடந்துவந்த பஞ்சபாண்டவர்களுக்கு கௌரவர்கள் கொடுத்துவந்த பெரும் துன்பங்களில் இருந்து அப்பாண்டவர்களைக் காக்கவும், கௌரவர்களை அழிக்கவும், அதன்மூலம் தர்மத்தை நிலைநிறுத்தவும், அவதாரம் எடுப்பது அவசியமாயிற்று! பரித்ராணாய சாதுனாம், விநாசாய ச துஷ்க்ருதாம் எனறும் பகவானின் உறுதிமொழிக்கு ஏற்ப, மாயச்செயல்கள் மூலமும், வார்த்தை ஜாலங்களாலும், பற்பல மாயச்செயல்கள் மூலமாகவும், மிகவும் அரும்பெரும் செயல்களை எல்லாம் தனது அவதாரநோக்கத்தைப்பூர்த்தி செய்தார் என்பதை மகாபாரதம், ஸ்ரீமத்பாகவதம் போன்ற பல நூல்களில் இருந்து நாம் அறிகிறோம்.

#### ஜராசந்தன் யார் ?

அவ்வகையில், ஜராசந்தன் என்ற ஓர் அரக்க அரசனை, ஸ்ரீகிருஷ்ணர் எவ்வாறு வதம் செய்தார் என்பதை ஸ்ரீமத்பாகவதம் பத்தாம் ஸ்கந்தம், நான்காம் பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. யாதவகுலத்தைச்சேர்ந்த

ஸ்ரீகிருஷ்ணரால் மட்டும் அன்றி, வேறு எந்த யாதவகுலத்தைச் சேர்ந்தவராலும் தான் கொல்லப்படக்கூடாது என்ற வரத்தைப் பிரம்மதேவரிடம் இருந்து பெற்றுக்கொண்டவன் இந்த ஜராசந்தன்.! எனினும் ஜராசந்தனை எத்தகைய திட்டம் தீட்டி பெருமான் முடித்துவைத்தார் என்பதை நாம் அறிகின்றபோது, தமது பக்தர்களுக்காக, பெருமான் எவ்வளவு துன்பம் அடையநேரிட்டாலும் எத்தகையப் இழிந்த அவதாரம் எடுத்தாவது பக்தர்களின் குறைகளைப்போக்கும் ஆபத்பாந்தவனாக பகவான் விளங்கியதை இதில் நாம் அறிந்து இன்புறலாம்.

**தசாவதாரங்களின் தனிச்சிறப்பு:-**

மனித சமுதாயம் நிலைபெற்று வாழவும், மனிதஇனம் பூலோகத்தில் வளரவும், பகவான் உருவாக்கிய பூதேவியைக் கவர்ந்து சென்று விட்டான் இரண்யாட்சன். அதை அறிந்த பகவான், நீரிலும், நிலத்திலும் வாழக்கூடியதும், இயங்கக்கூடியதுமான வராக அவதாரம் என்ற பன்றியின் அவதாரத்தை எடுத்தார். எதனுடைய கால்களின் குளம்பிலே மாட்டிக்கொண்ட ஒரு கல்லாக மேருமலை இருந்தது என்று வியாசபகவான் அப்பன்றியை வருணிக்கும்போது கூறுகிறார். அப்படியென்றால், அது எவ்வளவு பெரியவராக உருவம் என்பதை அறிந்துகொள்ள நமது கற்பனைக்கே வழிட்டுவிடுகிறார் புராணகர்த்தா. தனது பக்தர்களுக்காக இழிவான பிறவி என்று கூறப்படும் வெண்பன்றி அவதாரம் எடுத்துச் சென்று, அந்த இரண்யாட்சனை அழித்ததை நாம் அறிகிறபோது பரப்பிரம்மத்தின் பக்தருக்காக உதவும் கடமை இதில் தெரிகிறது என்று யாவரும் அறிவோம்.

மேலும், தான் வணங்கும் பரம்பொருளான ஸ்ரீமகாவிஷ்ணு பெருமானே உலகின் ஒரே கடவுள் என்றும், அந்த ஹரியே பரம்பொருள் என்றும், அவனைத் தவிர வேறு யாரையும் தான் வணங்கமாட்டேன் என்றும் அசையாத நம்பிக்கைக் கொண்டிருந்தவனும், தன்னுடைய அந்தக்கடவுள் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்ற பக்த பிரகலாதனின் அசைக்கமுடியாத நம்பிக்கையை உணமையாக்கவும், அதர்மவாதியான அரக்கன் இரண்ய கசிபுவை அழிக்கவும் பெருமான் எடுத்த நரசிம்ம அவதாரமும் பகவானுடைய இந்தக் கல்யாண குணத்திற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

நல்லவர்களான தேவர்கள், தீயவர்களான அரக்கர்களால் அழிபடுவதைத்தடுக்க, குள்ள வடிவம் கொண்ட அந்தணச்சிறுவனாக உருமாறிச் சென்று, மூன்றடி மண் தனக்கு தானம் வேண்டும் என்று யாசித்து, மாவலி அச்சிறுவனின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக தாரைவார்த்துத் தந்தவுடன், ஆகாயம் அளவு நெடுமாலாக வளர்ந்து, மூவுலகையும் தன்னுடைய இரண்டடிகளால் அளந்துகொண்டு, மாவலியின் செருக்கினை அகற்றியவர் வாமன அவதார பகவான் என்பதையும் அறிவோம். இவற்றை எல்லாம் பார்க்கின்றபோது, வழியில்லா வழிகளிலும் சென்று, தன் செயல்கள் மூலம் தான் நினைத்ததை முடித்து, பக்தர்களுக்கு அருள்பாலிப்பவன் அந்தப் பக்தவச்சலன் என்பதையும் புராணங்கள் அறிவுறுத்துகின்றன.

**ஜராசந்தன் வதம் :**

அதேபோல் ஆயர்குலக்கொழுந்தாய் அவதரித்து, இளமைமுதலே பற்பல அதிசயங்கள் நிகழ்த்திய பெருமான்

வீமனோடும்,, அருச்சுனனோடும் அந்தணவேடம் புனைந்து சென்று, ஜராசந்தன் என்னும் அக்கொடுங்கோல் அரக்கஅரசனைக் கொன்றுபோட்டு, பாண்டவர்களுக்கு அருள்செய்து அவர்களைக் காத்துரட்சித்த கதையைக் கூறுவதே ஜராசந்தன் வதம் :ஆகும் இக்கதையில் வரும் நிகழ்வுகளால், பெருமானுடைய சமயோசித ஞானம், நல்லோர்க்கு உதவும் நற்குணம் ஆகியன படிப்போர்க்கு அறுசுவையாய் அமைவதோடு, பகவானுடைய பக்தியாளர்களைப் பரவசம் அடையவும் வைக்கிறது என்னும் உண்மையை உணர்ந்தறியலாம்.!

**நாரதர் வந்தார்.! இராசசூய யாகம் நடத்திடு என்றார் :**

பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தம் என்ற அழகிய நகரத்தை நிர்மாணித்து அரசாண்டு வந்தனர்!. மயன் என்ற தேவதச்சனால் உருவாக்கிக் கொடுக்கப்பட்ட அற்புதமான ஒரு அரசவை மண்டபத்தில், தருமன் எனப்படும் யுதிஷ்டிரர் தன் தம்பியர்களோடும், மற்ற எல்லா உறவுமுறையினர்களோடும் அமர்ந்திருந்தார். அவ்வரசவைக்கு ஈடுஇணை என்பது எங்குமே இல்லை எனும் படியாக அழகிய தோற்றத்தைக் கொண்டிருந்தது அந்த அரசசபை.! அதன் அரியாசனத்தில், தருமனாகிய யுதிஷ்டிரர் அமர்ந்து கொண்டிருந்தபோது, நாரதமகரிஷி அங்கு வந்தார். தன் அவைக்கு வந்த நாரதரை, வரவேற்று உபசரித்தான் தருமராசன்.

**இராசசூயயாகம் செய்திடு என்றார் :**

அப்போது நாரதமுனிவர், “யுதிஷ்ட்டிரா! நான் உன்னுடைய தந்தையான பாண்டுமகாராஜனை

எமலோகத்தில் பார்த்தேன். நீ சிறந்த முறையில் அரசாட்சி செய்து வருவதை அறிந்த அவர், மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார். மேலும் நீ ஒரு ராசசூய யாகம் செய்யவேண்டும் என்பது அவருடைய ஆசையாகும். எனவே அத்தகைய ஒரு யாகத்தைச் செய்யவேண்டியது உன் கடமை." என்று கூறினார் அதைக்கேட்டு மனம்மகிழ்ந்த யுதிஷ்டிரர்,. தனக்கும் அப்படிப்பட்ட ஓர் எண்ணம் இருப்பதை நாரதரிடம் கூறினார் மன்னர் யுதிஷ்ட்டிரர், எனவே, தான் அந்த யாகத்தை விரைவில் முடித்திட முடிவும் செய்தார். அக் கருத்தைத் தன்தம்பியாரிடமும், நாரதமகரிஷியிடமும் வெளியிட்டார். (ராசசூய சருக்கம். பாடல் 797.)

**தருமராசனுக்கு எழுந்த சந்தேகம்.!**

ஆனால், தான் அவ்வாறு. இராஜசூய யாகம்நடத்தினால், ஜராசந்தன் என்ற அரசன் மட்டும் அதை எதிர்ப்பான். அப்போது அவனுக்குத் துணையாக சிசுபாலன் போன்ற அரசர்களும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, தொல்லைக் கொடுத்தால், தனது யாகம் நிறைவேறாது போகும். அதனால் தன்னுடைய புகழுக்குக்களங்கம் உண்டாகும், தனது விருப்பம் தடைபட்டுப்போகும் என்று நினைத்த தர்மராஜன், தங்களைக் கண்போலக் காத்துவருபவரான ஆபத்பாந்தவன் ஸ்ரீகிருஷ்ணரை வரவழைத்து, அவருடைய கருத்தைக்கேட்டுச் செயல்படலாம் என்ற எண்ணத்துடன், தனது தூதுவனை துவாரகைக்கு அனுப்பிவைத்தார் யுதிஷ்டிரர்.

**துவாரகை அரியாசனத்தில் ஸ்ரீகிருஷ்ணன் :**

தன்னுடைய பற்பல விநோத விளையாட்டுச் செயல்களுக்குப்பின், ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய

பதினாராயிரத்து எட்டு மனைவியர்களோடும் ஒரே நேரத்தில் ஒவ்வொருவரோடும் இல்லற வாழ்வில் ஈடுபட்டு வாழ்ந்திருந்தார். வியாபகம் என்ற தன்னுடைய சக்தியின் மூலம் கிருகஸ்த வாழ்க்கையை மேற்கொண்டு. அண்ணன் பலராமரோடும், சாத்யகி போன்றோர்களோடும் பெருமான் அரியனையில் அமர்ந்து கொண்டிருந்தபோது ஒருநாள், ஒரு தூதுவன் அரசவைக்குவந்தான்.! ஜராசந்தனால் சிறைவைக்கப்பட்டிருந்த அரசர்கள் மிகவும் கொடுமை படுத்தப்பட்டனர். ஆகையால் கிருஷ்ணன் ஒருவராலேதான் தங்களைக் காப்பாற்ற முடியும் என்று முடிவு செய்த அந்த அரசர்கள் அத்தூதுவனைக் கண்ணனின் அரசவைக்கு அனுப்பி வைத்தனர். அந்த தூதுவனும், ஜராசந்தனின் வீரத்தையும், அவன் அரசர்களைக் கொடுமைப்படுத்துவது நரமேத யாகம் என்ற யாகத்திலே பலியிட எண்ணமிட்டிருப்பதையும் எடுத்துரைத்து, அவர்களைத் தாங்கள் காக்கவேண்டும் என்ற கோரிக்கைக்காகவே தன்னை அனுப்பிவைத்ததாகவும் கூறிக் கொண்டிருந்தான் அந்தத்தூதுவன்.

**வீரத்தால் அடைந்திட்ட விபரீத எண்ணம் :-**

மகத நாட்டை ஆண்டுவந்த இந்த ஜராசந்தன் என்னும் அசுர அரசன், தனக்கு இருந்த வரத்தாலும், பலத்தாலும், பலநாட்டு அரசர்களைப்போரில் வென்று, அவர்களைச் சிறையில் அடைத்து வைத்திருந்தான். பல அக்குரோணி சேனைகளைத் தன்னிடம் வைத்திருந்த, இவனை, ஸ்ரீகிருஷ்ணராகிய பகவான் பாண்டவர்களில் ஒருவரான பீமசேனனைக்கொண்டு வதம் செய்த கதையானது

ஸ்ரீமத்பாகவதத்தின் பத்தாவது ஸ்கந்தத்தின் மூன்றாம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இவ்வரலாறு ஸ்ரீமத் மகாபாரதத்திலும் இடம்பெற்றுள்ளது. ஸ்ரீமத் பாகவதம் என்னும் புராணமும், மகாபாரதம் என்ற இதிகாசமும் வியாச பகவானாலேயே எழுதப்பட்டவைகளாகும். இந்த வரலாறு மகாபாரத்தின் சபா பருவத்திலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

**ஸ்ரீகிருஷ்ணரின் இந்திரப்பிரஸ்த பயணம் :**

தருமராசர் எனப்படும் யுதிஷ்டிரரால் துவாரகைக்கு அனுப்பபட்ட தூதுவன் வந்து சேர்ந்தபோது, மந்திராலோசனைக் கூட்டத்தில் மூழ்கியிருந்தார் கிருஷ்ணர். அப்போது உத்தவர், சாத்யகி, போன்றோர்களும், முக்கியமானவர்களும் அக்கூட்டத்தில் இடம்பெற்றிருந்தனர். அச்சமயத்தில், தூதுவனின் வருகையை அறிந்த பெருமான், அவனிடம் செய்திகளைத் தெரிந்துகொண்டிருந்த அதே நேரத்தில் நாரத மகரிஷியும் அங்கு வருகை தந்தார். அவருக்கு நல்வரவு கூறி, உயர்ந்த ஆசனத்தில் அமரவைத்தார் கிருஷ்ணர். நாரதரும் தூதுவன் மூலமாக, தர்மன் உரைத்தசெய்திகளையே எடுத்துரைத்து. ஜராசந்தன் அக்கிரமங்களையும், அவனைக் கிருஷ்ணர் வதைக்கவேண்டியதன் அவசியத்தையும் கூறினார். மேலும் அந்த ஜராசந்திரனிடம் சிறைப்பட்டிருக்கும் அரசர்களைக் காப்பாற்றி அவர்களை மீட்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார் நாரதர். கிருஷ்ணரும் இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார் நாரதர் அங்கிருந்து சென்றுவிட, உத்தவரின் ஆலோசனைப்படி ஸ்ரீகிருஷ்ணபலராமர்கள் தமது

பரிவாரங்களுடன் இந்திரப்பிரஸ்தத்திற்கு பயணப்பட்டனர்., விரைவிலேயே இந்திரப்பிரஸ்தம் சென்றனர்.

**தர்மராஜனுக்கு கிருஷ்ணர் கூறிய ஜராசந்தன் வரலாறு :**

தனது சபைக்கு வந்த ஸ்ரீகிருஷ்ணர் பலராமர், சாத்யகி, உத்தவர் ஆகிய அனைவரையும் வரவேற்று, முகமன் கூறி, சிறப்பான விருந்தையும் கொடுத்து மகிழ்ந்தார் யுதிஷ்டிரர். தான் செய்யப்போகும் இராசசூய யாகத்திற்குத் தடையாக இருப்பவனாகிய ஜராசந்தனைப்பற்றி குறிப்பிட்ட தர்மர், அவனுடைய வரலாற்றை அறிய விரும்பி, தங்களுக்கு அதை எடுத்துரைக்குமாறு கிருஷ்ணரிடம் கேட்டார். அவருக்கு எடுத்துரைப்பதைப் போல இந்த ஜராசந்தன் வதம் பற்றிய வரலாறு அமைந்துள்ளது.

ஆனால், பீமனால் வதம் செய்யப்பட்டு கிழித்து எறியப்பட்ட ஜராசந்தன் உடல்கள் மீண்டும் உயிர் பெற்று எழுந்த ஆச்சரியத்தைக் கண்ட அர்ச்சுன்ன அதற்குரிய காரணத்தைக் கண்ணபெருமானிடம் கேட்டதாகவும், அதற்கு ஜராசந்தனுடைய வரலாற்றைக் கண்ணபெருமான் கூறியதாகவும், வில்லிபுத்தூராழ்வார் கூறுகிறார். (ராசசூய யாகச் சருக்கம். பாடல்.818.)

**பிருகத்ரதனும், ஆட்சி சிறப்பும் :**

மகத நாட்டின் தலைநகரமாக விளங்கியது கிரிவிரஜம் என்னும் நகரமாகும். அதனை பிருகத்ரதன் என்னும் அசுரகுலத்து அரசன் ஆண்டுவந்தான். அவன் மிகுதியான படைபலத்தை உடையவன். மூன்று அக்குரோணி சேனைகளுக்கு அவன் அதிபதியாக இருந்தான்.

குபேரனைப்போன்ற செல்வ வளத்தையும், தேவேந்திரனைப்போன்ற திவ்வியத் தோற்றத்தையும் உடையவனாகிய அவனுக்கு இரண்டு மனைவிமார்கள் இருந்தார்கள். காசிராஜனின் மகள்களான அந்த இரண்டு பேர்களிடத்திலும் உறவு கொண்டு இன்பமாகக் காலத்தைக் கழித்து வந்தான் பிருகத்ரதன். மேலும் அவன் ஜரா என்ற பெயருடைய ஒரு பேய் அரக்கியை ஆராதித்து வந்தான். உபாசனை செய்து வந்ததோடு, அதன் உருவப்படத்தையும் அரண்மனையில் பல இடங்களிலும் மாட்டிவைத்திருந்தான். அதனால் அவனுடைய செல்வச்செழிப்பு மென்மேலும் பெருகியதாக அவன் நினைத்தான்.

**புத்திரப்பேறு இல்லாததால், தவம் இயற்ற காட்டிற்குச் சென்றான்.!**

இருமனைவியருடனும் இல்வாக்கையை நடத்திய அவனுக்கு ஏனோ புத்திரப்பேறு உண்டாகவில்லை. நாளடைவில் இந்தத்துயரமே அவனைப் பெரிதாக வாட்டி எடுத்தது. செல்வச் செழிப்போடு இருந்தும், புத்திரன் இல்லாமல் வாழும் வாழ்க்கையானது ஒரு பொய்யான் வாழ்க்கைதான் என்று நினைத்திருந்த அவன் ஒருநாள் தனது இரண்டு மனைவிமார்களையும் அழைத்துக்கொண்டு, கானகம் சென்று தவம் இயற்றுவதற்காகப் புறப்பட்டுப்போனான்.

**சண்டகௌசிக முனிவர் தந்த வரம் :**

தவம் இயற்றி, பகவான் திருநாமத்தை உச்சரித்தவாறு, தனது இருமனைவியருடனும் முக்தி அடையலாம் என்னும் உறுதியுடன் பிருகத்ரதன் சென்று கொண்டிருந்தபோது தற்செயலாக ஒருமாமரத்தினடியில் சண்டகௌசிகர் என்ற ஒரு

சிறந்த முனிவரைக்கண்டான். தவச்சீலராகவும், யோகியாகவும் வாழ்ந்த அவரைப்பார்த்தவுடன் அரசன் தனது இரண்டு தேவியர்களோடும் சென்று அவரை வணங்கினான். அம்முனிவருக்கு மூவருமாகச் சிறந்த பணிவிடைகள் செய்தனர். அதனால் மகிழ்ச்சி கொண்ட முனிவர் அரசனைப்பார்த்து, அவர்கள் காட்டைநோக்கி வந்திருப்பதன் காரணத்தைக்கேட்டார். அரசனும் தன் அரச வைபோக வாழ்க்கையையும், சிறப்புடன் அரசாட்சி செய்த நிலையையும் எடுத்துரைத்து, இறுதியில் தனக்கு வாரிசு இல்லாமல் போனதால் மனம் வருந்தி தவம் செய்யும் பொருட்டு, வானப்பிரஸ்த தர்மத்தை மேற்கொள்ளகானகம் வந்துவிட்டதாகவும் எடுத்துரைத்தான்

ஆனால் முனிவர் அரசனுக்கு ஆறுதல் கூறி, அம்மாமரத்தடியிலேயே தவத்தில் அமர்ந்து யோகம் செய்தார். சற்று நேரத்தில் அம்மரத்தில் இருந்த அற்புதமான மாங்கனி ஒன்று முனிவர் மடியில் விழுந்தது. அரசனை அழைத்த சண்டகௌசிகர், அவனுடைய இரு மனைவிகளுக்கும் அப்பழத்தைக் கொடுக்குமாறும், அதனால் அவர்கள் கருவுற்று, காலாகாலத்தில் புத்திரப்பேறு அடைவார்கள் என்றும் கூறி, ஆசீர்வதித்து, மீண்டும் அரண்மனைக்கே செல்லுமாறு ஆணையிட்டார். அரசனுக்குப் பிறக்கப்போகும் அக்குழந்தைக்கு தான், எட்டுவிதமான வரங்களைத் தருவதாகவும், ஆசிவழங்கினார். நாளடைவில் அவனுக்கு- பிறக்கப்போகும் மகனுக்கு பட்டாபிஷேகம் செய்துவைத்த பிறகு கானகம் வந்து தவம் இயற்றி நற்பேறு பெறவேண்டும் என்றும் கூறி அனுப்பிவைத்தார். அவர்களும் மகிழ்ச்சியோடு அரண்மனைக்குத் திரும்பினார்கள்.!

**பாதியாக அரிந்து பழத்தை உண்டனர்...**

மகப்பேற்றிற்காக முனிவர் கொடுத்த மாங்கனியை அவனுடைய இரு மனைவியர்களும் உண்ணவிரும்பினார்கள் எனவே அப்பழத்தை பாதியாக அறுத்து, ஒவ்வொரு பகுதியை ஒருவர் உண்டனர். பழம் உண்ட சிறிது காலத்தில் அவர்கள் கர்ப்பம் அடைந்ததற்கான அறிகுறிகள் தோன்றின. எல்லோரும் ஆனந்தமாய் இருந்த காலத்தில், மகப்பேறுவிற்கான காலமும் நெருங்கியது. அவர்கள் பிரசவித்தனர். ஆனால் குழந்தை முழுமையாகப் பிறக்கவில்லை. ஒருபாதி உடல் உறுப்புகளை உடையதாகவே ஒவ்வொரு பாகமும் இருந்தது. பாதிமுகம், ஒருகண், ஒருகாது, பாதிமூக்கு, பாதியளவே மார்பு என்று எல்லாமே மனித உடலின் அரைபாதியை உடையதாகவே இரண்டு தசைப்பிண்டங்களாகப் பிறந்து இருந்தன. பிரசவம் பார்த்த பணிப்பெண்களான செவிலியர்கள் இதைப்பார்த்து, மனம் பதைத்து, அரசனிடமும் கூறாமல், இரண்டையும் தனித்தனியாக ஒரு துணியில் மறைத்து, இரவுப்பொழுதில் கிரிவிரஜத்தின் மதில்பக்கமாக வீசிவிட்டார்கள்.

**ஜரா ஒன்று சேர்த்தாள்.! ஜராசந்தன் எனப்பட்டான் குழந்தை !**

இரவுப் பொழுதின் நடுப்பகுதியில் ஜராஎன்ற அந்த அரக்கி அரண்மனையைச் சுற்றி வந்தாள். அவள் நிணத்தையும், மாமிசத்தையும் விருப்பமோடு உண்பவள் அப்போது தாதியர்கள் வீசிய உடலிலிருந்து நிணநாற்றமும், முடைநாற்றவும் வீசியது. குளிப்படைந்த அவள் இரு துண்டுகளைகளையும் தேடி எடுத்து இணைத்து ஒன்றாக்கி,

ஒரேவாயில் உண்டுமகிழலாம் என்று நினைத்து அவற்றைத்தன் கைகளால் இணைத்தாள், உடனே உயிர் பெற்ற அந்தக்குழந்தை இடிபோன்ற பெருத்தஓசையுடன் அழுதது. அந்த அலறல் ஒலியைக்கேட்டு அரண்மனையில்ருந்த அரசன் முதலிய யாவரும் வெளியில் ஓடி வந்தனர். உடனே ஜரா தன்னை ஒரு மானிடப்பெண்ணாக உருமாற்றிக் கொண்டாள். ஜராவின் கையில் குழந்தை ஒன்று தவழ்ந்ததைக்கண்டார்கள். அப்போது நடந்ததை விளக்கிக் கூறிய ஜரா, அரசன் தன்னை இத்தனை நாட்களாக ஆராதித்து வந்தமைக்காக தான் அரசனுக்குச் செய்த உபகாரம் இது. என்றும், அக்குழந்தையே அவனது வாரிசு என்றும் கூறிவிட்டு மறைந்து போனது.

**ஜராசந்தன் வளர்ச்சி!**

உயிரின்றி எறியப்பட்ட அவ்விரண்டு துண்டுகளும், ஜராவின் செயலால் ஒன்றிணைந்து உருவாகிய குழந்தை ஆகையினால், அக்குழந்தைக்கு ஜராசந்தன் என்று பெயர்வைத்து வளர்த்துவந்தான் பிருகத்ரதன்.! ஜரா என்பவளால் சேர்க்கப்பட்டு உயிர் பெற்றவன் என்பது இதன் பொருளாகும். ஜராசந்தன் மிகுந்த பலம் வாய்ந்தவனாகவும், அழகியதோற்றத்தை உடையவனாகவும் இருந்தான். ஆனால் அவன்பேசும் சாதாரணப்பேச்சும், கழுதைக்குரல் போன்றும், இடியோசை போன்றும் எப்போதும் ஒலிக்கும். ஆனால், அரசகுமாரர்களுக்கு தேவைப்படுகின்ற அனைத்தையும் கற்றான். அதிலும் சிறந்த கதாயுதப்பயிற்சி பெற்றவனாகவும், மல்யுத்தத்தில் கைதேர்ந்தவனாகவும் விளங்கினான்.

**முனிவர் அருள்மொழியும், பிருகத்ரதன் தவமும் :**

பிருகத்ரதனுக்குப் புத்திரப்பேறு பாக்கியம் அளித்த சண்ட கௌசிகர் என்ற அம்முனிவர் ஒருநாள் பிருகத்ரதனைக்காண வந்தார். அதை அறிந்துகொண்ட அரசன் அவரை எதிர்கொண்டழைத்தான். மேளதாங்கள் முழங்கவும், மங்களப் பொருட்களின் சீர்வரிசைகளாலும் முனிவரை வரவேற்று, நல்ல உபசாரமும் அரசன் செய்தார். அதனால் முனிவரின் மனம் மேலும் மகிழ்ச்சி அடைந்தது. அதனால் முனிவர் ஜராசந்தனைப் பலஆசிமொழிகளால் வாழ்த்தினார். மேலும் அவர் அரசனைப்பார்த்து, உன்மகன் மிகுந்த பலமும் வலிமையும் பெற்றவன். இவனை யாராலும் வெல்லமுடியாத பெரும் உடல்பலம் கொண்டவன். இவனை அழிக்கநினைக்கும் எதிரிகள் தாமாகவே அழிந்து போவார்கள். விளக்கொளியில் பட்டு வீழ்ந்தழியும் விட்டில் பூச்சிகளாய் அழிந்து போவார்கள் என்றும் நல்லாசிகளைக் கூறினார். மேலும் நீ உன்மகனுக்கு இந்தநாட்டின் அரசனாக முடிசூட்டிவிட்டு, உன் துணைவியரோடு முன்பு விரும்பிய தவவாழ்க்கையைப் பெறுவதற்குத் தகுந்தநேரமும் இதுதான் என்றும் கூறி விட்டு, அரசனை அனுப்பிவிட்டுதான் மீண்டும் வனத்திற்குச்சென்று சேர்ந்தார்.

சண்ட கௌசிகர் கூறிய அறிவுரையைக் கேட்ட பிருகத்ரதன், தன் மகனாகிய ஜராசந்தனுக்குப் பட்டாபிஷேகம் நடத்தி வைத்தார். அரசனாக முடிசூட்டிக்கொண்ட ஜராசந்தனும், தன்னுடைய பலத்தாலும், மதிநுட்பத்தாலும், பலநாட்டு அரசர்களின் மேல் படை எடுத்துச்சென்றான். அவர்களை எல்லாம் வென்று, தன்னுடைய ஆட்சிக்கு உட்பட்டவர்களாக ஆக்கிக்கொண்டான். அந்த அரசர்கள்

அனைவரும் ஜராசந்தனுடைய சிறையில் அடைக்கப்பட்டார்கள், அவனுடைய தாக்குதலுக்குப் பயந்து போன பல அரசர்கள், கடலுக்கு அடியில் சென்றும் மறைந்துகொண்டார்கள் என்கிறார் வில்லிபுத்தூர் ஆழ்வார்.

**நரமேதயாகத்தால் பலியிட நினைத்தான் :**

ஜராசந்தனால் கைப்பற்றப்பட்டு, சிறையிலே அடைத்து வைக்கப்பட்டிருந்த எட்டாயிரம் அரசர்களையும், நரமேத வேள்வி செய்து, அவர்களை யாகப்பசுக்களைப்போல், பலியிட தீர்மானித்தான். இவனை எதிர்ப்பவர்கள் யாரும் இல்லை. இவனுடைய பெயரை உச்சரிப்பதற்குக் கூட, இந்திரன் உள்ளிட்ட எல்லோரும் பயந்து நடுங்கினார்கள். ஆக மிகப்பெரும் படைபலத்தோடும், வலிமையோடும் ஒருசக்கரவர்த்தியைப்போல தனித்துவம் பெற்ற அரசனாக விளங்கிவந்தான் ஜராசந்தன்.

**ஸ்ரீகிருஷ்ணன் பகைமை கொண்டான் ஜராசந்தன் :**

தன் படைபலத்தால் பெருமிதம் கொண்டிருந்த ஜராசந்தன், தனக்கு, யாதவர்களால் மரணம் இல்லை என்பதையும் அறிந்திருந்ததால், மிகுந்த கர்வம் கொண்டவனாகவும் இருந்தான். பிரம்மதேவரால் இந்த வரமானது ஜராசந்தனுக்குக் கொடுக்கப்பட்டது. கிருஷ்ணரால் வதம் செய்து அழிக்கப்பட்ட கம்சனுக்கு, ஜராசந்தன் தனது மகளைத்திருமணம் செய்து கொடுத்திருந்தான். தனது மருமகனாகிய கம்சனை அழித்து, தனது மகளை அமங்களியாக்கிய கிருஷ்ணனைக் கொன்று விடவேண்டும் என்று அன்றிலிருந்தே துடிதுடித்துவந்தான்.. எனவே கிருஷ்ணனைத்தான் பழிவாங்கவேண்டும் என்று

முடிவுசெய்து, அவரைக் கொல்லவேண்டும் என்று முடிவு செய்தான். இந்த அரக்க அரசன் கிருஷ்ணருடன் பதினெட்டு முறை போர்தொடுத்து, ஒவ்வொரு முறையும் தோற்றோடிப்போனான், அவர்மீது பலமுறை போர்த்தொடுத்தான் ஆனாலும் அவனது எண்ணம் ஈடேறவில்லை.!

சாட்சாத் பகவானின் அவதாரமான கண்ணனை இவனால் என்ன செய்துவிட முடியும்? பகவான் ஆற்றலுக்கும், திருவிளையாடல்களுக்கும் முன்பாக, இவன் எம்மாத்திரம்? அதை அறியாத மூடனாக இருந்த ஜராசந்தன், தனியாகவும், மற்ற அரசர்களோடு சேர்ந்து கொண்டும், பலமுறை துவாரகையின் மீது படை எடுத்தான். ஒவ்வொரு முறையும் கிருஷ்ணரால் தோற்கடிக்கப்பட்டான். இவன் புறமுதுகு காட்டி ஓடி தப்பித்துக் கொள்வான். ஆனால் அவனது படையோ பகவானால் முழுதுமாக நிர்மூலமாக்கப்படும். இப்படி பலமுறை தோற்று ஓடும் போதெல்லாம் பல அக்ரோணி சேனைகளை கிருஷ்ணர் அழித்தாலும், அடுத்த சில மாதங்களில் பல அக்ரோணி படை வீரர்களுடன் போர் தொடுப்பான். இவ்வாறாக பலமுறையும் ஜராசந்தனின் படைகளை நிர்மூலமாக்கி அழிப்பதன் மூலம், தனது அவதார நோக்கமான பூமியின் பாரத்தைக்குறைக்கும் கடமையை ஒழுங்காகச் செய்து வந்தார் கிருஷ்ணபகவான்.

**காலயவனனோடு சேர்ந்தும் யுத்தம் செய்தான் :**

ஜராசந்தனைப்போன்றே பகவான் ஸ்ரீ கிருஷ்ணரோடு பகைமையும் பொறாமையும் கொண்டிருந்த மற்றொரு அரசன் காலயவனன் என்பவன். இவன் ஒருமுறை கிருஷ்ணர் மீது பெரும்படை திரட்டிவந்து, பயங்கரமாக எதிர்த்தான். இதை

அறிந்த ஜராசந்தன், தானும் மற்றொரு பக்கம் தாக்கி நெருக்கடி கொடுத்தால், கிருஷ்ணரை எளிதாக வென்று விடலாம், அழித்தும் விடலாம் என்று மனக்கோட்டைக் கட்டினான்.. தங்களுக்கு ஏற்பட்ட நிலையைக்கண்ட யாதவகுல அரசர்களான ஸ்ரீகிருஷ்ணரும், பலராமரும், சேர்ந்து பகைவர்களை எதிர்த்தார்கள். போர் மிகவும் உக்கிரமாக நடைபெற்று வந்தது.

**ரணசோர் கிருஷ்ணர் :**

ரணசோர் என்றால் போக்களபூமியை விட்டு ஓடிப்போனவன் என்பது பொருளாகும். காலயவனனை அழிப்பதற்காக பகவான் பயந்தவர்போல் யுத்தபூமியை விட்டு ஓடிப்போய், அவனைத்தந்திரமாகக் கொல்வித்தது அவருடைய மாயாச் சக்திக்கு மற்றொரு உதாரணம் ஆகும். அதை அறிந்தோர் கிருஷ்ணரை ரணசோர் என்றும் அழைத்து மகிழ்வார்கள். பலராமன் ஒருபக்கம் போர்செய்து கொண்டிருந்த போது, கிருஷ்ணர் மட்டும் தனியாக ஒருநாள் போர்க்களத்தை விட்டுச் சென்றார். போர்க்களத்தை விட்டுச் செல்லும் தன்னை யாரும்பார்த்துவிடக்கூடாது என்று பயம் கொண்டவரைப்போல, பதுங்கி பதுங்கிச் சென்றார் அவர். கைகளில் ஏதும் ஆயுதம் இன்றி நிராயுதபாணியாகச் செல்லும் அவரைப் பின்தொடர்ந்து சென்றால், விரைவில் பிடித்து கிருஷ்ணரைக் கொன்றுவிடலாம் என்று நினைத்துக் கிருஷ்ணரைப் பின் தொடர்ந்தான் அந்தக் காலயவனன்.!

**காலயவனன் எரித்து அழிக்கப்பட்டான்.!**

தன்னைக்காலயவனன் துரத்தி வருவதை அறிந்த பிரபு கிருஷ்ணர், மிகவேகமாக நடந்து சென்று, யுத்தகளத்திற்கு

அதிக தூரத்தில் இருந்த ஒரு மலைக்குகையினுள் நுழைந்தார். காலயவனனும் துரத்திவந்ததால், திடீரென்று அவன் கண்ணில் படாதவாறு, ஓரிடத்தில் மறைந்து கொண்டார். அவரைத் தேடிக்கொண்டு உள்ளே நுழைந்த காலயவனன் அங்கு ஒரு மனிதன் தன்னை முழுவதுமாக ஆடையால் மறைத்துக்கொண்டடு தூங்குவதைக்கண்டான்.!

யுத்தகளத்தை விட்டு ஓடிவந்து கிருஷ்ணர், தன்னை ஏமாற்றுவதற்காக, இழுத்துப்போர்த்திக்கொண்டு தூங்குபவன் போல் நடிப்பதாக நினைத்த அவன், கோபமுடன் படுத்திருந்த உருவத்தைத் தன் காலால் எட்டி உதைத்தான்.! உதைக்கப்பட்ட உருவத்திற்கு உரியவன் தன்னுடைய கோபம் கொண்ட பார்வையோடு அவனைப்பார்த்தான். அவன் கண்களின் கோபாக்கினி அந்தக்காலயவனனைச் சுட்டுப் பொசுக்கியது. அவன் எரிந்து சாம்பலாகிப்போனான். ஸ்ரீராமனின் இட்சுவாகு குலத்தைச் சேர்ந்தவனாகிய முசுகுந்தன் என்பவன்தான் அந்த மனிதன்.! குரங்கின் முகத்தைக் மூடிக் கொண்டிருந்ததால், முசுகுந்தன் என்ற பெயரோடு அரசாண்ட அவன், மிக்க வீரம் உடையவன்.

**முசுகுந்தன் தீப்பார்வை சுட்டெரித்தது காலயவனனை :**

தேவாசுரப்போரில் தங்களுக்கு உதவிசெய்ய இந்திரன் வேண்டியதால், அவர்களுக்கு உதவிசெய்யவும், வெற்றிபெற்றுத் தரவும் வந்தவன் அந்த முசுகுந்தன.- யுத்தம் முடிந்து, அதில் தேவர்களுக்கு வெற்றி கிடைத்ததால், இந்திரனின் ஆசியோடு, பல ஆயிரம் ஆண்டுகள் உறங்கி ஓய்வெடுக்கவேண்டும் என்ற வரம்பெற்றான் தன் தூக்கத்திற்கு ஊறுவிளைவிக்கும் எவராக இருந்தாலும்,

அவர்கள் தன் கண்ணின் அக்கினிப்பார்வையால் எரிந்து சாம்பலாகிப் போகவேண்டும் என்றும் வரம் பெற்றுக்கொண்டிருந்த அந்தக் குகைக்குள்தான் காலயவனன் நுழைந்தான். அவன் கிருஷ்ணன் தான் தன்னை மறைத்துக்கொள்ள முகத்தை மூடிக்கொண்டு உறங்குகிறான் என்று பெருங்கோபம் கொண்டு,. தூங்கிக் கொண்டிருந்த அவனை, எட்டி உதைத்தான். அவ்வளவுதான்! காலயவனன், தன் கர்வத்தால் தானே அழிந்து போனான்.! பிறகு வெளியே வந்த பகவான் கிருஷ்ணர், முசுகுந்தன் வேண்டியவாறு அவனுக்கு மோட்சம் கொடுத்துவிட்டு, குகையிலிருந்து வெளியேறிச் சென்றார். பலநாட்களாக தங்கள் அரசனைக்காணாமல் போரிட்டு வந்த காலயவனன் படைகள், கலக்கமடைந்து, தங்கள் உயிரைக்காப்பாற்றிக் கொள்ள ஓடிச்சென்று விட்டார்கள். எனவே ஜராசந்தனுடைய முயற்சி தற்போதும் பலிக்காமல்போனதால் அவன் கலக்கமுற்றான். எனினும் அவன் தன் முயற்சியைக் கைவிடவில்லை.!

**பதினெட்டாம் முறையாக போர்தொடுத்தான் ஜராசந்தன்.!**

பெருமுயற்சிகளோடு பலவகையிலும் யாதவர்களைக் கருவறுக்க நினைத்திருந்த அந்த ஜராசந்தன், எவருக்கும் அடங்காதவனாக இருந்தான். அவன் கடைசியாக, அதாவது பதினெட்டாவது முறையாக மதுராவைத்தாக்கியபோது, அவனிடத்தில், இருபத்துமூன்று அக்ரோணி சேனைகள் இருந்தன என்று அறிவதால் அவனுடைய படைப்பலம் நமக்கு விளங்குகின்றது இப்படியாக அவன் மிகப்பெரும் சக்ரவர்த்திபோல் படைபலமும், பலவளமும் பெற்றவனாக இருந்ததால்தான், அவன் தருமர் செய்ய நினைத்த இராஜசூய

யாகத்தை எதிர்த்தான். மேலும் அந்த நிலையிலும், கிருஷ்ணபகவானுக்கு ஆகாதவர்களாகவும், எதிரிகளாகவும் இருந்த சிசுபாலன், தந்தவக்த்ரன் போன்றவர்களும் இவனுக்கு நண்பர்களாக இருந்தனர். இப்படி பல அரக்க அரசர்கள் ஒன்றுகூடியிருப்பதால், அவர்களால் தான் செய்யப்போகும் ராஜசூயயாகத்திற்கு அவர்கள் முட்டுக்கட்டை போடுவார்கள். தன்னைப் பேரரசனாக ஏற்றுக்கொள்ளாமல், யாகக் குதிரையையும் கட்டிப்போட்டால், யாகம் நிறைவேறாது போகும். எனவே தன்னுடைய யாகத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஸ்ரீகிருஷ்ணபகவானின் ஆசியும், உதவியும் வேண்டும் என்று அசையாத நம்பிக்கைக் கொண்டிருந்தார் தருமபுத்திரர். ஆகையால். அவரை இந்திரப் பிரஸ்தத்திற்கு வரவழைத்தார் அந்த யுதிஷ்டிரர்.

**கண்ணபெருமானின் கருணை உள்ளம் :**

இந்த நிலையில்தான் தருமருக்கு உதவிசெய்வதற்காகவும், யாகத்தைச் சிறப்பாக நடத்திக்–கொடுப்பதற்காவும், பகவான் தன்னுடைய அண்ணனோடும், மற்ற உறவினர்களோடும் இந்திரப் பிரஸ்த்தத்திற்கு வருகை புரிந்தார்.. யுதிஷ்டிரரின் ராஜசூய யாகத்தை நடத்திக் கொடுப்பதற்காக, கிருஷ்ணர் தனது அண்ணன் பலராமரோடும், பல யாதவ வீரர்களோடும் தர்மருடைய நாட்டில் முகாமிட்டிருந்தனர். யாகத்தைத் தடுக்கக்கூடிய மிகப்பெரும் தடையாக இருக்கும் ஜராசந்தனை வதம்செய்து முடிக்காமல், யாகத்தைச் செய்யமுடியாது என்று தருமர் தீர்மானித்தார்.

**திக்விஜயம் செய்தனர் :- திரட்டினர் செல்வத்தை :**

எனவே அவர்பாண்டவர்களோடும், பலராமன், உத்தவர் போன்றவர்களோடும் ஆலோசனை செய்தார் யுதிஷ்டிரர். கிருஷ்ணரும் அவருடைய கருத்தை ஏற்றுக்கொண்டார். எனினும், இராஜசூய யாகத்தைச் செய்ய வேண்டும் பெரும் பொருளைப் பெற்றுவரவேண்டியது தர்மராசனின் கடமை என்பதைப் பகவான் அந்தப் பாண்டவர் தலைவனுக்கு உணர்த்தினார். எனவே, தன்னுடைய தம்பியர்கள் நால்வரையும், நான்கு திசைகளுக்கு அனுப்பிவைத்து, இராசசூயயாகத்தை எதிர்க்கும் மன்னர்களைப்போரில் வென்று, அவர்களிடமிருந்து பொன்னும் பொருளும் கைப்பறிக் கொண்டு வரவேண்டும் என்று ஆணையிட்டனுப்பினார் யுதிஷ்டிரர் என்ற தர்மராசன். அதற்கு ஏற்ப, நான்கு திசைகளுக்கும்போன பாண்டுபுத்திரர்கள், எதிர்த்த அரசர்களை அடக்கி, அவர்களிடமிருந்து பெரும் பொருள் திரட்டிக் கொண்டு வந்தனர்.

இவ்வாறு பொருள் ஈட்டி வந்தவர்களுள் முதன்மை இடத்தைப் பிடித்தவன் அர்ச்சுனனே ஆவான்.! அவன் பெரும் தனத்தைச் (செல்வத்தை) சேர்த்துவந்ததால், அவனுக்கு அன்றுமுதல் தனஞ்சயன் என்ற பெயரும் வழங்கலாயிற்று.

எனினும் யுதிஷ்டிரனும், ஸ்ரீகிருஷ்ணரும் எதிர்பார்த்ததைப்போலவே ஜராசந்தன் மட்டும் தருமனின் இராசசூயயாகத்திற்கு எதிர்ப்புத்தெரிவித்தான். எனவே அவனை யாகத்திற்கு முன்பாகவே வதம் செய்துவிட்டால் தான், அவனுடைய நண்பர்களாக இருக்கும், சிசுபாலன், தந்தவக்த்ரன் போன்றோருக்கு அச்சம் உண்டாகும். அவர்கள்

பயம் கொள்வார்கள் என்று நினைத்து, ஜராசந்தனை வதம் செய்வதற்கு உரிய வழி என்ன என்று கலந்தாலோசித்தார் பகவான் கிருஷ்ணர். ஏனென்றால், ஜராசந்தன் பெற்றிருந்த ஒரு வரத்தால், அவனைத் தன்னால் (ஸ்ரீகிருஷ்ணரால்) அழிக்கமுடியாது என்பதோடு, வேறு எந்த யதுகுலத்தைச் சேர்ந்தவர்களாலும் அவனை அழிக்கமுடியாது என்று பகவான் கிருஷ்ணனுக்குநன்கு தெரியும். எனவே அவர் உத்தவர் கூறிய ஆலோசனைப்படி, தன்னோடு பீமனையும், அர்ச்சனனையும் அழைத்துக்கொண்டு கிரிவிரஜம் சென்று ஜராசந்தனை முடிக்கவேண்டும் என்று திட்டமிட்டார்.

**கிரிவிரஜப்பயணம் :**

அந்தத் திட்டப்படி, கண்ணன், வீமன், அருச்சுனன் ஆகிய மூவரும் தங்களைச் சிறந்த அந்தணர்களைப்போன்ற வடிவம் கொண்டவர்களாக மாற்றிக்கொண்டார்கள். பிறகு அவர்கள் ஜராசந்தனுடைய தலைநகரான கிரிவிரஜத்தின் பிரதான வாயிற்பக்கம் நுழையவில்லை. அந்த நகரத்தில் இருந்த மிகவும் உயர்ந்த குன்றான சைத்யகத்தின் ஒரு சந்தின் வழியாக உள்ளே நுழைந்தார்கள். ஜராசந்தனின் தந்தையான பிருகத்ரதன் தன் ஆட்சிக்காலத்தில், அரசனாகிய தன் வெற்றிகளைப் பறைசாற்றுவதற்காக மிகப்பெரும் மூன்று பேரிகைகளை அமைத்திருந்தான். கிரிவிரஜத்தின் உள்ளே நுழைந்தவர்கள் அந்த மூன்று முரசுகளையும், பேரிகைகளையும் உடைத்தெறிந்து தூள் தூளாக்கினர். பிறகு அச்சிகரத்தின் குன்றைச் சிதைத்து, அதன்மூலம் உயர்ந்ததான அந்த நகரத்தின் மதில்களைப்பிடித்து ஏறி, நகரத்திற்குள் நுழைந்தனர்.

**தோஷ நிவர்த்தி செய்து கொண்டிருந்தான் ஜராசந்தன் :**

இந்திரப்பிரஸ்த நகருக்கு ஸ்ரீகிருஷ்ணரும், பீமார்ச்சுனர்களும் புறப்பட்டபோதே மகத நாட்டில், குறிப்பாக அரசன் வாழும் கிரிவிரஜத்தில் பல துர்ச்சகுனங்கள் (தீயநிகழ்ச்சிகள்) தோன்ற ஆரம்பித்தன. இதை அறிந்த அந்த நாட்டில் வாழ்ந்த அந்தணசீலர்கள், ஜராசந்தனிடம் சென்று, துர்நிமித்தங்கள் தோன்றுவதை எடுத்துரைத்து, அந்த தோஷங்களை நீக்கும் யாகங்களைச்செய்யவேண்டும் என்றும் எடுத்துரைத்தனர். ஜராசந்தன் அரக்கன் என்றாலும், வேதவியாக்கியானங்கள் அறிந்த அந்தணர்களிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான். எனவே அவன் பிராமணர்களின் சொற்படி உபாசனைகள் செய்து கொண்டு விரதங்களிலே ஈடுபட்டுவந்தான். ஜராசந்தனின் வதைக்காக கிரிவிரஜம் சென்ற அந்த மூவரும் தங்களிடம் எவ்வித ஆயுதங்களையுமம் எடுத்துச்செல்லவில்லை. ஜராசந்தனைக் கைகளாலேயே கொன்றொழிக்கவேண்டும் எனப்தே அவர்கள் திட்டமாக இருந்தது.

**திவ்விய தோற்றம் கொண்ட பிராமணர்களாக மாறினர் :**

எனவே வெறுங்கையுடனும், பிராமணத் தோற்றத்தோடும் நகரின் உள்ளே நுழைந்த அம்மூவரையும் யாரும் தடுக்கவில்லை. எனவே எளிதாக அந்த நகரத்திற்குள் நுழைந்துவிட்டனர். அவர்கள் அந்த நகரத்தின் கடைவீதிப்பக்கம் சென்றதால் கடைக்காரர்களைக் கட்டாயப்படுத்தி, மலர்மாலைகளை எடுத்து அணிந்து கொண்டனர். பலவகைக் கனிகளையும், கற்பூரச் சிமிழ்களையும் காசு கொடாமலேயே எடுத்ததுக்கொண்டனர்.

தங்களின் அழுக்கடைந்திருந்த ஆடைகளைக்கழற்றிவிட்டு, வெண்மையான, தூய்மையான ஆடைகளை உடுத்திக்கொண்டனர். பலவித நறுமணங்களைக் கொண்ட திரவியங்களைப் பயன்படுத்திக் கொண்டதால், நறுமணம் கமழும் உடல்களோடு வீதிகளில் நடந்து சென்றபோது நகரத்தின் மக்கள் அனைவரும் அவர்களைக்கண்டு ஆச்சரியம் கொண்டார்கள். மூவரும் அங்கிருந்த மூன்று நுழைவாயில்களையும் அச்சமின்றிக்கடந்து சென்றனர்.

**ஜராசந்தன் வரவேற்பும் ஸ்ரீகிருஷ்ணர் பதிலும் :**

ஜராசந்தன் இருக்கும் இடத்தை அறிந்துகொண்டார் பகவான். எனவே அவனை அழைக்கவேண்டும் என்பதற்காக எவ்வித மதிப்பும் தராதவாறு ஓ! ராஜா! ஓ ராஜா! என்று ஒருமையில் அழைத்தார்கள். அதைக்கேட்டு ஜராசந்தன் கோபம் கொள்ளவில்லை. ஆனால் அவர்களின் தோற்றப் பொலிவைக் கண்டவுடன் அவர்களுக்கு மதிப்பளிக்கவண்டும் என்று முடிவுசெய்து, அவர்களைத் தக்கமுறையில் வரவேற்றான். உபசாரமொழிகளைக் கூறினான். அப்பொது ஸ்ரீகிருஷ்ணர், பீமார்ச்சுனர்களைச் சுட்டிக்காட்டி, “இந்த இரண்டு பேரும் மௌனவரிதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். இவர்கள் நடுஇரவுவரையில் யாரிடமும் பேசுவது இல்லை. எனவே நாங்கள் மூவரும் இங்கு தங்கவிரும்புகிறோம.- நள்ளிரவு கழிந்தவுடன் நீ வந்து எங்களோடு பேசலாம்,! எங்களைப்பற்றியும் தெரிந்துகொள்ளலாம். நாங்கள் ஓய்வெடுக்க விரும்புவதால், எங்களை இந்த யாகசாலையிலேயே தங்குவதற்கு அனுமதிக்கவேண்டும்” என்று பகவான் கூறினார். அதை ஒப்புக்கொண்ட அரசன்,

அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்த பிறகு, தன் அரண்மனையை அடைந்தான்.

**நடுஇரவு கழிந்தபின் நடந்திட்ட அறிமுகம் :**

பிராமணர்கள் கூறியவாறு நடு இரவு நேரம் கழிந்து விட்டதால், அவர்களைக்காண்பதற்காகவும், அவர்கள் யார் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவும், யாகசாலையை அடைந்தான் ஜராசந்தன். உள்ளே நுழைந்தவன் மூவரையும் மிகவும் மரியாதையுடன் வணங்கினான். பகவான் கிருஷ்ணரும் மங்களம் சேரட்டும், நன்மை உண்டாகட்டும் என்று வாழ்த்தினார். அதை ஏற்றுக்கொண்ட ஜராசந்தன். “நான் உங்களைப்போன்று ஸ்நாதக விரதம் கொண்ட அந்தணர்கள் பலபேரைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் யாரும் மாலைகளை அணிவதில்லை. சந்தனமும் பூசிக்கொள்வதில்லை.! ஆனால் நீங்கள் மாலையும் சந்தனமும் அணிந்தவர்களாக இருக்கிறீர்கள். ஆனால் ஸ்நாதக விரதம் இருப்பதாகக் கூறுகிறீர்கள்.! அதுமட்டுமன்றி உங்கள் கரங்கள் அரசர்களின் கைகளைப்போல ஆண்மைத்தன்மையும், வீரமும் கொண்டவைகளாக விளங்குகின்றன.! வில்லேந்தியதால் ஏற்பட்ட வடுக்களும், அம்பறாத்தூணியைப் பயன்படுத்திய காய்ப்பு ஏறிய தோள்களும் கைகளும் உங்களுக்குக் காணப் படுகின்றன. மேலும் நீங்கள் நேர்வழியில் வராமல் மலைக் குன்றைச் சிதைத்து அதன் மூலமாக குறுக்கு வழியில் வந்துள்ளீர்கள். எனவே நீங்கள் பிராமணர்கள் அல்லவென்பது எனக்குப்புரிகின்றது. நீங்கள் யார்? இங்கு வந்ததன் நோக்கம் என்ன” என்று கேட்டான் ஜராசந்தன்.

**கொல்வதற்கு வந்துள்ளோம் கொடுங்கோலனே !**

ஜராசந்தனின் இந்த வினாக்களுக்கும் கண்ணபெருமானே விடைகூறினார். “அரசனே! நாங்கள் ஸ்நாதக விரதம்மேற்கொண்டவர்கள்தான். இந்த விரதத்தை, அந்தணர்கள் மட்டுமல்லாமல், அரசர்களும், வைசியர்களும் கூட மேற்கொள்ளலாம். தைரியம் மிக்கவர்கள், எதிரியின் வீட்டிற்கு வழியில்லா குறுக்குவழியிலும் வரலாம். நண்பர்கள் வீட்டிற்கு நேர்வழியிலும் வரலாம்.” என்று பதில் கூறி, சற்று நிறுத்தினார். அப்போது என் இருப்பிடத்திற்கு வழியில்லாவழியாகிய குறுக்குவழியில் வந்தவர்களாகிய நீங்கள் என்னுடைய எதிரிகள் என்பதை உணர்த்துகிறீர்கள்.! ஆனால் நான் உங்களை எப்போதும் இதற்குமுன் கண்டதில்லை. ஆனால் எங்கோ பார்த்தது போன்ற நினைவு ஏற்படுகிறதே தவிர, எங்கே பார்த்தேன். எப்போது பார்த்தேன் என்று நினைவிற்கு வரவில்லை. நான்.! உங்களுக்கு எவ்விதத் தீங்கையும் இழைத்ததும் இல்லை. அப்படியிருக்க என்னை எவ்வாறு எதிரி என்கிறீர்கள்” என்று கேட்டான்.

**வாசுதேவர் அளித்த பதில் :**

அப்போது ஸ்ரீகிருஷ்ணர், “நீ என்னை நன்றாகக்கண்டால் நான் யாரென்று தெரிந்துகொள்வாய். என்னை அழிப்பதற்காக பதினெட்டு முறை படைஎடுத்தவன் நீ! ஆனால் உன்னுடைய பலமும் வீரமும் என்னிடம் எடுபடவில்லை. ஏனென்றால் நான்தான் வாசுதேவ கிருஷ்ணனாகிய பரப்பிரம்மம். இதோ இங்கு பெருத்த உடலோடு உன்முன்னே நிற்பவன் பாண்டவர்களில் பீமாசேனன். அடுத்தவன் காண்டீவம் கைக்கொண்ட அர்ச்சுனன். நீ தர்மபுத்திரர் செய்யும்

இராசசூய யாகம் நடைபெறாமல் தடுக்க முழுமூச்சோடு செயல்படுகிறாய்! மனிதனாகப் பிறந்தவன், தன் குலத்தைச்சேர்ந்த அனைவரின் நலனுக்காகவும் அரசாட்சி செய்பவனாக இருக்கவேண்டும்.

**அறநெறி தவறினால் அழிவது உறுதி !**

ஆனால் ஜராசந்தா, நீயோ உன்படைபலத்தின் கர்வத்தால், அரசர்களை எல்லாம் அடிபணிய வைத்து, சிறையிலே அடைத்து சித்ர வதை செய்து வருகிறாய். இருபதினாயிரத்து எண்ணூறு அரசர்களை நரவேள்வியில் பலியிடத் துணிந்துள்ளாய். இத்தகைய கொடுமையை நாங்கள் இதுவரை எங்குமே பார்த்ததுமில்லை.! கேள்விபட்டதும் இல்லை. அத்தகையவனாகிய உன்னைக் குற்றமற்றவன் என்று எவ்வாறு கூறமுடியும்? எனவே அரசகுலத்தினரைக் கருவறுத்து அடியோடு அழிக்கநினைக்கும் நீ, அரசர்களாகிய எங்களுக்குப் பொது எதிரியாவாய். எனவே உன்னை எதிரி என்று குறிப்பிட்டோம். எனவே நீ உன் அநியாயச் செயல்களை உடனே நிறுத்தவேண்டும். அரசர்களை எல்லாம் சிறையிலிருந்து விடுவித்து அனுப்பவேண்டும்.! யுதிஷ்டிரர் செய்யும் இராஜசூய யாகத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதற்கெல்லாம் நீ உடன்படவில்லை என்றால், உன்னிடம் போரிட்டு உன்னைக் கொல்வதற்காகவே வந்துள்ளோம். எனவே எங்களோடு நீ சண்டை செய்! உன்பலம் அழியக்காண்பாய்" என்று கூறினார் பரப்பிரம்மமான ஸ்ரீகிருஷ்ணர்.

**ஜராசந்தன் கோபாவேச உரை :**

பகவான் கூறியதைக்கேட்ட ஜராசந்தன் கொதித்து எழுந்தான். "அடே ! சூழ்ச்சிக்காரப்பயலே! மாயாண்டி! நீ கம்சனையும், அவனைச்சார்ந்தவர்களையும் கொன்று அழித்ததால், நீதான் உன்வீரத்தின்மீது கர்வம் கொண்டுள்ளாய். பாலகிருஷ்ணனாக இருந்தபோது, நீ பூதனை, சகடாசுரன், பிரலம்பாசுரன், அகாசுரன் பகாசுரன் போன்றவர்களை அழித்தாய்! துவாரக கிருஷ்ணனாக இருந்தபோதும் பாணாசுரன், பஸ்மாசுரன் காலயவனன் போன்றோர்களையும் எளிதில் அழித்துவிட்டாய். ஆனால், நீ என்னை அழிக்கமுடியாது.! உன் வீரமெல்லாம் என்னிடம் செல்லாது. உடனே ஓடிப்போங்கள். இல்லையென்றால் நீங்கள் தான்அழிக்கப்படுவீர்கள் என்று சிம்ம கர்ஜனை செய்தான்.! ஆணவச்சிரிப்புடன் அனைத்து திசைகளையும் நடுங்கச்செய்தான்.!

**வீண்வார்த்தை வேண்டாம்! வீரத்தைக்காட்டு!!**

சிங்கத்தின் குகைக்குள்ளே வந்து மாட்டிக்கொண்ட சிறுநரிகள் என்று அந்த மூவரையும் நினைத்தஜராசந்தன், கிருஷ்ணரின் சவாலை ஏற்றுக்கொண்டான். தன் யாகபூமியில் அவர்கள் என்னசெய்து என்னை வெல்லமுடியும் என்று இறுமாப்புக் கொண்டவனாகிய அவன், தான் அவர்களோடு போர்புரிவதற்கான சில ஏற்பாடுகளைச் செய்தான்.! ஜராசந்தனுக்கு சகாதேவன் என்ற ஒரு மகன் இருந்தான். (இவன் பாண்டவர்களில் கடைசியாக இருந்த சகாதேவன் இல்லை. பெயர் மட்டும் ஒன்று, அதனால் அந்தச் சகாதேவனுக்கும் இவனுக்கும் யாதொறு தொடர்பும் இல்லை)

அவனை அழைத்து அவனுக்கு அவசரமாக அரசப்பதவியைக் கொடுத்தான். பட்டாபிஷேகம் செய்வித்தான். தான் போர்செய்வதற்குரிய தகுந்ததோர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தான். இருதறத்தாரும் போர்செய்ய ஆயத்தம் ஆனார்கள்.

**இடையன் நீ உன்னோடுநான சண்டையிடமாட்டேன் !**

சண்டை புரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டதைக்கண்ட கிருஷ்ணர் நீயாரிடம் போர்புரிய விரும்புகிறாய்? என்று கேட்டார் மமதை கொண்ட அவன் நீயோ இடையர்குலத்தைச் சேர்ந்தவன். மாயாண்டி, கபடதாரி! எனவே உன்னோடு நான் போர்புரியவிரும்பவில்லை. இதோ நிற்கும் இந்த அர்ச்சுனனோ சிறுபயல் ! அவனோடு மோதுவதும் எனக்கு இழுக்காகக்கருதுகிறேன். எனவே இந்தப்பீமனோடு நான் மோதுகிறேன். இவன்தான் எனக்கு ஓரளவு சண்டைசெய்யப் பொருத்தமானவன்.” என்று பதிலுரைத்தான். உடனே போர் தொடங்குவதற்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டன. தங்கள் நாட்டு அரசனோடு, போர்புரிவதற்கு மூன்றுபேர் வந்துள்ளார்ள் என்றும், போரானது மிகவும் கொடூரமானதாக இருக்கும் என்றும் அறிந்தவர்கள் அனைவரும் போராட்டக் களத்திற்கு வந்து குழுமினார்கள்.

**கதாயுதப்போர் தொடங்கியது :**

அப்போது ஜராசந்தன் ஒரு கதாயுதத்தைக் கையில் எடுத்துக்கொண்டான். மற்றொரு கதாயுதத்தை பீமசேனனுக்குக் கொடுத்தான். இருவரும் ஒருவருக்கொருவர் மோதிக்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது. பீமனைப்போலவே ஜராசந்தனும் சிறந்த கதாயுதப்பயிற்சி

பெற்றவன். எனவேதான் ஜராசன்தன் கதாயுதப்போரைத் தேர்ந்தெடுத்தான்.! அப்போர்க்களமானது ஊரை விட்டுத் தொலைவில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு திரண்ட பெருங்கூட்டத்தினர் ஆரவாரம் செய்து, போரினைக் கண்டு களித்தார்கள். அப்பொழுது எழுந்த கதாயுதங்கள் தோன்றித் தோன்றி மறைந்தவைபோல மின்னிக்கொண்டிருந்தன. கூட்டத்தினரிடையே, இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்ட காட்சியானது இரண்டு மதங்கொண்ட யானைகள் தமக்குள் மோதிக் கொள்வதைப்போல காட்சியளித்தது. அப்போது ஏற்பட்ட கதாயுதங்களின் பேரோசையானது எட்டுத்திசைகளிலும் எதிரொலித்தது. மேகங்கள் ஒன்றோடொன்று மோதுவதைப் போல இடிமுழக்கம் ஏற்பட்டது. போர் தொடர்ந்ததால், கொஞ்ச நாட்களுக்குப்பின்னர், இருவரின் கதாயுதங்களும், சிறிது சிறிதாக சிதைந்து கொண்டே வந்து, இறுதியில் போரிடுவதற்கு லாயக்கு இல்லாமல் உடைந்தே போயின.

**தொந்தயுத்தம் என்ற மற்றொருபோர் புரிந்தனர் :**

வீமன் மற்றும் ஜராசந்தன் செய்த கதாயுதப்போரில், கதாயுதங்கள் உடைந்துபோனதால், இருவரும் தொந்தயுத்தம், அல்லது துவந்த யுத்தம் புரிவது என்று முடிவெடுக்கப்பட்டது. தொந்தயுத்தம் எனப்படும் துவந்தயுத்தம் என்று அழைக்கப்படுவது மல்யுத்தமாகும். எவ்வித ஆயுதங்களும் இல்லாமல், தமது உடல் உறுப்புகளான தோள், கைகள் மார்பு, தலைகளைக்கொண்டு ஒருவரை ஒருவர் தாக்குவது மல்யுத்தம் ஆகும்.

**வெல்லப்போவது யார் ?**

இந்த யுத்தத்தின்போது ஒருவர் மற்றொருவரைக்கீழே தள்ளியும், அவர்மார்பின் மீது தாக்கியும், கைகளை முறித்தும் உயிர்போவது வரைத் தாக்கிக்கொள்வதும், அதில் கொல்லுதலும் ஆகும். யுத்தத்தைப்பார்த்தவர்கள் பீமன் எனப்படும் வீமனின் வீரத்தைப்பாராட்டி, அவனே வெற்றி பெருவான் என்றனர். ஆனால் சிலரோ மன்னனே வெற்றி அடைவான் என்றனர். இப்படியாக யார் வெற்றி பெறுவார்? யார்தோற்கடிக்கப்படுவார் என்பது தெரியாமலே, தொடர்ந்து போரிட்டனர் இப்படியாக இந்த யுத்தம் பதின்மூன்று நாட்கள் நடைபெற்றன. மல்யுத்தப்போரானது உக்கிரமான கட்டத்தை எட்டியது. பீமன் மிகுந்த கோபம் கொண்டு, தனது வலிமையான முட்டியினால், ஜராசந்தனது மார்பிலும், முகத்திலும் ஓங்கி ஓங்கி தாக்கினான். இந்தத்தாக்குதலைச் சமாளித்துக் கொண்ட ஜராசந்தனும், பதிலுக்கு பீமனைத் தன் பலம் கொண்டமட்டும் தாக்கினான். போரின் நடுநடுவே இருவரும் எழுப்பிய வலியின் துன்பத்தால் அலறியதும், ஆர்ப்பரித்ததும், காண்பவர்மனதைக் கசக்கிப்பிழிந்தது.

**ஜராசந்தனை அழித்தான் வீமன்.!**

போரில் தன்னைப்போலவே ஜராசந்தனும் மிகுந்த பலசாலி எனப்தை உணர்ந்தான் பீமசேனன். அப்போது ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து ஏதேனும் சைகைகள் வருகின்றனவா என்று உற்றுப்பார்த்துக்கொண்டே சண்டையிட்டான் பீமசேனன். அப்போது பகவான், அருகிலே இருந்த ஒரு மரத்தின் கிளையை இரண்டாகப் பிளந்து காட்டினார். அதை அறிந்து கொண்ட வீமன், ஜராசந்தனைத் தலைக்கு மேலே தூக்கி, சுழற்றி எறிந்தான். கீழே விழுந்த அவனுடைய ஒரு

காலை, தன்னுடைய கால்களால் கெட்டியாக மிதித்துக்கொண்டான். அடுத்ததாக, தன்னுடைய ஒரு கையில் ஜராசந்தனுடைய ஒருகையைப் பிடித்துக்கொண்டு, பனங்கிழங்கைப்பிளப்பது போல, பலம்கொண்டமட்டும் தூக்கிக் கிழித்தான். படார் என்ற சத்தத்தோடு ஜராசந்தனின் உடலானது இரண்டு பிரிவுகளாக பிளந்து கொண்டது.

பிளவுபட்ட அவனது ஒவ்வொரு பாகஉடலிலும், ஒரு கால், ஒருதொடை, ஒரு விதை, ஒரு இடுப்பு, ஒருதோள், ஒரு கை, ஒரு புருவம், ஒரு காது, பாதிமுகம் பாதிமுதுகு, பாதி மார்பு ஆகிய பாகங்கள் இருந்தன எனபதை, 72.ஆம் அத்யாயம், 44. ஆம் ஸ்லோகத்தில் கூறியுள்ளார். அவற்றைக்கண்டவர்கள் அதிசயித்து நின்றனர். அவற்றைத்தரைமீது வீசி எறிந்து ஆரவாரம் செய்தான் பீமசேனன் சூழ்ந்துநின்றவர்களும் கொடியவன் ஜராசந்தன் மாண்டான் என்று நினைத்து குதூகலம் கொண்டு ஆரவாரம் செய்தனர்.!

**உயிர்பெற்று எழுந்தது ஜராசந்தன் உடல்.!**

ஆனால் அவர்களுடைய ஆரவாரம் முடியும் முன்னே அடங்கியது. ஆ... ஆ... ஆ... ஹா என்று வியப்போடு பலரும் அதிசயித்து நின்றார்கள் காரணம் இரண்டாகப்பிளக்கப்பட்டு, தரையிலே வீசப்பட்ட ஜராசந்தனின் இருஉடல்துண்டுகளும் ஒன்று சேர்ந்து கொண்டன. மீண்டும் உயிர்பெற்று எழுந்த ஜராசந்தன், மீமனை மறுபடியும் தாக்கத்தொடங்கினான். உடனே சுதாகரித்து கொண்ட வீமன் மீண்டும் மீண்டும் முன்பு போலவே ஜராசந்தனை அழித்து வீசியபோதும் அவன் உயிர்ப்பெற்று எழுந்து கொண்டே இருந்தான்.!

கண்டவர்களும் வியப்பில் ஆழ்ந்துபோனார்கள்.! ஜராசந்தன் வதம் சாத்தியம் இல்லையோ என்றும் அங்கலாய்த்தனர்.

**ஸ்ரீகிருஷ்ணர் காட்டிய சைகை மொழி !**

செய்வது அறியாமல் திகைப்புடன் போரிட்டுக் கொண்டிருந்த வீமன் மீண்டும் ஆபத்பாந்தவனாகிய பகவான் கிருஷ்ணரைப் பார்த்தான். அப்போது ஜராசந்தனுடைய இரகசியமானது கிருஷ்ணரின் நினைவிற்கு வந்தது. உடனே பீமன் காணுமாறு, தனக்கு அருகிலே கிடந்த ஒரு கோரைப்புல்லை சரிபாதியாகக் கிழித்து, அவற்றை தலைகீழாக முறை மாற்றிப்போட்டார். கிருஷ்ணருடைய குறிப்பைப்புரிந்து கொண்டான் பலவான் பீமன். எனவே முன்பு போலவே ஜராசந்தனைக்கீழே தள்ளி, அவனுடைய உடலை இரண்டு துண்டுகளாகச் சரிபாதியாகக் கிழித்தான். ஒரு துண்டு உடலை முதலில் வீசி எறிந்தான். அந்தத்துண்டு உடலின் தலைப்பக்கத்தில் உடலின் அடிப்பாகமான கால்கள் வருமாறும், மற்றொரு துண்டின் கால்களின் திசையில் தலைப்பகுதி வருமாறும் முறை மாற்றிப்போட்டான். இப்போது கிழிபட்ட அவ்வுடல்கள் நகர்ந்து செல்லவில்லை. உயிர்பெற்றும் எழவில்லை. சற்று நேரம் துடிதுடித்த அவ்விரு உடல் பாகங்களும் மீண்டும் சேராமல், துடிப்பு அடங்கிப்போயின. ஆம்.! ஜராசந்தன் மாண்டு போனான்.! அவன் இறந்ததைக்கண்ட மகத நாட்டுமக்கள் ஐயகோ என்று ஓலமிட்டு அழுதனர். ஆனால், தர்மவான்கள் நிம்மதிப்பெருமூச்சு விட்டனர்.

**நாடுபறிக்கும் எண்ணமில்லை.! நல்லாட்சி செய்க என்றார்..!**

ஜராசந்தன் மாண்டதால், அவனுடைய மகனான சகாதேவனை வரவழைத்த கிருஷ்ணபகவான்,

ஜராசந்தனுக்குச் செய்யப்படவேண்டிய ஈமக்கிரியைகளைச் செய்யவைத்தார். ஜராசந்தனை யுத்தத்திலே கொன்றாலும,- அவனுடைய நாட்டைக் கவரந்து கொள்வதிலோ, அதில் உரிமை கொண்டாடுவதிலோ கிருஷ்ணர் நாட்டம் கொள்ளவில்லை. அவருடைய அவதார நோக்கமான, துஷ்ட நிக்ரஹ., சிஷ்ட பரிபாலனம் என்னும் கொள்கைக்கு ஏற்றவாறு, கொடியவனாக இருந்த ஜராசந்தனை அழிப்பதும்,, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆட்சி புரிந்து வந்த அரசர்களை அடிமைகளாக்கி, அவர்களை நரபலி கொடுக்கத் திட்டமிட்டிருந்த நோக்கத்தையும் பரப்பிரம்மமாகிய பகவான் எதிர்த்தார். எனவே தான் இந்த ஜராசந்தன் வதம் என்பதை உலகினர்க்கு உணர்த்த விரும்பினார் கிருஷ்ணபகவான்.!

**இருபதினாயிரத்து எண்ணூறு அரசர்களைச் சிறையிலிருந்து மீட்டார் :**

எனவே ஜராசந்தனுடைய வதைக்குப்பிறகு, அவனுடைய மகனான சகாதேவனுக்கு வேதமந்திரங்கள் ஓத, முறைப்படி பட்டாபிஷேகம் செய்து வைத்தார். சிறையிலே அடைக்கப்பட்டிருந்த இருபதினாயிரத்து எண்ணூறு அரசர்களையும், விடுவித்து, அவர்களுக்கு ஆறுதல் கூறியதோடு தேவைப்பட்ட உதவிகளையும் செய்தார்.

ஸ்ரீமத்பாகவதம். 73. ஆம் அத்யாயம் முதல் ச்லோகத்தில்,

**ஆயுதே த்வே சதானி அஷ்டௌ லீலயா யுதி நிர்ஜிதா:**
**தே நிர்சுதா கிரித்ரோண்யாம் மலினா மலவாஸஸம்**

என்று கூறியுள்ளார். அதாவது இதில், அயுதே என்றால் பத்தாயிரம்., த்வே – என்றால் இரண்டு சதானி என்றால்

நூறுகள், அஷ்டோ என்றால் எட்டு, என்பன இச்சமஸ்கிருதச் சொற்களுக்குப் பொருளாகும்.

அவ்வாறு பார்த்தால், அயுதே த்வே என்றால் இரண்டு பத்தாயிரம். (இறுபதாயிரம்) சதானி அஷ்டௌ என்றால் நூறுகள் எட்டு, அவை எட்டு அவை எட்டு நூறு ஆகும். எனவே இருபதினாயிரத்து எட்டு நூறு அரசர்களைத் தன்னுடைய தலைநகரின் சிறையிலே அடைத்து வைத்திருந்தான் ஜராசந்தன். எதற்கு என்றால்,,

இதில் கூறப்பட்டுள்ளவாறு, அந்த ஜராசந்தன் *20,800* அரசர்களைத் தன்னுடைய தலைநகரின் சிறையில் அடைத்து வைத்திந்தான் என்பதை அறிகிறபோது, அச்சராசந்தனுடைய வீரமும், அவ்வரசர்களைப் பலியிட்டு அவன் மேலும் தன்னுடைய பலத்தையும், பராக்கிரமத்தையும், நிலைநாட்டிக்கொள்ள எடுத்த பெருமுயற்சியையும் காணமுடிகிறது.

பகவான் கிருஷ்ணருடைய பெருந்தன்மையினால் கவரப்பட்ட சகாதேவன், பகவானை வணங்கினான். அவனை ஆசீர்வதித்த பெருமான், யுதிஷ்டிரர் செய்யப்போகும் இராஜசூய யாகத்தில் தவறாமல் பங்கேற்குமாறும் அறிவுறுத்தினார். மற்றைய அரசர்கள் அவர்களுடைய நாட்டிற்குத்திரும்பி நல்லாட்சிபுரியுமாறு அறிவுறுத்தியதோடு, அவர்களையும். இராஜசூய யாகத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தார். மனம் மகிழ்ந்த அரசர்கள் பிரபு கிருஷ்ணரை வாழ்த்தி வணங்கினார்கள். கிருஷ்ணரையே தங்கள் அரசனாக ஏற்றுக் கொள்வதாகவும், உறுதிமொழியளித்து, அவர்கள் பகவானுக்குப்பல காணிக்கைகளைக் கொடுத்த

அனுப்பிவைத்தார்கள். இவர்கள் அனைவரும் பிற்காலத்தில் ஏற்பட்ட தர்ம சேத்திரப்போரில் பாண்டவர்களின் பக்கம் நின்று, போரிட்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**இந்திரப் பிரஸ்தத்தில் கோலாகல ஏற்பாடு :**

பின்னர் தனது பாஞ்ச சன்யத்தை எடுத்து முழக்கினார் பகவான். அதன் பேரோசை எட்டுத்திக்குகளிலும் எதிரொலித்தது.. பிறகு விரைந்து செல்லக்கூடிய குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஸ்ரீகிருஷ்ணரும், பீமார்ச்சுனர்களும் ஏறி அமர்ந்து கொள்ள தேர் விரைந்து புறப்பட்டது. வெற்றியோடு திரும்பிவரும் பிரபுவை எதிர்கொண்டழைக்க, விரிவான ஏற்பாடுகளைச் செய்து முடித்தார் யுதிஷ்டிரர். நகரத்து மக்கள் தோரணங்கள் கட்டியும், மலர்களால் அலங்காரம் செய்தும், மாக்கோலம் இட்டும் வெற்றித்திருமகனாகிய பகவான் கிருஷ்ணரையும், மல்யுத்தச் சிங்கமான பீமசேனனையும்,, மாவீரன் அர்ச்சுனனையும் வரவேற்று மகிழ்ந்தனர். இந்திரப்பிரஸ்த நகரமே மகிழ்ச்சிக்கடலில் திளைத்தது. அதனால் யுதிஷ்டிரர் செய்ய நினைத்த இராஜசூய யாகத்திற்குப் பெரும் தடையாக இருந்த ஜராசந்தன் அழிக்கப்பட்டான். பின்னர், யாகம் நடைபெற்றபோது, நூறு முறைக்குமேல் தவறு செய்து பகவானை இழித்துப்பேசியவனான சேதிநாட்டுமன்னன் சிசுபாலனும் அழிக்கப்பட்டதால், தர்மராசர் தான் திட்டமிட்டபடி, ஸ்ரீகிருஷ்ணரின் பேரருளால், அந்த யாகத்தைச் செய்து முடித்து பெரும் புகழ்பெற்ற ராசாதிராசனாக விளங்கினார்.

**ஜராசந்தன் முக்தி,?**

இக்கதையில், கிருஷணனை அழிப்பேன் என்றும், ஒழிப்பேன் என்றும், கூறிக்கொண்டிரந்து ஜராசந்தன்

வதைக்கப்பட்டாலும், அவன் எப்போதும் கிருஷ்ணன்... கிருஷ்ணன் என்ற நினைப்போடே வாழ்ந்தவன் ஆவான். அவரை எதிரியாகக் கருதினாலும், அவன் உள்ளத்தில் எப்போதும் பகவான் ஸ்ரீகிருஷ்ணருடைய எண்ணங்களே நிலைத்து நின்றன. . கிருஷ்ணரை அழிப்பதற்காக கம்சன் எப்போதும் அப்பெருமானுடைய நினைப்பிலேயே இருந்ததைப்போல, அவனுடைய மாமனாரான ஜராசந்தனும் ஸ்ரீ கிருஷ்ண உணர்விலேயே மூழ்கியிருந்தான். அவரைக்கொல்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான். தன் மருமகனாகிய கம்சனின் அழிவிற்குக் காரணமான கிருஷ்ணரை வெல்லக் கூடிய வழிவகைகளின் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். ஆகையால், அதுவும் ஒரு பக்திநிலையாகவே கருதப்படும். எனவே, ஜராசந்தன் பகவான் துணையோடு பீமனால் வதைக்கப்பட்டாலும், அவனுடைய ஆன்மாவானது சொர்க்கலோகம் சென்று சேர்ந்தது என்று நாம் கூறலாம்.

**பார்த்தனுக்கு அறிவுரை :**

அணிவகுத்து நின்ற இருதிறத்தினர் படைகளையும் குருசேத்திரப்போரில் கண்ட அர்ச்சுனன், தான் போர்புரியமாட்டேன் என்றும், தனது உறவினர்களை எவ்வாறு அழிப்பேன் என்றும் புலம்பியபோது, அவனுக்கு பகவான் எடுத்துரைத்த கீதா உபதேசம் அனைவரும் அறியவேண்டியதொரு சாஸ்த்திரசித்தாந்தமாகும். அதன் இரண்டாம். அத்.37 ஆம் ச்லோகத்தில் பரப்பிரம்மகிருஷ்ணன்

**ஹதோ வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்கம் ஜித்வா ? யஸோ மஹீம்**

**தஸ்மாதுஷ்த் திஷ்ட கௌந்தேய யுத்தாயேக்ருதநிச்சயே**

என்று கூறியுள்ளார். இதில் போர்புரியவேண்டியது சத்திரியர்களின் கடமை என்பதையும், அப்போரில் அவர்கள் தோல்வியடைந்து கொல்லப்பட்டாலும் அவர்கள் நிச்சயமாக ஸ்வர்கலோகம் சேர்வார்கள் என்றும், வெற்றிபெற்றால், அதனால் அரசபோகத்தில் திளைத்துவாழும் இகலோகப்பயனை அடைவார்கள் என்றும் உபதேசித்து உள்ளார். எனவே, இங்கு தான் செய்த போரில் ஜயத்ரதன் வீரமரணம் அடைந்ததால், கீதாவுபதேசத்தின் உறுதிமொழிக்கு ஏற்றவாறு, ஜயத்ரதன் சொர்கலோகம் சென்றான் என்று அறியலாம்.! ஆனாலும் அவனுக்குத் தற்காலிகமாக சொர்க்கத்தில் வாழும் பேற்றையே பகவான் கிருஷ்ணர் அவனுக்குக் கொடுத்தார். இதை முக்திவகையில் சாயுஜ்யம் என்ற வகையில் அடக்கிக் கூறுகின்றனர் ஆன்றோர்கள். எது எப்படியாயினும் பகவான், அதர்மியை அழித்து, தர்மத்தை நிலைபெறச் செய்ததால், அவருடைய அவதார நோக்கம் ஜராசந்தன் வதையிலும் நடந்தேறியதை அறியலாம்..!

மேலும், அருச்சுனனுக்குக் கீதையை உபதேசம் செய்தபோது, நான்காம் அத்.9.ஆம்ஸ்லோகத்தில், பகவான் கிருஷ்ணர் கூறியுள்ளதை நாம் இங்கே நினைவு கூறலாம். ஜன்ம கர்ம சமே திவ்யம் என்ற அதில், அர்ச்சுனா, என்னுடைய அவதாரம் திவ்யமானது. இந்த அவதாரத்தில் நான்மேற்கொண்ட அனைத்துச் செயல்களும் கூட மிகவும் தெய்வீகமானவை. அவை தர்மத்திற்கு அப்பாற்பட்டவை அன்று.! நான் என் இச்சைப்படியே செயல்படுவேன். ஆனால் அந்த எல்லாச் செயல்களும், தர்மத்தைக்காக்கவும், அதர்மத்தை அழிக்கவும் செய்யப்பட்ட கர்மாக்கள் ஆகையால், ஒருசிலவற்றின் விளைவு தவறுபோல்

தோன்றினாலும், அவை எல்லாம் தர்மத்திலே அடங்கும் என்பதை நீ அறிந்துகொள்ளவேண்டும் என்பதை அர்ச்சுனனுக்கு உணர்த்தும் வாயிலாக அனைவருக்குமே அறிவுறுத்துகிறார்.

மேலும் “என்னுடைய இந்த கர்மவினைப்பாட்டையும், எனது பிறவியையும், செயல்பாடுகளையும் சரியாகப் புரிந்துகொண்ட பக்தர்களின் பாவச் செயல்கள் அனைத்தும் அற்றுப்போகும். ஆகையால் அவர்களுக்கு மறு பிறவி என்பது ஏற்படாது. அவர்கள் என்னுலகமாகிய வைகுந்தம் வந்தடைந்து எனக்குக் கைங்கர்யம் செய்துவாழும் நன்னிலையைப் பெறுவார்கள். அவர்கள் முக்தி அடைவது உறுதி! என்று வாக்குறுதி அளிப்பதைக் காணலாம்.

எனவே, இந்த ஜராசந்தன் அழிக்கப்பட்ட வரலாற்றை மேலோட்டமாகக் கண்டால், பகவான் கிருஷ்ணர் சூழ்ச்சியின் மூலம் ஜராசந்தனை வதைத்தாரோ என்ற எண்ணம் தோன்றலாம். அது தவறு.!

தன்னைச்சரணடைந்த பாண்டு புத்திரர்களாகிய பக்தர்களைக் காக்கவேண்டியது. அவர்கள் செய்யும் யாகத்தைத் தங்குதடையின்றி நடத்திக் கொடுக்கவேண்டியதும். பகவானுடைய கடமையானதாலே தான் இந்த ஜராசந்தனுடைய வதம் செய்யப்பட்டது.! பகவான் கிருஷ்ணர் செய்த இந்த ஜராசந்த அசுரவதம், அப்பெருமானுடைய தந்திரயுக்திக்கு உதாரணமாய் விளங்குவது ஆகும்.

கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா என்று ஆண்டாள் நாச்சியார் பாடி அகம் மகிழும் பெருமானின் பண்பும், வீரமும்,

பக்தர்களைக் காப்பாற்ற அவர் எந்த எல்லைக்கும் சென்று கடமையாற்றும் சிறந்த கர்மவாதி என்பதையும் ஜராசந்தன் வதையால் தெள்ளத் தெளிவாக அறியமுடிகிறது. அத்தகைய பெருமானின் தாமரைத்திருவடிகளைச் சரணடைவதே ஆத்மஞானிகளுக்கு அவசியமான பக்திநிலையாகும். மேலும், கண்ணற்ற மன்னன் திருதராஷ்டிரனுக்கு, குருசேத்திரப்போரின் நேரடி வர்ணனைகளைக் கூறிவந்த சஞ்சயன், பாரதப்போரின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பதைக் கூறுகிறபோது,

**யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்த்தர:**
**தத்ர ஶ்ரீ விஜயோ பூதிர்-த்ருவா நீதிர்-மதிர் மம**

என்று கூறியதாக ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமம் குறிப்பிடுவதைக் காணலாம்.

அதாவது எங்கே யோகேச்வரனான கிருஷ்ணனும், காண்டீபத்தைக்கையில் ஏந்தியவனுமான அருச்சுனன் இருக்கிறார்களோ, அங்கே திருமகளின் அனுக்கிரகத்தால் செல்வமும், இடைவிடாத வெற்றிகளும் வந்தடையும் என்பதே இந்தச்சுலோகத்தின் பொருளாகும்.

இதன் கருத்திற்கு ஏற்றவாறு, ஜராசந்தனுக்குத் தன்னால் மரணம் ஏற்படாது என்பதை அறிந்த பரப்பிரம்மபெருமானாகிய ஸ்ரீகிருஷ்ணன், வீமனோடும், பார்த்தனோடும் சென்று ஜராசந்தனின் கொடுமைகளிலிருந்து இப்பூவுலகைக்காத்தான் என்பதை அறியமுடிகிறது.

எனவே தன்னடியவர்களாகிய பக்தர்களுக்கு, எந்த வகையிலாவது உதவி புரிந்து அவர்களின் இன்னலைப்போக்குவான் எம்பெருமான். எனவே அவனுடைய தாமரைத் திருப்பாதங்களை நாமும் சரணடைந்து நன்னிலை பெற்று வாழ்வோமாக!

# 19. பக்திக்கும், முக்திக்கும் பாகவதமே அடிப்படை

ஈரேழு பதினான்கு லோகங்களையும், அதில் ஏழுவகைப்பட்ட பிறவிகளையும் பகவான் ஸ்ரீமகாவிஷ்ணு உருவாக்கினார். அவ்வாறு தன்னால் உருவாக்கப்பட்ட அனைத்திற்கும் பிறவிகளைக் கொடுத்தார். தன்னைப்போலவே நித்தியமானதான ஆன்மாக்கள் அனைத்தும், அவற்றின் பிறவிகளின் முடிவில், மீண்டும் தன்னை வந்து அடைவதற்காக கர்ம,ஞான பக்தியோகங்களாகிய மார்க்கங்களை உண்டாக்கி, இறுதியில் மீண்டும் தன்னை வந்து அடையவேண்டும் என்று விரும்பினார். அதற்காக அவர் தனது வைகுந்தலோகத்திலே இருந்து பக்தி, ஞானம், வைராக்கியம், முக்தி என்ற நான்கையும் பூலோகத்திற்கு அனுப்பி வைத்தார்.

### நால்வகை யுகங்களில் பக்தியும் முக்தியும் :

கிருதயுகம் என்ற சத்தியயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று யுகங்கள் நால்வகைப்படும். தொடக்கயுகமான கிருதயுகத்தில், கர்ம, ஞான யோக மார்க்கங்களை அடிப்படையாகக் கொண்ட சிறந்தபக்திமுறையை அனைவரும் கடைப்பிடித்தார்கள். மனிதர்கள். தாங்கள் அனுபவித்துவரும் வாழ்க்கையில் தங்களது உடல் என்ற சாதனமும், அவற்றை இயக்கிவாழும் ஆத்மா என்கிற உயிரும் வெவ்வேறானவை. இரண்டையும் ஒன்றாகநினைத்து இன்ப துன்பங்களையும், சுகபோகங்களையும் தனித்தனியானவை என்று அறிந்து, உடலின் அழியக்கூடிய தன்மையை அறிந்து, அழியாததான

ஆத்மாவின் தத்துவங்களை அறிந்து, தன்னைப்படைத்து அனுப்பிய பகவானின் பக்தியிலே முழுமையாக ஈடுபட்டு வாழ்ந்தால், இறுதியில் முக்தி கிடைக்கும் என்ற உண்மை மார்க்கத்தை அனைவரும் அறிந்தனர். எனவே கர்ம, ஞான, வைராக்கியத்தை வளர்த்துக்கொண்டு, உண்மையான பக்தியைப்பகவானிடம் செலுத்தி, முக்தியையும் அடைந்தனர்.

**கலியுகத்தில் பக்தியும் முக்தியும் :**

ஆனால் யுகங்கள் செல்லச்செல்ல இவற்றின் ஈடுபாடுகளும், தாக்கமும், மக்களிடையே குறையத்தொடங்கின.! சத்தியயுகமான கிருதயுகத்தில், நூறு சதவீதமாக பரிணமித்துவந்த கர்மயோக ஞான வைராக்கியம் என்ற நான்கும் ஸ்ரீராமாவதாரமான த்ரேதாயுகத்தில் கால்பகுதி குறைந்துபோனது. ஆனால் ஸ்ரீகிருஷ்ணாவதாரகாலமான துவாபரயுகத்தில் அவை பாதியாகக்குறைந்து போனது. துவாபரயுகம். துவாபரயுகம் முடிந்து கலியுகம் பிறந்ததவுடன் அவை எல்லாமே முக்கால் பகுதி அழிந்து போய் கால்பகுதியாக ஊசலாட்டத்தில் உழன்று கொண்டிருந்தது. ஆகையால் பசுவின் வடிவில் இருந்த பூமாதேவித்தாயாருக்கும், எருதுவின் வடிவத்திலிருந்த, தர்மதேவனுக்கும் மூன்று கால்கள் இல்லாமல்போனதால், அவர்கள் இருவருமே ஒற்றைக்காலிலே இருந்துகொண்டு துன்பப்பட்டார்கள் என்று வியாசபகவான் கூறுவதால், கலியுகத்தின் கொடுமை விளங்குகிறது. எனவே அந்தயுகத்தின் தொடக்ககாலத்தில், கலிபுருஷனின் கொடுமையால் எல்லா இடங்களிலும், அநியாயச் செயல்களும், அதர்மக்கர்மாக்களும்,

அட்டூழியங்களும் பெருகின. எங்குமே மக்களிடத்திலே நல்லசெயல்கள் செய்வது இல்லாமல் போனது. முக்தியை விரும்புபவர்கள் யாருமே இல்லை. எனவே அந்த முக்தியானது மீண்டும் வைகுந்தத்திற்கே சென்றுவிட்டது..! இவற்றிற்கெல்லாம் கலி புருஷனுடைய தாக்கமே காரணமாக அமைந்தது. அவனுடைய கொடுஞ்செயல்களால் கவரப்பட்ட மக்கள், தங்களின் தர்மம், சத்தியம், காருண்யம் ஆகியனவற்றை மறந்துபோனதால், கலியுகத்தில் அதர்மச்செயல்கள் பெருகின. பூலோகவாழ்வும், மானிடப்பிறவியும் மிகவும் சீரழிந்து போயிருந்தன. அவ்வாறு சீரழிந்துபோன பக்தி ஞான வைராக்கியங்களை நாரத மகரிஷி எவ்வாறு மறுபிறவி எடுக்கவைத்து, மக்களிடையே மீண்டும் பரவ ஏற்பாடு செய்தார் என்பதை பாகவதத்தின் தோற்றத்தைப்பற்றிய கதைநிகழ்வுகளால் நாம் அறியமுடிகிறது.!

**நாரதமுனிவரின் பூலோக வருகை :**

துவாபரயுகத்தின் முடிவில் இறுதியில் ஸ்ரீமகாவிஷ்ணுவின் பரிபூரண அவதாரமான கிருஷ்ணாவதாரத்தில், பகவான் கிருஷ்ணர் தனது அவதாரத்தின் நோக்கங்களை நூற்று இருபத்தைதந்து ஆண்டுகளில் நிறைவேற்றிவிட்டார். எனவே, தான் மீண்டும் தன்னுடைய லோகமான வைகுந்தத்திற்குச் சென்றுவிட்டார். ஸ்ரீகிருஷ்ணரின் பேரருளால் குருவம்சத்தின் ஒரே வாரிசான பரீட்சித்து என்பவன் பேரரசனாக கலியுகத்தின் தொடக்கத்தில் அரசாட்சி செய்துவந்தான். அக்கால கட்டத்தில் பாரததேசத்தின் எல்லாப்பகுதிகளுக்கும் நாரதமகரிஷி

சுற்றுப்பயணம் செய்தார். அவரிடமிருந்த மகிழ்ச்சியும், புன்முறுவல்பூத்தமுகமும் நீங்கிவிட்டது. அவர்பெரும் கலக்கம் அடைந்தார். காரணம் எங்குமே சிறந்தபக்திநிலை மக்களிடையே காணப்படவில்லை. பக்திக்குத்தேவையான ஞானமும். வைராக்கியமும் ஆகிய கர்மாக்களை யாரும் கடைப்பிடிக்கவில்லை.

**நாரதமுனிவருக்கு ஏற்பட்ட கலக்கம் :**

எனவே தன்னலமில்லாமல், உலகத்தின் நன்மையையே விரும்பி வாழ்ந்துவந்தவரான நாரதருக்கு இந்த நிலைமை மிகப்பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியது. அவருக்கென்று குடும்பமோ, மற்ற உறவு முறைகளோ இல்லாமல் வாழ்ந்துகொண்டு, நாராயணா நாராயணா என்று அனுதினமும் அப்பகவானின் பக்தியிலேயே மூழ்கி வந்திருந்த அவருக்கு, கலியுகத்தின் தொடக்கமே கொடுமையானதாக இருப்பதைக்கண்டார். ஞான, பக்தி, வைராக்கியங்களைக் காண்பதே அரிதாகப்போயிற்று! என்பதை யமுனைக் கரையில், மீண்டும் புத்துயிர் பெற்றவளான பக்தி என்ற இளம்பெண்மூலமாக அறிந்துகொண்டார் நாரதமகரிஷி.! ஆனால் அந்தப்பக்தியின் நிலைப்பாட்டிற்குக் காரணமான ஞானமும், வைராக்கியமும் மக்களிடையே இல்லாது போனதால், சனத்குமாரர் அறிவுரையை ஏற்று, அவற்றிற்கும் புத்துயிர் அளிக்கவே பக்தி, ஞானம், வைராக்கியம் என்ற மூவரோடு தானும் நைமிசாரண்யம் சேர்ந்து, ஸ்ரீபாகவத சப்தாஹா கதாச்சிரவணத்தைக் கேட்கவைத்ததன் மூலம், அவற்றிற்கும் புத்துயிர் அளித்தார்.

இதிகாசபுராணங்களை விடவும், ஸ்ரீமத்பகவத்கீதையை விடவும், ஒருவனுக்குச் சிறந்த பக்தியை, நிலைத்த பக்தியை,

ஞான வைராக்கியத்துடன் கூடிய அழியாபக்தியை, அளிக்கக்கூடியதும், அதன் விளைவாக நற்கதியாகிய முக்தியையும் கொடுக்கக்கூடியது ஸ்ரீமத்பாகவதமே என்பதை நாரதமகாமுனிவர் அறிந்து கண்டார்.! அடுத்த ஏழுநாட்களில் தனது உயிரை நீக்குவதற்குத்தயாராகிய பரீட்சித்து மகாராஜனுக்கு, வியாசபகவானின் புத்திரராகிய சுகப்பரம்மம்' ஸ்ரீமத்பாகவதத்தைத் சொற்பொழிவாக ஏழுநாட்களுக்குக் கூறத்தொடங்கினார் என்பதை அறிந்த பற்பல முனிவர்கூட்டங்கள் அங்கே கூடின.! அப்போது இந்திராதி தேவர்களும், சப்தமுனிவர்களும், பக்திமான்கள் பலரும் அவ்விடத்தில் கூடினார்கள்.

**வேணுகோபாலக்கண்ணனும் விரைந்து வந்தான் :**

பரீட்சித்து மகாராஜனின் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய ஸ்ரீமத்பாகவதம் தொடங்கத்தயாரானார் சுகமகரிஷி. அப்போது அந்தச் சபையில் இருந்த நித்தியசூரிகளில் ஒருவரான பக்தபிரகலாதன், ஆனந்தக் கடலில் மூழ்கி, கரதாளம், (கைத்தாளம்) போடத்தொடங்கினார். பகவான் கிருஷ்ணரின் உறவினரான சாத்யகி, வெண்கலத்தாளத்தை சுருதியுடன் வாசித்தார். நாரதமகரிஷியும் தன்னுடைய மஹதி என்ற வீணையை மீட்டினார். அங்கிருந்த இந்திரன் ஒரு மத்தளத்தை வாசித்து மகிழ்ந்தான். அர்ச்சுனன் தனி ஆலாபனம் செய்தான். அதற்குள் அங்குவந்து சேர்ந்துவிட்ட பிரம்மபுத்திரர்கள் நால்வரும் ஜயஹோ ஜயஹோ என்று மங்கள முழக்கம் இட்டனர். அந்த கதாச்சிரவணத்தில் கூறப்படப்போகும் தன்னைப்பற்றிய புகழ்மொழிகளை நேரடியாக அனுபவிக்கவேண்டும் என்று நினைத்த பகவான்

கிருஷ்ணர் நேரடியாவே அங்கு வந்துவிட்டார். அங்கிருந்தச் சூழ்நிலையைப்பார்த்த அவர், அந்தச் சத்சங்கத்திற்கு தன்னுடைய பங்கைத் தரவேண்டும் என்று நினைத்தார். உடனே அவருடைய கைக்கு புல்லாங்குழல் வாத்தியம் வந்து சேர்ந்ததால், ஆனந்தமயமாக குழலிசையால் அந்தப் பகுதியை ஏழிசையால் நிறைத்தார். இவையனைத்தையும் உள்ளடக்கிய அந்தச்சத்சங்கத்தின் தலைவராக பிரம்மதேவன் அமர்ந்துகொண்டிருந்தார். பிரதான ஆசானாகிய ஸ்ரீசுகமகரிஷி தனது சிஷ்யனாகிய பரீட்சித்திற்கு ஸ்ரீகிருஷ்ணபகானின் மகிமைகள் நிறைந்த ஸ்ரீமத்பாகவதம் என்ற புராணத்தை எடுத்துரைத்தார்.

**ஏழுநாட்களில் என்னென்ன அறிந்தான் ?**

தான் ஏழாம் நாளில் இறக்கப்போகிறோம் என்பதை அறிந்து, அதற்காக மனங்கலங்காத பரீட்சித்து, தான் இறக்கும் முன்பாகத் அடையவேண்டிய ஆத்மஞான தத்துவத்தையும், உறுதிப்பொருள்களையும் அறியவேண்டும் என்ற எண்ணத்திலேதான் சுகமுனிவரிடம் சரணடைந்து தனது ஆத்ம ஈடேற்றத்திற்கான உறுதிப் பொருள்களை அறிவுறுத்தவேண்டும் என்று விரும்பினான். அதற்காக ஆரம்பிக்கப்பட்ட அந்த ஸ்ரீமத்பாகவதத்தின் சப்தஹா உபந்யாசத்தால், தான் யார்? தான் எங்கிருந்து வந்தோம், இப்பிறவி முடிந்து செல்லவேண்டிய உடலைப்பற்றியும், உயிராகிய ஆத்மாவைப் பற்றியதுமான கோட்பாடுகள்,, நம்மைப்படைத்தவன் யார், அவன் நம்மிடம் எதிர்ப்பார்ப்பது என்ன? அவற்றை நாம் ஏன் நிறைவேற்றவேண்டும்? நிறைவேற்றுவதால் உண்டாகும் நன்மைகள், நிறைவேற்றாதபோது ஏற்படும் தீமைகள், ஆகியனபற்றிய

அனைத்துவிதமான கேள்விகளுக்கும் இந்த ஏழுநாள் உபந்யாசத்தின் மூலம் விடைதெரிந்து கொண்டான் பரீட்சித்து மன்னன்.

மேலும் இங்கு கூறப்படுகிற வைராக்கியம் என்பது உலக மக்களால் பயன்படுத்தப்பட்டுவரும் வைராக்கியம் என்ற போட்டி மனப்பான்மையுடன் தொடர்பு உடையது அன்று. அதாவது நம்மாழ்வார்.

**யானே என்னை அறியகிலாதே**
**யானே என்றனதே என்றிருந்தேன்**
**யானே நீ என் உடைமையும் நீயே**
**வானே ஏத்தும் அவ்வானவர் ஏறே.**

என்ற தனது திருவாய்மொழிப்பாசுரத்தில் (2883) கூறியுள்ளதன் உட்பொருளை அறிதலே வைராக்கியங்களுள் ஒன்றாகும்.

எனவே தான், அந்த ஏழாம்நாளில் தட்சகனால் கடிக்கப்பட்டு இறக்கப்போகிறோம் என்பதைக்குறித்து சிறிதும் கவலை இன்றி இருந்தான். எல்லாம் வல்ல எம்பெருமான் கண்ணனின் திருவடிநிழலின் பெருமையிலே ஊறித்திளைத்திருந்த அந்த அரசன், அப்பிறிவியில் அவனுடைய ஆத்மா, அவனுடைய பூத உடலை விட்டுப்பிரிந்தது என்பதையும் அறிந்தான். மேலும் தனக்குக்கிடைத்த கர்ம, ஞான பக்தியுடன் கூடிய மிகப்பெரும் பேற்றால், தான் அடுத்து பிறக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை அறிந்து, ஆனந்தமயனாய் பகவானின் வைகுந்தநகரமாகிய முக்திலோகத்தை அடைந்து சிறப்புற்றான்.

**புனர் ஜன்மம் பெற்ற ஞான வைராக்கியம் :**

ஐவகை இலக்கணங்களையும், அண்டத்தின் தலைவனாகிய ஸ்ரீகிருஷ்ணரின் மகாத்மியம் ஒவ்வொரு நாளும் முறைப்படியே பரீட்சித்திற்கு உபதேசம் செய்யப்பட்டது. ஏழாம் நாளின் முடிவில், முனிவன் மகனின் சாபத்திற்கு ஏற்றவாறு, தட்சகன் கடிதத்தால் பரீட்சித்துவின் உடல் மட்டும் வீழ்ந்தது. ஆனால் அவனுடைய ஆன்மாவானது முக்திநிலை அடைந்தது.

குறுகிய காலத்தில் தனக்கு ஏற்படப்போகும் மரணத்தையே தன்னுடைய சாதனையாக மாற்றிக்காட்டிய பரீட்சித்துவின் பக்திநிலையும், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் அடியார்களுக்கு அருள்தரும் கல்யாணகுண விளக்கங்களும் நிறைந்த இந்தப்பாகவதத்தை கற்பவர்கள் அப்பெருமானின் சந்தேஷத்திற்கு பாத்திரமாவார்கள். இருமைக்கும் வேண்டியனவற்றை அடைந்து ஈடிலாத புகழ்பெறுவார்கள்.!

**சந்தோஷம் பெறுவதால் சகலமும் அளித்திடுவேன்.!**

பாகவதத்தைக் கற்பதாலும் கூறுவதாலும் ஏற்படும் பயன்களைப்பற்றி, பாகவத தியான ச்லோகம் நமக்குப் பின்வருமாறு எடுத்துரைக்கிறது.

**ஸ்ரீமத்பாகவத நாம புராணாம் லோக விஸ்ருதம்**
**ச்ருனுயாது சிரத்யா யுக்தே மம சந்தோஷ காரணம்**

என்று பகவான் கிருஷ்ணரே கூறுகிறார். அதாவது ஸ்ரீமத்பாகவதம் என்ற பெயர்பெற்ற இப்புராணத்தை பக்திச் சிரத்தையோடு படிப்பவர்களும், அதே அக்கறையுடன் அதைக் கேட்பவர்களும் என்னுடைய சந்தோஷத்திற்குக்

காரணமாக அமைவார்கள் என்கிறார் பகவான். தான் சந்தோஷப்படும்படியாக, தனக்கு. ஒரு பிடி அவலைத் தந்த சுதாமா என்கிற குசேலருக்கு, பகவான் என்னென்ன நன்மைகள் செய்தார், மழைநீரால் நினைந்திருந்த குசேலருடைய மண்வீடு எவ்வாறு மாட மாளிகையானது? அவருடைய மனைவியும் மக்களும் பார்த்தறியாத விலையுயர்ந்த பொன்னாபரணங்களை தாங்கள் அணிந்து மகிழ்ச்சி அடைந்தார்களே அது எதனால் நடந்தது? என்ன காரணத்தால் நடந்தது? எல்லாம் பகவானுக்கு குசேலர்மீது ஏற்பட்ட நட்பும், அவருக்கு ஒரு பிடி அவலை உண்டதால் கூறபட்ட சந்தோஷமும் தானே காரணம்.! எனவே பகவான் உவப்பதைப் பக்திச் சிரத்தையுடன் செய்கின்றவர்களுக்கு, சப்தாஹா கதாச்சிரவணத்தைக் கூறுபவர்க்கும், கேட்பவர்களுக்கும் அனைத்து வளமும் வாழ்வும் இப்பிறவியில் கிடைப்பதோடு, மறு பிறவியில்லாத முக்தியும் கிடைக்கும் என்பதை அறிவோமாக.!

மேலும்,.! பரிபூரண புராணம் என்று அழைக்கப்படும் இந்தப்பாகவதத்தில் கூறப்பட்டுள்ள பல்வேறு தர்மங்களையும், பக்தியையும், முக்தியையும் நாம் அறிந்துகொள்வதற்காக அவற்றைக்கதைகளில் வடிவத்திலே இதில் கூறியுள்ளார் இதனைப்படைத்த வியாசமகரிஷி, இவற்றை மன ஒருநிலைப்பாட்டுடன் கற்றால், பகவான் கிருஷ்ணரையே நாம் வணங்குவதாக எடுத்துக்கொள்ளலாம். பகவான் கிருஷ்ணர் உத்தவர் என்ற தன்னுடைய நண்பனுக்கு இறுதிகட்ட உபதேசங்களைக் கூறி, அவரைச் சமாதானப்படுத்தும்போது, தான் இந்த பாகவதத்திலே

வரிவடிவாகவும், ஒலிவடிவாகவும், பொதிந்தும் புதைந்தும் இருப்பதாகக்கூறி, அதை அனைவரும் கற்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். அவ்வாறு கற்றால்தான் இக்கதைகளில் புதைந்திருக்கும் பகவத்பக்தியாகிய பரவசம் நமக்குக் கிடைக்கும். அப்பரவசமே ஸ்ரீகிருஷ்ணப்பெருமானின் திருவருள் பெறுதற்கு உறுதுணையாக விளங்கும். இவ்வுயர்நிலை பக்தியைப்பெற்று, பெருமானின் திருவருளால் பலவளமும் பெற்று பாரோர் போற்ற வாழ்ந்திடுவோம்.!!

**வனமாலி கதீ சார்ங்கி சங்கீ சக்ரீ ச நந்தகீ**
**ஸ்ரீமாந் நாராயணோ விஷ்ணுர் – வாசுதேவோ**
**(அ)பிரக்ஷது**

என்னும் விஷ்ணுசஹஸ்ர நாம ஸ்தோத்திரத்திற்கு ஏற்றவாறு, "அழகிய தன் திருமார்பில், வனமாலையை அணிந்தவனும், தன் திருக்கைகளில், கதாயுதத்தையும், சாரங்கம் என்ற வில்லினையும், பாஞ்சசன்னிய சங்கினையும், சுதர்சனச் சக்கரத்தையும், நந்தகம் என்ற வாளினையும் கொண்டவனாக அருள்பாலித்துக்கொண்டு, அகிலாண்ட– கோடியான முழுபிரபஞ்சத்தையும் காத்து அருள்செய்து வருபவராகிய ஸ்ரீமந்நாராயணனாகிய மகாவிஷ்ணுப் பெருமானின் வாசுதேவகிருஷ்ணனாகிய பரப்பிரம்மத்தைச் சரணடைந்து சகல நன்மைகளையும் பெற்று, பக்தி நிலையிலே நின்று வாழ்ந்து, இறுதியில் மீண்டும் பிறவாத பெரும்பேரின்பத்தை தந்திடும் வைகுந்த நகரமாகிய முக்திலோகத்தையும் அடைவோமாக!"

**வாழ்க பாரதம் வெல்க ஆன்மீகம்!!.**

**பயன்படுத்திய நூல்களின் பட்டியல் :**


1. ஸ்ரீமத்பாகவதம். வேதவியாசர். வெளியீடு அகில இந்திய கிருஷ்ணபக்தி இயக்கம். எட்டாம் பதிப்பு. 2012 வெளியீடு. (ஸ்கந்தங்கள் ஒன்று முதல் பத்து வரை)

2. வியாசரின் ஸ்ரீமத்பாகவதம். உரைநடை விளக்கம். (தமிழில்) வெளியீடு வர்த்தமானன் பதிப்பகம். (ஆசிரியர் : இலக்கியத் தென்றல் வ.ஜோதி)

3. ஸ்ரீமத் பகவத்கீதை. தத்துவ விவேசனி. ஜயதயால் கோயந்கா. கீதாப்பிரஸ் கோரக்பூர். ஏழாம் பதிப்பு. 1995. ஆம் ஆண்டு வெளியீடு.

4. திருக்குறள். தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

5. வியாசபாரதம். தமிழ் உரைநடை. வர்த்தமானன் பதிப்பகம். ஆசிரியர். வ.ஜோதி.

6. வில்லிபாரதம். மூலமும் தெளிவுரையும். ஆசிரியர் அ.மாணிக்கம். எம்.ஏ. வர்ததமானன் பதிப்பகம். புதிய பதிப்பு. 2002. ஆம் ஆண்டு வெளியீடு.

7. நாலாயிர திவ்வியப் பிரபந்தம். மூலமும் உரையும். கங்கை பதிப்பகம். உரையாசிரியர் – ராமசுப்பிரமணிய சர்மா. 2009. பதிப்பு

9. கிருஷ்ணா. புருஷோத்தமராகிய முழுமுதற்கடவுள். (தமிழில்) வெளியீடு. 2005.

10. கம்பராமாயணம். பாலகாண்டம். வர்த்தமானன் பதிப்பகம். வெளியீடு. 2004. உரைநடையில், முனைவர் பூவணணன்.

11. வால்மீகி இராமாயணம். தொகுதி. 1. வர்த்தமானன் வெளியீடு. உரைநடையில். இலக்கியத்தென்றல். வ.ஜோதி.


**ஓம் நமோ பகவதே வாசுதேவாய**